✠

கடவுள் துணை.

தம்பாவணி வசனகாவியம்.

இஃது,

இராயபுரம்,

அருளப்பமுதலியார் பௌத்திரரும்,

உபாத்தியாயர், சவேரியப்பமுதலியார் புத்திரரும்,

Madras Black Town High School,

தமிழ்ப்புலவருமாகிய;

இராயபுரம், அஷ்டாவதானம்

ச. ஜெகராவுமுதலியாரவர்களால்

செய்யப்பட்டு,

வேதவேதியர்களாலும், வித்துவான்களாலும்,

திருப்தியாய் அங்கிகரிக்கப்பட்டு

அச்சியற்றப்பட்டது.

MADRAS:

PRINTED AT THE INDIAN PRESS, No. 107, ROYAPOORUM,

1887.

Copy Right Registered.

O-,IKVEIT
M87

116596

சிறப்புப்பாயிரம்.

இக்கிரந்த கர்த்தாவுக்குப் போதனாசிரியரும்

சென்னை சர்வகலாசாலைத், தமிழ்த் தலைமைப்புலமை நடாத்தியவருமாகிய

இயற்றமிழாசிரியர்

கோ. இராசகோபால பிள்ளையவர்க ளியற்றிய

நிலைமண்டில ஆசிரியப்பா.

தேமலி பொகுட்டுச் செக்கரங் கமல
மீமலி யெகினம் விரிசமழ் பொலந்தா
தாடித் திமிர்ந்தலைத் தணிதிரு மகளென
நீடிய பொய்கை நிரைபல துவன்றிப்
போர வெழினனி பிறங்குவ தொருசார்
சோராப் பொருதொழிற் சினவேல் வேந்தனின்
வலிதொலைந் துடைந்த வல்லுந ரல்லார்
சிலைநுதற் பேதையர்ச் செருக்குதல் கடுப்பச்
செங்கதி ரவற்குடை செறியிருள் பல்லுரு
வங்கணுற் றெனநா கம்போ ருகபாலர்
கறிக்குங் குளவணிக் கவினுடைத் தொருசார்
பொறிப்பரு மித்தகை பொதிதலி னிராய
புரமெனப் புகழ்மிகப் பொருந்துநன் னகரினன்
சிரமுகப் பகைஞர்மேற் செலும்வெண் பரியினன்
திரைகெழு புணரியிற் செஞ்சுட ரெழுந்தென
ஒளிவிரி பவளமா வொண்பொருப் புடையான்
[illegible]ளர்விலா வான்குணச் சவேரியப்பன்செய்
மெ[illegible]த்தவப் பேறு விருநில மிசைவரு
முத்தமி ழுணர்தரு மெய்த்தகு புலமையோன்
கையறி யாப்புன் கயவரா நட்கான்
சொற்கடங் குதல்செலாச் சோழநா டையான்
பொற்குலமென்மனை பொலிகாரை நகரான்
மகிதல முழுதும் வழுத்துறு சிறப்புடை
மகரகே தனம்பெறு வயத்தரு விறலோன்
முகிற்குல மென்ன முழங்கும் முரசோன்
தகைப்பெருங் குணஞ்சால் தருகுரு குலத்தான்
கூம்பல்சாம் புதவிலாக் குவமலர்த் தாமமென்
மேம்படு பேர்பெறு தேம்பா வணிக்காப்
பியநூ றனக்குப் பேருரை செய்தோ
னகவிரு ளறக்கு மலர்கதிர் மானுஞ்
சிகரா வென்னத் திகழ்நா வலனே.

சிறப்புப்பாயிர முற்றிற்று.

சாத்துக்கவிகள்.

இராயபுரம், அர்ச். இராயப்பராலயத்தி லெழுந்தருளியிருந்து மோக்ஷ
பதவி யடைவதற்குமுன்

தே. பரி. ஞானப்பிரகாசநாத சுவாமிகள்

திருவாய் மலர்ந்தருளிய

பதினான்குசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்.

பொன்பூத்த நறுமணப்பூங் கொடிபூத்த மாதவமே பொலிபூத்த குசைமுனி [வன்
புகழ்பூத்த மாக்கதையை மீன்பூத்த சேகரி புகல்வண்ணம் வீரமுனிசெ ய்
மன்பூத்த நாவணியி னணியாக்தேம் பாவணியின் மலர்பூத்து பரிமளிக் க
வகைபூத்த வசனநடை யாக்குயிற் றமிருய்ய வண்பூத்த வச்சுறுத்தர் ன்
கொன்பூத்த சந்திரகுரு குலம்பூத்த மயில்வரு கோதிலாச் சவேரியப்ப க்
கோன்பூத்த மெய்த்தவப் பயன்பூத்த படிவத்தன் குலம்பூத்த சத்யவேத ன்
தென்பூத்த செந்தமி ழிலக்கிய லிலக்கணச் சிகைபூத்த ஒளிவிளக்கா ச்
செகம்பூத்த செகாவு தெளிபூத்த நாவலன் இசைபூப்ப நாளும்வா ழி.

மேற்படி ஆலயத்தி லெழுந்தருளி யிருக்கும்

சங். J. பாலநாத சுவாமிகள்

திருவாய் மலர்ந்தருளிய

அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்.

காவணிக்கின் இலக்கெனவே பதினொர்புக ழிராயபுரக் கவிஞரோ டு
மாவணிக்கு மளிபாடுங் கண்டலலங் கன்செகரா வாருமேலோன்
தேவணிக்கு மணியாக வருள்வீர மாமுனிவன் செய்தநற்றேம்
பாவணிக்குக் கத்தியஞ்செய் தச்சிட்டான் சொற்பெருமை பன்னற்பாற்றே.

மேற்படி ஆலயத்தி லெழுந்தருளியிருக்கும்

சங். பு. இரத்தினநாத சுவாமிகள்

திருவாய் மலர்ந்தருளிய

நேரிசை வெண்பா.

சீர்வீர மாமுனிவன் செப்பியதேம் பாவணிக்கு
ஏர்வீர ஞானசெகரா வென்னறிஞன் — பேருரைசெய்
தாழியுல கோர்க்கருளி யாயபயன் றேடியதான்
வாழியரி யாவ்கருணை வாய்த்து.

சென்னைப் புதுப்பேட்டை, அர்ச். அந்தோனியார் ஆலயத்தில்

எழுந்தருளியிருக்கும்

சங். F. ஆரோக்கியநாத சுவாமிகள்

திருவாய் மலர்ந்தருளிய

எண்சீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்.

சீர்பூத்த வித்தால்ய நகரின்மேவுஞ் சிறந்தசத்திய மறைபோதத்திலங்குஞான
பேர்பூத்த வீரமாமுனிவன்மேலாம் பெருமிதத்தேம்பாவணியை யியற்றித்தந்
ஏர்பூத்தசவேரியப்ப மேவளித்த விருநான்கு வவதானி செகாவண்ணல்[தான்
தேர்பூத்த வசனகாவியமாய்ச்செய்த திடமெவர்க்கு வுளதுசொல்வீர் செகத்
[துள்ளோரே.

திருமயிலை, பிரகாசமாதா ஆலயத்தி லெழுந்தருளி யிருக்கும்

சங். A. M. கர்வாலூ சுவாமிகள்

திருவாய் மலர்ந்தருளிய

கட்டளைக் கலித்துறை.

மீனெக்கும் வெண்மலர்ப் பூங்கொடிச் சூசைதன் மெய்ச்சரிதை
தேனெக்குந் தேம்பா வணியெனத் தைரியத் தேசிகன் செய்
பானெக்கு மெய்ப்பொருள் கண்டெய்ய யார்க்கும் பகுத்துரைத்தான்
வானெக்குங் கீர்த்திச் செகாவு நாவலன் வாழ்ந்திடவே.

[illegible]ச்சேரி, [illegible]ராக்கினி மாதா ஆலயத்தி

லெழுந்தருளி யிருக்கும்

சங். சாமிநாத சுவாமிகள்

திருவாய் மலர்ந்தருளிய

கட்டளைக் கலித்துறை.

மட்டாரும் பூம்பொழி வித்தால்ய தேச மகிழவந்த
கிட்டாத மெய்யுணர் வான்வீர மாமுனி கேடில்செல்வக்
கட்டாகச் செய்தருள் தேம்பாவணியின் கருத்துரைத்த
அட்டாவதான ஜெகாவு போலெவர் ஆற்றுவரே.

கோயம்பத்தூர், தேவமாதா ஆலயத்தி லெழுந்தருளி யிருக்கும்

சங். இராயப்பநாத சுவாமிகள்

திருவாய் மலர்ந்தருளிய கட்டளைக்கலிப்பா.

ஆதிநாயகி யாகிய[illegible]மரி ஆகிர்தமரி யாட்குபதேசித்த
நீதிநன்னெறி மெய்க்குருவாகிய சேரிலாவீர மாமுனிகூறிய

கோதிலாததேம் பாவணியுட் பொருள் குற்றமின்றி வசனமதாய்ச்செயுந்
தீதிலாச்செக ராவுகவிஞற்குச் செய்யுங்கைம்மாறு முண்டோ! நமக்குமே.

திருமயிலை வித்துவான்,

சண்முகம்பிள்ளை யவர்க ளியற்றிய

அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்.

திருத்தகுசீர்க் குருகுலமாம் பயோததியி லமுதென்னச் செழுநீர் வைப்பி,
லருத்தகுநல் வனப்பினவ தரித்தனையான் சவேரியப்ப னுலப்பில் பன்னாள்,
அருத்தியொடு குயிற்றுதவ மோர்படிவங் கொண்டவனி யன்மிற்றென்னக்,
குருத்தகுகா வலர்கிளத்தக் கெழுமியவான் புகழ்க்கவிஞர் குரிசிலன்றே.

ஆரணத்தான் முதலமரர் குழூஉக்குழுமி யணைந்துறைக்கு மணிசால்வெள்ளை,
வாரணத்தான் வெண்பரியா னயர்வருநல் லமரர்பரா வமலன்மாநீர், [ன்றோர்,
வாரணத்தா னடிக்கமலந் தனில்வரும்வா னதியான்வண் கொடைக்கெஞ்ஞர்
காரணத்தான் மதற்காய்ந்தன் றேறுகொடியைக் கொடிக்கொண்ட காட்சியா

சீர்நாடு மெவ்வெவர்க்கு மெவ்வெவ்வளங் களுநல்குஞ் சிறப்பிற்றாய, [னே.
நீர்நாடு தன்னுடைக் கொண்டுடைய னதிபத்த னெனநிலாவும்,
பேர்நாடு மெய்யடியார் பிறந்தநகரோ நகராப் பிறங்கு சீரான்,
ஏர்நாடு மதன்றனக்கு வாட்படையே மஞ்சரியா யிலகக்கொண்டோன்.

இன்னனபல் விசைசெழுமி வவிர்கவிஞர் பெருமானின் திருநீர்வைப்பில்
நன்னர்பல வணிவளனுஞ் சுருங்கவன்முத லனைவழகு நயந்து நிலவும்,
பன்னருஞ் ஞசைப்பெயரின் முனிவர்பிரான் காதையினைப் பரிவினன்று,
சொன்ன னைதரியநாத முனிவனெனக் கத்தியமாய்ச் சொற்றனன்றே.

மகாலயக்குநிகர் கல்விமான் புடையாமெனவ் மருந்துங் கற்றோர்,
புகாமென் றனைசெயாநற் கவிஞர்நற் புலமைசெறிபுந் திசாலும்,-
நிகரேயி லவதான மெட்டியற்று மாற்றலினு னின்ற சீர்த்திச், [னே.
செகாவென் றெவருமினி தெடுத்துரைக்கு மியற்றமிழ்[illegible]றேலான்மன்

பெங்களூர், கமிசேரி ஆபீசு மானேஜர்

ஆ. பொன்னுசாமி முதலியாரவர்கள் சொல்லிய

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

வானளக்கு மந்திரங்க ளிலைபெற்று நல்லறங்கள் வளர்ந்தெஞ்ஞான்றுந்
தேனளக்கு மலர்ப்பொழில்கள் புடைபரந்து மணந்திமிர்த்த செங்கா லன்னங்
கானளக்குஞ் சாரசத்திற் பெடையூடே கண்டுஞ்சுங் கயஞ்சேர்ந் தின்னுந்
தானளக்க யாவரினு மடங்காத வளமுடைத்தாய்த் தருக்கா நிற்கும்

சீரியர்க்கே யிடனாகத் திகழ்ந்திடுமிவ் விராயபுரச் சீரூர் மேய
சீரியனென் புடையிருந்து மன்புடையன் செந்தமிழின் சென்னிதேர்ந்[illegible]ன்
பூரியராம் புன்கவிகட் காளியென நின்றதிர்க்கும் புனிதன் [illegible]டல்
வேரியந் மணிமார்பன் செகாவென் றிடுமேலோன் மேவி[illegible]ல்லோர்.

நற்றவத்து வீரமா முனிவனரு ளியதேம்பா வணியு ணர்ந்தோர்
யுற்றிடுசொற் செறிவுபொருட் செறிவதனை யுள்ளிடயு ணர்விலாகா
அற்றனைதநற் கந்தியஞ்செய் திங்கருள்க வெண்பழிச்ச வீரன் றிங்கே
சொற்றிருத்த கந்தியஞ்செய் தச்சிட்டான்சொற்பெருமை சொல்வர்யாரே.

~~~~~~~~

புதுவை ஞானியாப்பிள்ளை குமாரர், உபாத்தியாயர்

முத்துச்சாமிப்பிள்ளை யவர்களியற்றிய

எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

கடலுலகில் புகழருமித்தாலிய தேசங் கதித்தெழுந்த குருவீர முனிவன் மேனாள், திடமுடனே வளன்காதைச் சரிதைதன்னைச் சித்திரகாவியமாகத் தீட்டியிருந்தான், அடைவுடனே சவேரியப்பக் குரிசிலீன்ற வருமைந்தெறி லட்சண வாகமத்தின் சீர்த்திப், படர்ஜெகராவு ட்கர்வசன காவியத்தின் புன்மினய மெவர்க்குளது பாரின்மீதே.

~~~~~~~~

இராயபுரம் வித்துவான்

வே. கி. நாராயண்சாமிபிள்ளை அவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

அட்டதிசைக் கீர்த்திபுறை அட்டர்வ தானியென
மட்டில்புகழ் வாய்த்ததமிழ் வண்புலவ!—இட்டமுடன்
தேம்பா வணிவசனத் தேறலைநீ யூட்டுகையில்
ஓம்பாதுன் னருமுண்டோ? ஓது.

~~~~~~~~

இராயபுரம் "இந்தியன் அச்சியந்திரசாலைத்" தலைவரும், வேதாந்த ர்ணயப் பத்திரிகைக்கு அதிபரும், காரைக்கால் ஐயாசாமிப்பிள்ளை யவர்கள் சிரேஷ்ட புத்திரருமாகிய

அப்பாதுரைப் பிள்ளை யவர்க ளியற்றிய

எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

ஆரணமே நித்திலம்போற் றோன்றுகின்ற
வரியவித்தே லியநாட்டில் வாய்த்த நல்ல
காரணனாம் வீரமா முனிவன் செய்த
காணரிய நற்றேம்பர்வணிக் காப்பியத்தைப்
பூரணமா யாவருக்கும் விளக்கவேண்டிப்
பொற்சவேரி யப்பன்றவத் துதித்தகல்வி
காரணனாஞ் ஜெகராவு வள்ளல் தந்த
வசனகா வியப்பெருமை வகுப்பர்யாரே.

~~~~~~~~

திராவிடப் பத்திரிகைகளின் அதிபராகிய

பு. அ. மிக்கேல்சாமிசெட்டியாரவர்கள்செய்த.

இருபத்தெண்சீர்க் கழிநெடி லாசிரியவிருத்தம்.

சீர்பெருகு மித்தால்ய தேயமதில் ஜன்மித்துத் திருச்சேசு சபைபுகுந்து
தீர்க்கமாய்ப் பொர்த்துகீஸ் பிராஞ்சு லத்தீன்பாஷை தேறிகுருவாகிநின்று
செஞ்சுடரி னொளிபோன்ற மாமறையைப் போதிக்கச் சிந்துதேசத்தடைந்துத்
திராவிடப் பாஷைதனை மூன்றுவருடத்திலுள் திறமுடன் கற்றுணர்ந்து
ஏர்பெருகுந் தர்க்கங்கள் செய்தநந்தம் பெயரை எழில்மறையி லுட்படுத்தி
இன்பமாய்த் தமிழினில் இலக்கணங் காவியம் ஏராளமாய்ப் பொழிந்து
எவருமேத்திப்புகழ வீரமா முனிவனென இயல்நாமம் பூண்ட மேலோன்
ஏதமிற் றேம்பாவணிப் பெரும்பிரபந்த மியற்றினன் தேர்ச்சி கொள்ள
தார்பெருகுஞ் செய்யுளை வன்பகுலை கோத்திரன் சாத்திரன் ஆரோக்கியன்
திக்கபல சந்தத்தில் மிக்கவானந்தமுறுந் தகைமையுடன் சித்தனமதாய்ச்
சமைத்தனன் பின்னரிதைக் கல்வியிற் கவிசிரேஷ்டஞ்சார்ந்தகுருகுலமுதுவை
சவேரிநாதப் புலவன் மாணாக்கனுமோர் சபையலங் காரவாக்கியன்
பார்புகழும் ஜெகராவு கற்றோர்க்கும் மற்றோர்க்கும் பயனுறமுயன்றுபன்னாள்
[illegible]தொணைப் பிரயாசங் கொண்டரும் வசனமாய்ப் பதிப்பித்த விதனைநன்கு
பட்சமா[illegible]ங் கைக்கொண்டு பகலிரவு மோயாது படிப்போர்கள் நீணிலத்தில்
பானருட்[illegible]பறநிற்ப ரிதுசத்திய மாந்தர்காண் பலகாலும். வாழிவாழி.

பெங்களூர்; ஜூனீ பிஷப்காட்டன் காலேஜி ரைட்டராகிய

அ. நி. உ. அருமை சிரோமணியவர்கள் கூறிய

எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

புதையல்கிகர் சத்யமறை சாரத்தைச்சம்
  பூரணமா யுணர்வீர மாமுனிக்கோன்
சிந்தையாப் பல்வகை யாப்பி னலங்கமைத்த
  திரிகாண்டம் பெறுதேம்பா வணிச் சிறப்பைச்
சுதைமொழிக ளிறைவசன மாவியற்றுந்
  தூயசதுர்க் கவிஜெகரா வென்னு மேலோன்
எதைப்பெறினு மிணையாகா தென்றுதேவ
  எம்பெருமா னருளோங்க விறைஞ்சுவாமே,

விளம்பரம்.

☞ இப்புத்தகம் வேண்டியவர்கள், A. S. Jaga Row Moodelliar, Tamil Pundit Royapoorum, Madras என்றாவது, மதறாஸ் இராயபுரம், தமிழ்ப்பண்டிதராகிய அ. ச. அஷ்டாவதானம் ஜெகராவு முதலியாருக்கு, என்றாவது எழுதிக்கொள்ள வேண்டும். புத்தகம் விலை ரூபா 2-8-0 தபால் கூலி அணா 0-3-0, 12-புத்தகத்துக்கு 1-புத்தகம் ஆதாயமாகக் கொடுக்கப்படும்.

கடவுள் துணை.

தேம்பாவணி வசனகாவியம்.

முதற் காண்டம்.

பாயிரம்.

சீரியவுலகமூன்றுஞ் செய்தளித்தழிக்கவல்லா ய
நேரியவெதிரொப்பின்றி நித்தவோர்கடவுடே ய
வேரியகமலபாதம் வினையறப்பணிந்துபோற் றி
யாரியவளன்றன்காதை யறமுதல்விளங்கச்சொல்வா ம்

பெருஞ்சிறப்பமைந்த மூன்றுலகங்களையும் படைத்துக்காத்[illegible]ழில்லமையுண்டாகி, யெவற்றாலுந் தனக்கெதிர், ஒப்பின்றிப் பிறரால் அளந்தறியும் அளவைக்கடந்துநின்ற தேவகுணங்களாலுயர்ந்து, ஒன்றாகிய மெய்யங்கடவுளின் தெய்வமணநாறுந் திருவடிக்கமலங்களை எமதுவினைப்பிணிமுழுதுநீங்க வாக்கினாற்றணிவுதோன்றவாழ்த்தி, மெய்யினாற் பணிவுதோன்றப்பணிந்து, அதன்பின் தேவுலகத்தாரால் வணக்கப்பட்ட பெருமையுடையவராகிய சூசைமாமுனிகள் தேனைப்பொழிந்த மலரைப்பூத்த கொடியையடைந்திருக்கக் குறையாத மூன்றுலகிற்கும் நிழலைச்செய்யும் பரமநாதன் பூவுலகில்வந்து, அந்தப்பூங்கொடிநிழலில் ஒதுங்கிச்சாய்ந்ததாக உலகங்களெல்லாம் வாழ்த்தும் அந்தச்சூசைமாமுனிகளுடைய திருக்கதையைக் கேட்போர்க்கு அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்குபொருளும் எளிதில் விளங்கச் சொல்லத் தொடங்குவாம். ஆயினும் [illegible]ந்தவரங்களால் அளவில்லாமல் அரியமாட்சிமை யடைந்ததன்மையைக்கொண்டு நிறைந்ததமிழ்மொழியால் "வளனென்பதும்" விரிந்த வடமொழியால் "சூசையென்பதும்" ஒரேபொருளானநாமமுள்ள அந்தமுனிகள் அடைந்தவரங்களொன்றுந் தூயகடலை யென்னால் கடக்கக்கூடாதாயினும் என்னுள்ளத்தைத் தூண்டுமாசையினால் நான் ஊமையாயிருந்தாலும் ஓசையெழுந்தோடும் அமுதக்கடலென்று வணக்கத்தோடதைச்சேர்ந்து, சிறியவனாகிய நான் நாவினால் நக்கும்படி அதிற்புகுந்ததுபோல, அந்த அருங்கதையை உரைப்பத்தொடங்கினேன்.

ஆகலால் முறையோடு அரியநூலையுடையோர் நடுக்கடலில்மூழ்கிக்குளித்தபோது அந்தத்துறையையடுத்து உள்ளேபுகுந்து, மூழ்கத் துணிவில்லாமல் நான் அந்தவமிர்தத்தைக் கையால் அள்ளி யுண்டதுகண்டால் அவர்கள் குறையெடுத்தானென்று அடியேனைக்கோபித்தால் நல்லதோ? அன்றியும் பறையெடுத்து அடித்து உலகத்தார்கேட்க என்னைப்பகைத்து நகைத்தால் நல்லதோ ? கற்றமிழை இன்பமாகக்கேட்ட மடக்கிளி தன்புன்சொல்லால் உரைக்கும்போது நூலோர் அதுகுறையென்று கேளார்களோ ? அமிர்தமுண்டு உமிழ்ந்தாப்போல உலகமெல்லாம் ஆளுங் கன்னிமரியம்மாள் பூர்வத்தில் சொல்லியமுன்

கிய இந்தக்கதையென்னு மமிர்தத்தை நானுண்டு அதை என் புன்பாவினால் கக்கும்போது அந்நாலோர் கேட்பார்கள். ஆதலால அந்தக்கந்நிமரியம்மாள் அந்தத்திருக்கதைசொன்னது எப்படியென்றால் ;— சோலைகள்சூழ வடிவோடுவளர்ந்த ஆகிர்தவென்னும் நகரத்திலே பூவுலகில் ஒப்பில்லாமல புகழப்பட்டவர்களிலும் உயரப்பட்ட கந்நிகையாய நடந்து, அடைந்த நிறைதவத்தோங்கியும், பரமநாதனைப்பெற்ற தாயாருடைய திருப்பாதத்தைத்தடவி அன்புயரப் போற்றியும், ஐம்பொறிகளைக்கடந்த காக்ஷியினால் சொல்லின்பத்தை உமிழ்ந்த கருணைகாட்டும்வாயும், முனிவரைப்போல ஒழுக்கமும், வேதத்தின் உண்மையைக்காட்டும் பெருமையுள்ளவராயும், குளிர்ந்தநட்சத்திரங்களி னடுவெதிரியுஞ் சந்திரனைப்போலப் பலகந்நிகைக்குள்ளே அரியமாக்ஷியுங்கொண்டு தன்னிடத்தில் குற்றமுங் குறையுமில்லாமல் வானவர்க்கு ஆண்டவன் மோக்ஷத்திலகொடுக்குங் காக்ஷிபோல் அறிவுமடைந்து குருக்களுக்கு ஓர்விளக்குப்போலக் கந்நியாஸ்திரீ ஒருத்தியிருந்தாள். அவளுக்குச் சூரியனையுடுத்த திருமேனியும், பிறையைமிதித்ததிருப்பாதமும், நக்ஷத்திரங்களைசசூடிய திருச்சென்னியும் உடைய பரமதேவதாய் அந்த இளங்கந்நியின் மாக்ஷிமைகாட்ட இன்பமாய் அவளுக்கு மரியம்மாளென்னுந் தன்னாமத்தைத்தந்து வளர்ந்த அன்புகாட்ட அளவின்றி வரங்களை அவளுக்குத் தந்தாள். பின்பு மகளுந் தாயும்போல் இதெல்லாம் நடத்தும்போது தாயாகிய கந்நிமரியம்மாள் குற்றமில்லாத தன்பத்தாவாகிய சூசைமாமுநிகளின் பழங்கதையைச் சொல்லிச் சொன்னதை [illegible]ம் அறியும்படி அதை யெழுதிவையென்றாள். அப்படியே மகளாகிய மரியம்மாள் எழுதிவைத்தாள்.

ஆதலால் நானும் வருந்தி ஆசையோடு அவளெழுதினதை யெழுதிக்காட்ட நல்ல தமிழ்ச்சொல்லில்லாமையால் கற்றோர் தங்கள் செவியிடத்தில் கசப்புற உள்ள பிழையைக்கண்டால், ஏந்தியமட்பாத்திரத்தைப்பாராமல் அதிலுள்ள அமிர்தம் உண்பதற்கு இனிதானால் ஆசையோடு அருந்தக்கடவார்கள். மேலும் இது சீர்கொண்ட வேதநூல் அணியாகச்சூழ்ந்த நற்றவத்தின் அரிய பெருமைநிறைந்த உள்ளத்திலோங்கி மூவுலகத்தைக்காத்தளித்தபரமநாதனைத் தானோர் கைத்தாதையாகக் காத்தோம்பி மணங்கமழும் பூங்கொடியுயர்த்த சூசைமாமுநிகளின் திருச்சரித்திரத்தைச் சொல்ல, அந்தப்பூங்கொடிவிண்ட மூவாயிரத்து அறுநூற்றுப்பதினைந்து நன்மலரைக்கொண்டு [illegible]தேசத்திலுள்ள ஆரியகல்லூரிலே "தேம்பாவணி" யென்னும் வா[illegible]மாலையாகக் கட்டல் செய்யப்பட்டது.

முதலாவது - நாட்டுப்படலம்.

புள்ளுலாம்விசும்பிடைதொறும் பொரும்படைபொரு வ
வெள்ளுலாமழைவெண்கொடி யுருக்கொடுவிளங்கி த்
தெள்ளுலாந்திரைதிளைப்ப வுண்டெழுந்துயர்பரந் து
வள்ளுலாங்கருமதகரி யினமெனத்தோன் ற.

பறவைக்கூட்டங்களுலாவப்பெற்ற வானத்தினிடங்கள்தோறும் எழுந்த
படையையொத்த வெள்ளைமேகங்கள் வெண்கொடிகளைப்போலத்தோன்றிப்,
பின்பு தெளிந்தகடல்நீரை நிறையவுண்டெழுந் துயரப்பரந்து, கரியமதயானைக்
கூட்டம்போலக் கறுத்தமேகங்களாகிச், சமர்க்களத்திற் பகைவர்மார்பிற் றைய்
ந்தொளிரும் வேலைப்போல இருள்கெடமின்னி, வார்கட்டிய முரசம்போல அ
திர்ந்து முழங்கிப் பகைசெய்யப் படையுருவாய்ப் பரந்ததல்லாமல் கடைசியி
லே கருணைகொண்ட வள்ளலாரீகைபோலச் சூதேயநாட்டிலுள்ள மலையிடங்
கடோறுங் குளிரும்படி, நிறையாகவளவின்றி மழையைப்பொழிந்தன. அதனு
லடர்ந்த கருமுகில்தவழு முயர்ந்தமலையானது தான்குடித்தநீரையெல்லாம் ப
டித்தநூலைவாக்கும் பயன்படவிரித்துரைப்பார்போலக் கொப்பளித்தமையால்
அதினின்றெழுந்த அமுதமாகிய அருவி மிகுந்தவோசையாகத், திரை[illegible]ண்
டோடுந்தோற்றமானது அந்நாட்டுச்செல்வமலையை யெடுத்துப் பொன்னுல
கிற்சேர்க்கக்கருதி, வானவரால்விடப்பட்ட வடக்கயிறுகள்போல. மழைத்தாரை
கள்விழவே, மலையைச்சூழ்த் துள்ளிவிழும் அந்தநதியானது அ[illegible]மலைபெயராத
படிக்கு வெள்ளியாற்செய்த நீண்டசங்கிலியாற்சூழக்கட்டி, யதைப் பூமிபிடித்துக்
கொண்டதுபோலத்தோன்றும். மீளவும் அந்தநதியின்வெள்ளமானது கிரணத்
தைவீசும் பலஇரத்தினக்கூட்டங்களை வாரிக்கொண்டு, நுரையெழத் திரைகொ
ண்டு, புண்படுத்திக்கொலைசெய்து கொள்ளையிடும் பகைவர்புகுந்ததுபோல எங்
கும்புகுந்து, தன்வல்லமையாலெதிர்ந்த வெல்லாஞ்சாய்த்துக்கொண்டு, குறிஞ்
சிநிலத்தைவிட்டுப் புறப்பட்டபின் முல்லைநிலத்திற்பாய்ந்து, தன்னுலசைந்து
வாசமலர்விடுந் தேனோடுகலந்து, மருதநிலத்தில் வரிசையாய்நிற்கு முயர்ந்த
சோலைகளும், [illegible]ம்நிறையும்படி தண்ணீரிலிருந்துவருமுயிர் நன்றுயுறப்
பெல்லாம் புகுந்த[illegible]போல நிறைவாயோடிக். குறிஞ்சி முத லங்கங்கே வழியி
லெதிர்த்த கல்[illegible]க்கஞ்சாமல்கடந்து, மருதநிலத்திலுள்ள செல்வத்திற் காசை
படாமல நில்லாதோடி, யறிவுடையோ ரிவ்வுலகசெல்வத்தைவெறுத்து மோ
க்ஷமொன்றையே தேடுமோப்போல அகன்றகடலைநோக்கிப்போகும்.

இப்படி மலையினின்றுவிழுந் தண்ணீரைக் குறிஞ்சி,முல்லை, மருதம்,நெய்த
லென்னும் நான்குநிலமும் நிறையவுண்டபின் மிஞ்சியநீர்கடலிற்சேருந்தோற்
றமானது பூமிதன்முலைப்பாலை மக்கட்கெல்லாம்நிறையவூட்டிப், பின்னும் பால்
மிஞ்சியோடுதலினுல் தானணிந்த வாடைமே லின்பமாய்ச் சிந்தியதுபோலுந்
தோன்றும். அதனுல் பெரியோர் ஐம்பொறிகள் தாம்போகும்வழி போககாம
லடக்கி அவற்றைப்புண்ணியவழியிலே நிறுத்தல்போல உழவர்கள் நிறைவாக
வோடும்ஜலத்தைச்சிதறவிடாமல பயனுகவொதுக்கி, வாசனைமலர்நிறைந்த வய
லிடத்துவிட்டு உழுவார்கள். உழுவதினுல் தின்மைசெய்வார்க்கு நன்மைசெய்
யுந் தவத்தோர்க்கு. மரியதருமம்போல உவர்க்கடலுடுத்தகன்ற பூமி யெவர்க்
குந் தாயென்றுபாராமல் நெஞ்சுகிழிபட வுழுபவர்க்கும் உணவுகொடுக்கும்.
இப்படித்தோன்றிய நிலத்தில் மிகுந்த கருணையுள்ள குருவின்விழியைப்

போல நீரில்விளைந்த செந்நெல்லொன்றே கோடியாகக் கட்டலதென்று விதைத்துக் கூடபிடக், தேரோடிமுழங்கிய திருநாள்போலக் கடைச்சியர் குரவைக் கூத்தாடுவார்கள். பயன்தந்தாலும் புண்ணியமில்லாதது கெடுதியெனப் பெரியோர்துணிந்து அதையொழிக்குதல்போல, இன்பம்பயக்குந் தாமரை யல்லிமுதலிய மலரையெல்லாங் களையெனப்பறித்துப், பின்பு செல்வமடைந்த நீசர்போலப் பசும்பயிர் தலையெடுத்துப் பெரியோர்தலைபோலவளைந்து முத்துப்போல பழுத்திருக்குஞ் செந்நெல்லையறுத்து, அரியாய்க்கொண்டுபோய் அந்நாட்டிலிதுவே போரென்று பலபோராகச்சேர்த்துப், பொய்யுமெய்யுங் கலந்திருக்கும் பொருளில் பொய்யைநீக்கி மெய்யைக்கொள்ளும் பெரியோர்போல வைக்கோல்கலந்தநெல்லைக் கடாக்களைவிட்டடித்து வைக்கோலைநீக்கிக், கைகளையேந்திநிற்கும் இரவலர்க்கு முந்திக்கொடுத்து, மற்றநெல்லுகளையுண்ணவுமுடுக்கவு மெடுத்துச் சேர்ப்பார்கள். இந்நல்லொழுக்கமைந்தமையால் குன்றாததருமத்தைச்செய்தவரின்பமாயிறந்தபின் மோக்ஷநாட்டில் சேருவார்கள்.

இவ்வாறேபாபத்தோடு துன்பஞ்செய்யும் பொல்லாங்கெல்லாம் புறத்து நின்றதினால் உபமானமெல்லாங்கடந் துயரும் நல்லறத்தின் மாக்ஷிமையுள்ள அந்நாட்டில் வழங்குந்திறமுமாண்மையுஞ் சொல்லத்தகாதனவாம். அன்றியும் தரித்திரம்வந்தபோது தனக்குச்செய்தநன்றியை நல்லகாலந் தனக்குவந்தபோது மாற்றவேண்டுமென்பதுபோல, உச்சியின்பாரத்தைப்பொறுக்கமாட்டாமல் [...]ந்த கொம்பானது முன்பு தனக்குயிராகவந்துவளர்த்த தண்ணீரை வணங்கியதுபோலத் தோன்றவும், கரும்பினாலையிட்டுண்டாகும் புகையுஞ், சப்தமு மேகம்போல் எழும்புதலா லதைக்கண்ட மயில்கள் சோலைகள்தோறுந் துள்ளியாடவும், குயில்கள் குற்றமுள்ள தீயோரைக்கண்ட பெரியோரைப்போல மெலிந்துவாடவும், மலர்மலிந்தவனமெங்கும் அன்புவிடாமலுங், காரணமில்லாமலுங் காடைகள்செய்யும் போரன்றி வேறுபோரில்லாதிருக்கவும், நீங்கெண்ணும் பகைவர்சொல்லிய வாய்மைகள்போலத் தீயெழக் கடாக்கள்சினந்து தாக்க மேலே தூசியெழும்படி விரைந்து பின்வாங்கவும், துன்பம்வந்தபோது மேலான அறத்தின்முயற்சி தோன்றச்செய்யும் பெரியோரைப்போல மாதர்கள் வேர்வையொழுக கைவளையல்களை சப்திக்கக் கடைந்த தயிரின்மேல் வெண்ணெய் கிளம்பவும், கரும்பும், இருட்டும், பனையுங், கனிகளுந், தென்னையு மலருமாகிய இவைகளிடத்து நின்றூறியுந் தேனையுண்டபின் அந்தத் தேனினுமினிதாயரிய பறவைகள்பாடவும், பாலுண்டு[...]கன்றுகளைநினைத்து எருமைகள்[...]டுபொழியும் பாலை யன்னங்கள்வந்து [...]த்தகளமேயல்லாமல் வேறுகளவில்லாதிருக்கவும், குயில்களுங், கொம்புகளினின்[...] வண்டுகளும் பேசுவதுபோலப்பாட, அதைக்கண்டு ஆடையைப்போலத் தோகையைவிரித்த மயில்களோடுமகளிருமாடவும், களிகூர்ந்த பறவைகளால் வனங்களொலிக்கவும், வண்டுகளால் மலர்களும் பாடல்களுமொலிக்கவும், வீணைகளொலிக்கவும், புகழும் நாவுகளொலிக்கவும், கடாக்களமுட்டியொலிக்கவும், பெட்டையைத்தேடி குயில்களொலிக்கவும், முத்துக்களைத்தந்து கரும்புகளொலிக்கவும், மதுரத்தேனைப்பொழிந்து மலர்களொலிக்கவுமாகிய வளமையுள்ள அந்நாடெல்லா மொலிக்கும். இன்னும் அழகிய சிறகுவிரித்த அன்னங்கள்குடியிருத்தலும், அரசர்க்கரசனாஞ்ஞையும் பெற்றுத் தேனைப்பெய்யும் சோலைகளாற் சூழப்பட்ட அந்நாட்டினிடத்துச் சிறையில்லைக்குக் குற்றமுடையாரில்லாமையால் நிழலிருஞ்சோலைகள் விழிகளுக்குச்சிறைசெய்யவும், குழலினல்மாதர்கள் மலர்களுக்குச் சிறைசெய்யவும், கழனிநல் ஆடவர்களுக்குச்சிறைசெய்யவு, மருதவேலிசூழ்ந்த தண்ணீர்க்குச்சிறைசெய்யவுமாயிருக்கும். செந்நெலைச்சுமந்துபோகும் பண்டிகளும், ஆராய்ந்த வெற்றிலைகொண்டுவரும் பண்டி

களும், உயர்ந்த கமுகின்பாக்குள்ள பண்டிகளும், நல்லினிய கனிகள்நிறைந்த பண்டிகளும், நெருங்கிய தேங்கின்நீர்போட்ட பண்டிகளும், நிறையக் கரும்புகளைச்சுமக்கும் பண்டிகளும், தேனைப்பொழியும் நன்மலருள்ள பண்டிகளும்; பொன்னும் நவமணியுங்கொண்டுவரும் பண்டிகளுமாக நாடெல்லாங்களித்துக்குறையொன்றுமில்லாமல்வாழும்படி கொழித்தபள்ளர்கள் தூண்டுங்கடாக்களிபூத்த இப்பண்டில்கள் தம்முள் நெருங்கித்தேயவும், உயர்ந்த தேங்காய்பழுத்துவிழுதலால வளர்ந்தவாழைப்பழமும், மாம்பழமும், பலாப்பழமும், மாசினிப்பழமுஞ் சாய்ந்து நசுங்கிச்சொரிந்த தேன் ஆறுகவோடினதால் எங்குமின்பந்தோயவும், குளிர்ந்தகடலில்வாழுஞ் சங்குகள்நொந்தீன்ற முத்துக்கள்முதல் யாவற்றையுந் தானமாகநின்றளக்கிறதினால் ஆண்டவன் செல்வமாக அந்நாட்டார்களுக்குத் தந்ததெல்லாம் பிறர்க்கு விருந்தாகச்செய்யவும், மலைபோலக்குவிந்த பொன்னுமணிகளும், மழைபோலக் கொடுக்குங் கொடையும், வேதத்தைப்போல முனிவர்நடக்கு மாட்சியும் வாய்ந்துவிளங்கியதால் அந்நாடெங்கும் வானுலகம்போலுங் களிகூர்ந்தன.

மேலும் விருப்பத்தோடு பெட்டைகளைத்தழுவி யன்னங்கள் தூங்கும் வாசமலர்பூத்த குளங்களை அக்குளங்களைத்தழுவவும், நீண்ட கொப்புகளில் மலர் மலர்ந்தசோலைகளே யச்சோலைகளைத்தழுவவும், அழகியபூநிறைந்த வயல்களே யவ்வயல்களைத் தழுவவும், ஓலைவிரிந்த கமுகு, பனை, பாலை, மா, மகிழ், பலா, இலுங்கை, சந்தனம், குங்குமம், மாமரமுமுள்ள பலசோலைகள் [illegible]தாகுத்துச்சொல்லக் கூடாதிருக்கவும், வாசமலர்நிறைந்த சண்பகச்சோலைகள் தேனைப்பொழியு மாலைசூழ்ந்த கூந்தலென்பவோ? என்றுசொல்லவும், வண்டுகளிகொளியெழத் தேனையுகுக்குஞ்சோலைகள் மழைபெய்யுமேகமென்பவோ? என்றுசொல்லவும், எழுதுதற்கரிய வழகுள்ள பூவுங்கனி[illegible]களுநிறைந்த சோலைகள் காதோலையுங் குண்டலமும், பலவாபரணங்களுமணிந்துசந்திரமுகமாய் விளங்குமாதரென்பவோ? என்றுசொல்லவும், கொம்புகள் நேராகவளர்ந்துவிட்ட கருந்துளிர்கள்நடுவில் தேனிறைந்த பூமலர்ந்தசோலைகள் கரியபடத்தின்மேலெழுதினதுபோல வானத்திலெழுகிய நக்ஷத்திரங்களென்பவோ? என்றுசொல்லவும், அந்தமுகத்திலே பலவகைத்தேனையுண்டு மயங்கியசிறகுள்ள பறவைகளைக்காணுதலாலும், இந்தமுகத்திலே மலர்களைக்கொய்யு மின்னார்வடிவுள்ள வதனத்தைக்காணுதலாலும், மூன்றாமுகத்திலேயு மழகெழுதிய பலவகைய [illegible]லசித்திரக்கூடம்போலச் சிலசோலைகள்தோன்றவும், லர்களைக்கா[illegible] பூட்டிய ஆ[illegible]தைப்போலக் கொம்பிலே மலர்கள் தாங்கவும், குயில்கள் கோ[illegible]வும், வண்டுகள் நாகசுரமூதவும், மயில்களினையா யுலாவிவரவும், மற்றப்பறவைகள் எல்லாங்கூப்பிடுமளவாகச் சப்திக்கவுமாயினதால் களிகூர்ந்த கலியாணப்பந்தல்போலச்சிலசோலைகள்தோன்றவும், முதிர்ந்தகனிகளும், மலர்களுங் கொத்துக்கொத்தாய்த் தூங்கவும், உதிர்ந்தபழங்களும், மலர்களுங் குப்பையாய்க்கிடந்து விளங்கவுமாயினதால் பலமன்னர்கள் தங்கள்கிரீடமுதலான ஆபரணங்களைக்கழற்றியெறிந்து, முதிர்ந்த துறவாகவிருக்குமிடம்போலச் சிலசோலைகள்தோன்றவும், கொழுத்த ஆட்டுக்கடாக்களுங், கலைமான்களுந், தூயநிறமாயுயர்ந்த பொலியெருதுகளும், கறுத்த வெருமைக்கடாக்களும் நெடுங்காலத்துக் தங்களுக்குள் சண்டையிடுவதால் அரசருடைய சிலம்பக்கூடம்போலுஞ் சிலசோலைகள்தோன்றவும், சருகருவென்று ஒருபால் காடைகள்கூப்பிடவும், குருகுருவென்று ஒருபால மயில்களொலிக்கவும், புறாக்கள்முதலிய மற்றைய பறவைகளுடைய சப்தமும் எழும்புதலால் ஓயாமல்வாராத அறிவைக்கற்கும் பாடசாலைபோலச் சிலசோலைகள்தோன்றவும், மேலேமலர்ந்த மலரால் படம விரித்திருக்கவும், வண்டுகளினியஇசையால் வீணைவாசிக்கவும், குயில்கள்பாட

வுந், தோகைமயில்க ளாடுங்கூத்தை மற்றப்பறவைகள் பார்த்திருக்கவுமாயினதால் பெரியநாடகசாலைபோலச் சிலசோலைகள்தோன்றவும், மயில்கள்காலைத் தூக்கிச்சோடாய்ப்போகவும், எதிராய்வரவுந், தோகைவாலைத்தூக்கிவிரிக்கவும் பலகூத்துவிகற்பங்களையாடித்திரியவே யஞ்சனம்பூசியமுகமாய்க் கருங்குரங்குகள்மேலே கொம்புகள்தோறுந் தூங்கவும், பாயவுமாயிருந்து ஆரியக்கூத்தாடியிருக்கும்பொழுது அச்சோலையையடுத்த பொய்கையுங் கூடநின்று பார்க்கும்படி, குவளையென்னுந் தன்கண்களைத்திறந்து தனக்கிடந்தேடி யப்பாலோடாமல் அலைந்தலைந்து திரிவதுபோலக் கரையிலேயலைகள் மோதமோத உள்ளேயிடமுங் கிடையாதென்று கண்ட முல்லைநகைத்ததுபோலத் தன்னரும்புகள் மலர்ந்து பூக்கவுங், கூத்து நெடுங்காலமாடுதலேனுற் சலித்து, கொட்டாவிவிட்டதுபோலக் காந்தள் மலர்ந்திருக்கவும், அத்தருணத்தில் தோகைமயிலைப்போலச் சிலமாதர்கள் அவ்விடத்தில வந்தமையால் அவர்களழகைக்கண்ட மயில்கள் நமதழகு தோற்றதென நாணியொடுங்கவுங், கிளைகளிலுள்ள மற்றப்பறவைகளிதைக்கண்டு சிரித்தாற்போல இன்பத்தாய்க் கூப்பிடவும், அங்காடெல்லாம் விளங்கி யொலிக்கும்.

பின்னுங் குளிர்ந்தமாலையைத்தரித்த அம்மாதர்கள் அந்நிறை விருண்ட சோலையிற் சூரியனுதித்ததென்று களிகூர்ந்தகுயில்கள் துதித்தாற்போலப் பாடவும், அன்னங்கள் அம்மாதருக்குத்தந்நடைகாட்டிப் படிப்பித்ததுபோல முன்னே நடக்கவு, மாதர்களந்நடை யெங்கள்பாதத்தில் பதித்தாயிற்றென்பதுபோல நடந்துபோய்ச்சந்திரகிரணங்களைத் திரட்டிவைத்ததுபோலப் பற்ப[illegible] மலர்ந்தபூவெல்லாம் விண்மேலேகானகத்திற்கிடந்ததென்றுகண்டுதாங்கள்மின்னலைப்போல அந்தச்சோலையைச்சுற்றித்திரிந்து அறுக்குமலர்ச்சாவுகொள்ளையாகுதென்று கண்ட வண்டுகள் கூவென்னும் ஓசையும், இதற்கிரங்கினாற்போலக் கிளிகள் கீகீயென்னு மோசையுமயங்க வள்ளைப்பாட்டுகளைப்பாடி வெள்ளைமுதற்பலநிறமாகிய மலர்களைக்கொய்து, அழகியமணிகளும், பவளங்களு, முத்துக்களும், பொன்னும், இவையெல்லாம் வடிவுள்ள மாலையாகக்கோத்ததுபோலப் பேரழகுள்ள மலரையெல்லாம் பொன்னூலினாலே தமதழகுக்கிணையாக மாலையாய்க்கட்டி, கட்டியமாலையைவிரலின்மேல் சுழலக்காட்டி, யுனதுநல்லதல்லவென்று தம்முள்ளிசலிக்கூப்பிட்டபின்பு அதையாபரணங்கள் தூங்குமார்பிலேயு, மணிக்கட்டிலேயும், வாசனைப்புகைபடிந்த கூந்தல்களிலேயும் படியச்சூடுவதல்லாமல் வாசனை நிறைந்த மலரைக் குடைந்[illegible]க்குந் தேனையுண்ணும் நெருங்கியவண்டுகள் பசியாற்றினபின் வரு[illegible]நின்று கூப்பிடுவதுபோல இம்மாதருமுருகித் தாங்கள்கொண்ட சந்தோஷத்தைக் கொப்பளித்ததன்மையாகத் தாமரைமெத்தைமேலிருந்து அன்னங்கள் பாடுமோசையும் நாணத் தாங்கள் மலர்மெத்தைமேலிருந்து மதுவின்வழியாய் வாசனைவிட்டுமலர்ந்த ஆம்பலைப்போன்ற வாய்மலர்ந்து சந்திரனொளிவுபோலத் தேர்ந்தவுணர்வுகளையும், புண்ணியத்தையும் நூற்படியேயாராய்ந்து புகழ்ந்துவீணையினோசைபோலப்பாடுவார்கள்.

ஆனதால் மேகத்துள் புதைக்கப்பட்ட மலர்ந்தகொம்புகள்தோறு மணக்குந்தேனைவிட்டுக் கண்களைப்புதைக்கு மிருள்படர்ந்த சோலைகளால் சூழப்பட்டுக் களிகூர்ந்தநாடிதுவென்றால் கண்கடந்த வழகுகொண்டு குளிர்ந்தவின்பந்தரும் வானுலகந் தேடாமலிருப்போமோ? நிழல்செய்யும் பூஞ்சோலைகளில் கண்ணுக்கு நிறமும், வாய்க்குத்தேனும், நாசிக்கு வாசமும், உடலுக்கின்பமும், செவிக்கு வீணைபோலப் பறவையோசையுங்கிளம்பும்படி கோடாதசெல்வமுடைய நாடிதுவென்றால் குறையென்று உள்ளே யிருக்கவொட்டாமல் நக்ஷத்திரங்களைப் புறத்தில் விளக்கத்தள்ளி வாடாத செல்வங்களைக்கொண்ட வானுல

கந்தேடாமலிருப்போமோ? படம்விரித்தபாம்பு தன்றோலையுரித்த தன்மை யாகக் கல்லுக்குள்ளே யுருஞ்சியுயர்ந்த மலையிலே தூங்கிவிழும்நதிபாய்ந்து நிறைந்தநாடிதுவென்றால் அலையில்லாத கருணைக்கடல்பாய்ந்து வடிவுநிறைந்த செல்வநிலைகொண்ட வானுலகந்தேடாம லிருப்போமோ? பகையில்லாமை யால் குளிர்ந்த சண்பகவிருக்ஷத்தினிழலிலேகிடந்து நல்லநித்திரைவரவுந், துன்பங்களிங்கில்லாமையால் பிறர்க்கெல்லாம் விருப்பத்தை வருத்திவிக்கவும் நாடிதுவென்றால் எக்காலமுமின்பங்குறையாத வாழ்வைச்செய்யுங்குணமுள்ளவானுலகந் தேடாமலிருப்போமோ? நக்கத்தக்க அளவாக நன்மைகளைக்கொண்ட நாட்டுச்செல்வத்தைத் தேடினபோது மக்களாசைக்குமேலுஞ் செல்வங்களையுடைய வானுலகந்தேடாதிருப்போமோ? அப்படிவானுலகந்தேடாமற்போனால் அழியாதவுயிர்களானவ ரழியாதமோக்ஷவின்பத்தைவிரும்புவதால் அக்கவலையைக் காடுசூழ்ந்த இவ்வுலகங்காட்டுநன்மையாற்றுமோ? ஆற்றாது. என்பதால் வீணையின்பமாய்ப் பாடினதுபோலக் கண்ணுக்கின்பஞ்செய்யு மழகுடையாரிவையும், இன்னும் பலவுங் குளிர்ந்த தேனின்பத்தோடே பாடியதால் அந்நாட்டார் பலநாளுங் களிகூர்ந்து வானுடையவின்பமநுபவிப்பார்கள்.

இதன்றி அலைகளும்,பண்டிகளுந் தேய்தலால் முழங்கவும், நிறைந்த [illegible]களுஞ்,சங்குகளும் பாவாகமுழங்கவும், ஆட்டுக்கடாக்களுஞ், மின்னலும் பாய்தலினால் முழங்கவும், எருமைகளுந், மாதர்களுந் தண்ணீரில் தோய்ந்து விழுதலால் முழங்கவுஞ், சோலைகளிடத்து வாசனையுஞ் செல்வமுங், கொம்புகளிடத்து [illegible] மலர்களிடத்துத் தேனும், வானிடத்து நக்ஷத்திரம்போல எங்கும் நவமணிகளும், பசுக்களிடத்துப் பாலுங் குறைவின்றி யிருக்கவும், அலைகளிடத்துள்ள தேனும், மரங்களிற் பூத்த மலரிடத்துள்ள தேனுஞ், சோலையிடத்துள்ள தேனுங், கனிகளிடத்துள்ள தேனு, மாலைகளிடத்துள்ள தேனும், வண்டுகள்மொய்த்த இருட்டிடத்துள்ள தேனுமெல்லாம் வயலிடத்துச் செந்நெல்விளையும்படி பாயவுஞ், சூரியனழகைத் தாமரை காட்டவும், நக்ஷத்திரங்களழகை மற்றநீர் மலர்காட்டவு, மேகத்தின் மழைத்துளி யழகைச் சொரிந்த தேன்காட்டவும், வானுலகிலுள்ள வழகைக்காட்டுங் கண்ணாடிபோலக் குளங்களழகு காட்டவு, மலையின்சிகர மேகத்தோடு பொருதவுங், கொடுப்போர் கரங்கள் மழையோடுபொருதவும், பொன்னாபரணங்கள் மாலைகளோடுபொருதவும், அம்மாலைகள் மார்போடுபொருதவும், பூமியோடு பண்டிகள் பொருது நடக்கவும், குளிர்ந்தபாலோடு பாவினிமைபொருதவும், நான்கொள்ளாதகொன்றுண்டோ என்றதுபோலச் செல்வங்களோடு நாடுபொருதவும், அந்நாட்டுச்செல்வம் வான்வீட்டுச்செல்வத்தோடு பொருதவுங், காலைகோதிலரும்பவிழ்ந்த வாசத்தாமரை மெத்தைமேல் சங்குகள் சூலுளைந்து, விளங்குமுத்துக்களையீன்றப்புறம்போக மாலைநேரத்திலன்னங்கள் வந்து அங்குள்ளமுத்துக்களைக்கண்டு தங்கருவென்றெண்ணி யடைகாத்துக் கருப்பஞ்சாற்றிலுமின்பமாய்ப்பாடவுங்,காட்டிடத்தில் முனிவர்களும் வாசக்கஞ்சமலரிடத்து அன்னங்களும், பூவிடத்துவண்டுகளுங், கொம்பிடத்துப் பேசுங்கிளிகளும், நாவிடத்தினியபாவும், நங்கையர்கையிடத்தில் வீணைகளுமாக இவ்வண்ணமெவ்விடத்தும் எந்நாளும் அரியகருணையுள்ள எந்தையைவாழ்த்திய வோசை கிளம்பவும், அறத்தினால் வரும் புகழே யரும்புகழென்றுந், தன்பகைவனைக்கொல்லுந் திறத்தினால்வரும்புகழே வஞ்சனையென்றுந், தெளிந்த வுள்ளத்தைக் கெடுக்கும்பாவத்தினால் வரு மின்பந் துன்பமென்று, மயக்குவிக்குமெல்லாம் புறத்து நீக்கி முடியாத களிகூர்ந் தியாவரு மோங்கவும் வருந்தாமற்செய்யும் நல்லறங்களொழியத் தீவினையுந், தள்ளப்படாத துன்பங்களும், உள்ளமயக்கமும், புகழ்வோரலலாமல் இகழ்வோரில்லாமையுமானதால் கதிர்பரப்புஞ்சூரியனைப்போல

முடிவின்றி யென்பிதா அருளிச்செய்த நாலிரெளிவுடைய மெய்யான வேத விதிகளின்படியே விரைந்துசெய்த நல்லறங்களைக்கொண்ட மனத்தோரடைந்த செலவங்களை யருந்தமிழும் நிகராகாததுமன்றிச் சொல்லருமையறிந்த வித்துவான்களாலுஞ் சொல்லப்படாவாம்.

ஆகலால் இப்பூவுலகங்கொண்ட தம்முன்சேர்க்கப்படாத அழகெல்லா மலர்நிறைந்த அந்நாட்டில் மிகுதியாகச் சேர்ந்ததினால் நாங்கொண்ட நிறைந்த வாசைக்குமேலும் வருந்தித்தேடினும், நாவிசைந்தநிறைந்த சொல்லுக்குமேலு மோங்கது. அல்லாமல் அந்நாட்டில வண்டுகளொசெத்து மலர்களைக்குடைந்து படுத்தியபுண்ணல்லாமல், அம்பு தைத்துப் பிளந்தமார்பின் புண்ணில்லாமலுஞ், சமுத்திரத்தைநாடிய சந்துகளோசையொன்றேமயங்கி முழங்குவதல்லாமல்கு ற்றத்தினாலாகிய மயக்கமில்லாமலும், இரவினிருளைமாற்றிவிளங்கிய பூரணசந்திரனின் குணத்தைமறைத்து விளங்குகின்றமாதர்கள் மயக்கமில்லாத கற்புடைய மார்பிலே தாங்குமாலையாகக் கட்டப்பட்ட முல்லைமலரினழகொத்தவராக விளங்கவுங், குற்றத்தினால் வழங்கும் பகைவர்மேல தொடுந்த அம்புகளில்லாமல் மேகத்தைப்போலக் கொடுக்கு மன்புடையராகிப் பொன்மலையையொத்த புயங்களையுடைய வீரர்கள்கொண்ட புகழ்ச்சிக்குச்சரியாக எழுதிசொலவா ரொவருமில்லாமலும், அருந்தவத்தின விருளில்லாமலும், எவருமநிறையப்புசிக்கக் கொடுத்தலால் செல்வமில்லாரிலலாமலும், அடைந்த தருமத்தின்மாசுபால் புன்மையில்லாமலும், வாழ்வெல்லாம் நிறைந்திருப்பதால் கூட்டவேண்டியது ஒன்றுமில்லாமலும், இருளைநீக்கி விளங்கு மிரவிபோல மருளைநீக்கு[illegible] இல்வாழ்வாரெலலாருஞ் செயயுந்தவையொழிந்து மும்பாரு மில்லாததினால் ஈகைகொடுக்க மனங்கொண்ட பெருமையோரலலாமல் வேறிலலாமலு. மூங்கிலிடத்துமுத்துக்கள்நிறையவும்,வயலிடத்துச்செந்நெல்முத்துக்கள்நிறையவுங், கடலிடத்து அக்குப்பெருமுத்துக்கள் நிறையவுங், கரும்பிடத்து முத்துக்கள் நிறையவுமானதால், இடமெல்லா முத்துக்கள்நிறையவு, மேகங்கள்பொழிபு மழைபோல வள்ளியோரையடைந்தால்நிறையக்கொடுக்கவும், தேன்மழைபொழிந்ததுபோல குறையில்லாத விநிகளைக் குருக்கள்பொழியவும், விசாலமான கிளைகளிலுள்ள குளிர்ந்தமலர்கள் குளங்களிடத்துநிறைந்ததாமரைபோலக்குவிர்ந்துதோன்றவுமாகிவிளங்கும். பாவிகளில்லாமையால் அந்நாட்டுச்செல்வத்தை யெடுத்துரைப்பக் கவிகளாற்சொல்லப்பட்ட பயன்களுள்யாதும் போதாதிருக்கவு மானதால்; இப்பூவுலகிற்கு ஓராபரணம்போலச் [illegible]செல்வங்களையணிந்து வாழு மந்தச்சூதேயநாட்டின்கண் பூமி தன்மார்பிலணிந்த வோரழகுள்ள பெரியமணிபோலததோன்றி யழகணிந்து இருக்கும் எருசலேம்நகரத்தி னியல்பை இனிப்புகழ்ந்துசொலலத்தொடங்குவாம்.

நாட்டுப்படல முற்றிற்று.

இரண்டாவது - நகரப்படலம்.

மெய்வ்வழிமறைநானீங்கி வியனுலகினிதென்றின் ஞ
வவ்வழிவுற்றதென்ன வதிக்தெமையளித்துக்காக்க ச
செவ்வழியுளத்தநூயோன் றெரிந்தமாநகரிதென் ரு
விவ்வழிபின்னருண்டோ வெருசலேநகரைவாழ்த் தி.

அதெப்படியென்றால், முன்கூறிய எருசலேம் நகரமானது மெய்யான வேதவிதிகளைவிட்டுப் பூவுலகோரின்பமென்று செய்த பாவத்தினு லழிவுற்றுரொன்றறிந்து நம்மை யிரக்ஷிக்கத்தெளிந்த வறிவுள்ள தூயகடவுளே தெரிந்

டிகொண்ட நகரமதுவென்றால் அதைவாழ்த்த வேறுவழியுமுண்டோ? மீள
வும் அடிமையாக வென்னைக்கொண்ட கடவுள் பூவுலகில் மனிதனானகாலில்
அவர் திருவடிகளைத் தாங்கினமையால் வானோரிறங்கவு, மானிடர் நக்ஷத்திரம்
விளங்கிய வானுயர்வீட்டிலேறவும் வழியாயிற்றென்றால், அதன்மேல் வரு
ந்தி உவமைகளைத்தேடி, யந்தவிசாலநகரை எவரோ புகழ்வார்கள். மே
லும் நினைந்த அளவைக்கடந்த கடவுள் வானமேலுயர்ந்த மோக்ஷத்தில்
வழங்கு மாக்ஷிமையானது நமது கண்களைக் கடந்ததென்று நினைத்து, அதற்
கோருபமானங் காட்டவேணுமென்று பூவுலகிலிருக்கு மிந்த மாநகரை யவ்
வீட்டிற் கொத்ததென்று சொல்லிப்புகழ, அவரோடு வானவரும், நல்லமது
ரமுள்ள சொல்லாற்சிறந்த காக்ஷியோரு, மனக்கோட்டமின்றித் தேறிய வரு
ந்தவத்தோருமாகிய இவர்கள்யாவருஞ் சொன்ன நிறைந்த புகழ்களின்மேல்
ஊமையாகிய நான்சொல்ல வேறுமுண்டோ? அன்றியுந் தேனினுமினிய கரு
ணையுள்ள செலவநாயகனுகிய கடவுளருள்புரிந்து, சிந்தியமீனினும்விளங்கி யிரு
ளைநீக்குந் திவ்வியவுதிரத்தைத் தானின்பமாய் முடியாகச் சூடியதால், அந்தப்
பொன்னகரமேசூழ்ந்தவானத்தினிலுயர்ந்த மாக்ஷிமையையுரைப்பதரிதாம். ஆக
லால் அந்நகரமானது யாவருக்குஞ் செய்யும்பயனினால்வேதத்தையொத்தும்,
விளங்குமணிகளால் பகலையொத்தும், விசாலத்தினு லுலகத்தையொத்து, மதி
ற்காவலினால் அழியாதகன்னிகையையொத்தும, வருவாருஞ் செல்வாரும் நெரு
ங்கிச் சாய்தலினால கடலையொத்துந், தன்பகைவர்களுக்கு முனிவருடைய கோ
பத்தையொத்தும், நன்மைகளினால் மோக்ஷத்தையொத்து மிருப்பதல்லாமல
அந்நகரை யந்தமோக்ஷமேயொத்திருக்கும். பின்னும் விளங்குஞ் சூரியகிரண
ம்போ லொளிர்ந்து, மேகங்களுலாவு மலைபோலுயர்ந்து, வானத்துள் புகுந்தம
தில்களைச்சூழ்ந்து, வொளிவுள்ள அலைகளோமாறி, விசாலமாகவிளங்கு மகழின்தோ
ற்றமானது பொன்னுலகத்தைப்பெருங்கடல் சூழ்ந்ததுபோலத்தோன்றும். மே
லும் வானத்துள்ளொழுங்க அந்தமதிலடியிலேசூழ்ந்த இந்தக்குவளைபூத்த நீள
கழியானது பூவுலகமதனக்கொத்த நிலமல்லவென்று கருதி, யுயர்ந்த அந்தமணி
நகரமானது தனக்குரியதலமென்னுந் தேவுலகிற்புகுந்து சேருமென்றஞ்சி, அ
தைக் கடல்சூழ்ந்த இவ்வுலகில் நிறுத்தவேண்டுமென்று வெள்ளிவிலங்கு காலி
லேயிட்டதுபோலவுந்தோன்றும். அப்படித்தோன்றிய அகழியானது பெரியோ
ர்கட்பு மிகவுந்தாழ்ந்துவோகொள்ளுமாப்போல ஆழமாய்த்தாழ்ந்திருக்க, அதில்
நீர்நட்டைப்போல பாசிகள் மேலேயாடவும், மாதர்களழகைக்கண்டகாமனார
நகரத்துள்ளிராமல் அந்தவகழியில் வாசனைகள்மலர்ந்து வாசனை வீசியிருக்க
வும், அன்றியும் அதில் பொருதுமுதலைகளின் கூட்டமோவென்றால் அறுக்கும்
வாளைப்போலவும், வளைந்த வெள்ளிவம்பிறைபோலவும் பல்லுகள்தோன்றஇரை
ச்சியைஉமிழும் வாயைத்திறந்து, கண்கள்வழியாக நெருப்பைச்சொரிந்து, முன்
னாளிலே யந்த அகழியைத் தாழப்பேர்க்கும்போது நரகமட்டுஞ்சென்று, அங்
கேயிருக்கும் பேய்களுருவோடே பயம்வருத்துவித்து வந்து திரிவனபோலவுந்
தோன்றும். விருப்பத்துக்கு மேலாகநிறைந்த நன்மையையடைந்து, தபசிகள்
தங்களுள்ளத்தைக் காக்குந்தன்மையினால் விரியாதபொன்மதில்களின்தோற்ற
மானது கெடாதவழகுள்ள பூமியானது தான்களிகூர்ந்தகாலில் நிறைந்த கிர
ணத்தைப்பரப்பி, யொளியைச்செய்யும் பசும்பொன்முடிதரித்ததுபோலத்தோ
ன்றும். மேகங்களாற்சூழப்பட்ட பொன்மலையையொத்தமதிலைசூழ்ந்து செல்
வமெல்லாம் உள்ளேசேர்த்துக்கொண்டு, கிரணத்தைவிடும் நல்லரத்தினால்விள
ங்குந் திருநகரந் திறந்தவாசலோவென்றால், பூமியானது தன்மையும்பெருமையு
முடைய ஆபரணங்களைச்சேகரித்தபின் அவற்றை யாவருக்கும் பயனாக விரு
ப்பத்தோடு காட்டும்பெட்டி தனதழகிய பெட்டியைத்திறந்ததுபோலவும், நீதிசெ

ரிகளையோதி, வான்வீட்டி லென்றும்வாழும்படி வழியிதுவே யென்றுகாட்டி, விரிவும் அருமையுமுள்ள, நாலுடையவேதத்தைக்கடவுள்வந்துசொல்லுதற்கு அவர்விருப்பத்தோடு திறந்த திருவாயைப்போலவுந் தோன்றும். தாரகைபோல விளங்கும் வயிரத்தூண்களை வானத்துள்புகும்படி வரிசையாய் நிறுத்திப், பல உபமானமெல்லாங் கடந்துவிளங்கும் இரத்தினங்களாலமைத்த கோபுரத்தின் சிகரங்கள் வானத்தின்மேலுஞ்சென்றிருக்க, அவற்றில்வைத்த பொற்குடங்களின் தோற்றமானது மற்றநகரத்துள்ளே இந்த எருசலேம் நகரமானது இராஜமாநகரமென்றுசூடின குளிர்ந்தசுடர்பரப்பு மகுடம்போலத்தோன்றும். போட்டநூல் சாயாதிருக்கும்படி, யொழுங்கோடு அளவைக்கடந்து நீண்டிருக்கும்வீதிகளுங், காட்டத்தகுந்த நூலெல்லாமுடையோர் படித்தகல்விக்குள்ள துணிவுபோல உயரவளர்ந்தமாடங்களும், பல ஆயுதங்களுங், கடுத்தநாலுடைய வீரர்களுங், கற்பின்தலைமையுள்ள மாதர்களுஞ், சக்கரநீதிநால்சாயாமல் அங்கேநிறைந்த மற்றையநன்மையாவும் இனிச் சொல்லத்தொடங்குவாம்.

மேகங்கள் விலகும்படி வளர்ந்தோங்கிய சில மாளிகைகளின் நல்ல சிகரங்களில் அருமையாய்ப்பூசிய வெண்சுண்ணச்சாந்து ஒளிவிடுவதால் வெள்ளியுச்சிமலைகள் கூட்டமாய் விளங்குவதுபோலத் தோன்றவும், வெந்த அகிற்புகையினுள் சுடர்விடுநவமணியால் பதிக்கப்பட்டசிலமாளிகைகள் இளமேகத்திற்புகுந்த சந்திரன் ஒளியை விடுவதுபோல விளங்கவும், நீசர்மனம்போல வளையாமல் நிமிர்ந்த பொற்கம்பினுச்சியிலே பொன்னாற்செய்த நல்ல கொடிகளானவை கற்றோர்மனம்போல வெள்ளையாகத்தோன்றி, ம[illegible]மனம்போல எங்கேயும் அசைந்தாடவும்,மணியால்விளங்கு மாளிகைகள்மேலசையுங் கொடிகளானவை குறையாமற் கொடுப்போருடைய ஆசைபோலக் குற்றமில்லாத அருஞ்செல்வங்களை யனுபவிக்க வாருங்களென்று எல்லாரையுமழைப்பதுபோலத் தோன்றவுஞ், சூரியனகன்றுபோகப் பெருகிய இரவினிருள்நீங்க விளங்கும் பொன்னு,மணிகளு, முத்துக்களுங்கோத்து மேலேதொங்கக்கட்டிய தோரணங்களானவை மேகவில்லைப்போலத் தோன்றவும், வானமட்டு மெட்டும்படிகட்டிய புஷ்பத்தோரணங்களி னின்றொழுகிய வாசத்தேனைப் பலவண்டுகள் சூழ்ந்தருந்தியபின் ஒளிவும், இசைகளும் விட்டுமேலே யூஞ்சலாடவும், யானைகளோடுயானைகளுங், கடிவாளம்பூட்டிப்பாயுங்குதிரைகளோடுகுதிரைகளுங், குதிரைகளா லிழுக்கப்பட்ட ஒளிதவழ் நவமணிபதித்த பொற்றேர்களுஞ் சாய்ந்ததினால் சாய்ந்தவிடமெல்லாம் நெருங்கவும்,முரசங்களுஞ், சங்கங்களும், இரதங்களு, மதம்பொழி கஜங்களுந், தாரகவினங்களுமுழங்கிய வோசைகளானவை மேகத்தின்முழக்கமுங், கடலின்முழக்கமும்,அடங்கும்படி கிளம்பவும், இரத்தினாபரணங்க ளசைவதினாலும், அரசர்கள் சாய்ந்தநெருக்கத்தில் முடிகளொன்றோடொன்று அடிபடுவதினாலும், வீணைகள்வாசிப்பதினாலும், மாதர்கள்சிலம்போடுநடப்பதினாலும், ஆடவர்கள்கழற்காலொடு நடப்பதினாலுங் கிளம்பியவோசைகள் அதிர்ச்சியாகியபயமின்றி யினிதாய் முழங்கவும், நெருங்கிச்சாய்ந்த குடைகளுங்,கொடிகளும் இருளைச்செய்திருக்க விளங்கிய ஆபரணங்களும் பொன்முடிகளுஞ் சாய்ந்தவிடமெல்லாம் பகலைச்செய்வதினா லெதிரின்றி யெங்கும்வாழவுஞ், சங்குகளால் தரப்பட்ட நிறைந்தமுத்துவடங்களோடிசைந்து, மார்பிற்றூங்கும்வாசமாலைகள்பொழியுந்தேனை நெருங்கியவண்டுகளுண்டு இன்னிசைகள்பாடுதலா லெங்கும்இன்பமலியவுங், கஸ்தூரியின்மணமும்,அகிற்புகையினாறுமணமும்,உரைத்தசந்தனத்தின்மணமும், நிறைந்த தேனைப்பொழிந்த மலர்களின்மணமும், மலர்மாலைகள்விடுந் தேனின்மணமும், பொற்குடங்களிலுள்ள பன்னீரின்மணமும், நல்லகுங்குமமுதலியவற்றால் கூட்டிச்செய்த சுண்ணங்களின் மணமுமாகிய இவையெல்லா மொருங்கு சேர்ந்து

எங்குமணக்கவும், அந்தத்திருநகரம்விளங்கும், பொன்னாற்சூழப்பட்ட செம்
பவளத்தூண்கள்மேல் விரித்த மணிபதித்த பொன்மேற்கட்டியுந், திரைச்
சீலைக்குச் சூழத்தொங்கு முத்துக்குஞ்சங்களும், உள்ளிருக்க மரகதத்தாலெ
டுத்த சுவர்களுள்ள படுக்கைவீடுகளும், பகைவர்மார்பிற் பாய்ந்து விளங்கு
ம் வாள்களுந், தமக்குவிருந்துசெய்தமையால் கழுகுமுதற் பலபறவைகள்வி
ரும்பும் வேல்களும், வருந்திப் போர்கடந்த வில்லுகளுஞ், சூலங்களு, மற்றப்
போர்க்குதவியாகும் படைக்கலங்களுமிருக்குஞ் சாலைகளும், நீலமு மரகதமு,
முத்தும், பவளமும், வயிரமுங், கோமேதகமும், புஷ்பராகமும், வயிடூரிய
மு, மாணிக்கமுமாகிய நவமணிகளிருக்குஞ் சாலைகளும், பகைவர்பணிந்து
இறையாகக்கொண்டுவந்த பொன்னும், மலைகளி லெடுத்தபொன்னும், ஆறு
கள் கொண்டுவந்த பொன்னும், நிறைந்திருக்குஞ் சாலைகளும், மனக்கோட்
டமின்றி யருளைக்கொடுக்குஞ் சத்தியவேதத்தின் திவ்வியமதுரமான நூல்
களைப்போதிக்குஞ் சாலைகளும், நல்லறிவைக்கொண்டு யாவற்றையு மாராய்ந்த
பலகல்விகளைப் படிப்பிக்குஞ் சாலைகளும், நல்லகுறுந்தடிகள், கவண், பெருந்
தவில்லுகள், சக்கராயுதமுதலிய குறிபடைகள் குறிப்பிடப் பழகிமுழங்குஞ் சா
லைகளும், வெற்றிமாலையால் சூழப்பட்ட வாள்முதலனேகமாகிய கைவிடாதி
யப்படாத படைச்சிலம்பக்கூடத்தில் பகைவரஞ்சப்பழகுஞ்சாலைகளும், வாச
நற்கனிகளைப் பார்க்கிலு மினிய வீணைமுதலிய வாச்சியங்கள் முழங்குஞ் சாலை
களும்,இனிதாகப்பாடியாடி வான்மகிழ்ச்சிபோலமுழங்கும் நாடகச்சாலைகளும்,
முன்பு பகைத்துப் பின்பு அடக்கப்பட்ட அரசர்கள்வந்து, இராஜாவைவணங்கு
ஞ்சாலையு, மற்ற அரச ரிறைகொடுக்குஞ்சாலையும், வணங்கின அரசர் பின்புற
மிருக்குஞ்சாலையும், அவ்வரசர்களுக்கு வெகுமானங்கொடுக்குஞ்சாலையும், இரு
ப்பதல்லாமல் பெய்யுமேகங்கள்போலமிருகியும் பொருளெல்லாங் கொடுக்கு
முறைமையை எல்லாருந் தங்கள்வீட்டிலே விருப்பத்தோடு ழங்கினமையால்
அவரவர்வீடு தருமச்சாலையாயிருப்பதன்றி அங்கே விசேஷித்ததருமச்சாலையில்
லையாக விளங்குவதோடு ஆபரணங்களாற் சூழ்ந்த சுவர்களாற்சாலையும், நிரை
யாகநிறுத்தின பவளத்தூணோடு மலைபோலவளர்ந்த சுவரின்சாலையும், முத்துக்
குஞ்சங்கள் தொங்கக்கட்டின மாணிக்கச்சுவர்ச்சாலையுமாகிய இவையெல்லா
ஞ் சூழ்ந்துநிற்கவும் விளங்கிய அந்த ஜெருசலேம் என்னுந் திருநகரத்தில்
அணிகளால் சுவரெடுத்த தேவாலயத்தி னியல்பை யினிச் சொல்லத்தொடங்
குவாம்.

அதெப்படியென்றால், கருதிய அளவெல்லாங்கடந்து, மூவுலகும்நிறைந்
திருக்குங்கடவுள் விசேஷமாயிருந்து, தனது கருணையைக் காட்டவந்த அந்த
இராஜமாபுரத்தினடுவில் பகலினும் விளங்கச்செய்யப்பட்ட திவ்விய தேவாலய
மானது அந்நகரத்துக்கு அலங்கரித்தமுடியோ? அம்முடியிலிருக்குமாமணியோ?
அவ் வான்மேலொளிருஞ்சூரியனோ? புண்ணியஞ்செய்யவெடுத்தவுடலினுயிரோ?
ஏதோஎன்றுசொல்லப்படு வுடலின்முகமோ? அவ்வழகியமுகத்தின்கண்ணோ?
அழகியதங்கத்தின்மேற்பொன்னாலெழுதிய வதல்லாமல் அத்தேவாலயமானது
இரத்தினங்களாற் சுவர்களையேற்றி, அரி ஞபோலத் தெளிந்ததங்கத்தாலிசைபட
சிகரங்களோடு வானத் பதச்சர்களும் நாணும்படி, பசும்பொன்னாலலங்கரித்த
வானுலகோர் அழகாயல தோடொட்டியிருக்கின்றதென்று தோன்றினதினால்
ங்கரித்து முடித்தநகரையென்று தாமதைக் கைவிடாமற்பிடித் திவ்வுலகத்திலே
காட்டியதன்மைபோலத் தோன்றியும், பூவுலகோர் மோக்ஷத்திலேறவும், வா

னில்கோர்விரும்பியிங்கே யிறங்கிவரவும், வழியாகி † யாக்கோபுறங் அவ்விடத்
தேகண்ட ஏணியைப்போல இருந்தது, தூண்கள் மேலுபர்க்கமுகட்டிலே பரப்
பின தூயபொற்றகட்டின்மேல் சூரியன் கதிர்பட்டமாத்திரம் அணியணியாய்
நெருங்கிய தன் னுருவிளங்கக்கண்டு. உவமையிலே தோற்றுநாணினுப்போலச்
செஞ்சுடரோன் சாய்ந்துபோக, ஆயிரஞ்சூரியன்களைப்போல விளங்கியிருக்
கும். அப்படி விளங்கியதேவாலயத்தின் முன்னே ஒருபாற்பொன்னுலேசைத்தவயி
ரத்தூண்மேல் பவளப்போதிகையும், ஒருபால் ஒளிதவழும் பவளத்தூண்மேல
மரகதப்போதிகையும், ஒருபால்விளங்கிய தங்கத்தூண்மேல் பலமணிப்போ
திகையுஞ்சேர்த்து, நிரைநிரையாய் மேகத்தின் மின்னலைப்போல மின்னிப்
புலமண்டபங்களிருக்கவும், அத்தேவாலயத்தின் சுவர்களிலே அரிய அழகி
னுல் இன்பமடைந்த கண்களுக்குமுதலாய் வேதநூல்க்காட்ட, நிரைநிரையா
ய் நகைவேலையாற் பலவுருவங்கள் புடைத்தெழும்பி யிருப்பதும், அரியவடி
வின் உயிர்பெற்றதுபோலச் சித்திரங்களெழுதியிருப்பதும் பார்த்தால் அந்தத்
தேவாலயத்தி னதிசயங்களைக்கண்டு, ஆச்சரியப்பட்டதினுல் வாய்பேசாமலுங்
கண்ணிமையாமலு மிருப்பதுபோலவுந் தோன்றும். அதில் மாணிக்கத்தா
லாயிரம்விளக்குகளும், மரகதத்தா லாயிரம்விளக்குகளும், பவளமு முத்துங்
கலந்து கோவையாகத்தூங்கு நீலமணியா லாயிரம்விளக்குகளுந், தங்கத்தா
லாயிரம் நிலைவிளக்குகளும், வயிரத்தாலாயிரம் விளக்குகளுஞ் சேர்ந்து, சூரிய
னிலுமதிகமாய்ப் பிரகாசிக்கவுந், தீயைப்போலவெரியுஞ் சிவந்தமணிமுதற் பல
மணிகளும், எரிந்த விளக்கின் மிகுதியும், நிறைய வெங்குமெரிந்த தங்கத்தி
னெளியுமாகிய இவையெல்லாஞ்சேர்ந்து, கிரணங்களைப் பரப்புதலால் விழித்த
கண்கூசுமென்று சூரியனைமூடிய இளமேகம்போல எங்கணும் அகிற்புகை
முதல் தூபமற்ற வாசனைப்புகைகள் குளிர்ந்துகிளம்பவும், முருடு, பம்பை,
கொம்பு, முரசு, சங்கு, தெளிந்த நாகசுரம், வீணை கின்னர முதலிய மற்ற
மதுரவாச்சியங்களு மினிதாய்முழங்க, அவற்றுடன் புகழ்வோர் பாடுமோசை
யு மினிதாயிசைந்து கடலொலியைமறைத்து இருசெவிகளு மின்பமாய் வா
ழக்கிளம்பவும், பூமழையின் மிகுதியும், சந்தனமும், பன்னீரும் பெய்யும் வாச
மழை மிகுதியுந், தங்குறைகளைத்தீர்த்த நாதனைத் துதிப்பவர் சொல்லும் பாம
ழைமிகுதியுங், கன்னிகைகள்பாடு மினியபாமழைமிகுதியும் என்றுமாறும் மே
கங்கள்பொழியு மழையினுமிகுதியாய் வானுலகமட்டு மின்பமாய்த்தோன்றவும்,
வானுலகுக்கொப்பாகத் தினந்தோறுங் குருக்கள்குறையாமல் தேவாராதனை
திருத்து நன்முறைகளையும், வானமும்பூமியும் இணையாய் நிற்கும்படி வழங்கும்
நல்லறத்தின்முறைகளையும், இன்பமாய்க்கண்டவ ரிமையாம லதிசயித்திருப்ப
தல்லாமல் பாமாலைகளாற்றொடர்ந்து புகழத்தகுதியல்லதா யிருக்கவும் விளங்
குவதால் இந்தத்திருத்தேவாலயத்தைக்கொண்ட அந்தஜெருசலேம்நகரமானது
உலகங்களெல்லாம் வணங்கத்துணையின்றித் தனியேயாளுங்கடவுளை வணங்கி
யதினுல் அளவுமின்றிப், பழுதுமின்றிப், பயன்றரும் புண்ணியத்தருமையால்
உவமையின்றிச், செல்வங்களெல்லாமுடைய குடிகளின்பமாய் வாழ்ந்திருக்கவுங்
கொண்டதனுல் பூவுலகில் விளங்கு மற்றநகரமெல்லாவையும் பழித்துவிளங்கும்.

இத்தன்மையுள்ள திருநகரிடத்தில் மணிவட்டவடிவமா யரிய அழகுடையார்
செல்வரிறுமுறைப்படி இனிதா யெல்லாப்புண்ணியங்களையுஞ்செய்வதாலும்,
ஆடலும், அமுதினுந், தேனினு மினிதாயப்பாட்டும், பொருட்செல்வத்தினும்

† இந்தத்தேவாலயங் கட்டுவதற்குமுன் னவ்விடத்திலே ஓரேணிதோன்றி, யது வான மட்டுஞ் சேர்ந்திருக்கவும், அங்கே கடவுளதைத் திருக்கரத்தால் தாங்கியிருக்கவும், அதன்வழியாய் அழகுடைய வானவர் ஏறவும், இறங்கவும் யாக்கோபென்பவர் கண்டார். மோசே முதலாகமம். 28-ம். அதிகாரம்.

பயன்றருங் கல்விச்செல்வங்தேடவும், இன்பமாய்வாசமலரைச்சூடவும், வாசமலர்முடிசூழ்ந்த வடிவோடுதிரிந்தவர் கூப்பிட்டு, வாசப்பன்னீரைச் செல்வமாய்விளைவுருந் தெருக்களிற் சிந்தி வெள்ளமோடும்படி சந்திரனைப்போல மலர்களாற்கட்டின பந்துகளை யடிக்கும்போது படிவரதையெறியவும், வந்தெதிர்ப்பவர் மறைந்துபோய்ச்சிரிக்கவும், இப்படியினிதாயொருபொழுதுபோகவும், நக்ஷத்திரத்தினுமவிளங்கி நல்லறங்களைச்செய்வோர் பாலினுமினிய இசைப்பாட்டுகளைப்பாடிப் பகற்பொழுதும்போகக் கல்வியெல்லாம நுண்மையா யாராய்ந்து இராப்பொழுதும்போக, வானத்தினுவமைபோல நன்றாயிருபொழுதும்போகவும், எழுதப்பட்ட வினிபவடிவுடையார் இழிவுசெய்யும் பொய்யான இன்பம் இன்பமல்லவென்று, மெய்யானகடவுளைத்தொழுது, நல்லறத்தினால்வரும் இன்பத்தோடும் ஒன்றானகடவுளைத்துதிக்கவும், நாவிலேவீற்றிருக்குங் கல்விகளை யாராயவும், அறங்களைச்செய்யவும் பாவிலேவீற்றிருக்கு மிசைகளைப் பாடவும் பொழுதெல்லாந் தொலையும். வீரபுஜங்கள் மலைகளைவெல்லவும், கொடைதானங்கள் மழைக்துளிகளை வெல்லவும், நிறைந்த கல்விகள் துறையெல்லாம் வெல்லவுஞ், செல்வங்கள் பூமியினலமெல்லாம் வெல்லவுங், கடைவீதிகள் கடலோடுபொருதுமுழங்கவும், நல்லமணிகள் எவ்விலையும் [illegible]றாமல் விலையொடுபொருதவும், முடிவில்லாத இன்பங்கள் படித்தநூல்களோடு பொருதவும் விளங்குவதன்றி யங்கரமுந் தான்கொண்டசெல்வங்களால் மனைக்கவர ஒருவலையையுமொத்திருக்கும். அன்றியுஞ் சங்கும், வளைந்தகொம்பும், வளர்ந்த[illegible]வும், வீணையும் பலதுளையுள்ளகுழலும், யாழுமாகச்சேர்ந் தொலிக்குமோசை யினிதாய்விளைந்து கடலொலியினு முழங்கவும், கொடியோடு குடைசேரவும், அரசர்கூட்டத்தினடியோடு அடிசேரவும், எழும்பிய புழுதியினால் இருளாகத்தளங்க ளெங்குநிறையவும், நடத்தினபொற்றேர்கள் முடியோடு மேகத்துட்புகவும் இதனால் எங்குமதிர்ந்திருக்கும்.

நெறிதவறாத வுயர்ந்தசெங்கோலுங், குளிர்ம[illegible]குடையும், வாடாத வெற்றியும், மதமாறுதயானைகளும், பின்வாங்கா[illegible] பலத்தசேனையுமுள்ள வரசர்பிரான் திறத்தினாலே முடியாதபெருமையுஞ் செல்வமும் உடைத்தாகியும், நிறைந்த அன்புள்ளதாயின்முலையைச் சிறுகு[illegible]ைதகள் பிடித்துநின்றதுபோல அன்பொடு அரசாளுமன்னவனுடைய க[illegible]யுள்ளசெங்கோலைக் குடிகளெல்லாம் பிடித்திருக்கக் குறையொன்று[illegible]ல்லாமல் உவமைகடந்த வாழ்வுகளும், நன்மைகளும் அளவில்லாமல் வீற்றிருக்கவும், குளிர்ந்தஅமுதம்போலு மினியசொல்லையுடையகுணத்தார் தருமத்திற்செலவழியாதசெல்வங்கள் தானேயழியுமெனக்கருதி, அதைவிருப்பத்தோ டிரப்போர்க்குத்தந்து, மற்றைய தருமத்திற்குஞ் செலவழித்தால் அப்போது பறக்கும் பறவையைத் தொடரு நிழற்போலத் தம்மைப்பின்தொடர்ந்து, மோக்ஷத்திலே பயன்தருமென்று அறிந்து செய்து விருந்துண்ணவருவா ரில்லாதிருந்தால நொந்துமெலிந்துமிருக்கவும், இன்னு மேகத்தினுங், கடலினு மிகுதியாய் முரசினால்முழங்கு மவ்விடத்தில் வாழ்பவர்கொடுக்குங் கொடைதான மிகுதியாகையால் சிலமுறையவைவாங்குவாரில்லாத குறையன்றி வேறு ஒருகுறையுங், கள்ளரும், நீசரு, மில்லாமல் வாழ்ந்திருக்கவும், அங்கவெங்கும விளங்குந்தண்ணீரினலையல்லாமல் வேறலையில்லாமலும், நிறையக்கொடுப்போர் நிறையவாங்கச் சொல்லிச்செய்யும் போரல்லாமல் பகைப்போரில்லாமலும், மழைபொழியுங் கருமேகமல்லாமல் வேறு மாசுகறுப்பில்லாமலும், அறமேசெய்யுஞ் சிறையல்லாமல் வேறுசிறைச்சாலைக வில்லாமலுமிருப்பதால் மின்போலு மாதர்கள்பாடியவின்பம் பெரிதென்பவோ? கல்விநூல்களைச்சொல்வோ? பொன்வீணைபேசுமின்பம் பெரிதென்பவோ? மழைபெய்வதுபோலப் பொருளைக்வார் மொழியின்பம் பெரிதென்பவோ?

கொடுத்ததினால் தமக்குவருமின்பம் பெரிதென்பவோ? என்றிருக்கவும் அழியாத மதில்கள் விலலைப்போன்ற நெற்றியுடைய மாதர்கள் மனத்துக் கற்புக்காவல்போலவும், மாளிகைகள் சந்திரனைப்போலவும், யானைக்கூட்டங்கள் மேகங்களைப்போலவும், இரதங்கள் மலைகளைப்போலவும், குதிரைகள் காற்றைப்போலவும், கடைவீதிகளும், வீரர்கூட்டமுங் கடலைப்போலவு மிருக்கவும், பாடுவோர் குரலின்பத்தினால் பாவின்பம் நாணவும், மணிகளொளியாற் சூரியனுணவும், இனியகருணைமுன் மலர்த்தேனுணவும், கொடைமிகுதியால் மேகங்கள்நாணவும், படித்த கல்வியுரைக்கவடங்காமல் நாக்குநாணவும், நிறைந்தசெல்வங்களினால் ஆசைநாணவும், வான்முதலாய் நாணவுமாகிய குறையாத நன்மையெல்லாமடைந்து, மலரிடத்துத் தேன்போலவு, முகத்திடத்துக் கண்போலவும், பதக்கத்திடத்தில் மணிபோலவும், உடலிடத் துயிர்போலவும், நாட்டிடத்து ஆறுபோலவும், அறவழியில் குருப்போலவும் விளங்குமிந்த ஜெருசலமாநகரத்திடத்தில் நல்லரசன்வேண்டியதால் இனி யரசினியல்பைச் சொலலத்தொடங்குவாம்

நகரப்படல முற்றிற்று.

மூன்றுவது - வளன்சனித்தபடலம்.

அன்னமாநிருதக ரகத்துடற்கு வி
ஒன்ன்மாதாவித ளினிதில்வீற்றிரு ந்
தொன்னலார்வெருவுற வுவந்துபாவல ர்
சொன்னபாகிருமேற் றுளங்கினை ரோ.

அந்த மாக்ஷிமையுள்ள ஜெருசலேம் நகரினிடத்தில் உடலிடத்து உயிரிருக்குந்தன்மைபோலத் தாவீதென் என்னும் இராஜாதிராஜன் இன்பமாக வீற்றிருந்து, தனது சத்துராதிகள் அஞ்சும்படி தான்களிகூர்ந்து, வித்துவான்களால் சொல்லப்பட்ட நான்குபாக்களின் உபமானமெல்லாங்கடந்து, கிருபையால் நிறைந்த நெஞ்சமுந், துளியால்நிறைந்த மேகம்போலப் பிரதியுபகாரத்தை நினையாது கொடுக்குங்கையும், மலர்மாலையால் நிறைந்தமார்பும், பொன்னால் நிறைந்த மலையையொத்த புயமும், ஒளிதவழும் இடிகையெய்யப்பட்டவில்லும், குளிர்ந்த நிழலைச்செய்யுந் தயையாகிய குடையும், விளங்கியநவமணியால் அலங்கரிக்கப்பட்டதேருங், களிப்போடு மும்மதங்களைப்பொழியும் ஆண்யானையின் பலமும், போர்முகத்தில் பின்வாங்காத வீரசிங்கம்போலத்தோன்றி, மெய் முகத்தில் பொய்நில்லாததுபோலப் பயந்தோடும் பகைவர் இவ்வரசன் கைமுகத்தில் நில்லாமல் கலங்கிவணங்கிய போர்செய்யுமுன்னர் வெற்றிகொள்ளுஞ் சிங்கக்கொடியும் உடையவனும், கடல்சூழ்ந்த பூமியிலிருந்து விளங்கும் வானோர்விரும்பிய தன்மையுடையவனும், ஆயுதங்களைக்கொண்டு செய்யப்பட்ட யுத்தத்தினால் வெல்லப்படாத தன்னை மிகுந்ததவத்தைக்கொண்டு வென்று, நீதிநன்முறைகளும், நிறைந்ததவமும், ஆண்டவனுடையசத்தியவேதமும் ஆகிய இவையெல்லா மேற்படார்ந்தோங்கக் குறைவில்லாத வுதவியைச் செய்த கொழுகொம்பாகி, மோக்ஷத்தில் குறையின்றி வழங்கிய நல்ல முறைகளை யிவ்வுலகத்திலே யடைந்த மாக்ஷிமையுடையவனுமாய் விளங்கினான். இவ்வரசன்கொண்ட நீதிச்செங்கோலின் நன்மைகுறையாமல் வளர்தலால், இவனாண்ட சூதேயநாடுமுழுமையுங் கல்விப்பொருணலமுஞ், செல்வப்பொருணலமுங், தருமத்தினலமும் இவைமுதலிய மற்றநலங்களுநிறைந்து, நக்ஷத்

திரங்கள் விளங்கிய வானுலகத்தாரு மதிசயிப்பவாழ்ந்தது. சத்துராதிகளுக்கு
இடிபோலும், வணங்கித்துதிப்பவர்க்கு அமுதம்போலும் அச்சத்தைத்தரும்
வேலாயுதத்தையுடையவனுகிய. இந்தஅரசன் தான்பாலகனுகஇருக்கும்போது
ஒருகாலத்தில் தன்னையிகழ்ச்சிசொன்னவர்களுக்குமுன் ஓராயுதமுமில்லாமல்
வேதனைசெய்துகாட்டிய வீரவல்லமையைச் சொல்லத்தொடங்குவாம்.

அதெப்படியென்றுல், சத்தியவேதத்தை யனுசரித்து, அதனுல் செழிப்
போங்கிய சூதேயநாட்டை மன்னர்க்குமன்னனுகிய சவுல்அரசன் ஆண்டபோ
து, அவ்வேதத்தைப்பகைத்து, மலைகளில் வாசஞ்செய்யும் இராக்ஷதர்களாகிய
பிலித்தையஜாதியார் மேற்கூறிய அரசனேடுயுத்தஞ்செய்யஎதிர்த்து வானமா
ரியைப்போல அம்புமாரியைவிடுத்து அழியாதபொன்மதில்களால் சூழப்பட்ட
அந்நகரமெல்லாம் நடுநடுங்கச் சூரியனைப்போலக் கிரணம்வீசும் வாளையேந்தி
னவர்களாய், நெருங்கும்பொழுது அவர்கள்மத்தியில் சூல்கொண்டகன்ற கரி
யமேகவடிவாய்க் * கோலியாதென்னும் கொடிய ஓர்இராக்ஷதனுமிருந்தான்.
அவன் கருக்கொண்டமேகத்துட்புகுந்த இரண்டுபர்வதங்களால்தாங்கப்பட்ட
இருண்ட ஒரு பெரிய பர்வதம்போல ஆகாயத்தைமறைக்கும் பருத்த இரண்டு
புஜங்களும், அதன்மேல் கோபாக்கினியைக்காட்டுந்தலையுங்கொ[illegible], எவரும்
அஞ்சத்தக்க ரூபத்தோடிருந்து நீண்டவா ளிடையிற்கட்டித்தூங்கவுங், கறுத்த
மேகத்தையொத்ததோளிற் கேடகத்தைச்சுமந்தும், வெய்யசூரியனைத் தூண்
டலாமென்றதுபோலக் கோபாக்கினியைக்காட்டும் நீண்டஈட்டியைக் கையிற்பி
டித்தும், கண்களைக்கிழித்தளாவிய அக்கினியைநிறையவிட்டும், வெள்ளத்தினுற்
பொங்கிய நதியானதுதனதுஅலைகளைச்சுருட்டி ஓடுவதுபோல, எருக்கம்பூமாலை
யோடு இழிவுநிறைந்த நெஞ்சத்தில் தணிக்கப்படாதவாங்காரத்தால் பொங்கித்
தீயெழக்கோபித்து,நிறைந்தஆங்காரகோபவுரைகளைக் [illegible]டையிடிபோலிடித்து
ச்சொல்லுவான்.ஓ இசரவேலரே! யுத்தஞ்செய்யவந்த[illegible]ங்களுக்குள் ஒருவன்வ
ந்து என்னேடு தனித்துயுத்தஞ்செய்யட்டும், சண்[illegible]யி லெவன் தோற்பானே
அவனைச்சேர்ந்த படைகளெல்லாம் வெற்றியடை[illegible]தவனுக்கு அடிமையாகக்கட
வதென்றுகூப்பிட்டு இகழ்ச்சியோடுசொல்லிச்[illegible]ொல்லியழைப்பான். அப்போது
இசரவேலர்யாவரும் இந்தஇராக்ஷதனுடைய[illegible]வமானங்கடந்த உருவைக்கண்டு
இவன்மலையோ? பேயோ? பூதமோ? ஏ[illegible]வென்றுபயந்தும்,மின்னியிடித்தமே
கம்போல இவன்சொன்ன சொல்[illegible]யுங் கேட்டுமயங்கினுர்கள். இப்படிஇசர
வேலர்படையெல்லாம் [illegible]டுங்கி, [illegible]ஞ்சினதினுல் மீளவும் உயர்ந்த மலையையொத்
த இந்த இராக்ஷதன் ஆங்காரமெழக்கோபித்து நெடுநாளு[illegible] ஆண்டவனையும
பகைப்ப இகழ்ச்சிமொழிகளைப் பலமுறை[illegible]துவருவான். அத்த
ருணத்தில் இசரவேலருக்கு அரசனுகியசவுலரசன் இந்தஇராக்ஷதன் பகையை
யொழித்துத் தாங்குவாரில்லாமலும், அவன் உரைத்த சொல்லைக்கேட்டு எவ
ரும் பின்வாங்கினுரென்றுங் கண்டுமயங்கி, யேக்கங்கொண்டு சொல்லுவான்.
யாராகிலும் அந்த இராக்ஷதனையுத்தத்தில் எதிர்த்து, வெற்றிகொண்டுவந்தால்
அவனுக்கு என்மகளைக் கலியாணஞ்செய்துவைப்பேனென்று உறுதிமொழி
யாகப் பறையறைவித்தான். அதைக்கேட்டும் யாவருந்துணியாமலிருக்க இவ
வண்ணமாய் நாற்பதுநாளும் போனபின்னர் முன்சொன்ன தாவீது மகாராஜா
தன்தமயன்மார் மூன்றுபேர் இந்தசவுலரசன் சேவகராய் படையில்சேர்ந்து,
யுத்தத்துக்குப்போயிருந்தபடியால் அவர்களைக்காணும்விருப்பத்தினுல் இந்தச்
சங்கதிதெரியாமல் தானுமந்தப் போர்க்களத்திற்போய் இராக்ஷதன்கக்குந் தூ
ய்வதூஷணங்களைக்கேட்டான்.கேட்டவார்த்தைகள் இவனுடைய ஊக்கமுள்ள

* அரசர் முதலாகமம். 17-ம். அதிகாரம்.

நெஞ்சிலே தீயைக்குவித்ததுபோலானதினால் கருதினயாவும் நிறைவேற்றச்
சொல்லிலடங்காத வல்லமையுடைய கடவுளையிகழ்ச்சியாகச்சொல்லிச் சாவை
விழுங்கிய பாவி யாரென்றாந், தன்கையின்திறத்தினை நம்பி, தன்னுடலினுயர்ந்
த ஆங்காரத்தைக்கொண்டு, பொய்வல்லமையுடையோன் சொன்ன உரைக்கு
அஞ்சிலதென்னவென்றாந், தேவவல்லமையினால் ஜெயமாகுமோ? ஆகாதே
யென்றும் ஆண்டவன்தருந் திறத்தைக்கொண்டு, பாலனாயிருந்தாலும் நானே
யவனை வெல்லுவேனென்றும் யாவருமறியவிளம்பினான். இந்தக்காரியத்தைச்சா
ரணர்களால் அரசன்பிரான் கேள்விப்பட்டு அந்தப்பாலனையழைப்பியுங்களெ
ன்றுசொல்ல; அதனால் தன்னருகேவந்தபாலனைக்கண்டவுடனே அப்பனே!
நீயோ சாகுநினைத்தாய் மலைகளை வேரோடு பெயர்த்தெறியும் ஒவ்வாத் திறத்
தையுடைய இராக்ஷதன்கோபத்தின்முன்னே நீ யெம்மாத்திரம் என்றாந். அச்
சிறானாகிய தாவீது மகாராஜா அரசனது இரண்டுபாதங்களையும் வணங்கிச்
சொல்லுவான் ஓ ஐயனே! தன்பாவமேகோபித்துத் தனக்குப்பகைசெய்தால்
மறுபடியும் அவனை வெல்லவேறு ஆயுதங்களும்வேண்டுமோ? அதுபோல ஆண்
டவனைப்பகைத்து, அவர்செய்யும் நலவுநிறமில்லாதவனை வெல்லாதவனுமுண்
டா? இல்லையே நான் ஆடுமேய்த்திருக்கும்போது பலத்தசிங்கமும், கரடிகளும்,
புலிகளும்வந்து என்னைச்சூழ்ந்து எதிர்த்துப்பாய அவைகளைக் காற்றாடியை
யடித்த காற்றைப்போலக் கழுத்துகளைமுறுக்கிக்கொன்றேன். ஆதலால் தருமத்
தைக்கெடுத்தபாவி அந்தமிருகங்களினும் பலத்தவனோவென்றுசொல்ல, அர
சன் இந்தஅரியவல்லமையைக்கண்டு, அதிசயப்பட்டு நல்லதென்றுசொல்லிப
டாங்கிரணங்களைவீசுந் தன்வேலாயுதமும், யுத்தத்திற்குரிய மற்றைய வாயு
தங்களுந்தந்தான். தத்தவுடனே சிறானாகிய தாவீதுமகாராஜா ஆயுதங்களை
நடக்கும்விதம் எனக்குத்தெரியாதென்று மறுத்துத், தருகியாகிய ஐந்துகற்
களும், ஒருகவணுமாக தெரிந்தெடுத்துக்கொண்டு, யுத்தத்திற்குப் பயண
மாகும்போது இப்பாலனைக்கண்ட எல்லாரும் அதிசயித்திரங்கவும், வேதிய
ராசீர்வாதங்கூறவுந், சேனையினின்று பிரிந்து தனித்துச்சென்றான். செல்லும்
போது யாவரும் பேரொலிமுழக்கமோடு மங்கலமாகக்கூப்பிட்டார்கள். இந்த
ப் பேரொலியைக்கேட்ட இராக்ஷதனாகிய கோலியாத்து இன்றுதன்னோடு தனி
ப்போர்புரியவந்த இளவலாகிய தாவீதுமகாராஜாவை நோக்கிக் கண்டவர் யா
வரும் அஞ்சும்படியாகப் பழித்துச்சொல்லியோடெழுந்து கூரியவேலாயுதத்தைக்
கையிற்பிடித்து, அருகேவந்துநின்று கொ[illegible] பேரிடிமுழக்கம்போ
லச்சொல்லுவா[illegible] அடாபயலே! நீயா என்னோடு சமர்செயவந்தாய் நீயெ
வ்வளவுபிராணி [illegible]போழுதுமேவியோடிர்த்து நாய்போர்புரியுமோ? அடா
நான் கோபத்தோடு வாயைத்திறந்து ஒருமூச்சுவிட்டால் நீ நன்னரிய தூசியா
கி, யிவ்வுலகிற்கு அப்புறம்போவாயடாவென்றான். இதைக்கேட்ட பாலனா
கிய தாவீதுமன்னவன் சொல்லுவான் அடா வேததுரோகி வெல்லுதற்கரிய
கூர்மையாகிய வேலேனல்லவோ உன்வல்லமையெல்லாம் ஆகும் நானோவெ
ன்றால் ஆபத்சகாயனாகிய ஒப்பில்லாதவல்லமைகொண்ட கடவுளின் வலது
கையை ஆயுதமாகக்கொண்டு, உன்னைக்கொன்று உன்னுடலைப் பறவைகட்
கிரையாகச்செய்வேன் இந்நேரமே பாரடாவென்று தன்கவணில் ஒரு கல்லை
யேற்றிச் சுழற்றினான். கவணின்மேல் கல்லைவைத்ததுந், கவணைச்சுழற்றின
துவ், கல்லையெறிந்ததும் ஒருவரும் அறியக்கூடாமல் இருந்து, இடித்த மேகத்
தைப்போல் இராக்ஷதனுடைய கண் ணுதலில்பாய்ந்ததுந், சூரியனைக்கண்ட இ
ருள் சாயுமாப்போல் அவன் விழுந்ததுமாத்திரங் கண்டார்கள். இப்பால் கடை
யுகநாளில் இடியோடு மேகங்கள்விழுமாப்போலப்பூமண்டலமும் பதைபதைத்த
ருசச் சமர்க்களத்தில் விழுந்த இராக்ஷதனின் இடையிற்றூங்கிய நீண்டவாளை

புருவி, என்தெய்வவல்லமையை யாவருமறியுங்களென்று பருத்த அவன் தலை
யைத்துணித்து, நீண்ட பிறைகள்போலப் பற்களெல்லாம் வரிசை வரிசையாய்க்
குழைந்த வாயிடத்துத்தோன்றவும், இரத்தம் அலைகொண்டோடவும், எவருங்
கண்டு கூசவுங், கறுத்த நெடியமலைபோலுந் தலையைக் கையினற் றூக்கினவள
வில் மயக்கங்கொண்ட மற்றப்பகைவர் சேனசமுத்திரங்கண்டு பயந்து, உள்ளந்
தடுமாறி முறிந்தோடின.

அதன்பின் தாவீதுமண்டலேசான் மேகத்தினின்றுவிழும் இடியுமஞ்சும்
படி கோபங்கொண்ட இராசுதனை வென்றமையால், போர்முகத்தில் அச்சத்
தைத்தருந் தன்வேலுக்கு எதிரொன்றில்லாமல், சத்தியவேதத்தைத் தூஷணித்
தயாவரும் அதற்கெப்போதும்பரிந்துபேசும்வகையைச்செய்தவனுகயுத்தத்தில்
தான் வெட்டிவீழ்த்திய மற்றைய இராசுதர்களுடைய திரண்டமுடிகளின் கு
ப்பையைமிதித்தேறி, விளங்கியஒருமணிமுடியைச்சூடிச் சிறந்தசிமமாசனத்தில்
வீற்றிருந்து, விளக்கமும், பெருங்கருணையும் பொழியுஞ்செங்கோலடையும்படி
கடவுள்தந்தவல்லமையையடைந்து, மன்னர்க்குமன்னனுயிருந் தரசுசெய்தான்.
அக்காலத்தில்தாழ்வில்லாத தருமசொரூபியுஞ் சூல்கொண்ட மேகத்தைப்பழித்
துக்கொடுக்குங் கையினையுமுடைய இந்தவேந்தனே சாயாத பொன்முடியுங்,
கோடாத செங்கோலும் வெறுத்துக், கானகத்திற் றுறவறமாகச் சென்று நல்ல
தவத்தைச்செய்யும் அரசர்களுண்டாயினும், அந்தத்தவத்தை யழைத்துக்கூட்
டி, நவமணிகளாலலங்கரிக்கப்பட்ட தன்னுசனத்திலிருக்கச்செய்து, வேலாயுத
த்தால் பகைவர் வெள்ளத்தைவென்று, வென்றடக்கி முடிந்தபின்பு, ஞானதூற்
படியே தன்னைத்தானேவெல்ல மெய், வாய், கண், மூக்குச், செவி, என்னும்
ஐம்பொறிகளை யடக்கிக்காத்து, வழுவாத செங்கோல்நீதிக் கொழுந்துபடருங்
கொழுகொம்பாய், விளங்கியதுடன் நூல்களால்விளங்குங் கேள்வியா லுண்டா
ன நுண்ணறிவுடையோர் ஒவ்வாதமுறையோடு பூமியி[illegible]டையாமல் வானுலக
த்தின்மே லொதுங்கிவாழும் இனிவரும் பொருள்களைக்காட்டுங்காட்சியையடை
ந்தமையால், வனத்திலொதுங்கியிருக்கும் அரிய நல்ல தவங்களே அந்த அரச
னிடத்தில் விளங்கி அவனுசனத்திற்கூடக் குடியு[illegible]விருக்கும். ஆதலால் அரிய
கருணையால் பூமண்டலத்தில் இரத்தினை ய[illegible]டந்ததல்லாமல் இத்தகற்குணங்
களினுல் கடவுளுக்கும் பிரியமுள்ள அவ்[illegible]சன் முற்காலத்தில் அரியமுனிவர்
களடைந்த அ[illegible]வற்றவரங்களை ய[illegible]து, வானவர்களி லொருவன்போல்
பூவுலகில்வாழ்ந்[illegible] இராஜாதிராஜன் இப்படி நடந்த தன்மையி
னல் கடவுள் மகிழ்ச[illegible]கொண்டு சொன்னதாவது:—மலையையொத்த உன்சந்த
தியின் பலதலைமுறைபோய் ஒருகுழந்தையினுல் நீ களிகூரச்செய்வேன் அந்
தக்குழந்தை பரலோக, பூலோக, பாதாளமென்னு மூன்றுலகிற்குஞ் சொல்
வரியமுறையாய்ச் செங்கோல்செலுத்தி, அரசுசெய்யும்படி வரங்கொடுப்பே
னென்று, கொடுத்த இவ்வரத்தின் முறையே அவ்வரசன்கோத்திரத்தில் ஆண்
டவன்மனிதனுனதினுல நிறைவேற்றினதென்னலாம். ஆயினும் இத்தத்தன்மை
யால் மனிதனுன கடவுளே வானுலகமுத லெவ்வுலகமும் ஆள்வதரியகருமமே
மோ? ஆதலால் செங்கோல்கொண்டோங்கிய இத்தத்தாவீதரசன் மரபில் தே
வவல்லமையினுல் மனிதனுந், தேவனுமொன்ருய் ஒருவர் ஜனிப்பதுமல்லா
மல் பூமண்டலத்தில் யாவரும் பிறக்குந்தன்மையினுல் அவ்வரசன் கோத்திர
த்தில் வேறொரு பிள்ளைபிறந்து பூமண்டலமும், வானமண்டலமும் ஓர் குடை
யிலாளும்பொருட்டுக் காமங், கோப, மயக்கம், ஆங்காரமென்னும் நாலுகுற்றத்
தினுல் வழுவாதசெங்கோலடைய அவருக்குக்கொடுக்கநினைத்தவையாவும் நினை
த்தபடிமுடிக்க வல்லவனுன கடவுளே குறையொன்றில்லாத முறையோடு மூ
வுலகிற்கு மரசனுக மிருந்தவளமையுள்ள சூசைமாமுனிகள் திருக்குழந்தையாக

அவதரிக்கத் திருவுளமானார். ஆண்டவர் உயர்ந்த முறையோடு தமது வல்லமையைக்காட்ட இருந்த வரங்களைக்கொண்டு எவ்வுலகத்திற்கும் அரசனைத் தெரிந்த இந்த குசைமாமுனிகள் முன்சொன்ன தாவீதுமகாராஜன் மரபில் தலைமுறைகள் சற்றும்வழுவாமல் பிறந்தாலுந் தாவிதரசன்கொண்ட உலக செல்வத்திலொன்றுமில்லாமல் தரித்திரனாயவதரிக்கச்செய்து, அதனால் கைத்தொழில்கொண்டு ஜீவனஞ்செய்யப் பிறந்த வறுமையிலேயே மெய்யானபுண்ணியத்தின் முறைமையில் அழகியவானுலகமுதல் எவ்வுலகமும் அவனை யரசனாகவணங்கவுஞ்செய்தார்.

அதெப்படியென்றால், சகலநூற்களும் விளைநிலமாகிய அனந்தஞானக் காகுதியினாலே, யொவ்வொருதொழிலை முடித்தற்குரிய காலமறிந்து முடித்து, வானவுலகத்தினின்று ஏனையுலகத்தையும் ஆளுகின்ற கடவுள் தானினியகருணையால், குறித்தநாளில் முன்சொன்ன வீரவெற்றியரசனாகிய தாவீதன் முதற்கொண்டு மாறாமலும், பிழையாமலுங், கோத்திரத்தலைமுறை தப்பாமலும்வந்த சகோபு என்பவருடைய உத்தமபத்தினியாராகிய நீப்பியென்பவள் கருக்கொண்டு களிகூரச்செய்தனர். அப்படிமணியிலும் அழகுவாய்ந்த அந்த நீப்பியென்பவள்களிப்போடு அணியாகவணிந்த கர்ப்பமானபின்பு அவளுக்குச்சூலால் வரும்பிணியின்றியும், அவள் அனுபவிக்கும் இன்பமிகுதியுள் அடங்காமல் புறப்பட்டழகுபெற முகமும் எழுதப்பட்டாற்போலத் தோன்றப் புஷ்பத்திடத்து உண்டாகிய தேன்போலுஞ், சங்குசூலாகக்கொண்ட அழகியமுத்துப்போலும், அந்தக்கர்ப்பமும், அப்பு, தேயு, வாயு, பிருதிவு, ஆகாயம், என்னும் ஐம்பூதியங்களுந் தமக்குள்ளேயடைந்தபகையைவிட்டு மிகாமலுங் குறையாமலும் வேறுபாடின்றி, ஒருதன்மையாகஜனித்த திருவுடல்பிறைபோலச் சிறந்து வளர்ந்தபிறகு பல அடியறைகளுள்ள அரண்மனையில் அரசன்சேர்ந்தது போல ஆண்டவர்மிக்கதயையால் ஒருயிரையுண்டாக்கி யவ்வுடலினுள் போகவிட்டுச்சேர்த்துவைத்தார். பின்பு ஒருவனுண்டகஞ்சுவாய்வழியாகப்போய்ப் பல உறுப்புகளிடத்தும் பரவினாற்போலப் பூவுலகமுண்டாக்கிய நாளிலேயாதிமனிதனாகிய ஆதமென்பவன் இன்பமாயொருகனியைத்தின்று, அடைந்த பாவமானது அவன் கர்ப்பவழியாக அவனுடைய பலவுறுப்புகளாகிய சமஸ்தமனிதருயிரிடத்தும் பரவினதினால், உண்டாகிய ஜென்மப்பாவத்தை மற்றையஉயிர்கள் பூமியிலவதரித்தபின்பு தீர்ப்பது வேதத்தில் விதிக்கப்பட்ட பொதுமுறையாயிருக்க அதுவரையிலும் பொறாமல் வினையெ[illegible]ழிதற்கு விசேஷதயையால் விருப்பத்தோடு கர்ப்பமாகி ஏழுமாத முடியுமுன்னே ஜென்மப்பாவத்தைப் பரமநாதன்நீக்கச் சித்தமானார்.

இப்படிஜென்மப்பாவம்விலக்கின சிறந்ததன்மையுந், தேவஅருளினன்மையும், பலவரங்களும் ஆண்டவன்தந்தமையால் சூலிலிருந்ததிருக்குழந்தையிடத்து இவையெல்லாமாகிய செய்தியை அன்னையாகிய நீப்பியென்பவள் அறியாளாயினும் அளவில்லாமல் மனமகிழ்ச்சிகூர்ந்து, ஆச்சரியத்தோடு தளராமலோங்கித், தேனைச்சூலாகக்கொண்டதன்மையால் வாசனைவீசுந்தாமரைபோலத் தன்வயிற்றிலுள்ள திருக்குழந்தையடைந்த தன்மைபுறப்பட்டதற்கொப்ப முகத்திலொளியைவீசிவிளங்கினவளாயிருக்க அப்பொழுது சொற்களாலொவ்வாத அழகோடு பசும்பொன்போன்ற கர்ப்பமுதிர்ந்து இராவில் இருள்கெடும்படி வானத்தில்தோன்றுஞ் சந்திரனழகுபோல காந்திவீசியமுகத்தோடு திருக்குழந்தை யவதரித்தார். அவதரித்த திருக்குழந்தையின் அழகுகண்டு மற்றவரடையுந் துன்பமில்லாமல் தாய்மகிழ்ந்திருக்க, மகிழ்ந்த அன்னையோடு பிறந்த திருக்குழந்தையைக் கண்டயாவரு மகிழும்படி, மேலான ஓரியவின்பத்தைக் கொண்டவர்களாய்த் தேவகருணையால் அத்திருக்குழந்தை உட்கொண்ட அருள் மேலே கிளம்பி,

யெழுதப்பட்டமுகத்தில் அழகுவீசிய கிரணத்தை யவர்கள்கண்களென்னும் வாயினால் உண்டுதெளிந்து, இந்தத் திருக்குழந்தை யினிக் கடவுளுடைய திருப்பாதத்துக்கு உகந்தமாலையாக விருப்பானென்று வாழ்த்தி, ஜெயமங்கலங்களைச் சொல்ல, அதன்பின் சூரியன்கதிரைத்திரட்டிச் சந்திரனுக்கொரு பொட்டிட்டாற்போல முகத்தில் விளங்கிய தாயானவள் ஆசையோடு வளர்ந்தவின்பத்தால் இழைத்ததங்கத்தால் அழகுபெற்ற சித்திரமணியின் சாயலாகவிருந்த தனது திருக்குழந்தையைநோக்கிச்சொல்லுவாள், மகனே! ஆன்றோர்களாற் சொல்லப்பட்ட நாற்கவிப்புகழ்ச்சியினும் உயர்ந்ததருமங்களைப் பீடமாகக்கொண்டு, வளர்வாயாக வளனென்னுஞ் சூசையேயென்று திருநாமமுரைத்துத், திருப்பாலகனைக் கரத்திலேந்தி, யாசையோடு நன்மொழிகளால் ஆண்டவன்திருவடியில் வைத்துவணங்கி ஆண்டவனே? இப்பாலகன் இளம்பிறை வளருமாப்போலத் தருமங்களோடு வளரும்படி, இவனை ஆசிர்வதித்தருள்கவென்று வேண்டினாள். வேண்டினவளவிலே கடவுள் வானத்தின்முடிவில்லாதபேரின்பத்தை விளைவிக்குங் கடாக்ஷத்தால் இத்திருப்பாலகனைக்கடாக்ஷித்துக், குறைவில்லாமல் வரங்களைத்தரும் ஆசிர்வாதங்கொடுத்தவளவில், ஆகாயத்திலகடவுளா லொருசப்தந் தோன்றிவாடாதகிருபையடைந்த விம்மகனே யசையாமல் தருமநெறியில்நிலைகொண்டு, என்மார்பிலணிதற்குரிய தேம்பாவணியாவானென்ற[illegible]மே வானவர் புஷ்பமழை வருஷித்தனர்.

அதன்மேல் இருளை நூற்று இழைத்தாற்போலக் கருங்குழலையுடைய தாயானவள் தனதுதிருமகன் மாக்ஷிமையைக்கேட்டு, யாதொன்றும் நிகராதமுறையோடு கடவுள் திருவடிகளைவணங்கியிருக்கச் சத்தியவேதநெறிதவறாமல் செய்யவேண்டுவனயாவுங் குருக்கள்வந்துநிறைவேற்றி, மிக்கதுதிகளைச்சொல்லி வாழ்த்திப்போயினர். சூழநின்றவர்களோவென்றால், மங்காத அழகொழுகும் இந்தத் திருப்பாலனுக்குஜாதககணிதநூல்கற்றோர்வாயினாற்புகழும்புகழ்ச்சியுரிய அணியல்லவென்றுமறுத்து, ஒரேமொழியால் கடவுள்தானே யிரங்கிப்புகழ்ந்த தேம்பாவணியேயென்றுவாழ்த்தி, யுள்ள அழகு மிகுதியாக வானத்தினக்ஷத்திரங்களால் சூழப்பட்ட இளஞ்சந்திரனைப்போல, அத்திருக்குழந்தை தோன்றும்படி, ஒலிக்குங்கிண்கிணியுஞ், சிலம்புஞ்சிற[illegible]றசேர்த்து, விளங்குமணிமோதிரம் விரலிலிட்டு வேறுபல அணி[illegible]மணிந்து, பசியமலரணைமேல்கிடத்தி, அழகியவதனத்தைப்பார்த்து யாவருஞ்சொல்லுவார்கள். அலைசூழ்ந்த பூவுலகமுகத்திற்குரியதிலகமிதுவென்பார். வானுலகசூரியன் திருக்குழந்தையாயிங்குதித்த தன்மையிதுவென்பார். காட்டினிடத்துள்ள தவத்தை நாமினிகாணும்படி நாட்டிடத்துக்காட்டத்தகு மாக்ஷிமையுடையனுவா னிவனென்பார். சகலகலைகளினுமுயர்ந்த சத்தியவேதம் விளங்கும்படி சுடராவானிவனென்பார். இப்படிப் பலபுகழ்ச்சிகளை யுரைத்துரைத்து விட்டுநீங்காதவர்கள் உட்கொண்ட மகிழ்ச்சியும் விடாமலிருந்தார்கள்.

வளன்சனித்தபடல - முற்றிற்று.

நான்காவது - பாலமாட்சிப்படலம்

வானடுத்தர சடைந்துவாழுவ க்
கோனடுத்தநற் குணத்தசிறொ லா
மீனடித்தவி டுடையவிண்ணவ ர்
தேனடுத்தலர் சிறுவர்க்கூட்டினு ர்.

முற்கூறியபடி ஆசைமாமுனிகள் வானுலகத்திற் கரசனாகத் தெரிந்துகொள்ளப்பட்டமையால் மோக்ஷவாசிகள் வானரசனுக்குரிய சீருஞ், செல்வங்களுந் தேன்பொழிந்தலர்ந்த மலர்போலுந் திருக்குழந்தைவடிவாகிய இவருக்கு ஊட்டும்படி யருளையூட்டித், தருமத்தை முடியாகச்சூட்டித், தவத்தையொளியாபரணமாகப்பூட்டி, யரியகாக்ஷியைச் செங்கோலாகக் காட்டவே இளம்பிறைபோல் வளர்ந்து, மனத்தைக்கெடுக்குங் குற்றமடையாமல் மூன்றுவயதாகி, மற்றவர் வருந்தியடையுங் கல்வியினும் நிறைந்த அறிவையடைந்து, மாலைநேரத்தில் சூரியன் மறையக்குவியுந் தாமரைமலர்போலுஞ் செங்கையோங்கி, மிருந்திருப்புடை[illegible] கடவுள் திருவடிகளைத் திருநெற்றித் தரையிற்படவணங்கிச், சூரியனைக்கண்ட க[illegible]லம்போலத் திருவாய்மலர்ந்து, மலையினின்றோடும்நதிபோல நிறைந்ததுதிமொழிகளைச்சொல்லுவார். அல்லாமலுஞ் சூரியனையும், நக்ஷத்திரங்களையு, மிவைநடுவில்திரியுஞ், சந்திரனையுங்கண்டு, தானறிந்தவறிவால் இவையெல்லாம்படைத்த பரமநாதனை யின்பமாய் வாழ்த்தியும், மலைபோலும் மலையுச்சியினின் றலைகொண்டு பால்போலோடும் நதிகள் மிஞ்சியுடுத்த வஸ்திரம்போலுங், கடலின்மேற்சிந்தப் பெண்ணைப்போலும், பூமண்டலத்தி னிலமைகண்டு மனத்திலோங்கியுஞ், சோலையிடத்தில் இருட்டுத்தேனும், மாலையிடத்தில் மலர்த்தேனும், ஆலையிடத்தில் கருப்பங்தேனும், இவையெல்லாம் நாலையாராய்ந் தாற்போலக் கருதித் தான்தேன்கடலில்மூழ்கியும், நிழலிடத்திலெருமைகளும், நீரிடத்தில் சங்குகளும், பொழிலிடத்தில் மயில்களும், பூவிடத்து வண்டுகளுங், கழனியிடத்தி லன்னங்களுங், களித்துத் தூங்கக்கண்டு, ஆராய்ந்து களிகூர்ந்த திருக்குழவியாகிய இவரிடத்தில் நன்மையெல்லாந் தூங்கவும், குயில்கள்பாடவும், வீணைபோல் வயலிடத்தி லன்ன[illegible]கள்பாடவும், பேசினாற்போலத் தேனுண்டகிளிகள்பாடவுங் கேட்ட திருப்பாலகனு[illegible] காணும்மிசைகள்பாடியும், மலையும், மலைகளிலுள்ள வழகும், அலையும், அலைகளி[illegible]ள மணியும், நிறைந்த செல்வங்களைக்கொண்ட நிலையும், நிலையிலுள்ள மருதநிலமுங்கண் டாராய்ந்ததினால், கலையுங் கலையையடுத்த நல்லறிவுகளும் அடைந்து, மெய், வாய், கண், மூக்குச், செவி யென்னும் ஐம்பொறிகளும் அடையுமின்பங்களை யாராய்ந்து பார்த்துந் தானடையுமின்பஞ் சொல்லப்படாவாம்.

மேலும் வெள்ளமிகுதியால் பலநதிகளொன்றாய்க்கலந்து ஓடிப்பொங்கினதுபோல அளவில்லாமல் வளர்ந்த அரியயுணர்ச்சிகளுங், குறைவில்லாத காக்ஷியுமுடைய இத்திருப்பாலகன் வானமண்டலத்து நக்ஷத்திரங்களைத்தீபமாகவும், மலர்நிறைந்த பூமண்டலத்தைவீதியாகவுங்கொண்டு அழிவில்லாதகடவுள் திருவடியையடைய எவர்க்கு முந்திநடக்க நினைந்து, மாக்களோடு யுத்தஞ்செய்த பாவத்தைக்கொண்டுவிடும் பசாசுகள் நோக்கத்தோடுசெய்யு மரியவஞ்சனைகொண்டு, இவர்மிகுதியாக்கியவருளையழிக்கத்தாக்கினவுடன் ஊக்கங்கொண்டிவர் அப்பகையைவென்று, கள்ளத்தினால்வருங் குற்றத்தை[illegible]றுத்து, விளங்கிய உள்ளத்தால் கர்ண்பித்த ஒளியைப்பரப்பிய முகமானது அழகினைத்தீட்டியதனால் உட்கொண்டவரங்களின் வெள்ளமே புறத்துங்காட்டினதுமன்றி, யாவரா

னும் விரும்பப்பட்ட மாற்றுயர்ந்தபொன்னு லெழுதப்பட்ட படத்தினழகுடை
ய இத்திருப்பாலகன் மின்னலைப்போலொளிருமற்ற முகத்தழகெல்லாம் பய
னில்லாததெனக்கண்டாலுந் தான் தன்னழகைவிரும்பாமல் நீதியைவிரும்பிய
நிறைந்த அறிவுடையோனுயுங், கானகத்தில்வாழ முனிவர்கட்கரசனுயு மிருந்
து விளங்குமிவருடைய பேரழகுள்ள, திருமுகத்தில் நக்ஷத்திரங்களினும் ஒளி
ர்ந்தகண்களும், மலர்ந்தபூஞ்சாயலும், ஆபரணங்களுமுடைய பெண்கள் சூரிய
ன்முன்மலர்ந்த தாமரையோ ? தாமரைமேல் மொய்த்த வண்டுகளோவென்று
சொல்லும்படி தங்கள்கண்களை விருப்பத்தோடு மொய்த்துவைப்பார்கள். மலை
யிற்புதைத்த செம்மணிபோலும் அழகுடைய இவரோ அவர்கள் முகங்க
ளைக்கண்டால் சந்திரன்முன்குவியுந் தாமரைபோலத் திருநேத்திரங்களை மூடி,
யவர்கள் பேசுஞ்சொற்கள் இரத்தத்தைக்குடிக்கும் வேலென்றெண்ணித், தே
னினுமின்பமாய்ப்பேசினுஞ் செவிகொடுத்துக்கேளாமல் போர்க்களத்தில் வில
லுக்கெதிராக வளைத்தவில்லலே நன்ருய் வெற்றிதருமென்றுங், காமப்போரி
லோவென்ருல் குற்றத்தைத்தரும்விருப்பமற்று மங்கையரழகு முகத்துக்கெதி
ரில்லாமல் ஒளித்தோடினவன் வெல்லுவானென்றுஞ் சொல்லிக் கானகத்தி
லொளித்துத தவஞ்செய்யப்போகையில், தன்கன்றைப்பிரிந்துதேடும் பசுவைப்
போல் எல்லாருந் தேடித்தேடியழுவார்கள். அப்பொழுது இவர்களுக்கருமுந், தே
னும், பொழியும் நீண்டசோலைகளால்சூழப்பட்டஒருக்குத்தமலையைநோக்கினர்.
நோக்கியவுடனவ்விடத்தில் உயர்ந்த வொருபுஷ்பவிருக்ஷத்தின்கீழிருந்து உள்
ளடைந்த வின்பத்தினுற் பாடினுற்போல அம்மலையைநோக்கிச் சொல்லு
வார்.

வளைத்தவில்லா லெய்யப்பட்ட கூரிய அம்பைப்பார்க்கிலும் வினையைச்
செய்யுமவாவினல் விளையுந்துன்பங்களையுண்டாக்கிப்,பகைசெய்யும் பஞ்சேந்தி
ரியங்களையறுத்து,அந்தக்குற்றங்களோடு அவைகளைக்கொண்டுவிடும் ஆசையை
யும் வேரோடறுத்தபின் இவையெல்லாம் புதைக்கத்தகுந்தவிடம் இதுவேயா
கும் ஒவ்வாத செல்வங்கொண்டுவளர்ந்த மாகுதிமையுள்ளதாய் மேகத்தாற்
சூழ்ந்துவளர்ந்த மலையின்திறமென்பார். சூல்கொண்டகரியமேகங்கள் விலகிப்
போம்படியுயர்ந்து, நல்லகனிகள்நிறைந்த சோலைகள்சூழ்ந்து, பூவரும்புமலிந்த
வுயரிடம் ஈதாகையால் விளங்குஞ்செல்வம்நிறைந்த மோக்ஷத்துக்குச் செல
லத்தக்க வழியாகி, இரவும்பகலு மாறுத்தவத்தின் துணையால் வினைகளை நீக்கி
நித்தியகாலங் கடவுளைவாழ்த்தலாமென்பதினுல் என்னுசையின்மேலும்நன்மை
புடைய மலையின்திறமேயென்பார். உதித்தசூரியனுடைய கிரணத்தால் முன்
னே எழுதப்பட்ட உச்சியையுடையதாய் அங்கு என்னுள்ளமுந் தன்னிருளை
நீக்கித்தெளிந்த வுணர்வடைந்து நல்லதவத்தைமுடித்து, உயிரைக்காப்பாற்று
வதினுல் சமர்செய்யுஞ் சத்துராதிகளுக்கெதிராய் நிரந்தியகோட்டையாகிப்,
பெய்யுமழையால் பெருகும்நதிபோலநிறைந்த கருணையின் வெள்ளமோடிய
தைக் குடிக்குமனத்திலுறுதியெழும்பச்செய்த குணத்தையுடைய தேவனருள்
குடியாயிருக்கு மலையின்திறமென்பார். இப்படிச்சொல்லிச்சந்தோஷமிகுதியா
கி, ஒலிக்குங் கடலில்நீந்திப்போகிறவன் எழுந்தகரையைக்கண்டாற்போல வேங்
கைமரங்கள் நெருங்கிச்சூழ்ந்த மலையினுயர்ந்த உச்சியைநோக்கிக் குயில்கள்பா
டவும், மயில்களாடவும், எழுதியவண்ணமாய் மலர்கள்பூத்த கானகத்தில்
மேகத்திலொளித்த மின்னலைப்போலத் தானெழுந்து கானகத்தி லொளித்
திருக்கச்செல்லும்போது, நீர்மேற்படிந்த நுரைபோல் நரைத்த வோர்கிழவனு
கிய வானவன் எதிர்வந்து மலருமிழ்ந்த தேனினுமினிய கருணைசொற்கொண்டு
அழகுள்ளபாலகனே ! நீதனித்து எங்கேபோகிருய் சொல்லென்று திருவாய்
மலர்ந்துவினவினர். அதற்கு உவமையெல்லாங்கடந்த திருப்பாலகன் சொல்லு

வார் வான்விட்டையிழந்தபேய்கள் பகைசெய்துகொண்டுவிதின் தீவினைக்குப்பயந்து ஓடிப்பிரபு நாட்டையிழந்து, காட்டிலொளித்துவாழுந் தருமத்தைத்தேடிப் பொல்லாதுயர்ந்த அப்பர்வதத்திடத்து நானொளித்திருக்க விருப்பத்தோடு தனியேபோகிறேனென்றார். என்றவுடன் வந்தமூத்தவனாகிய வானவன்சொல்லுவார் குளிர்ந்தவதனத்தோடு தெளிந்தவறிவுடைய பாலகனே! இடித்தமேகமுகத்தில் அடுத்துமலர்ந்த முல்லைவாசனைமிகுமல்லோ! காற்றுக்குப் பயந்த கப்பல் காற்றிசையிலுமுள்ள செல்வங் கொண்டுவருமோ? சமர்முகத்திலெதிர்த்து நில்லாதோடினவன் வெற்றியை யடைவானோ? ஆதலால் நாட்டைவிட்டொளிக்கவேண்டாமென்றார். அதற்குத் திருப்பாலகனாகிய வளன் சொல்லுவார். நாட்டில் பைம்பொறிபாம்பி னஞ்சினுங்கொடியதாய்ப் பகைத்துக்கொல்லும் ஐம்பொறியுமல்லாமல் சூழ்ந்தவெல்லாம் பகைசெய்ய நெருப்பில்பெய்த பசியபூக்கள்வாடினாற்போல மனமுமேங்கித் தியாகவினையும் வேட்கை தணியப்படாதென்றார். அதற்கு அறினனாகிய வானவன் சொல்லுவார் அழியாத ஒளிவைவீசு மழகுடையாய். நெருப்பினால் சுடப்பட்ட செம்பொன்னொளிபெறும். வெந்துபுகைந்தால் அகிற்கட்டை வாசனைபெறும். சாணைக்கல்லால் வருந்தினால் மணிகள் மின்னொளிபெறும். அத்தன்மையாக துன்பம்வந்தபோது குன்றாதவயிரியத்தால் அறத்தின்மாட்சிமைதோன்றும். இதுவேதவிதியாக எண்ணுவாயென்றார். அதற்குத்திருக்குழந்தைசொல்லுவார் உயிரைக்கொல்லுங்கூற்றினுங் கொடிதாய்க்கொல்லும் ஆசையை நாங்கொல்லத் தெரிந்தவுயிரை மயக்குவிக்குஞ் செல்வங்களெல்லாம ஒருமித்துநீக்கி, மலர்நிறைந்த கானகத்தில் தவத்தைத்தேடலே முன்னாசையா லிகழ்ச்சிகொண்ட வுயிரையுந் தெளியச்செய்யுமுறைமை யென்பாரல்லோ? பெரியவர்களென்றார். அதற்கு ஐயனாகிய வானவன்சொல்லுவார். யாவற்றையும் விடுதல் ஒருநாள் துணிபாகுந் தன்னைப்பகைத்த எல்லாஞ்சூழ்ந்திருக்கத் தான்மனத்தின்வாசலையடைத்து, நெருங்கிவரும் பொருள்களிலொன்றும் உள்ளேநுழையவொட்டாமல் இடைவிடாது காத்தலே நெடுநாட்பேராய் நெடும்பயனுந்தந்து, நல்ல அறநிலையினுள்ளுமுத்தமமாமதுவென்றார். அதற்குத்திருப்பாலகன் சொல்லுவார் இனியகனிகளைத் தினந்தோறும் அறுத்துக்கொடுக்கல் நன்றோ? அல்லது ஒருமிக்க மரத்தையுங் கொடுத்தல் நன்றோ? நீரோசொல்லும் இதுபோல வேதியர்கள் தனக்குள்ளதுந் தன்னுள்ளமுங்கொடுத்தல் துறவறமாமென்பாரென்றார். அதற்கு வானோனாகிய பெரியோர் சொல்லுவார். தூயசாஸ்திரத்திலும் விளங்கிய அறிவுடையானே காய்களோடு விருக்ஷத்தையுங் கொடுத்தாற்போலத் துறவறமடைந்து மூங்கில்வளர்ந்த கானகத்தில் ஒருவன் விருப்பத்தோடு தருமவழியிலிருப்பது நன்றோ? தானடைந்ததல்லாமல் பாவத்தில்மூழ்கிய மற்றவரும், நல்லவழிநிற்பச்செய்வது நன்றோ? என்றார். இதைக்கேட்ட திருக்குழவியாகிய சூசைமாமுனிகள் சொல்லுவார். அறத்தால் விளங்கிய நல்லோய் பிறர்மனையில் பற்றியதீயையவிக்கும்பொருட்டு ஒருவனோடினவுடன் தன்வீட்டில நெருப்புப்பற்றிவெந்தாற்போலக் கொடியவாசையை யறுக்கப் பிறர்க்குணர்த்தியபோது தான்ஆசைப்பட்டு உள்ளம்வெந்தால் நன்றோ? என்றார். அதற்குக் குரவனாகிய வானவன் சொல்லுவார். அப்பாமகனே! குற்றமில்லாதவிடம் வேண்டுமாகில் வானுலகத்திற்குப் போகவேண்டும் வனங்களிலே முதலாய்த் தான்தன்னைக்கூட்டிப்போனதினால் வெகுசண்டையும், பகையுமுண்டாகும். ஆதலால், குற்றப்படாமல் நன்னெறியில்நிற்பது அவனவன் மனத்துணிவினா லாகுமல்லாமல் இடத்தைப்பற்றி யாகாதென்றார். அதற்கு மோக்ஷத்திற்குரிய குணத்தையுடைய திருப்பாலகன் சொல்லுவார் இல்லறந் துறவறமென்னு மிரண்டறமும் வழங்குமுறையில் எல்லாவற்றையும் வெறுத்

த துறவறம் பேரறமென்று சொல்லக்கேட்டிருக்கின்றேன், ஆயினும் ஐய
னே இதற்குமேல் ஓரறமிருந்தால சொல்லுவீர் நீர்சொன்ன அந்த நல்
லறத்தைத் கேடுவேனென்றார். அதற்கு உயர்ந்த அறிவுடைய சான்றோன்
சொல்லுவார் அவ்விரண்டறங்களேயும் பிரித்துத்தனியேநோக்கினால் நீசொ
ன்ன துறவறமேபெரிதேயாகும இதுவுமன்றி யிரண்டையும் ஒன்றாகக்கூட்
டினால் அதிகவுறுதியும் பிரயோசனமுந்தருகின்ற பேரறமாகுமென்றார். அத
ற்குத் திருக்குழந்தை சொல்லுவார் பாலொடுகலந்த தெளிந்தநீர் பாலைக்கெ
டுக்குந்தன்மை யுண்டாயினுஞ் சூரியனொளிமுன்பாக விளக்கெரித்த தீபம்
போல் துறவறமல்லாமல மற்றப்புண்ணியங்கள் அதற்குள்ள மாகூர்மையை
யதிகமாகச்செய்யுமோ? வென்றார். அதற்குத்தெளிந்த அறிவுடைய வானவன்
திருப்பாலனை யின்பமாய்க் கைபிடித்தழுவி மீனினும்விளங்கிய உணர்வுடைய
பாலகாவென்று சொல்லிச்சொல்லுவார் சந்திரனைச்சூழ்ந்தநக்ஷத்திரங்கள்போ
ல நாட்டிலிருந்துசெய்த துறவறத்தை யருளும், முணர்வும், அன்பும், ஊக்கமும்,
பொறுமையும், ஈகையும், மற்றகுற்றமுந்தீர்ந்த பெருமையுஞ்சூழ்ந்திருக்குமன்றி
க் கானகத்திலோ இப்பெருமையாதொன்றுஞ் சூழாதென்றுங் கானகத்திலிருக்
குந் தவத்தைக்கானகத்திற்றேடி மற்றவர்களெளிதிலடைவாரொன்றும் அந்தத்த
வத்தை ஒருவனழைத்துத் தன்னூரில் கூட்டிவந்துவைத்துத் தன்னினத்தார்
எல்லாருக்கும் அதைக்காட்டலே வானுலகிற்குரிய மாகூர்மையும், வல்லமை
யுமல்லவா? வென்றும், இதுவே நீசெய்யவேண்டிய கருமமென்றுஞ் சொல்லி,
மின்னலைப்போல மறைந்துபோயினர். மறைந்தவளவில் சரீரஉருவத்தைக்
காட்டிவந்து, தன்னோடுபேசிய பெரியோன் வானவனென்று திருப்பாலகன
றிந்து, கடவுளைப்போற்றித் தேனிறைந்தமாலைபோல் நிறைந்தஇன்பத்தி லுரு
கிமூழ்கி, வளர்ந்த சந்திரபிறையைப்பார்க்கிலு முகத்தில் கதிரைவீசலால் சூரி
யனைச் சூழ்ந்துவிளங்கும் பவளத்தூண்போல வதிசயப்பட்டுநின்று, நீதிமுறை
யு மற்றநன்னெறிமுறையுஞ் சொல்லிக்காட்டிய ஞாயங்களெல்லாந் தனக்குள்
ளே யாராய்ந்தபின்பு மீளவுஞ்சொல்லுவார். எனக்கு ஆதியுமுடிவுமாகிய
ஆண்டவனே! உன்பாதந்தஞ்சமல்லாம லெனக்கு வேறொரு வழியுமுண்டோ?
ஆதலால் என்வினையைத் தீருமென்று பணிந்து, உணர்வுந், துணிவு, மிகுதியா
யிக்காட்டிற்குள்போகாமற் றிரும்பி வார்கட்டிய முரசமார்ப்ப மேகமின்னலைப்
பார்க்கிலுங் கிரணத்தைவீசும் பொன்மதில்சூழச் சூரியனைப்போல மணியா
லலங்கரித்த தனது நகரிடத்துப்புகுந்து, பூவுலகிற்கொரு திலதம்போல யாவ
ருமகிழும்படி யாதொருநிந்தையில்லாமல் விளங்கியிருந்தார்.

அப்பால்நகரிடத்தில் நடந்த தெவ்வாறென்றால், வானவன் சொல்லிய அறிவுக
ளைக்கொண்டுகானகத்திலடைந்ததெளிவுமாறுமலுஞ், சரீரங்கொண்டவனுகியும்,
வானுலகத்திற்குரிய புண்ணியங்களெல்லாந்தவத்தோடொன்றுபடச்செய்து, தே
வலோகத்தாருக்குரிய பெருமையையடைய யவர்களடைந்த ஞானமேயடைந்
து, தான்பொருளில்லாதவராயிருந்தாலும் இல்லாதவர்யாவருஞ் சந்தோஷிக்
கத் தானமேசெய்து, குற்றமொன்றுமில்லாதவராயினுந் தவமேசெய்து, குறை
களைக்கொண்ட வெல்லாரும் இதைக்கண்டு தாங்களுந்துணியும்படி இந்தநன்
மையெல்லாங்கொண்டிருந்தார். நீசர் தாங்கொண்டபொருளின்பேரில் விருப்
பஞ்சம்பாதித்ததன்மையில் தாமுமுண்ணுதவராகிப் பிறர்க்குங்கொடார்கள்.
இந்தச்சரித்திரமுள்ள சூசைமாமுநிகளோவென்றால், தானேயுழைத்துண்டும்
நன்மையில் நிறைந்தும், இரப்போர் இன்பமாய் வாழவுங் கொடுப்பார். ஆத
லால் தமக்குமிஞ்சியபொருளை யாசையோ டிரவலர்க்குக்கொடுத்தால் ஒன்
றேகோடியாகுமென்றால், பொய்யில்லாத நெஞ்சமும், அன்பின்பெருமையு
முடைய இவர் தான்வறுமைகொண்டிருந்து குறைவின்றிக் கொடுக்குந் தன்

மையை யாராய்ந்துபார்த்தா லதற்குரிய துதிகளைச்சொல்லுவதரிதாகும். மேலுந்
துன்பஞ்செய்து சுடும்வனத்திற்போனவன் தன்குற்றங்களைவிடாமல் பாவவா
சைகொண்ட நினைவினாலிறந்தால் அவன் முடிவனாகுவானோ? இவரோவெ
னால் மனிதருடையவார்த்தை வழங்காதவனத்திற் போகாமல் மழைத்துளியில்
லாமல் நெருப்பாயெரிந்த சூரியன் கிரணமுஞ்செல்லுவதற்குமுதலா யஞ்சும்
வனத்திலும் நல்லவனமாகத் தின்மையெல்லாம்நீக்கிய மனத்திலொடுங்கி, நானெ
னதென்னு மிரண்டாசையுமறுத்துக் காவலின்றி மனமே ஐம்பொறிவழியாகச்
செல்லவொட்டாம லுயிர்வாழும்படி மெய்ஞ்ஞானத்தி னுண்மைக் குதவாத
தெல்லாம் நீக்கியழிந்துபோகுஞ் செல்வங்களைநினையாமல் ஆண்டவனைமாத்திர
மேதேடி, யூரிலிருந்துதவஞ்செய்வார். அன்றியு மெய்கொண்டுயர்ந்த விந்தமகா
முனிகள் பன்னிருவயதாகிக் கருஞ்சேற்றிடைச் சூரியன் செங்கதிர்பட்டா
லுஞ் சேறுகாததுபோலப் பொய்யானபொருள்மேல ஐம்பொறிகள்பட்டாலு
மயங்காமல ஞானப்போர்க்களமாகிய பூமியில் மனிதர்பாவங் கொள்ளும் வழி
யாகிய இன்பங்களெல்லாவற்றையும் நீக்க அறிவடைந்து, இன்பத்தோடு துன்
பங்களையுங் கலியாணத்தை யெந்நாளுஞ்செய்யேனென்ற உறுதியுங்கொண்டு,
உடலிருந்தாலு முடலில்லாதவரைப்போலாகி, உயர்வான் வீட்டின்பக் கட
லில் கிடந்து [illegible]களிகூர்ந்து, தேன்பொழியப்பட்ட மலர்போலிருப்பவராக வடை
ந்தவுணர்வினால் இருளில்லாத காக்ஷியுடையவிவர் அலைந்து திரியும் உலகப்
பொருள்களெள்[illegible]காணு மலையால் மலையை நிலையாகக்கொண்டவனைப்போல
வேறுபாடின்றிக் கடவுள்பாதத்தை நெருங்கிச்சேருவார். பூவுலகினிறைந்த
யாவுஞ் சீர்தூக்கிப்பார்த்துத்தோன்றிய தின்மைநீக்கி, நன்மையைக்கொள்வ
தினால் கலந்த நீரைவிட்டுப் பாலைமாத்திரங் குடிக்கு மன்னத்தையொப்பா
கி வானத்தி னிருளைக்கொண்டுவரு மேகம்போலப் பொய்மனத்தி னிருளைக்
கொண்டுவரும் ஐம்பொறிகள் போகவொட்டாமல் அருளைக்கொண்டுவரும்
சூக்ஷியால் தெளிந்தகிர்பையைக் கொண்டுவருமாசைகொண்டு, குறையில்லாத
முறையோடு-தானடந்தபின்பு குற்றமில்லாமல் எல்லாருநடக்கும்படி நீதிநன்
முறைகளைச்சொல்லிக் காட்டி, குருக்களினு முயர்ந்த மாக்ஷியுந், தெளிந்த
காக்ஷியு, முனிவர்களைவென்ற பாலனுத்தோன்றன்மையும், யாவருங் குளிர்
ந்துபயன்பட வினிய நல்வினைஓசையினு மினிதாகிய சொல்லும் உடைத்தாகி
உலகப்பொருளின்பின் செல்லாமல் ஐம்பொறிகளை யடக்கினமையால் அரு
ளில்லாத கொடியனைக்கண்டு தவத்தோரடைதற்கரிய இரக்கமாய் ஏங்கி, யாவ
ர்க்கும் நன்மைசெய்து தனக்குப் பொல்லாப்புசெய்தவர்க்கும் நல்லறத்துணை
யாகி யன்புதானே யுயிர்நிலையாகையில் அஃதில்லாதவர் உடலேயுயிர்நிலையெ
ன்று சொல்லத்தகாமல் தோலால்மூடின எலும்பென்னத்தகுமென்று தானன்
பினால் எவர்க்கு மின்பநிலையைப்போலத்தோன்றிக், துன்பங்களினால் தோன்
றிய வுயிர்க்கெல்லா மினியவுதவியாய் விளங்குவாராதலால் பொறுமையினுண்
மையும், வேதத்தினுரிமையும், ஆபரணமாதவணிந்த இந்தவளனென்னுங் கு
சைமாமுனிகள் அடைந்த குறைவில்லாத பெருமையைச்சரியாய்வாழ்த்த நால்
வல்லவருஞ்சொல்லுந்தன்மையல்லவாம்.

பாலமாட்சிப்படல - முற்றிற்று.

ஐந்தாவது - திருமணப்படலம்

இவ்வருங்குணத் திரங்கிய வினியவன்புடை மை
வவ்வருங்குணத் தவனிகொண் மடிவினை நீக்கி ச்
செவ்வருங்குணத் திறையவன் சென்றதைத்தீர்ப் ப
வவ்வருங்குணத் தவன்விருப் பெய்திநொந்தயர்வா ன்.

இத்தன்மையா யிரங்கின அன்புடையகுணத்தோனாகிய குசைமாமுனி
கள் உலகங்கொண்ட கேடுகள்விலகும்படி, நீதிநற்குணங்களிலுயர்ந்த கடவுள்
மனிதனா யவதரித்துத் தீர்க்கவேணுமென்றுகொண்ட ஆசையினால் மிகவும்
நொந்து துயரங்கொள்வார். அதெப்படியென்றால், வாயாற்குடித்த விஷமா
னது அவயவங்களெங்கு முலாவினதுபோல உலகம்படைக்கப்பட்ட நாளை
யில் மனுக்குலத்துத் தலைவனும், ஆதித்தகப்பனுமாகிய ஆதமென்பவன் விலக்
கப்பட்ட கனியைப்புசித்ததினால் விளைந்ததின்மை யவன்வழியாகவந்த உயிர்க
ளெல்லாவற்றையுங் கெடுத்துப், பரவினமையால் உயிர்கள்குடித்த நஞ்சினால்
கண்மயங்கி யிருண்டதுபோலப் பாவநஞ்சினால் மனத்திலஞ்ஞானமூடி, முன்
படித்த வேதநூலாலறிந்து வணங்கின பரஞ்சோதியான ஓரே மெய்யகட
வுளை மறந்தபின், சூரியன் அஸ்தமித்தவுடன் படருமிருளைநீக்க எண்ணப்ப
டாத விளக்குகளை யேற்றுவார்போல நல்லசுடர்களென்று மற்றயாவையுங்
கடவுளாகப்பாவித்துப், பாவத்தைவிடாமல் வேதமுறையும், ஆண்டவன்பல
முன், செய்யவேண்டிய முறைகளும், நல்லறங்களு, முயர்ந்த அறிவுகளு, மற்றநன்
மைகளோடு உயிருமிழந்தார்களாதலால் நன்மையைத்தரு நல்லறங்கள் குறை
யவும், பாவங்களதிகரிக்கவுமானதால் பகைத்துவினைசெய்யும் பழம் பழிகொ
ண்ட பசாசுகளெங்கும் அந்நஞ்சைவிடவேணுமென்று பெருத்தபாம்புருவங்
கொண்டு அந்நாளிலே யுலகமெல்லாமஞ்சக் காண்பித்தமையால் அந்த நஞ்
சோடுபரந்தபாவங்களினால் அதைநினைத்த மனமுஞ், சொன்னவாயும், அடுத்த
திசையும், எல்லாம் பாவநஞ்சாகப்படர்ந்தன. நிழலும், வெயிலும், வயலும்,
மலரும், பொழிலும், அதிலுள்ளகனிகளு, மாதாழகும், இவையெல்லாம் நஞ்
சாகி, நல்லவுயிர்களழிய பாவத்துக்குக்காரணங்களாயின. மேகங்களும், புசிக்
குமுணவுகளும், அமுதமாகிய நீரும், இவைமுதலெல்லாம் பாவத்துக் குதவி
யாதலால் அவையும் நஞ்சாயின. இந்நஞ்சு குறையாததால் உலகமெல்லாம்
நீதியும், நெறியுநீங்கிப் பாவமேமிஞ்சிக்குறையாமல் சிறுமையும், நோயும், துய
ரும், பிணிகளும் நிறைந்து, நெஞ்சங்களிலேயாமற் பயந்துநடுங்க விருள்மாயா
மல் மயங்கி யழிவுற்றது. இப்படி வேதநன்னூலைமறந்து மனிதர் பாவஞ்செ
ய்ததால் முன்போல சந்திர சூரிய நக்ஷத்திரங்கள் பூமியைவிளக்காமலும், மே
கம் வருஷிக்காமலும், மலர்களினிய தேனைப்பொழியாமலும், அவ்வவ்தொழிலை
மறந்ததுபோல்நின்றன. அறங்களொழிந்துபோகத் தீவினையெல்லாம் வந்தன.
பாவங்கணிறைந்தமையால் தருமங்கள்மறைந்துபோயின. வஞ்சனைபலங்கொ
ண்டதால் தவங்களில்லாதோடின. பகைசெய்யுங்குற்றங்கள் நெருங்கினமை
யால் விரதங்கள் புறப்பட்டழிந்தன. அன்றியும் பாவத்தாற் பகைமிகுந்தமை
யால் அப்பகையானது மேகத்தினின்றுபெய்யு மழையாலோடும் வெள்ளநீ
ரை யுழவர் சிறைசெய்து, பூமியை உழும்படிவைத்த கொழுவைநீட்டி யுடலைப்
புண்ணாக்கிழித் திரத்தவெள்ள மோடும்படி ஒளிவிடும் வேலாயுதம்போலச்
செய்தது. மேலும் அன்புமில்லாமல் எனது உனது என்றதினால் நேசம்போ

கவும், வஞ்சனையை யடுத்ததினால் நன்னூல்கள் போகவும், பாவத்தையே விரும்பினதினால் . நல்லின்பம்போகவும், பொருளாசை மிகுந்ததினால் தரித்திரம் நிறையவுமாதால் முன்போலக் கரும்பாலைகள் நிறைந்த சாறுபொழியாமற்காயவுந், தாமரைமுதல் மற்றமலரெல்லாந் தேனைப்பொழியாம லிழவும், வயல்கள்பயனைக்கொடாமல் முள்ளினால் நிறையவும், விரும்பியதேனையுண்ணாக் குயில்கள்பாடாமற் புலம்பவும் ஆயின.

இவ்வாறாக இழிவுகொண்ட மனுக்கள் பாவமே யின்பமெனவிரும்ப இருள் நிறைந்ததாகி, யுலகமெல்லாம்நிறைந்த தின்மையினைப்பது அரிதாயிருக்க அதனாலே முன்சொன்ன ஆசைமாமுனிக ளிவையாவற்றையும்நினைத்துத் தயைநிறைந்தகடவுளைவணங்கி, வருந்திச்சொல்லுவார். ஒன்றாயுலகங்களெல்லாம் ஆளுமிராஜாவே! என்னுயிர்நிலையே! தயைநிறைந்தகடலே! குன்றாதவொளியே! அருளிறையவனே! பசாசுக்க ளிவ்வுலகத்தைக் கொடுமையாக ஆண்டுமுடியாத பகையும், வினையுஞ்செய்வது நல்லதோ? நீ மனிதனாயவதரித்து அப்பகையைத்தீர்த் திரக்ஷிக்கலாகாதோ? எங்களுக் கிரக்கஞ்செய்யக் குறித்தநாளெப்போதோ? மறையைப்பழித்த பொய்யானமதங்கள் மயக்குவித்ததினால் நற்றவத்தின் முறையைப்பழித்த சிற்றின்பத்தில் மூழ்கினவிருப்பதால் எப்பொழுது மழைத்துளிபோ லெண்ணப்படாத வுயிர்கள் நரகத்தீயில் விழுந்தமிழ்ந்த பூவுலகங்கெடுத்த பசாசுக்கள் விடாமலாள்வது நன்றோ! முன்னாளில் நீ சொன்னமுறையோடு பகைத்த பேய்த்தலையை மிதிக்க இந்நாளில் மனிதனாயவதரித்துவந்தாலாகாதோ? பலநாளும் நாங்கள்செய்தபகையாகிய பாவத்தை நீ மனதிலே குறையாக வெண்ணுவது நல்லதோ? அவதரித்து வருவேனென்றநாளிலே எங்கள்மேலிருந்த பெருந்தயையை யிப்போதுநோக்கினலாகாதோ? தந்தைக்குமனநோக அறியாமற்பிழைசெய்த மைந்தர் சிந்தைநொந்து வணங்கித் தந்தைபாதத்தில் வீழ்ந்தால் தந்தை சினந்து தள்ளுவானோ? அதுபோல உன்னைநிந்தித்து நாங்கள் குற்றஞ்செய்திருந்தாலும் உனக்கு நாங்கள் பிள்ளைகளும், எங்களுக்கு நீ தகப்பனுமாயிருக்க இரக்கம்புரியாம லெப்பொழுதுங் கோபங்காட்டுவாயோ? பொறிகளையடக்கிய மாதவத்தோர் புலம்பிய ஓசையைக்கேட்டிரங்கினாற் குறையோ? அறிவைநீங்கிய குழந்தைகளழுமோசைக்கிரங்கினலாகாதோ? நெறியைக்கெடுக்கும் வஞ்சனைகொண்டாளுங்கொடியவெறியைத்தள்ளி, யுன்வல்லமையைக்கொண்டு எங்கள்வினைகளைத் தீர்க்க வருவதற்கு உனக்குத்தடையாதோ? உன்னைப்பெறுங் கன்னித்தாயின்கரத்திலுன்னைநான் கண்டுகளிகூரவும், உன்மலர்ப்பாதத்தை யென்சென்னிக் கணியாயணிந்திருக்கவும், நீ திருக்குழந்தையாய்த் திருமுலைப்பா லுண்ணும்போது நானுன்னை வணங்கவும், இனியவுன் மழலைச்சொல்லைக் கேட்கவும், என்னிற் குறையுண்டாயினும் என்னாண்டவனே யடியேற் கருள்வாயென்று இன்னயாவுஞ் சொல்லி யிரங்கி யேங்கி யழுதார். அவ்வாறு அழுதகாலையில் அதற்கிசை சொல்லுவதுபோலத் தனதுதயைதூண்டின விருப்பங்கொண்டு ஒப்பில்லாத தருமகன்னிகையாகிய மரியம்மாளும் அந்நாள்வரையிலுஞ் செய்யாததவை செய்வதற்குப் பரமநாதன் மனிதனாயவதரிக்கவேண்டுவாள். அப்போது என்பாக்களாற் சொல்லத்தகாதமுறையோடு இவ்விருவரின் சொல்லமிர்தத்தை உண்டஇருசெவிகளுமகிழ அன்பினோடு இவையெல்லாங் கேட்டுக் கரைகடந்தோடின பாவவெள்ளத்திலமிழ்ந்தியவுயிர்களுடைய குற்றங்களைத்தீர்த்து நிகரில்லாதகிருபைக்கட லுள் மூழ்கிவாழும்படி அளவிறந்த அருட்கடவுள் தான்தனியே செய்யுந் தொழிலிதுவானாலும் ஒப்பிலாத பெருமையுடைய இவ்விருவரைத் தனக்குத் துணையாகத் தெரிந்தமையால் இவர்களுக்குத் திருக்கலியாண முடித்துச் சேர்த்துவைக்கச் சித்தமாயினார்.

அதெப்படியென்றால், யாவராலும் உவமிக்கப்படாத கருணையுள்ள
ஆண்டவன் தான் பசாசுக்களைவென்று, வானுலகும், பூவுலகு மகிழ்ந்து வா
ழும்படி கிருபைநிறைந்து, நவமணியால் விளங்கு மாக்ஷிமைசேர்ந்த ஜெருச
லேம் நகரிடத்துள்ள தேவாலயத்தில் பெருமையோடு எழுந்தருளி யிருந்த
திருக்கந்நிகையாகிய மரியம்மாளிடத்தில் ஒருஅழகியவானவனை யனுப்பிச்சொ
ல்லுவார். நான்மனிதனாய்ப்பிறந்து, பூவுலகக்கேடுகளைத் தீர்க்கும்படி யெனக்
குத் தாயாகவளருங் கந்நிமரியம்மாள் தன்தாய்வயிற்றில் பழம்பழியாகிய ஜெ
ன்மப்பாவமின்றி யுற்பவித்த அப்போதே தூயமனமும், அறிவும், ஆண்மை
யுந், தெளிந்த காக்ஷியும், வல்லமையும், அருளும், பெருமையுந், துணிவுந்,
சூக்ஷியும் இவையெல்லா முடியாதவரமாய்ப் பெற்று, எவ்வுலகு மதிசயிப்பத்
தோன்றி, பூவுலகத்தார் காரணமறியாமல் இன்பக்கடலில்மூழ்கி யுவப்பவும், வா
னுலகத்தார் எல்லாரும் இவள் தங்கள் தலைவியென்று பூரணமாய்த்தொழு து
வப்பவும், பூமியிலிணையின்றிச் சந்திரனைக் காலணியாகமிதித்துச், சூரியனை யா
டையாக வுடுத்து, நக்ஷத்திரங்களை முடியாகமுடித்து, ஒருகுழந்தையா யவதரித்
துப், பிறைபோல ஒளியோடுவளர்ந்து, மூன்றுவயதாகும்போது தேவாலயத்
திற் சேர்ந்து, வேதவடிவாய்விளங்கி, யிடைவிடாம லென்னை வணங்குவதால்,
பூவுலகிற்காதரவாகிப் பூமியிலிருந்தும், வரங்களாலுயர்ந்த தேவர்களினிலையை
யடைந்து, வரங்கள்முற்றத் தானுமுற்றியிருக்கின்றா ளல்லவா? அவள் கந்நிகை
யாயிருந்து துணையின்றி யென்னைப் பெறவிருக்கின்றாளாயினும், இனிமே லவ
ளனுபவிக்குந் துயரங்களில் துணையாகவும், உபமானமில்லாத விந்தைப் பரம
ரகசியத்தைப் பசாசுக்களறியாமலும், கந்நிகையானவள் பிள்ளைபெறக்கண்
டவ ரிகழ்ச்சி சொல்லாமலிருக்கவுங் குறைவில்லாத துணைவனை யவளுக்குக்
கொடுக்கச் சித்தமானேன். ஆயினு மிவையெல்லா மவளுக்குச்சொல்லாமல்
கலியாணத்தூதாக நீபோய் அவளாமென்று சம்மதிக்கச்செய்வா யென்றார்.
அதைக்கேட்ட வானவன் தினகரனிலும் ஒளிர்ந்த வடிவோடு விரைவில் கந்நி
கையிருக்குந்திருக்கோயிலில்வந்து அக்கந்நித்தாயின் பாதாம்புஜத்தைவணங்கிச்
சொல்லுவார். ஆண்டவன் தயையைக்கருதியேவினதாக நீ திருக்கலியாணஞ்செ
ய்துகொள்ளவேண்டுமென்று தேன்பொழிந்த வினியமொழியாற்பலவுறுதிநியா
யங்களைக் காட்டிச்சொல்லவே அந்தக்கலியாணமென்ற வார்த்தையை வானவ
னுச்சரித்து முடியுமுன்னம் பரமநாயகியாகிய கந்நிமரியம்மாள் மனதில்நொ
ந்து திருவதனவடிவுவாடிமாறவும், ஒன்றுஞ்சொல்லாமலுங், கமலநேத்திரங்கள்
நதிபோலக் கண்ணீரைவிட்டுச்சிவக்கவுங், கேட்டசொல்லையாராய்ந்தநெஞ்சமு
ள்ளே துடிக்கவும், பெருமூச்சுவிட்டமுதகின்பு வாயிற்கொண்ட பொருள் தே
னோ? நஞ்சோ? வென்று ஐயந்தோன்றினமாத்திரத்தில் அதைவிழுங்கவும், இனி
மையாலுமிழவுந் துணியமாட்டாதவனைப்போல் இருந்து நக்ஷத்திரங்கள் விள
ங்கிய திருச்சென்னி நிலத்திற்பட முழந்தாளிலிருந்து வானுலகு மழகணியெ
ன்று விரும்பிய கூந்தல் வலதுதோளில் தூங்கப் பிறையின்வளைவுபோல நல்ல
பிடரியைவளைத்து, இருகரகமலங்களைக்கூப்பிக், கடவுள் சேவடியை வணங்கி
யொருவாறுதுணிந்து, மறுமொழிசொல்லுவாள். உலகங்களியாவையுங் காத்
திரக்ஷிக்குங் கருணைக்கொடையோனே! உருவமின்றியெங்குநிறைந்தோனே!
அளவிறந்ததற்பரனே! அற்புதனே! என்னன்பனே! அரசர்க்கரசனே! என
க்கு நலமெல்லாந்தந்து, தந்தவறிவையறியாயோ? என்னுள்ளமெல்லாம் அறி
ந்தாயாகில் இப்போது என்மனம் உடைந்துநொந்து நான்புலம்பக் கலியாண
வார்த்தையைப் பேசுவானேன்? எப்பொழுதுங் கந்நிகையா யிருக்க முன்ன
டைந்த அறிவுதானே நல்லறிவென்று மீளவுஞ்சொல்லுவாள் நீதந்தவணக்க
மென்றுதுணிந்து மூன்றுவயதிலே மயக்கத்தைத்தரும்வாழ்வுள்ள கலியாண

யில்லாமல் எப்போது மாறாத கந்நிகையாயிருப்பேனென்று நானினைத்தபோது நீயுங்கூட ஆமென்று தயைசெய்தாயல்லவோ? ஐயனே! இப்பொழுது பெருந்துயர் மனத்தில்நுழைந்தறுக்கும்படி மணத்தைநினைப்பானேனென்று மெல்லிய திருப்பாதத்தையுடைய எனக்குத்தாயாகிய கந்நிமரியம்மாள் இருதயத்திற்பாய்ந்தெரியும் புண்கொண்டவளைப்போல உள்ளுருகி யிவையெல்லாஞ்சொல்லித் துன்பக்கடலி லமிழ்ந்திருந்தாள். அப்போது அருங்கனுருக்கொண்ட வானவன் ஒப்பில்லாத கந்நித்தாயின் திருவடிகளைவணங்கி யின்னமும் விரிவாக வேதத்தினுறுதிகளைச் சொல்லிக் காட்டத்தொடங்குவார் ஆபரணமாகவேதத்தையணிந்ததாயே! பயமின்றி † நோவையின் கப்பலிலேபசுக்களையுஞ், சிங்கங்களையும் ஒன்றாக அடக்கினவனும், ‡ கபூக்களின் நிறைந்த சூளைத்தீயைத் தேன்பொழிந்த வாசமலரைப்போலக் குளிரச்செய்தவனுமாகிய கடவுள் வானுலகும், பூவுலகும் வணங்கப்பெற்ற உன் கந்நிமையைத் திருக்கலியாணத்தோடு சேர்த்துக்காப்பது அருமையோ? சொல்லினு நினைவினு மடங்காமல் உபமானமெல்லாங் கடந்துயர்ந்த வல்லமையுள்ள பராபரன் திருவுளமாகியும், உனக்குச்சந்தேகமென்ன? நக்ஷத்திரமுதலான சுடர்களையெல்லாம் வென்ற அறிவுனக்கிருக்க நீமயங்குவானேன்? வரும்பொருளெல்லாம் அறிந்து சூரியனிலுந் தெளிந்த அறிவுடையநாதன் கட்டளைப்படிசெய்தால் பின்பொரு குற்றமும்வாராதென்றார். அதற்கு அக்கந்நிமரியம்மாள் பர்வதத்தினும் வலியுள்ள தன்கந்நிமை என்று மழியாமல் இருக்குந் திருமணத்துக்குச் சம்மதித்துக் கடவுள்சேவடியைத் தொழுதுநின்றாள்.

அப்பாலப்பரமநாயகி ஆம் என்று சம்மதித்த திருக்கலியாணச் சேதியை வானவன்போய் கடவுளுக்குச்சொன்னவுடனே சர்வநாயகன் நாமெல்லாரும் வாழும்படி அந்தக் கந்நிமரியம்மா ளெழுந்தருளிய தேவாலயத்தில் சிரேஷ்டகுருவாகி மாக்ஷிமையைக் காவலாகக்கொண்ட சிமையோனென்னு மாதவனுக்குக் காக்ஷியிற்றோன்றிச்சொல்லுவார். ஓ மகனே! குற்றமில்லாத தாவீதரசன்மரபிற்பிறந்து, தாயுந்தந்தையுமிழந்த மரியென்னும்பெண் ணிந்தக்கோயிலிலுயர்ந்த வரங்களால் நக்ஷத்திரக்கூட்டத்தில் விளங்குஞ் சந்திரனைப்போல மற்றைய கந்நிகைக்குள் விளங்குகின்றாள் அவளுக்குப் பதினாலுவயதாகையால் நேர்மையான வொருதுணைவனைத்தேடி யவளுக்குக்கலியாணத்தை முடிக்கவேண்டுமாதலால், பெருமையிலெழுந்த அவள் மரபினுள்ளே மாக்ஷிமையுடைய ஒருவனைத்தேர்ந்து, மணமாக நீ கட்டுவாயென்று கட்டளையிட்டுப்போனார். உடனே மாதவனாகிய சிமையோன் கடவுள்கொடுத்த திருக்கட்டளையைத் தலைமேற்கொண்டு நிகரில்லாவரங்களைக்கொண்ட கந்நிமரியம்மாளை யழைப்பித்துத் தான்கேட்டவையெல்லாஞ் சொல்லிக்காட்டி, யகன்ற வருளுடைய நாதன் கட்டளையானதால் இனி நீ திருக்கலியாணமே செய்யவேண்டுமென்றார். அதைக்கேட்ட கந்நிமரியம்மாள் பெருமூச்சுவிட் டேங்கி, மணமும் மணத்தால்வரும் வாழ்வும், அடியாளுக்குச்சாவிலுமிகுந்த துயரமாயினும் இப்படிப் பரமநாயகனே சொன்னபோது கலியாணமே யாகட்டுமெனச் சம்மதித்தாள். இதைக்கேட்ட மாதவனாகிய சிமையோன் திருமணத்தை முடிக்கும்பொருட்டு அங்கிருந்த மற்றமுநிவர்களைக்கூட்டி, ஆண்டவன் திருவுளம்பற்றின யாவுஞ்சொல்லிக்காட்டியதால அந்தமுநிவர்கள் இஃதறிந்துசொல்லுவார்கள், நீர்சொல்லிய வண்ணந் தாவீதரசன்குலத்திலுண்டான யாவரையுங்கூட்டி யவர்களுக்குள்ளே தானே ஆண்டவன் ஒருவனைத் தெரிந்துகாட்ட மன்றாடுவோம் அப்பொழுது இத்திருமணம் பழுதடையாமல் முடியுமென்றார்கள். உடனேநல்லதென்றுநாய

† மோசே முதலாகமம். 9-ம். அதிகாரம். ‡ தானியேல் 3-ம். அதிகாரம்.

கனைத்துதித்து, வுள்முரசடித்துத் தாவீதரசன் மரபாரெல்லாரும் வாருங்களெ ன் றழைக்கமாத்திரத்தில் அன்றையதினம் நவமணியாலலங்கரித்த நகரமெல் லாங் களிகூர்ந்தது. இப்பால் மேகத்திடிபோலத்தோன்றின மங்கலமுரசின் முழக்கமானது கூர்க்குடைய அம்புபோலச் சங்கிமரியம்மாள் திருச்செவியிற்பா யப் போர்க்களம்போலுமனத்திற்புலம்பி, யின்பமாயத் தானடைந்தநாதன் சே வடியைவணங்கிச் சொல்லுவாள். உள்ளொளித்தவெல்லாந் தெளிவாயறியும் நாயகனே! குறையின்றி யுன்திருவடியை வணங்கிச் சாருந்தனையுந் தெளிந்துவி ளங்கிய இத்திருக்கோயிலினடுவே நானொளித்திருக்கக்கொண்ட என்னாசையை யறிந்தும், என்னைத் தீயினுஞ்சுடுகின்ற மணத்தைச் செய்துகொள்ளச் சொன் னாய் நானதை வாங்கினலாயினுந் தள்ளக்கூடாதே சாவினுங்கொடிய இவ்வினை யால் என்மனம் உள்ளேகாய்ந்தாலும் இதுவுன்திருவுளமென்றபோது இனிமை யாரும் மணஞ்செய்தாலும் என்கன்னிமையைக்காக்க வுன்திருப்பாதத் துறுதி போதுமென்றுசொல்லி, இனிமனத்திலோங்கி மீளவுஞ்சொல்லுவாள். ஐயனே! வானவர்க்குநேராக எனக்குக்குறித்த துணைவன் பூவுலகின் செல்வங்களை யழித் துத் தேவவரங்களையடையவும், பூவுலகின் செல்வங்களைவிரும்பாமல் அருட் செல்வங்கள் நிறைந்ததாகக் கற்பின் பெருவரத்தைப் பெறவுந்தந்து, துன்ப மடைந்த அடியாரையவருக்குத் துணையாகச்செய்வாய் அன்றியும் விலகப் படாத துன்பதுரிதங்களைச்செய்யும் வாழ்நாள்கள் கிடைப்பதற்கான துணை யைக்கேளேன் ஒழிப்பதற்கரிய குற்றமெல்லாம் ஒழித்துன்தேவவருளாகும்படி யான அறத்துணைவனையே தருவாயென்றாள். இப்[illegible]சங்கிமரியம்மாள்சொ ன்னநேரத்திலேயே கடவுளானவர் பொழிந்த[illegible]மழையினால் எழுந்தவெள்ளம் கடல்மேல் திரண்டோடியதுபோலச் சங்கிமரியம்மாளுக்கு மணத்துணைவனு கத் தெரிந்துகொண்ட சூசைமுனிசருள்ளத்திலும், நன்மையுடைய வரத் தொகையெல்லாங் குவித்துவைத்தவுடனே இருவர் தாமடைந்த வரங்களால் புறத்துநிகரில்லாமல் உள்ளத்தில் நிகராகிறதொன்று அறிந்தகடவுள் இவர்களை மணத்தொழிலாகச் சேர்த்தமுறைமையை இனிச்சொல்லிக்காட்டுவோம்.

முன்சொன்ன இராஜமுரசின் கட்டளையைக்கேட்டு, இராஜகுலத்தோ ரெல்லாருங் கூட்டமாய்த் தேவாலயத்துள் வந்திருக்கும்போது பன்னிருவய தில் கலியாணத்தை வெறுத்த அருந்தவமுடைய சூசைமாமுனிகளுஞ், சிரேஷ் ட குருக்களான சீமையோனுடைய கட்டளைக்குக்கீழ்ப்படிந்து, தானும் வந்த னர். இப்படிச்செம்மணியால் விளங்குந் தேவாலயத்துள் செல்வப்பெண்ணை விரும்பிய யாவரும்வந்தபிறகு சீமையோன் நிகராத அழகிய சங்கிமரியம்மாளைக் கூட்டிக்கொண்டுவரச்சொன்னார். அதற்குள்ளாகச் சுடர்விடும் அழகுடைய விந்தப்பரமதாய் ஒருபொருண்மேல் விடாமல்வைத்த ஆசையளவாக விடாத பயமும் மிகுதியாகையால், தன்கன்னிமைக்கு ஓரழிவாகுமோவென்று மீளவு மஞ்சியழுது சொல்லுவாள். என்னாண்டவனே! கடல்சூழ்ந்த பூமியிலுள்ள உயிர்க்கெல்லாம் நீயேகாவலாயிருக்க உன்னையன்றி வேறொருகாவலெனக்கு வேண்டுமோ? என்றுங், கடவுள்திருவடியையடைந்த வானோரே! ஆகாயோர் ஒவ்வாததுயர்கொண்டலையத் துன்பமின்றிவாழு மிந்தக்கன்னிகைகளோடிருந்த நான் இவ்விடம்விட்டுப் பெயரச்சொல்லும் விதி யேதோ? என்றும், வானவ னே! இதழினின்றொளிசெய்யும் வண்டுசூழ்ந்த குளிர்ந்தமணமாலையா லென்ம னம் உள்ளேவேக நீயவ்வுலகிலுள்ள இங்கிதவுணர்வோடு மணத்தூதாக நடந்த தற்குப் பயனிதுதானோ? என்றும், ஆண்டவனே இதிலே துன்பமறத் தலைப் செய்யார், வானவரோ மணஞ்செய்யச்சொல்லித் தூதுசொல்லுகிறார், மனித ரோவுதவார், மணத்தோடிவரும் பயனிதுதானோ? என்றும் நிழல்செய்யு மிந் தக்கோயிலைவிட்டு மனத்தினுள்ளஞ் சுழற்சிகொண்டு எங்நாளுமடைந்த

துயர் துளைத்தபுண்ணில் தீப்போலாகி யினி காணே யுருகுமேயென்றும், என் மனமே! யினிமேல் மறவாமல் வருத்தங்கொள்வாய், நெருப்புண்டகண்களே! யெந்நேரமும் அழுங்களென் றுஞ்சொல்லி மனத்திலேங்கிவிடாமலழுவாள். இப்படி உட்கொண்ட தணியாததுன்பங்களினால் நொந்தபோது பரமநாதன்தெளிந்த உணர்வினால் தேறும்படிக்கு நிறைந்தழுங்கிய வருத்தந்தீர இனியசொற்கொண்டு இக்கந்நிகைக்குச்சொல்லுவார். குறையாமலென்கருணையால் விளங்கும் நெஞ்சமுடைய மகளே! மெய்யங்கி யிதுவஞ்சனையென் றஞ்சுகின்றாயோ? என்பாதத்தைத்தொழுது, நீ செய்த தருமங்க ளடைந்ததஞ்ச வாதரவு குறைந்ததோ? வினையஞ்சாதே யஞ்சாதே குறைவில்லாத வுன்கந்நிமைக்குக் கேடுவருமென்று நீ நினைத்தவிதமாக என்கட்டளையினால் வருந்துணைவன் மலையையொத்த உன் கந்நிமையை நிலைபெறக்காப்பான், அவன் தவத்தினாலுனக்கொத்தவனாய்ச் சுத்த மனத்தோருள்ளு மிகவுஞ் சுத்தனாயிருப்பான், அவனோடு குற்றமின்றியுன்கந்நிமைவீற்றிருக்கும் நீயஞ்சேல் அஞ்சேல், மாறாத நற்குணத்தோடுவருங் காக்ஷியைக்கடந்த வழியினால் கடலைப்போலுமுள்ள வுன்துணைவனுடைய நிலைமையும், நெறியும், நீயே சந்தோஷிக்கச் சொல்லுவேனென்று குசைமாமுனிகளுடைய பெருமையைச் சொல்லத்தொடங்குவார், அதெப்படியென்றால், தாயுதரத்திருந்து ஜனிக்குமுன்னர் பூமண்டலத்தில் பேய்ச்சிறையாகிய ஜென்மப்பாவத்தை நீக்கித் தேவருளையடைந்து நோய்செய்யு முடலின் சிறையொழிய உன்கந்நிமையை யழியாமல் நீகாக்குமாப்போல அவனுந் தன்பொறிகளைக்காத்து, வேதரு[illegible]மமும் வடிவாகக்கொண்டு கொடைதானஞ்செய்யும் விருப்பத்தால் மேகத்தை [illegible]யொத்தும், அடைந்த ஞானஅறிவால் ஆதித்தனையொத்து, முடிவில்லாதடைந்த அருளினால் கடலையொத்துங், தியாகமும் வனத்திற்கிடையாத தவமுங், தாய்கொண்ட அன்பினைவென்ற கருணையும், வானவர்க்குரியகாக்ஷியும், உன்குணத்தையொத்த குணமுமுடையவனாகி விண்ணோரு மதிசயிப்பக் கண்ணாதியைம்பொறிகளைக் காத்ததினால் கடல்போலலையுமாசையற்று, அவனென்னையல்லாமல் வேறொன்றையுமெண்ணாமலும், விரும்பாமலு மிருப்பதாலும் எனக்காசை வருத்துவிக்கும் யாவரிலு மிவன்மனத்தைக் காத்தமையாலும் எனக்கோயாதவன்புள்ளவனாயினதன்றி வரங்களினால் வானவர்மேலுமுயர்ந் தனக்குரிய காவலனுமானா னென்றார். இதைக்கேட்ட தெளிந்த அறிவுடைய கந்நிமரியம்மாள் ஆதியும், அந்தமும், ஒப்பும், அளவுங் கடந்த ¶ ஆறிலக்ஷணமுள்ள நாதனருளாற்றேறிக் களிகூர்ந்து, அவர் திருவடிகளைத்தொழவே வானவருமவந் திவள்கண்ணீரைத்துடைக்க மாறாதநற்றுவவுகொண்டெழுந்தாள். எழுந்தவுடன் இருள்குடியாகவிருக்குங் கூந்தலையுடையமாதர்கள் முடிபோலவிளங்கும் பூரணசந்திரனும் நிகராகாமல்நாணப்பட வழகினால் முதிர்ந்த பொற்கொடிபோன்ற தன்னைக் கலியாணத்துக்காக அலங்கரிக்க நாறுதோழிமார்கள் பாரந்தஅழகுள்ள சிலம்புகள் இடித்தொலிக்க வருவதைக்கண்டாள்.

அவர்களில் மீன்போலும் விழிகளையுடைய சிலர் வானுலகிலலர்ந்த பூவாகிய நக்ஷத்திரங்களைப்போலத் தேன்பொழிந்தவிர்ந்த வரும்புகளைநாடி யிளவண்டுகள் சூழ்ந்தொலிக்கச் சுகந்தம்வீசி மலர்ந்தமாலைகளை யணியநெருங்கவுஞ், சிலர் பரிமளம்வீசிய காந்தள்மலர்போலும் இருகையிலேபிடித்த நற்பொன் வளையல்களையிடவும், அல்லாமல் நறைக்கொடியுங், கஸ்தூரியுங், குளிர்ந்தபொடிச்சுண்ணமும் பூசக் கூட்டமாய்ச்சேரவுஞ், சிலர் பொற்சிலம்புகள் பொரு

¶ ஆறிலக்ஷணமாவன:— தன்வயத்தனாதல் 2. முதலிலனாதல் 3. உடம்பிலனாதல் 4. எல்லாநலமுளனாதல் 5. எங்கும் வியாபகனாதல்_6. எவற்றிற்குங் காரணனாதல்.

துவதுபோல வொலிப்பதன்றி யொலிக்கும் பொற்கிண்கிணிகளும், ஒலிசெய்பு
மகன்ற பொன்மணிமேகலையும், அழகிய பொன்னாபரணங்களுங் கொண்டு
நிறையவுந், சிலர் நறுநெய்பூசிக் கஸ்தூரிமுதலிய சுகந்தமுள்ளதைக் கூட்டி
க்கலந்த நீராட்டி, வெந்தவகிற்புகைமுதலிய வாசப்புகைகாட்டிப், பாலாவியினு
மெல்லிய ஆடையையேந்தி யடைந்தார்கள். இப்படியாக நஞ்சுண்ட கண்ணழ
குடைய மாதர்கள் விருப்பத்தோடுகொண்டுவந்தவெல்லாம் அந்தப்பரமநாயகி
கண்டு தாரகைவிளங்குந் திருச்சென்னியை யசைத்துக் குளிர்ந்த திருமொழி
யால் கடுகிப்போங்களென்று நடுவேசிரித்துக்கொண்டு நடந்துபோய்ச் சொல்
லுவாள், தாழ்ந்தபூமாலைகளோ, கமழாது, பொன்னிறைந்த வாபரணங்களோ
விளங்காது, என்பிதாவினழகிய திருவடிகளே யாபரணங்களும், அழகுமாகும்.
அதுவல்லாதவெல்லா மிழிவுதானேயென்று சொல்லிக் கடுக அகன்றுபோ
னள். ஆதலால் வீணைக்குஉயிரான இனியகுரலுடைய இக்கன்னிகை விண்ணுயி
ராகிய இரவியையாடையாகவுடுத்து விண்ணுக்குக்கண்ணாய்விளங்கு முடிக்களை
முடியாகமுடித்துத் தண்ணியசந்திரனை மிதியடியாக மிதித்துஇருப்பதால் இந்த
அலங்காரங்கள்மேலும் பின்னொருஅலங்காரம் நன்றாகுமோ ? அதனால்
வஞ்சனைநிறைந்த பூமியிலுள்ள அணிகள்யாவற்றையுங் கஞ்சத்தாளையுடைய
என்தாயார் வெறுத்து அஞ்சநடையால் நடந்துபோகவே பரமநாதன் விந்
தம் அழகுள்ள வானத்தினணிகள் சூழ்ந்தணியவே வானவர்நெருங்கி மணியா
க அறமுங், காதணியாக தெளிந்தவறிவுந், தேன்பொழிந்த மலர்வடமாக அரு
ளும், ஆடையாகக் காணகத்தில்வளருந் தவமுமணிந்தார்கள். இந்த ஆபரணங்க
ளைத்தரித்த சூரியவாடையாள் இரவில் நிறைந்தெளிரு மழகிய வான்மீன்களு
ள் பாலொளிவிடும் புதுநிலாநடப்பதுபோல. ஒலிக்குஞ் சிலம்புடைய தோழி
மார்கள்நடுவே தேவாலயத்திற்குநடந்துபோகவே பூவுலகமொவ்வாத விந்தத்
திவ்வியகன்னிகை நெருக்கம்நீக்கி மெல்லடிவைத் தண்டினவிடமெல்லாந் தா
மூண்ணாத வழகியமலரைக்கண்ட வண்டுகள் நீங்கிப்போவதுபோல, ஒழிவில்
லாமயக்கமுங்,குற்றங்களும்,பசாசுக்களுந், துன்பமும்,இழிவும்படர்ந்திராமலுங்,
காமபாணந்தொடுக்கு மன்மதனுங், காமவிசாரங்களும், பொய்யும், பாவமும்,
விலகிப்பதினேழுகாததூரமகன்றுபோயின. அன்றியுமிந்நாயகியின் சமலநேத்தி
ரங்களை யொருவன்நோக்கினால் காமத்தழல் அவிந்தாறவும், இவள்பாராமல்திரு
விழிகளைமூடினால் அச்சமுங்,கலக்கமுந்,தாவும் இனிதாய்த்திருக்கண்களால்கடா
க்ஷிப்பாளாகில் பரமகதியடையுந்தன்மைகாட்டவும், அத்திருக்கண்களே களி
கூர்ந்தபோழ்து சூரியனைமறைக்கவும், பல்லும் விழியும், பவளஇதழும், இனிய
சொல்லும், ஒளிர்நெற்றிப்புருவவில்லுங்,கையுஞ், சிறடியுஞ், சென்றவிடமெங்
குமழைபொழியும்புயல்போல அருட்கருணைபொழியவுமாகிய இக்குணமெல்லா
முடையவளா யிருந்துவருந் திருமாதை யெவருங்கண்மலர்ந்துநோக்கவே வா
ன்மீதுலாவிய சந்திரனுதயமானபோது பொய்கையிலாம்பலெல்லாந் தம்வாச
லரும்புமலர்வதுபோலவும் வான்விட்டிலுள,தாயொளிரும் அழகுகாட்டியமுகத்
தில ஆடிவிரும்பி யழுந்தியகண்களோ பூவிதழ்களில் ஆடிவடிந்த இனிய விளங்
தேனுட் கொழித்துக்களிகூர்ந்த வண்டுகள்போலவுமிருந்தன. அரியஞானமும்,
பெருமையும், ஆராய்ந்த அறிவும், தைரியமும், மற்ற நன்மையும் நினையாத மு
றையோடு கண்வழியாக எவருமடைந்துதெளிந்தவருளினால் மனத்திற்நேர்ந்து
இவ்வான அரசியைநோக்கிச்சொல்லுவார்கள். அம்புபோலுங் கண்ணுடைய ம
ற்றமாதர்சொல்லுகின்றஇனியசொற்களுயிரையுண்ணும், கொலைபாதகமறியாத
விக்கன்னிகையின்இன்பச்சொல்லோ உயிரைக்காப்பாற்று மென்பார். குறையொ
ன்றின்றி வானவடிவாகிய இவளுடைய மாசில்லாத அழகினைக்காண நமக்கி
ருகண்ணல்லாமல் தெய்வநாதன் ஆயிரங்கண்கள் கொடுத்திருந்தால் நன்றென்

பார். வேதவடிவாய்விளங்கும் இத்திருமடந்தை குறையின்றி நமதுவிழியு மன முஞ்சிறைசெய்தாளாயினும் நமக்குச்சிறையினால் துன்பந்தோன்றாமலின்பமே செய்தவிதமேதோ!வென்பார். இகழ்வாரில்லாத இவ்வடிவினால் நமது மனமே களவாய்ப்போய் நமக்குச்சந்தோஷம்வந்ததென்ன ? களவுகொண்டா ரல்லா மல் பறிகொடுப்பாரும் இன்பங்கொள்வாரோ ? என்பார். அருகேவந்தவான முகுள்ள திருமுகத்தைப் பருகியவிழியாற்பார்த்து உருகாதிருந்தால நமதுமனம் அசையாத பாறையாகுமென்பார். இவளோடு இனிதாய் மணமுடிக்கத்தக்க வன் ஆண்டவன் சித்தத்துக் கொண்டுபட்டவனோ ? மாதவனோ ? அருளான வனோ? யாரோவென்பார். மின்னும் இத்திருப்பெண்ணின் குடங்கையடைந்து மன்னுந்திருமணத்தைப் பெறத்தக்கவன் தவறாமல் ஆண்டவன் சேவடியும், மோக்ஷபேரின்பத்தையும், பின்பு வானுலகமு மடைவானென்பார். இப்படி ய வரவர்கள்சொல்லிய சொற்களின் ஓசையையமர்த்தி யருந்தவனாகிய சீமை யோன் அங்குக்கூடிய ஒவ்வொருத்தனுக்கு ஒவ்வொருகோல் கையிலேதந் து கடவுள்கட்டளை யிதுவென்றுசொல்லி முறையோடு யாவரும் ஆண்டவன் குறித்த திருமணத்துணை காட்டவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்யக் கூறி னார். இப்படிச்சொல்லிய வளவிலே கடல்சூழ்ந்தவுலகில் நிகரில்லாமல விளங் கிய மின்னற்கொடியாகிய கன்னிமரியம்மாளைத் திருக்கலியாணஞ் செய்யலா மென் றெல்லாருங் களிகூர்ந்திருக்கக் கூடவிருந்த சூசைமாமுனிகளோ வென் றால் தேவசெல்வத்தினா லலங்கரித்த இத்திருமடந்தையையடைய எனக்கு ப்பேறுமில்லை யிருந்தாலுந் துறவறத்தால மணஞ்செய்யே னென்று உறுதி கொண்டபின்புங் கலியாணமாகுமோவென்று நினைத்துபயந்திருந்தார். இப் படிநினைத்தபோது அந்தசூசைமாமுனிகளேந்திய கோலானது தேனும், வாச னையும்பொழிந்து அழகியவிதழ்கள்மலர்ந்த வெண்மலர்பூத்துத் தேவாலயமெ ங்கும் பரிமளமேநிறையச்செய்தது. அது எவ்வண்ணமென்றால், பொழுதைக் காட்டிய இந்தக்கன்னிமரியம்மாளின் தன்மைக்கு இவ்வுலக அழகெல்லாந் தகுதி யல்லவென்றுணர்ந்த கடவுள் இவருக்குக்குறையாத நன்மையையுடைய து ணைவனைக்கொடுத்ததற்கு அடையாளமாகத் "தேம்பாவணி" யென்னும் வாடாத மாலையாகிய பூங்கொடியை சூசைமாமுனிகளுக்குத்தரச் சித்தமாயினர். அந்த த்தருணத்தில் தூயபவளக்காலும், பொன்னிறமாகிய வாயும், வெண்மையா கிய இறகும் உள்ள ஒருபுறாத்தோன்றித் தனதுநல்லசிறகைக்கொண்டு உயரப் பறந்து, முன்கூறிய வளமென்னுஞ் சூசைமாமுனிகளின் திருச்சிரசின்மேனி ன்று எழுந்தசிறகைநீட்டியிருக்க இதைக்கண்ட சூசைமாமுனிகள் நான்விரும் பாத கலியாணத்தை நான்செய்வேனாகில் எனக்குக் குற்றமாகுமே யென்று மனத்தில் நாணியுளைந்துருகும்போது வானுலகவரசனாகிய கடவுள் இவரு டைய பயத்தைத்தீர்த்துத் தயிரியங் கொடுக்கும்படி, நினையாதகாக்ஷியுந் தந்து மனதிலே சொல்லுவார். ஓமகனே ! நீதுறவாகவிரும்பி யிந்தக் கலியா ணத்தை வெறுப்பதென்னகாரணம் இது என்திருவுளமாகினதால் தருமத்தி லையம்போலும் இந்தத்திருமடந்தையை நீகொண்டால் நீவிரும்பிய துறவறத் தின்படியேயாகுமென்றார். இக்கலைச யுள்ளத்தில்தோன்றியவுடன் முன்சொ ன்ன இளமையாகிய வெள்ளைப்புறாத் தன்சிறகடித்து உயரப்பறந்து தூயவொ ளிகளைப்பரப்பி யந்தவளன்தலைமேல்கிரணத்தைவீச மகுடமாகவிளங்கியிருக்க அப்போது தேன்மலர்க்கொடியையேந்திய இந்தச் சூசைமாமுனிகள் சூரியனை ப்போலத்தோன்றிக் காண்பித்தவெல்லாம் உள்ளாராய்ந்து அருளும், அன்பும், இன்புமாகிய கடலுள் மூழ்கி வானவரினும் பெருமைகொண்டு கடவுளைத்தொ ழுதிருக்கவே மிகுந்தவடிவோடு முதிர்ந்தபதினாலுவயதுள்ள குளிர்ந்தசந்திரப த்தாளாகிய கன்னிமரியம்மாளைத் திருமணஞ்செய்ய முப்பத்து மூன்றுவயதுக்

தெளிந்த பூங்கொடியும் உடைய அந்தச் சூசைமாமுனிகளுக்குக் கடவுளின் ஆஞ்ஞையாயிற்று.

அதைக்கண்டவர்களுடைய கண்களும், மனங்களுந் தேனையுண்ணும்படி மலர்ந்த பூவின்மேல் வண்டுகள் மொய்ப்பனபோல நீண்ட பூங்கொடியேந்தி யொப்பில்லாத வரத்தொகையடைந்த அந்தச் சூசைமாமுனிகளின்மேல் விழவே யாவரும் இம்மணத்துக்குரியதுணை யிவரென்பார். சிலர் இவரேந்திய வாசலரும்புகளால் தேனைப்பொழியும் பூங்கொடியைக்கண்டு கருப்புவில் வில்கோத்த பூங்கணையென்பார். சிலர் அப்பூங்கணை வருத்தஞ்செய்து நெருப்பையிடும், இப்புஷ்பங்களோ மனக்குளிர்ச்சியையேயிடும். ஆகையால், இதற்கது சொல்ல என்பார். சிலர் உயர்ந்தவிருப்பத்தோடு முடித்ததவத்தினால் ஒவ்வாத முறையோடுவந்தவிருது இதுவென்பார். இப்படிவிருப்பத்தோடு யாவருஞ்சொல்லி மனமுருகி, யானந்தக்கடலில் மூழ்கியிருக்கச் சிரேஷ்ட குருப்பிரசாதியாகிய சீமையோன் வாசக்கொடியேந்திய அந்தச் சூசைமாமுனிகளை வரவழைக்க, அவரும்வந்து, குருவின்பாதத்தைத் திருச்சென்னியின்மேல்வைத்துத்தொழுதார். அத்தருணத்தில் கமலமுஞ், சந்திரனு, மற்ற எவையும் நிகராகாமல் நாணும்படி அழகியதிருப்பெண்ணைக் கண்டவளவில், மனத்திலெழுந்த ஞானவொளியால் காமமற்று, ஞானக்காதல் கிளைப்பவே மனக்கோட்டமில்லாத குருவின்பாதத்தை மாலையாகவணிந்த கன்னிமரியம்மாளுங் கதிரின்வடிவோடு சாய்ந்தபிறைபோலத், தனதுதிருநெற்றி குருவின்பாதத்திற்சேரவிழுந்து வணங்கினள். இப்படியிருவரும் ஒளிதவழுமிருசுடர்போலும் வணங்கினவுடனே சிரேஷ்டமுனிவராகிய சீமையோன் இருவரும்வாழவென்று மார்போடணையத்தாங்கிக், கடவுள்கட்டளை[illegible]களை வினையெனத்துதித்து, இனி வேதமுறையின்படியே திருமண[illegible]க்கவேண்டுமென்று நினைத்துக், காந்தள் மலரின்மேல் இசைந்த தாமரைம[illegible]போல மணவாளனாகிய சூசைமாமுனிகள் விரித்த திருக்கரத்தின்மேல், மண[illegible]வாட்டியாகிய கன்னிமரியம்மாள் திருக்கரத்தைக் கூட்டிவைத்துக், கடவுள்ம[illegible]னிதனாகி யுங்கள் திருக்கோத்திரத்தின் வழியாக வருகவென்று ஆசீர்வதித்து, வேதமுறையெல்லாங் குறையின்றிமுடித்தவுடன் முரசும், முழவும், முருடும் ஒருபால் ஓசைமுடுகப் பறையும், வீணையுங், கடமும் ஒருபால் கடுகிமுழங்கக், குழலும், பாடுவார்குரலுந், துதிப்பவர் வாழ்த்துதலும், ஒருபா லினிதாய்த்தொடர மேகத்தின்முழக்கமுங், கடலின்முழக்கமும் போலாகவும், அறத்தினுருவும், வேதத்தினுருவுஞ், செல்வத்தினுருவும் நிகர்த்தவரோவாழி, எங்களுக்குயிரும், உலகிற்குயிரும், உயிர்க்குயிரும் ஒத்தவரோவாழி, அருளினிலையுந், தவத்தினிலையும், நிலத்தினிலையும் ஆனவரோ வாழியென்று அவரவர்கள் சொல்லிக்கொண்டிருக்கவும், பெருமையில்லாதபகையும், பழிப்போர்களுங், கோபமும், நன்மையில்லாதஜலமுங், குற்றமும், இருண்டமயக்கமும், நயமில்லாத சிறுமையுந், துயருங், கேடுஞ், சோம்பலும், பயமும், நோய்களும், வறுமையும், மாசும், பாவமுமாகிய இவையெல்லா மினியொழியும்படியாகவுங், கீர்த்தியுஞ், செல்வமும், நயமும், நீதியும், நீதிமுறைகளும், இன்பமுங், கல்வியும், அறிவும், முயற்சியும், வல்லமையும், பின்வாங்காத பெருமையும், அன்பும், பொருளும், வரங்களும், புகழும், நன்மையும், குறைவில்லாத வேதமுந், தயையுந், தவமும், நல்லதருமமுமாகிய இவையெல்லாம் வளரும்படியாகவும், மொழிந்த புகழோசை யெழுந்தகடலோசைபோலவும், வேதியர்செய்யும் பூசையின் துதிகளுஞ், சுகந்தூபமுதல் எழுந்தநல்லபுகைகளுஞ், சிந்தினமலர்விடுவாசமும், ஒழியாமல் இந்தத்திருமணவாளரிடத்தில் எழுந்தகதிர்களை சூரியனைப்போலத்தோன்றவும், ஆசைகொண்டெவரும் இன்பக்கடலுள் ஆழ்ந்துமுழுகவுங், கேடில்லாமல் நக்ஷத்திரந் தன்கதிர்க்கவ்வதுபோல உதயநக்ஷ

த்திரமாகிய அந்தக்கன்னிமரியம்மாள் கன்னிமைமாறாமல் தன்னைத் திருக்குமாரனைப் பெறுவாளென்றமைந்த கடவுளின் கட்டளையால் அந்தப் பரமநாயகிக்குத் திருமணத்துணையாகச் சூசைமாமுனிகளமைந்தபோது அவர் கற்பின்மாட்சிமையைநினைந்த வானவர் துதிகளைச் சொல்லிக்கொண்டிருக்கவும், மாதருங் கன்னியரும் பாடலில் பாகின்ப மிருசெவியருந்தவும், நாடியவின்பம் ஆசைக்களவாகி நகரும், நாடும் எழுந் துயரவும், கூடவிளங்கிய வானவர் களிகூர்ந்த இசைகள் கூறி யின்பத்தினுட்கொழிக்கவும், இனிவினையெல்லாமொழிந்து துன்பமின்றிப் பூமண்டலங்களிகூரும்படி, மிருளையொழித்தவானவர் வாழிவாழியென்று வாசமலர்மழையும், இன்னிசைமழையும், மின்னொளிமழையும் பொழிந்திருக்கவும், நினைத்தவை அந்நேரமே நினைத்தபடி செய்ய வல்லவனாகிய கடவுள் முதற்கொண்டு அளவில்லாக்களிகூர்ந்த வானவரும், இருளகன்ற நன்னெறிவழுவாத முனிவனாகிய சீமையோனும், மற்றவருங்கூடி ஆசீர்வாதத்தால் விண்ணுலகும், மண்ணுலகும் வாழும்படிக்கும் அரியதிருமணமுடிந்தது.

இந்தத்திருமணமுடிந்து இனிதாகப்பலநாள்கழிந்தபின், குற்றமில்லாதமாதவனாகிய சீமையோன் சுகந்தம்வீசும் பூங்கொடிவிருதுடைய சூசைமாமுனிகளையழைத்து மார்போடணைத்து, ஆறுபோலப்பொங்கிய அன்பின்தயையால் ஆசீர்வதித்துத் தாமகன்ற உன்னூராகிய நசரையமாபுரிக்குப் போய்வாவென்றார். இதைக்கேட்ட மலர்க்கொடியோனாகிய சூசைமாமுனிகள் அன்பினாலவர் [illegible]ட்டளையிதுவென வறிந்தமையால் சித்திபடமுடித்த திருமணத்தோடு தனக்குவந்த நன்றியையறிந்து, நடக்கும்படி தான்செய்யுங்கருமமிதுவென வெளிப்படுத்தவேணுமென்[illegible]ந்தவன்போடு களிகூர்ந்து, நின்ற குருவின் பாதத்தில் விழுந்துதொழுதார். இ[illegible]டி விழுந்து வரங்களினளவாகத் தாழ்ச்சியைக்காட்டிய பெரியவரத்தோனாகிய [illegible]சைமாமுனிகளைத் தானணிந்த பரமஞானத்தைப் பிறர்க்குரைக்கு மாட்சிமையுள்ள சீமையோன் தனதுகரங்களாற் றூக்கிப், பின்பிரியமாக முதிர்ந்தவேதத்திற்கடுத்த அநந்தநீதிமுறைகள் பலவுஞ் சொல்லி மீளவுமார்போடணைத்துச்சொல்லுவார். ஆழமாய்த்தோண்டிய கிணற்றுநீர் இறைக்கஅளவாக வூறுவதுபோல நீயடைந்த தேவஅருளின்வரங்களும் நீ நன்றியறிந்துசெய்யுந் தருமங்களினளவாக வளர்ச்சியடையும். அதற்குத் தகுதியாக நடவாமல் அந்தத்தேவவரங்களை மனதிலே புதைத் தொளித்ததுபோலிருந்தால் பச்சை மண்கலத்திலொளித்த ஜலம்போலக் கலமுங்கெட்டு ஜலமுஞ்சிந்துமாதலால் நீயடைந்த தேவவரங்களையறிந்து விருப்பமிகும்படி நடப்பாயென்றார். இடித்த இடிபோல இதைக்கேட்ட கன்னிமரியம்மாள் தன்மனம்வெடித்து வருத்தமாறாமல் கையிலடைந்த திரவியத்தைப் போக்கடித்தாற்போலவும், பெற்றபிள்ளை தாயைவிட்டுப்பிரிந்தாற்போலவுங், குணமடைந்த புண்ணைநெருப்பாற் றழாவினாற்போலவுஞ், சரீரத்திற்றுண்டித்த ஓரவயவம் பிரிந்தாற்போலவும், பேடையைப்பிரிந்த அன்றில்பக்ஷிவாடினாற்போலவு மிருந்து, அடைக்கதுன்பங்களை வாய்விட்டுமிழ்ந்ததுபோலப் புலம்பியழுது, வாடிச் சொல்லுவாள். இனியென்னைப்படிப்பித்த குருவின்பாதமுமில்லாமல், நெடுநாளாயிருந்த இத்திருக்கோயிலிலுமில்லாமல், அறநெறித்துணைவராகநின்ற இக்கன்னிகைகளுமில்லாமல், இந்நாள்வரையிலும் நடந்தமுறைகளுமில்லாமல் நான் பிரிவேனோ? என்றுரைத்தபின்பு அந்நாள்வரையிலும் அங்கே தன்னையிருத்தின தந்தையாகிய கடவுள் இந்நாளிலே போகச்சொன்னதால் இது அவர் திருவுளமென் றறிவினாற்றெளிந்து தேறி, யுயர்ந்த சிந்தையிலணிந்த அந்த மாதவனாகிய சீமையோன் பாதங்களைவணங்கி, விருப்பத்தோடும்விட்டுப்பிரியும்படி நட்புள்ள மற்றக்கன்னிகைகளைக் கட்டிக்கொண்டு, அந்தக்கன்னிகைகளுந்தானு மன்பினாற்கலந்த கண்ணீரைவிட்டு அழுதுபின்னர்தொழுதாள். இப்படி மேகமுழக்கம்போல

அழுமோசை மிகுந்தபடியால் மேகத்தின்நிறங்கொண்ட அளகபாரத்தையுடை
ய மற்றகந்நியர்கள் வனத்திற்பற்றியெரியுஞ் செந்தீயைப்போல் மனத்திலே
துன்பமடைந்து, தாங்காருள்ளிருந்த சிநேகத்துளவாகப் பலசொற்களாற் றேறு
தல்செய்யத் தாரகைமுடியாளாகிய கந்நிமரியம்மாளும், பூங்கொடியுயர்ந்திய
சூசைமாமுநிகளுங் கூட்டமா யாவரும் நெருங்கியிருக்கும் பொற்றேவாலயத்தி
ற புகுந்து, எவரையுந் தாக்கிரக்ஷிக்கும் பரமநாதனை வணங்கினார்கள். அதன்
பின்பு குற்றமொன்றுமில்லாத முநிவனாகிய சீமையோன் இவ்விருவருக்கும்
ஞானமும், நீதியுஞ் சொல்லத்தொடங்கினர். அதெப்படியென்றால், வெள்
ளத்தின்குணமானது மேகத்திலின்றுவந்து, மேருவின் சிகரமேல்விழுந்து, அதி
லின்று நீங்கும்போது வனத்தில்வளர்ந்து, அப்பாற்சென்றுயவிடத்திலு மெ
லிந்தோடிக், கடலிலேசென்று, பேருமில்லாமல் இழிவுகொள்ளுமென்றும், அது
போலாகிய பொருளினால் வாழ்க்கையுண்டாகுதலினால் அதை விரும்பாதிருப்
பதே ஞானமாமென்றும், அறத்தின்துணையன்றி மற்றத்துணை சமயமறிந் துத்
வதென்றுங், தன்னிறத்தை நம்பியவீரர் மிஞ்சியதிறத்தையுடையவர்கைவி பிற
பாரொன்றும், பாபத்தினால்வருந் தின்மையறியாமையு, மீட்சியுந் தருமெ
ன்றுங், தேவகிருபையினால் அடைந்த கடவுளின்திருப்பரதத்துணை யுயிர்க்கு
அநந்தமோக்ஷமாமென்றும், இவைமுதலியபல்நீதிமுறைகளுஞ்சொல்லிக், கிரு
பையோ டாசீர்வாதமுந்தந்தவுடன் இவையாவு மின்பமாய்க்கேட்டு, இல்லறந்
துறவறமென்னுமிரண்டுதருமங்களையுமொன்றாகச்செய்துகாட்டுங்கண்ணாடியை
ப்போன்ற கந்நிமரியம்மாளுஞ், சூசைமாமுநிகளுஞ், மனத்தாலுயர்ந்தவிருப்பங்
கொண்டு முன்னாளில் ¶ சூசைப்பவனென்பவன் தன்பாதத்தைச் சூரியனுஞ்,
சந்திரனும்விழக் கனவிற்கண்டதுபோல நின்ற சீமையோன்பாதத்தில் கடை
யுகத்தில்விழும் நக்ஷத்திரங்கள்போலும் விழுந்தார்கள். அப்பால் தயாபரக்
கடவுள் சொற்படி யினிதாய்முடித்த திருமணத்தோடு கட்டப்பட்ட இவர்க
ளிருவரும் வேறுபடாமல் இரண்டுடலிடத்தில் நினைத்தமுறைமையின்மேற் களி
கூர்ந்த ஒருயிரோவாழவென்று கூட்டமாயங்கிருந்த யாவருமருளோங்கின வி
ருப்பந்தோடு துதிகளைச்சொல்லவளவில், அந்தத்திருமணத்தின் மாக்ஷிமைமு
ழுதும் அறிவாரில்லாதிருக்க, வழித்துணையாக அணிகளைவிட்டு, ஞானவொளி
யைப்பரப்பிப்போனார்கள்.

வேதமேவடிவாகவணிந்த அவர்களைநகரத்திலகண்டயாவரும் வாருங்கள்,
வாருங்களென்பார்கள். கடந்துபோகாமல நில்லுங்கள், நில்லுங்களென்பார்
கள். அவர்களைக்கண்டதினால் நிறைந்த இன்பமடைந்தவர்கள் மற்றவர்களுங்,
காண அழைத்துவாருங்கள், வாருங்களென்பார்கள். யாவருஞ்சேர்ந்து முன்
னும்பின்னுந்தாவி, வருநெருக்கத்தைவிலகநில்லுங்கள், நில்லுங்களென்பார்கள்.
இப்படி யெங்குமுழங்கின ஓசையால் இராஜகுமாரர்களாகிய அவ்விருவர் இர
ண்டுசுடரொளிர்ந்து சாய்வதுபோல, அந்த ஜெருசலேம்நகரத்துத் தெருவெல்
லாம் நின்று,நின்று மெள்ளவேயகன்றார்கள். இப்படியாக நீங்கி,மலர்ந்தசெவ்
வாம்பலின் வாசமிதழ்விடுந்தேன்போல இனியசொல்லை யவர்கள் சொல்லிப்
போவதால் பூவிலுமினிய உயிர்போகுதென்று நின்றமனுக்களெல்லாம் வண
ங்கித் துதித்தபின்பு, சித்திரங்கள்போல வெற்றுடம்பாகித், தங்களுயிர்களை
யவர்கள்பின் செல்லவிட்டுநிற்கப், பொன்னுருளையுருட்டியதேர் போகும்வழி
யெல்லாம் பொன்னாய்விளங்குவதுபோல நான்சேர்ந்துவணங்கு மவ்விருவர்
ஆசையறுத்த அருந்தவராதையால் அவர்கள் சேர்ந்தவிடமெல்லாம் வேதத்தி
ன ஞானநன்மையைப்பரப்பி வணங்கிய வானவருஞ் சூழப்பாடிக்கொண்டுவ
நீண்டவழியெல்லாங்கடந்து,விளங்கியநமது நாசரேத்தென்னுநகரைச்சேர்

¶ மோசே முதலாகமம். 37-ம். அதிகாரம்.

ந்தார்கள். குற்றங்களுந், துன்பங்களுமொழிய நிறைந்தவின்பத்தோடு அவர்களந்நகரத்தில் வந்தவுடன் கடவுள் திருப்பாதமே யங்கெழுந்தருளினதென்று ஞானம்விளங்க அந்நகரத்தார் யாவருங் கடல்பொங்கி வருவதுபோ லோடி வந்து, பொன்னுலகவாயிலை யடர்ந்துவர வெதியாலுயர்ந்த வேதவடிவணிந்து அருந்தவனாகிய சூசைமாமுனிகள் மலர்விருந்தேந்திவந்தானென்றும், மதிமேலெழுந்த திருவடியையுடைய கன்னிமரியம்மாள் வந்தாளென்று மனமகிழ்ந்து, மேகங்களதிர்ந்து முழங்கினதுபோல வானமுமதிரும்படி புகழ்களைச் சொல்லிச் சொல்லி, முகமனுரையாலழைத்தார்கள். அப்படி யருகேவந்தயாவரு மனவில்லாதவின்பமடைந்து கூட்டமாய்நெருங்கினவிருள்கிளம்பினமண்தூசிகள் ஆகாயத்தைமூடி இருளாக்குமென்று கருதி, அந்தத்தூசிகளெழும்பாமலும், எங்குங்குளிர்ந்திருக்கவுமாக வாசனைபொழிந்த மழையைப்போல வாசமலரைச் சிந்திநிற்கும்போது. இப்படிநின்ற யாவருங் களிக்கும்படி பூவுலகம் புரந்தளிக்கு மவ்விருவர் அநந்தகிருபைமழையைச்சிந்தினார்கள், அப்பால் மாக்ஷியையுடைய கடவுளின் திருவடிகள் அந்நகரில் விளங்கும்படி வரங்கொண்ட அவ்விருவர் அங்கே புகுந்தபோது வேதமுந், தேவவருளும், நல்லதருமமுங் கூடவேபுகுந்தமையால் முகமலர்ந்து வானவருங் குடியாகவமர்ந்திருந்தார்க ளாதலால் அவ்வூரடைந்தன்மையை நலமைப்பிறிக்க கவிஞர் வருந்திச்சொல்ல வினைத்தாலுஞ் சொல்லுமுறைமையோ? இல்லை.

இப்படியெல்லாமானபின்பு மற்றயாவருங்காணவரும்படி கிரணநிறைந்த சூரியன் மேகத்துட்புகுந்ததுபோலத், கருமத்தாற்பெருமைகொண்ட அவர்கள் செல்வத்தினழகு நில்லாதென்று வெறுத்த ஓர் சிறுமனைக்குள் குடியிருக்கப் புகுந்தபோது எல்லாநன்மைகளும், அழகுள்ள வானுடையோரும் புகுந்ததல்லாமல் இனிமேல் கடவுளும் வந்துபுகும்படி யாசைசெய்யும் வீடதுவென்றா லதற்குமேல் குற்றமில்லாத நல்லநூற்களெல்லா கேட்கத்தக்க வாழ்த்துதலு முண்டோ? இல்லை. இப்படி மேகத்துள்மறைந்த சூரியனைப்போல அந்தச்சிறுமனையி லிவர்கள் குடியிருந்தாலும் எங்குமுள்ள மானுக்களு மிவர்களைக்காண ஆசையோடுவருவதால தெளிந்தவழகுள்ள இவர்கள்மேல் அவர்கள்மனமுங் கண்களும் விழுந்தன்மையானது தேனபொழிந்த மலர்விரியும்போது வண்டுகள் மொய்த்து விழுவதுபோலு மிருக்கும். அன்றியும் சந்திரனைத்தேய்த்து மங்காமல கதிர்விடுந் திருவடிகளையுடைய கன்னிமரியம்மாள் தன்னிடம்வந்தமாதர்களுக்கு ஞானவிதிகளைச்சொல்லும்போது மலர்க்கொடியேந்திய சூசைமாமுனிகளும், ஆடவர்க்கு நல்லநூல்களைவிதித் துண்மையைக் காட்டுதலினால் இனியதேனிறைந்த கடல்மடை திறந்தோடியதுபோலுமிருக்கும். இவ்வண்ணமாக இவர்களைக்கண்டவரிற் சிலர் நீதிநெறிவழுவாத கடவுள் பூவுலகமுண்டாக்கிய நாளிலே வானுலகும் விரும்பும்படிக்குக் கருணையால ஆதித்தாய் தகப்பனைச் சேர்த்துமுடித்த கலியாணத்தின் முறைமை இத்திருக்கலியாணத்துக் கிணையோ? அல்லது இத்திருமணத்துக்கதுதோற்றதோ? எனக்கூறுவார்கள். சிலர் அந்நாளில் கடவுளிவர்களழகையே நினைத்துச் செங்கதிருள்ளசூரியனையு, மதற்கிணையாகிய வெள்ளியசந்திரனையும்,என்றும் வான்மேற்றிரியும்படி படைத்தாரோ?இவர்கள்காட்டுமழகு இவ்வுலகினழகோ? வானுலகினழகோ? என்று கண்டுபிடிக்கக்கூடாதென்று மொழிவார்கள். சிலர் அரசர்க்கரசனாகிய தாவீதுமகாராஜன்செய்த அரியதவப்பயனைக்காட்ட அவன்கோத்திரத்தி லிவர்களையாண்டவன் ஜனிப்பித்தாரோ? என்று விளம்புவார்கள். சிலர் எப்பொழுது மிவர்களணியாகச்சூழ்ந்த வரிவேதத்தை யாவர்க்குங்காட்டுவதொன்பதினால் வரிவேதமொன்றுதானும், ஒன்றாகவெழுதாமல் இரண்டுகற்களி லெழுதினது நீதியென்று நல்லவேதத்தை இவர்களே காட்டுகின்றார்கள் மீளவு மிவர்கள் பெருமையை

பல்வேதமே காட்டுமென் றிப்போதறிந்தோமெனப் புகலுவார்கள்; சிலர் பொய்யினால் பிரிந்தோடிய நன்மைகளை மெய்யுணர்ந்த இவர்கள்செய்த செய்கையே கொண்டுவந்துகொடுக்குமென்று அறிந்தகடவுள் மண்ணுலகும், விண்ணுலகு மொன்றுபுறவாகுங்காலஞ் சமீபித்ததென்று, இத்திருமணத்தை நினைத்தார் என்றறைவார்கள். இவ்வண்ணமாகச் சினங்கொண்டு வண்டுகள் மொய்த்ததினால் வளைந்த மலர்ப்பொழியுந் தேனிலுமினிதாய்ச் சொன்னதினால் இருபொழுதும்போக மலர்போலு மவ்விருவருமுடித்த திருமணத்தினால் அரியபெருமை யெவர்களு மடைந்து மகிழ்ந்தார்கள். அதன்பின் வாசமலர்க்கொடியேந்திய சூசைமாமுனிவனும் பூங்கொடியைநாணச்செய்யுங் கன்னிமரியம்மாளும் அந்தச் சிறுமனையில் குடியாயிருந்து, வேதக்கொடிமேற்படரக் கொழுகொம்பாகிச், சொற்றற்கரிய துறவறமில்லறமென்னும் இரண்டறங்களையுஞ் சேர்த்திசைத்த உரியமுறைமையை இனிச்சொல்லத்தொடங்குவாம்.

திருமணப்படல - முற்றிற்று.

ஆறுவது - ஈரறம்பொருந்துபடலம்

கலவுற்றதிரையாழி சூழ்புவனந்தாங்குகின் ற
வலைவுற்றவுயிர்க்கெல்லா மாதரவாந்திருமணத் தா
ஞிலவுற்றபதத்தாரு நீர்மலர்க்கோற்பூமா ஹ
முலைவுற்றவுளத்தஞ்சி யுளைந்திரங்கிவருந்தின ரே.

முன்சொன்ன வண்ணமாகச் சந்திரனை மிதித்த பாதமுடைய கன்னிமரியம்மாளுந், குளிர்ந்த மலர்க்கொடியேந்திய பூமானாகிய சூசைமாமுனிகளுஞ் சுழலு மலைகடலாற் சூழப்பட்ட பூமியில் அலையுமுயிர்க்கெல்லாம் ஆதரவு செய்யுந் திருமணத்தினா லுள்ளத்தி லஞ்சிகொண்டு, வருந்துகின்றபொழுது தேன்பொழிந்த பூங்கொடியுயர்த்தி, யருளினும் பொறிகளையடக்கிய மாதவனாகிய சூசைமாமுனிகள் பரமநாதன் முன்தனக்குக்காட்டிய காக்ஷியினால் கதிர்த்திருமுடிசூழ்ந்த கன்னிமரியம்மாளின் சொலலரியமாக்ஷியுந், தவத்திலுயர்ச்சியும் அறிந்தமையால் அவளை யுள்ளத்தில்வணங்கிப் பின்னுந் தான் துறவாழும்படி விரும்பினாலுந் தெளிந்த கோற்றொடியாகிய தமது திருத்துணைவியின் திருவதனத்தி லெப்பொழுதும் பொழியப்பட்ட கிரணங்களைக் கண்டுபயந்து கருத்தில் நினைத்தவை யொன்றுஞ்சொல்லாதிருந்தார். அப்படியே கன்னிமரியம்மாளுந் தான்மகுடமாகத்தரித்த தாரகைகளினுந் தெளிந்த வறிவுடைத்தமையால ஆவிபட்டால தூயபளிங்குமாசுகொள்ளுமென்று தான் ஆடவரோடு பேசப்பழக்கமில்லாமையால் நிலைபெற்ற பூங்கொடியைவிருதாகக்கொண்ட தன் துணைவனோடும்பேசித் தன்னுள்ளத்தை யவருக்குக்காண்பிக்க நாணினவளாய்க் கடவுளை நோக்கிச்சொல்லுவாள் தற்பரனே! ஒப்பில்லாத்துணைவனை யெனக்குத்தந்து அவனென்கன்னிமையைக் காப்பானென்று, கடல்போலலைந்த என்னுள்ளமுறுதிபடச்செய்தாய் ஆகையால் இப்பொழுது வருந்துமென்னெஞ்சங் குளிரும்படி, பன்றுசொன்னயாவும் வெளியாகச்செய்வாயென்று திருப்பாதங்களைவணங்கினாள். அத்தருணத்தில் வானவர்க்கரசனாகிய கடவுள் மாக்ஷியுள்ள இவர் வருந்தியதன்மைக்கிரங்கித் தவிராதவல்லமையா லுள்ளத்தை யாரு மூழைகொண்டு ஒன்றுஞ்சொல்லாமல் மனத்தைத் தூண்டிப், படர்ந்த

மலர்க்கொடியேந்திய சூசைமாமுனிகள் முந்திப்பேசத்துணிவுகந்தார். அப்படியே சூசைமாமுனிகளும் வந்தவழியறியாமல் வந்ததுணிவினு லோங்கிப்பேசும் வகையறியேனுயினு மாசுதீர்ந்த என்கடவுள் எனக்குத்தந்த வாக்கினைச் சொல்லியதற்கு வேண்டியகைம்மாருகும்படி இவளைக்கேட்பேனென்று தான்முந்திப்பேசத்தொடங்கிக் கன்னிமரியம்மாளைநோக்கிச்சொல்லுவார். பூவுலகோரும், வானுலகோரும், வணக்கஞ்செய்யு மிறையவன் மெய்யானகருணையால் அடைதற்கரியதுணைவியாகப் பொய்யாத அழகணியோடொத்த வுன்னை யென் புன்மைதீரக்கொடுத்ததினல் அதற்குவிருப்பத்தோடு அடியே னாய்ந்து பார்த்தாலுஞ் செய்யுங்கைம்மாறுண்டோ? அலைகொண்ட கடலிற் குளித்தெழுந்து விளங்குஞ் சூரியனுடைய செங்கதிர் கண்ணுடியிற்பட்டவுடன் அதுவுங்கிரணத்தைவிடுவதுபோல நான்கொண்ட நன்மைக்குக் கைம்மாருக நன்ருகச்செய்யு முறைமையை நீயேசொல்வாயென்ருர். அதற்கு இனியஇசைகளும், நல்ல தேனுந், தீங்கனிகளுங், கருப்பஞ்சாறுஞ், சொலவிய இசைகளும், பேசும்கிளியுங், குயிலுமாகிய இவையெல்லா நாணும்படி இனியநற்சொல்லுடைய கன்னிமரியம்மாள நாணப்பட்டும், அவர்முந்திப்பேசினதைக்கொண்டு பேசத்துணிந்து பவளத்திருவாய்மலர்ந்து கூறுவாள் இவ்வளவு கருணைசெய்து என்னைக் காத்தகடவுளின் திருப்பாதங்களை யடையும்வழியல்லாமல் எவருக்கு மேலாக நானடைந்த நன்மைக்கு ஓர் கைம்மாருகச் செவ்வழியென்றுணர்ந்தவை சொல்லுவேனே? என்ருள். இப்படி வாசவிதழ்விரிந்த செங்கமலந் தேன்துளித்தாப்போல மீன்முடிசூழ்ந்த பிராட்டியார் திருவாய்மலர்ந்துரைத்ததைக் கேட்டுத் தேன்மலர் விருதுயர்த்திய சூசைமாமுனிகள் செவியாலின்புண்டுகளித்து, நீயே சொல்வாயென்று உத்தரவளித்தபின் மகிமைபழித்த கன்னிகை சொல்லுகின்ருள் தணிக்கப்படாத ஐம்பொறிகளின்வழியே மனமுஞ்சார்ந்து, பின்பு அணிக்கப்பட்ட தீயவிருப்பத்தைத் தருமென்று, நாளிளமைப்பருவத்திலேயே கண்டதினுல், என்கருத்திற்குமேலுங் கருணைசெய்தகடவுளைமாத்திரம் என்மனமடையும்படி, மயக்குவிக்குந் தீயஇனிமையினுசையெல்லாம் வெறுத்தேன் வெறுத்த ஆசையின்மேலு முயர்ந்து, தற்பரனுக்குப் பலியாகக் குற்றமின்றியென் கன்னிமையைக்காக்க நினைந்தேன் நீருமெனக்கிங்கே காவலனுகவிருப்பதால் அந்தக்கன்னிமையைக் காத்தருள்வீரெனச்சொல்லி யவர்பாதத்தைத்தொழுதாள். இவ்வண்ணம் வான்மீதுலாவுஞ் சூரியனை யாடையா யுடுத்த நாயகியார் சொன்னசொற்களின் கிரணவெள்ளமானது சுகந்தமலர்க்கொடியேந்திய சூசைமாமுனிகளின் செவிவழியாற்சென்று, அவரது இதயகமல அரும்பிற்படவே யிதழ்வழியாயொழுகுந் தேனைப்போல அவர்கண்ணினீரைவிட்டு, உள்ளமலர்ந்துபொங்கின அன்போடுசொல்லுவார். புண்ணையாற்று மினியமருந்துபோல நிறைந்தகருணையாளே! விண்ணும், மண்ணுங் களிக்கவிளங்குஞ் சூரியன் விடுங்கிரணமானது இருளைநீக்குமாப்போல வீணையினுமினிதாய் நீயுரைத்த சொல்லால் என்னைவருத்து மயக்கத்தைத் தீர்த்தாய் கருத்திலுயர்ந்து நலலாசையுள்ளவர்க்கே தயாபரன் மிகுந்த கிருபைசெய்வார் ஆகலால் திருவுளமுணராததில்லை நாம்செய்துகொண்ட கலியாணத்தோடு நமதிரண்டுமனமும் ஒரேயுணர்வடைய அவர் இசைத்தமுறைமையை இருண்ட என்மனத்தா லுணரக்கூடுமோ? எனக்குப் பசியமலர்க்கொடியையுந் தந்து, துன்பங்கள்தீர்ந்த பலனைச்செய்யுந் தெளிந்தஅறிவுடையவுன்னையுந் துணையாகக் கடவுள்தந்தது குற்றநிறைந்த பூவுலகில் இருள்கொண்ட நீசர்போலக்கிடந்த என்மனமலருமென்று காட்டவல்லவோ? அடைதற்கரிய கிருபைபுரியும் பரமநாதன் திருவடிகளைச்சேர விருப்பத்தோடு நான் பன்னிருவயதிலே சாகுந்தனையும், விரத்தனுகநினைத்துக் கடவுள்சாக்ஷியாகச்சொன்னேன் இந்தக்கலியாணத்தை யான்

டவன் எனினும் அந்தவிரத்தத்துவத்துக்கு இழிவாகுமென்று அஞ்சினேனுயினுங் குளிரும்படி, யென்னுயிரளிக்குநாதன் குறைவிலாதவுன்சந்நிமையால் இனிதாயென் கற்பைக்காக்கக் கலியாணமாக்கினாராகையால், ஆண்டவர்க்குச் செய்யுங் கைம்மாறேதோ? அறியேன் கைம்மாறு அறிதென்றாலும், இந்தக்கடனைக்கழிக்கச்சாகுந்தனையும் பொய்யாத அறிவடைந்து, நமதுகற்பினைமெய் தவிர்ந்த குற்றங்கொள்ளாமல் நாமிருவரும் நன்மலரைப்போல இனிதாய்க்காத்து, இருள்நீத்த இறைவன்பாதத்தை வாழ்த்தலே நல்லதென்றார். இப்படியிருவரும்பேசி யுள்ளுருகி ஆனந்தவாரியில்மூழ்கி, அன்பின்வாழ்வாகிய இல்லறத்தோடு சேர்ப்பதற்கரிய துறவறத்தையு முன்னில்லாத முறைமையோடு சேர்த்ததினால் வானவருமிதைக்கண்டு ஆச்சரியப்பட அழியாத மாட்சிமையடைந்தார்கள்.

கண்முதல ஐங்கதவாகிய ஐம்பொறிகளையடக்கி, யடைத்ததினால் பூவுலகிலுள்ளவெல்லாம் உள்ளேபுகாமல் இவர்கள்மனத்தை உயர்ந்த வானமுதல்மூன்றுலகத்தையும் ஆளும்பராபரன் தானொருவரேயிருந்து, இனிதாயாள்வதோடு ஐம்பொறியாகிய கதவுகளையடைத்தபின் அதற்கு நல்லறங்களைக் காவல்வைத்தமையால், அந்தத்தருமங்களானவை அந்தக்கதவுகளையடுத்து வந்தபொருள்களையெல்லாந்தடுத்து, வந்தபொருள் கொண்டுவந்த அறிவுகளை யுள்ளே கொண்டுவிட்டு, அதற்குமறுவிடையுந் தாமேசொல்லுவதால் உள்ளே பகையின்றியிவர்களோங்கி மானமே யாபரணமாகவும், ஞானமே நினைத்தவைசொல்லுந் தூதனாகவும், தானமே யெவருங்களிகூரத் தோழனாகவும், அறிவின்மேன்மையால் வானமே தம்பதியாகவுங் குறைவின்றிக்கொண்டு சேற்றோடுகலந்த தண்ணீரையருந்தாமல் தெளிந்த சுனையைச்சேர்ந்து நன்னீரை யருந்துவார்போல, இழிவுகொண்ட பூவுலகவாழ்வுகளைவெறுத்து மேலுலக நாதனைச்சேர்ந்து மிகவும் வாழ்வார்கள். செங்கோலைத்திருத்தியாளு மரசர்க்கெல்லாம் அரசனாகிய கடவுளருளிய ஆதிநூலென்னும் வேதத்தின திருத்தியமுறைமையை நினைந்து நிறைவேற்றுங் குணமுடைய இவர்கள் மனமானது குறைவின்றித் தற்பரமன் வீற்றிருந்தாளுஞ் சிங்காசனமாயிருக்க வருத்தும் விருப்பத்தை வெறுத்துப், பொய்ப்பொருள்களைத்தவிர்த்த வல்லமையால் அப்பொருள்களைப் படைத்தநாதனையடைந்த மாண்பினராகி, யெப்பொருள்களினு முயர்ந்தமனத்திலோங்கி புஷ்பித்தபுஷ்பங்களை யிலையிற்போட்டிறக்கின பன்னீரானது வாசனைபொழிவதுபோலக் குற்றமொன்றுமில்லையாயினுந் தங்களுடலை மிகுந்ததவந்தா லொறுத்துப் பயனைக்கொண்டு பொன்னின் குணத்தைக் காட்டும் நெருப்புப்போலவும், மணிகளுக்கொளிகொடுக்குஞ் சாணைக்கல்போலவும், வடித்தகல்லில் குறித்த உருவத்தைக்காட்டும் உளியைப்போலவும், இவர்கள் மனங்கொண்ட மாட்சிமைகாட்டுந் தவத்தைக்கொண்டிருந்தார்கள். இப்படியிருக்குங்காலத்தில் நக்ஷத்திரங்களின் பிரகாசத்தைமறைக்கு மேகம்போல ஆசையைவெறுத்துக், கடவுளையறிந்து வானுலகின்காட்சியைத்தெளிந்த ஞானமாமுநிகள் சூரியனின் கதிரையுண்ட பளிங்குபோல விளங்கி உண்ட கதிரையுமிழுங் கண்ணாடியைப்போலத் தன்னிருதயமலர்ந்த தாமரைபோலுண்ட வெங்கதிர்நிகர்த்த காட்சியைக்கொண்டு அதையுமிழும்படி கடவுளைவாழ்த்திச் சொல்லுவார்.

மேகத்தினால் மறையாமலுங், கடலினுள்ளொளியாமலு முடிவில்லாமல் விளங்கும் பரஞ்சுடரே! சுருண்டுமாறும் அலைகளில்லாமல் நிலைகொண்டசெல்வக்கடலே! போர்முகத்தில் விரியாத அரணே! பூவுலகத்தைத்தாங்கு முயர்மலையே! துன்பநோய்களையுங், குற்றங்களையுந்தீர்த்து உயிரைத்தரு மருந்தே! அறத்தின்கடலும் நீ அருளின்கடலும் நீ கருணாகரனும் நீ திறத்தின்கட

னும் நீ திருவின்கடலும் நீ உள்ளந்தெளிய ஞானத்தின்கடலும் நீ நிகரின்
றி புலமினிலேயும் நீ உயிரும் நீ நானிலைகொள்ளுங் கடலும் நீ எனக்குத்
தாயும் நீ பிதாவும் நீ மற்றனைத்தும் நீயே ஆகையால் நீயே யுயிர்களை இர
க்ஷித்து செய்யுங்காவலே யினிதாய்க்காக்குமல்லாமல் மேகத்தைக் கிழித்துயர்
ந்த ஒளிவிடுஞ்சிகரமுள்ள தேரின்கூட்டங்காக்குமோ? கண்கூசும்படி பிரகா
சிக்கும் வாள்முதலாயுதத்திரள் காக்குமோ? காற்றிற்கு முந்திச்செல்லுங்
குதிரைப்பந்திகள் காக்குமோ? பூமியைக்கிழித்தோடும் நதிபோலச்சீறி மதம்
பொழியும் யானைச் சமூகங்காக்குமோ? புண்படுத்தி வல்லமைகொண்ட வீரா
காப்பாரோ? காக்கார். நீயே வஞ்சினர்முனம்போல † ஆழ்ந்தகடலில் வழியாக்
கி, அஞ்சினயூதர்களையாம லைதைக்கடக்கத்தந்தாய். * யோர்தானென்னுநதியி
ன்று அந்யூதர்க்கு வழிசெய்யத்தக்காய். நடுக்கன் குளையிற்போட்ட மூன்று
பாலரும் தீத்திணர்கொள்பவர்போல நெருப்பிற்குளிர்ந்திருக்கத்தந்தாய். குறை
கொண்டயாவரு முன்னைநம்பினால் அவரைக்காக்கவுனக்கரியதொன்றுண்டோ?
தலையெழுந்தமலைகளும், உயர்ந்தமறவெனவையுந் தீர்க்கும்படி இடிகளைத்தரு
மேகமானது மூலைப்பாலைப்போலப்பொழியுந் துளிநீர் பள்ளத்திலேவந்து நிரம்ப
துபோல மலையெழுந்த கடல்சூழ்ந்தவுலகின் ஆங்காரிகளைத்தாழ்த்தின வுன்
காத்தால் அறிவினளவாகத் தாழ்ந்தவரை யெடுத்துத்தூக்கிக் களிக்கச்செய்
வாய். வானமேலநின்று இனிதாய்நோக்கின சூரியன் தனதுகதிராகிய கோலால்
கானகத்திற் சித்திரங்களைப்போல மலர்களையெழுதினதன்மை புனையப்படாத
வன்பினால் என்தனிமைநோக்கி முள்ளால்நிறைந்த கானகம்போலிருந்த என
மனந்தேன்பொழிந்து மலர்ந்தபூந்தோட்டம் நிகராகத் திருந்தச்செய்த தயைக்
களவுளதோ? நீ கோபித்தால தீமுன் வைக்கோலைப்போல வெந்தழியாத அ
ன்றோ? தயைசெய்தால் விருப்பத்தினு மேற்கொடுப்பாய், இருள்நீங்கிய கா
க்ஷியோடு யாவுமாராய்ந்தால மறைவும் உள்ளமுங்கடந்தறியாததில்லை. நீயவத
ரித்து மனிதனாய்வந்தால் அப்பொழுது என்னுயிரின்பக்கலில் மூழ்கச்செய
வாய். காற்றையிறகாகக்கொண்டு பொங்கிய கடலைக்கிழிக், கப்பல்சென்ற வழி
யும், அழகிய சிறகைக்கொண்டு ஆகாயத்தைக்கீறி, பன்னறுசென்ற வழியும்,
ஆசையை யிறதாகக்கொண்டு நினைவுசென்றவழியும் ஆராய்ந்தறிந்தாலும், நீயு
ன்கிருபையை யிறகாகக்கொண்டு மனிதனாகவரும் வழியைக் கண்டடையக்கூ
டுமோ? உலர்ந்தமரத்திற் குயிராகப்பெய்த மழைபோலவும், பூவுலகிருளை
நீக்கச் செங்கதிர்பரப்புஞ் சூரியன்போலவும், ஓயாதுபயந்தரும் பழம்பழு
கொண்ட புசாகட் கோர் சிங்கம்போலவும், உன்னைவணங்கிய நல்லவர்க்குத்
தயைசெய்ய ஒருதாய்போலவும், நீவருவாய். என்றிப்படியாக இவையுமின்
னும் பலவும்நிறைந்த வின்பத்தோடு கருமேகம்பெய்ததுளியாற் பெருகி மலை
களைச்சூழ்ந்தும் நதிநீரனது கரைபுரண்டு தேன்பொழிந்தசோலைகளிலும், வய
ல்களிலும் ஓடியதுபோல அறிவோங்கிய தியானத்திலுணர்ந்ததெல்லாங்கருதி,
வானவர்வணங்கிய தவச்சிரேஷ்ட சூசைமாமுனிகள்சொல்லுவார் அதன்பின்
னொருநாள் இரண்டுகுயில்களானவை நிரம்பத்தேனுண்ட இன்பத்தினால் ஆதை
க்கக்கூதல்போலவுஞ், சூரியனைமறைக்கு மோர் கொம்பிலிருந்து இனிதாய்ப்
பாடியதுபோலவும், பரிமளமலர்க்கொடியோடு மெய்வேதமுமணிந்த காவல
னாகிய சூசைமாமுனிகளும், உயிரெல்லாம் விளக்கும் நக்ஷத்திர முடியாளாகிய,
கன்னிமரியம்மாளுந் தமக்குள்ஞானமுறைகள்பேசினதைச் சொல்வதரிதாகும்.

முதலில் பூங்கொடியுயர்த்த சூசைமாமுனிகள்சொல்லுவார் கடல்சூழ்ந்த பூவு
லகெங்கும்பார்த்தாலும் பொருள்களெனவையும்படைத்து, அப்பொருள்களுள்

† மோசே இரண்டாமாகமம். 14-ம். அதிகாரம். * யோசுவா 3-ம் அதிகாரம்.

குன்றாமல்நிறைந்து, அவைமயங்கிமாறினுந் தான்வயிரமலைபோல மாறாமல் நிலை
கொண்ட பராபரன்செய்யுங் கருணையடைந்தவர்க்கல்லாமல் ஆசையுண்டவுயிர்
களுக்கு நிலையுண்டோவென்றார். அதற்குக் காரணையை முடித்த கந்திமரி
யம்மாள்சொல்லுவாள்: இவ்வுலகில் கடவுளினிலையடையாதவர்கள் தேரின்
மேலாடிய பெருங்கொடிபோலவு, மலையினின்றிழிந்த அருவியினலைபோல
வும், நீரின்மேற்படர்ந்த பாசிபோலவும், நீரின்மேலோடிய குமிழிபோலவும்,
பூமாலைமேல்விழுந்த பனித்துளிபோலவுந், செல்லும்வழியில் நுண்மணலின்
மேலெழுதிய நினைவுபோலவும், ஆவாரென்றாள். மீளவும் ஐம்பொறிகளையட
க்கிய ஞானசமாமுனிகள் சொல்லுவார்: அவையெல்லாம் நிலைகொண்டாலும்
அவற்றால் உயிர்க்குநிலைக்கும் பயனுண்டோ? அலைகொண்ட கடல்போல
ஆசைக்குமயங்கு மனமானது நிலைகொண்டு, உலையிலெரித்ததுபோல ஆசை
யைத்தருந் துன்பத்தைநீக்கிக் குளிரும்படி, கறைவரும் இங்கேயொரு நன்மை
யேனுங் கண்டாரோ? என்றார். அதற்குப்பிறையைமிதித்துத் தேய்த்தொளி
கொண்ட திருப்பாதங்களையுடைய பரமதாயார் சொல்லுவாள்: இவ்வுலகின்
வாழ்வெல்லாங் கனவிலே கைக்கொண்ட திரவியம்போலு, மேகத்தினின்றசை
ந்துபாய்ந்த மின்னலைப்போலுங், கொடுந்தீமூள்வைத்த வைக்கோலபோலும்,
நிறையக்கடலிற்பெய்தமழைபோலும், ஊமைநினைத்த தூதுபோலும், இரவில்
நடகர்கொண்ட வேஷம்போலும் ஆகுமென்றாள். பின்னும் வேதவடிவுடை
ய ஞானசமாமுனிகள்சொல்லுவார்: நிந்தையான இவ்வாழ்வடையுமுன்னம் நி
னைந்தஆசையேசுடும் நெஞ்சநிறைந்து வாழுமென்றதை யடைந்தால நெஞ்சு
வருந்த அதன்மேல்வெறுப்பாகும் என்பிதா இரங்கி நல்லதாய்போலச் செய்
யுங்கருணையொன்றே சம்பூரணமாய் ஆசைநிரம்பி இன்பங்கொடுக்குமென்றார்.
அதற்கு வழுவாத வேதமொழியையுடைய திருத்தாயார்சொல்லுவாள்: என்
பிதாசெய்யுங்கருணைக்குக் கனியுங், கரும்புங், கரும்பினிழிந்த பாகும், நல்லதே
னும், பிரியமாய்க்கூட்டியவின்பமும், உயிர்தருமருந்தும், தேவஅமிர்தமுங் கூடி
யொவ்வாமல இங்கேவேறுவமையுண்டோ? என்றாள். மறுபடியும் பகைத்த
பசாசுக்கள் நடுங்கச்செய்யுங் குணமுடைய ஞானசமாமுனிகள் சொல்லுவார்:
தேவகிருபையல்லாம லிங்கேதேடுதற்குரிய பயனுண்டோ? நயங்காட்டு மற்ற
யாவும் விரும்பிய விருப்பமே துன்பந்தந்து, பாவமாகவுதவினால் அதன்மேலும்
பகையுண்டோ? என்றார். அதற்கு வானுலக இன்பந்தருங் குணமுள்ள கந்தி
மரியம்மாள் சொல்லுவாள்: இவ்வுலகவின்பத்தை விரும்புமாசையானது கக்கி
யுயிரைக்கொல்லும் விஷப்பாம்புபோலும், நயங்காட்டிக் குடிகெடுக்குங் கொ
டுங்கோலரசனைப்போலும், பறவையைப்பிடிக்க அதன்முன்போட்ட இரையை
ப்போலும், பாலோடுகலந்த நஞ்சுபோலும், யாவற்றையுமழிக்குஞ் செந்தீயை
நல்லொளியென் றெரிப்பதுபோலும் ஆகுமென்றாள். மேலுந் தவக்கடலின்
கரையைக்கண்ட ஞானசமாமுனிகள் சொல்லுவார்: பாவத்தைநீக்கித், துன்பம
ற்று உயிரைக்காத்து, நன்மைபுரிந்து இன்பங்கொண்டுவருந் துணையேதென்றா
ல் துன்பத்தைச்செய்யும் நானென்பதும், எனது என்பதுமாகிய இருவினைபற்
றுக்கலையறுத்த, தவமே உயிருக்கு நற்றுணையாம் என்றார். அதற்குக் கரை
காணாக் கருணைசமுத்திரமாகிய உலகமாதா சொல்லுவாள்: எவருமஞ்சும்படி
புருவங்காட்டி, நிறைந்த இன்பம்பயக்குந் தவமானது முள்ளுடையதாயுள்ள
தாமரைபோலும், புறத்திலமுள்ளும், உள்ளேயினியசுளையுங்கொண்ட பலாக்
கனிபோலும், இடியோடுமுழங்கி பஞ்சச்செய்து, பூமியெல்லாங்களிக்க மழை
பெய்யு மேகம்போலும், எதிர்த்தபகைவர்க்கு வைத்த அரண்போலு மிருக்
கும் என்றாள். இன்னும் விளங்கிய சாரத்தின்கண்ணாடியையொத்த ஞானசமாமு
னிகள்சொல்லுவார் என்பிதாவின்திருப்பாதத்தையடையமெய்த்த நறவெழி

யென்றால் இருளும், பொய்யுங்கொண்ட யாவும்போகுது மக்கத்துறவினைக் குறையென்பார்களோ ? பாவத்தைத்தீர்த்தகடவுள் தலையணைக்கொடுக்குந் துறவும், நீயே யின்பக்கடலின் மெய்யும், நீயே உயிருந்நீயே என்றார். அதற்குப் பரம கதியைக்காட்டுங் கண்ணாடியாகிய பரமநாயகிசொல்லுவாள்: என்னாண்டவனே! துறவினைக் கொடியவினை யென்பார்களோ ? சொல்லார் ஆகையால் எனக்குத் தாயும், நீ தந்தையும் நீ என்னுளைசகுறித்த குறியும் நீ நியஆசையெல்லாந் தீர்க்குமாசையும்நீ செல்வமும் நீ என்னுயிரினிதாய் முழுகுங் கடலும்நீ யானாய் உன்னையேதாம லணுகியடையும்படி செய்வாயென்றாள். இப்படி இவ் விருவரும் பேசிக்கொண்டு இன்பக்கடலில்மூழ்கி, ஆச்சரியத்தோடு சூழவந்த வானவருங்களிகூர வாசத்தேன்மலர் மழையைப்பொழிந்து, எவரும்வாழ்த்து தல்சொல்ல வானுடையோர்போல வாழ்ந்திருந்தார்கள்.

இவர்கள்கொண்ட துறவினால் உடலில்லாதவுயிர்போலத்தோன்றி, வாசத் தேன்மல்மலர்ந்த புஷ்பத்தைப்போல இல்லறத்தில் எல்லாரையும் நேசிக்கும் அன்பின்உறவால் உலகிலுள்ள உயிரெல்லாந் தமக்குடலாகக் கொண்டிருந்துங், கீழுறுப்பென்று, மேலுறுப்பென்றும்பாராமல் உறுப்பெல்லாம் நிறையுமாமுழுயிர் உடலிடத்துலாவினதுபோல இன்னவர்தாழ்ந்தவரென்றும், அன்னவருயர்ந்தவரென்றும் பாராமல் யாவரையும் விசாரித்து நினைத்தற்கரிய நன்மைகளைச்செய்தும், மெல்லிய இதழ்கள்நோகத் தன்னைமிகுதியுங்குடைந்த வண்டுகளுக்குச் செந்தாமரையானது ஒழுகுந்தேனினால் நல்விருந்துசெய்தல்போலவும், வேகும் ஆலையிடத்தில் கரும்பினைமுறுக்கின அளவாகத்தந்தபாகு இடமெல்லாமோடி நிறைந்ததுபோலவும், இவர்கள் நல்லதாய்மாரினன்பும், பெருமையுங்கொண்டவர்களாய் தம்மைச்சுடும்படிசொல்லுவார்க்கும், வருத்தஞ்செய்வார்க்கும் நீதியுள்ளமனத்திலெழுந்த அன்பினால் நன்மைசெய்தும், வருந்தினோர் முகத்தில் துன்பங்களைக்கண்டால் இவர்கள் வருந்தினோர் முகமாக அவர்களையழைத்துத், தேனையூட்டினதுபோல தாங்கள்சொல்லுஞ் சொல்லின்பத்தைச் செவியிலூட்ட உண்டயாவரும் முகத்திற்கிளம்பு மின்பக்கடலில் மூழ்கிப்போகவும், பொன்மலையிலிருக்குங் கரியகாக்கையும் பொன்னிறமாய் விளங்குவதுபோல இவர்கள்சொல்லும் நன்னூலின்பயனினால் இவர்களைச் சேர்ந்துகேட்டவர்கள் முன்னிருந்த குற்றங்களைத்தீர்ந்தொழிந்து, வேறாகவும், பின்பு தூயமாட்சிமையுடைய இவர்கள் தாழ்தலில்லாமல் இறந்துபோன தங்கள்தந்தைமார் குவித்துவைத்த திரவியமெல்லாம் பாரமென்றுணர்ந்து யாவற்றையும்பகுத்து, தேவாலயத்துக்கொருபங்கும், அன்புள்ள உயிராகப்பேணிய இரவலர்க் கொருபங்குமாகப் பங்கிட்டுப், பொருள்களெல்லாந் துன்பஞ்செய்யுமென்று கொடுத்தபின்பு தாங்கள்கொண்ட அன்பு தங்களுள்ளத்தைத் தூண்டியதால் நமக்குள அம்மையுந்தந்தை வினிதாகுமென்றதுபோலப் பிறர்க்களிக்கும்படி தாங்களுழைத்து உயிர்க்கெல்லாம் உணவாக்கியபின் உணவாகுமழைபோலஇருந்தும், இருண்டமேகத்துளியிடத்துயாசித்துப், பிறருயிர்க்கெல்லாமுதவுகின்ற வாசமலர்க்குளம்போலச் சிறுமையுடையோர்கொண்ட துன்பங்களைத்தீர்த்துத்தாமிரந்தும், பிறர்க்குக் கொடுத்து,வந்தபலவறுமையோர்களை வறுமைதீர்த்த செல்வமுடையோராக்கியுந், தாய்போல அன்புகொண்டு தரித்திரர்க்குத்தாமெல்லாமாகித் தீபோலவந்த துன்பங்களைநீக்கிப்பிறருள்ளங்குளிர்பட அகன்றமேகமுமுயிர்களைக்கெடுக்கப் பேயண்டினுள் ஆதைவென்று, ஆகற்றப்போரணிபோலிருந்துந், நோய்கொண்டொருவனடைந்தபோதுஉயிர்தருமருந்துபோலிருந்தும் விளங்கியுகன்றிப், பொய்போலப்படர்ந்துகுடைக்கபுண்ணுடையவுடலைக்கண்டு மெய்போலவேயிட்டமுற்றிய செந்நசையுடைய இவர்கள் ஒருநாள் விளைந்து தம்முள் இரங்கியதன்மையால் அந்தப் புண்ணானது

சூரியனைக்கண்ட இருள்போலமறையவும், ஆண்டவன்கட்டளையானதும், அதை மீறிச்சென்ற * யோனா சென்றவனைப் பாய்ந்துண்ட திமிங்கலமீன் அவனையுமிழ்ந்ததுபோலப் பின்னையொருநாள் தயையுள்ள கருங்குவளைக் கண்ணுடைய இவர்கள் அன்போடுபார்த்ததினால் அங்குஒருயிரையுண்டசாவானது அதனைக் கக்கச்செத்தவனுயிரோடெழுந்திருக்கவும் † சோதோமநகரத்தில் பாவத்தால் பற்றிய நெருப்பெரியும்போது வானவர் லோத்தென்றவனைக் கையைப்பற்றியிழுத்துஅப்பால் அகற்றினதுபோல இவர்கள்சொல்லு மினியஉரைகளால் யாவரும் மனத்திற்கொளுத்தின காமத்தீயையவித்து, மனக்குளிர்வுமானதன்றி அன்பின்காணியாகிய இவர்கள்தயைமிகுந்த இல்லறங்கொடுக்கும் இன்பத்திறனையால் எவர்க்கும் உயிரைப்பார்க்கிலும் நல்லகாவலாகிப், பூவுலகில் முன்னும் பின்னும் உவமையில்லாத முறையோடுஅளவில்லாமற் குற்றங்களற நன்மையெல்லாந் தந்து, நீண்ட கரியமலையெல்லாங் குளிரும்படி சீலமே சூலாகக் கொண்ட மேகமழைபொழிந்ததுபோல நஞ்சுண்டபூமியெல்லாம் நன்மையைப்படைத்த தயையின் வடிவுள்ள குணத்தோராகி கருணையை நிறையச்செய்தும், மனத்தில் பெருமைகொண்டு மனுஷ்யாவமுந், தேவபாவமும் உடனிடத்தொன்றுபடக் கடவுள் தன்வல்லமைகொண்டு சேர்த்ததுபோல இவர்களுங் கானகத்தில்வாழுந் துறவினைக்கொண்டு வானுலகில் உறவுள்ள இல்லறத்தையும் இவ்வண்ணமினிதாய் முடித்துவாழ்ந்தார்கள்.

ஈரறம்பொருத்துபடல முற்றிற்று.

ஏழாவது - ஐயந்தோற்றுபடலம்

மாசறுதுறவோரன்ன வடதிசையுள்ளிவெய்யோ ன்
காசறுமேடமுற்றுக் களித்தபங்குனிநாள்கன் னி
யாசறுகடவுளெய்தி யவதரித்துடலம்போர்த் த
வேசறுகாதைபாட வினையவனடிமேற்கொள்வா ம்.

மாசற்றதுறவினர்நினைவுபோலச்சூரியன்வடக்கேபோம்படி நினைத்துக், குற்றமற்ற மேஷஇராசியையடைந்த இனியபங்குனிநாளில் குற்றங்களைநீக்குங் கடவுள் கன்னிமரியம்மாளிடத்தில் வந்தவதரித்துத்திருச்சரீரத்தையடைந்த தேவகதையைப்பாடுதற்கு அவருடைய இரண்டுசெங்கமலப்பாதங்களைத் தலைமேலே கொள்ளுவாம். அதெப்படியென்றால்:— குளிர்ந்தகொழுகொம்பினின்றுபடரும் வல்லிக்கொடிபோலத் தெளிந்ததேன்மலர் விருந்தடைந்த நல்லதுணைவனாகிய சூசைமாமுனிகளுந், தாரகைவிளங்குந் திருச்சென்னியையுடைய பூங்கொடியாகிய கன்னித்தாயு முன்சொன்னவண்ணமாக அளவின்றி, ஈரறம்புனைந்து வாழும்நாளில் நினைத்தற்கரியகருணையுள்ள ஆதிலக்ஷணக்கடவுள் ஒழிவில்லாத பசாசுக்களைவென்று, பூவுலகோரையிரக்ஷிக்க மதிக்கப்படாத கன்னிமரியம்மாள் திருவுதரத்தில் அரியமுறையோடுதிருமகனாகும்படி நினைத்துத், திருமணமுடிந்து ஏழுமாதமுடியுமுன்னே மீன்முடிசூழ்ந்த அந்தத்திருத்தாயார் உள்ளிணங்கிச் சம்மதிக்கும்படியாக பங்குனிமாதம் இருபத்தைந்தாந்தேதியில் தாமரைமலரிதழ்களைக்குவிக்கும் நேரமாகிய சாயங்காலத்திலே கபிரியேலென்னும் வானவனை சீக்கிரமா யந்தஅம்மனிடத்தில் தூதாகஅனுப்பிவைத்தார். அப்படித்தூதாகவந்த வலியோனாகிய வானவன் கிரணத்தைப்பரப்பு முருவத்தைக்காட்

---

* யோனாஸ், 2-ம். அதிகாரம். † மோசே முதலாகமம், 19-ம். அதிகாரம்.

டிப், பாவஇருளை நீக்கிய சந்நிமரியம்மாளிடத்தில் வினாவாகச் சென்று குளிர்ந்த சந்திரன் தாங்கிய அந்தத்திருத்தாயாருடைய பாதாம்புஜத்தை வணங்கியெழுந்து மலரினிழிக்குந்தேனும் இணையாகாத சொற்கொண்டு சொல்லுவார்: மெய்கொண்டியரப் பூரணதேவவரங்களாற் பிரியசெல்வியே! ஐயமின்றிப் பரமநாதனை அடைந்துவாழும் கொழுநனையுடையவளே! வையகத்திற் பெருமையுள்ள மாதாகளுக்குள்ளே எண்ணப்படாத பாக்கியமடைந்து, தூய்யமனத்திலுயர்ந்த சுந்தரியே! வாழியென்றார். இதைக்கேட்ட சந்நிமரியம்மாள் உச்சியிலுள்ள கனிகளின் பாரத்தினளவாகக் கொம்புகள்வளைவதுபோலத், தான்கொண்ட நன்மைக்கு அளவாகத் தாழ்ச்சியுடைய வரங்களால் நிகரில்லாதிருந்தமையால், தனக்கு அளவில்லாத புகழ்களைச்சொன்ன முறைமையை நினைத்து அளவாக நொந்துநாணி, எழுதியசித்திரம்போல இமையாமல் இருந்து, பின்பு கலங்கினுலுந் தெளிந்தகடல் சேறுகாததுபோல உள்ளமசைந்தாலு மயக்கமின்றி யோங்கிச், சொல்லுவாள்: என்னையுண்டவனே! தெளிவாக உன்கட்டளையின்முறைமைகாட்டுவாயென்று விளங்கிய அறிவி னிதை நினைந்துக் கடவுளைத்தொழுதாள். அப்பொழுது அடுத்தபொருளைக் கண்ணாடியிற்காண்பதுபோல இந்த நாயகிமனதைக் கடுத்தவுணர்வையெல்லாந் திருமுகத்திலே கண்டறிந்த கபிரியேலென்னும் வானவன் உறுதிகளைச்சொல்லுவார்: உன்னை யடுத்துவிளங்கிய கடவுளுக்கு அன்புமிக்க பிரியமுடையவளாகி மாசிமையாலுயர்ந்த கன்மாதே! மனமயங்க நீவருந்துவானேன்? சந்திரனிலும் விளங்கிய சங்குகொண்ட கலலகுலைப்பழித்துப், பூவுலகிலுள்ள பொதுமுறைநீங்கியவழியால் திருக்கர்ப்பமடைந்து, பொன்னொளியினும் விளங்கிய ஓர்திருக் குழந்தையை நீயேபெற்று அவருக்கு யேசு என்னுந் துதியெலாங்கடந்த நாமமிடுவாய் அன்பின்வழியாய் நீபெறுந் திருப்பாலகன்கடவுளின் மகனுமாகிப், பூவுலகிலுந் தாவீதரசனுடைய செங்கோலடைந்து எப்பொழுதும் பூமிக்காவலனாக ஆளுவாரென்று குளிர்ந்த சொல்லாற்சொல்லி யந்நாயகியின் திருப்பாதங்களை வணங்கினார். வணங்கிய வானவனை நோக்கி எம்பிராட்டியார் சொல்லுவாள்: இனிதாய்க் கடவுள்திருப்பாதத்தை வணங்கிவாழுந் திருவல்லோனே! குறையின்றியழியாத கன்னிகை பிள்ளையைப்பெறுவ தெதென்று சந்தேகத்தோடு கேட்கவே, கதிர்வீசிவந்த தூதனாகிய கபிரியேல் அந்நாயகியின் திருப்பாதங்களைவணங்கி மறுமொழிசொல்லுவார்: மேகங்கிரியும் உலகினையும், அங்குள்ள பலகடாகங்களையுங், கடல்சூழ்ந்த உலகினையு, மற்றயாவையும் ஒருகாரணமுமில்லாமல் செய்யவல்லவனாகிய கடவுள் சிருஷ்டித்தபின், அதன்மேல பிள்ளைபெற்றாலும் அழகிய உன்திருக்கன்னிமை யழியாமல காத்தல் அரிதென்பாயோ? புதல்வனைப்பெறுதற்கான வயதுங்கடந்துபோய் † மலடியாகிய எலிசபேத்தும் பெருமையுள்ள கர்ப்பங்கொண்டு, இப்பொழுது ஆறுமாதமானதால் விளங்குங் கன்னிகையாகிய நீ யழிவின்றிப் பிள்ளைபெறுதல் விரோதமென்று தோன்றினாலும், ஆண்டவனுக் கெளியதாகும், வருங்காரியங்களையறிந்து வருங்காலங்கடந்த காட்சியுடைய அருந்தவனாகிய ¶ இசையாஸ் என்பவன் துன்பமில்லாமல் கன்னிகை யொருமகனைப் பெறுவாளென்று, வானநாயகன் சொன்ன வசனமாக உரைத்தது பொய்யாகாது என்றறிவாய் பின்னும் நானொருமறுபடியும் உனக்குச சொல்லவேண்டும், மேவியசிய இஸ்பிரீத்துசாந்து உனக்கு நிழல்செய்ய, அலர்குளிர்க்கருடையின்கிழ நீதிருக்கர்ப்பங்கொண்டு தாயுமாகிப், பிதாச்சுதன் இஸ்பிரீத்து சாந்துவென்னும் ஒரேகடவுளாயுள்ள மூன்றாட்களில் இரண்டாமாளாகிய சுதனைத் திருமகனாகப்பெற்றாலுந் தூயவுனக்கன்னிமை அழிவின்றிச், சூரியனிலு மிகுதியாய்

† லூக்கா 1-ம். அதிகாரம். ¶ இசையாஸ் 7-ம். அதிகாரம்.

விளங்கும்படி யவர்காப்பாரென்று சொல்லி,மீளவுந் திருப்பாதங்களை யிறைஞ்சினார். இப்படித்தேறுதலைசெய்த தூதன் சொன்னயாவுங்கேட்டுப், புகழெல்லாங் கடந்த கன்னிமரியம்மாள் தான் மறுமொழி யொன்றுஞ்சொல்லாமல் விருப்பத்தோடு தற்பரன் திருவடிகளை வணங்கி, அன்றையதினங்கேட்ட புதுமையை யாராய்ந்து, அந்த இரவெல்லாந் தியானத்திற்போக்கித், தேவவருள்மிகுந்து வந்த அந்தச் செல்வத்தினருமையுந் தன்னெளிமையும் உணர்ந்து, தாழ்ச்சியினால் அஞ்சிக்கூசி, மறுத்துவெறுக்கவும், இணங்கிச்சம்மதிக்கவுந் தேறாமல் நக்ஷத்திரத்தினுந் தெளிந்த திருமுகத்தில் கதிர்வீசியிருந்ததலால் பாவங்கொண்ட இவ்வுலகிற்கு ஒருவிளக்குப்போல நின்று தியானிக்கும்போது இளம்பிறையையொத்த ஒப்பற்ற இந்தக்கன்னிகையின் திருவாய்மொழியால உலகமெல்லாம் வாழுமென்றறிந்த கடவுளு மற்ற வானவரும்வந்து இந்த நாயகியின் திருவாய்மொழியைக்கேட்க விருப்பத்தோடு நிற்கவும், கடல்சூழ்ந்த பூமண்டலத்திலாகிய இந்தப் புதுமையைக் காணும் ஆசையினால் விரைவாகச் சூரியன் கடலைவிட்டெழுந்துவரத் தன்னுடைய தேரிற்கட்டிய குதிரைகளைக்கோபித்துத் தூண்டினவுடனே கடலிலமிழ்ந்திய அந்தக்குதிரைகள் சினந்து, தீப்பொறிகளை விட்டதுபோலக் கீழ்த்திசை சிவக்கவுஞ், சூரியனுதயத்திலே கடவுளின்பங் கொள்ளவும், வானவர் அதிசயப்படவும், நாமெல்லாரும் நிலைபெறவாழ்வையடையவும், வந்த கபிரியேலைநோக்கித் தன்திருச்சென்னியைத் தாழ்த்திக் கன்னிமரியம்மாள் சொல்லுவாள்: கடவுளினடிமையாகிய என்னில் இதோ நீ சொன்னபடி யெனக்காகக்கடவதென்று சொன்னபோது நெஞ்சிற்கடுத்த அன்பின் மிகுதியால் திரு இருதயம் பொங்கிக்கொப்பளித்த திரு இரத்தத்துளி மூன்றும ஒன்றாய்ச்சேர்ந்து மெல்லிய ஓர் திருச்சரீரமாக அந்நேரமே படைத்த ஓர்நல்ல ஆத்துமமும், அந்தத் திருச்சரீரத்தில் புகவிட்டுச்சென்றபோது மூவுலகும் படைத்து, ஐயாயிரத்தொருநூற்றுத் தொன்னூற்றொன்பதாம் வருஷத்தில் மனுஷத்துவமும், தேவத்துவமுங்கூடப் பொருந்தக்கட்டி, அந்த இரண்டுதுவமும், ஒன்றானதினால் ஆண்டவருடைய திருக்குமாரன் மனுமகனுமாகி வானுலகிலுயர்ந்த மாட்சிமையுடைய கன்னித்தாய் கிரணத்தைப் பரப்பிநிற்கச், சூரியன் பரப்புந் தன்னொளியால் இருளைநீக்குமுன்னம் ஆண்டவனே பாவஞ்செய்த ஆதன்கொண்டுவிட்ட பாவத்தையொழித்து நம்மையினித்துக்காக்க, அந்தஆதனையுண்டாக்கினநாளுஞ் சமயமுமாகிய வெள்ளிக்கிழமையுதயத்திலே நம்மைப்போல அவதரித்தார். அதனால் முன்னோர் வேதமாகச்சொன்ன யாவுங் குறைவில்லாமல் நிறைவேற்றினதாயிருக்க அப்பொழுது பளிங்கினைச்செய்து அலங்கரித்த செப்புக்குள்ளே அடைத்த சூரியன்சுடர் கதிர்களை வீசிவிளக்குவதுபோலவும், மலராதபூவரும்புகள் வாசனைபொழிவதுபோலவும் அழியாத அந்தக் கன்னித்தாய் தாழ்ந்தகடலினு மிகுந்தஇன்பத்தில் மூழ்கினவளாய்க் கனிகூர்ந்திருக்கத் திருமுகமெங்கும் வாசமும், ஒளியும் பொழியவும், வீணையைப்பழித்து, அகனிலுமின்பமாய வானவர்பாடவுஞ், சூரியகிரணத்திலு மதிகமாய் அந்தத்திருமனை யெங்கும்விளங்கவும், மேகம்பொழியு மழையினும் நிறைந்த நன்மையாவும் எங்குஞ் சொரியவுமாகத்தனக்குத் திருமகனுக்கந்த கடவுளைவணங்கித், திருத்தாயாராகிய அடியாககன்னிகை தன்னுயிரினுமின்பமாய நிறையும்படி அளவின்றிப்பெய்த தூயமழையைப்பார்க்கிலுந், தான் மிகுந்த வரங்களையடைந்த முறைமையைக்கண்டு வானவரும் அதிசயத்தினால் வாய்புதைத்து அஞ்சிச்சூழ்ந்து, திருத்தாயையுங் கேடுகொண்ட நம்முயிர்கள் வாழும்படி திருவுளமால இங்கேமனுவாய்வந்து கருணைநிறையக்கொண்ட திருமகனையும்வாழ்த்தி யாசைமிகுந்து உயர்ந்தவான்வீட்டினும் அரியஇன்பங்கொண்டோங்கி யினிதாய்ப்பாடத் தொடங்கிச்சொல்லுவார்.

வானுலகில் வாழ்ந்திருக்கும் நாம் அடைந்த நன்மையிலுங், கடல்சூழ்ந்த பூவுலகிலுள்ள இந்தத்திருப்பெண்ணானவளடைந்த தேவவருளினாலே சூல்கொண்டபடியால் கிரணங்களைவிட்டிலங்கும் வானுலகத்தைப்பார்க்கிலுந் தாழ்ந்த இப்பூமியே உயர்ந்தபெருமை பெறும்படியாகிய மாக்ஷிமை யொருநாளும் வாடாதென்பார். மாறாமலுங், குறையாமலும், பரிமளம்பொழியும் பூங்கொடியாகிய இந்தத்திருக்கன்னிகை அழிவில்லாமல் தேனிறைந்த அரும்பினைச் சூலாகக் கொண்டபடியால், இனிப்பூமண்டலம் பாவத்தினாலடைந்த நோயைத்தீர்க்கு மருந்தாக வாசனை யெங்கும்பரப்பிய ஓர் கனியைத்தர நாள்கிட்டிற்றென்பார். பூமண்டலங்களிகூரும் நாளிதுவே, நெஞ்சத்தில் ஆசைவருத்துவிக்கு மிருளொழியச் சுடரிதுவே, தீமையைவிளைவிக்கும் பசாசுக்கள் செய்யுந்துன்பங்களை வேரோடறுக்க வாளிதுவே, பிழையுற்றநீசமனுக்குலம் நிறைவாகக்கொண்ட கேடகலவும், வான்வீடடைந்த நாமுதலா யதிசயிக்கவும், உண்டாகிய திருச்சூலிதுதானேயென்பார். ஆதனையோர் நோகக்கொண்ட துன்பங்களை யறுத்தழிக்குங்காலமாக அச்சத்தைத்தரும் வேலாயுதத்தையுடைய கடவுள் திருக்குழந்தையா யவதரித்தமையால் அவதரித்தநாதனை கற்றநூலின் முறைப்படி நிகராகத்துதிப்பவரெவரென்பார். ஆயினுங்கூடியவளவில அவனைத்துதிப்பவர் தாங்கள்கொண்ட பாவத்தைத்துடைத்த நன்மையால் விதித்தவேதத்தின் முறையால் துன்பந்தீர்ந்த ஞானங்கொண்டு பரமகதியின் முடியாஇன்பத்தையடைந்து, மோக்ஷத்தில் குடியாய்வாழும்படி யவரொடுத்தமுறையை விளக்கலரிதென்பார். உள்ளங்கலங்கப்போர்புரிந்து அழிவைத்தரும பசாசுக்கூட்டங்கள் மலைகளதிரும்படி விழுந்தஇடியைப்போல நிறைந்ததீயுலகமாகிய நரகமுங்கலங்கும்படி இன்றையதினமே அஞ்சிமயங்கி ஒருகணத்துக்குள் விழுந்து முகமுங்கலங்கவும், மக்கள்கொண்ட துன்பங்களொழியவும், தீயோர் கெடவும், நன்னெறியிலவழுவிச் செய்தபாபத்தை நீக்கவும் விளக்கமாகப் பூமியிலெழுந்த சூரியனீயே! வானுலகநாதனையிருந்துஞ் சிறியவோர்திருமனுமகனெனப் என்பார். பூமண்டலத்தின் மாசெல்லாம் வாரிக்கொண்டுமாறும் ஒளிவிடுந் திருமுகத்தினால் கண்கூசும்படி யுமிழும்ஞானகாந்தியினால் வானநக்ஷத்திரங்களும் நாண விளங்கித்தோன்றிய திருக்கர்ப்பமே எட்டுத்திக்கிலும் அளவின்றி நன்மையைத்தருமென்பார். அளவில்லாமல் நீசர் இங்கேதேடிய செல்வமெல்லாஞ் சேறில்லாத வயலிடத்துப் பேதையர் விதைத்த செந்நெலைப்போலப், பயனின்றியழியும் வானுலகநாதனேயென்றால், மாறுபடாமல் முடியாத வாழ்வுகளை மனிதர்க்குக்கொடுக்கவும், நீசமனிதர்க்கு ஒத்தபிணிகளை யனுபவிக்கவுமனிதனாய் வந்தாரென்பார். நக்ஷத்திரங்களும், வானமும, வானத்தில் வழங்கு நாளும், ஓயாமலு, முடியாமலும் பயந்துகூசி, விருப்பத்தோடு வாழ்த்தும் பரமநாதனைக் குற்றமொன்றுமில்லாத இந்தக்கன்னிகை தன்திருவயிற்றி லடக்கினமையால் இன்றுண்டாகிய அந்தத்திருக்கர்ப்பத்தின்முறைமையை மாலையாகத்தொடுத்த பாக்களாலுஞ் சொல்லத்தகுமோ? என்பார். சொன்னடை பொருணடை முதலியன சிதையாதுவரும் பாடலைப்போலத், தொடரும் நீதி முறைதவறாமல் மூன்றுலகையு மூன்றுவிரலினாற்றாங்கித், தனக்கெதிரில்லாதிருக்கும் அனந்தஞானக்கடவுளை ஒப்பில்லாத ஒருசிறுபெண் திருக்கர்ப்பத்திலரிதாய்த்தாங்கினாள் என்பார். இந்தச்சிறுபெண்தருந் திருப்பாலகன் ஆதியில் வீரங்கொண்டு பாம்புருவங்கொண்ட பசாசின்பகையினால் வருந் தீமை கன்றுயொழிந்துபோகத், தன்வல்லமைகொண்டு அப்பசாசுக்கள்தலையெல்லாம் நெரியும்படி மிதித்துக் கொன்று, வந்தபாவங்களைவிலக்கி விளங்குவாரென்பார். விண்ணும், மண்ணும் விளங்கவந்த நாதனே! வாழி, வாசம்பொழிந்து உயிரைத்தருங் கனியையொத்த இராஜனேவாழி, மனிதர்வாழும்படி மனிதனான க-

வுளே! வாழி, பிறர்க்குச்செல்வந்தரும்படி தரித்திரங்கொண்ட தயாபரனே! வாழி, வாழும்விண்ணுக்கு மண்ணுக்கும் வாழ்வானவனே! வாழி, கருணைக்கடலே! வாழி, நக்ஷத்திரத்திலும் பிரபைவீசுமுத்தைச் சூலாகக்கொண்ட சங்கையொத்தவளே! வாழி, தேன்பொழிந்து மலராத அரும்பையொத்த கன்னியே! வாழியென்பார், இப்படியாகவானவர் இனியபாமழை பொழிந்தபின்பு மலையின்மேல் மேகம்பொழியு மழையைப்பார்க்கிலும் வாசமலர்மழையு, மலர்த்தேனினின்றிறங்கின பன்னீர்மழையுங், கிரணமழையுந் திரளாய்ப் பரப்பினார்கள்.

சூரியனுதயத்தில் இங்குள்ளயாவு மகிழ்ந்தனபோல அன்பினால் ஆண்டவன் மனிதனான மகிழ்ச்சியால் உயர்ந்தவானுலகுங், கடல்சூழ்ந்த அகன்ற பூவுலகுங் களிகூரவுங், கன்னித்தாய்கொண்ட பெருமைக்கு ஒப்பாகச் செங்கதிர்பரப்புஞ் சூரியனுஞ், சேணிலுலாவு நக்ஷத்திரங்களு மகிழ்ந்தனபோல மற்றையநாளையிலும் அன்று எழுமடங்கு அதிகமாய்ப் பிரகாசிக்கவுங், துன்பங்கொண்ட பூமியைக்காத்தளிக்கப் பரமநாதன்வந்ததினால் அழகிய தாரகாகணங்களும் நிகராகாமல் வருந்த ஒளிவிடுமலர்களெல்லாஞ் சிரித்ததுபோலத் தேன்பொழியும்படி வாசஅரும்புக ளவிழ்ந்துமலரவும், நஞ்சையுமிழ்ந்து கடுந்தபாபந்திர நீதியோடு அன்பினமிகுதியையுடைய தற்பரன் இங்கேவந்து தாழ்ந்ததினால் வானுலகும், அவ்வுலகிற்றிரியும் நக்ஷத்திரங்களு, மிங்கே யிறங்கி வந்ததுபோலக் குளங்கள்முதலாக எங்குமுள்ளமலர்கள் புஷ்பிக்கவும், அகன்ற வாயுள்ள இளங்குயில்களு, மற்றப்பக்ஷிகளும் இனியவோசைகொண்டு அவதரித்த கடவுளைப்புகழ்ந்தாற்போல வீணையினிசைகளைப்பழித்து உள்ளேகொண்ட மகிழ்ச்சிக்கொப்ப இன்பமாய்ப்பாடவும், அன்றையதினமே சந்தேகங்களுந், துன்பங்களுஞ், சண்டைகளும், பழம்பழிகளும், மாசுகளும், வஞ்சங்களும், பொய்களும், பேய்களும், பூவுலகத்தைவிட்டுப்போகவும், ஆகாயத்தை நெடுநாளாய்மறைத்த கரியமேகங்கள் விரைவிலிற் கரைந்து மறைந்ததால் வானமெங்கும் நல்லகிரணத்தைப் பரப்பினதுபோல முன்கொண்ட கொடிய பாபம் அன்று ஒழிந்தமையால் பூமியெங்குமகிழ்ந்து, ஒருமுடிசூழ்ந்ததுபோலப் பேரழகோடுதோன்றவும், அளவில்லாததயாசொரூபி அன்றுமனிதனாய்த் திருஅவதாரமானதொன்று அறியாத சிரேஷ்டமுனிவர்களும், ஒப்பில்லாக்களிப்பையநுபவிக்கவும், ஆனதல்லாமல மயக்குங்குற்றங்கள் யாவற்றையுங்கடிந்து, தேனைப்பொழிந்து மணக்கும் வெண்மலர்க் கொடியையுயர்த்த சூசைமாமுனிகள் அங்கவீட்டில்தானே வேறறையில் நித்திரைகொண்டிருந்து விழித்தபின், வழக்கப்படி யாண்டவன் திருப்பாதங்களை வணங்கும்போது இந்நக்ஷத்திரமோ மறையாமல் மட்டிலலாதபெருமைகொண்டு, மகிழ்ந்து தானநுபவித்த இன்பத்தினால் உலகத்தாரெல்லாரும் வாழும்படி உலகநாதனவதரித் திங்கேவந்தாரோ? வென்று சந்தேகப்பட்டு, மீளவுங் கடவுள் திருவடிகளை வணங்கிக் களிகூர்ந்து பரலோக வாழ்வுகளை மிஞ்சிய பேரின்பத்தின் கடலே தன்வீட்டில வந்திருக்கிறபடியால் அதிலே முழுகியபோது, முடிவின்றி அருளடைந்துவாழ்ந்தார். பின்னும் வானுலகத்தின்மேலும் பேரின்பத்தையுடைய தன்துணைவியாகிய கன்னிமரியம்மாள் சூரியனைத் திருச்சூலாகக்கொண்டதினால் சூரியனிடத்துமிழ்த கதிர்போல ஒளிபரப்பக்கண்டதினால் அமுதத்திலுமினிய ஆனந்தக்கடலில் முழுகிக் கண்டகதிர்களால மனத்திலேவாழ்ந்து, தன் திருத்துணைவியிடத்திலுண்டான பெருமையுள்ளசேதியை யறியாமல் பாலினுமினிய இன்பத்தினால் இருகண்களுந்துளித் தழுதுமகிழ்ந்தும், பிறைமேலெழுந்ததிருப்பாதங்களுடைய தன்துணைவியுடுத்த வஸ்திரத்தின்மேல் கிளம்பியகாந்தி யெங்கும் பரவியதால் சீக்கிரத்தில் மகிழ்ச்சியும், அரியநாவினுங் காக்ஷியுமடைந்து அந்தகாயதிகொண்ட திருச்சூலானது நாள்தோறும இன்பமாய்வளர்ந்து, வானுலகிலுள்ள

கருணைகொண்டிருந்தமையால் துணைவியினருகேயிருந்து தன்துணைவியின் மேலவைத்த கட்டழியன்பினை அரியநூற்கொண்டுரைக்கக்கூடுமோ? இப்படிச் சூசைமாமுனிகளடைந்த இன்பமானது பின்பு மேல்காற்றடித்துச் சகலசுகமுங் காய்ந்துலர்ந்ததுபோலச் சுழன்றுவருந் தேருருளையாக மாறினதால உள்ளமுங் காயத் துன்பம்வந்தபோது வருந்தினசெய்தியை யினிச்சொல்லுவாம்.

அதெப்படியென்றால், பழுதில்லாத தருமகன்னித்தாய் மாசில்லாதகர்ப்பங் கொண்டு ஐந்துமாதமாகித் திருவயிறு வளர்ந்தமையால் இதை நற்றவத்தையுடைய சூசைமாமுனிகள் கண்டுபிடித்து, அந்தக்காட்சியின் வாளினால் மயக்கிய தனமனஞ்சினையறுக்குந் துன்பத்தோடு, சந்தேகத்தைக்கொண்டு மணியையிகழ்த்த அழகியகன்னித்தாய் முன்னூலிற்கோத்த ஓர்மாலையாகத் தருமங்களெல்லாந் தன்னிடத்திலொன்றாய்ச் சேர்த்த தன்மையைத், தான்தெளிந்திருந்தபடியால, அன்று அந்தத்தாயிடத்திற்கண்ட தருமத்தின்மாட்சிமை யின்று ஆராய்ந்துபார்த்ததின்பேரில் பிணியாகமனத்திலுறுத்திய துன்பத்தை மிகவுங் கொண்டார். பின்னும் நாள்வளரும்போது கன்னித்தாய்கொண்ட திருச்சூலும் கன்றாய் வளர்ந்தமையால் அதுவளரவளர இவருக்கு மிகுந்ததுயரம் வளர்ந்து, வாளூறப்படுத்திய புண்ணிலே செந்தீவைத்தாற்போல மிஞ்சியதுக்கமாற்றாமல், துன்பக்கடலிலாழ்ந்து மூழ்கிக்கிடந்து, கதிரையீனுந் தன்துணைவியின திருவதனத்தழகைக் காணும்பொழுது நிறைந்த அன்பினையும், வருத்தஞ்செய்யுஞ் சந்தேகத்தையும், உள்ளத்திற்கொண்டு கொண்டவிசனமென்னும் பெருந்தீயை முழுதும் அவிப்பதற்குத் தானழுத இருகண்ணீராலும்போதாதிருக்க மேகமூகத்தில் சினந்தெழுந்த காற்றினால் கடலிலெழுந்த அலைகள்போல நொந்தலையும் நெஞ்சத்தையுடையவராகித், துணைவியின் திருமுகத்தைக் காணும்போது வருகின்றசந்தேகம் அவ்வளவிலும்போது, அதுவும அகன்றதினால் சீர்கொண்டு சிந்தையில்தெளிய வுணர்ந்துசொல்லுவார்: என்கண்களே! எனக்குப் பொய்சொன்னீரோ மாசில்லாத கன்னிகை அழியாக்கன்னிகையாயிருப்பேனென்று முன்னெனக்குச்சொன்னது பொய்க்குமோ? பளிங்கினுந்தூய கன்னிகை தன்னிடத்தில் மாசுகொள்ளுமுன், சூரியன்விட்ட கதிர்களே மாறக்காண்பீர் என்றுசொல்லி, மீளவுந் திருச்சூல்கொண்ட தன்துணைவி யெதிராகவரக் கண்டார், கண்டுநின்றார். நின்றுபார்த்தார், வந்தசந்தேகந்திரும்படி யருகேசென்றார், சென்று சந்தேகமில்லாமல் இருக்கர்ப்பங்கொண்டிருப்பதைக்கண்டுகொண்டார், மனத்தில் சினந்தார். நொந்தார், அப்பாலேபோய்த் தீராதுன்பக்கையடைந்து அழுது மீளவுஞ்சொல்லுவார்: வானுலகக் கடவுளின்கட்டளையால் நான்கலியாணஞ்செய்யுமபடி யடைந்த தேன்கொடிமலர்ந்த நலபுஷ்பங்கள் வாடாதிருக்க மீன்போன்ற கண்களையுடைய என்துணைவியின் கன்னிமையாகிய கன்மலரின் வாசவிதழ் வாடிக்காய்க்குமென்று நினைக்கலாமோ? என்பார். புண்படுத்தியவாள்தானே யப்புண்ணை யாற்றினாற்போல என்கண்கள்தானே கர்ப்பமுண்டென்று காட்டி, என்மனத்தைக்கிழித்தபின் அவைகளே இவ்வினியசொல்லாளுடைய மாட்சிமையைக் காட்டி, வந்ததுயரத்தை யாற்று மாதலால, ஆராய்ந்துபார்க்கில் இவ்விரண்டில் யாதுமெய்யென்பேனென்பார், கடல்போலலையும் எனது நெஞ்சமுருக மிகுந்த துன்பக்காட்சியினால் வருத்திய கண்களே! யினிமேல் அழகிய சூரியனைப்பாராம லிருண்ட மேகத்தின் மழைத்தாரைபோலக் கண்ணீரைவிட்டழுது வருந்தக்கடவீரென்பார். தெளிந்த அறிவும் வல்லமையுமுடைய அரசர்க்கரசனாகிய என்னாண்டவனே! நான்மயங்கும்படி வந்த சந்தேகஞ்செய்யும்நோயையும், வந்தமயக்கத்தையு மினிமேல் தீராயோ? நான்மணஞ்செய்ய நீகட்டளையிட்ட அன்று இரக்கமின்றி நானடைந்தவருத்தத்துக்குப் பயனாகுமென் றுணர்ந்தாயோ? என்

பார். என்னுயிரைவருத்தும் இக்கர்ப்பம் என்னால்வந்ததல்லவென்றாலும், நான்கொண்ட சந்தேகமயக்கத்தினால் ஆராய்ந்துபாராமல், என்துணைவி குற்றஞ்செய்தாளென்று நினைத்தால் பூமிபிளந்து, இன்றையதினமே என்னை விழுங்குமென்பார்; அல்லது பூவுலகத்தை இரக்ஷிக்க அவதரித்தநாதனைப் பெறுந்தாயானவள் தேவதைகளுங்களிகூரத், தன்கன்னிமைத்திறமைமாறாமல் பெறுவாளேயாயினும், விண்ணும் மண்ணும் வணங்கும் அந்தத்தேவதாயார் எனக்கு மனைத்துணைவி யாவாளோ ! ஆ! இப்படிப்பட்ட எண்ணங்களே! கடல்போலலையும் என்னெஞ்சைவிட் டப்புறம்போங்களென்பார்; அலையும் என்னெஞ்சமே! துன்பங்களைக்கொண் டினிமேல்வாழ்வாயென்று எண்ணாதே, இன்றைக்கே தீயிலமுழுகி யிறப்பாயென்று சொல்லி, நல்ல இலைகளைவிரித்த பசிய பூங்கொடியும் வாடநொந்து, தேர்ந்தவுணர்வுகளை யுடையவராயிருந்தும், உள்ளத்தில் கலங்கியுளைந்து சோர்வார்.

இப்படியாக ஏழுமாதமுமானவுடன் உயர்ந்த அறிவும், மயங்கும் பற்பல எண்ணமுந்தோர்ந்து, ஒருணர்வில்லாமல் பெருமூச்சுவிட்டுப் புலம்பியழுது, இக்கர்ப்பத்தை நிச்சயமாகக்கண்டாலுந் தன்துணைவியிடத்தில் யாதொரு குற்றமும் எண்ணாமலுந், தன்னைவருத்தின துயரின்தன்மையைச் சொல்லாமலுந் தனக்குள்ளே யுருகித் தனித்தனியே யிவையெல்லாமாராய்ந்து, துன்பக்கடலில் முழுகினவராய்ப், பறித்தபசுமலர்வாடிச் சிதைவதுபோலத் தானுள்ளுருகவும், உயிர்மெலிந்து ஊஞ்சலாடவும், நோயுண்டு மற்றொன்றும் உண்ணாமலுந், தூங்காமலு மரணத்துக்கு ஆயத்தமாயிருந்தார். மீளவும் வேல்கொண்டு உள்ளே திறந்தபுண்போல் நட்புடைய மனதிலே வந்ததுன்பமானது நண்மையான துயரெல்லாவற்றினுங் கொடியதென்று கண்கடந்தகாதலால் நொந்து, மேகத்தைக்கிழிவிழும் இடிபட்டதுபோலத் தன்துணைவி யருகேவந்தநேரமெல்லாம் உள்ளுடைந்து உற்றுப்பார்த்துக், கடைசியாய்க் கர்ப்பம் நிச்சயமாகக் கொண்டபடியால் வெள்ளத்தினிடத்து நீண்டகரையிடிந்ததுபோலத் தானுந் துயரிடத்து உடைந்துள்ளேமெலிவார். இப்படியுயர்ந்தசெய்கையாகிய தேவகர்ப்பத்தின்வகையறியாமல் தன்னுடலைவிட் டுயிர்பிரிந்ததுபோலத், தேன்மலர்க்கொடியுயர்த்திய சூசைமாமுனிகள் உள்ளயர்ந்து, அநுபவித்த துன்பம் யாவையும் அறிந்த கன்னித்தாய் தன்தலைவன் வருந்தினமையால், தானுந்துன்பங்கொண்டு அழுதல்லாமல் கடவுள் தனக்கு விசேஷமாய்ச் செய்த திருவையை மறைப்பது நன்மையானதென் றெண்ணினதால், தன்னிடத்து வந்த அரியகர்ப்பத்தின்முறையைத் தன்பத்தாவுக்கு வெளிப்படுத்த திருவுளத்தை யிவளறியாமையால் நடந்தசெய்தியாவுஞ் சொல்லி வந்தபெருந்துயரைத் தீராதிருந்தாள்; ஆயினுந் தன்மேல்வைத்த அன்பினால் தன்கொழுநன் வருந்துகின்றதென்றறிந்த ஒப்பற்ற கன்னித்தாய் வானமுமதிரக் கொடுங்காற்று வீசினவுடன் உயர்ந்தமரத்தோடு அதன்மேற்படர்ந்த வல்லிக்கொடியுங்கூடவலைந்து வளைவதுபோலக், கொழுநனோடு தானும்நொந்துருகியலைந்து, அந்தத்துயரைத் துடைத்து இனி ஆறுதல்செய்யும்படி கடவுளைவணங்கி, அதன்பின் துன்பத்தினுல் மிகுந்துருகிய தன்துணைவனை யுருகநோக்கி யருகேபோய் மிகுந்த அன்புகாட்டிச்சொல்லுவாள்: ஐயனே ! நீர் துன்பப்படுதற்குக் காரணமென்ன ? உம்மையண்டின அடியாளாகிய நான் செய்யவேண்டியதென்ன ! சொல்லுமென்றுதொழுதாள். இப்படித்தன்துணைவிசொன்ன சொல்லானது புண்திறந்த பெருந்துவாரத்தில்புகுந்த செந்தீயைப்போலத் தன்காதில் நுழைந்ததை யாராய்ந்துவருந்தின சூசைமாமுனிகள் நெருப்புப்போல, உள்ளேபற்றிய துயர் பொறுக்கமாட்டாமல் நவமணியைக்கொழிக்குங் கடலில்மலர்ந்த தாமரையடிக்குங்காற்றினுல் தளம்புவதுபோலத், துன்பம்வந்ததால் தெளிந்த அறிவு

டைய செஞ்சுழும்பக்கி, யந்தத்திருச்சுகந்திகையைவிட்டுப் பிரிந்துபோக நினைந்து
பின்னுந்தாளேறுந்த நீர்மலர் கண்ணீர்மேலே யலைவதைப்பார்க்கிலும் அலைந்தலை
ந்து, அனப்சாகரத்துள் மூழ்கித், தனக்குவந்த துன்பமல்லாமல தன்னையுந்
தன்னைசகடச்சுடவே நெஞ்சிலுள்கிளம்பிய போர்வினையின்மேலு மயங்கி, யே
ங்கிப் புலம்பிச்சொல்லுவார் : இந்தப்பெண் குற்றத்தில் காப்பாங்கொண்டாளெ
ன்று நான்காட்டிக்கொடுத்தால் குற்றமுள்ளபொய்யாகுமே; அல்லதுஇந்தச்சே
தியையொளித்து, இவளோடுகூட இங்கேவாழ்ந்திருந்தால் அருள்தந்தவேதகற்ப
னை மீறினதாகுமே; ஆதலால், இனித்தெளியும்வழி பிரிந்துபோவதல்லாமலவே
றில்லையெனச்சொல்லி, என்னுயிரினுமெனக்கினிய இவளுயிரைவிட்டுப்பிரிந்து
நான் தனியேபோனபிற்பாடு என்னுயிரும் என்னுடலைவிட்டுப் பிரியாதிருக்கு
மோ? இதைநினைக்குமிந்நேரமே சாகாமலிருப்பேனோ? என்பார். இப்படி
யாகச் சூசைமாமுநிகள்சொல்லிக், கடைசியாய் இது திருவுளமாகில் வாசமல
ர்க்கொழுந்துடனே எனக்குவந்த பூங்கொடியாகிய அரியதுணைவியோடு கூட இரு
க்கப் பேறில்லாதநான் அவளைவிட்டுக் கானகத்திற்போய் அருந்தவத்தைமுடி
ப்பது நல்லதென்று, நிச்சயமாய்த் துணிவுகொண்டபின்னும் என்ன என்னு
வார்: நான்பிரிந்துபோகிறபோது என்துணைவியடையுந் துயரத்தைக் கண்டே
னுகில் மனம்வருந்திப்போகத் துணியமாட்டேன், ஆதலால், சூரியனஸ்தமான
வுடன் நடுஇராத்திரியில் எழுந்து அவ்விடம் நீங்கிப்போவேனெனக் கருதினார்.
கருதினபோது என்றும்பிரியாத அன்புடையோர் தம்முள்ளே பிரியும்போது
உண்டாகும் பெருந்துயர்களைக் காணமாட்டாதவன்போலச் சூரியனஸ்தமிக்கச்
சந்தேகங்கொண்ட இந்தமுநிவரின் சிந்தையானதுமயக்கத்தினு லிருண்டதுபோ
லப்பூமியுமிருண்டபோது தான்சொல்லுவார்: என்னுள்ளத்தை முழுதுமறிந்த
ஒப்பில்லாத் நாதனே! யிதுவுன் திருவுளமென்றுநினைத்ததினுலல்லவோ? இந்தப்
பெண்ணைவிட்டுப்போகிறேன்; நீயிவளைக்காப்பாற்றி, வரும் இடையூறெல்லாம்
நீக்குவாயென்றுசொல்லி நித்திரைகொண்டார். இவ்வண்ணமாக நித்திரைகொ
ண்ட சூசைமாமுநிகள் நினைத்தயாவையும் மழுக்கற்றகன்னிமரியம்மாள் கண்டறி
ந்ததினுல் தன்னைவிட்டுத் தன்துணைவனகன்றுபோதல் உண்டாகுந் துன்பத்
தை நினைத்துப்புலம்பி, நீண்ட இருகண்களுஞ் சிவப்ப அழுது வேண்டுவாள்:
என்னையுண்டவனே! தாய் தான்பெற்றகுழந்தையைமறந்ததுபோல நீயும்உன்தே
வதிருவுளமையைக்காட்டாதிருக்கின்றாய்; நெருப்புப்பற்றியெரியப் போர்முகத்தில
விளைத்தவில்லானதுநிமிர்ந்து ஆயினதுபோல என்மனத்தில்வந்த நோயற்றொழி
யநினைத்தலாகாதோ? வளர்ந்த என்னுதரத்திலிருக்குந்திருநாதனே! இளம்பே
தையாகிய நான்துணையில்லாமல் தனியேயிருப்பதுபெருமையோ? நானடைந்த
துன்பத்தையறிந்து உறுதிசெய்யுந்திருவுளைசெய்வாய் என்றாள். இதைக்கேட்ட
தாழ்வில்லாக்குணமுடைய பரமநாதனிரங்கி அரியதுயர்களைப்பொறுத்து, மன
த்தி லுறுதிகொள்வார்களென்று இவர்களுக்குத்தெளியாததுன்பஞ்செய்தேன்;
இனிமேல் மாற்றுதற்கரிய வருத்தத்தைநீக்கித் தயைசெய்வேனென்று கருதிக்,
கபிரியேலென்னும் வானவனுக்குக் கட்டளைசெய்து, மாருதவாசனையுந்தேனும்
பொழியும் விருந்துள்ள சூசையிடத்துப்போய் அவன்கொண்டதுயரத்திரும்படி
அவன்துணைவியிடத்தில் சூல்வந்தவகையெல்லாம் அவன் இனிதாய்க்களிகூரச்
சொல்லுவாயென்றனுப்பினர்.

ஐயந்தோற்றுபடலம் - முற்றிற்று.

எட்டாவது - ஐயநீங்குபடலம்

செல்லாருமுலகிமைக்குஞ் செங்கதிரோனுருத்தோன்றித் தேவவல்லோன்
வில்லாருமணியிமைக்கு முடிசூடித் தேன்றூற்றும் விரதச்செவ்வாய்
சொல்லாரும்பங்கயக்கண் பொன்வரைத்தோள்சுடரகலந் தோற்றுமேனி
யெல்லாருங்கதிரெறிப்ப விக்குமிழுமலர்க்கொடிபோனிடத்துச்சென்றான்.

முற்கூறிய தேவவல்லோனாகிய கபிரியேல் இருநாதன்தந்த கட்டளையைத் தலைமேற்கொண்டு, மேகங்களுலாவும் வானமண்டலத்தை விளக்குஞ் சூரியன் வடிவமாகத்தோன்றி, நன்மணியால் விளங்கிய மகுடஞ்சூடித், தேன்பொழியும் பொய்யாதவாயுந் தேனலர்ந்ததாமரைக்கண்ணும், பொன்மலைப்புஜமும், விளங்கினமார்புமுடைய மேனியோடு மெங்குங்கதிர்விட்டிலங்கத் தேன்மலர்க்கொடியுடைய சூசைமாமுனிகளிடத்திற்சென்று, அவர் இருகண்களென்னுங் கதவடைத்து, மிகுந்தநித்திரைசெய்திருக்கையில் அவர்உள்ளத்தினுலறிந்துகொண்ட துயர்நீங்கிக் களிகூரவும், பூவுலகிலிருக்குஞ் சூசைமாமுனிகள் வானுலகிற்குரிய பேரின்பத்தை இருசெவிகளாலருந்தவும், உள்ளத்தில் முன்வந்த உருவத்தோடு தோன்றிக்காண்பித்து, வந்தவானவன் தேன்பொழிந்த சொற்கொண்டு சொல்லுவார்: பூவுலகும், வானுலகும வணங்கும் வரங்களைப்பெற்ற மதிவல்லோனே! வாசனைவிரிந்த வாடாமலர் விருதடைந்த நல்லோனே! நீ எண்ணியசந்தேகத்தால் உள்ளமயங்கி நொந்தலைவானேன்? வேதத்திற்சொன்னபடியே அழியாத ஒருகன்னிகை குமாரனைப்பெறுவாளென்ற ஒப்பில்லாதசத்தியத்தையறியாயோ? நேர்விளைந்தநீதிக்கடவுள் நெடுங்காலத்துக்குமுன் னினைத்த தயையை யிப்போது செய்யநாளாகிச், சீர்விளைந்தஉன் துணைவியிடத்தில் அவள் கன்னிமையழியாமல் கடவுள்தானே திருக்குமாரனுய்வந்து, ஏழுமாதமானதால் சூர்விளைந்த பிணியில்லாமல் அந்தக்கன்னிகை இனிமேல்பெறுந்திருக்குமாரனே பார்விளைந்தபாவங்களைத் தீர்த்திரக்ஷிப்பார்; ஆகலால், அவருக்கு யேசு என்னுந் திருநாமமிடுவாய் என்றான். என்றவுடனே கடல்போலச் சந்தேகத்தினலலையும்நெஞ்சமும், வெள்ளையரும்புமலர்ந்த பூங்கொடியுமுடைய சூசைமாமுனிகள் திடுக்கென்று விழித்துப்பார்த்து, எங்குஞ்சூழ்ந்திருக்கும் பிரகாசத்தைக்கண்டேயல்லாமல் வேறொன்றுங்காணுமல் அச்சமும், ஆனந்தமுங் கொண்டு சீக்கிரமாயெழுந்து, நிறைந்தகல்வியினுந்தெளிந்த அறிவடைந்து, அரிய திருக்கன்னிமையழியாமல் விலைமதிக்கப்படாத மாணிக்கம்போலத், தன்துணைவி திருவயிற்றிலவதரித்துத், திருமகனாகிய கடவுளைவணங்கும்படி மிகுந்த அரும்புகளைச் சூலாகவுடைய சண்பகமரத்தின் குளிர்ந்தகொம்புகள்தோறுந் தென்றற்காற்றுவீசும்போது மலர்ந்தபூக்கள் தேனும்,வாசமும் பொழிவதுபோல வானவருஞ்சூழ்ந்து களிகூர நூலைவிரித்துரைக்க வாய்மலர்ந்து, வேதத்தின் தேனுகிய சொற்களையாராய்ந்து, சொல்லுவார்: சூரியன்கதிரால் ஒளிவும்பெருமல் இரவினுலிருளுமடையாமல் எங்கும்விளங்கிய பரஞ்சோதியே! ஒருதுணையுமில்லாமல் யாவற்றையுமறிந்தகடவுளே! உன்னைவணங்கும் அடியானுகிய என்னையுமறியாமலோ? இக்கன்னிமையா யென்னையுயக்குள்ள புல்லினைக்க புன்மையையறியாமலோ? சிறியானாயெர்த்தனைத்தாய்; மேகங்கள்திரியும் வானுலகோரும் அதிசயிப்ப ... மாருதசெல்வமுடைய வாழ்வரசே! ஒருமுத்துயர்த்தி,வல்லமைகாட்டுநாதனே! ... படைத்தாய்; மோயீசன்கையில்தந்த திருமொழியால் பூவுலகமுகல் யாவையும்படைத்தாய்; பெருத்தசேனை ஒருசிரம்பினுல் சமுத்திரத்தைப்பிளந்து வழியாகச்செய்தாய்;

கனேயுடைய * சோகவனேவலால் நில்லாமல் வானத்திற்றிரியுஞ் சூரியனைநிறுத்
தினய்; அப்படியே இப்பொழுதும் பூவுலகத்தையிரக்ஷிக்க உன்தயைப்பெருங்
கடல்கடப்பதற்கு அடிமையாகிய என்னைத்துணையாகக்கொண்டாய்; † சுடுகாட்டி
லேபரப்பின எலும்புகள் ஒன்றோடொன்றுபட்டுக், கின்னரவோசைபோலின
ம்பி, இனத்தினமாய்ச்சேர்ந்து நன்றாயிசைபட நரம்புகளோடித் தசையுமவள
ர்ந்து அதன்மேல் தோலும்போர்த்துப், பின்னுயிரோடு எழுந்திருக்க முன்னம்
இசேக்கியலென்பவர் கண்டாரே யதுபோல எலும்பாகக்கிடந்த நான் உயிர்
கொண்டுயரவோ? இந்த உபாயஞ்செய்தாய்; பகைவர்மார்பில் உதிரமுண்டு தி
யைக்கொப்பளிக்கு மதயானையிலும் உள்ளத்தில் வலிமைகொண்ட ‡ சுதித்தை
என்பவள் அழகும், அறிவுவீரமுங்கொண்டு, நான்குகடல்போலுஞ் சதுரங்க
சேனைத்தலைவனுகிய ஒலுபேரினனுடைய மலையையொத்த தலையை அவன்வா
ளேயேகொண்டு அறுத்தாளென்று கேட்டு, நானுன் வல்லமையை வணங்கித்
துதித்தேன்; இனிமேல் இப்பூமண்டலத்தில் என்னையுயர்த்தக்கண்டபின் நான்
சொல்லுவதென்ன? ஆடுகளைமேய்த்திருந்த § தாவீதனையும், ¶ மோயிசனையும்,
பூவுலகின்காவலராகத்தெரிந்து ஒளிர்ந்தகோலேத்தந்து காட்டின வுன்கிருபை
யின்வல்லமையை நானாய்ந்தபோது களிகூர்ந்தேன்; இனிமே லுன்னைப் பெ
றுங்கன்னித்தாய்க்குங் காவலனுக என்னைத்துணைதந்து, வாழும் உன் திருக்கரத்
தால் என்னைத்தூக்கித்தந்த வரங்களைப்புகழ எங்கேயுவமையெடுப்பேன் என்
று எங்கும் நிழல்செய்யும் மலர்க்கொடியேந்திய சூசைமாமுனிகள் வானவரின்
மேலுந் தன்னை யாண்டவனுயர்த்தியதையாராய்ந்து, மனதிலெழுந்த நட்புமிகு
ம்படி தொழுதுநினைத்தயாவையும் ஆயிரம்நாவுகள்கொண்டாலும் நான்சொல்
லக்கூடுமோ? மீளவுந்தான்வருந்தி முன்னுணர்ந்த சந்தேகத்தை நினைத்து,
இனிதாய்ச்சொல்லுவார்: வான்சுடர்களிலுந் தெளிந்த அறிவுடையோனே!
மயங்காத வல்லமைகொண்டோனே! என்றுலறியப்படாத இரக்கமுடையோ
னே! தேன்மலர்க்கொடியைத்தந்து மணமாகச்செய்து, உன்னைத் திருமகனுகப்
பெறும் நக்ஷத்திரமுடியாளை யெனக்குத்தந்ததினுல் அந்த வுண்மையறியாமல்
நான்செய்த குறையைப்பொறுத்துத் தயைசெய்தாய் என்பார்; சிவந்தவானமு
தல்சமஸ்தமும் படைத்திரக்ஷிக்கும் அரசனே! கடல்சூழ்ந்த இவ்வுலகில்உனக்
குத்தெரிந்துகொண்ட திருத்தாயாராகிய மலராத கன்னிகையைக் கைக்கொள்ள
அடியேனைத்தெரிந்துகொண்டபின், நான்குற்றமுள்ள பொய்யினுல்வந்த சிந்தா
குலங்கொண்டு அந்தக்கன்னிகையை விட்டுப்போகநினைந்தேன் என்பார்; வேத
மே கொழுந்தாகமேற்படரக் கொழுகொம்பான கன்னிகைக்கு முறையென்று
மறியாதநான் கொழுகொம்பாவேனே! வான்மேல்விளங்கும் நவகணச் சம
னைக்களையும் ஏவல்கொள்ளும் ஒப்பற்ற மாக்ஷிமையுடைய நாயகிகொண்ட
தன்மையறியாததினு லல்லோ அவளைத் திரியுமுறைசொல்லி யேவல்கொண்
டேன் என்பார்; செஞ்சுடரை யாடையாகவுடுத்த சிவந்தமேனியும், வானிற்றி
ரியும் நக்ஷத்திரங்களே முடியாகத்தரித்த திருச்சென்னியுந், குளிர்ந்தகிரணம
விசுஞ் சந்திரனைத்தேய்த்துவிளங்கிய மலர்ப்பாதமுமுடைய வடிவமும், உவ
மையற்ற மாக்ஷிமையும் உடையவள் இவள்தானல்லவோ? என்பார்; என்
பிதாவினங்கிய சுடரையெல்லாம் படைத்துக் குறையில்லாமல் நன்றாய் முடி
த்த பூவுலகமெல்லாங் கெடுக்கும்படி நஞ்சுமிழும் பாம்புருவாய்த் தோன்றிய
பசாசின் தலையைமிதித்து, நஞ்செல்லாம்விலக்கி அதற்குமருந்தானவளும், பர
ந்த எவ்வுலகிலும் அளவும் நிகருமில்லாதவளும், வானவர்வணங்குந் திருப்பா

* யோசுவா 10-ம். அதிகாரம்.
† இசக்கியேல் 37-ம். அதிகாரம்.
‡ சுதித்தை 13-ம். அதிகாரம்.
§ அரசர் முதலாகமம் 17-ம். அதிகாரம்.
¶ மோசே இரண்டாமாகமம். 3-ம். அதிகாரம்.

தமுடையவனுமிவனல்லவோ? என்பார். செய்யவேண்டியமுறைகளுங் கடனகளைக் கழிக்கவேண்டிய முறைகளுங், கெடாத நீதிநெறியையுங்காட்டுங் கண்ணாடிபோலவும், மெய்யும் வேதமும் விளக்கிய ஞானசிங்காசனமபோலவும், உத்தாரமுறைகளும், அன்பின்முறைகளும்வழங்கிய பொன்மழைபொழியுங் கருணைமேகம்போலவும் விளங்கி மற்றமுறைகள்யாவுங்கடந்த மாட்சிமையுடையாள்இவள்தானல்லவோ? என்பார். இப்படிப்பொதுமுறையால் சகலபெருமையுங்கொண்டுவிளங்கி அரியநூலோர் எவ்வகைஉபமானத்தினாலுஞ் சொல்லக்கூடாத கிருபாசமுத்திரமாகிய இக்கன்னிகையை நான் சந்தேகமாக நினைத்தவுடன், கடவுளாக்கக்கன்னிகைக்குத் தந்திருக்குஞ்செல்வியினால் நானினைத்தவெல்லாம் அவளறிந்திருக்கின்றாள் ஆதலால், அவளிடத்தில் இனிநான திரும்பிப்போவதெப்படியென்றுசொல்லி மகிழ்ச்சியும், அச்சமுங்கொண்டிருந்தார்.

கொழுந்துவிட்டெரியுந் தீக்குழியிடத்து ஒருவன்தவறிவிழும்போது அவனவேறொருவனுதவிசெய்ய அதனால் குறையின்றி எழுந்துநின்றதுபோல மலர்தழும்வழியாய்த் தேன்சொரியும் விருதுடைய இந்தச் சூசைமாமுனிகளும விழுந்தழுதி, யுள்ளத்திலே கடவுள் தன்கருணைவல்லமையால் கடல்மண்டிதிறந்ததுபோல அளவில்லாதவரங்களைத் தந்தமையால் சந்தோஷித்து, ஆனந்தக்கடலில்முழுகித் தமையழுந்தியகடவுளின் மலர்ப்பாதங்களை யழுது வணங்கியிருக்க, இதனைக்காணும் விருப்பத்தினால் செங்கதிரோன் விரைவில்கடலைநீங்கியெழுந்துவருவதற்குத் தன்கிரணமாகிய கைகளைநீட்டினதுபோலக்கிழத்திசை சிவந்தவுடன் மூன்சூசைமாமுனிகள் மயக்கத்தினாற்கொண்ட இருளைமாற்றி யருளினாற்கொண்ட மகிழ்ச்சியைக்காட்ட இருண்டபூமண்டலத்திலும் இருள்நீங்கினதுபோலக் கதிருடைய சூரியனுதயமானதால் முன்சொன்ன சூசைமாமுனிகள் அவசரமாகப்புறப்பட்டுக், கன்னிமரியம்மாள் சிவந்தவானுடையோர் வணங்கும்பெருமையுடையவளாகி யினிமேல் வேலைசெய்தாலாகுமோ? இத்தக்கன்னிகையின் திருச்சரீரத்துக்கடிமையாகிய வேலையெல்லாம்நானே முடிப்பேனென்றுமுழுதுமினிதாய்முடித்துக், கடவுளைத்திருச்சூலாகக்கொண்ட அந்தத்தாயின் திருப்பாதங்களைவணங்கவும், நீக்கினதன்சந்தேகமுங், குற்றமுஞ்சொல்லவும் மிகவும் விருப்பங்கொண்டு, அதைப்பொறுக்கமாட்டாமையால் அந்தக்கன்னிகை கதவைச்சாத்திக்கொண்டிருக்கும் அறையின்வாசற்படியிலே காத்திருந்தபோது செல்வத்திருமடந்தையாகிய கன்னித்தாய்தன்னறையைத்திறந்தவுடனே இந்திரத்தறிலெழுந்து, நெஞ்சுதுணுக்கெனப் பந்தக்கவிழுந்து, சிறந்த கன்னிகையின் திருப்பாதங்களைவணங்கி, வணங்கிய திருச்சரணங்களின்மேல் தன்னிருகண்ணீர்மழையைத்தூவிச் சொல்லுவார்: இரக்கமுடைய கருணையோடு என்னையடிமையாகக்கொண்ட சிறந்ததருமத்தினளே! உலகிற்பகியே! கடவுளை மகனாகத்திருச்சூல்கொண்ட மாட்சிமையாளே! அடியேன்குற்றமாகநினைத்தவைகளையுமீகுறையில்லாம லறிந்திருக்குஞ் சூரியனையொத்த காட்சியுடையாளே! பாவக்களைத்தீர்க்கத் தயையோடவதரித்த வுன்திருமகனைப்போல நீயும் நீதிமுறைந்தவறிச், சம்பவித்த என்குற்றங்களைப்பொறுப்பாய், நான்வருந்தச்செய்த குற்றத்தைப்பொறுக்கு மாசீர்வாதம் நீயிரக்கங்கொண்டுகொடுத்தாலொழிய உன்திருப்பாதங்களைவிட்டுப் பிரிவேனோ! என்று வெள்ளம்போலப் பெருகின இன்பமூக், துயரமுமடைந்து இரங்கினார். இதைக்கேட்டு ஒளிவிடுதாரகைகளை முடியாகமுடித்துச், சூரியனையாடையாகவுடுத்துச், சத்தியவேதமேசொரூபமாகக்கொண்டு, தேவவருளாற் பூரணமான கன்னிமரியம்மாள் முனத்திற களிகூர்ந்து தன்துதிருத்துணைவனுக்கு மயக்கத்தினாலவந்த துயரைநீக்கி அறிவைத்தந்து துணைவனைச் சிற்பரமதாகளைமிறைஞ்சிக், தன்திருப்பாதத்தில் விழுந்திருக்குந் துணைவனைச் சிக்கிரமாய்த் திருக்கரத்தால் தூக்கியெடுத்துப், பெருகின இன்பவெள்ளம் உள்

ளடங்காமல் புறண்டதுபோலக் கரியமேகங்களொப்ப இருகண் மழையாகக்
கண்ணீர்விட்டுக், தானுந் தனது திருத்துணைவன் திருப்பாதங்களில் விழவே
யிதைக்கண்ட, மிகுந்த அன்புள்ள சூசைமாமுனிவர் தனது திருத்துணைவி விழா
தபடிக்கு எதிர்வந்து எழுந்திருப்பாயென்று சொல்லித் திருக்கரங்களா லேந்தி
யும், நிறைந்தவரங்களா லுயர்ந்த மாதவிமையுடைய கன்னிமரியம்மாள் மீளவும்
மிகுந்த தாழ்ச்சியோடு இரண்டுதிருக்கரங்களையுங் கூப்பிவணங்கி, விழுந்து
சொல்லுவாள்: என்னுள்ளத்திலடையாத ஆனந்தமெனக்குச்செய்யு மன்புடை
யானே! இராஜாதிராஜனாகிய தற்பரன்தந்த வரப்பிரசாதங்களை மறைப்பது
கல்லதென்றுணர்ந்து, என்னையடிமையாகக்கொண்ட பரமநாதன் கட்டளையில்
லாததினால நான்கொண்ட காப்பத்தின் விசேஷத்தை உமக்கறிவியாம லொளி
த்து, உமதுமனத்தினிதுவரையிலு மடையாததுன்பத்தைப் பெருகாலமாய் நா
னுமக்குச்செய்ததினா லதைமனத்திலெண்ணாமல் கிருபாலிக்கவேண்டுமென்று
சொன்னபிறகு, சுகந்தவெண்மலர்க்கொடியுடைய சூசைமாமுனிவரும், மலர்ந்த
புஷ்பங்களைநிகர்த்த நட்சத்திரங்களைமுடியாகச்சூடிய கன்னித்தாயாருமாக இரு
வருங் கடவுளின்பாதாம்புஜங்களை வணங்கினார்கள். பின்பு தாளைக்கடைந்து வ
ண்டுசூழ்ந்துமொய்க்குந் தேன்மலர்க்கொடியுயர்த்தி, மகிழ்ச்சியால்நிறைந்த
சூசைமாமுனிவர் தாரகாகணங்களைக்கடைந்து அழுத்திப்பதித்த மகுடமுஞ்,
செங்கதிரினுடையுமுடைய கன்னித்தாயார்சொல்லிய திருமொழிகளால், கோடை
காலத்தில் வற்றிப்போய் மழைகாலத்தில் பெருகுந்தடாகத்தைப்போல முன்
கொண்டதுயரினால் வாடியமனமானது ஆனந்தவாரியில் முழுகி அங்கப்பரம
காயங்கடைந்ததுபோல நன்றாய்த்தோன்றிய திருக்கர்ப்பத்தினால்நிறைந்த கதி
ர்விடுவதை நேத்திரகமலங்களால் கண்டதினால், வாளைக்கொண்டு உள்ளத்தைக்
கடைந்ததுபோல அழுந்தியவருத்தத்தை யப்பொழுதேதீர்ந்து, கண்களாலுண்
ட வின்பமுலாவிய மனத்திலே யதைப்பொறுக்கமாட்டாமல் மூன்காலத்திற்
றோன்றிய பெருமையெல்லாம் பதித்துவிளங்குந் தனது திருத்துணைவியைக்
கண்டு தன்மனத்திலுலாவிய தேனைக்கொப்பளித்ததுபோல இனிதாய்ச் சொ
ல்லுவார்: எண்ணப்படாத பெருமையுடைய மாதர்களுக்குள்ளே அழியாத
திருவரங்களைக்கொண்ட மாகுயியாளே! நடத்தற்கரியமுறைமையா லுனக்குத்
திருக்குமாரனாகிய அடைதற்கரிய கடவுளைத்தாங்கிய திருப்பீடமே! பிறை
யைவிசியமுகத்தோடு சூரியன் சந்திரனுக்குமுன்பாகவந்தால் சந்திரன் பூரண
மாய்விளங்குவதுபோலக் கடவுள் அகமலர்ந்த திருமுகத்தோடு உன்னைப்பார்
த்ததினால் முன்தெளிவாக வேதத்திலெழுதப்பட்ட செல்வநன்மையெல்லாம்
இப்போது நீ மழையைப்போல வழங்குகின்றாய் ஆதலால், யாவரு முன்னைத்
துதிப்பார்கள்; கருங்கடல்சூழ்ந்த பூமண்டலத்தாருள் இந்தப்பெருங்கடல்
நிகராகாத பெருமையை நானடைந்தேன்; அதனாலெனக்குவந்த கடமைகளை
குறைவில்லாமல் நான்செய்யும்படி, யுனக்கு வல்லமையாலவதரித்த திருக்கு
மாரனாகிய தம்பிரானே நீவேண்டுவாயென்று, இவையாவுஞ் சூசைமாமுனிவர்
சொன்னவுடன் பளிங்கினுந்தூய கன்னித்தாயார் கண்ணாடிதன்மேற்பட்ட சூரிய
கிரணங்களைத் திரும்பியுமிழ்வதுபோல, அளவில்லாமல் தன்னைத்துதித்த துதி
களையெல்லாம் பரமநாதனுக்குத் துதியாக ஒப்புக்கொடுத்திருக்க எண்ணப்
படாத சுடர்களைப்போல விளங்கிய வானவர் சரீரமில்லாராயினுஞ் சரீரத்
தோடுதோன்றிப், பரிமளிக்குஞ் சுகந்தமலர்களை மழையைப்போல வருஷித்து
இருவருடைய பாதாரவிந்தங்களை யினிதாய்ச்சூடிக், கடவுளை வாழ்த்தும்படி
அளவின்றிப்பாடினார்கள்.

அக்ஷணத்தில் இருள்கொண்டமுன் சந்தேகமுந், துன்பமும் நீங்கி யின்
பவாரியில்மூழ்கிய மாதவனாகிய சூசைமாமுனிவர் தெளிந்த ஓர் காகுயிடைங்

து மனத்திலோங்கியிருக்க வானவர்பாடிய பேரின்பத்தால் அளவில்லாப்புக ழுடைய கன்னித்தாயார் தன் ஆவிசென்றவழியே சூரியனையுடுத்த தன்திருமே னியுஞ் சென்றதுபோலச், சுற்றிலும் பொற்கதிரைவீசிய சொரூபத்தைக்காட் டிப் பூமியைவிட்டாகாயத்தில் நின்றாள். அப்படி அந்தப்பரமநாயகி யாகாயத் தில்நின்ற முறைமையும், அவ்விடத்திலாகிய மற்றவிசேஷமும் நாவினைத்துச் சொல்லவேண்டுமானால் என்னையடிமையாகக்கொண்ட அந்தப் பரமதாயாரே என்னையிரக்கமாய்க் கடாக்ஷித்துத் துணிவும், பாவுந்தக்காலொழிய நன்மையா கிய சர்வகலைக்கியானமுமறிந்த வித்துவான்களாலுஞ் சொல்லுந்திறமல்ல. ஆதலால் சுகந்தமலர்க்கொடியுயர்த்திய குசைமாமுனிகளே! வானுலகமுமகிழு ம் அதிசயப்படும்படி ஆனந்தவாரியில் முழுகி, யன்று நீர்கண்ட மாட்சிமையை நானொன்புன்மொழியால் சொல்லும்படி துணையாகநிற்பீரென அவளைவேண் டிச்சொல்லத்தொடங்குவாம். அதெப்படியென்றால், கற்றதெல்லாங் கடந்து, நன்றாயென்னுள்ளத்திலிருந்து என்னையாண்டுவருங் கன்னித்தாயார் விரத்தி னிமுறை யிதுவோவென்றுகாட்டச் சிறந்து,வளர்ந்து தேயுங்குளிர்ந்த சந்திர பிறைமையத் திருவடியால் மிதித்துத், தன்னையடைக்கலமென்றடைந்தவர்க்கு யாதொருகேடுதியும் வாராதென்றுகாட்டச், சூரியன்முன்னும்பிரகாசிக்கும் நக்ஷ த்திரங்களை முடியாகமுடித்துத், தெளிந்தஞானத்தின் முறையிதுவென்று காட் டக், குளிர்ந்தகிரணத்தைவீசுஞ் சூரியனையாடையாகவுடுத்து, வானத்திலுள்ள பிரபையைவீசிய சொரூபத்தோடு ஆகாயத்தில் நிற்கும்பொழுது செல்வமுந் மிகுந்த ஒளிவுமுள்ள வானுலகிலிருந்து தெளிவுள்ளவானவர் அருவமாயினும உருவத்தைக்கொண்டுவந்து, உயர்கின்ற தேவதாயாரின் விளங்கின மலர்ப்பா தங்களைவணங்கிச், சுகந்தமுந், தேனும்நிறைந்த புஷ்பமாரிவருஷித்து, இனியதே னமாலையாகநிறைந்த துதிகளைப்பாடித், தேவகர்ப்பப்கொண்ட அந்தக் கன்னித் தாயர்நடைந்தவரங்களென்னுங் கடலைநீந்திநீங்கிக், கிரணங்களைச் சுற்றிலும்பர ப்பிநின்றார்கள். அதெப்படியென்றால், சர்வத்துக்கு மாதிகாரணமாகிய கடவுள் எவ்வுலகும் வாழும்படி கருணைநிறைந்து இந்தக்கன்னித்தாயைப் படைத்து * நவகணவானவர்களில் கூட்டத்துக்கு ஒவ்வொருவராகவும், பலகூட்டங் களில் ஒருநூறாகவும், ஆயிரம்வானவர்களைத் தெரிந்தெடுத்து அந்தப் பர மநாயகியார் பிறந்தநாள்முதலாக இவ்வாயிரம்பேரும் அவளுடையபணிவிடை யைக்கேட்டுப் பிரியாமலநடந்து, கடல்சூழ்ந்தவுலகிலுள்ள தமதிராக்கினியாக அவளைச்சூழ்ந்திருக்கக் கட்டளையிட்டனுப்போடு. அனுப்பினதினால் அந்தவானவ ராயிரம்பேருங் கன்னித்தாயாரைப் பிரியாதிருந்து, அன்று தாங்கள்கொண்ட அழகியவதனத்திலே வான்விட்டிடன் அழகு இன்னதென்று தோன்றும்படி தோன்றிச், செங்கதிரையுமிழுஞ் சிவந்த நல்லாடையுடுத்துத், தேன்பொழியும

---

* நவகணமாவன 1. பத்திசுவாலகர் 2. ஞானாதிக்கர் 3. பத்திராசனர் 4. நாதகிருத் தியர் 5. சத்துவகர் 6. பலவத்தர் 7. பிராதமிகர் 8. அதிதூதர் 9. தூதர் இவைகளே யாம். இந்நாமங்களுக்கு வியாக்கியானமாவன—1. பத்திசுவாலகர்—கடவுளைக்குறித்த பத் தியினாலே சுவாலிக்கிறவர். 2. ஞானாதிக்கர்—கடவுளைக்குறித்த ஞானத்தி ஸாதிக்கம்பெற்ற வர். 3. பத்திராசனர்—கடவுளெழுந்தருளியிருக்குந் தேவசிங்காசனத்தைப் புகழ்ந்திருப்ப வர். 4. நாதகிருத்தியர்—கடவுளுடைய கிருத்தியத்தை யவராருளார்ச்செய்பவர். 5. சத்து வகர்—கடவுளருளாற் புறப்பல அற்புதங்களைச்செய்யுஞ் சத்துவம்பெற்றவர். 6. பலவத்தர்— கடவுள் திருவுளப்படி வருஞ்செய்கைகட்கு வரும்இடையூற்றை யவரருளாற் தீர்க்கும் பலா த்காரம்பெற்றவர். 7. பிராதமிகர்—கடவுள் திருவுளப்படியே இராச்சியசம்பந்தமான சர் வாரணங்களைமகளை நடத்துந் தலைமைபெற்றவர். 8. அதிதூர்—அதிசபிரதானவிசேஷங்களை யுலகத்திலறிவிக்க ஸ்தானுபதியாகவருபவர். 9. தூதர்—மனிதர்பிறந்த நேரமுதலாகத் தனி த்தனியே அவரவரைப்பாதுகாத்து நன்னெறியில்நடத்தி மற்றும் பிரதானவிசேஷங்களுக் களுப்பப்படுபவர்.

வாடாதமலர்முடிகளைச்சூடி, விருப்பத்தோடு அணிஅணியாய்நின்று யாவரும் "ஆண்டவன்தாயார்" என்றொருவாக்கியத்தைத் திருப்பதக்கமாக மார்பிலணிந்து, சூரியனையணிந்ததுபோல ஆபரணங்களைப் பூண்டுவிளங்கி, இளங்கதிர்ச் சந்திரனைத் தேய்த்துவிளங்குந் திருப்பாதங்களையுடைய கன்னித்தாயார் உவமையின்றி மலராத பூவரும்புபோலக், காமவிகாரங்களில்லாமல், சூரியனிலுந் தூய்மையாகிய கருத்திலமைந்த கன்னித்தன்மையைக் காட்டும்படி, குளிர்ந்த மடல் மடையுடைந்து ஒழுகியோடிய தேன்வெள்ளத்தோடு வாசனைவீசி மலர்ந்து விளங்கியதும், அந்தகாயரிக்குச் சொந்தவிருதானதுமாகிய வெள்ளை லிலியென்னும் புஷ்பங்களாற்கட்டிய நறுமாலைகளும், சொற்கடந்த தேவவரங்களால வல்லமையுடைய அந்தக்கன்னிகை தேவுலகத்தாருக்கு மிஞ்சியடைந்த அன்பினைநினைத்து, அழகெல்லாங்கடந்த தனிக்கடவுளின்மேல்வைத்த நேசத்தன்மையைக் காட்டும்படி, இரத்தத்திலுஞ்சிவந்த இதழினாலே குளிர்ந்ததேனைப்பொழியும் உரோஜா என்னும் புஷ்பங்களால் தொடுத்த நறுமாலைகளும், வான்வீட்டி னன்மையைக்காட்டும் அழகுடைய அந்தத் தேவதாயார் பரந்த பூமண்டலத்திலுள்ள மானுக்களுக்கெல்லாம் இன்பமாய் வாழ்வளிக்கும்படி, கெட்டபாவிகளுக்கும் நன்மைசெய்யுங் கருணைக்கடலின் தன்மையைக் காட்டும்படி, பலபிரிவாகப்பிரிந்து விசாலத்தோடு ஓடிவரும் ஜலத்துக்கெல்லாம் அடைக்கலமாகிய பொய்கைகளிடத்து மலர்ந்த சுகந்தசெங்கமல மலர்களால் பிணித்த நறுமாலைகளும், வேறு நூல்வழியொவ்வாகாத ஞானத்துறையையுடைய அப்பரமநாயகி இருளில்லாத அறிவிற்றேர்ந்து, வேதநூல வழிவிடாமற் கடவுளின்றிருப்பாதங்களை நீங்காத மெய்ஞ்ஞானத்தையடைந்த தன்மையைக்காட்டும்படி, வானத்திலுலாவுஞ் சூரியன் சாய்ந்துபோகும்வழியாக நீதிமுறைதவறாததுபோலச், சாயுகின்ற சூரியகாந்தமலர்களால் யாப்புநூலறிந்த கவிஞர்தொடுத்த பாக்களின்தொடைபோல புனைந்தநறுமாலைகளும், களங்கமுற்றதென்று சந்திரனை மிதித்துத் தேய்த்து, விளங்குந் திருவடிகளையுடைய அந்தஅம்மன் தன்னுள்ளங்கலங்கும்படி துயரம்வந்தாலும் நெருப்பிற்கஞ்சாத பசும்பொன்னைப்போல நெஞ்சத்தின் துணிவுவிடாமல வரப்பட்ட துன்பங்களுக்குமேலே உயர்ந்துகாட்டிய மனவூக்கத்தின் தன்மையைக் காட்டும்படி, ஆடையைப்போல மலையைச்சூழ்ந்து சலசலவென்றிரைந்து நிலத்தைநோக்கிப், பிரவாகித்துவரும் வெள்ளத்தினளவாகத் தலைநிமிர்ந்து தானணிந்த நவரத்னம்போலத் தேன்றுளிகள்பொழியுஞ் செவ்வாம்பல் மலராற்பிணித்த நறுமாலைகளும், பூமண்டலத்தில்நிறைந்த சேற்றிடத்துப்பட்ட சூரியகிரணஞ் சேருகாததுபோல அந்தக்கதிர்கலங்கிச்சேறாகினுலுங், கலங்காதநெஞ்சுடைய அந்தப்பெருமாட்டிதான கண்வழியால நெருங்கிவருந் தின்மைகளைக்கொண்டு மாசுகொள்ளாமல் சூரியன்கதிரிலுந் தூய்மையானவளென்றுகாட்டும்படி முட்களாலேநிறைந்த பரிமளஇதழ்களாலே தேனைச்சொரியும் அரும்புகள்மலர்ந்த செஞ்செவ்வந்தி மலர்களாலே கட்டிய நறுமாலைகளுஞ், சூரியனிலுந் தூய்மையாகிய அந்தமோக்ஷவிராக்கினி நாயின்பத்தைக்கண்டு பாவஞ்செய்ததினால், வந்ததப்பத்தைத் தான குற்றமொன்றுஞ்செய்யாமலிருந்து உலகமெல்லாம்அதிசயப்படும்படி முடித்தாளென்று காட்டும்படி, கரியசிறகைவிரித்தடித்த வண்டுகளணுகாத சண்பகமலர்களால் மெய்கொண்டு தொடர்ந்துவரும் வேதவிதி தொடுத்தாற்போல இசைத்தநறுமாலைகளுந், தேவுலகத்தார்முதலாய் நடுங்கி, வணங்குந் தேவவரங்களாலுயர்ந்த அந்த வானரசாள் நாம் எப்பொழுதும் பாவங்களையும், மனத்திற்கொண்ட ஆங்காரத்தையும் விடாமலிருப்பதால் நாமெல்லாம் வெட்கப்படத் தானறிதற்கரிய முறையோடு தாழ்ச்சியைக்கொண்டாளென்று காட்டும்படி, தேன்கசிந்த சகலமலர்களுக் குள்ளே, சிறிதா

யிருந்து, சொரியுந்தேனினாலும், வாசனையினாலும், மற்றமலர்களை வெல்லுகின்ற மகிழமலர்களால் தொடுக்கிய நறுமாலைகளும், நான்சொல்லும்பாவினால் நிகராகாத வல்லமைகொண்ட அந்தத்தலைவியார் வஞ்சனையுள்ள தந்திரத்தினால் பழிபிருந்து, மனிதருயிர்களைப் பகைத்துக்கெடுக்கும் பசாசுக்கள் தாங்கள்மனத்திலேகொண்ட நஞ்சைக்கொப்புளிக்க வரியதென்று உருவாகஎடுத்த பாம்பின்றலையைத் தன்தாமரைப்பாதங்களால் மிதித்து, வெற்றிகொண்டாளென்று காட்டும்படி, தேன்பொழிந்து பரிமளிக்குந் தும்பைமலர்களாற்கோர்த்த நறுமாலைகளுமாக ஒன்பதணிகளை வானவர்கள் கொண்டுவந்து, பாவிகளுக் கடைக்கலமாகிய அந்தக்கன்னித்தாயாரின் திருப்பாதங்களிலே விளங்குங் காலணியாக வைத்து, வான்வீட்டிலுள்ள பேரானந்தங் கொண்டுவணங்கிநிற்கவும், அந்தக் கன்னிகை எவர்க்கும்பொதுவாக நன்மைசெய்வதில் குளிர்ந்தசோலையோ? அல்லது மழைபொழியுமேகமோ? இருள்விலக்குஞ்சூரியனோ? அல்லது இந்தஉபமானமெல்லாங்கடந்து, அமுதத்தினுமினிய அன்போடு உயிர்களைப் பாதுகாக்குந் தாய்போல, யாவருக்கு முதவிசகாயஞ் செய்வாளென்று காட்டும்படி, அந்தப் பரமதாயார் தன் திருச்சிரசில் முடித்த பன்னிருதாரகைகளுக்குச் சரியாகப் பன்னிருவானவர்கள் பொன்முடிகளு, முத்துவடங்களும், பதக்கங்களு, மற்ற ஆபரணங்களுங் கணக்கில்லாமற் கைகளிலேந்திச், சிரங்களில் பிரபைவீசி வணங்கியிருக்கவும், பூமண்டலத்தார்செய்த பாவத்தைத்தீர்க்க அந்தவானரசிக்குத் திருமகனாக அவதரித்துவந்த தற்பரன்கிருபாலித்துப், பாவிகள்கையினாலடிபட்டு உயிர்விடுவாரென்றுகாட்டப் பதினெட்டுவானவர்கள் அவர் பாடுபடுங் கொடியமரமும், இருப்பாணிகளும், முண்முடியுங், கற்றூணுமற்ற கொலைக்கான எத்தனங்களையும், ஓரணியாகக் கையிலேந்தித், தவமுதமெய்யுணர்ந்த அந்தத்திருத்தாயார் உள்ளுருகும்படிகாட்டிச், சொல்லுதற்கரிய கடவுளின்கருணையைவாழ்த்தி முன்னிற்கவும், அழகிய ஆறுசிறகோடு தோன்றிய எழுபதி வானவர் பயந்தவர்போல இரண்டிறகினால் தங்கள் முகங்களைமூடியும், இரண்டிறகினால் பாதங்களைமூடியும், மற்றஇரண்டு சிறகினால் காற்றும், பிரகாசமும் பரப்ப, அதைவெண்சாமரைபோலப் புடைத்தடித்துப், பூமண்டலத்திலில்லாத வானமயினுமுயரத் தங்கள்இராக்கினியின் திருப்பாதங்களை ஆசையோடு தொழுதுதொழுது சூழ்ந்திருக்கவும், போர்புரிந்து பசாசுக்களைவென்றடக்கிப், பொன்னைப்பழித்துக் கிரணத்தைப்பரப்புங் கூரியவேலாயுதத்தைக் கரங்களிற்பிடித்துச், செம்பொற்றகட்டின்மேலே பசும்பொன்னினலெழுதினதுபோலப்பொற்கவசத்தின்மேல் ஆபரணங்க ளசைந்துதூங்கப் பசியபொன்னிலே பதிக்கப்பட்ட இரத்தினங்களால் விளங்கிய மகுடத்தைச்சூடி, மிக்கயேலென்னும் வானவனுங், கபிரியேலாகிய திருவல்லானென்னும் வானவனும், அந்தவானவர்பேரணிக்கு இருதலைவர்போலத் தோன்றவுமாயின.

அல்லாமலு முற்கூறிய ஆயிரம்வானவர்களன்றி, மற்றஅனேகவானவர்கள் கடலில் அலைகள்மேலலைகள்வருவதுபோல, அரசர்கள்தன்மையாக அணியணியாய் நெருங்கி, வானத்தின் சுடரொளிகளைக்கடந்த மகுடங்களும், மணிகளையிழைத்து வான அழகைக்காட்டும் பலஆபரணங்களும்விளங்கச் சிவப்புநிறமுதலான பலமலர்மாலைகள்பொழிந்த தேன்மாரியை குமிழிகளெழும்பும்படியாகப்பெய்து, உயர்ந்த மணிக்குடைகளுங், கொடிகளும், ஆகாயமெங்குநிறைய வரிசைவரிசையா யேந்திப் பூமண்டலத்தும், வான்மண்டலத்து முள்ள பல வாச்சியங்கள் மழைமேல்முழங்கிய மேகம்போலமுழங்க இனிய ஓசையோடு நான்சொல்லிக்காட்டுந் தரமல்லாமல் கற்றநால்களிலுமுயர்ந்த பாத்தொடைகளையின்பமாகப்பாடி, மகுடங்களோடு மகுடங்களடிபட்டு முழங்க விரும்பித் திருவடிவிற்பணியும்போது அவர்களணிந்த மலர்மாலைகள் அசைவதினால் அதி

வின்றிழியுந் தேன்மழை சலசலவென்னவும், நவமணிவடங்க ளசைவதினால் கணகணவெனவும், என்புன்சொல்லால் சொல்லப்படாத தன்மையாகக் கடவுளைச் சூற்கொண்ட அந்தத்திருத் தேவதாயாருடைய சூரியனிலும் எழுபங் கதிகிரணங்களை யுமிழுந் திருப்பாதங்கள் பிரகாசிக்க, அந்த வானவர்தள் தங்கள் தலைமேலணிந்து வணங்கி, அவர்களுக்குள் சிலர்சொல்லுவார்: பாம்புருவத்தைக்கொண்டு பசாசுக்களுமிழ்ந்த விஷத்தையொழித்து, உயிரைக்கொடுக்கூழினியமருந்திவளே; இராவிலுள்ள இருளினும் இருளைத்தரும் பாவங்கெடும்படி சூரியனொளியினும் விளங்கிய சுடரிவளே; எங்கள்மனத்தின் கேடறவும், எங்களுயிரைக்கொல்லுகின்ற பகைநீங்கவும் உறுதியிவளே; உயிரிவளே; மிகுந்த கொடையிலும், கருணையிலும் ஒப்பில்லாக்கட லிவளேயென்பார். சிலர் பசாசுக்களின் பெரும்போரினால் உயிர்மெலிய அரியகவலையடைந்தவருங், குழந்தைகளிலொழுக்குமருந்துவாருங், தரித்திரத்தாலும், பிணியாலும் மெலிந்தவரும், மரணநேரத்தி லயர்ந்துபோர்ந்தவருங், குடும்பமெலிவாலும், பெருமை யினத்தாலுங் குழைந்தழுதவாருங், புலம்பினவரும், மரணமடைபவரும், பூமண்டலத்திலுள்ள மற்றெல்லாருங், உதவிபெறும்படி தன்மைநிறைந்த பெருங்கடலிவளே; என்பார். சிலர் வானுலகமுதலனைத்துலகங்களையுந் தனியேயாண்டுநடத்துந் தன்மையுடைய அதிபதியாகிய தற்பரனைத் திருமகனாகக் கருக்கொண்டு, பூவுலகத் துன்பஞ்செய்யும்பெருவெப்பை யவிப்பதற்குக் குளிர்ந்தகாற்றுவீசுங் கவரியும், நிழலைச்செய்யுங் குடையாகுடைய சமுத்திரக்கினியிவளே; கருணையைத் துளியாகக்கொண்ட மேகமிவளே; என்றுசொல்லி வாசத்தேன்மலரை மழையாகப்பொழிந்து இரண்டுதிருப்பாதங்களையும் வணங்குவார். சிலர் வெண்சாமரைவீச நெருங்குவார். சிலர் குடைகளைமேலேபிடிக்க அணுகுவார். சிலர் அந்தக்கன்னித்தாய்தந்த உதவியத்தை முழக்க விரும்புவார். சிலர் கடவுளனுப்பிய மறுமொழிகொண்டுவருவார். சிலர் அழகினாலெழுதப்பட்ட அந்நாயகியின் திருவதனத்தை விருப்பத்தோடாராய்ந்து நோக்குவார். சிலர் அதிசயத்தினால் உள்ளுருகுவார். சிலர் புகழ்ச்சிசொல்ல நினைத்துத் தகுந்தஉபமானமில்லாமல் மெலிவார். சிலர் எப்படியானாலுந் துணிந்து புகழுவார். யாவரும் வணங்குவார். இப்படிவானவர்கள் வணங்கியிருக்க என்றுமுண்டவன் வேதத்திற்சொல்லியதெல்லாம் நன்றாகும்படி, இவையனைவையுந் தொகையும், அளவுமில்லாமல் செய்யும்பொழுது சூரியனையாடையாகவுடுத்துத் திருவடிவு மிகுக்கு, கருணைக்கடவுளைத் திருச்சூலாகக்கொண்ட கன்னித்தாயாரோவென்றால், சொலலிலடங்காததை நான்தருமத்திற்குரிய ஞானத்தோடு அடையும்படிக்கு அடியாரினிமேல் செய்யவேண்டியதேதென்று மனத்திலெண்ணியிருக்க; அந்த எண்ணத்தை வானவர்களினிதாயறிந்து உயர்ந்தார்கள். ஆதலால் சதசஜதுரகபதாதியாகிய நால்வகைச்சேனைசமுத்திரத்தையுடைய அரசர்களுந், தங்கள் செல்வமிதமென்றசலலவென்றுவருந்த வல்லபமும், பெருமையுந், கருணையும், அறிவுமுள்ள கடவுள் ஒருசிறுமனையில் இன்பமும், ஒளியுஞ், செல்வமுமெல்லாங் கூட்டிநடத்தின தன்மை யிதுவானால பாவமுங், தண்ணீருங், துன்பமும் நிறைந்த பூவுலகம் தேவருளடைந்து களிகூர அன்றையதினம் பரகதியோங்குந்திருந்தது.

இவையெல்லாம் நடக்கும்போது பசாசுக்கள் புறஞ்செயித்தேகும்படி சுருதிமொழியால் நடுங்கச்செய்யும்வல்லமையும், மலர்க்கொடியு முயர்த்தியருசை மாமுனிகள் ஒப்பில்லாத இன்பக்கடலில்மூழ்கி, மற்றதெல்லாமறந்து, கதிர்பட்டகண்ணொடியைப்பார்க்கிலும் கதிர்களைப்பரப்பி, ஒற்றைச்சக்கரத்தையுடையதேரிலேறுநக ஒருசூரியனைப்போலாகிப், பாப்பிய பொற்றகட்டின்மேல நக்ஷத்திரங்களை மாலையாகப் பதித்துவைத்ததுபோல என்னையாளும் பரமதிருத்தயாபர மற்றச்சுடர்கள்யாவும் நிகராகாமல் விளங்கிய கோலத்தையுடைத்து அன்றைப்பி

ணம் பரப்பியுதயிக்கத் தானுண்டாகிறதில் அதற்கொத்த முறையோடுவிளங்கி,
ஒளிசெய்யும் அலைகளைச்சுருட்டிவெள்ளமேற்றினதுபோல, விருப்பத்தினலெ
ழுந்தமகிழ்ச்சியுள்ளடங்காமல மலர்ந்த நன்பூங்கொடிநிறைந்த தேனைப்பொ
ழிந்ததுபோல, மிகுந்தவணக்கத்தோடு மினியபுகழ்களைச்சொல்ல, ஆகாயத்தி
லெழுந்தருளிய நாயகியின் அடிகளை விரித்துச்சொல்லுவார்: எனக்குத்தாயும்
நீ, தந்தையும் நீ, உயிரும் நீ, மற்றெவையும் நீ, நிறைந்த இன்பக்கடலும் நீ,
ஒளிநிறைந்த சுடரும் நீ, கருணைநிறைந்த முகிலும் நீ, கடவுளெழுந்தருளுஞ்
சிங்காசனமும் நீ, நன்னெறிகாட்டுஞ் சுருதியின்வழுவாத நெறியும் நீ, மலராத
வாசனைப்பூவரும்பும் நீ, நிறைந்தநூலினால் நிகராகாத சொரூபியும் நீ, ஆதலால்
அழகிய ஆபரணமேவாழி என்னிருதயத்திலிருக் தென்னை யடிமையாயுடைய
வளேவாழி, செல்வஅணியேவாழி, சந்திரனைப்போல யாவருக்குங் குளிர்ந்த
நிழல்செய்யுங் குடையேவாழி, எல்லாச்செல்வங்களையு மழையாகப்பெய்யும்
புயலேவாழி, வேதசொரூபியேவாழி, கருணைகரியேவாழி, உயிரெல்லாங் காப்
பாற்றும் நிறைந்த அமுதக்கடலேவாழி, நிகரில்லாத நாயகியேவாழி, அநந்த
தயாபரனுக்குரிய அருளுடைய தாயேவாழி, வானவர்க்கழகிய இராக்கினியே
வாழி, மல்லிகையொத்த கன்னிகைகளையாளு மரசியேவாழி, நிறைந்தஅருளேவா
ழி, வேதமேவாழி, புண்ணியமேவாழி, மிகவும்வாழியென்று சொல்லிப்புகழ்ந்து
சூழ்ந்திருக்கும் வானவரடைந்த ஒப்பற்ற நிறைந்த காட்சிபோலத் தான் என்
பதும், தனது என்பதுமாகிய இருபற்றினையுந்தவிர்ந்த சூசைமாமுனிகள் மகிழ்ந்தி
ருக்கும்போது பிதாவுஞ், சுதனும், †சேயனுமென்று ஆள்வகையிலேமூவரா
யிருந்து மூவர்க்குமொரே தேவத்துவமானதால் ஒன்றாகிவிளங்கிய மெய்யக்
கடவுள் அரியபெருமையோடு வானின்றுந் தயாபத்தோடுவந்து உருவமா
யவதரித்தெழுந்தருளிய தனது திருமுகத்தைக் காட்டியவுடன் அந்நேரமே
சூசைமாமுனிகள் மறைவில்லாமல் தெளிவாகத்திருமுகத்தைக் கன்னித்தாயார்
திருவுதரத்தின் மேலேகண்டு பெருமைகொண்ட அளவில்லாத இன்பத்தை
யநுபவிக்க, அப்பால் பூமண்டலத்தினியற்கையைக்கடந்து சிறந்தநாயகியாகிய
கன்னித்தாயானா உலகஇராக்கினியே விருப்பத்தோடு [illegible]கழித்து, உள்ளமுங்
கொள்ளாத திருவருளைபுரிந்து எவ்வளவையுமல், முகத்திற்காட்டப்படாததின்
பமுட்கொண்டு இரணஉருவோடுநின்ற வானவர் இந்தமலைகளில்விளையாதமணி
களிழைத்த ஆபரணங்களை அந்தத் தேவமாதாவுக்கு விரும்பிச்சூட்டியவுடன்
என்னுயிரையாளுங் கடவுள் தயாபமிகுந்து தன்னுயிராகவே சமஸ்த உயிர்க
ளையுமெண்ணி நேசித்தாளு மிராக்கினி யிவளே என்றுகாட்ட, அளவில்லாத
கிரணங்களைப்பரப்பித் தாரகாகணங்கள் சூழ்ந்து, மின்னுக்குயிராகிய அந்தப்ப
சமதாயாரின் திருச்சிரசிலேவிளங்கிய ஓர் திருமுடியைச்சூட்டினர்.

அதன்பின் நிறைந்த அறிவும், அருளும், நீதிமுறையுமுடைய சூசைமாமு
னிகள் முன்னம் பழிப்பாசகினைந்த சந்தேகமும் நீங்க இவையாவையுங் கண்டு
மனத்திலோங்கி ஒன்றும்பேசாமல் சொல்லப்படாதவிதமாய் நினைத்து இன்
பமாயமூழ்கிருக்கும்வேளையில் தாமரையென்பவோ ? வாசகமலத்தினுள்ள மூத்
தென்பவோ ? ஒளிநிறைந்த வெள்ளியசந்திர பிறையென்பவோ ? கிரணங்க
ளைச்சுருக்கித்தோன்றின சூரியவடிவமென்பவோ ? யாதென்பவோ ? என்று
சொல்லும்படி, பளிங்கிறைச்செய்த அழகியசெப்புக்குள்ளே வைத்தவயிரமணி
மறைவில்லாமல் வெளியேதோன்றினதுபோல உலகெல்லாங் காப்பாற்றும்ப
ரமநாதன் குறைவொன்றுமில்லாமல் எடுத்த திருவுடலின்சொரூபத்தை
அவருடைய திருத்தாயாரின் திருவுதரத்தில் நன்றாகக்கவிகூர்ந்து கண்டபடியா

† சேயன்—இஸ்பிரித்து சாந்துவாகிய சர்வேசுரன்.

லக்கப்பரமநாதனுடைய இரண்டுகமலநேத்திரங்கள்வழியாயொழுகுங்கிரணங்களையுண்டு,செங்கதிரையுண்ட தூயபளிங்கினாற்செய்யப்பட்டபெருந்தூண்போலச் சூரியனைப்பழிக்கும் பிரபையைவீசுகின்றார். இப்படிப்பூங்கொடியுயர்த்திய ஞானசமாமுனிகள் அவதாரமான திருவுடலைக்கொண்ட பரமநாதனைக் களிகூர்ந்து இமையாமல்பார்த்துக்கொண்டிருக்கப், பரமநாதனுந் திருவிழியால் இவரைப்பார்க்கவே இருவருடையதிருக்கண்களுங் கலந்தெதிர்ப்பட்டு,உரைக்கத்தகாத நேசமாயினபடியால் திவ்வியநாதன் குளிர்ந்ததாமரைமலருமபடி சூரியன் தன் கண்ணாற்பார்த்ததுபோலச் ஞானசமாமுனிகளைவிருப்பத்தோடு நன்றாய்க்கடாக்ஷித்து, அவருடையவுள்ளத்திலே எண்ணப்படாத வுணர்ச்சிகளை யினிதாய்த்தந்து சொல்லுவார்: வேதத்தின் மேன்மையைக்காட்டிய பெரியோனே! கலியாணமாக நான் முன்னுனக்கு மலர்ந்தபூங்கொடியைத்தந்த விருப்பத்தோடு உனக்குவந்த பூங்கொடியாகிய உன்துணைவிகொண்டமாக்ஷிமை யெவ்வளவென்று நினையாத காக்ஷியா யின்று கண்டுகொண்டாய்; ஆதலால் இத்தன்மையுடையவருக்கு நீஇங்கேதுணைவனானதினால் உனக்குத்தகைமையைக்கருதி,மதிக்கப்படாத நிலைபெற்றவரங்களைத்தந்தேன்; புறக்காரணங்களொன்றுமில்லாமல் இவள் கந்நிகையாயிருந்து என்னைப்பெறுவாளாயினும், நீகூடவிருந்து என்னைவளர்க்குங் கைத்தாதையாக உன்னைத்தெரிந்துகொண்டு ஒப்பில்லாத நன்மைகளைக்கொடுத்தேனென்றறிந்து அதற்குத்தகுதியாக நடந்துகொள்வாயென்று சொல்லியவுடன், மாதவனாகிய ஞானசமாமுனிகளுக்கு மழைபெய்ததினாற் பொங்கிய வெள்ளம் புரண்டோடிக் கடலிற்பாய்ந்ததுபோலத், தம்பரனை வளர்ப்பதற்குரிய திருவரப்பிரசாதங்கள் வெள்ளமாக வுள்ளத்தில் வந்தமையால், வானவராகிய புஷ்பமாரிவருஷித்து அவரை மிகுந்தவிருப்பத்தோடு உள்ளேவணங்கி, எண்ணப்படாத துதிகளைச்சொன்னவர்களாயிருக்க, அடைக்கப்பட்ட நெருப்பா[illegible]வாய்திறந்து உயர்ந்த ஆகாயத்தி லெழும்புவதுபோல வேதத்திற்கு ஒரு கொழுகொம்பாகித் தருமத்தையடைந்த மாதவனாகிய ஞானசமாமுனிகளின் நல்லஉயிரானது ஆண்டவனே தடுத்துவிடாவிட்டால் மிகுந்தஅன்பினால் உடலைவிட்டுப் பிரிந்து[illegible]தன்மையாயிருக்க மனத்தைத்தூண்டிய வாசையோடு அம்முனிகள் திருத்தாயுதரத்திற்கண்ட திவ்வியகுழந்தையின் திருப்பாதங்களைத் தரையிற் சிரசெனவிட வணங்கி, மீளவுமெழுந்திருந்து, பார்க்கும்போது முன்கண்ட அருள்நிறைந்த காக்ஷியொன்றுங்காணாமல் தன் திருத்துணைவி தன்னண்டையி லிறங்கியிருந்திருப்பதைக்கண்டு சம்பவித்ததெல்லாமாராய்ந்து உள்ளத்திலோர்கின்றார்.

ஐயநீங்குபடலம் முற்றிற்று.

ஒன்பதாவது - மகிழ்வினைப்படலம்

இன்னயாணையுமுளத் தெண்ணரியெண்ணியவிலே க்
குன்னலாதுளமுயர்ந் இன்பறுதுருகுவா ன்
பன்னலாலடைவரும் பண்படைந்துயரினு ள்
துன்னலரிலடையவன் சூழ்ந்தமாதவநிலோ ன்.

இப்படியாகச் சொல்லிலடங்காத முறைமையாலுயர்ந்த திருக்கந்நித்தாயார் தனக்குத் திருத்துணைவியாகவந்ததினால், தானடைந்தநன்மையை யாராய்ந்த மாதவனாகிய ஞானசமாமுனிகள் முன்னடந்ததெல்லா மாராய்ந்தமையால்,

உளத்திலோங்கி முடிவின்றிக் களிகூர்ந்துருகிச்சொல்லுவார்: சமஸ்தத்துக்கு முதற்காரணமாகிய கடவுள் மூவுலகிற்கு மொருவனுய்நின்று தகப்பனுடைய செய்கை யொன்றுமில்லாமல் தூயகந்நிகைக்குத் திருமகனுன என்பிதாவை நானிவ்வுலகில் வளர்ப்பது எனக்குத்தகுந்ததன்மையோ? என்பார்; வானநக்ஷத்திரங்களு நிகராகாத அழகுள்ளதா யினி ஆண்டவனெடுக்கு மெல்லிய திருவுடலைக்கண்டு, நான்வானுலகிலநிகராத வரங்களினலுயர்ந்து, காரங்களாலேந்த மலரினின்றுவழியுந்தேனினுமினிமையாய்த் தோர்ந்தசொற்களையந்தத்திருக்குழந்தைசொல்லும்போது நான்நேராகநின்று வெட்கப்படாமற்கேட்பேனே? என்பார். வேதமேவடிவாகஅணிந்த மஹாதவத்தோரும், பாவத்தைத் தீர்த்தளிக்க இங்கேயவதரிக்க வேண்டுமெனவிரும்பிய கடவுளின் திருப்பாதங்களைப் பாவி நான்காணவும், என்குறைதீர என்தலைமேலணியவுங்கூடுமோ? என்பார். கடல் சூழ்ந்த இவ்வுலகோருங், கதிருலவு மவ்வுலகோருஞ் சேர்ந்துவணங்குஞ் சந்நிரன்மேலுலாவிய திருப்பாதங்களையுடைய இந்தக்கந்நித்தாயை நான் திருத்துணைவியாகப்பெற்றதினல நானடைந்தநன்மைகள் சீர்கொண்டு அடிதொடுத்துபாக்களி னற்சொல்லுடையாரு மடையுந்தன்மையோ? என்பார். வானுலகவாசனையைப்பொழிந்து மலர்ந்த வாடாத பூங்கொடியிருந்தோடு எனக்குவந்த கோடாத பூங்கொடியாகிய இந்தமணத்துணைவியை, நானடைந்ததினலவானுலகத்தார் தமக்குந்தகுமாகில் விரும்புந்தன்மையெனக்காயிற்றென்பார். இப்படி யாவுஞ்சொல்லி முன்னடைந்தகாக்ஷியில் கண்டதெல்லாம் ஆராய்ந்த தெளிவினல் உயர்ந்ததன்திருத்துணைவியைநோக்கி மீளவுந்தாழ்ச்சியோடுபரப்பட்ட உணர்வுகளைச்சொல்லுவார்: தூயபிறைமேலெழுந்த அழகியதிருப்பாதமுஞ், செக்கதிருடுத்துச்சிறந்த திருமேனியும், வானநக்ஷத்திரங்களைச்சூடி மின்னிய திருச்சென்னியும் அழியாமற்கொண்ட மாக்ஷிமையுடையாளே! கடல்கொண்ட பூவுலகமுங், கதிர்கொண்ட வானுலகமு மாதிநாளிலே கடவுள்துணைக்காரணமொன்றுமில்லாமற்படைத்த அரியமுறையை யின்று யிங்கே செய்ததைக்கண்டேன்; எவ்வுலகங்களு முடிவின்றிவணங்குங் கடவுள் அழியாத கருணையால்வந்து காரணமொன்றுமில்லாமல், பேறும்பெருமையுமில்லாத பேதையாகிய என்னை யுன்னுலே யளவில்லாத செல்வம்பெற இதோ தெரிந்துகொண்டார்; ஆதலால், எனக்குத் தாயுந், தலைவியும் நீயே, குறையாதகருணைசெய்தென்னைக்காத்தவள் நீயே, நான்புரிந்த குற்றமெல்லாந் தேய்த்தழித்தவள் நீயே, கருணையாகிய உன்னருமைத்திருமகனேடு அன்பின்வாரியில் தோய்ந்தவள் நீயே, அம்மணீ! வானுலகோர்வணங்கும் உன்பெருமையறியாததினல் உன்னையேவலகொண்டேன்; இனிமேல் நீ சினிதாய்க்கொண்டவருளினல இதைப்பொறுத்துத், திருச்சரீரமெடுத் தவதரித்த உன்திருக்குமாரனேடு நீயுமென்னையாண்டுகொள்வாயென்று சொல்லியிறைஞ்சினர். இப்படி ஆசையறுத்த உள்ளத்தில் வல்லமைசெய்யு மருள்வடிவுடைய சூசைமாமுனிகள் சொன்ன சொற்கள் நிகரில்லாதமாக்ஷிமையை மனத்திலேயுண்டவடிவுடைய கந்நித்தாயார் திருச்செவியில்பட்டபோது நெருப்புப்பட்டதுபோலநொந்து வானோர்க்கு இராக்கினியாள் திருவாய்மலர்ந்து சொல்லுவாள்.

அவதரித்தகடவுளை நீர்வணங்குவதுநன்மையாயிருந்தாலுங், குறைநீங்கிய கர்ப்பத்தினல் ஆண்டவனென்னேடு ஒருபொருளா யிருக்குமளவும் அவரை வணங்கினு, லந்தவணக்க மெனக்கேசெய்ததாகத்தோன்றுமாதலா லினிவணங்காதீர் வணங்காதீரென்று அழுதுஅழுது சொல்லித்தொழுதவுடன் பசுந்தாளினூன்றிய தாமரைபோலப் பிறைமேலூன்றிய பொற்பாதத்தாள் நொந்தாளென்று, சூசைமாமுனிகள் தாமும் நொந்து, வணங்காதபடிக்குச் சம்மதித்துச் சொல்லுவார்: என்னையாள்பவளே! உனதுசிவந்த திருப்பாதம்நோகப் பணி

வேலையை நீசெய்யுமுன் அவையெல்லாமடியேன்முடிக்கத்தக்கது, நானேசெய்வானென்றபோது அதற்குக்கந்நித்தாயார் உண்டானபணித்தொழிலெல்லாம் என்னுடையதென்றுசொல்லுந் தாழ்ச்சியில்மாசின்மையுடைய பெரியோராகிய இவ்விருவருந்தமக்குள்ளே பின்வாங்காமற் பேசிக்கொண்டு வானவருமதிசயப்படமுந்துவார்கள். அதெப்படியென்றால்:—நீசமனிதர்கள்வெள்ளத்தாலவருந்தண்ணீர் பள்ளத்திற்சேருமென்றுஞ், செல்வத்தினால் இன்மைவருமென்றும் உணராமல் அரசாள்பவரன்றி, வாழ்பவரில்லையென்று காய்க்காத மரத்தின்கொம்பு நிமிர்வதுபோலவும், வளையாதவில்லிலே தொடுத்தபாணங் குறியிற்பாயாததுபோலவுஞ், செல்வங்கொண்ட நீசர் இறுமாந்திருப்பார்; மெய்யானபெருமைகொண்ட இவ்விருவருமோ மனத்தாழ்ச்சியுடையா ருயர்வாரென்று தாழ்மையைவிரும்பிக் காய்த்தகொம்பு வளைவதுபோலவும், வளைத்தவில்லில் தொடுத்தபாணங் குறியிற்பாய்வதுபோலவுங், காற்றின்முன்வளைந்த மரங் கெடாததுபோலவுந், தெளிந்தநூலோர் ஆங்காரங்கொள்ளாரென் றிருப்பார். யாதொரு பொருளைக்கொண்டுநிறைந்த பொற்கலஞ்சப்திக்காததுபோல, நிறைந்தநூலோர் பெருமைசிலாக்கியம்பேசார்; தன்னிழலுக்கு முதுகுகாட்டிப்போனவனை யந்தநிழல தானேதொடருமாப்போல, ஓரோரிடத்தும் புகழ்தேடாதவனைப் புகழ்தானே தொடருமென்று மாசின்மைசெய்யுந் தருமங்களைக்கொண்டபெரியோர் உயர்ச்சியைவிரும்பார்; இது சுருதியின்விதியென்பதற்குக் கடவுளும் அவதரித்து வந்ததினால் எளிமையைக்கொண்டார்; என்றுஇவைகள்யாவையுங்கண்டதினால் தாழ்ச்சியிலுயர்ந்த பெருமையுடையகந்நித்தாயாருஞ், சூசைமாமுனிவருங் குற்றத்தைத்தருகின்ற ஆள்வினையைக்கருதாமல தாழ்வினைத்தானே நீதியென்றுணர்ந்து தாழ்ச்சியோடு நடக்கும்படி தமக்குள்ளே பேசிக்கொண்டிருக்கும், பலநாளில் ஒருநாள் கந்நித்தாயார்தான் குடியிருக்குந்திருமனையை விளக்கினள்; முக்காலத்தும் நிகரில்லாத முனியாகிய சூசைமாமுனிவர் கண்டு கடவுளைத்திருச்சூலாகக்கொண்டவளுக் கிதுமுறையோ? என்றுசொல்ல அதற்குக்கந்நிமரியம்மாள் இந்தப்பெருமையுடையவளுக்கு இராஜாவாகிய உமக்கு இத்தொழிலாகுமோ? வென்று சொல்லிக்கொண்டே எடுத்தவேலையை முடித்தமாத்திரத்தில் உன்னுடையதென்றும், என்னுடையதென்றும் பேதமில்லாதமனையில் ஒருநாள் மாதவனாகிய சூசைமாமுனிவர் வேலைசெய்யும்பங்கு தன்னுடையதென்று உள்ள வேலையைச்செய்யும்போது, வானவர்க்கரசியாகிய கந்நித்தாயார் தவமுதபயனைத்தரு மிந்தநன்மை யென்னுடையதே யென்றுசொல்ல, அதற்குமலர்ந்தபூங்கொடியுயர்த்திய சூசைமாமுனிவர் இதுநன்மையானால் உன்னுடைய தென்பாயோ? இராஜனாகிய எனக்கல்லவோ வேண்டுமென்றுதானேயுழைத்து முடித்ததல்லாமல் சூரியனுதிக்குமுன்னம் வண்டுகள்வந்து தாமரையின்குளிர்ந்த இதழ்களைக்குடைந்து, துளித்ததேனை யருந்துவதுபோல நித்திரைகொண்ட கந்நித்தாயார் தனது கமலநேத்திரங்களைத் திறக்குமுன்னம் விரும்பினபணிவிடைகளெல்லாஞ்செய்வார்; அவர்முடிக்காதவேலை கொஞ்சமிருந்தால் தான்வினைத்துமுடிக்கும்படி மேகங்கள்சுமந்து நக்ஷத்திரங்களையணிந்த குழலுடைய கந்நிகைகேட்கும்போது சூசைமாமுனிவர் புன்னகைகாட்டி, அது உனக்கியலாதென்று மறுப்பதினால் நடுவிலொருவன் பெரும்பொருளை யிழந்து மயங்குவதுபோல வானோர்க் கிராக்கினியாள் மிகுந்த விருப்பத்தால் நொந்தழுது கடவுளைநோக்கிச் சொல்லுவாள்: என்ஆண்டவனே! திருச்செல்வோனே! முடியாதவருளுடையானே! எனதுதிருமகனே! நீயவதரித்துத் திருக்குமாரனுமாகித், தாழ்ச்சிக்கு ஒளியைச்செய்யவந்தாயே; உனக்குத்தாயாகிய அடியாளுக்குத் தாழ்ச்சியின்பெருமை வேண்டாமென்பதேதோ? இத்தத் தூயநன்மை யெனக்கில்லாமற்போனா லென்னுயிர்சாகாமல்நிற்குமோ? என்றாள். அதற்குத்

திருமகனுகிய கடவுள் என்திருத்தாயார் வருந்துவாளோ? என்றிரக்கங்கொண்டு தன்திருமாதாவின் இருதயகமலத் துன்பந்தீர்ந்து மலரும்படி, தூதாக அனுப்பிய ஒருவானவன் ஒருநாள் சூசைமாமுனிகள்திருமனையிலுள்ள வேலையை முடிக்கப்போகும்பொழுது அவருக்குமுன்வந்து, மலர்ந்தவாயில் தேன்மொழி கொப்பளிக்கச் சொல்லுவார்; விளங்கிய அறிவையுடைய திருமுனியே! நுனிக்கொம்பிலிருந் ததின்மே லுயரத்தாண்டினுல் விழுந் திறப்பதுபோல, அகங்காரங்கொண்டதினுல் வானவருள் சிலர் பசாசுக்களாகவும், மானிடர் பாவிகளாகவும் நினைத்திராமல், கெட்டாரென்றறிந்த கடவுள்தானே திருமகனுகி, மானுக்களுக் கெளிமையைக் காண்பிக்க அவரே அவரைத்தாழ்த்திய முறையோடு, அவருடைய திருமாதாவுந் தாழ்ச்சியின்தொழிலைச் செய்யாதிருப்பது நன்றோ? மேகமண்டலத்தின்மேல் வாழும் எங்களுக்கும், மீன்கள்நிறைந்த கடலாற்சூழப்பட்டுக், கல்லால்நிறைந்த பூமண்டலத்தவர்க்கும், இன்பஞ்செய்யுங் கருணையின்வல்லவளாகிய அந்தத்திருமடந்தை வருந்துந் துயரத்தை நீ கண்டாலும், அவள் விரும்பிய தாழ்ச்சித்தொழிலைக் கொடுத்தாலாகாதோ? இன்பத்தோடு வானுலகமும்வணங்குமக்கன்னிகையை நீயும்வணங்குவது நன்மையல்லவோ? ஆதலால் அவள்விரும்புந் தாழ்ச்சியின்தொழில் அவளுக்குரியமுறையென்றுந் தாயும், பிள்ளையும், இனிமேல வாழ்ந்துண்ணும்படி வேர்த்துழைப்பது உனக்குரியமுறையென்றும், கடவுள்கட்டளையிதுவாமென்றுஞ் சொல்லி, வானவன்மறைந்துபோனவுடன் எவ்வகைப்பாக்களாலும் நிகரில்லாமல் சுருதிக்கொரு கொழுகொம்பாகிய சூசைமாமுனிகள் சொல்லுவார்: என்னாண்டவனே! வான்மேல்நின்றுவரும் விதியின்மே லெனக்குவேறுண்டோ? நீசெய்யுங்கட்டளை நான்விரும்பும் நீதிதானேயென்று சொல்லிவணங்கிப், பின்பு புகழப்படாத மாட்சிமையையுடைய கன்னிமரியம்மாளுக்குக் கடவுள் தந்த திருக்கட்டளையை யறிவித்துக், கடல்சூழ்ந்தஉலகத்தையாண்டுவரு மரசர்களின் பெருமைக்குமேலாக உபமானங்கடந்த குணமுடைய அவ்விருவருந் தினைக் காரணமொன்றுமில்லாமல் சமஸ்தமும்படைத்து, மூவுலகிற்கும் ஒருவனுகிய ஆதிகாரணக் கடவுளுக்குரிய அரியமுறையோடு தாழ்ச்சியை யடைந்திருந்தார்கள்.

பள்ளத்தைத்தேடித் தண்ணீர்வருவதுபோலச், செல்வத்திற் கழகாகிய தாழ்ச்சியைத் துணையாகத்தேடின இவர்கள் மேகங்களுக்கழகாகிய மழைத்துளி வருவித்தல்போல தருமத்தினழகுக்கு அழகாகிய கொடுக்குந்தொழிலைக்கைக்கொண்டுநடந்ததெப்படியென்றால்:—தேடப்படாத மேன்மையையுடைய இவர்கள் இனிவரும் பரமகதி நன்மையின் ஆசையினுல் யாவருக்கும் அன்பைவழங்கும்படி நன்மையாகப் பெருங்கொடைதானந்தந்து; துன்பஞ்செய்யும் பற்றுதல் தீர்ந்தொழிய வெறுமையைத் தேடியும், இப்போர் நீட்டுங் கரங்களே வான்வீட்டினன்மைவிளையும் நிலமாகுமென்றுநினைத்து, உள்ளேகொண்ட அருளினுல் எண்ணப்படாத பொருள்களை அவர்கள் கைகளிலே விதையாகக்குவித்துவைத்துங், தரித்திரர்க்குக் கொடுத்துக்கொடுத்துத் தாங்களுந் தரித்திராகியபின் தண்ணீருள்ளகுளங்கள் வற்றிப்போனுல் மீளவும் அதைத் தோண்டுவதுபோல, இருதயகமலத்துள்ள கருணையால் தங்கள்தேகத்தை வருத்தி வேலைசெய்து பிறஉயிர்களெல்லாம் நன்றாய்வாழும்படி கொடுத்தும், உழுதுஉண்பவர்களுயிர்வாழ்வார்; மற்றவர் அவர்களைத்தொழுது உண்பவராகுவார்கள்; ஆதலால் உண்பவருள்ளும் இவர்களைத்தன்மை யுடையாரென்று சொல்லும்படி தாங்களுழைத்துக் கொடுக்குங் கொடையை வாங்குவாரில்லாதபொழுது அழுதுஉண்டும், இவர்களுடைய அந்தமுள்ள தொழிலைக் கொளுவோர் இவர்களுக்குத் தந்த வொன்றினைப் போதும்போதாதென்று

சொல்லாமல் தந்தவனைவாழ்த்தி யனைத்தானமாகச் செய்யும்படி பெய்யு
மேகத்தையொத்த திருக்கரங்களால் வாங்கியும், பலமன்னவர்களாலே யோங்
கிய குலத்துதித்த இவ்விருவரும் எவர்க்குமினிதா யருள்படவுரைத்த சொல்
லே நாவிற்கழகென்றும், பிறர்துயரைக்கண்டு இரங்கினால் கண்ணுக்கழகென்றுந்,
தானங்கொடுத்தலே மலர்ந்தகரங்களுக்கழகென்று மெண்ணியும், மேகத்தை
யளாவிய மாளிகைகள் பாவிகளையுட்கொண்டிருந்தால் பயனுறுமோ? என்று
சங்கினுள்ளிருக்கு முத்துப்போல ஒருசிறுமனையிலிருந்து, எங்கும்விளங்கிய
மாட்சிமையையடைந்தும், அங்கப்பாலைகளுக் கோலமெழுதுவாரில்லையென்று
அகங்காரத்தால் மனதைச் சிறைப்படுத்தும் வலையையொத்த ஆபரணத்தை
வெறுத்து, அருளைப் பூரணமாகவுட்கொண்டு, எளியவேஷத்தைத்தரித்தும்,
வானகங்கள்வாழ்த்து மிராக்கினியாகிய கன்னித்தாயாராடையாகச் சூரியனை
யு, மிதியடியாகச் சந்திரனையு முடியாக நக்ஷத்திரங்களையு மணிந்தபிறகு வாச
மலர்மாலையாகிலும், பொன்னாபரணங்களாகிலுந் தகுதியற்றதாயிருக்கப் பூமி
யின்கண்பொழிந்த தேன்முதலியவற்றை யின்பமென்றுகருதித் தேடுபவர் வா
னுலகிலிருந்துவரும் பேரின்பத்தை யநுபவியாதவர்களாகுமென்று இவர்கள்
ஆதித்தகப்பனுடைய வாசனைக்கனியால், வந்த நஞ்சுபூமியெங்கும் பரவியபின்
இரத்தமுள்ள இத்தநீசவுடலுக் கின்பமாகாதெனவுஞ் சொல்லி, இவர்கள்பசி
யையாறும்படி புசியாமல், சாகாதவண்ணம் உண்பாராயினும் பின்பு கடவுள்
நிறைந்தூட்டிய தேவவுணவு ஒன்றினை உள்ளத்திலருந்தி யினிதாயோங்கியும்,
சிறந்தசெல்வியை யடைந்து தேவருளாகிய தேவஉணவன்றி யருந்தும்படி
யொன்றுமில்லாமல் பூமியைவிழுங்கிய தரித்திரம் உயர்ந்ததினால் உடல்வா
டியு, மிருக்கமையால் சிந்தையிற்றெளிந்த பூங்கொடி யுயர்த்திய சூசைமா
முனிகள் சொல்லுவார்: நமது பிதாப்பிதாவாகிய § எலியாமுனிக்கு மு
னாளையில் நமது பிதாவே ஒருகாகத்தைக்கொண்டு பலநாளும் உணவி
னைத் தந்ததுபோல இன்றுநமக்கும் போசனந் தருவாரென்று சொல்லும்
போது ஒப்பில்லாமற் பாடிய பறவைக்கூட்டங்கள் வரிசை வரிசையாய்
வந்து பலநாளும் வாசமுள்ள இனியகனிகளைக்கொடுக்க, அவைகளைக் களி
கூர்ந்து இன்பத்தோடு விருந்தாக அருந்தியும், பின்பு அருள்கொண்ட நா
யகனேவுதலினால் கருணையாற்றேறிய சில நல்லோர் பலசாமங்களில் வந்து,
நினைத்திராத இவ்விராஜகுமாரர்களுக்கு எதிராக விருந்தினைக்கொண்டுவந்து
பரப்பியபோது அவையனைத்தையும் முன்னாளில் சிறைச்சாலையிலடைக்கப்பட்ட
* தானியேல் முனிக்கு ஒருவானவன் ஒருஉழவனைக்கொண்டு போசனந்தந்த
முறைமையென்று வாழ்த்திப் புசித்தும், பின்னையு மறுநாள் புசிக்க வொன்று
மில்லாமல் போழுதுடைய கன்னித்தாயாரின் திருவதனம் வாடினதைக்கண்டு,
தன்னைமறந்த மாதவனாகிய சூசைமாமுனிகள் மனம்வருந்தி, நக்ஷத்திரங்களைவெ
ன்ற திருக்கண்களால் பெய்யுமழையைப்பார்க்கிலு மிகுந்தழும்போது இதைக்
கண்ட கன்னித்தாயார் சொல்லுவாள்; நிலைபெறச்சிறந்த நமக்குக் கலியாண
முடியும்படி முன்னமேகாரணமொன்றுமில்லாமல் வாடியிருந்த உமது திருக்
கோல் பரிமளக்கொடியாகப் புஷ்பிக்கத்தந்த வல்லதயையுடையோனுக்கு
இன்று ஒருகாரணமுமில்லாமல் அரிய சுவைகளை நமக்குத்தருவது அருமை
யோ? என்று சொல்லும்போது அப்படியே காரணமொன்றுமில்லாமல் மின்
னல்பார்க்க பொற்பாத்திரத்திலே தேனோ? தீங்கனியோ? என்று தேறியு
ரைப்பதற்கரிய ஒருபயனை அவ்விருவருங்கண்டவுடன் இதையுணர்ந்த மற்றத்
தரித்திரருந் தேடியோங்கவே பின்னையும் வேறொருநாள் அவர்க ளருந்த

§ அரசர்கள் மூன்றுமாகமம் 17-ம். அதிகாரம். * தானியேல் 14-ம். அதிகாரம்.

னென்றுங் கிடையாதிருந்தபோது கிரணவெள்ளம் பொருந்திய ரூபத்தைக்
கொண்டு, எண்ணப்படாத வானவர்மதிக்கப்படாத வடிவோடு வண்ணந்திகழ்
துவிளங்கிய வஸ்திரங்களையுடுத்துக், குளிர்ந்த நீர்மலராற்றொடுத்த மாலைகளைச்
சுண்ணந்தோய்ந்த மார்பிலணிந்து, துகிலால்மூடிய மார்பிலணிந்த ஆபரணங்
கள்தோன்றவும், அரிறபுகைபடிந்த நல்லபட்டாடை மிருதுவானதால் வீசும்
வாடையாலாடவும், மேகத்துட்புகுந்த பர்வதமும்நிகராகாதென்று பொருதும்
புஜங்களோங்கவுமாகவந்து, தாமரைமலராற்செய்த அழகிய அணையைப்பரப்பி,
விளங்கிய நக்ஷத்திரங்களுந், தேன்மலரும், பொருந்தச் சேர்த்துச்செய்த அக
ன்றமேற்கட்டியை மேலேவிரித்து, வாசனைப் பன்னீரைத்தூற்றி, வாசத்தீங்க
னிகளும், இனியபாலுந், தேன்சுவையும், நிகராகாமல் வான்மீது வழங்கிய
தேன்வகையோடு பலதேவவுணவுகளைக் கதிர்வீசுந் திருப்பாத்திரங்களில் நிர
ம்பச்கூட்டிவைத்துப், போசனம்வழங்கியவுடனே வந்தவானவர்காட்டிய அழ
கியகோல வடிவுகளைநோக்கிய திருக்கண்களினின்பமும், எழிசைபேசும் வீணை
முதலிய சங்கீதங்களைக்கேட்ட திருச்செவிகளினின்பமும், பார்க்கிலும் அள
வில்லாமல் அவர்கள் புசித்த தேவவுணவுகளினாலாகிய பேரின்பத்திற்கு நான்
சொல்லினும் ஒருவமையுமில்லையாகும்.

இப்படியாக அவர்கள் வானவர்களால் தரப்பட்ட அசனத்தை அந்தச்
சிறுமனையிலிருந்து கடவுளைவாழ்த்திப், புசித்தபின் அள்ளிக்கொள்ளும்படியா
ன நிறைந்தஒளியைப்பரப்பிய வானவர் நான் பாவினாற் சொல்லத்தகாத வித
மாகப், பாடியவுடன் பூங்கொடியுயர்த்திய சூசைமாமுனிகள் குளிர்ந்த தன்பூங்
கொடிபொழிந்த தேன்சொற்கொண்டு சொல்லுவார்: என்னுண்டவனே! எடு
த்ததைமுடிப்பதற்குப் பின்வாங்காதவல்லவனே! யாவரையும்நேசிக்கு மன்
புடையவனே! பிரிவில்லாமல் ஒருபொருளாய் நிற்போனே! சமஸ்தவுயிர்க
ளுக்கும் உணவளிப்போனே! மாறுமலினிதா யென்னுயிரையாள்பவனே!
உன்னருளைவாழ்த்தும் பாக்களினுமுயர்ந்தவனே! குறையாத அன்போடுன்
னைநம்பினவர்க்குள் குறையாகவுண்டோமென்றவர்களுண்டோ? உன்னையன்றி
வல்லவர் யார்? உன்வல்லமையை நம்பினவரில் உண்ணாதவரும், இல்லாதவ
ருமுண்டோ? இவையாவையுமறியாதவனு மிங்கேயுண்டோ? கண்டநீதியை
மனதிலெண்ணி யொளியாகிருந்தால் உன்னைப் புகழாதவருமுண்டோ? இர
வைநீக்குஞ் சூரியன் கடல்நீரிற்படிந்த தன்பொன்தலையைநீட்டி, யுதயமாகும்
பொழுது அழகினாலெழுதப்பட்ட மின்னிய பொற்சிறகை விரித்த பறவைக்
கூட்டங்கள் தங்கள்நாவுகளின் கட்டவிழ்த்து, இனியகுரலினால் உன்திருநாமத்
துதிகளைப்பாடுதலினால் நீயவைகளுக்குக் குறைவில்லாமல் பூமலர்பொழியுந்
தேன்முதல் பலவுணவுகளைத்தந்து தயைசெய்கின்றாய்; எனபிதாக்களாகிய
* யூதர் எகித்துநாட்டைவிட்டு உலர்ந்தகானகத்தின்வழியாகவரும்போது, அவ
ர்கள் அருந்துதற்குத் தண்ணீரில்லாமல் தாகத்தினால்வருந்த, அந்தவருத்தந் தீர
த்த நெருப்பைக்கொப்பளிக்கும் கல்லானது இனியஜலத்தைக் கொடுத்துத்,
தினந்தோறும் பயணமாய்நடந்த அவர்களோடு அந்தக்கல்லும் பின்தொடா
ந்துபோக அவர்கள் குறைவின்றி யருந்தச்செய்தாய்; மீளவும் அந்த யூதர்
கள் அந்தவனத்துவழி வரும்போது அருந்த உணவில்லாமல், வருந்துவதைக்
கண்டு அவரவர்நினைத்தபடியே இன்பம்பொருந்திய சிறியதோர் † தேவவுண
வினை அனேகநாளா யவர்களுக்குத்தந்து, ஒருகோடிமானுக்களும் வருந்தும்
நோயுமில்லாமல் வாழ்ந்திருக்கச்செய்தாய்; இன்னும், மாகூரிமையுடைய ‡ எலீ

---

* மோசே இரண்டாமாகமம். 17-ம். அதிகாரம். † மோசே இரண்டாமாகமம்.
16-ம். அதிகாரம். ‡ அரசர்கள் மூன்றுமாகமம். 16-ம். அதிகாரம்.

யசாமுனி பெற்சபெய்என்னுங்கானகத்திற்போகிறபோது உணவில்லாமல் சோர்ந்துவிழுந்திட அப்பொழுதொருவானவன் கொண்டுவந்த சாம்பலிற்சுட்ட அடையைப்புசித்து, நெடுமவழியை நாற்பதுநாளாய்க்கடந்து அதன்பின் பசிதோன்றாமல் உயர்ந்த ஓரேபென்னும் பர்வதத்தின்சிகரத்தில் நிகரின்றியேறச்செய்தாய்; மேலும் நீ பசியபுல்முதலாயில்லாமல் நிலமெல்லாங் காயவேணுமென்று மேகங்கள்பெய்யாதபடி மறுத்ததினால், உணவில்லாமல் எண்ணப்படாதவுயிர்கள் மாண்டிறக்கும்பொழுது முன்சொன்ன நன்மையிற்சிறந்த யோகியாகிய எலியசாமுனிக்கு அனேகநாளா யொருகாக்கைத் தான்புசித்துண்ணுங்குணத்தைவிட்டு, உணவு கொண்டுவந்துகொடுக்கத் தயைசெய்தாய்; இவையாவும் நீ யருள்புரிந்து செய்ததல்லாமலும் உன்னாலாயின நன்மைகளின் வெள்ளத்தைத் யாராய்ந்து விரிவாகச்சொல்ல என்னாலாகுமோ ? தங்கள்கைகளாலியன்ற புன்தொழிலைவாழ்வதற்குரிய சார்பென்றுநினைக்கும் நீசர்கள்வாழார்; உன்னைத்துணையாகநம்பினவ ரினிதா யுயிர்வாழ்வார்; ஆதலால், குற்றத்தாலவரும் நன்மையுந்தேடேன்; அரசர்களுடைய செங்கோலுங் குடையும் நீர்க்குமிழியையொத்ததென்று அவற்றையுந்தேடேன்; சுற்றத்தாருதவியு நம்பித்தேடேன்; அணியாகச்சூழ்ந்தாற்போல உள்ளத்தைச்சுட்டெரிக்கும் பொன்முதலான செல்வங்களையுந்தேடேன்; மனிதர்நம்பின மற்றப் பிரபஞ்சவாழ்வுகள் சோர்வைத்தருமென்று அவற்றையுந்தேடேன், நீ யிரங்கிக்காட்டினி கருணையைமாத்திரந் தேடுவேனென்று பூங்கொடியுயர்த்திய சூசைமாமுனிகள் சொல்லக்கேட்டு, அங்கே சுற்றிலுநிறைந்திருந்த வானவர் எண்ணுற்றதெல்லாம் எண்ணியேங்கி, இனியதேன்மலர்களை நீங்காதவிருப்பத்தோடு மழைவருஷித்ததுபோலவருஷித்து, அந்தச்சிறுமனையானது பெருமைபெறுங்காலமானதை யறிந்து தங்கள் வான்வீடொப்ப அதைநேசித்தபோது அந்தத்திருமனையின் பாங்க ஒளியானது தன்கதிர்களை வென்றதென்று சூரியன்வெட்கப்பட்டுத் தன்னுடலமெல்லாஞ்சிவக்கக், கடலின்கீழ்த்தாழ்ந்து முழுகியொளித்தது.

இப்படிச் சூரியனஸ்தமித்துப் போனவுடன் பூவுலகத்தைமூடிய இருள் கெடும்படி, கிரணத்தைப்பரப்பிய இரண்டுசுடர்போலக் கன்னித்தாயாருஞ், சூசைமாமுனிகளுந்தோன்றி, மோக்ஷத்தின் மாட்சிமையைக்காட்டிய அவ்வீட்டிலிருந்து, பகலுமிராவுமின்றி வானுலகோர் தன்மையாயோங்கிச், சூழவானவர் பணிந்து நிற்கும்போது சூல்கொண்ட மேகமானது விளங்கி மின்றைமின்னுமாப்போலக், கடவுளாந் திருக்குமாரனைத் திருக்கர்ப்பத்தையணிந்த நாயகியார், தனது திருமுகத்திலே ஒளிவீசுந்தன்மையாகத் தெளிவுள்ள வுணர்வுகளை நாவின்படியே திருவாய்மலர்ந்து, தேனினுமினியசொல்லாற் சொல்லுவாள்: மேகங்களுலாவுந் திசையின்மேலெழுந்த வானத்திலுலாவுஞ் சந்திர, சூரிய, நக்ஷத்திரங்களையும், அழகுள்ளமணிகளையும், மலர்களையும், இனியகனிகளையும், எழுதப்பட்ட அழகினாற்சிறந்த மற்றயாவையும் நமக்குத்தந்தபின் னிக்காலத்திற் பெருங்கருணையுடையநாத னவதரித்துத் தன்னையுந்தந்தாரென்றுங்; கற்றோரும் நினையாத முறைமையைநினைத்த கருணையின்மிகுதியால் நமதுகர்த்தாவே அவதரித்து, நரதேவனாய் வந்தபின்பு இன்பமாகியபாற்கடலில் நாம் களித்தமுழுகத் தேவுலகத்தில் வழங்கியதன்மை பூவுலகத்திலும் வழங்கச்செய்யாரோ ? என்றும்; வடிவுள்ளகோவையாக இறுகக்கட்டின பூமாலையுஞ், செம்பொன்னாற்கட்டின பெருமணிவடமும், கருங்கடல்சூழ்ந்த பூவுலகிலுள்ள மற்றக்கட்டுகளும் நிராகாமல் இருதுவத்தை வலிய ஒன்றாகக்கட்டி, மண்ணுலகம் பெருமையடைந்தோங்கக் காத்தனே மனிதனானனென்றும்; தேவத்துவமும், மனிதத்துவமும் ஒன்றாய்க்கட்டினதன்மையில் அந்தஇரண்டுதுவமும், இரண்டுபேராயாகாமல் ஒருவனேயாகி மனிதனென்றுந், தேவசற்குணங்களில்

குறையாத தேவனென்றுஞ் சொல்லப்படும் ஆண்டவன்காட்டிய கிருபையை,
நிறைந்த கல்வியினல்லோருமடைந்து விரித்துக்காட்டத்தகுமோ? என்றும்;
நஞ்சையும், அமிர்தத்தையு மொன்றாய்க்கலந்தால் அமிர்தத்தின்குணங் குன்
றுமல்லாமல் நஞ்சு அமிர்தமாகுமோ? விளங்கியபொன்னேடு செம்பைக்கல
ந்தால் பொன்னின்மாற்றுக் குறையுமன்றிச், செம்பு தங்கமாகுமோ? கருணை
யை யொளியாபரணமாகவணிந்த கடவுளோவென்றால் தேவத்துவமு, மனுஷ
தத்துவமு மொன்றாகச் சேர்த்ததன்மையினால் தேவத்துவங்குறைவுபடாமல்
நீசமனுத்துவத்தைத்தூக்கித், தெய்வத்துவத்துக்கு ஒத்ததாக வுயர்த்தினாரென்
றும்; இவ்வுலகில் பெரியோர் நீசரைச்சேர்ந்தால் தாங்களும் நீசராவாரொழி
ய அந்நீசரைப் பெரியோராக்க வல்லவருமுண்டோ? கர்த்தாவின்திருப்பாதத்
தை வணங்கி யவரைச்சேர்ந்தவர்களோவென்றால், தங்கள்குறைகள்தீர மனத்
தில்வாழ்ந்து அவருக்கொத்தபெருமையும், அறிவுங், குணமு, முதலிய நன்மை
களை ஆபரணமாக அணிவாரென்றும்; பரந்தகதிர்களின்கோலினால் ஒருபடத்
தைச் சித்திரித்ததுபோல வாசமலரையும், ஒளிமணிகளையுஞ், செம்பொன்னை
யும் விளங்கச்செய்யுஞ் சூரியனுடைய தொழிலைமறைக்க நன்மையோடுவளரு
மாண்டவனின் தயையின்சார்பு எல்லாச்செல்வங்களையும் நமக்குத் தருமென்
றுஞ்; சப்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம், என்னு மைம்புலனைக்கொண்ட வு
டலில்லாமல் கடவுளரூபியாயிருப்பதால் அவர் திருப்பாதங்களைச் சேரவேண்
டியவர்கள் செவிமுதலாகிய பஞ்சேந்திரியங்களை யடக்கிக்கொன்று, பாவத்தை
த்தரும் விருப்பத்தை வெறுத்தொழித்து, அதனால் அழுக்கறத் தூயவுள்ளத்தி
லேபொங்கின தேவநேசத்தை யிறகாகக்கொண்டு, தங்கள்நிலையின்மே லுயர்
ந்த ஞானமுடையவரேயல்லாமல் வேறொருவர்சேராரென்றும்; பஞ்சேந்திரி
யங்களைப் போர்புரிந்தடக்கித் தன்னிலையின்மேலுயர்ந்து கடவுள் திருவடி
யையடைய வழியிதென்று கடவுளே வானினின்றிறங்கிப், பூமண்டலத்திற
கார்ப்பாவழியா யவதரித்துக், கல்விமுதிர்ந்ததிருவேதத்தை மனிதர்க்குக்காட்ட,
மனிதருறவினைத்தேடித் தானுமனிதனானரென்றுஞ்; சொல்லி, மீளவுந்தெளிந்த
ஞானங்களையுணர்ந்துசொல்லுவாள்; என்னாண்டவனே! பாவலரடையப்படா
த அன்புடையோனே! எங்களுயிர்வாழும்படி நீவாளைக்கொண்டு கிழித்த புண்
ணைப்போலத் திருவுளத்தில் வருந்துவ துனக்கினிதோ? எங்களா லுனக்குப்
பயனுண்டாமோ? ஆகுமென்றாற்போல வானினின்றிறங்கி, யெங்களைத்தேடி
வந்து வருந்துகின்றாயே என்றாள். இவ்வண்ணமாகத் தேனிறைந்தமாலையோ
டொத்த திருக்கந்நிகைசொல்லிய இன்பமொழிகளை வாசகக்கொடியுடைய சூ
சைமாமுனிகள் மிகவுங்களிகூர்ந்து, தனதுதிருச்செவியாலருந்தியவுடன் அவ
தரித்த திருக்குமாரனை யிருவரும் வணங்கிவாழ்த்தி, யிருசுடர்போலவிளங்கி
வேதத்திற்கு இருநிலதம்போல இருந்தார்கள்.

இந்த அரியதன்மையோடு இராத்திரியெல்லாம் இன்பமாயுணர்ந்த ஞானங்
களினால் அரியகருணைசெய்யுந் திருமகனைவாழ்த்திச், சொல்லிலடங்காத ஆன
ந்தமநுபவித்துப், பின்னுஞ் சந்திரனைமிதித்த திருச்சரணுடைய கன்னிமரியம்
மாள் உள்ளத்திற்கொண்ட பிரபையைச்சொல்லின் வழியாக உமிழ்ந்ததுபோ
லச், சொல்லுஞ் சொற்களைக்கேட்கும் விருப்பத்தால் எண்ணிக்கையில்லா வர
ங்களும், வாசமலர்க்கொடியுமுடைய சூசைமாமுனிகள் அந்தத்திருக்கந்நிகை
யிருக்குந் திருஅறையில் எண்ணப்படாத்தரஞ் செல்லும்போது பற்பலதருண
த்தில், தேனினுமினிய சொல்லுடைய பெருமாட்டியார் இந்நிலத்தைவிட்டு
உயரவானத்தினின்று மட்டில்லாஒளியை விடுவதைக்கண்டு, கரையில்லா ஆனந்
தக்கடலில் மூழ்கியும், பசுவினுடைய நிறைந்தமடியைப்போலச் சந்திரன் விடு
த்த தெள்ளிய கிரணமாகியபாலைச் சக்கரவாகப்பக்ஷியருந்தினாற்போல, மதிமே

லெழுந்த திருத்தாருடைய அத்திருமடந்தைவிடுங்கதிர்களை நக்ஷத்திரத்தையொ
த்த திருவிழிகளாலருந்தி யுள்ளத்தில்தெளிந்தும், அப்பரமநாயகியார் வடிவுள்ள
சூரியனைப்போலத்தோன்றி, வீசியகதிர்த்திரள்நேராகத் தன்றிருச்சிரசில் விழு
ந்ததால் சந்திரன்முன்னின்ற பளிங்குபோலாகியும், விசாலமாகப் பரவிசூழ்ந்
து உருவத்தோடுதோன்றிய வான்தளங்கள்வந்துதாழவுங், கட்முதலாகிய வா
ச்சியங்கள் முழங்கிப்பாடவுங்கண்டு, பேரின்பத்தையலையாகப் புறங்கொண்டு
பெருகின கடலுட்புகுந்து முழுகியும், மதிக்கப்படாதமுறைமையோடு களிகூர்ந்
து திருக்கண்கள் இமையாததினாலுந், தன்பூங்கொடிவிருதுமலர்ந்த மலர்வாடாத
தினாலும், வானத்திற் குடியாயிருப்பவரைப்போல விளங்கியுந் தானடைந்தபேரி
ன்பத்தினால் ஒளியையுங்கண்ணீரையும்விட்டு உள்ளத்திலெண்ணுவார்: இனிய
இளங்கதிரைப்பரப்பியசாயலாய்நிற்கு மிக்கநீதியைசெய்யு கிழவிலே நாதனுடன்
குதற்குக் கலியாணஞ்செய்தபோது மாறுநிழல்செய்யு மிந்தப்பூங்கொடியை
யாண்டவனெனக்குத்தந்தாரல்லவோ? நிலையாகமணத்தோடு எனக்குவந்த இந்
த் திருமடந்தையானவள் மின்னலைப்போல ஒளிர்ந்தொலகி வானத்திலே
றித், திரும்பாமல் அதுவே தனக்குரிய இடமென்று அங்கிருந்தால் அப்போது
இவளைப்பிரிந்து நான்செய்யவேண்டிய தேதென்றுஎண்ணியும், பின்புள்ளந்தே
னைப்போல ஆசையைக்கொண்டு வானத்திலேறிய இவள் பூவுலகத்துன்பங்க
ளை யொழிப்பதற்காகக்கொண்ட தேவகர்ப்பத்தினால், நமக்கு நன்மையைக்
கொடுக்கத் திரும்பிவந்து ஆறுதல்செய்வாளென்றுதேறி, மேகமின்னிப்பெய்
யுமாப்போலக் குற்றமில்லாத இருகண்கள்பிரகாசிக்க அழுதழுது தனது இரு
புஜமலையுமுயர்த்துவிளங்கித்தோன்றினர்.

இத்தன்மையாகச் சூசைமாமுனிகள் நினைத்தபோது கடவுள் தனது கரு
ணையின் வீரவல்லமையால் விளங்குந் தன்திருவடிகளோடு சேர்த்துக்கட்டப்
பட்ட கோதையாகிய கன்னித்தாயார் தன்திருச்சரீரத்தில்விட்ட கிரணங்களை
மறைத்துப், பூமியிலிறங்கியபோது சூசைமாமுனிகள் சொற்களையும், அன்பை
யும் உமிழ்ந்துசொல்லுவார்: வாசத்தேனைச் சூலாகக்கொண்ட பூமாலையின்
சாயலாக மாசுமைதருங் கடவுளைத் தாங்கினபீடம் நீயே, உன்னிடத்திலவ
தரித்த திருக்குமாரன்மகிழ்வதற் குன்னையன்றின அடியேன் செய்யவேண்டி
யதைச், சொல்லிக்காட்டிவா யென்றுங்; கையிறைப்பேசிப் பிறபேசினதைக்
கன்றுறக்கேட்டு, அமிர்தநேருகலைஞ் சிந்தையுடைய ஊமைபோலக் கடவு
ளுன் திருவுதரத்திலவதரித்தபிறகு எனக்குச்செய்த கருணையை நானடைந்த
மாசினால் முழுதுமுணராமல் மயங்கிநிற்கின்றேனென்றுங்; கொம்பிற்படர்ந்த
கொடிபோலவுங், கொடியில்மலர்ந்த மலர்போலவும், சங்கிலுள்ள முத்துப்
போலவும், மலரிலுள்ள தேன்போலவும், உன்திருவயிற்றில் பரமநாதனவ
தாரமான பிறகு நமக்கு விருப்பத்தின்மேலும் வந்த நன்மையைச் சொல்லத்
தகுமோ ? என்றும்; மோதியலைந்தொலிக்கும் அலைகடல்சூழ்ந்த பூமண்டலத்
தைமொய்த்த துயர்களைதிர்க்கத், தற்பரன் திருவுடலோடு ஜனிக்கும்போது
நானவரை யுன்மலர்க்கரங்களில் காண்பேனோ ? என்றும் ; அருளினையகனு
டைய ஒளிதவழும்பிறையோடொத்த திருநெற்றியையுந்,திருப்புருவத்தினொளி
ர்ந்தவில்லையும், நக்ஷத்திரங்களைநிகர்த்த திருவிழிகளையும், பவளநிறத்தைவென்
ற திருஇதழ்களையுங், குளிர்ந்தசெவ்வல்லியையொத்த திருவாயையுந், திருக்க
மலவதனத்தையும், நான் களிகூர்ந்தழுதருகக் காண்பேனோ ? என்றும்; குளிர்
ந்ததேனையு, மணத்தையும் பொழிந்து இதழவிழ்ந்த மெல்லிய அனிச்சமலரி
னுமிருதுவாகிய திருவடிக்கமலமிரண்டையு முத்தஞ்செய்து, என்கண்ணீரருவி
யாற்கழுவக்கூடுமோ? என்றும்; பூவினும் இலவம்பஞ்சினும் நொய்மையாகியதி
ருவுடலையுடுத்த உன்திருமகனை ஊழியஞ்செய்து காய்த்துப்போன என்கைகளா

விளிமேலேந்துவேனே ? அப்படியேந்துவேனாகில் பேரின்பத்தினால் என்னு
யிர் என்னுடலைவிட்டுப் பிரியாதிருக்குமோ ? என்றும் ; புகழப்படவுயர்ந்த
பேறு இங்குஒன்றுமில்லாமலிருந்தும், அரூபியாகிய நாதன் நமக்குக் காட்டும்ப
டி,மனுவுடலையெடுத்துவந்ததினால் அவருடையருளிரங்கமலர்ப்பாதங்களை என்
றலைமேலன்புமிகும்படி யணியக்கூடுமோ ? என்றும்; திருத்தி யழகாகக்கட்
டின பூமாலையை யணிந்ததுபோலக், கடவுள் அழகியபூந்திருவுடலைப்போர்த்து
உன்திருவயிற்றினின்று அவதரிக்கும்போது வருத்தப்பட்ட பூமண்டல முயரு
ம்படி யவர்செய்யும் வளமையேதோ ? என்றும்; அக்காலத்தில் களிகூருவா
ரோ ? அழுவாரோ ? இன்பமாயென்னையழைப்பாரோ ? முனிவாரோ ? நான்
விரும்பிய திருவதனத்தைக் காட்டாமலொளிப்பாரோ ? என்னை யின்பமாய்க்
கட்டிமுத்தமிடுவாரோ ? என்றும்; உலகங்கள்யாவும் வணங்கப்பட யாவை
யுங் காத்திரக்ஷிக்குங்கடவுள் பூஞ்சோலையெல்லாங் குளிரப் பூவரும்புகள்மலர்
ந்ததுபோலத் தானும் பூவினழகைமறைத்த ஒருபுன்னகைகாட்டக் கண்டேனா
கில் ஓ! மிகவுஞ் சந்தோஷித்து உள்ளமுருகியோங்குவேன் என்றும் ; இனிய
பாலுங், தீங்கரும்பும், பேசும்வீணையும், நல்லதேனுமாகிய இந்தச்சுவையெ
ல்லாங்கடந்த இனியமழலைத் திருமொழிகளை மோக்ஷபேரின்பத்தை யென்னுள்
ளமருந்துவதற்கு அவர் திருவாய்மலர்ந்துரைக்கும்போது என்செவியாலருந்
துவேனாகில், அப்பொழுது நான்தெளிந்த என்னுயிரைவிட்டிறந்தாலும் இனி
மையாகுமே ? என்றும் ; பெரியவல்லபத்தால் விளங்கிய மாக்ஷிமையுடைய
தற்பரன் இளம்பிறைபோலத் திருக்குழந்தையாய்த் தோன்றி வளர்ந்தபின்,
உயர்ந்தநிலையையோடிரங்கி யேழைபோல நம்மோடிருந்து தரித்திராகிய நாம்
புசிக்கும் உணவுகளையுண்பாரோ ? என்றும்; நட்டாற்றிற்சுழலுஞ் சுழியிலகப்
பட்டவனைப்போல என்னசெய்வேனென்று திகைக்குமென்மனமே! தாமரை
ப்பாதத்தோடு ஆண்டவனிங்கே யெழுந்தருளினால் அவருக்குஉணவளிக்கநானு
ழைக்குந் தொழிலுக்குத் தகுதியாகுமோ ? என்றும், முன்னாளிலே பரமநாதன்
§ ஆதித்தகப்பன்செய்த பாபத்துக்குச்சாபமாக அரியதொழிலைச்செய்து உழை
த்துண்பீரென்றார்; இப்பொழுது நான்வேலையைச்செய்த பிரயோசனத்தால் ஆ
ண்டவன் புசிப்பாரானால் வேலைசெய்வதெனக்குப் பெரும்பாக்கியமாமே என்
றும்; அளவில்லாததுதிகளால் வளருகின்ற அநந்த சோபனமுறையின வளர்
ந்தமகிழ்ச்சியோடு வானவரிடைவிடாமற்செய்யும் வாழ்த்துதலின் முறையுங்
கடந்தகுணத்திலுயர்ந்த திருநாதன் இப்புவியிலவதரிக்கத்தகுந்த இடமுஞ், செ
ல்வத்தின்பயனுமொன்றுமில்லையேஎன்றும்; தேனிறைந்துயர்ந்த மலர்ப்பாதத்
திற் சேர்க்கும்படி வாசம்பொழிந்து நுரையையிகழ்ந்த பூந்துகிலு மில்லை ;
அவரெடுத்த திருமேனி சாய்வதற்கு நக்ஷத்திரங்களா லொப்பனைசெய்த ஓர
ணையுமில்லை; விளங்கிய செம்மணியைப்பதித்துப் பசும்பொன்னா லலங்கரித்தத்
மெத்தையுமில்லை; கதிரைப்பரப்பிப்பகலைச்செய்யும்படி மேல்விரிப்ப மே
வெண்சாமரையுமில்லை; குறைவின்றிவிளங்கிய சந்திரனை யுச்சியிற்றூங்கிய
ற்கட்டியுமில்லையே என்றும்; குறைவின்றிவிளங்கிய பொன்மலைபோலச்சூரியவொளியைவென்ற வடிவி
நக்ஷத்திரத்திலும்விளங்கிய பொன்மலைபோலச்சூரியவொளியைவென்ற வடிவி
னைக்காட்டுந் திருக்குழந்தையாகிய நாதனெழுந்தருளும்படி வானமண்டலத்
திலுலாவுஞ்சந்திர, சூரிய, நக்ஷத்திரங்களைப்பார்க்கிலும் பிரகாசத்தைப்பொழி
யும் இரத்தினங்களால் ஒப்பனைசெய்த சிங்காசனமுமில்லையேஎன்றும்; மின்
னிய நவமணியாற்செய்த போதிகைகளைப் பசும்பொற்றூண்கள்மேல் பொரு
த்திச், சூரியனிலும் இளங்கிரணத்தைப்பரப்பின ஒருமாளிகை வீறுய்வளர்ந்த
என்விருப்பத்தின்படி யில்லையே என்றுஞ்; சொல்லி, மீளவும் பரமநாயகியை

§ மோசே முதலாகமம், 3-ம். அதிகாரம்.

நோக்கிச்சொல்லுவார்: நூலெல்லாங்கடந்த அறிவுடையாளே! நம்மண்டையிலே அவதரிக்கும் ஆண்டவனை விருப்பத்தோடு இருத்துவதற்குச் செய்யவேண்டுவ தின்னதென்று சொல்வாயென்றுசொல்லி, அன்பிறைசையா லலைந்த நெஞ்சுடையவராய்த், திருக்கன்னித்தாயாரின் திருவயிற்றுச் சிறையிலுள்ள தேவகுமாரனை வணங்கிவாழ்த்தவும், உருகவும், இன்பமாய்ச்சொரிந்த இருகண்மாரியைத் தூற்றவுமாயிருக்கும்பொழுது அவருள்ளத்தில் வானின்றிறு அளவில்லாத வரத்திரளையடைந்ததை மனிதர் சொல்லவுங், கருதவுங்கூடிய தன்மையல்லவாம்.

இப்படியாகச் சூசைமாமுனிகள் வினவின்பத்திறத்திற்சொன்ன இந்த மொழிகளின்பயனையறிந்து, கண்ணைக்காத்துவரும் இமையைப்போல அன்பிறைற்றன்னைக்காத்துவருந் தன்றுணைவரின் அன்பைக்கண்டு, பூமண்டலத்தைக் கவ்வும் வானமண்டலம்போல உயிர்களையெல்லாமவிடாமல் நேசிக்கும் பரந்த கருணையுள்ள கன்னித்தாயார் ஒருபுன்னகைகாட்டி அறிதற்கரிய இனியசொல்லைக்கொண்டு சொல்லுவாள்: வானுலகத்தைக்காக்கும் நாதனைப் பூவுலகத்தில் காத்துவரப்பதற்குரிமையாகத் தெரிந்துகொள்ளப்பட்ட கைத்தாதைக்கு ஒத்த அறிவெல்லாமுடைய மாதவனே! நீர் காட்டினவிருப்பம் நன்மைதானே ஆயினும், நக்ஷத்திரங்களைக் குற்றமென்று புறத்தில்தள்ளி, வான்மேற் கண்கடந்த ஒளியில்நிற்கும் நாதனை மூவுலகமும் வணங்கும் வணக்கம் போதாதிருக்க, அந்தக்கடவுளே பூவுலகத்தோர் மாசுநிறைமயிழந்த பாவங்களைக் கட்டிக்கொண்டு அதனாலநுபவிக்குந் துன்பங்களையொழித்து, இவ்வுலகவாழ்க்கையின்மேல்வைத்த ஆசையினால் வந்தமயக்கத்தைத்தீர்க்க, மனிதனாயவதரித்து, இன்பங்களைவிட்டுத் தாழ்ச்சியைக்கொடுக்குந் தரித்திரத்தைத் தனக்குத்தெரிந்துகொண்டபிறகு தூயமணிபோல இடைவிடாதுபிரகாசிக்கும் வானநக்ஷத்திரங்களைப் புறத்திலேநீக்கி, இவ்வுலகிலுள்ள மணிகளின் உபமானமற்றுக் கருதப்படாதஒளியுள்ள வான்வீட்டிருக்குங்கடவுள் தன்றுதாம்பணியத்தருந்த திருமணியான் இருமங்கிறையிருக்க, இங்கேஇரத்தினமென்று பெயர்பெற்ற மற்றக்கல்லுகளாயிருக்குஞ் செல்வங்களைவிரும்பி, நம்மிடம் அவதரிக்கநினைப்பாரோ? வானுலகவரசரெல்லாம் வணங்குஞ் செல்வத்தையுடைய நாதன் பூவுலகஅற்பசிறுசெல்வங்களைத்தேடுவாரோ? ஆதியில் முதிர்ந்ததேன்கனியையருந்தி மனிதரெல்லாருங்கொண்ட பாபநோயைத்தீர்க்கு மருந்தாகிக், கசக்கும்பிணிகளைத் தீர்க்கவந்தார்; ஆதலால் மரியதவத்தினிராஜாவே! அருவிகளெல்லாங் கடலுக்குள்ளடங்குமாப்போல மற்றச்செல்வங்களெல்லாந் தருமத்திலுள்ளடங்கும். தாழ்மனம்பொருந்திக் கனிகூர்ந்துசெய்யுந்தபமே வீடாகவைத்து, அதிலே தியானத்தை நிலையாகநாட்டி, ஞானத்தை ஒளிவீசுங்கதவமாகச்சேர்த்து, நல்லொழுக்கத்தைக் தாழாகப்பூட்டிக், கமையுள்ள நெஞ்சத்தைத் தாங்குமஞ்சமாகப்பொருத்தி, அதன்மேல்அன்பை அணையாகப்பரப்பினோமாகில் உயர்ந்த வானுலகிலிருந்து நமக்குத்திருமகனாயவதரித்த நாதன் அதை யரியபேறுபெற்ற செல்வமாகஎண்ணிவந்து வீற்றிருந்து நம்மையாள்வார்; அதைவிட்டு உள்ளத்தைக் குடைந்தெழுந்த ஆசையென்னும் பெருங்கடலின் சுழிகளினுள் நாம் அகப்பட்டாப்போல இத்தனைச்சந்தேகப்படுவானேன்? நாம் செய்யவேண்டியதின்னதென்று பெருங்கருணையோடு ஆண்டவனேகாட்டும்படிவேண்டிக்கொள்வது நல்லதென்று கன்னித்தாயார் சொன்னபிறகு, அப்படியேயிருவருமிருந்த விருப்பத்தோடு தங்கள்திருக்குமாரனை வேண்டிக்கொண்டிருக்கும் நேரத்தில் மேகமண்டலத்தைக்கடந்த? வடிவுள்ள வானமண்டலத்தில் தனக்கொப்பானவரும், மிக்கானவருமின்றி வீற்றிருந்தாளுந் தனிக்கடவுள்வேண்டிய அவ்விருவருள்ளத்தில் தோன்றிச்சொல்லுவார்: நீங்கள்கர்த்தாவென்று என்னையுள்ளத்தி

லே வணங்கவேண்டும்; அல்லாமலுந் தகப்பனில்லாமல் கன்னிகைவயிற்றில் நானவதரித்தாலும் உலகத்திலே தோன்றுகிறபோல, இருவருக்கும்பிறந்தபிள்ளையென்று பாவனைசெய்து தரித்திரத்திற்றொடர்ந்த நன்முறையோடு என்னைவளர்க்கவேண்டும்; பூமண்டலத்தார் அற்பவாழ்க்கையை விரும்பிப் பாவத்தாற்கெட்டாரென்று ஆண்டவனுகியநானே குறைவில்லா வான்வீட்டைச் சேரும்வழியை யின்பமாய்க்காட்டச், சிறுமையினுல் மாகிமைபெற்று, உங்களிடத்தில குழந்தையாயவதரிக்கும்படி, உங்களுக்குச்செல்வமென்றுகொடுத்த தரித்திரத்தால் மற்றவரைப்பார்க்கிலும் உங்களைப் பிரியமாய்த் தெரிந்துகொண்டேனென்றுசொல்லவே, அந்தவினையினிசைகளை நிகர்த்தசொற்களை மாதவனுகியனுசை மாமுநிகள் கேட்டுப், பசும்பொன்னாற்செய்த மாளிகையிடத்து நவரத்தினச் சிங்காசனத்தின்மே லெழுந்திருந்து பொதிபாடகத்தாலொளியைப்பரப்பி; இவ்வுலகத்தையாளு மரசர்கொண்ட செல்வங்களுக்குச், குறைவில்லாத நமதுவறுமையே மேலானகுணமென்றவுடனே வசந்தகாலத்தில்விழலைச்செய்யுங் கொம்பின்மேலிருந்து உண்ட அமிர்தத்தையுமிழ்ந்துபேசும் இரண்டு பசுங்கிளிகளைப்போலப்பேசிய அவ்விருவர் ஆசையென்னுங் காற்றுபொங்கிச் சுழலப்பட்ட நெஞ்சிலே தங்களுடைய உயிர்கள் சுகக்கடலில் இன்பமா யமிழ்ந்திருக்க; காதணிகளைப்பூண்ட புத்திப்பெண்ணுனவள் தனக்குக்கலியாணஞ்செய்யத்தொடங்கினர்களென்று, அடைந்தகளிப்புப்போலக் கேடுகொண்ட பூவுலகம் தன் பங்கினினீங்கிக்களிகூரும்படி, கன்னித்தாயார் நெடுநாளாய்க்கொண்ட திருக்கர்ப்பமுற்றியபடியால் அதினின்று சூரியனைப்போலத் திருவுடலெடுத்த நாதனவதரிக்கத் தான்குறித்த காலங்கிட்டினம்மையாள் பூக்கோப்பிலிருந்து மலர்களோடு கலந்த தன்கோவையைவிரித் தாதிமலைப்போல வானத்தில்விளங்குந் தாரகாகணங்களை முடியாகவணிந்த பரமநாயகியார் சிவந்ததிருமேனியையுடைத்த நாதேவனுகிய தன் திருக்குமாரன் ஜனிக்குமுன்னக், தனதுதிருக்கரங்களால் பூவொடுகலந்த பாலாவியை நிகர்த்தவொருவெளிதவழும் பூந்துகிலைத்தைத்து, அதற்கு அகிற்புகைமுதலிய வாசனைப்புகைகள்காட்டிச், சிலையாகத் தேனைக்கொண்ட பூமாலையிலிறக்கின பரிமளப்பன்னீரைத்தூற்றி, விணக்கத்தோடு அதையொரு பேழையினுள்வைத்துக், தான்தன்மனத்தைப் பூட்டினற்போலத் தன் திருக்குமாரனுடைய திருநாமத்தைப்பூட்டார்க நன்றாய்ப்பூட்டியபின் கன்னித்தாயாருக், தமிழ்மொழியால் வளனென்னுஞ் சூசைமாமுநிகளும் ஆண்டவன் திருமகனாக அவதரிக்கவுங், தாங்கள்களிகூரவும் காலமேதுவோ? என்று நல்லகனித்தமிழ்ச்சொல்லாலும், நூற்களாலு மடையப்படாமற் கடந்தமுறையோடு களித்த இன்பத்தினுல் மனத்திலுயர்ந்து, வீணைத்தமிழைப் பேசினுற்போலப் பலபயன்களைப்பேசி, மிகுந்த இன்பத்தைத் தருமாசையால் சொல்லப்படாத மகிழ்ச்சியைக்கொண்டிருந்தார்கள்.

மகிழ்வினைப்படல - முற்றிற்று.

பத்தாவது - மகவருள்படலம்

செல்செயுஞ்சாபநீக்கச் செஞ்சுடர்சாபஞ்சேர்கா ல்
கொல்செயுஞ்சாபநீக்கிக் கூடவெலாமுறவாய்ப்பாவ த்
தல்செயுஞ்சாபநீக்க வாண்டகைமகாஞ்சேர்ந்து ன்
வெல்செயுங்கன்னிநீக்கி யிளவலாயுதித்தல்சொல்வா ம்.

வானவில்நீங்க மாரிகாலத்தைநீக்கும்படி, சூரியன் தனுராசியில் புகுந்த நாளில் கொலைசெய்யும் விலலாயுதத்தைக் கைவிட்டுப், பூவுலகெங்கும் சண்டையில்லாமல் சமாதானமாகிப் பாவத்தால்வந்த இருளைக்கொடுக்குந் தேவசாபத்தை ஒழிக்கும்படி கடவுள்விரும்பி, உள்ளத்தால் விளங்குங்கன்னிகையின் திருவயிற்றை நீக்கித், திருக்குழந்தையாக அவதரித்ததைச் சொல்வாம். அதெப்படியென்றால்:— பூவுலகங்கொண்டிருந்த மயக்கத்தைக்கண்டு நெடுநாளாக் அதற்கிரங்கி, பழுதிருக்கவானமானது மனங்காயும்படி மனிதர்க்குவந்த துன்பமுடியக் காலமாச்சுதென்று களிகூர்ந்ததுபோல, மாரிகாலம்போக இருபக்கங்களிலுஞ் செந்நெல்காய்த்த மார்கழிமாதம் இருபத்தைந்தாந் தேதியில் விண்ணும், மண்ணும் விளங்கவும், நமக்குவந்த பழம்பழியெல்லாம் நீங்கவுந், தீராதபகையினால் கொடியமுறையோடாண்டு கேடுகளைவருத்துவிக்கும் பசாசுக்களை வெல்லவுங், கடவுளும், மனிதரும் உறவாகும்படி குறையில்லாமலொன்றாய்க்கட்டவுங், கடவுள்திருக்குழந்தையா யவதரிக்கநினைத்தபோது பூமண்டலமெங்குஞ் சண்டைகளொன்றுமில்லாமல், தன்பகைவரைவென்று ஒத்தவியானென்னுமரசன் வல்லமையினால் பொதுவறத் தனியேயொருகுடையின்கீழ் புலகமெல்லாமாண்டிருந்து நிறைந்த ஆங்காரத்தைக்கொண்டு பலமுறையாக ஆங்காங்குபிரிந்துபோன யாவருந் தாங்களிருந்தபழயகாணியூரிலே சென்று குலமுறையுங், கையினையும், எண்ணிக்கையுந் தரும்படி கட்டளைசெய்தவுடனே இதைக்கேட்டு சுருதிநெறியில்விளங்குந் திலதம்போன்ற ஒப்பற்ற சூசைமாமுனிகள் தன்னுள்ளத்தில் நெருப்புப்புகுந்ததுபோல வேகும் உயிரின் அயர்த்தை மாற்றும்படி, கடல்சூழ்ந்த பூவுலகநாதனைத் திருச்சூலாகக்கொண்ட கன்னித்தாயாரை நோக்கிச் சொல்லுவார். ஒத்தவியானென்னுமரசன்தந்த கட்டளைப்படியே நான்பெத்திலேமென்னும் எனதுநகரத்துக்குப்போய்க் கையினையும், எண்ணிக்கையுங் கொடுக்கவேண்டுமாதலால் வானுலகை யரசாக்கரசனாகிய உன்திருக்குமாரன் பூவுலகிலவதரிக்குங் காலமாச்சுதே, இத்தருணத்தில் மலர்ந்த அனிச்சம்பூவினிதழினு மெல்லிய திருப்பாதத்தையுடைய நீயுமுன்னால்நினைறக்கவழியி லென்னோடுதுணையாகவரும்படி நினைக்கலாமோ? அல்லது உன்னைவிட்டு கொடிநேரம் பிரிந்துபோவேனாகில் மின்னிவிழுந்த இடியால் மலைபிளந்து வேறாக்கினதுப்போலாகுமென்றெண்ணி நான்பிழைப்பது மரிதாகும்; இதனால் என்னுள்ளங்கொண்ட துன்பந்தீரும்படி, யாண்டவனைக் கேட்டு அவரிட்டகட்டளையை யெனக்குச்சொல்லிச், செய்யவேண்டியதை யுரைப்பாயென்றார். இப்படிவேதவடிவாய்த்தோன்றிய மாதவனாகிய சூசைமாமுனிகள் சொல்லியதைக் கர்த்தனைத்திருமகனாகச் சூல்கொண்ட மாக்ஷிமையுடைய கன்னித்தாயார்கேட்டுப், பின்வருங்காரியம் யாவையுமறிந்திருந்துங், துணைவனருளியகட்டளைக்குத்தாழ்ந்து, தன்திருக்குமாரனைப் போற்றியதற்குச் செய்முறைமொழிசொல்லியதிருவுளம் இன்னதென்று குறையில்லாத சற்குணங்களிலுயர்ந்த இராக்கினியார் தனதுதுணைவன் களிகூரும்படிசொல்லி விருப்புதற்கரிய

மணத்தா லொன்றாய்க்கட்டின நமது இரண்டுயிர்களும் வேறாகாமல் வாடாத இன்பத்தோடு இருவருமாக நமது நகர்க்குப்போவோமென்றாள். தேனினுமினிய இத்திருமொழிகளைச் செவியாலருந்தினமையா, லுள்ளத்திலுயர்ந்த மாதவனாகிய குசைமாமுனிகள்சொல்லுவார்: நக்ஷத்திரத்தையொத்த தண்டிகையும், மதம்பொழி யானையும், பாய்ந்தோடுங் குதிரையும், வானத்திலுயர்ந்த பொன்தேரும், நமதுதாரித்திரத்துக்கில்லாமையால், கானகம்போல் முள்ளால் நிறைந்த வழியிலே நீவரக்கண்டபோது என்னுள்ளம் பொறுக்குமோ? ஆனலும், பழமையின் மாக்ஷிமையுள்ள நமது நகர்க்குச்சென்றால், அங்கேபொன்முடிதாங்கிய தாவீதுமகாராஜாவினா லுயர்த்தப்பட்ட நமதுகுலத்தார்கள் மிகுந்தகருணை காட்டுவரென்பதினால், வழியில்வந்ததுன்பங்களாறுமென்றுசொல்லி, யிசைப்பெருமையுடையமனத்திற் சார்பாகவெண்ணித்தேறினர். அதற்குத்தருமங்களை மோக்ஷாபரணமாகப் பூண்ட கந்நித்தாயார் சொல்லுவாள்: பெருமையுடையோர் தருமத்தைச் சார்வாரொழிய தம்மினத்தாரைச்சாரார்; கர்த்தனின் கருணையைச்சாராதவர்க்கல்லாமல் சார்ந்தவர்க்கொருதுன்பமும்வாராது; ஆதலால் நாமும் வான்மாக்ஷிமையுடைய நாதனுதவியினால் குறையொன்றுமில்லாமல் சிந்தாத்திரையாய்ப்போய்ச் சேருவோமென்றபோது, மலையுச்சியில் நின்றொழுகும் வெள்ளம்போல அசையாத தவத்தையுடைய இருவரும் இன்பத்தால் மனமகிழ்ந்து அன்பினாற்பிரியாத இரண்டு அன்றில் பக்ஷிகளைப்போலக், கட்டளைப்படி தங்கள்பட்டணத்திற்குப்போக நினைத்தவுடனே விளங்குமாபரணங்களைக்கொண்ட பேழையின்சாயலாக அரிய தேவகர்ப்பத்தைக் கொண்ட கந்நித்தாயார் தாரகைவிளங்குந் திருச்சென்னியைத்தாழ்த்தித், தன் திருத்துணைவனை வணங்கவே அவருமாக்ஷிமையுடைய தன்மனத்தில்பயந்துதிருத்தாயாரைவணங்கவே, பிறகு இருவருமாகவிளங்கிய திருக்குமாரனின் கமலபாதங்களைத்தொழுது அந்தத்திருக்குமாரன்தந்த ஆசீர்வாதத்தால் பயணமானார்கள். அப்பொழுது பரமநாதனின் கட்டளையினால் அருளால்நிறைந்த வானராசியாகிய கந்நித்தாயாருக்கு முன்னங்காவலாகவிருந்த ஆயிரம் வானவர்களல்லாமல் மயக்கத்தால்வந்த பாவங்களைத்தீர்க்கக் கடவுள் மனுஷாவதாரஞ்செய்யுங்கால மிதுவாதலால், இன்னுஞ்சூரியனிலும் அழகியவடிவமாய்த் தோன்றிய வேறே ஒன்பதினாயிரம் வானவர்களுமாகப் பதினாயிரம் வானவர்களுஞ் சந்திரனொளியினும் விளங்கிய பொற்பாதத்தினால் இளம்பிறையைமிதித்த திருக்கன்னிகையைச்சூழ்ந்து, பர்வதத்திலும் பலத்தபுஜங்கள்மேல் ஆபரணங்கள் தவழ்ந்துலாவ நிரைநிரையாயிருந்து வணங்கிப், பெய்யுமழையும் நிகராகாமல் மலர்மாரியை ஆகாயமார்க்கமாய்ப்பொழிந்து வஞ்சகர்மனம்போ லிருண்ட இரவையொழிக்குந் தெளிந்தகிரணத்தைப்பரப்பிப், பூவுலகில் மற்றவரறியாமல் பிரகாசத்தைச்செய்தமையால் நிறைந்ததவத்தோர் பெருமையானஇருள்கொள்வாததுபோல அவ்விருவர்க்கும் இருள்தோன்றாமல் இரவென்றும், பகலென்றும் அறியாமற்செல்லும்போது முள்ளுகள்நிறைந்தவழியில் வந்ததுயர் பொறுக்கமாட்டாமல், மெல்லியதிருவடிகளையுடைய கந்நித்தாயார் அயர்ந்துசோர்ந்துவிழுந்தவுடன் பொன்மலையையொத்த புஜங்களாலுயர்ந்த வானவர்கள் மின்னலைத்தாங்கின பொன்மலையின் தோற்றம்போலத்தாங்கிப், புண்ணையாற்றுமருந்துபோல உயர்ந்த கருணைமாதவனாகிய குசைமாமுனியும், மோக்ஷநாதனைத் திருச்சூலாக அணிந்த இராக்கினியும், பூமியையிரக்ஷிக்குந் தயையோடு நடக்கும் வழியிலெல்லாங் கண்ணைக்காக்கும் இமைகளைப்போல அவர்களைக் காத்திருந்து பிரியாமற்சென்றார்கள்.

அவர்கள் சென்றவிடங்களெல்லாஞ் சூரியன்முன் னிருள்மறைந்து பிரகாசம் படருமாப்போலப் பாவமொழியவும், மனுக்களடைந்த சிந்தாகுலங்கள்

மாறவுந், தேவவருள்நிறையவும், யுத்தகளத்தில் கோபித்ததுபோல முழங்கின மேகங்கள் சினத்தைக்காட்டிப், பொழியுமழையினால் நிறைந்தபொய்கைகள் சூழப், பெருஞ்செல்வங்கொண்டு நாடெங்குஞ் சிறக்கவுஞ், சோலைசூழ்ந்த மலையினின்று ஓடிவரு மதுரமாகிய தண்ணீரானது மாலையின் சாயலாகத்தோன்றி, மலர்நிறைந்த பூம்பொழில்வழியாக ஒல்லெனமுழங்கிவந்துபாய்ந்து, சுற்றிலும் ஆலைகளாடும் வயல்களெல்லாம் நிரப்புதலினால் விளைந்தசெந்நெல்கள் கடலின்சங்கீன்ற முத்துக்கள்போலத்தோன்றவுஞ், சோலைகள்தோறுமலர்ந்த பூங்கொம்புகள் மாலையையணிந்த கலியாணப்பெண்ணைப்போலத் தோன்றவும், மீன்களையுடைய குளங்கள்தோறுந் தேன்பொழிந்தலர்ந்தமலர்கள் இரவில் நக்ஷத்திரத்தைக்காட்டும் வானம்போலத்தோன்றவும், மேகங்கள்விரி மின்னிப்பொழிந்த நீருதிவெள்ளமாக முகிலியோடுந் தோற்றத்திலும், ஆலைகள்தந்தசாறானது அந்தமாதவர்கள்செய்யு நிறைந்தகருணையின்சாயலா யாறுபோலப்பாயவுங், கொம்புகள்தோறுங் கருங்குயில்கள்கூவவுஞ், சோலைகள்தோறுந் தோகையைவிரித்து மயில்கள்பொலிந்தாடவும், மலர்கள்தோறும்பலவண்டினங்கள்பாடவுந், தங்களிலுந்தூய்மையோர் அந்தப்புண்ணியவாளரென்றுதூய அன்னங்கள் நாணவுமாயிருக்கப், பரிசுத்தகன்னித்தாயாரோடு சூசைமாமுனிகள் நல்லவழியைக்கடந்து செல்லும்பொழுது காமவிகாரங்கொண்ட காந்தரியென்னும் ஓர் மங்கையானவள் அகிற்புகைமுதலிய வாசனைப்புகைபடிந்த கல்லாடையையுடுத்துப், பூமாலைகளையும், இரத்தினங்களையும் பூண்டு, விளக்கொருங்கிய வதனத்திலேயொடிப்பார்த்து, வான்நக்ஷத்திரங்களைநிகர்த்து, கொல்லுந்திறமுடைய கூற்றனேந்தினவாளைக்கவர்ந்து, உயிரையிறுத்துண்ணுங் கரியகண்களும், நெஞ்சில் பெருமையில்லாத முகவடிவுமுள்ளவளாய் மதயானை யுண்டுமிழ்ந்தவிளாங்கனிபோலவும், நஞ்சுநிறைந்த அழகியஎட்டிப்பழம்போலவும், ஆபரணங்களால் வினைமுகைப்பெற்ற பிரதிமைபோலவுந்தோன்றி, நொந்ததுபோலப்புலம்பும் இடக்காலின் பொற்சிலம்பின்மேல் வலதுகாலையூன்றிப்; பொன்மலையிற்சாய்ந்த மின்னலின்சாயலாகக் கிரணங்களை மாலையாகவணிந்த பொற்றூணண்டையிற் சாய்ந்துநின்று, உடுத்தவஸ்திரத்தின் தோகை யுட்புறந்தோன்ற ஓரத்தைத்தூக்கி, நகத்தினால் அணிந்த பூமாலையைக்கிள்ளி, அகில்வெந்து சுற்றிலுங்கிளம்பும் வாசப்புகையைக் காமாதுரனையழைப்பிக்கத் தூதாகவிட்டுத், தன்னழகியகூந்தலாகிய மேகத்திலிருந்துவந்த மின்னலைப்போல மின்னின முகத்தைக்கோட்டி, அங்குமிங்குமாகத் திரும்பிப்பார்த்துப், பாலோடுகலந்த நஞ்சைக்குடித்ததுபோல இன்பத்தோடுகலந்த துன்பத்தை மயங்கியமனத்திலருந்தும்படி அனேகபிரசைகள் கொல்லும்வேலாயுதமாகிய இவளுடைய இரண்டுகண்களையும் விரும்பிப்பார்த்துச், சூழநெருங்கி நிற்கக், காமத்தியானது உள்ளே பற்றியெரிய ஓரோரிடத்துப் புன்னகைகாட்டிப், பின்பு உள்ளத்தை வேகவைக்கும் நெருப்பாகப் பயந்தோன்றும்படி கோபத்தைக்காட்டி, வெந்த அகிற்புகை வெளியைமறைத் திருண்டதுபோலக் கண்டவர்மனத்திலிருளாகும்படி இருகண்களால் காந்தியைக்காட்டிப், பர்வதத்தின்மீது தோகைவிரித்தாடிய மயில்போல நஞ்சிற்றோய்ந்த மனத்தையுடையவளாய் வாசவகிற்புகை யழகினிற்றோய்ந்த புடவையின் தோகையைவிரித்தாடி யிருக்கும்போது, கோலமெழுதிய அங்கப்பானையையொத்த முகத்தினழகினால் மூடப்பட்ட அந்தக் காந்தரியின் கொடியவுள்ளத்தை மேகத்தினால் மூடப்பட்டசூரியனைப்போலத் தரித்திரத்தினால் முழுதுமூடப்பட்ட பெருமையுடைய இராக்கினியாராகிய கன்னிமரியம்மாள் இரக்கமாய்த் தன்மனநோகப்பெருமூச்சுவிட்டுப்பார்த்துப்பூவணிச்சாயலாகநின்ற அம்மடந்தையின்மனத்திலே கலந்துகுடியாகவிருக்கின்ற பசாசும், பாவமும், கேடும், ஒழியாமலிருப்பதைக்கண்டு,

கண்ணாற்கண்ட தீமையையல்லாமல் உள்ளேகொண்ட தீமையை மதிப்பாருமுண்டோ ? என்று வானத்திலிருந்துவந்த விருந்தேந்தினகுசைமாமுனிகளுங்காணும்படி யந்தப்பாவியின் நெஞ்சிலே குடியிருக்கும் பசாசைக்காட்டினபோது இதைக்கண்டநெடியபூங்கொடியேந்திய குசைமாமுனிகள்சொல்லுவார் : கொடுமையாக வுலகத்தையாண்டிருந்த பசாசுக்களெல்லாங்கெடும்படி, புனிததிருவயிற்றிலவதரித்து மனிதனாகவந்த பரமநாதனுடைய திருநாமமென்னும் வல்லவேலாயுதத்தைக்கொண்டு, அந்தப் பேயை நீயே ஓட்டுவாயென்றுவேண்டினளவில் மோதும் அலைகளைச்சுருட்டி மாறுங்கடலோடு உள்ள வுலகமூன்றிற்கு மெய்யான அரசியாகிய கன்னிமரியம்மாள் இரக்கங்கொண்டு, தானருளியகட்டளையால் குற்றந்தரும் பசாசானது தனதுபழம்பதியாகிய அந்தப்பெண்ணின்நெஞ்சத்தைவிட்டுப், பொய்படருஞ்சீக்கிரம்போல்நரகத்துட்சென்றபின்பு அந்தப்பேதையானவள்தன்னுள்ளத்தைத்தனக்குக்காட்டும் ஒருகண்ணாடியைப் பார்த்ததுபோலாகிக், கானகத்திலுள்ள அசுத்தங்களையெல்லா மழையால்வந்த வெள்ளம் வாரிவிழுங்குவதுபோல நானும்பாவத்திலென்வல்லமையைக் காட்டிக்கெட்டேனென்றுநாணி, அங்குசத்தினால்மதயானையையடக்குவதுபோலத்தேவவல்லமையாலடைந்த நாணத்தினால்இன்பவாசையால்வந்த குற்றங்களைநீக்கி, ஆசையென்னும் உடைந்தகடலுக்கு அந்நாணத்தையே ஒருகரையாகக்கட்டித், தான்நாணப்பட்டதற்குக் காரணந் தேடியுங்காணாமல், பயமுஞ், சந்தோஷமுங்கொண்டு வானெனவிளங்கிய இரண்டுவிழிகளினின்றிழிந்த வெண்முத்துக்களைவாரினமுகத்தைச்சாய்த்து, ஒன்றுஞ்சொல்லாமல் இருந்தகூட்டத்தைவிட் டகன்றுபோனவுடனே அங்குமுன்னவளைச்சூழ்ந்திருந்த யாவருஞ் சொல்லுவார் : கடலிலுள்ள நீண்டபவளத்துறையிலே வெண்முத்துக்களை வரிசையாகக்கோர்த்துவைத்ததுபோல, அழகியபவளவாயிலேவெண்பற்கள்தோன்றச்சிரித்து, இங்கிருந்தவளிப்போது துக்கமுகத்தோடு ஒன்றுஞ்சொல்லாமல் அகன்றுபோனாளேயென்றுசொல்லி, யவர்களும் வார்கட்டியகாலணிகள்சப்திக்கச் சீக்கிரமாய் நொந்துபயந்து, தங்களிருப்பிடஞ்சென்றார்கள். அப்பால் காந்தரியோவென்றால், மேகமண்டலத்தையளாவிய தனது சித்திரமாளிகையிற்சேர்ந்தபோது பாவங்களைப்போக்கும் பரமநாதனுக்குத் திருமாதாவாகிய கன்னிமரியம்மாளவளிடத்தில் ஒருவானவனையனுப்பிப், பாவவினையொழித்து உள்ளத்திலுண்டான உணர்வினால கண்பொழிந்தநீராடி, முன்செய்தகுற்றங்களையுணர்ந்தமையால் உள்ளடைந்தமெய்ஞ்ஞானம்நிலைக்கும்படி உறுதித்துணையாகச்செய்விக்க அவள்மனதைரியத்திலுயர்ந்து ஒருநாளுந் சூரியனைக்காணாத குருடன் ஒருநாள் சூரியனைக்கண்டாலதிசயிப்பதுபோல ஞானத்திற்றெளிந்து, தானணிந்த ஆபரணங்களைநோக்கிப், பொன்னென்றும்,மணியென்றும் நல்லபெயர்பெற்றுஉள்ளத்தைச்சிறைப்படுத்தும் *வலைகளே! உங்களாலல்லவோ வீணாய்ப்பிறருமெய்ய நானுமெலிந்தேனென்றுசொல்லி நொந்தழுது மழைபெய்யும்போது மின்னல்கள் மின்னிவிழுவதுபோலத், தானணிந்த ஆபரணங்கள்மின்னிவிழ அறுத்தெறிந்து, கூந்தலிலுள்ள மாலைகளைநோக்கி, மலர்ந்து தேனொழுகி யென்கூந்தலைச் சூழும் வாசப்பூமாலைகளே! நீங்கள்பொழிந்த தேனினால் வண்டினங்களுக்கு விருந்துதந்து வண்டென்னும் பாவத்துக்கு என்னையும் இரையாகச்செய்தீர்; பின்னு மெனக்கினிய தேனைப்பொழியாமல உயிரைக்கொல்லும் விஷத்தைத் தந்தீரென்றுசொல்லிக், கோபத்துடனவற்றைத் தண்டிப்பதுபோலத் தன்பூந் ... மார்பிலணிந்த மாலைகளைநோக்கி அரும்பின் காலநும் தேய்த்து, மிதித்து, நீக்கி, மார்பிலணிந்த மாலைகளைநோக்கி அரும்பின் காலநும் தேய்த்து, மிதித்து, நீக்கி, ஸ்தனங்களின்மேலணிந்த மாலைகாள் மடலவிழ்ந்த தேன் குளிர்ச்சியென்று

* “ கேட்குநபோலவுங், கிளக்குநபோலவு, மியங்குநபோலவு, மியற்றுநபோலவு, மஃறிணைமருங்கினு, மறையப்படுமே.” (நன்னூல் பொதுவியல்.)

னே! நீங்கள் மன்மதன் கருப்புவில்லிலேதொடுத்து எய்யப்பட்ட பூங்கணைகளாகி, என்மனங்கருகிப்போக விருப்பத்தையுண்டாக்கி, மனத்துள்நுழைந்து கொடுந்தீயைப்புகுத்தி யென்னுயிரைக்கொன்றீர்; ஆதலால், நெருப்பிலே வேகுவீரென்றுசொல்லி, அவைகளைச் சுட்டெரித்து, அவிந்தசாந்தைநோக்கிச் சந்தனம், கலவை, சுதை, சாந்து, முதலிய பெயர்பெற்றாலும் உள்ளதன்மையைப்பார்த்தால் வண்டினம் விரும்பியசேறுதானே; பொய்சொல்லுவார் தானுன்னைக் குளிர்ச்சியென்பார்; நீவேகுங்குணமுடையதென்று என்மனமறியும், உன்னால பாவத்தைக் கட்டிக்கொண்டு எரிந்தேனெரிந்தேனென்று சொல்லி, யதையெரித்து வினையைநோக்கி வினையே! உன்னை யோர் ஸ்தலமாகக்கொண்டு சந்தேத்தைப்பாலாகச்சுரந்து, சுரந்தபாலைக்கண்ணைப்போல்காத்துக்குழந்தையாய் நின்ற மன்மதனுக்கு ஊட்டிப், பெண்புத்தியாலறியாமல்வளர்த்தேன்; அவன் வளர்ந்தபின் தன்பாணத்தினால் என்னையெய்யவென்று நினையாமற்போனேன்; இதற்கெல்லாம் நீயே பின்பற்றுசெய்தாயென்றுசொல்லி, அதை ஒடித்து, ஐம்பொறிகளைநோக்கி மெய்,வாய்,கண்,மூக்கு,செவியெனப் பேர்பெற்றவர்களே! நீங்கள் நியாயத்தைமறந்து சென்றுதிரிந்து கொடியவினைகளைச் சம்பாதித்து, மீளவும் உள்ளத்தில் நுழைந்து, எனக்குக் கொடுமையைக் கொண்டுவந்ததினால் இனியுங்களைச் சிறைச்சாலையிலடைத்து, வாதைசெய்வேனிதற்காக எப்பொழுதும் பின்வாங்கமாட்டேனென்றுசொல்லி, அவற்றைமனத்திலடக்கி, மனவூக்கத்தைக் காவலாகவைத்து, நெஞ்சைநோக்கி என்னெஞ்சமே! நீயுன்னை மறந்தாய்; நீண்டசெங்கோலேக்குமோசகிய நீதிபரனைமறந்தாய்; என்னைப் பாவத்தில் வீழ்த்தி யெக்காலமும் வேகாமல் வேக ஊழித்தீ நரகத்தில்விழக் காரணமாகி யென்னைமறந்தாய்; அவையெல்லாமறந்தபின்பு நீமுன்விரும்பின யாவும் இனிமறப்பாயென்றுசொல்லி, மீளவுஞ் சொல்லுவாள்: மீனக்கொடியாகவுஞ், சந்திரனைக்குடையாகவுங், கடலைமுரசமாகவும், வாசமலரையம்பாகவுங், கரும்பைவில்லாகவும்வைத்து, காமனுருவத்தை விருப்பத்தோடெழுதி, யதற்கு மன்மதனென்னும் பெயரைவைத்தேன்; பிறகு அவன் என்னுயிரைக் கொன்றதினால் இனிமேல் அவ்வுருவத்தைக் கலைத்து, நமனாக எழுதுவேனென்றுரைத்து மிகவுமலறியழுது, அழுதகண்ணீரில் முழுகிக் கழுவின தன் குற்றங்களைத்துடைத்து, அறிந்த ஞானமென்னுந் தெளிந்தபுனலிற் குளித்துத், தானுந் தெளிவடைந்து உள்ளத்திலடைந்த தேவவருளென்னுங் குளிர்ஜலத்திற்படிந்து, தானுங்குளிர்ச்சியடைந்து நிலையானதருமக்கடலில் குளித்துயர்ந்து உருவிலுங், குணத்திலும் வேறுபட்டுக் காட்டுவெள்ளத்திலும் நிறைந்த கருணையுடைய வானரசியாகிய கன்னித்தாயார் மெய்ஞ்ஞானத்தைக்காட்டிச் செய்தவிழலாதரவினால் அந்தநாயகியார் அப்பாற் கடந்துபோனாலும், அளவிறந்தவரங்களா லுயர்ந்து எந்தவழியால், எந்தபொருளால், கேடுசம்பவித்ததோ அவையாவையும் நீக்கி, ஐம்பொறிகளையுங் கொன்றுபுதைத்துத், தான்பிடித்த ஞானவழியில் மாறுமலனேகளாயிருந்து மோக்ஷஇராக்கினியார் கொடுத்த நீதியொழுக்கத்தின் திறத்தினால் நல்லதருமங்கள்சேரு மோக்ஷத்தைச் சேர்ந்தாள். அப்பால் வான்மீதுலாவும் இரண்டுசுடர்களைப்போலக் கன்னித்தாயாருஞ், சூசைமாமுனிகளும் வழியில்எதிர்ப்படுந் துயரமென்னுந் தீயினால் வருந்திய யாவருக்குங் கருணையால உடலுமுயிருமாகி, விரிவாகநிழலைச்செய்து என்பாவினால் நிகராகாத இன்பத்தோடு ஐந்துநாளாய்ப் பிரயாணம்பண்ணி மின்னலின் சாயலாய்விளங்கும் பதினாயிரம வானவரும் அன்போடு புடைசூழ்ந்துவரப், பொன்னால் விளங்கிய பெத்திலேமென்னுமாநகரத்தைச் சேர்ந்தார்கள்.

அதன்பின் மாரிகாலத்தில் ஓடைகளெல்லாம் நிரம்பும்படி மலையினின்று வெள்ளம் பிரவாகித்துவந்தபின்பு கோடைகாலத்தில் வற்றிப்போகுந்தன்மை

யாக இவர்கள்வழியிலேயடைந்த மகிழ்ச்சியைப் பொன்னால்விளங்கியநகரத்தில் வந்தபிறகு மாற்றித், துன்பங்களால் மிகவும்வருந்தும்படி ஒளியைமாலையாகத் தரித்த சரீரத்தால் வெளிச்சத்தைத்தரும் வானவர் இருபக்கங்களிலும் வரு மொழுங்கைக்காணாமலும், வான்மாக்ஷியால் இவ்விருவர்க்குரிய பெருமையைக் காணாமலுந், தரித்திரவேஷத்தோடு இவர்கள்வந்ததன்மையைமாத்திரம் நகரத் தில் கண்டவர்கள் இவர்களுக்குச்செய்த நிந்தையைச் சொல்லத் தொடங்கு வாம். அஃதெப்படியென்றால்:—பூவுலகத்தாரின் சிறையை யொழிக்கும்படி வந்த இவர்கள் வருந்துவதைக்காணாதபடிக்குச் சூரியன்விரைவாகநடந்து குளி ர்சிறைசெய்யுங் கடலில்ஒளிக்கவும், நல்லசிறகைவிரித்துப்போர்செய்யும் வண் டுகளழவுந், தாமரைகள் இதழ்களென்னும் கதவுகளையடைக்கவும், கண்ணுக் குச்சிறைசெய்யும் இராப்பொழுதுவரும் நேரமாகிய சாயங்காலத்தில், முன் சொன்ன பெத்திலேம்பட்டணத்தில் வல்லகருணையுடைய இவர்கள் வந்தவு டனே தெளிந்தஞானத்திலுயர்ந்த சூசைமாமுனிகள் சண்பகமலரும்நிகராகாத திருவடிகளையுடைய கன்னித்தாயார் வழியில் நடந்துவந்ததுயரை யாற்றும்படி, ஒருமனையி லொதுங்கியிருக்கத் தன்னுறவின்முறையாரை யருளால் மலர்ந்த முகத்தோடு இடங்கேட்கவே, இவ்வுலகில் மிகுந்த ஆசையினால் ஆதாயங்கி டைக்கத்தக்க உறவின்முறையாரைத்தேடி நிறைவாகக்கொடுக்கும் பொருட் செல்வங்களை யுடையவர்களுக்கல்லாமல், பிறர்க்குப்பயன்படவுதவாத வறு மையுடையோருக் குறவின்முறையாரில்லை என்பதுபோல, நஞ்சுள்ள எட்டிப் பழத்தை யழகென்று விரும்பினவர்களாய் எக்காலமுந் துன்பஞ்செய்யும் பொருளைவிரும்பிக், கண்கடந்தவடிவுகுறையாமல் நிலைபெற்றஅருளின செல்வத் தை மதிக்காத அறிவில்லாத அந்தச்சுற்றத்தார் நெஞ்சிலே மாக்ஷிச்செல்வத் தைக்கொண்டு, புறத்திலே தரித்திரரைப்போலத்தோன்றிய இவர்களைக்கண்டு யாரோவென்று தள்ளிவிடவே, அதன்மேல் இவர்கள் மின்னல்களைப்போலப் பொன்னொளியால் விளங்கிய அந்நகரமெல்லாஞ்சுற்றித்திரியும்போது அந்தப் பட்டணத்தார் இடிகளைப்போலக் கோபித்துச்சீறினதினால் தேன்மலர் விருது யார்த்திய சூசைமாமுனிகள் மின்னியிடித்த மேகம்பொழியு மழைத்தாரைபோ ல, அழுது முன்னந்தவூரார் தங்களுக்காதரவாகுவாரென்று நினைந்துவந்த தினால், மிகவுமனநொந்துசொல்லுவார் : நான்செய்தகுறையினாலேயோ ? இந் நகர்செய்த பாவத்தினாலேயோ? தான்செய்தகட்டளையினாலேயோ? கடவுள் பூமண்டலத்தையிரக்ஷிக்கத் திருமேனியோடுபிறக்க இங்கேயிடமொன்றுமில் லையேயென்று சொல்லி, யழுதுவிம்மி யங்கங்கே திரிவதல்லாமல் மயக்குவிக் கும் விருப்பத்தைநீக்கி, யுயர்ந்தமாக்ஷிமையுடைய இவர்கள் தங்களை யாவரு மிகழ்ந்தாலுந் தாங்களவர்களை யிகழாமல் கருணைகொண்டு தங்களுக்குவந்த இகழ்ச்சியைப் புகழ்ச்சியாகஎண்ணி, யவர்களைத் துதித்துவாழ்த்தி, அருங்குற்ற மென்றெண்ணாமல் எங்குந்திரிந்துவாடித் தாங்கள்பணிந்து இடங்கேட்கும் போது இடத்தையுடையவர்கள் சொல்லும்நிந்தைகளைக் கேட்டுமகிழ்வார்கள். பின்பு வாசப்பூங்கொடியேந்தின சூசைமாமுனிகள் தானடைந்த துயரத்தினால் மகிழ்ந்தாலுந், தன்னுயிரிலுமினியவுயிராகிய தன்திருத்துணைவியார் அடைந்த துயரைப்பொறுக்கமாட்டாமல் அவலோடெங்குந்திரிந்துயாசிக்குந்தன்மையாக இரண்டுதிருக்கரங்களையுந் தலைமேற்குவித்துத் தொழுதுசொல்லுவார் : மனி தர்களுக்குள்ள உறவின்முறை எங்களுக்கில்லையென்றாலும் யாசகரென்றுவந் து இரப்பவர்கள்மேல் வைத்த இரக்கமாகிலும் எங்கள்மேல்வராதா ? அடைக்க லமாகவந்த இரப்போர்க்கு அன்போடுதந்தநன்மையே துன்பக்கடலை மறித் தடைக்குங் கரையாகுமல்லவோ ? ஒருவருக்குத்துன்பம்வந்தபோது செய்த உதவியை யவர்களின்பமடைந்தபோது மறந்தாலும் அந்தஉதவியே ஒருநல்ல

விதையாகி நன்மைசெய்தவர்க்குக் கடைசிகாலத்தில் மோக்ஷத்தைத்தருமேயென்றுசொல்லி, யாருகக்கண்ணீரைவிட்டழுதபோது அவர்கள்யாவருங் கோபமுகத்தோடு இகழ்ந்துகோபித்து, நாங்கள்மிகவுங்களிகூரும்படி முன்னமேவந்து இத்தஞானங்களைச்சொல்லலாமே; யிப்பொழுதேன் வந்தாயென்று பரியாசம்பண்ணியவுடன் ஞானமாமுனிகள்சொல்லுவார்: நன்மைசெய்ய விருப்பமுடையவர்கள் தருணந்தேடார்; அவ்விருப்பமில்லாதவர்கள் சலஞ்சாதித்து அற்பமுஞ்செய்யமாட்டார்; வர்த்தகர் தங்களுக்கு ஆதாயம்வரும்படி யதற்குவேண்டிய வகையைத்தேடுவார்; அதுபோல அறிவுடையார் வான்வீட்டினன்மைகிடைப்பதற்கு இடஞ்செய்வாரென்று இனிமையாய்ப்பாடின வீணை கழுதைக் கின்பஞ் செய்யாததுபோல, எறிவேலாக உள்ளத்திற்பாய்ந்த துயரைக்கொண்டு இவையாவும்பயனின்றிச் சொல்லிக்கொண்டே கந்தித்தாயாரோடு நாலினும் ஒழுங்காக இருக்கும் நெடியவீதிகளெல்லாம் வருந்திநடக்கின்ற அத்தருணத்தில் அரசனுடைய கட்டளையின்படி கைவிறையும், எண்ணிக்கையுங் கொடுத்துக் கடனைக்கழித்து, மீளவு மலர்ப்பாதங்களையுடைய கந்தித்தாயார் மிகவும்வருந்தமொய்த்தமுறையினால் கடலின்சாயலாகிய நகரமெல்லாம் விரைவாய்த்திரிந்தபின், இருண்டநடுச்சாமநேரம்வந்ததாகக்கண்டு ஞானமாமுனிகள் கந்தித்தாயாரைநோக்கிச் சொல்லுவார்: நல்லதருமத்தினாற் பெருமையுடையவளே! மழையினுடைய நல்லஜலமானது விழுந்தநிலத்தின் குணமாக மாறுவதுபோல ஒருவன் சேருங்குலத்தினால் குணமு மாறுமென்பார்; அப்படியே குற்றமுள்ள அற்பத்தன்மையுடைய என்னை நீ சேர்ந்ததினாலல்லவோ? இத்தத்துயரும், வருத்தமும், நிந்தையுமடைந்தாய்; ஆதியில் சம்பவித்த பாவத்தின் துன்பங்களைத்தீர்த்து, நம்மையிரக்ஷிக்கக் கடவுளே யிங்குதாழ்ந்து மனிதனாக ஒருகருமமுஞ்செய்யாத அடியேனையண்டினபோது அவர் அளவிறந்தவல்லவராயினும் வருந்தாதிருப்பாரோ? செல்வநகரில்வாழ்ந்த மன்னவனாயிருந்து இங்கேவறுமையைத் தேடிவந்தவதரிக்கச் செல்வநகரம் உரிய பதியல்லவென்றதினாலோ? நம்மைவிலக்கினாரதலால் நாம் நடுப்பட்டணத்திலிடங்கிடையாமல் திரிந்தோம்; இனிமேல் இந்நகரத்துக்கப்பால் நாம்வரும்போது கண்ட குகையிலிருக்கப்போனால் நல்லதென்றார்.

அப்படியே கந்தித்தாயாருஞ்சம்மதித்து, இருவருமாக அலைநெருங்கியபெருங்கடலின்சாயலாகின்ற அந்தமூதூரைக்கடந்து, நடுச்சாமத்தில் இருள்நீங்கும்படி சூரியனைப்போலக் கிரணத்தைப்பரப்பிய பதினாயிரம் வானவர்களுஞ் சூழ்ந்து சூரியனொளியைக்காணாத குருடன் கையால் தடவிப்பார்த்து, இரத்தினங்களினொளியைக்காண்பானோ? அதுபோல் இவர்களுடையபெருமையின்ஒளிவு அறிவில்லாதவனுக்குத்தெரியுமோ? என்றும்; துறவாக யாவற்றையும் வெறுத்துத் தரித்திரராய்வந்தால் அவர்களை யுறவின்முறையாரிலு மேலானவரென்று தருமசிந்தையில்லா ரிதை எண்ணுவாரோ? என்றும்; நெருங்கிச்சூழ்ந்து கதிர்களைப்பரப்பி வழியிதுதானென்றும் திறஞ்சொல்லிப் பாடித்துதித்துக்கொண்டுவர நீசரிடத்திலுமுள்ள பொருட்செல்வத்தைவெறுத்து பெரியோர்விரும்பிய அருட்செல்வத்தையடைந்த மாக்ஷிமையுடைய இவர்கள் பகலென்றும், இராவென்றுமறியாமல் வானுலகில் நடந்தாப்போல இன்பமாய்ச் சிறந்து நடந்து, பாளைவிரித்த கமுகமரம்பாய்ந்து, பலாவின்கனிகளைக் கீறி யறுத்துநிற்க, வேசிகள்வாயிற் புறப்படும் நிறைந்தபொய்போலத் துளித்ததேனினால் சேறுடைக் குளிர்ந்தசோலையைக் கடந்துசென்று, தேனோடுகலந்த தண்ணீர்நிறைந்த தாமரைப்பொய்கையும், பறவைகளிருக்குங் கனிநிறைந்த சோலைகளும் பொருந்தினவிடத்தைத்தாண்டி, உயர்ந்தமலையில் பிளந்தஅவயவம்போலப் பேர்த்த கல்லின்மிசைப் பெருங்கல்லை யேற்றிப்பொருத்தித், துன்பத்தினியல்பைக்காட்டி,

மிருகங்களொதுங்குமிடமாகி, வருத்தத்தைத்தந்து வீசியடிக்குங் காற்றையு, ம
ழையையும்,உள்ளேயழைக்கும் வாயைத்திறந்து,தீயெழக்கோபித்துக்,கிழவிகள்
ஏசலைச்சொல்லும்போது காட்டுகின்றமுகத்தைக்காட்டித் துன்பமும், பயமும்,
நோய்களுங் குடியாயிருக்கப் பதியையமர்த்தின குற்றத்துக் கோரறைச்சாய
லாகி, நகரத்தின்புறத்திலேநின்ற குகையை யின்பமாய்ச் சேர்ந்தபோது அலை
களையெறியுங் கடலையொத்த நகரத்தில் மனிதர்நெருக்கத்தால் இடங்கிடை
யாமல் மிருகங்களொதுங்குமிடமென்று எல்லாரும்வெறுத்தகுகையில் சகல
நன்மையுள்ள கடவுள் அவதரிக்கத் திருவுளமானதால் அந்தக்குகையைச்சூழ்
ந்துவந்த தூயமணிச்சாயலினுருவோடு விளங்கிய வானவர்கள் விரைந்து விரு
ப்பத்தோடு விளக்கினவுடனே யந்தக்குகையானது பாவத்தால்நிறைந்த நெஞ்
சானது பாவத்தைநீங்கித் தேவருளடைந்தபோது சிறப்படைவதுபோல இவர்
கள் சேர்ந்தவுடனே பூந்தோட்டத்தினழகைக் காட்டியிருக்கப், பரமநாயகியா
ருஞ் சூசைமாமுநிகளுஞ் சொல்லுவார் : பாலையும் நஞ்சாக்கும் பாம்புபோல
நன்மைசெய்வாரை நீசர் பகைப்பார் : தன்னைவெட்டினவருக்கும் நிழலைத்தரு
ஞ்சோலைபோலப் பெரும்பகைசெய்தவனாயு மாகுநிலைமையுடையார் நேசிப்பா
ராதால், தணியாதகோபத்தோடு நகரத்திலிடங்கொடாமல் நம்மையகற்றின
யாவரும் அடைதற்கரியமுறைமையால் ஆண்டவனிங்கே யவதரித்தத தேட
வந்த அரியதாரத்திரசெல்வத்தை நமக்குத்தந்தார்களென்று அவர்களைத் துதி
த்த பின்பு கன்னிமரியம்மாள் வேல்போலப் பாய்ந்து உள்ளத்தை யறுக்குந்
துயர்கள் குறையுமென்று சூசைமாமுநிகளை நித்திரைசெய்யப்போ மென்றவு
டனே மாதவனாகிய சூசைமாமுநிகள் நல்லதென்று ஒருபக்கத்திலொதுங்கிப்
போய்த், தனியேயிருந்து கடவுளைவணங்கினபோது தான்பொய்யையொழித்த
துபோலத் தன்னுடலைமறந்து தனது ஒளிவீசிய மெய்வளருவதுபோலத் தன்
னுள்ளமும்வளரத் தேவதிருவுளத்தி னேவலைப்பொருந்தி, மழைவருஷித்தது
போல இரண்டாறாக ஆனந்தபாஷ்பஞ்சொரிந்து பரவசமுற்றிருந்தார்.

அப்பால், நிறைந்தமனக்களிப்புத் திருமுகத்திற் றோன்றப்பொழிந்து பெ
ருங்கருணையைக்காட்டுங் கன்னிமரியம்மாள் முழந்தாளிலிருந்து பேரானந்த ம
நுபவித்துவிளங்குந் தன்திருக்குமாரன் தனது திருவயிற்றிலசைவதைக்கண்டு,
தனதுதிருமுகத்தில் உமிழ்ந்த காந்தியினால் ஆயிரங்கதிர்களுடைய சூரியனுதய
மாகச், சிவந்தமுகமாயொளிருங் கீழ்த்திசைபோலவிருந்து மார்கழிமாதம் இரு
பத்தைந்தாந்தேதியிரவில் பதினைந்துநாழியாக ஆதிவாரத்தில், வாசலைத்திறவா
மல் தூயகண்ணாடியிடத்து நுழைந்த கிரணங்கள் புறப்பட்டதாகப், படாத
காந்தியைப் பரப்பினதுபோல யாதொருவருத்தமுமில்லாமல் மூவுலகத்திலும்
ஒவ்வாத முறைமையால் திருக்குழந்தையைப்பெறுமுன்னும்,பெறும்போதும்,
பெற்றபின்னு முக்காலத்திலுமழியாத கன்னிகையாகிப், பிதாச்சுதன் இஸ்பிரீத்
து சாந்துஎன்னும் அளவில்லாதகடவுளாகிய மூன்றாட்களில் இரண்டாமாளா
கிய திருச்சுதனை மூன்றுசுடர்களிலும்விளக்கமாகப்பெற்றாள். இவ்வண்ணமாகச்
சூரியன்தனுராசியில்நடக்கு மார்கழிமாதத்தில் பாபத்தால்வந்த சாபத்தைத்தீ
ர்த்துத், துன்பத்தினின்று நம்மையிரட்சிக்கக்கடவுள்கன்னித்தாய்திருவயிற்றினின்
றவதரித்தமையால் அவதரித்தநாதனைக் காணவேண்டுமென்ற ஆசை யுள்ளத்
தைத்தூண்டினதுபோலச், சூரியன் பொன்தேரை முடுக்கிவந்து கிரணத்தைப்
பரப்பிக் கமலங்களைக்களிகூரச் சீக்கிரமாயன்றையதினம் பகலைச்செய்ததினால்,
இராக்காலங்குறுகவும், கதிரைப்பரப்பும் வல்லவனாகிய சூரியனின்தேரொழிந்த
போது கொடுங்கோலரசனாகிய இரவுநீங்கிநிறைந்த இருளினுள்புதைக்கப்படு
வதுபோலத் திருநாதன் அவதரித்து விளங்கி எதிர்த்ததால் பேய்களெல்லாந்
நரகத்திற்போக வானவர்தொடுத்துவரவுங், கொடுமைகள் ஒழிந்தமையால்

தருமங்கள் தேறிவளரவும், நோயுந், துன்பங்களும் நீங்கினமையால் கல்விகள்
தெளிவடையவும், இன்பத்திற்றோய்ந்த வுலகமெல்லாம்விளங்கவும், இரவில்
நக்ஷத்திரங்களும், பகலில் சூரியனும், வணங்குவதுபோலக் கிரணங்களைப்பரப்
பினமையால் மற்றநாள்களிலும், எழுமடங்காய்விளங்கி அவதரித்த தேவஅழ
கின்சாயலை நன்றாய்க்காணத் தங்கள்கண்களைத்துடைத்துவிளங்கினதுபோலத்
தோன்றவும், அவதரித்த கடவுள்தந்த நன்மையைக்கண்டு அடைந்தகளிப்பி
னால் சிரித்ததுபோல ஆகாயத்தையளாவிய மரங்களும், பருவமில்லாதிருந்
தாலும் இனியகனிகளோடு இசைபடமலர்களைத் தாங்கிநிற்கவும், விளங்கும் வா
னுலகத்துக்கு ஒப்பாகப் பெருமைகொண்டுவிளங்கும் பூவுலகங் களிகூர்ந்திருந்
ததென்றால் முதிர்ந்தபெருமைகொண்ட அந்தக்குகையிலுண்டான அழகின்தன்
மையைப்பாவலருபமானங்கொண்டுபுகழ்ந்துசொல்லக்கூடாதிருக்கவும், ஒருபக்
கமெல்லாம் வானமுதுள்ள எண்ணப்படாதவானவர் திருக்குழந்தையின் திருப்
பாதங்களைவணங்கி, வணங்கியபாதங்களின்மேல் தூவிய வாசமலர் மழையால்
தேன்மழையும் நிறைந்திருக்கவும், ஒருபக்கமெல்லாம் வீணையினோசையும்,
வீணையினு மின்பமாயப்பாடிய குளிர்ந்தவோசையும், வானத்தின்மேலுங் கிளம்
பும்படி வாழ்த்துவோரோசையுங் கூடிவழங்கலால் விரும்பியுள்ளங்கொண்ட
பிரியம்பொங்கிக்களிக்கவும், ஒருபக்கமெல்லாம் பொன்னின்சாயலா யுருவங்
காட்டி யணிந்த ஆபரணங்களு மின்னிய நெற்றியும்விளங்க வானவர் தலைம
டுந் தாழ்ந்து இன்பம்பொங்கித் தொழுதமையால் பேரின்பம் நிறையவும்,
ஒருபக்கமெல்லாஞ் சந்தனச்சாந்துங், கஸ்தூரிச்சாந்தும், வயிரஅகில்கட்டை
வெந்தபுகையுங்கலந்துகூடி யினியவாசனையைத்தரவுந், திருமேனியோடவதரி
த்த பரமநாதனைக் கைகளைக்குவித்து வானவர்வணங்கும்விருப்பத்தால் கடலை
ப்போலச்சூழ முழக்கமெழுந்தமையால் அளவில்லாதிருக்கவுமாயின.

இவையாவுமானவுடனே மிக்கயேல், கபிரியேல் என்னும் இரண்டுவான
வர்களுங்கூடி, மக்களுக்குநாதனுகவடிவுள்ள வுருவத்தோடு அவதரித்த திருக்
குமாரனைக் கைகளிலேந்திக், கன்னித்தாயார் முன்னிலையில் காட்டினவுடனே,
பூவரும்பு வாசனைவிட்டதுபோலக், கன்னிமையழியாமற்றிருமகனைப்பெற்ற மோ
க்ஷராக்கினியார் தனது திருக்குமாரன் திருக்கண்களோடு தனதுதிருக்கண்
களையுஞ்சேர்த்துப்பார்த்தவுடனே சூரியனையெதிராகக்கண்ட பூரணச்சந்திரனை
ப்போலப் பேரின்பமுகத்தோடு விளங்கியிருக்க அப்பால் தன்னைத்திருப்பேறாக
ப்பெற்ற திருத்தாயைநோக்கித் திருக்குமாரன்சொல்லுவார் ; தாயே ! என்னை
ப்போல நீயுமிருவென்று சொன்னவுடனே என்னை யடிமையாகக்கொண்டு
கடவுளாகிய தகப்பனைப்பெற்ற தாயார் பேரின்பக்கடலில் முழுகிப்பிறையை
யொத்ததிருநுதலைத்தாழ்த்தித் தன்திருக்குமாரனைவணங்கியவுடனே, முன்சொ
ன்ன இரண்டுவானவர்களும் பிதாவாகிய சர்வேசுரனின் திருக்குமாரனைத்திரு
த்தாயாரின் காந்தள்புஷ்பம்நிகர்த்த திருக்கரங்களில்தந்து முன்னே விழுந்து
வணங்கியபோது திருக்குழந்தையைவாங்கி யுயர்ந்தமார்போ டிறுகச்சேர்த்து
நல்லமலர்ப்பாதங்களைத் தடவிப்போற்றிக், கல்விகளைக்கடந்த ஞானமடைந்து
ஆம்பல்மலரின்மேலே வாசத்தாமரைமலரைவைத்ததுபோலத் தனக்குயிராகி
ய அருமைத்திருமகனைத் தனதுதிருக்கரங்களிலேந்தித் துயர்கொண்டு,மயங்கின
மனிதரைநினைத்து உணர்ந்தகருணையோடு பிதாவைநோக்கிச் சொல்லுவாள் :
பிதாவே ! தெய்வத்துவத்திலுனக்குத் திருச்சுதனுகி, மனுத்துவத்திலென
க்குந் திருமகனுகிய பெருமையுடைய கடவுளை இதோ உனக்கு நான் காணிக்
கையாய்க் கொடுக்கின்றேன் ஆகலால், எனக்குச்செய்த கருணையை மற்றமனி
தர்க்குஞ்செய்திரக்ஷிப்பாய் ; தங்கள்நிலையின்மேலும் உயர்ந்துவாழுவோமென்
று ஆதியில்நினைத்து நல்லதருமத்தைப் போக்கடித்தவர்களால் செய்யப்பட்ட

பாவமிருந்ததால் உலகமெல்லாங்கொண்ட தீமைகளைநீக்கிப், பேரின்பமோக்ஷ
த்தைக்கொடுக்கவந்த திருக்குமாரன் திருமுகத்தைப்பார்த்தாயாகி லுனக்குவந்
தகோபத்தை நீக்குவதரிதோ? கடவுளவதரித்து மனிதனுனதினால் பாபரூபமா
கிய மனுரூபமே, விளங்கின தேவத்துவத்தை மூடியிருப்பதுபோலத் தானுந்
தருமங்களினால் நமதுபாவத்தை மூடினதால் வல்லமையோடுகாய்ந்த கோப
த்திற்கு இன்னும் இடமுண்டோ? என்றுசொல்லி மீளவுந் தனது திருக்கு
மாரனைநோக்கிச்சொல்லுவாள்: தாயின்விருப்பத்தைப் பூரணமாய்த்தீர்க்கும்
அழகிய அருமைத்திருமகனே! நீயிங்கே கேட்கவந்த துன்பங்களை விரும்பின
அளவின்மேலும் உனக்கு இப்பூமியூட்டும்போது, நீயோவானுலகில் விரும்பப்
பட்ட நன்மைகளை மனிதர்க்கு நிறையவூட்டித், தீங்கானபாவங்களை நீக்குவாய்;
என்று உயிரைத்தரு மருந்தினைப்போல நிலைத்தகருணையின் மாக்ஷியாளாகிய
தேவதாயார்சொல்லிய சொற்களைத் தேனினுமினிமையாகத் திருச்செவியா
லருந்தின திருக்குழந்தை ஒருபுன்னகையைக்காட்டினவுடனே, இதைக்கண்ட
கன்னித்தாயார் அன்பினாற்பொங்கி, அந்தக்குகையிலே யின்பமநிறைந்துபொங்க
கல்லகோலமிட்டதுபோலவ், பாபத்தைப்பகைத்த தன்னெஞ்சமும் அன்பும்
ஒன்றாகப் பூவரும்பின்சாயலாகிய திருமேனியைக்கட்டி முத்தமிட்டுக், கடல்
சூழ்ந்த பூமியெங்கும் பொருள்களைத் திரளாய்ச்சுரந்து, சமஸ்தவுயிர்களும்
உண்ணும்படி வேண்டிய உணவுகளைப் பொழியுங்கடவுள் மயக்கத்தால் வந்த
பாபத்தைத்தீர்ப்பதற்கு,மனிதனுகிவந்தபடியால்உண்ணும்படித்திருமுலைப்பாலை
த்தந்துநிற்கையில் இவையாவையும் வேள்வியில் மந்திரத்திக்கொடிநின்ற சாய
லாய்த் தியானத்திலநின்ற வேதமேலடிவாகிய சூசைமாமுநிகள் அடைந்த கா
க்ஷியினால பரவசமுற்றிருக்கும்போது குறைவில்லாமல இன்பமாய்க்கண்டு
அருளின்வரங்களையடைந்தாலுந்திருநாதனவதரித்துக்காட்டுந்திருவடிவத்தைத்
தனது திருக்கண்களால் அருந்தும்படி, நக்ஷத்திரங்களை முடியாகவணிந்த அந்
தத்திருக்கன்னிகை யழைத்தவுடனே வந்தார்.

வந்து பிறையின் திருநெற்றியும், நக்ஷத்திரத்திருவிழிகளுங், கமலத்திரு
முகமும்பொருந்தி, வாசமலருடலைக்காட்டிய பரமநாதனைக் கன்னித்தாயாரின்
திருக்கரத்தாமரையின்மேல், விளங்கின முத்தின்சாயலாகக்கண்டு, இன்பக்கட
லில்முழுகி யுள்ளந்தேறித், தனதுதிருநெற்றித் தரையிற்பட விழுந்து,விழுந்து
வணங்கித் தண்டனிட்டு, இருதாமரைத்திருப்பாதங்களைத் தொழுதமிகுதியால
ஆசைபெருகிக், கண்டவற்றையெல்லாம ஆராய்ந்து,ஆராய்ந்து உள்ளங்கொண்
டபேரின்பத்தைத்திருக்கண்கள்வழியால் மழையாகக்கொப்பளித்து, வானவரும்
அதிசயிக்க வாழ்ந்துயர்ந்தபோது அன்பினகடலாகி யெல்லாவுயிர்களையும
ஆண்டிரக்ஷிக்குங் கருணையினுயதிசொல்லுவாள்: அருளின்மாக்ஷிமைநிறைந்த
மார்புடையமாதவனே! நீர் என்துன்பத்திற்குத் துணையானபிறகு என்இன்ப
த்திற்குத் துணையாகவேண்டுமாதலால், மனிதனைப் பிறந்தெழுந்தருளிய திரு
நாதனை யுமதுதிருக்கரங்களி லேந்திக்கொள்ளுமென்று தனதுமலர்க்கரங்களை
நீட்டியவுடன், கைத்தாதையாகியசூசைமாமுநிகள்வானுலகில்பொதுவறத் தனி
யே அரசர்க்கரசனாக ஆளுங்கடவுளாகிய திருப்பாலனைத் தனது வுள்ளத்தால்
மிகவுமவணங்கித், திருக்குமாரனை யெடுக்கநாணினும் பூவுலகில் நிகரில்லா
தமாக்ஷிமைதங்கிய மரியம்மாள்சொல்லிய திருமொழிகளால் தேறி, இன்பத்
திலமுழ்ந்து வணக்கத்தோடு இருமலர்க்கரங்களாலு மேந்தித், திவ்வியபாலனை
ஆசையோடுதிருமார்பிலணைத்து முத்துமுத்தமிட்டுக், கமலநேத்திரங்களி லொ
ற்றியழுதகண்ணீராற்கழுவிச், சித்தமோங்கித்திருக்குழந்தையின் திருவடித்தாம
ரைகளைத் திருச்சென்னியில அணியாகவைத்துச்சூடித், தனது மாலைக்கொடி
யைத் திருப்பாதங்களில் மாலையாகஅணிந்து, முடியாதவின்பத்தை யநுபவித்

திருக்கையில், திருக்குழந்தையாகிய பரமநாதன் சூசைமாமுனிவனை யின்பமாய் நோக்கின அன்பினாலே யுள்ளத்திற்பாய்ந்துலாவின இன்பக்கடல்பெருகி, யுட்கொள்ளாமல் புறப்பட்டோடத், திருமுகமண்டலத்தின் வழியாய் எவ்வுலகமும்நிறைய பேரின்பத்தையுமிழ்ந்து ஒருபுன்னகைகாட்டிப், பூத்தகொம்பினைச் சுற்றிய மலர்க்கொடிபோல பூமலர்ந்த கொடியுயர்த்திய சூசைமாமுனிவனைக்கட்டிக்கொண்டவுடனே மாதவனாகிய சூசைமாமுனிவன் குளிர்ந்தமேகஞ் சூரியனை மூடினதுபோலத், தனதுவஸ்திரத்தைப்போர்த்துத், திவ்வியகுழந்தையின் திருமேனியைக் கட்டிக்கொண்டதை ஒளிதவழும் வான்மீன்களைமுடித்த தருமநாயகியார் அந்த நக்ஷத்திரங்களையொப்ப விளங்கிய இரு திருநேத்திரங்களுங் களிக்க உற்றுப்பார்த்துப், பார்த்தபார்வைமாறாமல் தனது திருக்குமாரன் திருமுகத்தில் உமிழப்பட்ட கிரணங்களைமுழுதுமுண்டு,சூரியகதிரையுண்ட சந்திரனைப்போல விளங்கி, யிருக்கும்போது மீன்களுக்குவமமாகிய திருக்கண்களிமையாமல் வாணனுகிற லெழுதப்பட்ட சித்திரம்போலக் கன்னித்தாயார் நின்றுவென்று சூசைமாமுனிவன்கண்டு, தேனினுமின்பத்தை யந்தத்திருமாதாவுக்குச் செய்ய அந்தநாயகிக்கு உயிராகிய திருக்குமாரனை யந்தப்பெருமாட்டியாருடைய செங்கமலக்கரங்களில் தந்து, மலர்மலர்ந்தகொம்பானது மலர்நீங்கியபோது நிற்குஞ்சாயலாகநின்று, சாய்ந்து செவ்விய இருமலர்ப்பாதங்களை மாலையாக அணிந்த இன்பத்தினால் திருக்குழந்தையை நேசிக்கும்படி, தனது அழகிய பூங்கொடியைக் குடையாக மேலாடப்பிடித்து, நல்லநிழலைச் செய்யவும், மணிகளையணிந்த வுருவோடு இரண்டுவானவர்கள் ,இரண்டுசந்திர னூசலாடினதுபோல இரண்டுவெண்சாமரையை விருப்பத்தோடு வீசிக்கொண்டிருக்கவும், பாவஆசையால் நிறைந்த சிந்தாகுலக்கடலையடைத்த பரமநாதனாகிய திருப்பாலகன் பச்சைமாலையாற் செய்யப்பட்ட படுக்கையிற்பற்றிவந்த நித்திரையை யின்பமாய்க்கொண்டார்.

இப்படியாக வானுலகத்தைக் காத்திரக்ஷித்துக், கருணையிற் றூங்காத ஆண்டவன் விரிந்தசெந்தாமரை மெத்தையின்மே லன்னக்குஞ்சு தூங்குமாப்போலக், கன்னித்தாயாரின் திருக்கரங்களிலே தூங்குகிறபோது வேதமந்திர வாய்மொழியையுடைய மாதவனாகிய சூசைமாமுனிவன் மனதில்நேர்ந்த உணர்வுகளால் வீணையினிசையையும், பாலின்சுவையையும், மாங்குயிற்குரலையும், ஒப்பாகப்பாடி, முடியாததுதிகளைச் சொல்லுவார்: கருணாகரனே ! இன்பக்கடலே ! புண்ணாகத் துன்பப்பட்டுவருந்திய யாவருக்கும் நிகரில்லாத இனிய மருந்தே ! அருளால்நிறைந்த அன்பே ! பூமண்டலத்தைச் சூழ்ந்து அலையுங் கடலையொத்த என்னெஞ்சிற்குயிரே ! எண்ணப்படாத உயர்ந்தசெல்வங்களையுடைய வரசே ! திருக்கண்களை மூடியுறங்க உன்னைக் கண்டேனோ ? எங்கள்மேலிரங்கிக்காட்டின தயையிதுவோ ?, நம்மையிரக்ஷித்தநாதன் இருளுமறைவுங்கிட்டாமல் சூரியனுக்கொளியாய்நின்று திருவிழிகளை மூடுகின்றார் ; வானத்தையும், பூமியையும் வழுவில்லாமலாளுந் கருணையயங்காமல், பூவுலகத்தோர்கொண்ட அயர்வினைத்தீர்க்க அயர்வில்லாதகடவுள் தன்னறிவுமயங்காமலுந், தன்மனந்துங்காமலும், நான்பூரணமாய்க்களிகூரத்தூங்குகின்றார் ; ஆதலால், களித்தநாளில் வீசுந்தென்றலே! இனிதாயிங்கேவீசு;நல்லமலர்களே!துளித்துளியாய்த் தேனைப்பொழியமலருங்கள் ; அழைத்த இளங்குயில்களே! இனியபாவிசையாற் பாடுங்கள்; என்று மீளவுஞ்சொல்லுவார்: மோக்ஷஇன்பங்களையுண்டாக்கித் தந்தவனீயே, பூவுலகத்துன்பங்களைத் தீர்த்திரக்ஷித்தவனீயே, அரிய பேரின்பத்திலமைந்தவனீயே, வான்மேல் துதிக்கப்படுபவனீயே, ஞானார்ந்த அறிவின்மேலுயர்ந்தவனீயே, ஆதலால் என்னைப்போல அவதரித்துத் திருச்சரீரத்தைக்கொண்ட அன்பின்தயையை நான் கண்டுகொள்ள, அறிவைத்தந்

தெனக்குத் திருவுளம் பற்றுயோ? வான்மேல்வீற்றிருந்து மகிழ்ந்தவ னீயே,
குன்றுதவல்லமையால் கிகாற்றவ னீயே, பாவலர்நாவில்வீற்றிருந்தபுகழ்கடந்து
ஒருவனுலுமடையப்படாத காக்ஷியின்கர்த்தா நீயே, பூவுலகில்நாங்கள் வாழ்ந்தி
ருப்பதற்காகப் பூவுலகில்வந்து, துயர்களைக்கொண்டழுகின்றவ னீயே, ஆதலால்,
ஆ! என்னிருதயத்திலும் வீற்றிராயோ? அதற்குதவியைச் செய்யாயோ?
நூலின்படியேசொன்ன புகழ்ச்சியின்மே லுயர்ந்தவ னீயே, புண்ணியாற்று
மருந்திலுங் கனிந்தவ னீயே, கோடாதசெங்கோலி னீதிமுறையால் உலகங்
களையெல்லாம் ஆண்டவ னீயே, ஆதலால் வேல்முதலிய பலஆயுதங்களினுல்
திருஇரத்தத்தைச் சிந்திபிறக்கவோ? இந்தத்திருவுடலைக்கொண்டாய்; இதை
யறியாமல் காற்றின்முன்னே இலைகளாடினுப்போல ஒருவழிப்படாத என்கரு
த்திற்குவேண்டிய அறிவைப் படிப்பியாயோ? பூவுலகத்தார்க்கும், வானுல
கத்தார்க்கும் உயிர் நீயே, சீர்தொடுத்த பாக்களுக்குப் பொருள் நீயே, இறங்
கொண்ட அரசர்க்கு வலலபம் நீயே, சூரியனுக் கொளி நீயே, ஆதலால் எங்
கள்மேல்வைத்த இரக்கத்தினுல் மனிதனுய்ப்பிறந்தாய்; நாங்களுந் துன்பந்த
ரும் பாவங்களை யொழித்துவாழ உனது அருமைத்திருவடிகளை வணங்குமு
றையை யுணர்த்தாயோ? தேறியகருணையோடு கோபித்தவ னீயே, கோபத்
திலுமினிதா யருளைச்செய்தவ னீயே, ஒருவன் படிப்பிக்கக் கல்வியைப்படியா
மல் யாவற்றையுமறிந்தவ னீயே, சப்தமில்லாமல் யாவற்றையுஞ் சொல்பவ
னீயே, மாறும்பொருள்களுக்கு உள்ளிருந்தும் அப்பொருள்கள் மாறும்பொ
ழுது மாருமல், நிலைபெற்றவ னீயே, ஆதலால், முடிவில்லாத உனது புகழ்க்கட
லுள் ஆழ்ந்திருக்கு மெனக்கு அதின்கரையைக்காட்டாயோ? வானத்தில் திரி
யும் பலசுடர்கள் தங்கள்கிரணங்களால புகழப்பட்டவ னீயே, நவமணிகள்
தங்களொளியால் புகழப்பட்டவ னீயே, பறவைகள் தங்கள்நாவுகளால் புகழப்
பட்டவ னீயே, பூமலர்கள் தங்கள் வாசனையால் புகழப்பட்டவ னீயே, நதி
கள் தங்கள் அலைகளாற் புகழப்பட்டவ னீயே, ஆதலால் நானும் என்னன்பினை
நாக்காகக்கொண்டு உன்னைப்புகழ்வதற்கறியாத ஊமையாகிய அடியேனைப் படி
ப்பியாயோ? எப்பொழுதும் வணங்கப்பட்டவ னீயே, எங்கும் ஒருருடை
யாய்நின்று நிறைவைச்செய்தவ னீயே, எப்பொழுதும் அநாதியாயிருப்பவ னீயே,
முப்பொழுதும் ஒருபொழுதாய் நிற்பவ னீயே, ஆதலால் எங்களுடைய சொ
ல்போதாமல் குறையாகப் பிந்திநிற்கச் சொல்லத்தகு முறையுங்கடந்து, நாங்
களினையாத கிருபையைச்செய்தாய்; இதற்கு நானென்றுந்தேரும விருப்ப
த்தைக்கண்டு என்னிருதயத்திற்குக் காக்ஷியைத்தாராயோ? என்று சொல்லி
இன்பத்தாலமுதருகிக் கர்த்தனின்கருணைக்கடலுள் குளித்துநீந்திக், கரையைக்
காணுமல் பின்பு கரையிற்சென்றவரைப்போலத் தன்மெய்ம்மறந்து, சிறிதுநேர
மிருந்து வானவருமதிசயிப்ப மீளவுஞ் சொல்லுவார்: தருமமும் நீ, தாயும்
நீ, தந்தையும் நீ, சுற்றத்தாரும் நீ, மற்றயாவும் நீ, பரமகதியும் நீ, பூவுலகிற்
குயிராகப்பிறந்து எங்கள் துன்பங்களையும், பகையையும், அகற்றி, எங்கள்
சிறையைமீட்டு பாவத்தாலடைக்கப்பட்ட வான்வீட்டுவாசலைத் திறந்தாய்;
இவையாவுமறியும்படியுன்வல்லமையுந், தயையுங்கொண்டிரக்கஞ்செய்யாயோ?
ஓயாத அன்பின் மாக்ஷியுடையானே! செல்வத்திருவோனே! குருவாகவந்த
நீ மின்கொளித்திருப்பாயோ? பாவஇருளைத்தவிர்க்கும் ஞானசூரியனுகவந்த
நீ ஒளிதாராயோ? வானுலகுக்கொப்பாகப் பூவுலகங்களிகூரத் திருக்கர்ப்பத்
தின் வழியாய்வந்த நீ அந்தக்கிருபையை யெவருங் கண்ணுல் கண்டறியும்படி
செய்வாய்; என்று வணங்கியபோது தூங்கினபாலனையைக்காட்டி, உலகங்க
ளெல்லாம் புரக்கும் பரமநாதன் இவையாவையுங்கேட்டுச், சூசைமாமுனிகளு
க்கு மிகுந்தவிருப்பத்தைவருவித்துத், தனது திருவிழியைவிழித்து எவருடை

பசிறுமையுந் தீர்க்குங் கர்த்தன் சிறுமையாய்ப் பிறந்த விசேஷத்தை யுலகத்தி லறிவிக்கப்பயந்து வீழ்ந்துவணங்கிய வானவர்க்கு வெளியரங்கமாகச் சொல்லாமல் உள்ளத்தில் கட்டளையிட்டவுடனே அந்தக்கட்டளையை வானவர்போயறிவித்ததினால் இடையர் வந்து வணங்கினதும், மிகுந்த பிரகாசத்தால் பகலிலும் விளங்கிய நக்ஷத்திரந் தோன்றினதும், மூவரசர்வந்து விருப்பத்தோடு பணிந்ததும், இவையாவும் சூசைமாமுநிகள் கருதியபடி யானதும் இனிச்சொல்லுவாம்.

மகவருள்படல முற்றிற்று.

பதினோராவது - காட்சிப்படலம்

இன்னவாறி வின்னதன்மை யின்னயாவு மாசையி ற்.
பொன்னநாடு துன்னுமும்பர் பொன்னுருக்கொ டாங்குபோய்
மின்னனேரு மன்னையீன்ற வேதநாதனைத் தொ ழு
வுன்னலாத கோவரின்ப முண்ணவும் றழைத்தன ர்.

முன்சொல்லிய திருக்குகையிடத்திலே முற்கூறியவண்ணம் எல்லாம் நிறைவேறினபிறகுவானவர்கடவுளின்கட்டளைப்படி,யழகியசொரூபத்தையெடுத்து மின்னலையொத்த கந்திதாயாரீன்ற வேதநாதனைவணங்கும்படி,இடையர்களைவரவழைத்தவுடனே கொழுந்துவிட்டுக் குளிர்ந்த முல்லைநிலத்திலிருக்கும் இடையர்களும், இடைச்சிகளுமாக எழுந்துவந்து, சம்பவித்ததெல்லாவற்றையுங்கண்டு, சாயங்காலத்தில் மலர்ந்த வெங்கைமரத்தை வண்டுகள் சாராததுபோல மயக்கத்தைத்தரும் பொன்னாசையால் வருங்குற்றங்களைநீக்கி மிகவுஞ் சந்தோஷித்துப், பரிமளிக்கு முல்லைப்புஷ்பங்களால கட்டியமாலைகளைப்,பிறந்த வேதநாயகனுடைய திருப்பாதங்களில்வைத்துவணங்கிப்,பஞ்சேந்திரியங்களில் பேரின்பத்தை நிறைய அநுபவித்து, அடைந்த தேவவரங்களாகிற கடலிலமிழ்ந்தி,மனத்திலேகொண்ட இன்பம் உள்ளடங்காமல் வாய்வழியாய்ப் புறப்படத், தேவபக்திநிறைந்த தங்களுயிர் உடலினுள் ஊசலாடியிருக்க யாவருஞ் சொல்லுவார்கள் : அளவில்லாதம்மாசுகிமையால் வானுலகிலுயர்ந்துவாழும் வானவர்க்கு அரசனே ! பாவத்தால்வந்த புண்களுக்கு மருந்துதடவி இடையனைவிட்டுப்போன ஆடுகளாகியபாவிகளை மீட்டிரக்ஷிக்கவோ ? பூமண்டலத்தில் மனிதனாய்ப் பிறந்தாய் என்பார் ; வானுலகோரும் வணங்கிய பராபரனே ! ஆகாயத்தில் விளங்குஞ் சந்திரனைப்போல ஆகாயமில யாவரும் வாழும்படி கருணையுள்ளவெண்குடையைக்கொண்டு தேனொழுகியமாலையாக அன்பினையணிந்த வேந்தனே ! தேவாமிர்தம்நிறைந்த மாணிக்கத்தாற்செய்த பாத்திரத்தைப்போலுந் திருமார்புடையோனே ! நீ பிணிக்குலமாகிய மனுக்குலத்தி லவதரித்த அதிசயத்தை ஆராய்ந்து ஸ்தோத்திரஞ்செய்வது கூடாமையால், நீயருளிய கட்டளையை யாபரணமாக மார்பிலேயணிந்த பக்ஷமாயினும் எங்களைவிடசலாதென்பார் ; சூரியகிரணம்படிந்த தாமரை மலர்ந்தீன்ற முத்தைப்போலத் துன்பமில்லாமல் திருக்குமாரனைப்பெற்ற ஒப்பில்லாத்தாயே ! வாழி, கருநியின்மாசுகிமையணிந்த துணைவருகி, மஹாதபசொரூபமாய்விளங்கிய மன்னவனாகிய சூசைமாமுநிகளே ! நன்றாய்வாழியென்பார். மீளவும் அங்கங்கேயிருந்து நெருங்கிவந்த தேனினுமினியசொல்லுடைய இடைச்சிகள் திவ்வியபாலனின் திருவடிக்கமலங்களிலே பூரணச்சந்திரனை நக்ஷத்திரங்கள்சூழ்ந்ததுபோல

மிகுந்தவிருப்பத்தால் தேனிறைந்த மலர்மாலைகளையணிந்தும், யாவரும் சூரிய
னுமிழ்ந்த கிரணத்தைப்போலக் குறைவின்றித் திருக்குமாரனைப்பெற்ற கன்னித்
தாயாரின் திருச்சரணங்களிலே, யந்தத்திருச்சரணங்களி லிருக்குஞ் சந்திரனு
மிழ்க்க பற்களிளைப்போலப் பசுவினியபாலைவைத்தும், வணங்கிக்களித்திருக்
கும்போது, திவ்வியபாலகன்திருக்கமலநேத்திரத்தாற்கருணையைக்காட்டி, யவர்
களுக் கின்பம் நுகர்ந்தவுடனே அவர்கள் வானவருக்கொத்த ஞானகாட்சியும்,
பேரின்பமுமடைந்தவராயிருக்கையில் கன்னித்தாய்மரியுஞ் சூசைமாமுனிவருந், தே
னினுமினியசொல்லால் அவர்களுக்கு நன்மையைக்கூறினபோது அவர்கள்
கொண்ட அன்புஉள்ளடங்காமல் கண்களின்வழியாக மழையைப்போலக்கண்
ணீர்சொரிந்து துன்பத்தோடு பிரியமாட்டாமல் விருப்பத்தோ டங்குவைத்த
வுயிரல்லாமல் வேறில்லாமையால் உயிராகிய அவர்களுடைய பசுந்தானே
யில்லாவிட்டால் நொந்து வெற்றுடம்புகளாய்த் தங்களூருக்குப்போய்ச்சேரு
ருவார்கள். அவர்கள் போனபின்பு கன்னிமரியம்மாளுஞ் சூசைமாமுனிவருங்
கடுத்துப்படாதகட்டளையால் தனியாயிருந்து, உலகங்களையெல்லாமாளுங் கட
வுள்மனிதனாகப்பிறக்க உயர்ந்தமாளிகைகளைத்தேடாமல் மாடுகளொதுங்குங்
குகையில் ஒதுங்கிச், செல்வஅரசர்களைத்தேடாமல் தாரித்திரராகிய இடையர்
களைத்தெரிந்துகொண்டாரென்று ஆண்டவனைவாழ்த்தினார்கள்.

போன்சென்ற ஆயர்களோவென்றால், முன்னநுபவித்தபேரின்பத்தை மீள
வும் அருந்தும் விருப்பங்கொண்டு, நாள்தோறு மின்னலினும்விளங்கிய மெல்ல
டியையுடைய் கன்னித்தாயார் திருக்கரத்திலிருக்குந் திருமகனை வணங்கும்படி
வந்து தாமரைமாலையைத் திவ்வியபாலகன் திருவடிகளில்வைத்தபோது அவர்
நல்மேகமின்னியதுபோலக் கடாக்ஷித்துத் தெளிந்தஞானத்தையு மின்பமழை
யையுந் தூவினதால் விலவினம்போடொத்தவிழிகளையுடைய இடைச்சிகளோ!
வெள்ளமிகுதியாற்கானகத்திலோடு முத்தங்களைப்போல மிகுந்த விருப்பத்தா
ல் காவிலோடிய துதிகளைச்சொல்லுகையில் அவ்விடைச்சிகளில்சாந்தியென்னும்
ஒரு இடைச்சியானவள் ஞானத்தாலுயர்ந்த இன்பத்தின்வெள்ளத்திலே நீந்தி,
நீந்திக் கரைகாணாமலிருக்குஞ் சூரியஆடையையணிந்த கன்னிமரியம்மாளைநோக்
கி அம்மணீ! அறிவில்லாமற் கிளிப்பிள்ளைகள் பேசுமொழிகளைக் குற்றமென்று
கள்ளாமற் கேட்பதுபோல இடைச்சியாகிய என்வாய்மொழி குற்றமென்று
கள்ளாமல் கருணையோடு கேட்டருள்வாயென்று சொல்லுவாள்: தாயே!
வருங்காரியத்தைக் கடந்தகாரியம்போலத் தெளிவாயறிந்து மனிதராஞ்சக்குமே
லுங் கருணைதற்றிரக்ஷித்து, வானவுலகிலிருந் தரசுசெய்யுந் தாழ்வில்லாக் கட
வுள் இங்கேவருந்துவது இன்பமாகுமென்று மனிதனாயவதரித்தாரோ? ஆழி
னும் நீதிச்சக்கரத்தை யுருட்டியாளும் வேந்தருக்கு உரியவேல், வாள், வில்,
அம்பு, சக்கராயுதமுதலிய ஆயுதங்களும், வீரசேனைகளும், நன்மணிபரலலங்
கரிப்பட்டு ஆசனமதிற்கு மேலுயர்ந்த அரண்மனையும், செம்பொன்னாபரண
ங்களும், மற்றச்செல்வங்களும், இவருக்கில்லாததென்ன? இருக்க வீடு மூ
தலாயில்லாமல இவ்வழியிலேபிறந்ததென்ன? வானவீட்டின்வழியைக்காட்ட
வந்தால், வல்லமைகாட்டுந் திருக்கோலத்தை யெடுத்து, வெற்றிகொள்ளுநரு
சொருபத்தைக்காட்டினல் நல்லதல்லவோ? துன்பரூபத்தோடு விருப்பத்தி
னல் நானடைந்தசந்தேகமிதுவே; ஆதலால் தாயே! இனி நீ தேன்மொழி
யுமலர்வாய்திறந்து நல்லறிவுகளைக் கட்டளைசெய்வாயென்று வணங்கினள்.
இப்படிச் சாந்தியென்பவள் சொன்னமொழிகளுந், திருக்குமாரன்காட்டிய அரி
யகருணையினுணர்வும் அறிந்த கன்னித்தாயாரிரங்கி தொநருபித் திருநேத்திரவழி
சாயப் புனலோட, இடைச்சியைநோக்கிச்சொல்லுவாள்: தனியே காரியங்க
ளைமுடிக்க வல்லமையில்லாதவர் ஆயுதங்களைக்கொண்டு படைவீரர்செய்யுங்

துணையைகம்புவார்கள்; கொழுகொம்பின்மே லேறிப்படர்வது இடைவிற்றவளுங் கொடியல்லவோ? நம்முடையசுவாமியின் வல்லமைக்கு இந்தத்துணைகள் வேண்டுமோ? எம்பிரான்வேண்டுங்காரியத்தை வேண்டுமென்றபோதே முடித்து உலகங்களியாவையுந் தனியேயாள்வார்; அன்றியும் அவர் கோபத்தைக்கொண்டால் அந்தக்கோபத்தைத்தணிக்கவல்லவருமுண்டோ? யாவரும் பயந்து மெலியும்படி மூன்ஜலப்பிரளயத்தால் உலகமெல்லாமழித்ததும், அக்கினிமழையால் ஐந்துபட்டணங்கள் வெந்தொழியத்துடைத்ததும், இதுபோலச்செய்த பலகவங்களும் நான்சொல்லவேண்டுமோ? சொல்லிலடங்காத தயையின்காலமிதுவேயென்று தாரகாகணங்களைத் திருச்சென்னியில்முடித்த பிராட்டியார்சொன்னதைக்கேட்டு மிகுந்தஅறிவுடைய இடைச்சிவிருப்பத்தைப்பற்றி மீளவும் முடிவில்லாத பரமனின்தாயே! அறுக்கும்வாளைப்போல என்மனத்தையறுக்கும் இன்னமொருசந்தேகமுண்டு சிறிதுசொல்லுகிறேன் அதுதீரும்படி யுனதுதிருவாய்மலர்ந்து சொல்லுவாயென்று சொல்லுவாள்; சுவாமி திருவுளம்பற்றின வேதநூலின்படியே நம்மையிரக்ஷிக்கிறவ ரிங்கே மனிதனாய்வருந்தருணத்தில் விளங்கினவேதத்தையெடுத்து யாவருமவரைத் தாழ்ந்துவணங்குவாரென்றும், பூபதிகளனைவரும் நடுங்கியஞ்சுவாரென்றும், வணங்காதவர் கெட்டுமெலிவாரென்று முன்னிருந்தமாதவர்கள் சொல்லக்கேட்டேனே யென்றாள். அதற்குப்பரமநாயகியார் சொல்லுவாள்: மிகுந்தகோபத்தைக்காட்டுதற்குக்காரணமாகிய கடையுகநாள் கிட்டியதென்று யாவரும் நடுங்கியஞ்ச, அப்போது வரத்தக்ககதையை யுற்றுக்கேட்பீர்களாகில் நான்சொல்லுகிறேனென்றாள். அதற்குத்தாமரைமலர்ந்து சூரியகிரணத்தையுண்டதுபோல இவற்றை விருப்பத்தோடு கேட்ட வாட்கண்களையுடைய சாந்தியும், மற்றவரும் எங்களுக்குத்தெளிவாகச் சொல்லியருளவேண்டும் அம்மாவென்று வணங்கிக் கேட்டவுடனே தேவமாதா சொல்லத்தொடங்கினாள்.

அதெப்படியென்றால்:—அளவற்ற வல்லபமுடைய கடவுள் இரண்டுதரம் இவ்வுலகத்திலே யெழுந்தருளிவருவாரென்று வேதத்திலெழுதிய உண்மைக்குத்தகுதியாக முதலில் கருணையைக்காட்டும்படிவந்து யாவருக்கும் நன்மையைச்செய்தபின்பு மறுபடியும் நீசொன்னபடி சர்வநீதியைக்காட்டி, யவரவர்செய்த நல்வினைதீவினைக்கேற்ற பலனைக் கொடுக்கவருவார்; ஆதலால் முன்னமேசெய்யவேண்டிய கிருபையின் தொழிலைச் செய்யவேண்டியகாலம் இந்தக்காலமாயிருக்கிறதினால் கவிஞர்களின்புகழைக்கடந்த கடவுள் பூவுலகங்களிகூரும்படி பொன்மழைபோலக் கருணைமழையைப்பொழிந்து, வானினின்றிறங்கி மனிதனாகக் கதிர்களைவீசுகின்ற சித்திரம் நல்லுயிர் பெற்றதுபோல வானவருஞ் சந்தோஷிக்கும் வடிவத்தைக்காட்டி, ஆசையை வருத்துவிக்குந் திருக்குழந்தையாய் நாம்செய்தபாவத்தால் வந்த புண்ணைத்தீர்க்கும் இனிய மருந்தாக இவ்வுலகில் அழுகைநிறைந்ததுயரத்தின் கையிலேபிறந்து, கசக்குந் துன்பங்களின் பாலையுண்டு, தயையோடுவளர்ந்தபிறகு பாவிகள்செய்யும்பகையின் முழக்கத்தில் பொறுமையை யோகப்பூட்டிச், சிந்தியதனது திருஇரத்தத்தினால் சேறுசெய்து, உழுதுநிறைந்த தனதுகருணையை விதையாகவிதைத்து, அவரவர்களுக்கு வேண்டியவரங்களை நீராகவிறைத்து, இதனால் விளைகின்ற மோக்ஷபேரின்பத்தை யிவ்வுலகத்தார் வாழும்படி பயனாகவளித்துப், பஞ்சேந்திரியவழியில் மனமுடன்கொண்ட பொருள், புகழ், இன்பமென்னு மிவற்றால்வந்த பாவமயக்கத்தைத்தீர்க்கப் பொறுமை, தாரித்திரம், தாழ்ச்சியென்னு மிவையுரித்தென்று முன்னமே தான்சொன்னபடி நிறைவேற்றி, எளியவனைப்போலத்திரிந்து முக்காலங்களையுங்கடந்த அறிவை மின்மமாகப்போதித்து, வேதத்தினனுநூலைக் காட்டுவாராதலால் ஒருகன்னியை நற்சென்று சொல்லிப்பின்பு அவ

னேயதைப்புசித்து இறந்ததுபோல கடவுளுஞ்செய்வாரோ? ஆதலால் இந்தத்
தலையின்காலம் போனபின்பு கடையுகத்தில அளவில்லாத நீதி தீர்ப்பதற்கு
இந்தக்கடவுளே உலகங்களெல்லாம் அஞ்சிக்கூசும்படி நஞ்சுமிழுங் கோபஉரு
வோடுவருவார்; அப்பொழுது அவருக்குமுன் தூதாகவருகின்ற அதிசயங்கள்
சொல்லத்தகாதன்வாயினும் கொஞ்சஞ்சொல்லுகிறேனென மீளவுஞ் சொல்
லுவான் : சூரியனிருண்டுமங்கவுஞ், சந்திரன் இரத்தமுகமாய்ச் சிவக்கவும்,
மாலையிற்கோர்த்த மலர்களைப்போலவும, மணிகளைப்போலவும் விளங்கிய நக்ஷ
த்திரங்கள் உதிர்ந்துவிழவும், யுத்தஞ்செய்வதுபோல அலைகள் மேகமண்ட
லத்தைப்பாய்ந்து கடல்முழங்கவும், பர்வதங்கள் பெயரவுங், கடையுகம்வந்த
தென்று பூமண்டலத்தோர் மிகுந்தபயங்கொள்ளவுங், கொடியஇடிகளைச் சூழ
கொண்ட கரியமேகங்கள் கணகணவென்று எரிந்த அக்கினிமழைசொரியவும்,
பெய்த நெருப்புநதிபோல வெங்குன்றிரண்டோடவுங், கையாலள்ளும்படியா
ன இருண்ட புகைமூடவும், மேகங்களைக்கிழித்து இடித்துவிழும் இடிகள்
அம்புபோல் திரளாய்த்தாக்கவுங், கிடுகிடுவென்று உலகமெல்லாம் நடுங்கி
யாடவுந், துன்பமிகுந்து சமஸ்தஉயிர்களும் இறந்து சாம்பலானபின்பு ஒப்
பற்றவல்லமையோடு தனியரசுசெய்யுந் தற்பரனின் கட்டளையால் பலவானவர்
அம்பினும் விரைவாக இங்குநாலுதிக்கிலுஞ் சென்று கடலும், மேகங்களுஞ்
செய்யுமுழக்கத்திலு மிஞ்சியதொனியோடு காளங்களையூதி, நமது பரமஆண்
டவ னிடப்போகிற தீர்வையைக்கேட்க எழுந்துவாருங்களென்றவுடனே ஒன்
றுமில்லாமல் மூவுலகும்படைத்த திவ்வியநாதனின் வல்லமையால் உலகமுண்
டாக்கிய நாள்முத லந்தநாள்வரையிலும் பூமியிலிருந்த மனிதர்யாவருஞ் சாம்
பலும், மண்ணுமாய்ச் சிதறிய வுடல்கள்யாவற்றையும் பழயரூபமாய் ஒன்று
படப்போர்த்து, உயிரோடெழுந்திருக்க அப்பொழுது வானவர்கள் குலத்தை
யும், இனத்தையும்பாராமல் குணத்தின்முறைமையால் அவனவன்செய்த வி
னைகளின் முறைமையைமாத்திரம்பார்த்து, நல்வினை, தீவினையென்னு மிரண்டு
வினையைப்பற்றி, யாவரையும இருபிரிவாய்ப் பிரித்துவைக்க ஒருவேரினின்
றுவளர்ந்த பலகிளைகள் பிரிவதுபோல பூமான் தன்தேவியையுந், தாய் தன்மக
னையுந், தம்பி தன்னண்ணனையும் விட்டுப்பிரிந்து அழுதலறி நொந்திருக்கை
யில் அவ்வானவர்யாவரையுங் குறித்தவிடத்தில் நிறுத்துவார்கள். அத்தருண
த்தில் வாசனைப்பூவரும்பின் திருமுகத்தோடு இங்கேதிருக்குழந்தையா யிருக்
கும் கடவுளே ஒருபக்கத்தில் இடித்துமின்னி மேகங்கள்முழங்கவும், ஒரு
பக்கத்துல் போர்முரசும், பலபறைகளுமுழங்கவும், ஒருபக்கத்தில்கொடிகளைப்
பிடித்த வானவர்தளங்கள் முன்னேநடக்கவும், இருபக்கத்திலு மற்றவானவர்
அரசர்கூட்டம்போலச்சூழ்ந்துவரவும் மலைமேலெழுந்த சூரியனைப்போலெங்கு
ம்பயங்கரத்தைவருவித்துமுழங்கி மின்னிவிளங்கும் ஒருமேகத்தின்மே லெழுந்
தருளிக், தனதுவலதுபுறத்திலே வானவர்களோடு கூடஇருக்கும் நல்லவர்களை
யினிதாய்நோக்கிப், பிறகு இடதுபுறத்திலே பசாசுக்களோடே பயந்துநடுங்கித்
துன்பத்தால் வெந்தமனத்தோடுநிற்கும் பாவிகளை நெடிய வேலெறிந்ததுபோ
லக் கோபமாய்ப்பார்த்து, விளக்கையேற்றினதுபோல அவனவன்செய்தபாவங்
களை யாவருமறியக்காண்பித்தவுடனே அவனவன் செய்ததும், இச்சித்ததுஞ்,
சொன்னதுமாகிய பாவங்களையும், புண்ணியத்திற்செய்த குற்றங்களும், இரா
த்திரிகாலங்களில்கொண்ட எவ்வகைப்பாவங்களுங், தவத்தினுறுதியால் மறை
வில்லாமல் அந்நாளில் வெளிப்பட்டபோது மீளவும் மின்னிறுற்போலக் கோ
பமாய்நோக்கி,பிடிபிடித்ததுபோலப் பயம்வருத்திவிக்குமுகத்தோடுகூப்பிட்டுக்
கடவுள் திருவுள்ம்பற்றுவார் : பொழிந்தமழையினுற்கூடி மலையிலிருந்துவரும்
கதிபோல நில்லாதசெல்வங்களைவிரும்பிப், புண்ணியங்களை வெறுத்த பாவிக

னே! ஆகாயத்திலிருந்துவிழு மழைத்துளிமுதல் உங்களுக்குவேண்டிய நன்
மையெல்லாம் நாம்கொடுத்திருக்க, வஞ்சனைப்பசாசுகளை வரங்கொடுக்குந்
தேவர்களாக வணங்கலாமோ? நாமோதிய நூலின்படிவந்த சத்தியவேதத்தை
விட்டுக் காமப்பாவங்கள் நுழைவதற்கு வாசலாகிய பலகலைகளை வேதமென்
றீர்; இராஜநீதிதவறாம லெம்மை வணங்கினவர்களைக் குலமில்லாதவரென்று
நிந்தித்தீர்; அவர்களை இரத்தப்பழிவாங்கிக் கொலைசெய்தீர்; இப்போது
அவர்களெம்மோடு வான்வீட்டி லென்றுஞ் சுகித்திருப்பார்; நீங்கள் உங்க
ளால் வணங்கப்பட்ட பொய்த்தேவர்களோடு நரகத்தின் ஊழித்தீயில் வேகுவீ
ரென்றுசபித்துச், சத்தியவேதத்தி லொழுக்கமில்லாரைநோக்கிச்சொல்லுவார்;
எம்மையனுகாதிருக்கையில் நாமேயுங்களைத் தெரிந்துகொள்ள நீங்கள் சத்
தியவேதத்தையறிந்தும், அறியாதவர்களைப்போல நடந்தீர்; நீங்களுண்ணாம
லும், பிறர்க்குக்கொடாமலும், பொருள்களைக்குவித்துவைத்தீர்; பிறர்பொரு
ளையுந்திருடினீர்; பிறர்க்குநிந்தைசொன்னீர்; பொய்சொன்னீர்; தாய்தக
ப்பனென்று வணக்கஞ்செய்யாதிருந்தீர்; சண்டையிட்டீர்; பகையை நாட்
டினீர்; பொய்யாணையிட்டீர்; பிறதாரத்தை யிச்சித்துக் காமத்திலமிழ்ந்தி
னீர்; ஆகையால் பரமகதியைச் சேரும்வழியறியாதவரோடு நீங்களும் நரகத்
தீயில் வேகுவீரென்று சபித்தவுடனே பாவிகளெல்லாங் கூக்குரலிட்டுச்சொ
ல்லுவார்கள்: மோக்ஷத்தின் கெடாதசெல்வங்களை யிழந்தோமே; நொந்
தோமே; எப்போதும்பயந்துகுலைந்தோமே; மீட்குங்கதியில்லாமல் கெட்டோ
மே; விடாமல் அழுதலறி நெருப்பிலவேகுவோமே; ஐயோ! ஐயோ! நல்லவ
ர்களைப் பேறுங் குலமுமில்லாதவர்க ளென்று நிந்தித்தோம்: இதோசாகாம
லவர்களெப்பொழுதும் வாழ்ந்திருக்க நாமுஞ்சாகாமல் புகைந்தெரியுந் தீயில
வேகச்செல்கின்றோமே யென்றுசொல்லித் துடித்துப், பதைத்து மோதிவிழு
ந்து புரண்டுகொந்து சோர்ந்து ஒருவருடலை யொருவர்கடித்துக் கோபித்துப்
புலம்பித் தங்களைத்தாங்களே யடித்து, உடலைக்கீறி மாமிசத்தைப்புசித்துப், பசி
யாற்றாமல் அயர்ந்தேங்கித் துன்பவெள்ளத்தைக்குடித்திருக்க அப்பால் இந்
தக்கடவுளே மோக்ஷபேரின்பத்தைக்காட்டுந் திருமுகத்தைக்காட்டி, நல்லவர்
களைக் கடாக்ஷித்துச் சொல்லுவார்: நம்மைக்குறித்துச் சிலர்வனத்திலேபோ
ய்த் துயர்களை யநுபவித்தீர்; சிலர் பொறுமையோடு நிந்தைபட்டீர்; யாவ
ரும் புண்ணியங்களைச்செய்தீர்: ஆகையால் இனியெப்பொழுதும் நக்ஷத்திர
த்தினுள் நக்ஷத்திரமாய்விளங்கி நம்மோடு மோக்ஷத்தில் மகாராஜராய் வாழ்
ந்திருக்க எமது பிதாவினு லாசிர்வதிக்கப்பட்டவரே! வாருங்களென்று அவர்க
ளானந்தக்கடலில் முழுகும்படிச்சொல்லிப், பாவிகளைநோக்கி பாவநிறைந்த
நெஞ்சுடைய் நீசரே! நமது திருமுகத்தினின்று விலகிப் பசாசுகளோடு நர
கத்தின் ஊழித்தீயிற்போங்களென்றுரைத்து, வானவரும் புண்ணியாத்துமாக்
களுஞ்சூழ மோக்ஷத்திற் கெழுந்தருளும்போது இதைக்கண்ட பாவிகள் அய
ர்ந்தேங்கிப் புலம்பிச்சீறிப், பூமி தன்னெஞ்சை யறுத்ததுபோலப் பிளந்தவாய்
வழியாகத் தீநரகத்தில் விழுந்து சுற்றத்தார் வேணுமென்றதினால் சத்திய
வேதத்தையிழந்தோம்; அந்தச்சுற்றத்தாரோடு தீயிற்கிடந்து வேகின்றோம்;
எங்கள் முன்னோர்பிடித்தவழி தகாதென்று அறிந்தாலும் அந்தவழியிலேயே
நின்றதால் அவர்களோடு நாமும் வேவோம்; லௌகீகத்தால்வரும் பலனிதா
னோ? ஐயோ! இன்பத்தினாசையாற் கெட்டோமென்று சாகாமல் நித்திய
நரகத்தில் வெந்துகிடப்பார்கள். ஆதலால் கருணையோடு அமிர்தத்தையேந்திய
மாணிக்கப்பாத்திரத்தைப்போலுமிவர்நடுக்கேட்கவருங்காலத்தில் இராஜாவின்
கோலத்தைக்காட்டிவருவார்; இக்காலத்தில்நீதிமுறைதப்பாமல் நானெனதென்
னும் இரண்டுபற்றையுமறுத்து ஒழுக்கத்தை யெவர்க்குங் காட்டுதற்கு வந்து.

பாவத்தைவருத்தும் பொருள், புகழ், இன்பம் இவைபாவையும்விட்டு நம்மை யி
ரக்ஷிக்க எளியவேஷமே நல்லதென்று திருக்குழந்தையாயவதரித்து, காமுண்ட
நஞ்சினைத் தீர்ப்பதற்கு மருந்தாகினரென்று சொல்லித், திவ்வியபாலகனின்
திருக்கமலவடிகளை வணங்கினள். இப்படியாக நக்ஷத்திரசேகரியாராகிய கந்
நித்தாயார்சொன்ன யாவையுங்கேட்டவர்கள் விருப்பத்தோடு தண்டனிட்டி
ருக்கையில் தெளிந்தவுணர்வினு லுயர்ந்த சாந்தியென்பவள் மீளவும் வணங்
கித்துதித்துச்சொல்லுவாள்.

உயிரைத்தருமருந்தே! அமுதே! அறமே! அருளே! கருணாகரனே!
வாசமலரே! உயிர்தருங்கனியே! கண்மணியே! எனக்கினியவுயிரே! மணி
யாற்கோத்த ஆபரணமே! சுருதிக்கொருசெல்வமே! பொய்யில்லாதவிதிகளை
யுடையவனே! ஒப்பிலலாததயாபரனே! குறையாதவல்லபமுஞ், செல்வமு
முடையவனே! சுவாமியே! பொய்யான இன்பத்தைவிரும்பிய பொல்லாதபா
வியாகிய என்னைப்பற்றியழுவாயோ? நொந்தயர்வாயோ? பாவிகளுக்குக்கை
வசமாக இவ்வுலகில்வரவிரும்பினையோ? சிந்தாகுலக்கடலையுடைத்து உலக
மெல்லாமூழ்கிய பாவத்தைத்தரும் விருப்பத்தை மதித்துத்தடுத்து, அதற்கோர்
கரையைப்போட நீ மனிதனா யவதரித்துத் துன்பக்கடலி லமிழ்ந்துவாயோ?
நான்செய்த பாவத்தைத்தீர்க்க வானிலிருந்துவந்த அமுதத்தைப்போல மருந்
தினையிடவோ? நீயெடுத்த திருச்சரீரத்தில்வரும் நோய், துன்பங்களின்கசப்
பினையுண்பாய்; மண்ணுலகோர் வருந்தாமல் வாழ்வதற்கு விண்ணுலகோ
ரால் வணங்கப்படும் நீ உனது திருவுடலில் காயம்பட்டு நொந்து, துன்பமடை
வாயோ? படம்விரித்தபாம்புபோல மின்னி, மதயானைபோல முழங்கிப், பெ
ய்யுமேகம்போல நீ வானினின்றிறங்கி வந்தாய்; நாங்களோ கல்மலைபோல மன
முருகாதிருக்கின்றோம்; தருமமுந், திறமுமில்லாதமனிதரிடத்தில் நீசேர்ந்ததி
னலல்லவோ? சுற்றத்தாருதவியும், பிறருதவியும், இருக்குந்திருமாளிகையும்
இல்லாமலழுதாய்; மசானமாகிய இவ்வுலகமுனக்குப் பகைசெய்யுமேயொழி
ய நன்மையைத்தராது; மானிடர்யாவரு முன்னைநகைத்து நாய்கள்போல
மேல்விழுந்து துன்பப்படுத்துவார்கள்; நீதுரிதப்படும் விருப்பத்தோடு வந்
தாயோ? அவை புன்விருப்பத்தின்மேலும் நன்றாய்ச்செய்வார்கள்; அளவி
லலாத கருணையினிறைகொண்ட கருத்தினுலோ? இடிஇடிக்குங் காலத்தில்
காட்டானைகள்முதலாய் பெண்யானைகளைத்தழுவி யாறுதல்செய்யும்; மழைபெ
ய்யுங்காலத்தில் பேடைகள் தங்கள்குஞ்சுகளுக்கு ஆதரவுசெய்யும்; உலகமுன்
னையும்படைத்த வுனக்குக் கோடையின்வேகத்தையாற்றவும், மழையின் சா
ரலைத்தாங்கவும், ஓராதரவுமில்லாதிருப்பது அருமையல்லவோ? இவ்வுலகமெல்
லாம் வாழாமற்கெட்டாலும் அதனாலுனக்குக்கேடுண்டோ? அன்றி அதனாலு
னக்கு ஆதாயமுண்டோ? விடியாதஇருள்கொண்ட பூமிக்கு முடியாத ஒளி
பரப்பிய சூரிய னீயே, அடியாளுக் குயிர்நீயே, ஆபரணம் நீயேயென்றுசொல்
லி மெல்லியபூங்கொடியாடினதுபோல நொந்து,குழைந்து சாந்தியழுதவுடனே
அருகேயிருந்த இடையரும், இடைச்சிகளும், அழுதும், அயர்ந்தும், தொழு
தும், புகழ்ந்தும், திவ்வியபாலகனின் மெல்லிய பூவடிகள்மேல் விழுந்தும், அந்
தத்திருவடிகளைத்தலைமேலணிந்துக், கம்முள்நெருங்கியும், எழுந்தும், அணுகியும்
அவ்விடம்விட்டுப் பெயராமலிருக்கும்பொழுது அவர்களில் சிலர் திருக்குமா
ரனை வணங்கி, இப்பொழுதுன்னை நிந்தித்தவர் கடையுகநாளில் தாங்கள்செய்த
குற்றத்தைக்கண்டழுது உன்கருணையில்லாமையால் நரகத்தீக்கடலில் குளிப்பா
ரென்பார்; சிலர் நீபடிப்பித்த சத்தியவேதத்தைத்தேடாமல் பாவிகள் பொய்
யான பலகதைகளைத்தேடினதினால் கடையுகத்தில் அதனாலானபல னென்ன
வென்று சொல்லுவாரென்று கருணைக்கண்வழியாக நீர்வடிய அழுவார்;

சிலர் நீதியின்வல்லமையைப்பாடுவார்; சிலர் கருணையின்செல்வத்தையுணர்ப்பார்; சிலர் பாவத்தால்வரும் பகைமையைச்சொல்லுவார்; சிலர் தாங்கள்முன்செய்த பாவங்களைத் துடைக்க அழுவார்; சிலர் இரண்டு திருவடிகளையுந் தலைமேற் கொண்டுவணங்குவார்; சிலர் அந்தத்திருவடிகளைத் தடவுவார்; சிலர் அதின்மேற் பூமாலைகளைச்சூடுவார்; சிலர் தங்கள்கண்மணிகளை முத்தாபரணமாக அணிவார்; இவர்களுள் சிலர்செய்யுந்துதி நல்லதல்லவென்றதுபோல மலரினுள்ளிருக்கும்வண்டுகளினிதாய்ப்பாடவும், பலர் தூற்றியபன்னீர் சக்கென்றதுபோல மலரினின்றொழுகிய தேன்மழைபொழியவும், மயில்கள் இந்தத்தேவகுமாரன் மேலானசெல்வத்தைப்பொழியு மேகமென்றதுபோலத் தன்தோகையைவிரித்தாடவும், வேண்டும்பொழுது இரவைநீக்குஞ் சூரியனிவனென்றதுபோல இளங்குயில்கள்பாடவும், மாருதந்தேனை வாசனையோடுபொழியு மழையிவனென்றதுபோல இன்புற்றுப் பெண்வண்டுகளும், ஆண்வண்டுகளும், ஒழுங்குபடப் பாடவும், கறையில்லாத அமிர்தத்தின்கடலிவனென்றதுபோலக், கிளிகள்புகழ்ந்துபேசவுமாக இருக்கும்போது இடையர்களின்பமடைந்து, சொல்லுக்கடங்காத நன்மைகளை யடைந்தார்கள்.

மாலையாக மேகங்களையணிந்த மலையிலுள்ள முல்லைமாலையைத் தரித்த இடையர்கள் இப்படியாகத்தினந்தோறும் பிரபையை மாலையாகவணிந்த திவ்வியகுழந்தையை வணங்கவரும்போது, பூமாலைக்கொடியுயர்த்தி, வினைகளைத்தீர்த்த மாதவனாகிய சூசைமாமுனிகள் வானுலகக்கடவுளாகிய திருக்குழந்தையின் பூரணவரங்களால்நிறைந்து, மலையினின்றுவரும் நதியைப்போலத் திருவாய்மலர்ந்து அன்பினால்நிறைந்த வேதவிதிகளைச்சொல்ல அவற்றையவர்கள் பொன்மாரி மலையிற்பொழிந்ததுபோலக்கேட்டு, அநுசரித்து நடக்கையில் எழுமடங்காய்த்தெளிந்தஞானத்தை யடைவதல்லாமல் அந்தத்திருக்குகையினுள்வந்த யாவருஞ் சுகிர்தபுண்ணியங்களை யடைந்து, தங்கள்பாவங்களைத்துடைத்து, நல்லதருமங்களைமுடித்து, மூன்றுசுடர்களைப்போலவிளங்கும் இவர்களைக்கண்டவரிலெவர்களானாலும் பாவத்தை நீங்காதவரும், மனத்தில் தெளிவடையாதவருமில்லாமல் யாவருநன்மைகொண்டு துதித்து, வான்வீட்டுக்கதியை யடைவார்கள். அப்பால் நம்மைஇரக்ஷிக்கக் குறையாதகருணையோடுவந் தவதரித்த திருப்பாலகன் துன்பத்தால்வருவனவெல்லாந் தன்பங்கென்று, நிறைந்த துன்பத்தையடைந்து, தன்னைச்சேர்ந்தவர்க்கு வாழ்வின்பங்கைக்கொடுத்தார்.

இப்படியிருக்கும்போது அழகுக்கழகு செய்ததாக, உருவெடுத்த வானவர்கள் மாணிக்கப்பாத்திரத்தி லமிர்தத்தை யேந்திவந்ததுபோல, வணக்கத்தோடுகொண்டுவந்த துன்பங்களிடத்திலே பிறந்த திவ்வியகுமாரனின் திருநாமத்தை யுலகமெல்லாம்வாழ்த்துவப்பச் சொல்லாகிய பாத்திரத்தில் எவர்க்கும் படைத்துச்சொல்லுவாம். அதெப்படியென்றால்:—தேன்பொழிகின்ற வாய்மலராத பூவரும்பு வாசனைவிட்டதுபோலக் கன்னிமுத்திரை கெடாத திருத்தாயார் தன்திருமகனையீன்றளித்த எட்டாம்நாளில் சூரியனுதயத்திற்கு முன்னே ஆயிரஞ்சூரியனைப்போல நிறைந்த பேரணியாகப் பொன்மேனியெடுத்த வானவர்வந்து எங்கும்நிறைந்து, தாங்கள்பரப்புங் கிரணத்தையும் விழுங்கும்படியாகப், பொன்னேடையின்மேல் பொன்னெழுத்திட் டெழுதினதுபோலத் தங்க ளழகியமார்பிலே ஆபரணமாக அழற்கொழுந் தொளிவாய்ச் செம்பொன்னிலமைத்த அந்தத் திருநாமத்தை யணிந்து, அணிந்த அந்தத் திருநாமம் தூரமணம்வீசிய மாலையோடு சந்திரனொளியைத் தெளித்தெழுதியதுபோல வசைந்துவிளங்க, அந்தவானவர் எங்களையுணர்த்தி யுயர்த்திய கடவுளே! என்று சொல்லித் தண்டனிட்டுத் திருமணத்துதிகளைப் பாடியிருக்கையில், நிறைந்த அழகோடெழுந்த மிக்கயேல், கபிரியேலென்னும் இருவானவர்முன்சொன்ன

வானவர்சேனைக்கு இருதலைவராக இருந்து, கிரணங்களாற் றெளிந்த பதக்கம் நிறைந்தஅழகுபெற அதிலே சூரியனையெழுதப்பட்ட அழகிய ஓரணியைப்போலப், பசந்தபொன்தகட்டின் முழுமையு முத்துத்தாவடங்கள்தொங்கித் தவழவும்,அதின்முகட்டிலே நீலஇரத்தினத்தாலும், மாணிக்கத்தாலுஞ் செய்த முடிதோன்றவும், நடுவிலே வயிரமணியால அழகியஎழுத்தினையழுத்திப், பாவங்களைத்துடைத்து நன்மைபெருகச்செய்யுங் கடவுளுடைய திருநாமம் விளங்கும்படியாகிய கேடயத்தையிருவருந்தாங்கிநிற்க அவ்விருவர்க்குள் மிக்கயேலென்னும்வானவர்சொல்லுவார் : வருந்துதற்குக்காரணமாகிய பாவங்களைக்கொண்ட மானிடனையிரக்ஷிப்பது இந்தத்திருக்குமாரனுல் முடியுமென்பதினுல் புரவலனென்னும் அர்த்தத்தைக்கொண்ட திருநாமமாகிய "யேசு" என்று இத்திருப்பாலகனைச் சொல்லுவீராகவென்று சொன்னவுடனே, அங்கேயிருந்த வானவர்கள் அங்கங்கேவிருப்பத்தோடுவிழுந்துவணங்கவும், முருடுமுதலாகிய பலவாச்சியங்க ளொலிகுமுறங்கவும், தேவவருள்நிறைந்த வானுலகமகிழவும், பாவத்தால் மயக்கம் நிறைந்தபூவுலகமயக்கமொழிந்து தன்வருத்தந்தீரவும், இருள்நிறைந்த நரகம் பயத்தோடு அதிர்ந்துநடுங்கவும், நக்ஷத்திரங்களை மகுடமாகஅணிந்த தேவமாதாவும்,பேயினங்களை நடுங்கச்செய்யும் நலங்கொண்ட மாதவனுகிய சூசைமாமுனிவரும், அந்தத் திருநாமத்தை வணங்கின பிறகு மீளவு மிக்கயேலென்னும் வானவர்சொல்லுவான் : கடவுளின்கருணையைப் பெறுதற்குரிய இத்தத் திருநாமத்தை இரண்டுகரங்களுஞ் சிரமேற்குவியவணங்கி, எவர் சொல்லுவாரோ அவர்களுடைய உள்ளத்தின்பாவக் கேடுகளொழியச் சொல்லுதற்கரிய நன்மைகளை உயிரிடத்திலல்லாமல் உடலிடத்தும் அடைவார்கள் ; என்றும் இதையுரைத்தபோது இதன்வல்லபத்தால் பொய்யும், பாவமுஞ், சந்தேகமுந், துன்பமும், பசாசும், பகைத்தசண்டையும், நோய்களும், மற்றக்குற்றங்களும் நீங்கும்; என்றும் இதுநோய்வந்தா லுயிரைத்தருமருந்தாகும் ; பசாசுநம்மைக் கெடுக்கவந்தா லதைவெல்லுதற்குப்படையாகும் ; தீமைநேரிட்டால் அதைத் தடுத்துச், செல்லவேண்டிய மோக்ஷகதியைத் தரும் ; அன்புள்ள தாயுமாகும்; என்றும் இதை உச்சரித்தவாயும், இதை வணக்கத்தோடு நினைத்த மனமும், இதையடுத்ததிசைகளும் இன்பமடையும் ; அன்றியும் வானவரால் வணங்கப்பட்ட இந்தத்திருநாமத்தினுல் தானமுதலான தருமவகை, ஞானந்தரும் நன்மையாவுந்தந்து, மனிதர்க் குயிர்பிரிந்துபோகுங் காலத்தில் மோக்ஷபேரின்பத்தையநுபவிப்பதற்குக் காரணமுமாகும் ; என்றும் இவையாவு மிக்கயேலென்னும் வானவர்சொல்லியவுடன் மற்றவானவர்கள் இனியவீணைகளாலிசைபாடி, ஆநந்தவாரியிலமிழ்ந்திய துதிகளைச்சொல்லி, மழையைப்போல வாசமலர்மழை பொழிந்தார்கள். அப்பால் அந்தஎட்டாநாளிலதானே வேதத்தையுரைக்குங் குருக்களையழைத்துவந்து, வேதத்தில்கற்பித்த முறைகளிலொன்றுந்தவறாமல் நிறைவேற்றி, அரியமாக்ஷிமையுடைய "யேசு" என்னுந் திருநாமத்தைத் திவ்வியகுழந்தைக்குச் சூட்டினார்கள்.

பூவுலகத்தார் பாவங்களைக் கட்டிக்கொண்டதினுல் கடவுள் உண்மையை யெவர்க்குங்காட்டும்படி, யெளியமனிதனைப்போலப் பிறந்து தான் வெற்றியுள்ள அரசனுகையால் தன்வல்லமையைக் காட்டும்படி தெளிந்த அறிவினையுடைய மூன்று அரசர்கள் தன்திருப்பாத சேவை செய்யும்படி அழைத்ததைச்சொல்லுவாம். அஃதெப்படியென்றால்:— சந்திரனை மிதித்துவிளங்கிய திருவடிகளையுடைய கன்னித்தாயாரின் திருமகனுக்குரிய கொடியாகுமென்று வேதத்திலெழுதப்பட்ட பிரகாரம் அந்தத்திருப்பாலகன் தான் பூமியிலவதரித்த அன்றையதினமே வேதத்திற்கொருநாவைப்போலக் கண்கடந்த கிரணங்களைப்பரப்பிய ஒரு புதுநக்ஷத்திரத்தை யுண்டாக்கி, யெங்கும் விளங்கும்படி

செய்ததால் அந்தநக்ஷத்திரத்தைக்கஸ்தூரிமுதலிய வாசனைப்பண்டங்களால் பரி மளிக்கும் அராபியநாட்டு வேந்தனும், இரத்தினங்களை யொதுக்கும் நீர்வள முள்ள பெர்சியநாட்டுக் கருணைமன்னவனும், அன்னங்கள்திரண்டாக்கும் வயல்களுடைய சபாநாட்டு அரசனுக்கன்றி ஆண்டவனருளால் தெளிவாக நடந்ததெல்லா மறிந்து, உள்ளத்தில்மகிழ்ந்து ஒவ்வொருவருஞ் செல்வத்தி ற்கேற்பத் துணிவுகொண்டு, நக்ஷத்திரத்தைக் கொடியாகவுடைய திருப்பாலக னாகிய மன்னவனை யுள்ளத்தில்வணங்கி, பக்தத்திருக்குழந்தையின் திருப்பாதத் தில் விழுவேனென்று அவரவர்கள்தேறி, மேகமண்டலத்தில் தாழ்ந்து விளங் கும் அந்தப் புதுநக்ஷத்திரங் காட்டியவழியாகச் சேனைகள் புடையில் நெருங்கி வரப்புறப்பட்டு, அவரவர்கள் சிலநாள் தனியேபோனபின்பு பகலும் இரவு மாய்விளங்கி வழிகாட்டும் அந்தப்புதுநக்ஷத்திரம் ஒரேநக்ஷத்திர மானதினால் அவர்களும் வெவ்வேறுவழிபோகாமல் ஒரேவழியாய்ப்போய் ஓரிடத்திற்கூடி, அவரவர்கள் நினைத்துவந்த காரியத்தைப்பற்றிப் பேசிக்கொண்டு, பொன்முடி தாங்கிய இம்மூவரும் மகிழ்ச்சியடைந்து, ஒரேமனமாகக் கருணையுமாட்சியு முடைய கடவுளைவணங்கும்படி, மணிகளால் விளங்கிய கொடிஞ்சியையுடைய தேரின்கூட்டமுங், குன்றையேந்தி பிழைசெய்யுங் குதிரையின்திரளும், மலைபி னின்றிழிந்த அருவிபோல மும்மதங்களைப்பொழியும் யானையின்சமூகமும், பகைவருடைய மார்பிலேபாய்ந்து இறைச்சியையுமிழுங் கூரியவேல் முதலிய ஆயுதங்களையுடைய காலாள்களின் பெருக்கமுங்கூடி, கடல்மடையுடைந்தவெள் ளம்போல உலகமெல்லாம் நடுங்கிமயங்கப் படர்ந்துவரவும், புகழ்வோர்சூழ்ந் து வீணைபோலப்பாடிவரவும், பலவாச்சியங்கள் மேகத்தினிடிபோல முழங்கி வரவுமாகச்சென்று, நெடியவழிகளெல்லாங்கடந்துவந்து, மேகங்களை யுழக்கெ றியும் உயர்ந்தகொடிகளைக்கட்டிய ஜெருசலேம்நகரத்தையுந்தாண்டி, மனிதரு டைய துன்பங்களைத்தீர்க்கக் கடவுளவதரித்திருக்கும் இடத்தைச்சேர்ந்தபோது, இராஜமாளிகையின்மேல்விளங்கும் ஒருவெற்றிக்கொடியைப்போலக் கூடவந்த புதுநக்ஷத்திரம் அவ்விடத்தில் தங்கிநின்றமையால், வானவர்க்கரசனாகிய கட வுள் மிருகங்களொதுங்குமிடமாகிய அந்தக்குகையைத் தான் அவதரிக்கத்தெ ரிந்துகொண்டாரென்றுகண்டு, மனதிலதிசயித்து ஏறிவருமிரதத்தைவிட்டிறங்கி மிகுந்தவிருப்பத்தோடு அந்தத்திருக்குகையிற்புகுந்தபோது, திருக்குமாரனவர் களுக்குத்தந்த அறிவினால் அவர்கள் கன்னிமைத்திறைகெடாத திருத்தாயா ரழிவி ல்லாமல் திருமகனையீன்ற தன்மையும், அந்தத்திருக்குமாரன் பூவுலகத்தைப்பிர ஷிக்கும்பொருட்டுத் தேவசுபாவத்தையு, மனுசுபாவத்தையும் ஒன்றாகக்கட் டினதன்மையும், அனேகவானவர் உருவங்களோடு திருப்பாதத்தில் விழுந்து தண்டனிட்டிருக்குந்தன்மையுந் தெளிவாகக்கண்டறிந்து அதிசயித்து, மூன்று பர்வதங்கள் விழுந்ததுபோலமூவரும்விழுந்து, சந்திரசூரிய அக்கினியென்னுமு ச்சுடர்போலத் தங்கள்கிரீடங்களைக்கழற்றித் திவ்வியகுழந்தையின்விள்ளாமலர் ப்பதத்தில் நிறைந்த ஒளிபாயும்படிவைத்து, மனத்தினுருகி, விட்டகண்ணீராற் பொங்கிய இன்பக்கடலில்மூழ்கித், தெண்டனாகப்பலமுறையும்விழுந்தெழுந்து வணங்கித், திருமகன்உலகங்களியாவற்றையுமாளும் அரசனென்றறிவிக்கப் பொ ன்னும், இவர்இறக்கும்படி மனிதனாய்ப்பிறந்ததினால் இறந்தபின் அந்தத்திருவு டலுக்குப் பூசுதற்குரிய நெய்மையுடைய வாசமீறையும், நிறைந்த கருணைச முத்திரக் கடவுளென்றறிவிக்கப் பூசனைக்குரிய தூபமும், திருப்பாதங்களுக்குக் காணிக்கையாகவைத்து மூவருஞ் சொல்லுவார்: சுவாமீ! இவ்வுலகெல்லா மகிழும்படி மனிதனாய்; நீவருந்தும்படி துன்பவேஷமெடுப்பாயோ? வா னுலகமே மின்பமடைய நீயேயதற்குப் பேரின்பமாயிருக்கின்றாய்; விளங்கிய அந்தத்திருவடிவத்தை மறைப்பதற்கு இந்தத்தரித்திரத்தைக்கொள்வாயோ?

எங்கள்கண்கள் களிகூரும்படி அரூபியாகிய நீ திருவுருவானாய்; உனது திருக்கண்கள்வருந்த எங்கள்பாவத்திற்கிரங்கியழுவாயோ? நாங்கள்செய்த பாவத்தாற்கொண்ட புண்ணையாற்றும்படி எங்களுக்கு மருந்தானாய்; நீ புண்பட்டு நொந்து சாகவிருப்பாயோ? என்று புலம்பினோர் அழுதபோது திருக்குமாரன் அந்தமன்னவர்களை யின்பமாய்நோக்கி, யாவருங்களிகூரத் திருவாய்திறப்பேசாமல் திருக்கரத்தினு லாசீர்வாதத்தந்து, அளவில்லாதவரங்களைக் கொடுத்த மாத்திரத்தில் அவர்களும் வானுலகபேரின்பத்தை யநுபவித்ததுபோல மகிழ்ந்து, எண்ணப்படாத துதிகளைச்சொல்லி, யாசையினளவாக அந்தத்தேவகுழந்தையின் அலிச்சம்பூவினு மிருதுவாகிய திருவடிகளைத் தலைமேலணிந்து, கண்களிலொற்றிக், தாங்கள்விட்டகண்ணீரை முத்தாகக்காலணியாய்ப்பூட்டித், தாய்மார்களின் ஸ்தநங்களைத்தழுவிய குழந்தைகளைப்போல வாய்பொருந்தி முத்தமிட்டு, மட்டில்லாதமகிழ்ச்சியோடு மீளவுங்குசைமாமுநிகளை நோக்கிச் சொல்லுவார்கள்: வேதவடிவாய்நின்றமாதவனே! இந்தத்தேவகுழந்தை பூவுலகத்தை யிரக்ஷிக்கவேண்டுமாயின் இத்தனை துன்பங்களை யநுபவிக்கவேண்டுமோ? மலர்நிறைந்தநதி ஓடிவிளைவிக்கும்வளமுள்ள எங்களுடைய அரசாட்சி நாட்டிலே யவதரித்து எங்களை யூழியக்காரராகக் கொண்டாலென்ன? என்று கேட்கச், குசைமாமுநிவன் சொல்லுவார்: மூவுலகத்தையுமாளும் அதிபதியாகிய சுவாமிக்கு இவ்வுலகசெல்வம்வேண்டுமோ? நல்லகருமத்தைமாத்திரம் நாடி, மற்றயாவுங் குற்றமென்றுநீக்கி, யவதரித்த திருக்குமாரன் உங்களன்பைமாத்திரம் அழியாதசெல்வமாகக்கொண்டு, உங்கள்பேரிலே பிரியம்வைப்பாரென்று ஆசீர்வதிக்கப்பிறகு மிகுந்தஆச்சரியத்தோடு இந்தவிதிகளைக்கேட்ட அந்தமூவரசர்களுந் திருக்குடும்பமாகிய திவ்வியயேசுநாதரையுங், கன்னிமரியம்மாளையுங், குசைமாமுநிகளையும் வணங்கியவுடனே பூங்கொடிதந்த புதுமலர்போலக் கன்னிக்கழிவில்லாமல் திருமகனையீன்ற திருத்தாயாரும், பூங்கொடியுயர்த்தித் திருக்குமாரனுக்கு இவ்வுலகத்தில் வைத்தாதையாகிய குசைமாமுநிகளும் அழிவில்லாத வுறுதிகளைச்சொல்லுகையில் அவற்றையுங்கேட்டுப், பேரின்பத்தா லவ்விடம்விட்டு நீங்காதவர்போலிருந்தமாத்திரத்தில் வானவர்கள் கடவுள் போகச், சொன்னதாகச்சொல்லிய பயணத்தைக்கேட்டு, உயிரோடுகூடியவுடம்பு அவ்வுயிரைப்பிரிந்ததுபோலத் துயரங்கொண்டு, திருக்குடும்பத்தாரின் திருப்பாதங்களில்தெண்டனாகவிழுந்துவணங்கி, அந்தமூவரசரும்பிரிந்துபோய் வந்தவழியை விட்டுவேறுவழியைக்காட்டின அந்தப்புதுநக்ஷத்திரத்தைப்பின்சென்று தங்கள் நாட்டுக்குப்போய்ச்சேர்ந்தார்கள். அப்பால் கிருபாசமுத்திரங்களாகிய கன்னிமரியம்மாளுங்குசைமாமுநிகளும் அந்தமூன்றுமன்னர்கள் காணிக்கையாகக்கொடுத்தபொன்னைப் பொறுத்தற்கரிய பாரமென்று மூன்றுபங்காகப் பிரித்துத், தங்களுக்கொன்றும்வையாமல் வேதத்தைப்போதிக்குங் குருக்களுக்கொருபங்குங், தேவாலயத்திற் கொருபங்கும், யாசகருக்கு ஒருபங்குமாகப் பகர்ந்தபின்பு, பூங்கொடியுயர்த்திய குசைமாமுநிவன் திவ்வியகுழந்தையை யெடுத்துக்கொண்டு புகழ்ந்து, தம்மையணுகிவருங் கட்டத்திற்கஞ்சித்தரித்திரமுந்தாழ்ச்சியும் ஒன்றுபடக் கன்னித்தாயாரோடு அந்தத்திருக்குகையைவிட்டு, வானவர்கள் மிகுந்த இன்பத்தோடு திண்டிமுதலியவாச்சியங்கள் முழக்கச் சூரியன்தன்கிரணத்தை அநுதினங் கடலில் ஒளிப்பதுபோலக், கடலையொத்திருக்கும் பெத்திலேம் என்னும் நகருக்குச்சென்று, ஒருசிறுவீட்டில் ஒளித்திருக்கப் புகுந்தார்கள். இவர்களந்தத்திருக்குகையைவிட்டுச் சென்றமாத்திரத்தில், வனத்திற்றிரியுமிருகங்க ளெதிர்வாராதபடிக்கு, ஆண்டவன்கட்டளையால் ஒருவானவன் சூரியனையொத்த கதிர்வீசும் வேலேந்தி, எப்பொழுதுமிருப்பதால் அரசர்க்கரசனாகிய தற்பரமன் அவதரித்த அந்தஇடம் வானவிருப்பிடமாயிற்று.

காட்சிப்படல - முற்றிற்று.

பன்னிரண்டாவது - மகனேர்ந்தபடலம்.

இந்நீரன்னார்க் கென்னைந்நா ளினிதிலங்கப் போயினபி ன்
மெய்ந்நீருடுத்திங் கவதரித்து விள்ளாமுகையாந் திருமகன்ற ன்
னந்நீர்முகத்திற் றுகட்டுடைத்து வவனிக்கெங்கும் பயன்பயப் ப
முந்நீரொழுந்த விளங்கதிர்போன் மூதூர்புறம்வந் ததுசொல்வாம்.

இத்தத்தன்மையாகப் பெத்தலேம் நகரத்தில் கன்னித்தாயாருஞ், சூசைமா
முனிகளுமாகத் திவ்வியகுழந்தையை வைத்துக்கொண்டிருக்க நாற்பதுநாள்
சென்றபிறகு, பூவரும்பினசாயலாகத் திருமேனியெடுத்த திருக்குமாரன் தன
தழகிய திருமுகத்தின்முன்பாகப் பாவத்தைநீக்கிய பூவுலகமெல்லாம் பெரும்
பயனடையும்படிக்குக், கடலைவிட்டெழுந்த சூரியனைப்போல அந்தகாரத்தைவிட்டு
வெளியிலேவந்த சேதியைச் சொல்லுவாம். அஃதெப்படியென்றால்:—முன்னா
ளில் எசித்துநாட்டார் யூதர்கள்மேலவைத்த பகை முதிர்ந்தபடியால் அவர்க
ளைக் குற்றமொன்றுமில்லாமல் சிறைச்சாலையி லடைத்தார்களென்று கடவுள்
கோபித்து, அந்தஎசித்தாருடைய தலைச்சன்பிள்ளைகள் ஒன்றுந்தவறாமற்படி
யவர்கள்பயந்து நடுநடுங்க, ஒரு இராத்திரியிலே கொன்று, யூதர்க்குச் சிறை
யையொழித்து அமுதொழுகுஞ் செல்வநாட்டைத் தந்து, அந்தக் கருணையை
யூதர்கள்மறவாமற்படிக்கு நன்றிகொள்ள அவர்கள்தலைச்சன்பிள்ளைகளையெல்லாந்
தவறாமற் றனக்குக்காணிக்கைக்கொடுக்கும்படி கட்டளைசெய்ததினால், அந்தக்க
ட்டளையின்படி, பாவத்தினால்வந்தசிறையையொழித்திரக்ஷிக்கப்பிறந்த தங்களே
க திருக்குமாரனைக் காணிக்கைநேரும்படி தேவாலயத்திற்குச்செல்ல, இளம்பி
றையை மிதித்துவிளங்குங் கன்னித்தாயாரும், வேதவடிவினைப்போர்த்து மலர்க்
கொடி விருதுயர்த்திய சூசைமாமுனிகளும், மேகம்போலக் கருணையைப்பொ
ழியுந் திருமேனியெடுத்த திருமகனின் வாசசெங்கமலஅடிகளை யணுகித்தொ
ழுது அவருடைய ஆசீர்வாதத்தைக்கேட்டு, அவரைத்திருக்கரங்களாலேந்தின
வுடனே விண்ணுலகையு, மண்ணுலகையும்படைத்திரக்ஷித்து அளவுங், குற்ற
முமில்லாத பெருமையிலோங்கி, என்னையாளுஞ்சுவாமி தனதுதிருக்கமலவிழி
களுந், திருக்கரங்களும் பட்டஇடமெல்லாம் நன்மைகளால்நிறையும்படி தயை
செய்பக் கடலாகவெளிப்பட்டு, வானுலகமும், பூவுலகமும் பாவலர்செய்யும்
பாக்களுக்குமேலாகச் சந்தோஷிக்க, வாசமலரவிழ்ந்த இதழின்மேல் திரண்ட
தேன்றுளிபோலவுஞ், சங்கின்மேல்விளங்கிய தவளமுத்துப்போலவுந், தேன்
பொழியுந் தாமரைமலர்மேலிருக்கும் அன்னக்குஞ்சுபோலவும், பிரபையை
வீசும் பொன்பரப்பின்மேல்வைத்த பவளச்செப்புபோலவும் உடுமுடிசூடியகன்
னித்தாயார் திருக்கமலக்கரங்களில் ஒளிபரவியதிருமுகத்தோடு விளங்கிச்செல்லு
ம்போது, மேகத்துள்மறைந்த சூரியனைப்போல அவதரித்தநாதன்புறப்பட்டா
ரென்று சூரியனும் வானத்திற்கொருகண்ணாகத் தோன்றி யாராய்ந்துபார்த்து
உடனே தான்புறப்பட்ட கடலைப்பார்க்கிலும் பேரின்பக்கடலில்முழுகித், தனது
கிரணங்களாகிய கைகளாலே திருமலர்ப்பாதங்களைத் தடவி வணங்கி, மற்றவ
ரிவரை யறியாமல் வணங்காதிருப்பதைக்கண்டு கோபித்ததுபோலச், சிறிதுநே
ரம் போனபின்பு வெங்கிரணச்சரங்களை உலகத்தாரின்மேல் பரப்பிப், பரப்பிய
கிரணவெப்பத்தினால் திருக்குமாரன் வருந்தினாரென்று கண்டு, பிறன்மனையாளை
நோக்கிய கண்களைஒழுக்கமுடையார்தடுத்துத் திருப்புவதுபோலக், கொடியதன்
கிரணங்களையு மறுத்துச்சுருக்கிக், கலியாணஞ்செய்த புதுப்பெண்கள் வெட்கப்ப
ட்டுத்தாங்களணிந்தமாலையை மறைவாகக்கொள்வதுபோலக், குளிர்ந்தமேகத்தி

னுவொளிக்கவுந், சூரியன்விட்ட கிரணமாகிய அம்புகளைத்தாங்கின கேடயம் போல விளங்கிய இளமேகத்தோடு தொடர்ந்துவந்த தென்றல் வெண்சாமரைபோல் வீசவும், பூவுலகமெல்லாம் வாசமலரைப்பூண்டதினால் உள்ளேகொண்ட பேருவகை முகத்திற்றோன்ற எழுதப்பட்டதுபோல வாய்த்த, தொடுத்த வின்பமுமாறுமையால்அன்றொருதிருவிழாவினலங்காரமாகத்தோன்றவும்,வண்டுகள் வீணையின்பமாய்ப்பாட மயில்களாடியநாடகமுங், குயில்கள்பாடிய தீங்குரலும், மலர்ந்தசோலைகள் பொழிந்ததேனும்,விசாலப்பொய்கைகள் மலர்ந்த பூந்தட்டுகள் மேலேந்திய தேன்பொழியும் வாசனையுங்கூடிப், பரிமளநிறைந்த வழிகள்தோறும் இவர்களுக்கெதிர்கொண்டு விருந்துசெய்யவுங், காவலாயிருந்த பதினாயிரம்வானவர்களல்லாமல் அன்றுவிசேஷமாய் எண்ணப்படாத வேறேவானவர்களும்வந்து கொப்பளித்ததேனைச்சுரக்கும் பூமாலைகளை மாரியாகப் பொழிந்து, இனியபாவிசை புனைந்துபாடி, மின்னலைப்போல வொங்கிக கண்களுக்கின்பந்தரும் பிரபையைவீசிக், கற்பே தமக்கழகென்று காத்து, அதனைத் தேன்சிந்தாததற்குக் கரையாகியமாலையாக அணிந்த குலப்பெண்களுடைய அழகெல்லாம் அவர்கள்கணவருக்குப் பயன்படுவதுபோல உதயகிரிமேலெழுந்தசூரியனும் காணத்தக்க தங்களழகியரூபம் இவர்கள்மாத்திரங் காணும்படி நெருங்கிச்சூழ்ந்துவரவும் வழிகளைக்கடப்பார்கள்.

அப்பால் பேரீந்துவேலியாகவிற்க அவ்வேலியை வளைக்கடன்னளவையாகக் கொண்டுசெயனித்து, ஒளித்திருந்த கரும்புகள்தலையெடுத்துயர்ந்து, தலைவிரித்தவாழைகளின் கனிகளை நக்கிக்கொண்டிருக்க, வாசனையைப்பரப்பிய பலபூஞ்சோலைகளுள்ளவழியேவந்து, தங்கள்கருணையைப்போல் எவர்க்குங் குளிர்ந்த நிழலைச்செய்து பரிமளமாகப்புஷ்பித்து, வழியெங்குங்கிடக்கும் விருக்ஷங்கள் மேகங்களைப்பிளக்கும்படிவிட்ட உயர்ந்தகொம்புகளிலே பாய்ந்துலாவுங் குரங்குகளாலசைந்த பூங்கொம்புகளி னின்றுவிழுந்தேன்துளிகள் மேகம்வருஷித்ததோவென்று மயங்கும்படித்தோன்றவும், இருபக்கங்களிலும் வண்டுகள் வீணையோசையாகப்பாடி முன்சொன்ன பூஞ்சோலைவழியிடத்திலிருக்கவும்,இவர்கள் வலமாகச்சென்று, பின்பு ஆடையைப்போல மலையைச்சுற்றி கதிர்மணிகளைக் கொழித்தோடும் அருவிசப்திக்க மயில்களாடும் ஒருமலையைக்கண்டார்கள். கண்டவுடனே உள்ளத்தால் களிகூர்ந்த பூங்கொடியுயர்ந்திய சூசைமாமுனிகள் கன்னித்தாயாரைநோக்கிச்சொல்லுவார்: வேதவடிவாய்நின்ற செல்வியே! மேகங்கள் தவழும் இந்தமலையைநோக்குவாய் முன்னொருவேளை, இராஜநீதியில்லாமல செங்கோல்வழுவினதால் கொடுமையோடு மூன்றுவருஷமும் ஆகாயத்திலஒரு மேகத்தின் அடியாகிலுங்காணமல் உலகமெல்லாந்தணியாதபசியோடு மெலிந்துவாடி நிற்கும்போது இம்மலையானது ஒருகாலடிபிரமாணத்தில் ஒருசிறியமேகத்தைத் தன்னுச்சியில் யாவருங்காணும்படி தந்ததினால், அன்று யாவருக்கும் உயிரைக்கொடுத்த தன்மையாயிருக்க அம்மேகமானது படித்தநாவின்வழியாக ஒருவர்க்குப்புகழ்வளருமாப்போல ஒருகணத்திலெங்கும்பரவி வேவின்வழியாய் ஒளிபாய்ந்ததாக மின்னிபிடித்துக், கடவுளின் கருணைவழியாய் அளவில்லாநன்மைகள் வருவதுபோலப் பகலும், இரவும் அவவின்றி நிறைவாகப்பெய்யச்,சித்திரக்கோலின்வழியாக எழுதினபடத்தைப்போல உலகமெல்லாம் அழகுபெற்று விளங்கினது என்றார். இதைக்கேட்ட கன்னித்தாயார்சொல்லுவாள்: சண்பகமலராற்செய்த பூம்பந்தினையொத்த திருவுடலையெடுத்ததினல் திருக்குழந்தையாகிய இந்தத்தேவபாலகன் மூவுலகமும் நிகராகாத குணத்தையுடையவராயிருந்தும் பூவுலகத்தைபிரகாசிக்கக்கொண்ட அன்பினைக் காட்டும்படியல்லவோ? அந்தமேகமும் ஒருகாலடிபிரமாணந்தோன்றிக், கடலைப்போலப் பெரும்பயன் தந்ததென்றுசொல்லித் தனது நக்ஷத்திரமுடியைத்

திருக்குமாரனின் திருப்பாதங்களிலேசேர்த்து வணங்கினாள். பின்பு கனகுகோணந்தி சாமரைவீசினதுபோலக்கவிக்கூர்ந்து மதத்தயானைகள் தங்கள் செவிகளையசைத்துக் காற்றுக வீசிக்கொண்டிருக்க, மிளகுகாயோடு படர்ந்த மெல்லிய கொடிகளின்மேல் பெடைகளோடு ஊசலாடியிருக்கும் ஆந்தைகள்கூவுகின்ற அந்தப்பர்வதத்தி னருகேசேர்ந்து, யானையின் கரியநெற்றியிலே தொங்கிய இரத்தினப்பட்டம்போலப் புன்னைமரங்கள் புதுத்தளிரால் நீலநிறமாகித்தமதுச்சிக்கொம்புகளிற்பூத்தமலர்களையந்தப்பர்வதம்உச்சியிலேயணியாகக்கொண்டுதோன்றியதையும், அந்த உச்சியானது எவர்க்கும் பயனைத்தரும் வேதம்போல எங்கும்பயன்படக் கொப்பளித்த அருவியையும், அந்த அருவியில் வானநக்ஷத்திரங்களைப்போல விளங்கிய மணிகளையுங்கண்டு முறைதவிர்ந்த காமத்தினுட்பட்டவனுடைய திரவியமழிவதுபோலவும், நீதிமுறையைக்கடந்து சம்பாதித்ததிரவியம் நாசமாவதுபோலவும், முனிவர்களுடையகோபமுடனேதணிவதுபோலவும், மிகுந்தவிரைவோடு அந்தமலையினின்றுவரும் ஜலத்தினன்மையை யெதிர்கொண்டு, அந்தவழியைவிட்டு வலதுபுறமாகச்சென்று, தென்பொழிய முல்லைநிலத்திற் சேர்ந்தபோது அவ்விடத்திலவிசாலமாகியபூந்தோட்டத்திலே ஒழுங்கோடுவளர்ந்து மலர்களோடு குளிர்ந்தநிழலைத்தரும் ஒருமரக்கொம்பில் நல்லநிறத்தினு லெழுதப்பட்ட அழகியசெப்பட்டைகளை வகிர்ந்து அன்பினாலும், அழகினாலும் நிகரில்லாத இரண்டுபுறாக்கள் நேசத்தோடுவாழும்படிவந்திருக்கையில், நெருப்புப்போலச் சிவந்தகண்களும், நிணமொழுகும் பற்கள்சேர்ந்த வாத்தைவாயும், கொடிப்புலிப்பாலை யுண்டதன்மையும் உடையவனாய்க் கொலைத்தொழில்வளர்ந்த ஒருவேடன் அந்தப்பூங்காவிலேவந்து, மரத்தின்மேலிருக்கும் அந்தப்புறாக்களைக்கண்டு அன்பில்லையினாற்கொல்லுவேனென்றுநினைத்துச், சிலைவளைத்து, நெருங்கியிருக்கையில் இந்தஆபத்துஅல்லாமல் மேலேபறக்கும் ஒருபருந்தும், அந்தப்புறாக்களைக்கண்டு தன்கூர்மையாகிய நகத்தினலைப்பிடிக்கும்படிகொடியகண்களால் இரையைக்கவ்வினதுபோலப் பெரும்பசியோடு சூழ்ந்துபார்த்திருக்க, இவ்விரண்டுபகைகளுக்கும் நடுவேயகப்பட்டஅந்தபுறாக்களுக்குவஞ்சனைத்தொழில்தெரியாதநிமித்தந் தங்களைப்போல பாவனையுமெண்ணியிருந்ததால், இந்தஎளிமையைச் சூசைமாமுனிகள்கண்டு அதற்கிரக்கங்கொண்டிருக்கையில் பருந்துமேலேவட்டமிட்டுப் பாய்வதற்குச் சமயமென்று வரும்போது, வேடனும்அம்பைவிட்டெய்து அறியாமல் ஒருவிஷசர்ப்பத்தைமிதித்தவுடன், அந்தப்பாம்பும் அவனைப்பாதத்திலே தீண்டினதினால்அவனுயிரிறக்கவே அவன்விட்டஅம்பு குறிதப்பிப் பருந்தினைக்கொன்றது. ஆதலால் இதைக்கண்ட சூசைமாமுனிகள் கன்னித்தாயாருக்குச் சொல்லுவார்: பாவத்தினால் விளையும்பயனைநோக்குவாய்: பிறர்க்கு ஒருவன்பொல்லாங்கு நினைத்த பாவமே யவனைக்கொல்லும் நமனென்று பெரியோர் சொல்லக் கேட்டிருந்தோம்; இன்று அதைக்கண்ணாலேகண்டோமென்றுசொல்லி நடந்துபோனார்கள். அப்பால் அந்த முல்லைநிலத்தி லன்றுதோன்றிய அலங்காரத்தை யினிச்சொல்லுவாம்.

புதியஅரசன் தனது இராஜதானியில் வரும்போது நகரத்தின் நாலுதிக்கிலும் பொலிவுபெற்றதெருக்கடோறுஞ் சிறப்போடு அலங்கரிப்பதுபோலச் சந்திரனொளியை மறைக்கும் திருமுகத்தோடு அவதரித்த வானரசனாகிய தேவகுமாரன் எழுந்தருளிவருவதைக்கண்டு, தேன்பொழிந்து முல்லைநிலமெங்குமலரவும், மாதவனாகிய சூசைமாமுனிகளின் திருக்கலியாணத்திலே அவரேந்திய கோலவராசமும், தேனும்பொழியும்படி மலர்ந்ததுபோல வானுலகமாதிமையுடைய இம்மூவருமகிழும்படி இருந்தாப்போல மரங்களெல்லாம்வானநக்ஷத்திரங்களினு மழகியமலர்களைப்பூக்கவும், தாரகாகணத்தைமுடித்த தேவநாயகியார்

கன்னிகையாயிருந்து, புருஷனுதவியில்லாமல் திருக்குமாரனைப்பெற்ற அரியமாகூ
யைக்காட்டும்படி, மரங்கள்தேனைப்பொழிந்து உச்சிக்கொம்புகளிலே பூத்தமல
ரோடுகலந்துநின்று கனிகள் வாசனைவீசவும், சிறுவர்மனங்கள் ஒன்றிலே நிலை
யாமல் அங்கங்கேசெல்லுவதுபோல மேகங்கள்பரவினதால் மூடர்நெஞ்சைப்
போல ஆகாயமிருளவுந், தரித்திரர்மனம்போலக் குயில்கள்வாடவும், எதிரா
ளிக்குவந்த சிறுமையைக்கண்டு மகிழ்வாரைப்போல மயில்களாடவும், இம்மூ
வரும் அழகியருசத்தில் பிரபையை வீசிவந்ததால மேகத்தி லொளித்திரு
ந்த சூரியன்வந்ததென்று இன்பமாய் மகிழ்ந்த குயில்கள்கூவவுந், துன்பத்
தோடு மயில்கள்நாணித் தங்கள் தோகைமுகத்தை ஒளிக்கவும், பின்பு சூரிய
னல்லது பொய்யெனவும், இம்மூவர்வந்தது மெய்யெனவுமறிந்ததால் முன்
தோகையழுக்கமறைத்த மயில்கள்திரும்பியாடவும், வேறுபாடின்றி மற்றப்
பறவைகளெல்லாம் மகிழ்ந்துபாடவுந், கைவிரித்து அதிசயித்தாற்போலச் சோ
லைகளெல்லாமலரவும், இவர்கள்நுழைந்த பூஞ்சோலையினின்றுவந்த மெல்லிய
ஓர்காற்று விருந்தாளிகளுக் கெதிர்வந்தழைக்கத் தூதுசொன்னதுபோல
மெதுவாகவீசித், தென்மலரின்வாசனையைத்தான்வாரிக்கொண்டு முன்னேகொ
ப்பளித்ததுபோலத் தோன்றவும், இவர்களை வாழ்த்தும்படி கின்னரயாழின்
இனியநரம்புகளைத் தட்டினதுபோல முற்கூறியகாற்றினால் சுழலப்பட்ட வயிர
மரங்களின் தழைகளசைந்து இனிதாய்ப்பாடவும், முன்சொன்ன இசையோடு
இடையர்கள்வாசிக்கு மினியகுழலோசை யெழும்புதலால் மிருகஉறவினைக்
கொண்ட பசுக்களும், மான்களு மொன்றாய்நின்று அறிவைப் பெற்றதுபோல
இவர்களை மகிழ்ந்துபார்த்திருக்கையில், அவற்றின் கன்றுகள் தங்கள்தாய்மாரை
மறந்து இவர்கள் திருவடிகளின் பின்தொடரவும், இவர்கள் திருப்பாதங்களை
அழகிய புகைசூடிய கல்லாடையாகக் கருதிமலரோடுமலர்ந்த மரங்களெல்
லாம் விலவிலைவதுபோல வணங்கவும், பொய்கைகள் தங்கள் கரங்களாகிய
கமலங்களால இறைஞ்சவும், வண்டுகள் மேகார்ச்சனைபோல முழங்கவும், ஆப
ரணங்களைப் பொறுக்கமாட்டாமல் மாதர்களிடைதளர்வதுபோலத், திரண்ட
புஷ்பங்களின்பாரத்தைப் பொறுக்கமாட்டாமல் பூங்கொடிகள் ஊசலாடித்
துவண்டு, கனிகளின் பாரத்தைத் தாங்காமல் வளைந்த கொம்புகளின் மேல்விழ
வும், அந்தப் பூஞ்சோலைகளி லுச்சியிற்றவழு மேகமுழக்கம்போலப், பாவ
லர்சொல்லும் பாவிசைகளுள்ளடங்காமல் மேலாய்நிற்குநற்குணமுடைய இ
வர்களைக்கண்டு, மலர்ந்தபூவிதழ்களிலடங்காமல்புரண்டுவிழும் புதுத்தேனைநாடி
வந்த மதுகரங்கள்முழங்கி வீணையிசையாய்ப்பாடவும், நிழலுள்ள இடத்தை
நாடிவந்த மஞ்ஞைகள் ஆயிரங்கண்கள்கொண்டுபார்த்ததுபோல நல்லகண்ணு
டிகள் வடிவாகத்தோன்றிய தோகைகளைவிரித்தாடவும், பச்சைக்கயிற்றிற் கட்
டின பொற்குலிபோல் வேங்கைமரங்கள் வாசனையோடு குளிரும்படி மலர
வும், அதனருகே சிவந்தகயிற்றிற்றூங்குந் திரண்டமுத்துப்போலப் பவளமல்
லிகை அரும்புகொள்ளவும், யானைவிழித்ததுபோலப் பாதிரிமரங்களி னரும்பு
தோன்றவும், அரும்புநிறையப் பூத்தபுளியமரங்கள் பலநிறமணிப்பொடிகளைப்
போர்த்தனபோல விளங்கவும், சிந்தூரப்பொடியோடு கலந்த நீரிற்குளித்தது
போல வெட்சிகள்மலரவும், நக்ஷத்திரங்கள்போல மற்றமரங்களின் மலர்கள்
விளங்கவும், வானத்தின்பரப்புப்போலப் பூங்காவனமெல்லாந் தோன்றவும்,
ஒப்பில்லாமல் விளங்கிய மூங்கில்வனத்தில் இவர்கள எங்குந் தேனைப்பரப்பி
னதுபோலக் குளிர்ந்தவழியேசென்று அதைக்கடந்தார்கள்.

அப்பால் இவர்கள்தங்க ஸ்ரீயாகவதிக்குத்தாழ்வில்லாத லதைத்தாங்கும்
பெரியோர்போல நிலத்தில் பதிந்திருக்கு மூன்று விழுதுகளில் தாங்கப்பட்ட
ஆலமரத்தினடியிலே மணற்றளத்தின்மேலாகக்கொண்டேறுந்தசைரிருந்து, சூரி

புனஸ்தமித்தபிறகு அவ்விடத்தினின்று புறப்பட்டுவந்து, வாணயர்க ளினியவிசை
யைப்பாடிக்கொண்டுவர மருதநிலத்தைச்சேர்ந்தபோது அவ்விடத்தில் நதி
போலப்பாயும் புனலினோசையும், எதிர்த்துப்பாயும் பூரித்தகடாக்களினோசை
யுஞ், செவ்வியகொம்புடைய கடாக்கள் தங்களுக்குள் பாய்ந்தெழும்பிய வோசை
யும், எருமைகள் நீரிலேபாய்ந்துகிளம்பும். இசையுங், கரும்பாலைகளினோசை
யுஞ், சக்குகளினோசையும், வளைந்தகொம்புகளினோசையுந், தங்களுக்குள் மா
றுபடமயங்கிக்கூடி இவர்களை யெதிர்கொண்டதுபோல முழங்கவும், இவர்க
ளுடைய திருப்பாதங்களில் அடைந்த பூவுலகத்தாருடைய குறையும், நோயுந்,
துன்பமுந், தீரும்படி இவர்களையழைத்துக் கூப்பிடுவதுபோல மேகங்கள்
தவழுமலைகளாகிய மூலைகளிலேநின்று பால்போலவரும் ஜலத்தோடு மலரி
னின்றொழுகிய தேனின்வெள்ளத்தையும், வயலிடத்துப் பாயும்படி மறித்த
டைத்துச், சிறைசெய்யும்போது அதினின்றுமோசைஎழும்பவும், இவர்கள் வந்த
வுடனே பூவுலகத்துன்பங்களெல்லாம் ஒளித்ததுபோல ஓரிடத்தில் மள்ளர்கள்
குளத்திலுள்ள மலரெல்லாமசைக்காடியிருக்கக் கடாக்களையதட்டியுழும்படியோ
ட்டினதினால் மச்சங்களிறந்து துடிக்கவும், ஆமைகள் தலையைச்சுருக்கி மடை
களின் துளைகளிலொளிக்கவும், ஒழுக்கத்தின்பெருமையுடைய இவர்கள் திரு
ப்பாதங்களை வணங்காமலும், வாழ்த்தாமலுமிருப்பவர் மெலிந்து வாடுவது
போல ஓரிடத்தில் சிலர் நல்லமலர்களையுடைய வயல்களையுழும்போது தா
ளற்று வரப்பின்மேலெறிந்த தாமரைகள் மெலிந்துவாடவும், இவர்கள் உவமை
யில்லாத கருணையினிரக்கம் யாவருக்குஞ்செய்வதுபோல எருமைகள் பிரிந்த
கன்றுகளைநினைத்துக் கனைத்துப்பொழியும் பாலைக்குடித்து, வயலிலேயுறங்கு
மன்னங்கள் பயந்தோடும்படி ஓரிடத்தில் சிலர் நன்றாக விளையவேண்டுமென
விதைகளைவிதைக்கவுங், கற்றோர் பாசுரங்களுக்குள்ளடக்கிய பயனையவிழ்த்துப்
பயன்படவுரைசெய்வார்போல ஓரிடத்து உழத்திகள் கட்டின செந்நெல் முடி
களை யவிழ்த்து, நன்றாய்விளையும்படி கலக்கநட்டுத், திங்கள்வடிவமர்கிய இவ
ர்களழகியதிருமுகத்திற்கு இணையிணையல்லவென்று செவ்வாம்பல்முதல் மற்ற
நீர்மலரெல்லாங் களையென்று ஓரிடத்துப்பறித்தெறியவும், இவர்கள்செய்யும்
நன்மையின்பரப்புப்போல ஓரிடத்து நெடியவயலெல்லாஞ் செந்நெல்விளைய
வும், ஓரிடத்து இவர்களைவணங்கும்படி ஒருமிக்கச்சேர்ந்து கைகளைக் கூப்பி
னதுபோலப் பசுங்கதிர்கள் செம்மையாய் நிற்கவும், ஓரிடத்தில் இவர்கள்
திருப்பாதங்களில் விழுந்துவணக்கினதுபோலக் கதிர்கள் கீழேசாய்ந்து விளைய
வும், வானசூத்திரத்தைக் கொடியாகவுடைய அரசனாகிய தேவகுமாரனின்
பெருங்கருணையைக்காட்டும்படி தேன்பொழிந்துயர்ந்த கரும்புக்காடுபோல
வளர்ந்தசையுஞ் செந்நெல்களைச் சிலர் வான்பெருமையுடைய தேவதாயாரின்
திருப்பாதங்களில் விளங்கும் பிறையையொத்த அரிவாளைக்கொண்டு அறுத்து,
அரியாகப்படுக்கவுஞ், சிலர் அறுத்தநெல்லைப் பூமகள்மயிரென்று சேர்த்துக்
கட்டவுஞ், சிலர் அக்கட்டுகளைப் பூமகள்முலைபோலப் பலபோராகச்சேர்த்து
வைக்கவுஞ், சிலர் கருங்கடாக்களைவிட்டடிக்கவுஞ், சிலர் கலந்தவைக்கோலைத்
தூற்றவும்விளங்கிய இத்தன்மையாய் மாதந்தோறுமூன்றுமழை தவறுமற்பெய்
ததினால், தினந்தோறும் வயல்களிலே ஓரிடத்துழவும், ஓரிடத்துவிதைக்கவும்,
ஓரிடத்துநடவும், ஓரிடத்துக்களைபறிக்கவும், ஓரிடத்துப் பசுங்கதிரெழும்பவும்,
ஓரிடத்து விளைவையறுக்கவு, மற்றஉழுகர்தொழிலெல்லாம் நாள்தோறும்பொ
ருந்தியதினால் இவர்கள் குறையின்றிச் சிறந்ததன்மைபோல் செல்வங்களையு
டைய அந்தநாட்டின்வயலெல்லாங்கடந்து, அதன்பின் கீழ்மக்கள்தன்மையாக
நிமிர்ந்து வளர்ந்த கமுகஞ்சோலைகளையுஞ், செல்வம்வந்தபோது பெரியோர்
தணிமைகாட்டுவதுபோலத் தலைகுனிந்துகாய்த்த வாழைச்சோலைகளையும், வா

சணவிசும் பூஞ்சோலைகளையுந்தாண்டி, அழகின் சாயுஜ்யமிருக்கும் ஜெருசலேம் நகரத்தை நெருங்கிப்போகையில் விருந்தாளிகளைக்கண்ட அன்புடையோர் மகிழ்ந்ததுபோலப் புஷ்பங்களெல்லாமலரவும், மலர்ந்தபுஷ்பங்கள் அன்புடையார்வருத்தத்தைக்கண்டு தாங்களுங்கூடவழுவார்போலத் தேனைப்பொழியவும் புசித்தவராசைதீரும்படி நிறையப்பழங்களைக்காய்த்த சோலையில்வந்து அந்த ஜெருசலேம்நகரத்தினுயர்ந்த பொன்மதில்களைக் கண்டார்கள்.

மேகஞ்சூழ்ந்த பொன்மலைபோல வானத்தையளாவிய அழிவில்லாத மதில்களாற் சூழப்பட்டு, ஏரோதனென்னும் அரசனுடைய கொடுமையால் வருந்திப், பழயவேதத்தைதவழுவாமற காத்ததினுல் மாகதிமைபெற்ற அந்த ஜெருசலேம்பட்டணந் தோன்றியவுடனே, அவ்வரசனின்கொடுமையை யாற்றும்படி யந்தநகரத்தில்விளங்கிய பொன்மாளிகையினுச்சியில் பறக்குங்கொடிகளெல்லாங் கிரணத்தைப்பரப்பி யிவர்கள் வருவதைக்கண்டு அவ்வரசன்கொடுமைக்காகப் பயந்துவாராமல் நில்லுங்கள், நில்லுங்கள் என்றதுபோலத் தங் கைகளால் ஓயாமல் காட்டிநிற்பனவாகத் தோன்றியும், அத்தருணத்தில் வானஅரசனைப் பூவுலகில்வணங்குமிடமாகிப், பெருமைபெற்ற அந்நகரின் பசும்பொன் தேவாலயத்தில் வானமட்டும் அளாவிய இரத்தினச்சிகரங்களின்மேல் ஆடியபெருங்கொடிகளோ உயிரைக்கொல்லுந் துன்பங்களையாற்றும்படி, எட்டுத் திசைகளையுங் காப்பாற்றுங்கருணையுள்ள வேந்தனிவர்தானாதலால் வாட்டும், வாட்டும் நிறுத்தாதீர், நிறுத்தாதீர் என்று முன்சொன்ன கொடிகளை யமர்த்தினதுபோலத் தோன்றியும்விளங்கப், பிறகு பொம்மையாகியமூலைகளை அழகிய சாந்திறைப்பூசி, அகழியாகியபுடைவையையுடுத்தி, நெடியகூந்தலாகிய மேகங்களை புச்சியிற்சுமந்து, கோபுரமாகிய முகத்தாலே நன்மைநிறைந்த இவர்களைக் காணும்படி தடங்கண்ணைத்திறந்ததுபோலத்திறந்த மணிகளாலலங்கரித்த வாசலிலே வேதவடிவாய்வந்த இவர்கள்புகுந்து, நால்லொழுக்கிலுந் தவருமல் கண்பார்வைக்கெட்டாதகன்று, படித்தநூலால்வருஞ் சிறப்பைப்பார்க்கிலுஞ் செல்வத்தினுற் சிறந்த அழகிய தெருக்களிலே இரத்தினக்கொடிஞ்சியையுடைய தேர்களுங், காற்றிலும்விரைந்து காற்றின்மேல் துள்ளிப்பாயுங் குதிரைகளும், மதம்பொழியானைகளும், நெருங்கிவருகையில வானவரவற்றைவிலக்கினதினுல் அகிற்புகையும், பூம்புகையும், நெருங்கி யிருளைக்கொண்ட அத்தெருக்களில் பரமகதியைக்காட்டுஞ் சூசைமாமுனிகளுங், கன்னிமரியம்மாளும் மேகங்கள்சூழ மலையிலே திரியும் இருமயில்களைப்போலவும், அவர்கள் கல்லாடையுனேந்திய தேவகுழந்தை மேகத்துள்தோன்றிய சந்திரனைப்போலவுங் காணப்பட்டுப், பேரின்பத்தோடு யாவருமுள்ளத்தில் குளிரும்படி யிளங்கதிரைவீசிச் சென்றபோது, வான்வேந்தனுகிய தேவகுழந்தை வந்தாரென்று வானவில்லும் அங்கேவிழுந்ததுபோலத், தேனைப்பொழிந்துவாசமழைதுளித்துத்தூங்கி, இசைகளைத்திருத்திப், பாலினிமையாகப்பாடிய வண்டினங்கள் ஊசலாடும்படி மேலே கட்டிய புஷ்பத்தோரணங்களோடு ஏழ்மணித்தோரணங்களும், வானத்தையளாவியிருக்கவும், அகிற்புகைமுதலியவற்று விருள்படிந்தகூந்தலுடைய மாதர்கள் மார்பிலேயணிந்த முத்தாபரணங்களைக் கயிறுகளைக்கொண்டு அதன்மேல்மன்மதனூசலாடிக்கொண்டிருந்து, பாபத்தைப்பகைத்த இவர்கள்வருகையைக்கண்டவுடனே பயந்துநடுங்கி, அவன்காலவழுவிவிழுந்ததினுல் மாதர்கள்முன்கொண்ட காமத்தீயற்று வண்டுகள்தேனுண்டு பாடுமாப்போல, அவர்கள் களிகூர்ந்து தங்கள்குற்றமெல்லாந் தீர்ந்ததென்று புகழவுங், கடல்முழக்கம்போல விற்பவர், கொள்பவர் முழக்கமும், அதிலுள்ள திரவியம்போல விற்பதற்கிருக்கும் பொன்னுமணிகளின் திரளும், அதின்அலைகளைப்போலக் குதிரைகளும், யானைக

ரும் நெருங்கி யந்தக் கடலையொத்த கடைவீதிகளில் மோயீசன் முன்னாளிற் கடலைப்பிரித்து வழிசெய்ததுபோல வான்றனங்களைப் பிரித்தவழியாகச் சென்று, சூரியன் பொருளாசையாகிய அலைகளினுட்படாமலும், மூழ்காமலுங், கடலினின் றுதயஞ்செய்வதுபோல இவர்களுங் கடைத்தெருவின் கடலைநீங்கிப் பாபவிருளைநீக்க, அப்பாலுதயமானவுடனே இவர்கள்கடைத்தெருவின் கடலைவிட்டுதித்தாரென்று சூரியனிவர்களோடு உடமாளிக்கமாட்டாமல் நாணினாற்போல, நீர்க்கடலிலேயமுழ்ந்திவ்வுட னஸ்தமித்ததால் கந்நிமரியம்மாளும் மாதவ சூசைமாமுனிகளு மணிகளாலிழைத்த தங்கப்பாத்திரத்தில் உயிராத்தரு மருந்தையேந்தினாற்போல, வேதத்தைக்கற்பித்த தேவகுமாரனைத்தலையேந்தி,ஒருசிறுமனையிலே புகுந்திருக்கையில், அந்தஇராத்திரியிலே வேதத்தையாபரணமாகவணிந்த சூசைமாமுனிகள் அறிவில்லார் தங்கள்பொருளைக்கொடுத்துச் சிறிதுபுகழ்தேடுவதுபோலத்தேடாமல் எதிர்நன்மையுணராதார் கொடுக்கும் நன்மையொன்றே ஆயிரமாகி,வானுலகின்பயனைவிளைவிக்குமென்றெண்ணி,முன்னமேமூன்றரசர்கொடுத்த பொன்னையெடுத்துக்கொண்டு இருளின்போர்வையிலே மறைந்தொளித்துச்சென்று, தேவாலயத்திலே கொடுத்துப், பின்பு அத்தேவாலயத்தில் வழங்குகின்ற வானுலகத்திற்கேற்ற தேவபூசையைக்காணும்படி வானமண்டலங் கண்ணைத்திறந்ததுபோலச் சூரியனுதயமானவுடனே, கந்நித்தாயாருஞ் சூசைமாமுனிகளுமாகத் தேவத்திருக்குமாரனைக் காணிக்கைகொடுக்கும்படி குறையில்லாத பலியாகத் திவ்வியபாலகனை யெடுத்துக்கொண்டு, பண்முதலிய வாச்சியங்கள்முழங்கச் செல்லுகையில்,மிகுந்தகாந்தியுள்ள பெருமணிகளைப்பதித்து, ஒழுங்குபடச் சித்திரங்களையெழுதிக், குளிர்ந்தகிரணத்தைப்பரப்பும் பளிங்கினாற்செய்யப்பட்ட அத்தேவாலயமானது வானுலகச்சுடரையெரிக்குந்திருமுகத்தோடுவருந் தேவகுமாரனைக்காணும்படி பலசாளரங்களாகிய விழிகளைத்திறந்து, மூவரையும் வாருங்களென் றழைக்கும்படி மாணிக்கக்கதவுகளை நீக்கி வேதத்தின்வாயைத்திறந்ததுபோல இருக்க, இவர்கள் உள்ளே சென்றார்கள்.

பின்பு கந்நிமரியம்மாளுஞ், சூசைமாமுனிகளுமாக நிறைந்த தூபமுதலிய புகைகளும், மணிமுதலியனவிடும் பிரகாசமும் மயங்கிக்கூடிக் கண்ணுக்கினிமைசெய்யும் அழகிய அந்தத்தேவாலயத்தில் தேவசுபாவமும், மனுச்சுபாவமும்,ஒன்றாகச்சேர்த்துக்கட்டிய திருமகனை நம்முடையபாவத்தீமையை யொழித்து நம்மையிரக்ஷிக்கும்படி யேற்றபலியாகப், பிதாவாகிய சர்வேஸ்பரனின் சந்நிதிமுன் காணிக்கையாகவைத்து வணங்கியிருக்கும்போது தேவாலயத்தினர்ச்சனைக்கு வேண்டியவேலைக்காக அங்கிருக்குந் தூயமனதுள்ள முனிவர்களுக்கெல்லாந் தலைமையாகவும், வேதநூலாகிய கொடிபடருங் கொழுகொம்பாகவும்விளங்கிய சிமையோனென்னுங் குருப்பிரசாதியானவர்முன்னாளில்காய்ந்து வாடியமரத்திற்குயிராகவருமழைபோலவும்,இருளைநீக்கவருஞ்சூரியனைப்போலவும், நம்மோடு என்றும்நீங்காத பாவத்தைத்தீர்க்கும்படி * கடவுள் மனிதனாக அவதரித்துவருவதைத்தன் கண்ணாற்காணும்படியான வரந்தரவேண்டுமென்று தினந்தோறுமன்றாடிவந்ததினால்,கடலிலேபிறக்கும்வலம்புரி மலர்பூத்ததடாகத்திற்பிறந்ததுபோலுங்,தடாகத்தில் மலருங் குவளைமலர் மரக்கொம்பிலே மலர்ந்ததுபோலும், இவ்வுலகில் புருஷர்துணைகொண்டு மைந்தனைப் பெறு மியற்கையைக்கடந்து, புருஷர்தொழிலில்லாமல் அற்புதமாகத் தாமரைமலரையொத்த கந்நிமலராமல் பிள்ளையாகப்பிறக்குநாதனை நீ மரணமடையுமுன்பாகக்கொம்பிற்பூத்த பூப்போல உன்கண்கள்மகிழக் காண்பாயென்று அன்று ஆண்டவர் திருவுளம்பற்றிய பிரகாரம் நம்பியிருந்த அந்த முதிர்வயதையுடைய சிமையோ

* லூக்கா. 2-ம். அதிகாரம்.

ன் கடவுள் தேன்மலர்ச்சாயலாக மனிதனையவதரித்து, நமது பாவவினைகளைத் தீர்க்க இதோ தேவாலயத்துள் எழுந்தருளினுரென்று ஓரரியசாக்ஷியா யுணர்ந்து, பறந்தாற்போல விரைந்துவந்து, பூவுலகவுடம்பிற்குயிராக அவதரித்த திருமதலைக் கண்களிகூரக்கண்டு, கறவையைக்கண்ட கன்றுபோல விரும்பியோடி, எடுத்த மனுக்கோலத்தில் தேவசுபாவங்குறைவுபடாமல் உயர்ந்திருக்கும் பெருமையையறிந்து, திவ்வியபாலகனின் திருவடிகளைத் தலைக்கு அணியாகச் சூடிக், குணசாகரமாகிய அந்தத்தேவகுழந்தையின் மாக்ஷிமையை யாராய்ந்து உள்ளேமுழுகினுற்போல மகிழ்ந்துவணங்கிச், தான்கொண்ட இன்பத்தை யாற்றமல் மீளவுந் திருப்பாதமலர்களைத் தொழுது, அழுதகண்ணீரால் புனலாட்டி, அருளாகிய பூந்துகிலால் துடைத்துத்தடவிக், கணுருகியகைகளினுல் திருப்பாலகன் திருவதனத்தழகெல்லாமுகந்து, உள்ளநிறையவுண்டு, தன்னன்பி னினிமையாகிய தீஞ்சுவையோடு பழுத்தவோர் பேரின்பமாகிய கனியையுண்டுவுண்டு கைகளிலேந்தி, பெருமகிழ்ச்சியால் இரண்டுடம்பும் உயிரும் ஒன்றாகும்படி மார்போடு இறுகக்கட்டித் தழுவித், தன்னன்பிற்குநேராகத் தன்னுடம்பு வானத்திலேறி வான்வீட்டடைச்சேர்ந்தவனைப்போலப் பாடத்தொடங்குவார்.

பாற்கடலிலேமலர்ந்த தாமரைபோல என்னுள்ளம் இனிதாய்மலர வேதநூல்முதலிய நூலெல்லாமடக்குங் கடலாகிய நீ யுன்கண்மலர்முத்தாகியகண்ணீரைப்பொழிதற்கு மனிதனாய்ப் பிறந்தாய்; நீ கண்ணீர்விட்டு வருந்தும்படி யுனக்கு நாங்களியாவரும் வினையைச்செய்தோம்; இன்பமிகுதியால நாங்களுங்கண்ணீர்விட எங்களுடைய வினையெல்லாம் நீயேயின்றுதீர்த்தாய்; என் வினையைத் தீர்க்கும்படிவந்து நீ துன்பங்களைக்கொண்டாய்; பாவமெனக்கிட்ட விலங்கையறுத்து என்னைமீட்க நீ மனுவுடலைச்சிறையாகக்கொண்டாய்; நான் இந்தக்கருணையை யாராய்ந்தடைந்த இன்பமிகுதியால் என்னுற்பவுயிரென்னுடலைவிட்டு உன்னைக்கண்டசாக்ஷியே றெகாளக்கொண்டுபோய், பரமகதியினிலையைக்கண்டதுபோலாயிற்று; இதைக்கண்டபின் நானிவ்வுயிரையினியேன்வைத்திருப்பேன்; உன்றிருப்பாதத்தைத் தலைக்கணியாகச்சூட்டி யுன்னன்பினையுயிராகவுட்கொண்டேன்; இப்படியாக உன்னையணுகாதவன் அவன் வினையே யவனடியைவிடாமற் கட்டிக்கொண்டு அவ்வினைதானே யவனையுதைத்துத்தள்ளுதலினுல் நரகத்தீயிலமிழ்ந்துவான்; என்றார்.

இப்படி யருந்தவத்தையுடைய சிமையோன்பாடும்போது அதற்கிசையவீணையுங்குழலும், மற்றவாச்சியமும்பாடி நிற்கவும் பூசைமுகத்திலெழுந்த பலபூம்புகைகள் திரண்டுபரிமளிக்க அந்தப் பொன்தேவாலயம் அன்று மோக்ஷத்தையொத்திருக்கவுஞ், சிலர் வாசனையைக் கொப்பளிக்கும் பூமழையும், பாமழையும் பொழியவுஞ், சிலர் சங்கிற்பிறந்த வெண்முத்துக்களாற் செய்த வெண்குடைகளை மேலே தாங்கியிருக்கவுஞ், சிலர் சந்திரகிரணம்போலச் சேர்ந்த பலவெண்சாமரைவீசவும், யாவருமர்ச்சனைசெய்யவுஞ், சிலர் வணங்கியதிருவடிமேலே பூமாலைகளைச் சூட்டவுஞ், சிலர் அகிற்புகையும், பூம்புகையுங்காட்டவுஞ், சிலர் பாமாலையாற் றுதிகளையுணர்ந்த இசைகளைப்பாடவுஞ், சிலரதிசயத்தோடு உருகிநிற்கவும், எல்லாரும் ஒருப்பட்டு வாழ்த்திருக்கவும், நக்ஷத்திரங்கள்பூத்ததுபோல வாசனைவீசும் பூமாலைகளுந், தேவாலயமெங்கும்பதித்த பலஇரத்தினங்களும் கண்திறந்து திருக்குமாரனை நோக்கவுமாக விளங்கியபோது திவ்வியபாலகன் நக்ஷத்திரங்களி னடுவில்விளங்குஞ் சந்திரனைப்போல விளங்கியிருக்கையில் சுற்றியிருந்தவர்களில் சிலர் என்னாண்டவனே! புறப்பட

விட்ட பொறிகளோடு நெருங்கிக்கொழுந்துவிட்டெரியுஞ் செந்தீயுட னடர்ந்த புகையைத்தரும் நரகத்திலே நாங்கள் செல்லாமற்படி எங்கள் பாவவினைகளைநீக்கி, எங்களுயிரை யிரக்ஷிக்கும்படி மிக்க துயரைக்கொண்டு நீசாகவந்தாயோ? என்பார். சிலர் தீவினையைச்செய்த நாங்கள் மகிழும்படி வானவரால் வணங்கப்பட்ட செல்வனே! நீ துன்பத்திற்குக் காரணமாகிய திருவுடலைக் கொண்டு இவ்வுலகத்திலே சாவாயோ? சாகமாட்டாத நீ சாகுதற்கெடுத்த திருமேனிவருந்தி எங்களை மோக்ஷத்திற்சேர்க்கும்படி, அன்புடையதாயின்தன்மையாகிய உன்கருணையை யெங்கேயாரறிவார்கள் என்பார். சிலர் தீமைசெய்த பாவிகள் நரகத்தில வெந்தால் உனக்கதனால் குறையுண்டோ? தாய்மோக்ஷத்தின் பேரின்பக்கடலில மனிதர்யாவரும்வாழ்ந்தால் உனக்கதனாலாபமென்ன? என்பார். யாவருந் தீவினையைக்கெடுத் துயிரைக்கொடுக்குங் கனியாகி, எங்களுக்குயிரைத்தரும்படி யெழுந்தருளிய நாதனைப் புருஷதுணையில்லாமல் கன்னிகையாய்ப்பெற்ற அருளால்நிறைந்த தாயே! எங்கள் பாவவினையில் நாங்கள் நீங்கும்படி மிகவும்வாழியென்பார். வேதநூல்கொழுந்தாக மேற்படருங் கொழுகொம்பையொத்த திருமார்புடைய சூசைமாமுனிவனே! சமஸ்தத்திற்குங்காரணமாகிய கடவுளை ஒருதிருமகனாகவளர்க்கும்படி கைத்தாதையென்று நீர்பெற்ற பூரணவரத்தினாலே வானவருமமைப்புகழ இன்பக்கடலிலே யமிழ்ந்தி கேடொரு மிகுதியேவாழியென்பார்.

இப்படியாக மிகுந்த இன்பத்தோடு யாவுமானபிறகு சிரேஷ்டமுனிவராகிய சிமையோன் மாதவத்தினாலடைந்த வரங்களின் மிகுதிப்படி மூக்காலங்களையுங்கடந்து, தெளிந்தகாக்ஷியினால் வரும்பொருளை யறிந்து, கன்னித்தாய் மரியுந், தேம்பாவணியை யேந்திய சூசைமாமுனிவனுந் துயரடைந்துவருந்தும்படி சொல்லுவார்: † இத்திருக்குமாரன் பூவுலகில்சிலருக் குயிராகநிற்பார்; சிலருக்குக்கேடாகநிற்பார்; இவரைப்பலரும்பகைத்துக் கணைகளையெய்யும்படி வைத்த குறிபோல்வைத்து மிகவும்வருத்துவார்; அப்பொழுதருமதாயே! நீயிதைக்கண்டு உன்னெஞ்சைப் பிளக்கும்படி துன்பமென்னும் வாளுருவப் பாய்தலினால் துன்பசாகரத்திலமிழ்ந்தி வருந்துவாயென்றார். இந்தத்திரிக்கதரிசனத்தைக்கேட்ட கன்னித்தாயாருஞ், சூசைமாமுனிவனும், அந்தச்சொல்லாகிய கொடியவாளினால் தங்கள்செவிமுதல் நெஞ்சமும், உயிரும் அறுக்கப்பட்டதாகநொந்து, இனிநம்முடையபாவங்களை யறுக்கும்படி பூவுலகில் திருமகனும்வந்தநாதன் திவ்விய இரத்தத்தைச்சிந்திச் சாகவந்தாரென்று முனிவர்சொன்னவாசகத்தாற் கண்டறிந்து, துன்பக்கடலிலேயமிழ்ந்தியிருக்கையில் இவ்வார்த்தையைப் பூவரும்பின்சாயலாகவிருக்குந் திவ்வியகுமாரனுங்கேட்டுத், தேன்பொழிந்து அரும்புமலர்ந்ததுபோல மகிழ்ந்து, ஒருபுன்சிரிப்புக்காட்டித், திருச்சிரசைச் சாய்த்துச் சொன்னபடி நமக்காகச் சாகிறதற்கு விருப்பத்தோடு ஆக்கியதன்மையைக்காட்டினார். அப்பால் வாச்சியங்கள்முழங்க இவையாவும் நடக்கும்போது அங்கிருக்குங்கன்னிகாஸ்திரீகளுக்கெல்லாம வளர்க்குந்தாய்போலிருந்து முன்னாளிலே நக்ஷத்திரமுடிசூழ்ந்த கன்னித்தாயாரையும், வளர்த்த மாக்ஷிமையுடைய அன்னம்மாளும்வந்து, தேவகுழந்தையைக்கண்டு தம்மினாற்போலத் தேனைக்கொப்பளிக்கும் பூமாலையைத் திருப்பாதத்திற் சேர்த்துவணங்கித், திவ்வியகுழந்தை நாங்கள்செய்தபாவத்தினால் ஊனெழும் வேலின்வழியாக திருஇரத்தத்தைச் சிந்தியடையுந்துன்பத்தை அப்பொழுதே யறிந்து ஐயோ! தகாதென்றுநொந்து வானமின்னிறப்போலிருக்குந் திருக்குமாரனை மிகவும் வாழ்த்தி, யவர்திருமுகமலர்விட்ட வாசனைத்தேனைக் கண்களென்னும் வாயா

† லூக்கா. 2-ம். அதிகாரம்.

லேயுண்டு, உண்டமகிழ்ச்சியா விளமையாதிருந்து, மீளவுந் தேவகுழந்தையின் திருப்பாதங்களை வணங்கி, அவனைக் கன்னிமையழியாமற்பெற்ற தேவதாயையும் வணங்கி, யாவருங்கேட்கும்படித் திருத்தாய்திருமகனென்னும் இருவர் மாட்சிமையைப் புகழ்ந்து சொல்லித், தன்னுள்ளத்திற் பொங்கின பேரானந்தத்தால் கண்ணீரை மழைத்தாரையாக விட்டழுது, அழுதகண்ணீராற்பெருகின இன்பக்கடலிலேமூழ்கினபிறகுஇவையாவும்இன்பமுந், துயருமாகமுடிந்தவுடனேகேடாதபெருமையுடைய தேம்பாவணியையேந்திய தவவருகிய மாதவசூசைமாமுனிகளுந், திருத்தாயாராகிய கன்னிமரியம்மாளும், வேதமுறைவழுவாதபடி இரண்டு புறாக்களைக்கொடுத்து, உலகங்கள்யாவையு மாண்டிரட்சிக்கும் பூவரும்பின்சாயலாகிய தேவகுழந்தையை மீட்டுக்கொண்டமாத்திரத்தில் மாதவத்தையுடைய சீமையோன் அளவின்றித் துதிகளைச்சொல்லவும், மற்றப்பழயவேதத்தின் குருக்கள்யாவரும் அன்போடு உபசாரங்கூறவும், வானவிருபக்கத்துஞ்சூழ்ந்துவரவுந் திருக்கோயிலைவிட்டு நீங்கிப்போனார்கள்.

மகனேர்ந்தபடல முற்றிற்று.

முதற்காண்ட முற்றுப்பெற்றது.

சேசுமரியாயி சூசை துணை.

இரண்டாங் காண்டம்.

பதின்மூன்றாவது - பைதிர நீங்கு படலம்.

களிமுகத்தி னிணையாகிப் பைம்பூமேய்ந்த சனலொப்ப ச்
சுளிமுகத்தி னற்றதுய ருள்ளம்வாட்டித் துகைத்தன்று ர்
வளிமுகத்தின் விளக்கன்ன மயங்கியேங்க வந்தவையா ன்
இளிமுகத்தின் கிளத்தியொடு விரும்பியிங்கண் கிளக்குகிற்பே ன்.

முற்கூறியபடி தேவாலயத்தினின்று புறப்பட்டபின்பு, பசியமகரந்தத்தைச் செந்தியானது உண்டதுபோல மஹாஉக்கிரத்தோடுவந்த துயரமானது கன்னித்தாயார், சூசைமாமுனிகளென்னு மிருவருடைய உள்ளத்தைவாட்டி வருத்தினதினால் அவர்கள் காற்றின்முன்வைத்த விளக்குப்போல மயங்கி, யேங்கும்படி சம்பவித்தவிஷயத்தை நானிங்கே மடக்கிளிசொல்லுமாப்போலச் சொல்லுகிறேன். அதெப்படியென்றால்:— பூங்கொம்பையொத்த கன்னித்தாயார் பூத்த அரும்பையொத்த திருமுகத்தையுடைய வாசமாலையாகிய திருக்குமாரனைக், காணிக்கைக் கொடுத்தானபிறகு மின்னலும் மேகங்கள்படிகொண்டிருக்கும் பர்வதம்போல அகிற்புகைமுதலிய வாசப்புகைகள் நிறைந்துசூழ வானவர் குடியாயிருக்கும் அந்தப் பொன்னெனு தேவாலயத்திற்கு எட்டுநாள்போகும்படியாகக் கருணைத்தாயாருஞ், சூசைமாமுனிகளும் எண்ணங்கொண்டு அந்த ஜெருசலேம் பட்டணத்திலே குடியிருந்து, ஐந்துநாளாய்த் தவறாமல் திருநாளாக ஆலயத்திற்குச் சென்ற பின்பு, ஒருநாள் வாசப்பூங்கொடியுயர்த்திய சூசைமாமுனிகள் நித்திரைசெய்யும் வேளையில் நக்ஷத்திர உருவோடு ஒருவானவன் தூதாகவந்து, விஷம்பொருந்திய மொழிகளைச் சொல்லுவார்: ஓ! பூங்கொடியேந்திய மாதவனே! கிணங்கமழுங் கொடியனேலையுடைய எரோதனென்னும் அரசன் தேவகுழந்தையைக் கொல்லும்படி யாலோசித்திருக்கிறான்; ஆதலால் நீ தேன்பொழியும் இந்தத்தேசத்தைவிட்டு உடனே புறப்பட்டு, எகித்துநாட்டிற் சேர்வாய் என்றார். இதைக்கேட்ட சூசைமாமுனிகள் பசியபூந்தாது வெந்தொழியும்படி குளித்தநெருப்போ? விழிகளிலே பாய்ந்த வேலோ? புண்ணிடத்திலேவைத்த அக்கினியோ? இடியோ? யமனோ? இவையும் நிகராகாமல் வானவன்சொன்ன மொழிகளால் பெருங்கடலில் சுழலப்பட்டமிழ்ந்தி, மனஞ்சோரும்படிநொந்து, பின்னும் அந்தத் தேவகட்டளையைவணங்கி, நிழலிலேமலர்ந்த பூவின்தன்மையாகிய திருக்குமாரனின் இளமையுங், குளிர்ச்சியோடுமலர்ந்த பூங்கொம்பின் சாயலாகிய கன்னித்தாயாரின்மென்மையும், பாலைநிலமழல்விட்டெரியும் எகித்துநாட்டின் தூரமும், அந்நாட்டில் தங்களையறிந்தவரும், உறவின்முறையாருந், தருமத்தை விரும்பினவரும், இல்லாமலிருப்பதும், அந்நாட்டுக்குச் செல்லும் வழியறியாதிருப்பதும், அவ்வழியில் உதவியும், ஊரும், சார்பும் இல்லாதிருப்பதுந், தங்களுக்குத் தரித்திரமல்லது வேறொன்றுமில்லாதிருப்பதுமாகிய இவையெல்லாம் ஓராய்ந்து புலியினிழற்பட்ட மான்போலக் குழைந்தேங்கிவருந்தினாலுந், தேவகட்டளையின்படி போகுதற்குத் துணிவுகொண்டார்.

இப்படியாகச் சூசைமாமுனிகள் துணிவுடனே விரைந்தெழுந்து மழைத்தாரையாகக்கண்ணீரைவிட்டழுது, தனதுதிருத்துணைவியாரண்டையிற்சென்று, ஆண்டவன்செய்த கட்டளையை வெளிப்படுத்தியவுடனே செங்கமலத்தைப் பழித்த சிற்றடியும், வேதத்தைவிரித்துரைக்கு மலர்ந்த தூய பவளவாயுமுடைய

கந்தித்தாயார்கேட்டுப், பூந்தாது நெருப்பிலேவெந்து வாடினதுபோலவாடி, நொந்து கடைசியாயிருவரும் இது தனக்கெதிரும், பகையும், உபமானமுமில்லாமல் தடுக்கப்படாத வல்லபத்தோடு மனிதரறிவைக்கடந்திருக்குங் கடவுளின் கட்டளையென்றுவணங்கித், திருவுளத்தைப்போற்றித்தெளிந்து, தேவகுமார னழகியதிருமுகத்தோடிருக்கும் இடத்தையணுகிச், செலவமணி மேகத்தைப்போலத்திருக்குழந்தையின்மேற் போட்டிருந்த படத்தைநீக்கினவுடனே, முப்பொழுதையு மொருபொழுதாயறிந்து மெய்ப்பொருளைத்தெரிவித்து விளக்குந் திவ்வியபாலகன் மேகநீங்கச் சூரியன்காணப்பட்டதுபோலத்தோன்றி, யன்னத்தின் குஞ்சுபோல நித்திரைசெய்திருக்கிறதை உலைக்களத்திற்படிந்த துன்பநெருப்பிலுருகிய நெஞ்சுடைய திருத்தாயார்கண்டு, அருமைத்திருமகனைத் திருக்கரங்களாலெடுத்து, அழகிய பாதமலர்களை வணங்கிச்சொல்லுவாள்: கலையெல்லாங்கடந்த காக்ஷியையுடைய திருமகனே! கடலினும்பெரிய அருளின்தன்மை யீதுவென்றுஎண்ணிக், கொல்லுந்துன்பம் வந்தபோதிலும் உன்கட்டளையைச் செய்வேனென்று சொன்னபோது குவளைமலர்கள் தேனைத்துளித்தது போலத் திருக்குழந்தையுந் திருநேத்திரக்கமலங்களைத்திறந்து, முத்தாகக்கண்ணீரைவிட்டழுகையில் திருத்தாயாருங், கைத்தாதையாரு மிகுந்ததுக்கத்தோடு வருந்தியேங்குவதைத் திவ்வியகுமாரன்கண்டு தனதுகந்தித்தாயாரின் திருமார்பிலே தனது திருக்கண்களும், அந்தத்திருமாதாவின் திருக்கண்கள் தன்பேரிலுமாகக் கலந்தபார்வையாகும்படி யமுதத்தையூட்டினதுபோல ஒருபுன்னகை காட்டியவுடனே கந்தித்தாயாருந், தாளுயர்த்திய பூங்கொடியைப்போல உள்ளமுமலர்ந்த சூசைமாமுனிவரும், அன்பிற்பொங்கித், தாமரைத்திருவடிகளைவணங்கிப் பிரயாணத்திற்காக, ஆசிர்வாதங்கேட்டவளவில், தேவாமிர்தத்தினும் இனியதிருவதனத்தைக்காட்டிய திருக்குமாரன் இவ்விருவர்க்கும் அருளைப்பொழியும் ஆசிர்வாதத்தைத்தந்தபோது தந்தன்மையாலுயர்ந்த இவ்விருவரும் நடுச்சாமத்திலெழுந்திருந்து, நெடுவழியைக்கடக்கப் புறப்பட்டுப்போகையில் முன்னரூபியாய்நின்ற பதினாயிரம்வானவர்களுஞ் சூரியனைமறைக்குங் கிரணத்தைவீசிய உருவோடு திருச்சுடரோனாகிய அந்தத் தேவகுமாரனின் திருப்பாதங்களில் சுடர்பரவும்படி விழுந்துவணங்கிப், பட்டப்பகலினும் அந்த இராத்திரிகாலம் விளங்கும்படி ஒளியைப்பரப்பிப், பல்வாச்சியங்களைக்கொண்டு கடலினுமதிகமாய்முழங்கி, ஆம்பலின்வடிவாக இருக்குந் திருப்பாலனை யளவில்லாமல் வாழ்த்தித் தேனினுமினிய பாத்தொடைகளைப் பாடினார்கள்.

அப்பால் இவர்கள்சென்ற அந்தநடுச்சாமத்தில் யாவருஞ் சயனித்திருந்தபடியால் முரசுஞ், சங்கு, முழங்காமலும் இரதங்கள் நடவாமலுந், தெருக்களில்மனுக்கள் சந்தடியில்லாமலும், ஊர் அசைவில்லாமலு மிருந்தபடியால் அந்த ஊர் உயிரில்லாமற்கிடக்கும் பிணம்போலிருக்கவுங், கருணைசமுத்திரமாகிய கடவுள் நீங்கினதால், மயக்கத்தால் விளைந்த புல்வினையாகிய தீவினையெல்லாம் நிறையவும், அருளும், அன்பும், அறிவுங், காக்ஷியுங், தானமுந், தருமமுந், தவமும், வேதமுங், கல்வியும், பொறுமையும், நீதியும், வீரமுஞ், சீரும், பெருமையும், உறுதியும், ஞானமும், பொருளும், புகழும், புலமையு மற்ற நன்மைகளும் போகவுங், கடல்சூழ்ந்த வுலகின் பாவ இருளை நீக்கத் திருவுடலோடு உதயஞ்செய்த ஞானசூரியன்போனதினால் இந்தத்திருக்குமாரனைக் கொல்லநினைத்த கொடியவேந்தனுக் கிணையாக நடுநகரமெங்கும் உயிரைப்பிடிப்பதற்குவைத்த வலையாகநிறைந்த பாவவிருள்மொய்க்கவும், முடிவில்லாத தேவஅரசனோடு வானவரும் நீங்கினதினால் பகை, பசி, நோய், தரித்திரங், கேடு, பொய், முதலாகிய கொடுமையும், அறிவைமயக்கும், பேயு மறுகுடியாக அங்கேயிருக்கவும், விமானமாக மணிமேகத்தையுந், துவஜமாகத் தாரகை

யையுங், கவிகையாகக் குளிர்ந்தசந்திரனையுங்கொண்டு உயிர்கள் குளிரும்படி
யருளி னிழலைச்செய்யு மன்னவனுகிய திருக்குமாரனகன்றுபோனதினுல் நக
ருமு, நாடும நடுங்கும்படிபகைத்துஉயிரைவாட்டிப், பிணியைவளர்ப்பதற்குக்கா
ரணமாகிய தீவினையின் செங்நெருப்புயாவற்றையு மேயவும் நேரிட்டன.

இவர்கள் நகரத்தைவிட்டப்புறமாக விருக்குங் கண்ணுக்ககன்ற விசாலமா
கிய அகழியிடத்துச்சேரும்போது அவ்வகழியானது எண்ணிறந்த நற்குணங்
களையுடைய இவர்கள் போகாதிருக்கும்படி நில்லுங்கள், நில்லுங்களென்று
தன்கைகளை நீட்டினதுபோல அலைகளைவீசிநிற்கவும், இவர்களைத் தடுத்துநில்
லுங்களென்று கலங்கிவருந்திக் கையைக்கூப்பித்தொழுததன்மைபோல அந்த
அலைகளின் அலையினலே குவிந்ததாமரைகளும் அலைந்து அலையின் மேலாக
ஆடவும், அவ்விடத்தைவிட்டு யானையினெற்றியிலே கட்டிய மணிப்பட்டம்
போல மலையினுச்சியினின்றுவிழு மணிகளைக் கொழிக்கும் ஆறுகளினுலே
வளரும் புன்னைமாங்கள் பூகத சோலையைத் தாண்டியபோது வானவரசனு
கிய தேவகுழந்தையினுயிரை நானேயுண்பேனென்று வேலையெடுத்துயர்த்த
கொடிய ஏரோதலைப்பகைத்து, அவன்மேற் படையைக்கூட்டும்படி யுவர்க்
கடலை முரசமாகக்கொண்டு உறைபட்டிருக்குங் குறுந்தடிபோல,வானத்திலொ
ரு தேய்ந்தபிறை தோன்றவும், மாறுதகன்னிமையால் பளிங்காய்விளங்கும் பூ
வொத்த திருத்தாயார் திருக்கரத்திலே ஞானவடிவாய்மலர்ந்த அந்தத்தேவ
குழந்தையைக்காணுமாசையினுல் வானத்தில்புஷ்பங்களைக்கொட்டியதுபோலப்
பூத்த நக்ஷத்திரங்கள் வானத்தி னழகியகண்கள் திறந்ததாகத் தோன்றவும்,
மனத்துன்பமாறுத ஆசைமாமுநிகளும், பசியபொன்னினுமழகிய தெய்வத்தி
ருமடந்தையாகிய கன்னித்தாயாருமாக நவமணிகளும் அழகினுல்தோற்றுவணங்
கப்படுந் திருப்பாதங்களும்,வேதத்தினுகமத்தைத் திருவுளம்பற்றிய மேன்மையு
முடையதிருக்குழந்தைக்கு நிலையாகவந்ததுன்பத்தைக்கண்டிரங்கியழுதகண்ணீ
ரைக்கண்டபோது பூரணமானதுன்பத்தோடு மார்பினையடித்துக்கொண்டுவான
மட்டுமெட்டும்படி,கோழிகளெல்லாங்கூக்குரலிடவும், வானமோவென்றுல்தன்
னிடத்தினின்றுபோர்த்துபூவுலகிலவதரித்ததேவகுமாரனின் துன்பத்தைக்கண்டு
வருந்திக்,கண்ணீர்விட்டழுததுபோலப் பனித்தாரைகளைமழையாகப்பொழியவு
ம்,அந்தப்பனித்துளிகளாலநிறைந்த பசியதழைகள் அந்தத்துளிகளை உதிர்க்கச்
சோலையெல்லா மழுததுபோலத் தோன்றவுங், காடைகள் கருகருவென்றழ
வும், மயில்கள் குருகுருவென்று கைந்தழவும், புறுக்கள் குமுறிநொந்தழவுங்,
கிளிகளழவும், அதைக்கேட்டு குயில்களழவுந், தேனுண்ணுமல் வண்டுகளும்,
அன்னங்களும் அழவும், ஐயோ ! என்றிரங்கிக்காற்றுமழுதுவீசத் துயர்மிகுதி
யால் வனத்தினிடங்களெல்லாமழவும்நேரிட்டதினுல் அன்று சோலைகளின்மல
ர்கள் வாசனைவிடமறந்தன; வண்டுகள் தேனுண்ணமறந்தன; மான்கன்றுகள்
பாலையுண்ணமறந்தன; பசுக்கூட்டங்கள் தங்கள்கன்றுகளைமறந்தன. அப்பொ
ழுது விடியற்காலமானதினுல் வேதநாயகனுகிய திருக்குமாரனைக் கொல்லும்
படி நினைத்த அரசனின்கொடுமையைக்கண்டு வானங்கோபித்ததுபோல இர
த்தமுகமாகக் கிழக்திசைசிவந்தவுடன் போர்முரசின் முழக்கம்போலக் கடல்
முழங்கச் சூரியனுதயமாகிக், கொடிய அரசன்மேற் போர்புரியும்படி கதிர்களை
யம்புகளாகவிட்டுச், சிவந்தமுகமாகி யிவர்களுக்குவந்த துன்பங்களைப் பொறு
க்கமாட்டாம லழுததன்மையாகவிருக்கையில் விண்ணுலகும்,மண்ணுலகும் இரு
ந்தழுவர்க்கிரங்கினுலும, இவர்கள் யாரென்றும், நம்மைவிட்டுப்பிரிந்துபோகிறு
ரென்றும், அறியாத மற்றமனிதர்களும்,ஏரோதனுகிய கொடுங்கோலனுங் கொ
டுமையாக இரக்காதிருந்தார்கள்.

பைதிரநீங்குபடல - முற்றிற்று.

பதினைங்காவது - இளவன்மாட்சிப்படலம்.

இரங்குபடர் கானெவையு நைந்தழு திரங்கு ந்
தரங்குபடர் வேலையி றனம்பியலி னெஞ்சா
சரங்குபடர் வான்றெழு மருட்குழவி யேந்தி க்
குரங்குபடர் காட்டிநெறி கொள்ளவல முற்று ர்.

முன்சொன்ன வண்ணமாக வனத்திலுள்ள பொருள்களியாவு மிரங்கியழுதிருக்கும்பொழுது, கடலைப்போல அலையும் நெஞ்சுடைய கன்னிமரியும்மாளுஞ், சூசைமாமுனிவருமாக, வானவர்வணங்குங் கருணையுடைய திருமகனையேந்தி மனிதசஞ்சாரமில்லாமல் மிருகங்கள் அடர்ந்து தழைத்த காட்டின்வழியாக மேகங்களிடத்து முழையும் மின்னல்களோ வென்று மயங்கும்படி நுழைந்து, பாவிகளைப் பிழைப்பிக்கவந்தவர்கள் தாங்கள் பிழைக்கும் இடமில்லாதவர்களைப போல மான்கள் பயந்த தன்மையாகப் பயந்து, விரைந்துபோகையில், செல்வவானாசனுகிய திருக்குமாரனின் இரண்டுதிருப்பாதங்களையும் நனைக்கும்படி அன்பினலெழுந்த துன்பமென்னு மேகமானது இடித்துப்பொழிந்த கண்ணீரென்னு மழையைப்பொழிந்து, சூசைமாமுனிவன் வருந்தியமனத்தில் தேறுதலில்லாமல் அடைந்தமனைக் கொப்பளித்தாப்போலச் சொல்லுவார்: வானுலோர்யாவரும் ஒருப்பட்டிவணங்கும் நிகரில்லாதவலியுடையமுதலோனே! விருந்துகிடைக்குமென்று கழுகுமுதலிய பறவையெல்லாம்வணங்கும் புலால்நாற்றமுடைய வேலேத்தங்கிய ஏரோதனோடு உலகமெல்லாங்கூடிப் போர்செய்ய வந்தாலு, மட்டில்லாத உன் ஆண்மைக்கெதிருண்டோ? தீவினைகள், வருந்தியழும்படி யவதரித்து, எங்களுக்கருள்செய்யும்நாதனே! உன்னைக்கொல்லுவது தங்களால் கூடுமென்று நினைப்பாரு மிவ்வுலகிலுண்டோ? எங்கள் பழம்பழியைத்துடைத்து, அரியகருணையால எங்களைப்பரமவீட்டிற்சேர்க்கும்படி அவதரித்தநாயகனே! எங்கள்பாவங்களைத்தீர்க்க நீ பிறந்தபோதே மட்டில்லாத துன்பமடையவேண்டுமோ? உன்னை மூவுலகும்வணங்கும்படி நீ சமஸ்தத்திற்கும்முதலாகி, வான்மேல்வீற்றிருந்து ஆதியந்தமில்லாதிருக்கும் பெருமையுடையோனே! நீயவதரித்துப் பூவுலகிலவந்திருக்கும்படி ஒருமனையுமில்லாமல் மிருகங்களொதுங்குமிடத்திற் பிறந்ததன்றி, நாட்டைவிட்டுப் போகவும் வேண்டுமோ? ஞானமுஞ், சீலமும், நட்பும், உறவும், வான்கதிகாட்டும் வேதமும், நன்மையும், கருணையுமாகிய இவைகளில்லாமல் அழலாகக்காய்ந்த கானகச்சுரத்தில்கடந்து அப்பாலிருக்கும் சனநிறைந்த எசித்துநாட்டிற்கு இனிப போகவேண்டுமோ? இவ்வுலகின்வாழ்வுகள் தீவினையைவிளைத்துக்கொலலும் கருசென்று அலைகளையழிக்கும்படி நீ இவ்வுலகிலவதரித்துத் துன்பமடைவதற்கு விரும்பினதற்காக இனிஎன்னையனே! துயர்நிறைந்த என்தாரித்திரந் தருந்துன்பமல்லாமல் தொலைவாகப்போ யெந்தத்துயரைத் தேடவேண்டும்; மிகுசியவல்லமையும், அறிவுமுடைய வல்லோனே! பாவத்தினுலபிணம்போலக் கிடக்க பூவுலகிற்கு உயிராகவந்து வினைகளைநீக்கி, யில்லாதநன்மைகளைத்தருவாயென்று இங்கேயாரறிவார்; இப்போது ஒளித்துப்போகிறதைக்கண்டு பயப்படுகின்றுயென்பார். என்று அன்பினுலிவையாவுஞ் சூசைமாமுனிவன்சொல்லிப், பின்னும் விருப்பத்தோடு சொல்லநினைத்தயாவுஞ் சொல்லமாட்டாமல், அடைந்ததுன்பவெள்ளத்தி லமுந்திச்சொல்லற்றுப்போய் அழுவதன்றிஒன்றும் ஆற்றுதிருந்தார்.

இப்படி அன்பென்னுமலையினின்று விழுந்து, துன்பமென்னும் வெள்ளத்திலகப்பட்டுச், சந்தேகமென்னும் நீர்ச்சுழியிலே முழுகிச், ஆசைமாமுநிகள் வருந்துகையில், நிறைந்த அமிர்தக்கடலாகிய நெஞ்சமும், பூசனை தவறாத வாயுமுடைய கன்னித்தாயார் ஆறுதலான சொல்லென்னுங் கையைத்தந்து, மனவூக்கமென்னும் பொற்கரையிற்சேரும்படி ஆசைமாமுநிகளுக்குச் சொல்லுவாள்: கேளும் ஐயனே! முக்காலத்திலிருந்த ஆண்டவன் சினந்து பூவுலக வழியெல்லாந் தீயிலுருக்கினாற்போலக் கொன்றாராயினும், அந்நாளமுடிவாகி, இதுநம்மையிரக்ஷிக்கும அருட்காலமானதினால திருக்குழந்தை வடிவமாய்த் தோன்றி, மண்ணரசை வேண்டுபவர்க்கும், முடியாதவாழ்வுள்ள விண்ணரசை வேண்டுபவர்க்குந், தன்னுகண்ணை வேண்டுபவர்க்குங் கொடுக்குந்தயையுடைத்தாகி, விளங்குவதால், தன்னைப்பற்றிவேண்டியிருந்தாலும் யாவர்க்கும்பகைசெய்வாரோ? பின்னும் நோய்செய்யுமயக்கத்தோடு கூடிய ஆசையால் வந்தபாவத்தின் துயரவால் ஆறுதலற்றவுயிர்க்கெல்லாந் தானுறுதிசெய் திரக்ஷிக்கும்படி தன்னுழைய வுயிர்வருந்தி, நமக்காகச்சாகவந்ததினால் நல்லதருமமுடைய திருப்பாலகனிப்பொழுது இறப்பதற்கு அஞ்சுவாரோ? சர்வத்திற்கும்வல்லவனாகி மூவுலகத்தையுமாண்டிரக்ஷிக்குங்கர்த்தா பாவியுடைய சிறியவல்லமைக்கு அஞ்சுவாரோ? அறிவும், அருளும், ஆண்மையும், பெருமையும் நிறைந்த எம்பிரான் உயிரைக்கொல்லத்தக்க நால்வகைச்சேனைகளுக்கும் பயப்படமாட்டார் என்று வணங்கிச்சொன்னவுடனே பக்கத்திலிருந்த மிக்கபுகழுடைய மிக்கயேலென்னும் வானவன் கருணையுடைய திருக்குழந்தையின் செங்கமலவடிகளைத்தொழுது, அத்திருப்பாலகனுடைய ஆண்மையைநினைத்துச் ஆசைமாமுநிகளுக்கு இன்பமும், உறுதியுமாகும்படி பாவாகச் சொல்லத்தொடங்குவார்.

வேதமென்னுங் கொழுந்துபடருங் கொழுகொம்பையொத்த ஆசைமாமுநிகளே! இந்தத்திவ்வியபாலகன் அஞ்சுவாரோ? நீதிவிளங்கும்வீரத்தின் மெலிவாரோ? உலகமெல்லாம் நடுங்கும்படி வல்லமையில் மிகுவாரோ? என்று சந்தேகப்படுவானேன்? கேளும், முன்னாளில் ஒருசிறியபிரம்பைக்கொண்டு நினைத்ததை நினைத்தபடியே முடிக்கவல்லமையுள்ள இந்தத்தேவகுமாரனே நீங்களிப்பொழுது போகிற எசித்துநாட்டார் யாவரும் பயந்துநடுங்கிக்கெடும்படி செய்ததை நான்சொல்லவேண்டுமோ? அதையந்த எசித்தார்களறியார்களோ? என்றுரைத்தபோது துயர்மிகுதியால் கலங்கியெழுந்த கடலைப்போலவேயும் நெஞ்சுடைய ஆசைமாமுநிகள் சொல்லுவார்: நான் முன்னாளில் நடந்ததையெல்லாந் தெரியாமலிருந்தாலும் இங்கேமனிதனாயவதரித்து, எளியவனைப்போலத்திரியுந் திருக்குமாரனைவாழ்த்தும்படி அக்காலத்திலேதோன்றிய இவருடையவல்லமையைச் சொல்லவேண்டுமென்றுகேட்க, அதற்கு மீளவும் வானவன்சொல்லுவார்: உயர்ந்தபர்வதத்தினுச்சி தகரும்படி விழுகின்ற இடியைப்போல ஓங்கியவல்லமையிற்சீறி, யாபாரணத்தால்விளங்கிச், சினத்தால்கொதித்து, கருணையால் வணக்கமில்லாத நெஞ்சினையுடைய பார்வோன் என்னுமன்னவன் அண்டக்கலமாகத் தனதுஎசித்துநாட்டிலேவந்த வீரத்தினுயர்ந்தயூதர்களை ஆண்டவன் கட்டளையிட்ட பூசையைச்செய்யாதபடி மிகவும்விலக்கி, அடிமைகளென்று பாவித்து நாள்தோறும் வருத்தப்படுத்தினதினால், அந்தயூதர்கள் அவ்வருத்தத்தைப் பொறுக்கமாட்டாமல மெலிந்து, யாவருமொன்றாய்க்கூடியழுதகண்ணனீர் அந்த நாட்டார்களைக்கெடுக்க ஒருபடையாகநின்று வானமுகடுமட்டும் எட்டினதினால் கருணைநிறைந்த கடவுள் இவ்வருத்தத்திற்கிரங்கி, மலையிலே ஆடுமேய்த்திருந்த மோயிசனென்பவனை யழைத்து அவர்கையிலே யொருபிரம்பினைக்கொடுத்து, உன்குலத்தாராகிய யூதர்களை வருத்திய கொடியவரசன்முன்னே சீக்கிரத்தில தூதாகப்போய் அவனுக்கஞ்சாமல் அவன் குலைந்துநடுங்கி யஞ்சும்படியாகப்

பேசி, நீரையுதயத்திலே நாம்கட்டளையிட்ட பூசையாகும்படி யூதர்களைவிட
வேண்டுமென்று சொல்வாய்; அதற்கவன் விடாமற்போனால்இந்தப்பிரம்பை
யோங்கி, அந்தக் கொடுங்கோலனோடு யாவரும் பயந்து நடுங்கும்படி, கொடிய
துன்பத்தைக் கொண்டுவிட்டு, எமதுகோபத்தின் வல்லமையைக் காட்டுவாயெ
ன்றபொழுது இதைக்கேட்ட மோயீசன் ஆண்டவன் திருவாய் மலர்ந்தருளிய
யாவையும அரசனுக்குப்போயறிவிக்கையில் ஆளியிலுங்கொடியவனாகிய அந்
தப்பார்வோன் சற்றுஞ் சம்மதிக்காதிருப்பதைக்கண்டு கடவுளின்கட்டளைப்ப
டியேமோயீசன் தான்கொண்டுவந்த பிரம்பை யவன்முன்னே யெறிந்தமாத்தி
ரத்தில், அந்தப்பிரம்பு கூரியபற்களால்கொல்லுகின்ற செம்பாம்பினுருவத்தை
யெடுத்துப் பல்லின்வழியாகவுங், கண்ணின்வழியாகவும், நெருப்பினைக்கொப்ப
ளித்துத் தலையெடுத்துச் சீறியாடும்போது அதைக்கண்ட அந்தமன்னவன் மாய
வித்தைக்காரரை யழைப்பித்து, அவர்களும் பிரம்புகளைப் பாம்புகளாகச்செய்வி
க்கும்படிசெய்ய அந்தப்பாம்புகள்யாவையும், முன்தேவசூத்திரத்தினால்தோன்றி
யசர்ப்பம் விழுங்கினவுடனே மோயீசன்தன்பாம்பின்வாலைப் பிடிக்க அதுமுன
னிருந்த பிரம்பினுருவாய்மாறினதை யந்தக்கொடியவேந்தன் அறிந்து உள்ளத்
தில் பயங்கொண்டாலுந், தேவநாதனுக்கு இடங்கொடாமலிருந்து, தன்கொடு
மையின் வேகத்தைத்தணிக்கும்படி தாமரைமலர்மேல் அன்னங்கள்சயனித்து
வாழ்ந்திருக்கும் ஒருபொய்கைக்குச்சென்றான். செல்லும்போது மோயீசனுங்
கூடவேசென்று நான்சொன்னதை நீ மறுப்பாயாகில் முடியாததுன்பங்களி
லே யமிழ்ந்துவாயென்றுசொல்லி, மீளவும் பிரம்பினைமேலேசுழற்றியபோது
நீரிலுள்ளமலர்களெல்லாம் வாடவுங், கெண்டைமுதலாகிய மற்றமச்சங்களெ
ல்லா மிறக்கவுங், கற்றவர்யாவரும் அதிசயித்து மயங்கவும், நல்லதண்ணீரெ
ல்லாம் வற்றிச்சோரவும், அங்காட்டிலிருந்த எவ்வகைத் தண்ணீரும் இரத்த
மாகமாறவும், ஆயினபின் மோயீசன் பிரம்பை மீளவுஞ்சுழற்றினதினால் அர
சனின் படுக்கைவீட்டிலுஞ், சித்திரக்கூடங்களிலும், பொக்கிஷச்சாலைகள் முத
லானவிடங்களிலு முடியாததுன்பத்தைத்தரும்படி தவளைகள் மாரியாகப் பொ
ழிந்ததால் காடெங்குந் தவளைகள் நிறைந்தமாத்திரத்தில் கழுதை வீணையின்
பயனைக்கொள்ளாததுபோல அரசனும் இதைக்கண்டு பயன்கொள்ளாமலும்,
பகையைவிடாமலு மிருந்ததினிமித்தம் மறுபடியுங் கடவுளின் கட்டளைப்படி
மோயீசன் பிரம்பையோங்கியபோது அந்நாடெங்கும் பெரும்புண்ணாக இருக்
கும்படி அளவில்லாத உண்ணிகள் நிறைந்ததைக்கண்டும், நெருப்பிற்படிந்த
கொடியநெஞ்சுடைய வேந்தன் தனது ஆங்காரத்தை விடாமல் கர்வித்துநின்ற
தால்; மோயீசன் பின்னும் நல்லவருமஞ்சும்படி பிரம்பினையாட்டினவுடனே
முன்பூமலர்ந்த அந்நாடு முடிவில்லாத ஈக்கள் மொய்த்ததால், செத்தபிணத்
தைப்போலத் தோன்றுகையில் வேந்தன்பயந்து யூதர்களைச் சிறைநீங்கும்படிவி
டைகொடுத்தான். அப்போது முன்தோன்றிய துன்பமொழிந்ததைக்கண்டு,மீள
வும் அந்தக் கொடுங்கோலன் வெகுண்டு முன்சொன்னதை மறுத்தநேரத்தில்
மோயீசன் பின்னுந் தன்பிரம்பை யோங்கினவளவில் யானைமுதலாயுள்ள மி
ருகங்களெல்லாங் குணங்கெட்டு வேறொருவராற் கண்டுபிடியாத நோயினால்
மடிந்தபோதுந் தீயிற்சுட்டபுண்ணுறினாலும் அந்தவரசன்கொண்ட ஆங்கா
ரமாறாமையா லதையொழிக்கும்படி கடவுள் முன்தந்த துன்பம் போதாமை
யால், மோயீசன் மறுபடியும் பிரம்பைச்சுழற்றியபோது யூதர்கூட்டந்தவிர, அர
சன்முதலாக அந்நாட்டிலுள்ளயாவர்க்கும் குஷ்டநோய்சம்பவிக்கவும் பின்னும்
நெருப்புப்பற்றியெரியும் நெஞ்சினனாகிய மன்னவனஞ்சும்படி மோயீசன்பிரம்
பினையுயர்த்தியவளவிலே கடல்நீரையருக்கி, ஒருகணநேரத்திலெழுந்த அழல்மே
கங்கள்முழங்கியார்த்து மின்னிப், பெருங்கல்லுகளை யெறிந்ததுபோலப்பெய்தவா

லங்கட்டியால் அந்நாட்டினுயிர்களெல்லா மாண்டிறக்கவுஞ்சம்பவித்தபோது
அதற்கும்அஞ்சாதமதத்தையுடைய அந்நாட்டதிபதி சலஞ்சாதித்தமையால் இ
ன்னும் மோயீசன் வெகுண்டு பிரம்பைபசைத்தவுடனே விட்டில்பூச்சிகள் திர
ளாய்ப்பரந்து மொய்த்து, குளிர்ச்சிபட மலர்ந்த அந்நாட்டில் ஒருபசும்புல்லு
மில்லாமல் ஒருநிமைப்பொழுதிற்குமுன்னே வெட்டியழித்திட இத்தனை ஆக்
கினையுங் கண்டுதெளியாத அரசனின்மனவிருள்போலப் பின்னும்அள்ளத்தக்க
இருளடர்ந்து எங்குமொய்த்ததினால் சரீரமுழுதுஞ் சிறைப்பட்டுநின்ற யாவ
ருமபயந்துகூப்பிட்டலறி, வருந்தியிருக்கையில் இருளாற்சிறைபட்ட அந்நாடும்
பாவத்திற்குச் சிறையாகிய நரகம்போலத் தோன்றியது.

இப்படியாக எசித்துதேசத்தி லடைக்கலமாகவந்த யூதரை யடிமையாக்கிய
கொடிய அந்தவரசனின் ஆங்காரங்கெடும்படி பூவுலகினரசர் யாவரையுமாண்
டுவரும் பரமகர்த்தனவனைச்சபித்து, இரத்தந், தவளை, உண்ணி, ஈ, மிருகநோய்,
குஷ்டநோய், ஆலங்கட்டி, விட்டில்பறவை, இருள் என்னும் ஒன்பது ஆக்கினை
யுங்கொடுத்தபிறகு ஊக்கைவடியும் வேலேந்திய அக்கொடியமன்னவன் தேன்
பொழியும் அந்த எசித்துநாட்டார்யாவரும் மேகமுழக்கத்தினு மதிகமாகமயங்
கியழுது வருந்துவதையும், யூதர்கள் தேனொடுமலர்ந்த மலர்போல ஒருகேடி
ன்றி வாழ்ந்திருப்பதையுங் கண்டுபயந்து, யூதர்களைநோக்கி நீங்கள்யாவரும்
ஒருப்பட்டு என்னடிமைத்தனத்தினின்று விடுதலையாகிப் போங்களென்றவுட
னே மோயீசன் தன்கையையெடுத் தோங்குகையில் முன்னிருந்ததுன்பமெல்
லாமொழிந்தமாத்திரம், மீளவுமந்தக்கொடியமன்னவன் யூதர்களைப்பகைத்து,
அடிமைத்தனத்தி னின்றுநீங்காமல் நில்லுங்களென்று மறித்ததினால், கோபத்
தினளவாக வல்லமைகொண்டு விண்ணும், மண்ணும் வணங்குங் கர்த்தா முன்
சொன்ன ஒன்பதுசாபமுந்தவிரப் பின்னு மிதையு மவன் எண்ணுதிருப்பா
னேவென்றுசினந்து, பத்தாவதுசாபமாக அந்நாட்டைத் தனியரசுசெய்த, அர
சன்முதலாக அந்நாட்டிலுள்ளவர்களில் யூதர்கள் நீங்க, மற்றவர்களின் தலைச
சன்பிள்ளைகள் யாவு மிறந்தொழியும்படி ஒரு இராத்திரியிலே கொன்றுவிட்ட
போது அதைக்கண்டயாவரும் ஒல்லென அலறிக் கண்பிசைந் தழுதுசொல்லு
வார்: இந்தவல்லபத்தையுடைய கடவுள்கோபித்தால் அவரோ டெதிர்க்கும்படி
வல்லவனுரோ ? இனி நம்மையெல்லாம் இப்படியே கொல்லுவாரோ ? என
றுசொல்லிப் பயப்படுகையில் அரசன் நடுச்சாமமென்றும் பாராமல் மோயீ
சனை யழைப்பித்து, இந்தநிமிஷத்திலதானே யுன்னினத்தாராகிய யூதர்களைப்
போகச்சொல்லுவா யென்றவுடனே மாதர்களுஞ், சிறுவர்களும், கிழவர்க
ளுமல்லாமல் யுத்தஞ்செய்தற்கேற்ற மலையினைத்த புஜங்களையுடைய வீரர்
கள் ஆறுஇலக்ஷத்திறகுக்குறையாமல் கடலைச்சேர்கின்ற பாலைவனத் தருவழியா
கப்போனார்கள். ஆதலால் இவையாவும் உங்கள்இருக்கரங்களிலிருக்குந் திரு
க்குமாரனே செய்தார்; என்று சொல்லித்தொழுது மீளவு மிக்கயேலென்னும்
வானவர் சொல்லுவார்: முன்சொன்ன யூதர்கள் சிறைமீண்டு போனபின்பு
மறுபடியு மவ்வரசன்மேகத்தினின்று முழங்கிவிழுமிடிபோல ஆர்ப்பரித்துச்சீக்
கிரமாக இரதங்களுந், கஜங்களுந், துரகங்களும் நடத்துகவென்று சொல்லி,
எண்ணப்படாத வீரர் கடல்சூழ்ந்துவர, அந்த யூதர்களைமறுத் தமைகொள்
ளும்படி யம்பினும் விரைவாகத் தொடர்ந்துபோய்த் திசையெல்லாம் பற்றியெ
ரியும் ஆங்காரத்துடனேக்கிப், புலியினுங்கொடிதாகச்சினந்து கொலைசெய்யும்
ஆண்சிங்கம்போல அந்தயூதர்படையை நெருங்கிவருகையில் சர்வவல்லபமு
ள்ள கடவுள் இருபடைக்குநடுவிலே மறைவாகவிரித்த திரைச்சீலைபோல இடி
க்கும் கரியமேகத்தை யனுப்பி வழியையடைத்தபோது மாற்றார்படை பின்
தொடர்ந்ததினாலும், கடல்முன்னே நெருங்கியதினாலும் நடுவேநின்ற யூதர்படை

கனெல்லாங் கலங்கி, ஏக்கங்கொண்டிருக்கையில், மோயீசன் தன்பிரம்பினால் சமுத்திரத்தை யடித்தவுடன் சமுத்திரத்தினலைகள் பிரிந்து, பளிங்குச்சுவர் போல இருபக்கத்திலு முயர்ந்துநின்றதால் யூதர்படைகள் நடுவாகக் கடல்விட்டவழியே புகுந்து களிகூர்ந்து போகும்நேரத்தில், வல்லமையுடையவர்க்குக் கோபமும், ஆசையுமிகும்போது தங்களுக்குவருங் கேடுகளையறியாதிருப்பது போலப் பாபமுங், கோபமுமிகுந்தமையால் மயக்கங்கொண்டுவருங் கேடறியாத கொடியமன்னவன் அவர்கள் கடல்வழியாய்ப் போனதைக்கண்டு உள்ளத்தில் வெகுண்டுசினந்து அந்த வழியாகவே தானுந் தன்படையோடு நடுக்கடலிலே சேர்ந்தான்.

கடலையொத்த அக்கச்சத்துராதிகள்படை நடுக்கடலில்சேர்ந்தபோது நம்துமையாளும் பரமநாதனின்கட்டளையினால் அந்தக்கடலின்மேல் ஒருவானவன் அரூபியாய் வந்துநின்று குற்றம்நிறைந்த கடலையொத்த அந்த மாற்றார் படையெல்லாம் வருந்தியொழியச் சங்கரிக்குந்தருணத்தில் நிகரில்லாத அந்தப்படைவீரர்கள் கவசத்தோடு உரமற்றுப்போகவும், வில்லிலேபூட்டிய சரமற்று நோகவுஞ், சமானமில்லாமற் பொருதுங்கரமற்று வேகவுங், கால்களோடுகவிழ்ந்துவிழுஞ் சிரமற்றுச்சாகவும் அடிபட்டுத், தங்கள்மேலெதிர்த்துப் போர்தொடுத்தவ ரின்னாரெனவறியாமல் கையிலெடுத்த வம்புகளுந், தூணியோடு அதிலுள்ள அம்புகளும், வேலுஞ், சக்கராயுதமும், பெரியமழுவும், நீண்ட கேடகமும், வாளுந், தண்டாயுதமும், நாணியோடு கோபித்த வில்லின்சாலுமாகிய இவையெல்லாம் அற்றொழியும்படி யிறக்கவும், அச்சின்றிச் சிலதேர் திரியவும், உருளையின்றிச் சிலதேர்தெரியவுங், குதித்துப்பாயுங் குதிரைக ளின்றிச் சிலதேர் முரியவும், பாகரின்றிச் சிலதேர் நெரியவும், பொற்கொடிஞ்சியின்றிச் சிலதேர் விரியவும், உயர்வாகக்கட்டிய கொடியின்றிச் சிலதேர் சரியவும், பொற்பரப்பின்றிச் சிலதேர் எரியவுமாகிய இப்படிப் பல இரதங்கள் அம்சப்படவும், மீளவு மவ்வானவன் எய்த ஓரம்பினால் அந்தப்பகைவர் கூட்டங்களிற் பலர் தம்முட்பிரிந்தும், எரிந்தும், இரத்தத்தைச்சிந்தி மடியவும், பலர் முரிந்தும், கியிர்ந்துநின்ற அலைகளிற்புகுந்தும் ஒழியவும், பலர் சினந்தும், வருநதியெரிந்துங், கரிந்தும், அங்கங்கே முடியவும், வலப்புறமும், இடப்புறமுமாக நெருங்கிவிழும் அஸ்திரங்க ளனேகங்கோடியாயினும், ஒன்றுந்தவறாமல ஊடுருவிப் பாய்ந்துகொல்லவும், அந்தப் பாணங்களி லொருபாணத்தையாகிலும் மறிப்பாரில்லாதிருக்கவும், மீளவும் ஒவ்வொருசரம் ஆருயிர்களை முடிவின்றிக்கொல்லவும், மேலும் அவ்வானவன்விட்ட ஓரக்கினிபாணத்தினால் தேர்களும், யானைகளுங், குதிரைகளும், வேல், தண்டாயுதம், வில், அம்பு, வாள், கேடகம், தூணி, முதலிய ஆயுதங்களுங், குடைகளுங், கொடிகளும், வெந்து நீறொழியவும், விரித்தபாயறுந்து கடலிலே கவிழ்ந்துவிழு மரக்கலம் போல மேலேகட்டிய கொடியறுந்து கடலுக்குள் தேர்கள்முழுகவுஞ், சூரியனைக்கண்ட இருள் கடலிற்புகுந்ததுபோல மதயானைகள் விழுந்து கடலிலே யமிழ்ந்தவும், வான்முட்டியுயர்ந்த இரதங்களினின்ற அரசர்களின்தலைகள் வெட்டுண்டதினால் அவற்றிற்சூடிய முடிகளும், மார்புகள் பிளந்ததினால் அவற்றிலணிந்த பலமணிகளுங், கால்களுங், கைகளுமறுந்ததினால் அவற்றிற்புனைந்த ஆபரணங்களும் உலகமுடிவில்விழும் வானநக்ஷத்திரங்களைப்போல விழவும், மேலேமேகமுங், பக்கத்திலேகடலும், நடுவேவாகனங்களும், யானைகளுங், குதிரைகளும், முரசும், பறைகளு முழங்கிய முழக்கமுஞ், சிதைவாரொலியுங், கோபிப்பாரொலியும், இறப்பாரொலியுங் கூடிமயங்கி இவ்வுலகில நிகரில்லாத ஒலியாயிருக்கவும், யானைகளுங், குதிரைகளு மழியவும், உருளைகள் வேறுபட்டுத் தேர்களொழியவும், உடல்களைக் கூறுகூறாய்த் துண்டித்ததினால் மற்ற

சேனைசமுத்திரங்கள் மடிந்ததாலுஞ், செந்நீராறுகப் பெருகியோடிப், பக்கத்துநி ன்ற கடலுங்கிழிய அதிர்ந்து அதனோடு கலந்துநின்றமையால், அந்தத் தெளிந்த க்கடலுஞ் சிவந்தநிறமாகி, இந்தக்கதையைப்பிற்காலத்தில்யாருமறியும்படி யிந்நா ள்வரையிலுஞ் செங்கடலெனப் பெயர்பெற்று வழங்கவும், எந்தப்பக்கத்திலும் பலவகைஆயுதங்கள் வஞ்சகராகிய இவர்கள் மேல்நெருங்கவும், மழைத்துளியி லுமடர்ந்த பாணங்கள்விழவும், உயிரைப்பறிக்கும் யமனையொத்த கொடியபடை கள் விழும்போது அவற்றையும், அவற்றையெய்த கையையுங்காணமல், மான் கூட்டம்போல உள்ளத்தி லஞ்சிச் சொல்லுவார்கள் : நம்மைச் சிதறடித்துக் கொல்பவர் அதோமுன்னேநிற்பாரென்பார் ; பின்னிற்பாரென்பார் ; பக்கத் தில்நிற்பாரென்பார் ; கடலின்மே லெமக்கு நேர்நிற்பாரென்பார் ; இவரல்ல எமக்கு நேர்நிற்பாரென்பார் ; அவரானலும் வினைப் படைகளைவிட்டுத், தங் களைக்கொல்லுங் கையைக்குறித்துந் தெரிந்துகொள்ள மாட்டாமல் பாவிகளா கிய அவர்கள் கண்கள்வழியாக அக்கினிசுவாலித்துவிடுங் கடுங்கோபத்தோடு தங்கள் பகையின்விளைவாகப்போம்படி வானமாரியைப்போல அம்புமாரியை வருஷிக்க, அந்தப்பாணங்களெல்லா மேலேபறந்துபோய், மீளவுங் கீழேவந்து இவர்கள் மார்பை ஊடுருவிக் கொன்றபோது, இறந்தவர்களொழிய மீதியா யிருந்தவர்க ளிவையாவற்றையுங்கண்டு, வானுலகமன்னவனாகிய கடவுளோடு எதிர்த்து யுத்தஞ்செய்யவல்லவர் யாவரென்று நடுங்கித், துன்பமிகுதியா னாமுங்கெட்டோமேயென்று கலங்கி, யானைமேலேயிருந்த அரசனோடு தா னைகளும் புறங்கொடுத்தோடத் தொடங்குகையில், முன்னேசென்ற யூதர்கள் அந்தச்செங்கடலின் மறுகரையின்மேலேறினார்கள்.

இப்படி யூதர்கள் மறுகரையி லேறினவுடனே மகாகோபத்தைக் கொ ண்ட கடவுளின்கட்டளையால் மோயீசன் பிரம்பை மீளவுங்கடலின்மீது நீட் டியபோது முன்னிருபக்கத்திலுஞ் சுவர்களைப்போலநின்ற அலைகள் திரண்ட மலையின்மேல் மலைவிழுந்தாற்போலவிழுந்து, புறங்கொடுத்தோடின சத்துராதி கள் மேல்கவிழ்ந்து, மேலேதிரளாய் நுரைகளெழும்பும்படிசெய்ததால், உலக முடியுங் கடையுகத்திலே கடல்குடைந்து முழுங்கிப், பொங்குவதுபோல மத யானைகளுங், குதிரைகளும், இரதங்களுங், காலாட்களுமாகிய நால்வகைச்சே னைகளும், போர்க்களங்களைக்கடந்து மிகுந்தவெற்றியால் தனது படைகளின் வல்லமையே வல்லமையென்றெண்ணி, யாங்காரத்திலுயர்ந்து எவர்முனுந் தெளியாத நெஞ்சத்தில் உபமானமெல்லாங்கடந்த திறமுடையகடவுளைச் சற் றுமதியாதிருந்த கொடியமன்னவனும் ஒருகணப்பொழுதிலே குடையப்பட்டு, மேலுங்கீழுமாகத் தழுவிக்கவிழ்ந்த அலைகளோடு அலைப்பட்டு, இவ்வுலகிலெ நிகரில்லாத முழக்கத்தோடு அந்தக்கடலிலே மடிந்திறக்கும்படி, ஆயிரம்யானை களும், நூறாயிரங்குதிரைகளும், ஈராயிரத்தெழுநூறு இரதங்களும், அக்கினி யைக்கொப்பளிக்கும் வேலுடைய பலகோடிவீரர்களும், ஒருகணப்பொழு தில் கடலினலைகளைப் பெரியவலையாகவிட்டுக் கடவுள் ஒருப்பட்டுவாரிக்கொண் டபொழுது மிக்கவல்லமையுடைய நாதன் திறத்தினுல் கரைமேல் நின்ற யூதர்கள் கொடிஞ்சியில்லாத தேர்கள் தீவுகளைப்போலத் தோன்றி மிதக்க வுங், குடைகளுங், கொடிகளும், வெண்சாமரைகளும் நுரையைப்போல மிதக்கவும், மதயானைகளுங், குதிரைகளு மகரமீன்களைப்போல மிதக்கவும், இருளைப்போலக் கறுத்தவுடலையுடைய பகைவர் கூட்டங்கூட்டமாய்த் தி ரண்டு ஒருவனையொருவன் கட்டிக்கொண்டு பிரியாமலுங், கரங்களிற் பிடித்த கதிர்வாளைவிடாமலுமிருந்து கடலின்மேல் மின்னி, மேய்ந்துதிரியு மேகங்களைப் போல தளைக்கப்பட்டு மிதக்கவுங்கண்டுசொல்லுவார் : இதோ ஒருவன்மனத் திற்புகுந்த வினையவனை யழித்துக்கொடுக்கும் பயனிது பாருங்க ளென்பார் ;

பரமநாதன் கருணைபுரிந்து காக்காவிட்டால், குதிரைப்படையுங், குருதிகளை யுமிழ்ந்த கொம்புடைய யானைப்படையுங், காற்றிலுமுந்திச்செல்லுந் தேர்ப்படையுங், காலாட்படையு மற்றயாவுங்காக்குமோ? ஆதலால் ஆண்டவனி னுதரவில்லாதபடி செய்யும்பாலங் கருமவிளைவிலதாமென்பார்; நல்வினையில்லாவிடில் அமுதமுண்டாலும் நஞ்சாகும், தீவினையில்லாவிடில் நஞ்சுண்டாலுமமிர்தமாகும், ஒருவனுக்குத் தன்தீவினை போர்புரிந்து உதைத்துத்தள்ளுங்காலத்தில் நிற்பாரில்லை, அவ்வினையில்லாதவனைப் பகைத்தாலும் அவனைக் கெடுக்க வலியதொன் றில்லையென்பார். பின்பு இப்படிச் சொல்லின் தன்மை கடந்த முறையோடு சிறைதீர்ந்த யூதர்கள் அளவின்றிக் கடவுளைத் தொழுது மகிழ்ந்து, அப்புறஞ்சென்று பகலிலே ஒருமேகமும், இரவிலே ஒரு அக்கினித்தூணும், முன்னே வழிகாட்டிச்செல்லத் தாங்களதன்பின்னேபோயிருந்த அழலுள்ள பாலைநிலத்திற் சேர்ந்தபோது, அவ்விடத்தினழலைப் பொறுக்கமாட்டாமலும், அருந்துவதற்கு நீரில்லாமலும் வருந்துகையில், கோத்தமாலைபோலக் கருணையும், நீதியும்பிரியாமல் நிறைந்திருக்குந் தற்பரனின் கட்டளையால மோயீசன்முன்சொன்ன பிரம்பினால் பக்கத்திலிருந்த கருங்கல்லையடித்தபோது, அந்தக்கல்லினின்று புசிக்கத்தக்க ஜலம்புறப்பட்டுப், பாய்ந்தோடியவர்களப்பாற் பெயர்ந்துபோகையிலுங் கூடவேதொடர்ந்து வந்ததினால் நீரில்லாத இடமெல்லாங் குறையில்லாமல் ஜலத்தையினிதாய்ப் புசித்தார்கள். ஆனதால அவற்றையெல்லாம் ஒளித்தாற்போல இவ்வழியாக எசித்துநாட்டிற்குப்போகும் இந்தத்திருக்குமாரன்றுணைசெய்தார்; இவர்பயந்து அங்கேபோகிறாரோ? இல்லையோ? என்று அந்த எசித்தார்களே கன்றுயுமிவாரென்று மிக்கயேலென்னும் வானவனுரைத்து, மீளவுஞ்சொல்லத்தொடங்குவார்.

கட்டளையுடுத்த பூவுலகெல்லாங்கேட்டஞ்சிக்கலங்க முற்கூறியவண்ணம் எசித்தார் கொடுமையோடு தீவினைசெய்தகாலத்தி லவர்கள் செல்வமெல்லா மழியும்படி பலவருத்தங்களைப்புரிந்த பரமநாதன் அக்காலத்திற்கு முன்காலத்தில் அந்த எசித்துநாட்டார் தாயின்கருணைபோலச் சகோபென்பவனை நேசித்து, மழையில்லாமல் பூர்வத்தி லகன்றபூமியெங்கும் பஞ்சத்தினால் பசிபரந்து, உயிர்களையுண்ணும்பொழுது அவருடைய மரபினர் யாவரும் அன்பினவுடனே யவர்களுக்கு மிகுந்த ஆதரவைச்செய்து, தாங்கள்வேதத்தை யறியாதவராயினும், வேதத்தையறிந்த அவர்களுக்குத் துன்பம்வந்ததென் றிரக்கம்புரிந்து, குறையில்லாமல் விளையும் ஒருசெல்வநாட்டையுந்தந்து, எல்லாநன்மைகளையுந் திரளாய்க் கொடுத்ததல்லாமல அந்நாளிலரசுசெய்த மன்னவனும், யானைமுதற் பலவுடைமைகளையுந் தன்செங்கோல்முதலாகிய மற்றெவையுந்தந்து காப்பாற்றினதினால அந்தச் சகோபுவின் மகனாகிய யூதாவன்முதல மற்ற அவர்களினத்தாரும் அளவின்றி யந்நாட்டில்வாழ்ந்திருக்கையில் முன்சொன்ன சகோபுவின் குலத்தில் இந்தத்தேவகுமாரன் உலகத்தையிரக்ஷிக்க மனிதனாயவதரிப்பாரென்றதினால சகோபுவின்மரபினருக்கு அவர்கள்செய்தஉதவிக்குக் கைம்மாறாகும்படி யப்பொழுதுதானே வினையாலிருளைக்கொண்ட எசித்தார்க்குஞானவொளியைத்தரும்படி தான்மனிதனாகியபின் அங்கேசென்று மெய்யானவேதத்தையவர்களுக்கு அருளத் திருவுளமானதா லிதையறிந்த வேதநூலோர் அக்காலத்திற்குமுன்னே வரும்பொருளையறிவித்து, * இந்தத்திருக்குமாரன் எசித்திற்குப்போய் அருளைப்பொழியுமேகம்போலத்தோன்றுவாரென்றெழுதிவைத்ததுபோலவேயந்த எசித்தார்க்குச்செய்யநினைத்த கருணையைஒளித்துச்செய்யும்படி நல்லசமயமிதுவென்றுஎண்ணிக்கொடியவரசன்கொல்லும்படிவைத்தபகையினிமித்தம்போகிறதென்றுபெயரிட்டு,நினைத்ததைமுடிக்கக்கொண்ட அமுதமானகருத்திதுதான்.

* இசையா. 11-ம். அதிகாரம்.

என்றுமிக்கயேலென்னும் வானவன்சொல்லித் திருக்குமாரனின் இரண்டுமலர்
ப்பாதங்களையுந் தலைமேலவைத்துவணங்கினர். இப்படிவணங்கிய வானவன்சொ
ன்ன சொற்களைப் பொழிந்ததேன்மழையாகக்கொண்டு, அலைவில்லாமற் பெ
ருகியோடிய பேரின்பத்தின்வெள்ளத்தில் முழுகிச், சத்தியவேத நூலானது
மலராகப்பூத்த பூங்கொடிபுயர்த்திய சூசைமாமுனிகள் உள்ளத்தைக்காய்ந்து
வாட்டியதுன்பமற்று வுள்ளத்திற்குளித்தாடிச் சொல்லுவார் : தன்னுயிரைப்
பார்க்கிலு மற்ற மன்னுயிர்களைக் காத்திரக்ஷிக்குங் கருணையுள்ள பரமநாதன்
தன்னுயிரைக் காப்பாற்ற வேண்டுமென்பதுபோல எசித்திற்கு ஒளித்தபாவ
னையாய்ச்சென்று அங்குள்ளவுயிர்களைக் காக்கவோ ? இத்துன்பங்களைக்கொ
ண்டாரென்பார் ; பகைவர்காடு கருணையடைய பரமநாதன் தெரிந்தெடுத்த
இந்தச்சூத்திரத்தை வானுலகோரறிவாரொழிய இவ்வுலகில்யாவரறிவார். என்று,
ரைத்துப் பின்னும் பேரின்பமிகுதியால் அறிவுடையார் யாவரும்வணக்கும்
அந்தத்தேவகுமாரனின் திருவடிகளையிறைஞ்சிப் பாடத்தொடங்குவார்.

தன்னைவேண்டி யொளித்தவனைப்போலச்சென்று பிறர்கொண்டவினைக
ளைத்தீர்க்கத் தான்துயரங்கொண்டு மெலிந்து அழுவாரியார் ? அத்தன்மையு
டையார் யாரென்றால், என்னையிரக்ஷிக்க மனிதனான நீயேயென்பார் ; பறவை
களாகாயத்திற் பறந்துசென்ற வழியுங், கடலைக்கிழிக்கப்பல்சென்ற வழியும்
அறிந்தாலு மனிதரிவையெல்லாங்கடந்து அறியப்படாம லோங்கிய குணத்
தையுடையவர் யார் ? அந்தக்குணத்தையுடையார் யாரென்றால், வானுலகவர
சனுயிருந்தும் எங்களுக்காக இவ்வுலகில் முட்கள்நிறைந்தவழியில்நடந்து துன்
பங்களுட் குளித்தழுகின்ற நீதானேயென்பார் ; கோபமலர்ந்தபோது உலகமெ
ல்லாம் வெந்தொழியும்படி யெரிக்கும் நேத்திரமும், கருணையைக்கொண்டு
நன்மையைத்தருங்காலத்தில் விருப்பத்தின்மேலுங்கொடுக்கு முயர்ந்தஅருளு
முடையவர்யார் ? நீதானல்லவோ ? நாங்களாராய்ந்துபார்த்தாலும் உன்னியற்
கையின்தன்மையையாரறிவார் ? எவர்க்கும் உயிராகின்ற நாதனே ! என்பார்.

இப்படிச் சூசைமாமுனிகள் பாடி யதிசயித்து, உள்ளத்திற்பெருகிய இன்
பக்கடலிலாடித், தேவகுமாரனின்மலர்ப்பாதத்தைத் தானழுதகண்ணீரால் கழு
வித்தொழுது தனதுதிருச்சிரசிலசூடித், தானுண்ட இனியசுவைகளைவிடாதிரு
க்கையில் காபிரியேலென்னும் வானவன் தேவகுழந்தையைவணங்கி, அந்தச்
சூசைமாமுனிகளுக்கு இன்பமிகும்படி சொல்லவாரம்பித்து அவதரித்தெடுத்த
திருமேனியால் குழந்தையாய்த்தோன்றிய இந்தத்திருக்குமாரன் ஜலமெல்லா
ங் கடலுக்குள் ளடங்குவதுபோல அகந்தஞான முதலெல்லா நற்குணங்க
ளையுமுடையவராய் முன்னுளிலே காட்டிய தனதுநீதியை மிக்கயேலென்னும்
வானவன்சொல்லியபடி எசிதநாடுமாத்திரமறியும்; அல்லாமலும் இவர்திறத்தி
னளவாக வுயர்ந்ததன்னீதியைக்காட்டக் கோபித்தகாலத்தில், இப்பூவுலகத்தார்
யாவருமறிந்த சரித்திரத்தைச் சொல்லுகிறேன் கேளுமென்று சொல்லுவார்:
அளவிறந்த வல்லபமுடைய இந்தத்திருக்குமாரன் சிவந்தவானத்தையும், வா
னத்தினக்ஷத்திரங்களையுஞ், சந்திர சூரியனையும், அலைகளோடு கடலையுங், கட
லிலுள்ள பவளமுத்துக்களையும், அழகியபூமியையும், பூமியிலுள்ள நதிகளை
யும், மலைகளையும், குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும்
ஐந்துநிலத்தையும், மற்றுள்ள வுலகங்கள் யாவையுஞ், செல்வ மணிவகைக
ளும், நீர்ப்பூ, கொடிப்பூ, கோட்டுப்பூ முதலிய மலர்களும், நிறைந்த பலபயிர்
வகையுங், கனிவர்க்கமும், இனியதேன்பொழியும் பலவகையும், அழகியவண்
ணங்களும், இனியவோசைகளும், நான் விரித்துச்சொல்லக்கூடாத திரளாய்க்கூடி
யபூவுலகின் மற்றச்செல்வங்களையும் வேறுவேறாக அங்கங்கே படைத்துப்ப
ரப்பியபின்பு மண்ணிடத்தில் நடந்து ஊர்ந்துவாழும் பலஉயிரினங்களையும், வி

ண்ணிடத்திற் பறக்கும் பறவையினத்தையும், நீரிடத்திலவாழும் மீன்களின் பலவினங்களையும், அளவின்றியமைத்து முன்சொன்ன அந்த அற்பவுயிர்களுக்கெல்லாம் அரசனாகும்படி வானவரைப்போலப் புறத்திறத்தால் கட்டப்படாமல் தோன்றிய பொருளை வேண்டும் வேண்டாமென்னுமபடி, வல்லகருத்தை யுடைய உயிரொடு நிகரில்லாத அழகுடைய சரீரமாகிய அழகிய மதிலையெழுதிவைத்துச், சோர்வில்லாமல் மனுகுலத்தை யுண்டாக்கி, முழுதும்படித்துணர்ந்தவரும் அறிந்துசொல்லக்கூடாமல வருத்தும்படியாகிய சொல்லிலடங்காத செல்வங்களைச்சிருஷ்டித்துப் பூவுலகில்வைத்தபின்பு மனிதர்தந்த அருமையை யுணராமல் தீமையை யநுபவிக்கும்படி யாசைவைத்துச்செய்த பாவங்களினால் பூவுலகிலுள்ளதெல்லாம் அழுக்கடைந்ததென்று கடவுள் கோபித்து யாவற்றையு மழித்ததைச் சொல்லுகிறேனென்று மீளவுஞ் சொல்லத் தொடங்குவார்.

சூரியன்கதிரால் விளக்கப்பட்ட இந்தப்பூவுலகத்தை யுண்டாக்கி ஆயிரத்தறுநூற்றைம்பத்தாறு வருஷமானவுடனே மனிதர்கள் வேதாகமத்தில் விதித்த நன்னெறியைவிட்டு, நிறைதவிர்ந்த காமக்கடலி லமிழ்ந்தித், தேவாராதனையைக் கைநெகிழ்ந்து, செய்த அளவில்லாத பாவங்களைப் பொறுக்கமாட்டாமல் கடவுள் தனதுகோபத்தைக் காட்டவும், பூவுலகஅழுக்கைத் துடைக்கவும் நினைத்துச்செய்த கட்டளையால், பூவுலகம் அருநிகமிங்கும்படி கரியமேகங்களாகாயமெங்கும் பரந்து, விழித்தகண்களைப் பிளந்தாற்போலக் கொடியதாய் மின்னிமுழங்கி, பிடிகளிடித்துவிழக் கையாலள்ளத்தக்க இருளுலகமெல்லா மூடியபோது மலையிலிருந்துவரும் நதிபோல மழைத்தாரைகள்விழுந்து, அரைநாழிகைக்குள்ளே அகன்றபூமியின் நதிகளுந், தடாகங்களும் நிறையப்பெய்ததினால் கப்பலோடுகப்பல் மோதியதுபோலப் பதினாறுதிசைகளிலுமுள்ள நதிகள் கரைபுரண்டு, ஒன்றோடொன்றுமோதிப், பருந்துபறக்குந் தன்மைபோல விரைவாக வெள்ளம் பூமியெங்குமூடவுங், கரையின்மேற் பொங்கிய கடல்முழக்கமும், மலையினுமுயர்ந்த அலைகள் மேகமண்டலமட்டும் பாய்ந்ததினாலாகிய நிகரில்லாத முழக்கமும், மழைதிரளாய்ப் பெய்யுமுழக்கமும், இடிகளிடித்து விழுமுழக்கமும், நாலுதிக்கிலுங் காற்றுகளடித்துவீசுமுழக்கமும், பயந்தவர் கூகூவென் றலறியழு முழக்கமும், பெரியமாளிகைகள் தகர்ந்துவிழு முழக்கமுங் கூடி மயங்கவும், எல்லாவற்றையுங் கெடுக்கும் வெள்ளத்தின் பெருக்கம் விரைவா அதிகரிக்கவுங் கண்டு சிலருயர்ந்த மாளிகையின்மேலுஞ், சிலர் பெரியவிருக்ஷங்களின்மேலுஞ், சிலர் மலைகளினுச்சியின்மீதுஞ் சென்று கூடிநின்று வெகுகாலமாய்த் தாங்கள் வருந்திச்சம்பாதித்த செல்வங்களையுங், குடைகளுங், கொடிகளுங், கட்டில்களுந், தண்டிகைகளும், மெத்தைகளும், பட்டாடையின் கட்டுகளுங், குஞ்சங்களும், ஆலவட்டங்களும், இவைமுதலிய மற்றயாவையும் பூவுலகமெல்லாங் கைக்கொண்டதுபோல எங்கும் பரந்தவெள்ளத்தோடு போகக்காண்பார். மேட்டினமேலே நின்றவர்களில் சிலர் புதுக்கலியாணஞ்செய்த புருஷனைத்தேடுவார். சிலர் தாயையுந், தந்தையையும் ஒருப்படக்காணமல் வாடுவார்; சிலர் தங்கள் செல்வத்திற்குத் துணையாயிருந்த சகோதரரைக்காணும்படி அங்குமிங்குமோடுவார், சிலர் தங்கள் குழந்தைகளை நினைத்து துயரத்திலாடுவார்; கடைசியா யாவருந் தண்ணீரில் மிதக்கக்காண்பார். இதைக்கண்டவர்கள் தங்கள்கண்களை மூடிப்புதைத்துக், கலங்கியேங்கி, மனத்திற்சிதைந்து, துன்பங்களையுட்கொண்டு, உட்கொண்ட துயரைக் கண்மாரியாகப்பொழிந்தாற்போல வழும்போது அம்பினும் விரைவாகவரும் வெள்ளம் மேட்டினமேரிலும் புரண்டுவந்ததினால அங்கிருந்தவ ரெல்லாருஞ் சாவார்.

ஆகையாலுயர்ந்தவல்லமைக்கு அளவாக நீதியுடையநாதன் கோபித்தகாலத்தில் மீண்டுயிரைக்காக்கும்படி, பெரும்படையின் காவலாக நல்வினையையுடையவர்களுக்கல்லாமல் மற்றவர்க்குக் கடலும், மதிலுங், காடும், மலையுங், காவலாகாதென்பதினால் பகலும், இரவுமாக ஓயாமல் பெய்தமழையினால் சந்திரமண்டலமட்டு மெட்டிய சிகரத்தோடுகூடிய மாளிகைகளும், மதிலாற்சூழப்பட்ட கோட்டைகளும் நில்லாமலுந், தேடியகப்பல்களில் கவிழ்ந்தழுந்தாதது ஒன்றுமில்லாமலும், ஒருயிர்தவறாமலும் யாவுமழிய அன்றே பூவுலகெல்லாமழிந்தமையால் சிலர் ஆண்டவனைப்பழித்துக் காமத்தீபெரிந்ததால் அன்று இடிபட்டு எரிவார்; சிலர் தேவநீதிமுறையையெண்ணாமல் நிந்தித்ததால் நீந்தி நீந்தி வெள்ளத்தி லமிழ்ந்திறிவார்; சிலர் உயிர்க்குணவாகிய நல்லுணவுகளைக் கொள்ளாமலிருந்ததால பசியினால்வருந்திச் செத்துத்திரிவார்; சிலர் தேவாலயமுஞ், சிறந்தமாளிகையுந் தகர்ந்துவிழுவதால் அதன்கீழகப்பட்டிறந்து கெடுவார்; இப்படி நாற்பதுநாளாய் இடித்துப் பெருமழையூற்றாகப் பெய்ததினால் பூவுலகிலுண்டான வெள்ளமஉயர்ந்தமலைகளினுச்சியின்மேலே பதினைந்துமுழ முயரமாகின்று பூமியெல்லாம் ஓரேவெள்ளமாக இருந்தமையால் அதில் பெட்டையானையைத்தழுவி நீந்துகின்ற பெரியமத ஆண்யானையைக்கண்டு மலையென்றெண்ணி நீந்திச் சோர்ந்துபோன முயலும், மானுங், காட்டுப்பன்றியும், மரையுங், கூரமும் இதுமுதலாகிய மற்றமிருகமும், அந்தயானையின்பேரிலேறி, நீந்திப்போனபின்பு அடியிற்பலனில்லாத வாழ்க்கையை நம்பினவர் அழிந்துபோம்வாழ்க்கையோடு தாங்களுமழிந்துபோவதுபோல யானைசோர்ந்து ஜலத்திலமுக்கியவுடனதைத்தொடர்ந்துசென்ற மிருகமனைத்தும் இறந்தொழியவும், பயமிகுதியால் பகைதோன்றாமல் புலியின்மேலே பசுவும், சிங்கத்தின்மேலே ஆடும், யாளியின்மேலே கலைமானுமாக ஏறி மிருகங்களெல்லாம் மிதந்திறந்ததால் மீனினங்கள் விருந்தினையுண்ணவும், மயிலுங், கிளியும், புறாவும், நாகணவாய்ப்பறவையும், அன்னமும், காடையும், நாரையுங், குயிலுங், காக்கையுங், கவுதாரியும், ஆந்தையுங், கொக்கும், இதுமுதலிய மற்றப் பறவைகளும், ஆகாயத்திற் பறப்பனவாயினும் நாற்பதுநாளும் பெய்த மழைத்திரள் விடாமையால் உண்ணாமலும் உறங்காமலு மடியவுங், காற்றின்முன்னே புகையுஞ், சூரியன்முன்னே இருளும், நெருப்பின்முன்னே பஞ்சும், மெய்யின்முன்னே பொய்யும், புலியின்முன்னே மானும், நில்லாமலழிவதுபோலக் கடவுள் கோபத்தின்முன்னே எதிர்க்கும்வல்லவரொருவருமில்லாமல் உயிர்களெல்லாமிறந்தொழிந்தபோது வேதமே வேலியாகக்கொண்டு, அடக்கத்தையுடையவலத்தால்வளருந் தருமசீலமாகுமிமையுடைய நோவனென்பவரும், அவருடைய குமாரர்களாகிய சேம், காம், யாப்புமாகிய இந்நால்வருமிவர்களுடைய தேவிமார் நால்வருமாக எட்டுப்பேருங் கடவுளின்சூக்ஷத்தால் செய்யப்பட்ட ஒருமரக்கலத்திலேறி, அதிலே பூமியிற்சஞ்சரிக்கு மிருகவகைகளும், மற்ற உயிர்வகைகளும், ஆகாயத்தின் பறவை வகைகளும், வகைக்குவகை பலசோடிகளாக ஏற்றிக்கொண்டு கப்பல்செய்த சூக்ஷத்தால் மழைத்துளியொன்றும் உள்ளே நுழையாமலுங் கவிழாமலுமிருக்கப் பரமநாதனே யதற்கு மீகாமனாயிருந்து நடத்த அந்தவெள்ளத்தின்மீது மிதந்து துன்பமொன்றுமில்லாம லிருந்து அழகிய அர்மேனிய நாட்டிலுள்ள உயர்ந்த பர்வதத்தினுச்சியிலே அந்தக் கப்பல்தங்கினபோது யாவருமிறங்கின பிறகு கடவுள் பிற்காலத்திலிப்படிக் கெடுதியாக மழைபெய்யாதபடி செய்வேனென்று அவர்களுக்கு ஆணையிட்டுச் சொல்லி, அதற்கடையாளமாக மழைபெய்யும்பொழுது மேகங்களிலணியைப்போல வானவில்லைப்பரப்பித் தோற்றுவிப்பேனென்று வார்த்தைப்பாடு கொடுத்தார். அப்படிச்சோதியாக அநந்த ஞானமுதற் சகலகுணங்களை நிறை

வாகக்கொண்டவராய்க் கோபத்தின்வழியாக முற்கூறியபிரளயத்தை வரவிட்டுப் பூவுலகமஞ்சிக்கெடும்படி நீதிவடிவாக அந்நாளிலிருந்த கடவுள் இந்நாளில கருணையை மலராகவணிந்த சண்பகமரத்தினவடிவா யிங்கே இருக்குமாரனுயிருக்குமிவர்தானே, என்று பொற்கலத்தின்மேலமிர்தத்தை யேந்தித் தந்தாற்போலக் காபிரியேலென்னும் வானவர்வணங்கித், தன்சொல்லால் காட்டியசரிதையைத் திருச்செவிகளாலருந்திய சூசைமாமுனிகளுங், கந்நித்தாயாரும், அடைந்தபேரின்பத்தினால் திருத்தாயார் தனதுதிருக்கரங்களால் ஒளியின்வடிவாகவுந்திய திருமகனைநோக்கிப், பாடத்தொடங்குவாள்.

மயக்கத்தால்வந்த பாவங்களைக் கழுவும்படி முன்னாளிலே யளவில்லாமற் பொழிந்த மழையினால் கேடுகளை விலக்கி, இந்நாளில் அருளைப்பொழியு மடைமழையாக வந்திவ்விய இரத்தத்தைச்சிந்த அவதரித்த திருமகனே! அந்தக்கருணையைப்பற்றி யுனதுசெங்கமலத்திருவடிகளைவணங்குவோமென்பாள்; உனது கோபத்தின்வழியுங், கருணையின்வழியும், ஒருவராலறியப்படாமல் அறிவெல்லாங்கடந்த உயர்குணக் கடலே! அந்தத் தன்மையைப்பற்றிப் பொன்னால் விளங்கி யருளைத்தருமுனதுசேவடிகளை யிறைஞ்சுவோமென்பாள்; பூவுலகெல்லா மெலிந்தழிந்தநுசம்படி யந்நாளில் கோபித்தாய்; இந்நாளில் உலகமெலலாந் தனவினையைத்தீர்ந்து நல்லுயிரைப்பெறும்படி திருவுருவானாய்; உலகத்தை யிரக்ஷிக்க இத்தத்தன்மையாயவந்த பரமநாதனே! உன்வல்லமையை யுலகெல்லாமறியும்படிசெய்ய உனதுபூங்கழலைத் தொழுவோமென்பாள்.

இவ்வாறுகக் கந்நித்தாயா ரினியபாவின் தொடையாகப் பலவிதமாகத்துதித்திறைஞ்சி மகிழ்ந்துபின்னும் நவக்கிரகத்திலொன்றுபோலத் திருமுகமண்டலம் விளங்கிய தேவகுழந்தையைச் சூசைமாமுனிகளுங், கந்நித்தாயாருமாக ஏந்திக்கொண்டு நெடும்வழியெல்லாங் கடந்து சென்றபின்பு தெளிந்த ஒரு தடாகத்தைக்கண்டு கண்ட பொய்கைக்கரையின்மே லெழுந்தருளியிருந்து அளவில்லாமலும்,கிட்டேத்தரும விருக்ஷங்களில்லாமலுமிருக்கும் விசாலமானவொரிடத்தில பர்வதம்போலப்பக்கத்திலுயர்ந்திருக்குமொருவெண்மையாகிய சாம்பல்மேட்டைக் கண்டு மலர்க்கொடியுயர்த்திய சூசைமாமுனிகள் சூழ்ந்திருக்கும் வானவரை யழைத்து அந்தமேடென்னென்று கேட்டதற்கு இதைக்கேட்ட மிக்கயேலென்னும் வானவன் சொல்லுவார்: அவ்விடத்தில் பாவமிகுதியால் பூர்வத்தில் ஐந்துநகரங்களுக்குச சம்பவித்தசெய்தியானது இந்தத்திருக்குமாரனின் அளவிறந்தவல்லமையைக்காட்டும்; ஆகலால் அதைச்சொல்லுகிறேன் கேளுமென்று வணங்கி, மீளவும் அருகேவந்துநின்று சொல்லுவார்.

முன்னமே காபிரியேலென்னும் வானவனால் சொல்லப்பட்டபடியே உலகமெல்லாம் ஒரேவெள்ளமாகவந்த ஜலப்பிரளயத்தால் அழிந்து நானூற்றுப் பதினைந்து வருஷஞ் சென்றபிறகு பாவத்தினாற்சுங்கிய வுடலைக்கொண்டிருந்த சோதோம்நாட்டிலிருந்த ஐந்துநகரங்களும், வேதமுந், தவமுமில்லாமல் மயங்கிய நல்லகருமங்களழியவும், நிறையும், நிரையுமில்லாமல் நீதியொழியவும், முறையும், அளவுமில்லாமல் முறுகின்ற காமமுதிர்ந்து நிறையவும், நல்வினை செய்யுங் காவலொன்றுமில்லாமல பாவத்தால் சிறைபட்டிருந்தபடியால் அதை யொழித்துத் தீர்க்கும்படி கோடாகோடி முடிகளைச் சூழ்ந்து கிரணத்தைப்பரப்புந் தனிமுதலாகியஇந்தத்தேவகுமாரனே அந்நாளில்சினந்துஇடிகள்மேலிடிகள் நெருப்போடு அனேகமாகவிழவும், எரியும்வானமெல்லாம் எதிராகமுழங்கிக் கொடியதாய்ச் சீறும்படி அளவில்லாதபறைகள் முழங்கினாற்போல அக்கினியைச் சூலாகக்கொண்ட அகோரமேகங்கள் திரண்டு கோடாகோடி பசாசுக்கள் திரியு மந்தநாட்டை மூடிப் பொழியவுஞ், சொன்னதைச் சொன்னதுபோலவுண்டாக்குந் திருவாயைத்திறந்து கடவுள் கோபித்திட்ட சாபம்போல

மேகங்கள் எரியுந் தங்கள்வாயைப்பிளந்து, கொப்பளிக்க எரிந்துவிழுந்த இடி
களடிபட்டதினுல் மேகமண்டலமட்டுமுயர்ந்த சிகரமாளிகைகள் தகர்ந்துவிழு
மோசையினுல் உலகமெல்லாமதிர்ந்து மெலியவும், மேகத்தினின்றுபொழி
யுந் தீயும், அந்தநாட்டாருடைய காமமுதிர்ந்து விரகநோயா லவர்கள் மனத்
தினின்றெழுந்த தீயும், பயமுங், கோபமும, வருத்தமுமுதிர்ந்து உருகினவ
ருடைய கண்களிடத்திற் கிளம்புந் தீயும், இவையாவும் ஆகாயத்தை மூடியெ
ழும்பவும், அதனுல் மேகங்கள் வேகவும், நக்ஷத்திரங்கள் வேகவும், வானமும்
வேகவும, இடிகளவேகவுஞ், சூரியனும்வெந்தஞ்சி மேகத்துள்மறைந் தொளி
க்கவும, அதைநினைத்த மனங்கள்வேகவும், அதைக்கண்ட கண்கள் வேகவும்,
வேகுதென்றுசொன்ன வாயும்வேகவும், அலைகள்வேகவும், அலைகொண்டநதி
கள்வெந்து கடலிற்பாய்தலினுல் கடலும்பயந்து அப்புறம்போகவும், எட்டுத்
திசைகளிலும் பரந்து எவையுங்கடுங்கும்படி யடித்தகாற்றோடு எரிந்துவிழுங்
கெந்தகநெருப்பாகப்பெய்த அக்கினிமழையால மற்றயாவும் வெந்துபோருந
துன்பங்கருவினுலே அன்றுகாமத்தீயிலேவெந்தபாவிகளாகிய அவர்களிலசிலர்
நெருங்கிவிழு மிடிகள்பட்டு அழிவார்; சிலர் பயந்து உயர்ந்தமாளிகையிலிருந்
து தாண்டி விழுகையில் ஒழிவார்; சிலர் விசால அரண்மனைகள தகர்ந்து விழு
கையில் அதின்கிழகப்பட்டு நெரிந்து மடிவார்; இப்படி ஒருவருந் தவருமல
அக்கினிவெள்ளத்தி லமிழ்ந்தியிறப்பார்கள். ஆதலால் காமவிகாரமுதலான பா
வங்களெல்லாம் எக்காலமும்வேகும்படி அளவிறந்தநீதியால் அவியாத நரகத்
தீயினகோரத்தைக்காட்ட, இந்தஅக்கினிமழையைப் பொழிந்துவிட்டவ ரிந்தத்
திருக்குமாரன்ருனே; அவரிப்பொழுது நஞ்சினுங்கொடிய பாவங்களைத் தீர்த்
திரக்ஷிக்கும்படி திருக்குமாரனுகிக் கருணையை மழையாகப்பொழியும் மேகவடி
வாய்த்திரிகின்ருரென்றுசொலலி, மிககயேலென்னும் வானவர் வணங்கியவுட
னே இதை யினிதாய்க்கேட்ட மற்றவானவர்கள்கைபடித்த நாவின்திறத்தினுல்
கோப்படாத அழகியமாலைகளாக விரைந்து வாசமலர்களை யழகிய பொன்னூ
லாலே வடிவாகக்கட்டித், தேவபாலகனின் திருக்கமலவடிகள்மேல் அணிந்து
வணங்கி, எந்தநாவினுலும் நிகராகாத புகழ்ச்சிகளை யின்பமாயுரைத்துப் பாடு
வார்: உன்னைப்பகைத்தவரைக் கொல்லுகின்ற நீதியைமாற்றியவரை இரக்ஷி
க்கமனிதனுனுய்; உன்னைவணங்காதவரை வெட்டியழிக்குங்காலம்போகி, ய
வரை மோக்ஷகரையேற்றுங் காலமாகப் பூமியிலிறங்கினுய்; தேறுதலின்றி
வருந்துபவரை யாறுதல்தந்து காக்கும்படி நீயழுது உயிர்பிழைக்கும்வகை யறி
யாதவரை பிழைப்பிக்கும்படி நீ யுன்னுயிரைச் செலவழித்து மடிவாய்: ஆறு
தலில்லாதவர்க்கு ஆறுதல்செய்யும் உனகருணையையாராய்ந்து உன்வல்லமை
யையாரறிவார் என்பார்; நீ தேவசுபாபத்தின லொருதுணையுமில்லாமல்
ஏக்கடவுளாயிருந்து, ஆள்வகையில் மூவரிலொருவராய்நின்று எப்பொழுதும்
எங்குமுள்ளவராயினும் ஒருகாலத்தில் குருவாகவந்தாயென்றும, முன்னிரு
க்கவிடத்தைவிடாமல பரவியிருக்கின்ருயென்றும்; அளவிறந்த சுபாவங்குறு
காமல் எங்கும்நிறைந்திருப்பாயென்றுஞ் சொல்லப்படுவாய்; சமஸ்தபொ
ருள்களுக்கும் ஆதிகாரணமாகி யப்பொருளிடத்திலு மிருப்பாய்; அப்பொரு
ளழியுங்காலத்தில் கூடவிருந்த நீ யழியமாட்டாய்; அரூபியாயிருந்து இக்கா
லத்திலுருவானுய்; ஆகலால் இவ்வுலகில் உன்னரியவல்லமையை யெவரறி
வார் என்பார்; செய்கையொன்றுமில்லாமல் ஆக்கல், காக்கல், அழித்தல்,
என்னுந்தொழிலெல்லாம புரிந்து, அவற்ருல் ஓர் ஆதாயமுந்தேடாய; இற
ப்பு, எதிர், நிகழ்வு என்னு மூக்காலங்களையும், ஓர்காலமாகக்கொண்டு எல்
லாவற்றையும் அப்பொழுதே யாகும்பொருளைப்போலக் கண்டறிந்தமையால்
உனக்கு நினைவுமில்லை; மறதியுமில்லை; இப்படி எல்லாமறிந்த ஒளியே! •

நீமயக்குவிக்கும் கோபமொன்றுமில்லாமற் கோபிப்பாய்; கோபித்தபோது நிறைந்தகருணையைச்செய்வாய்; உபமானமொன்றுமில்லாமல் உயர்ந்தசற்குணமுடையோனே! இவ்வுலகிலுன்னரிய வல்லமையை யாரறிவா ரென்றார்.

இளவன்மாட்சிப்படல - முற்றிற்று.

பதினைந்தாவது - சோசுவன்வெற்றிப்படலம்

தேனூர்ந்த கறும்பாகிற் றெள்ளமுதிற் றீஞ்சொல்லா ன்
மீனூர்ந்த விண்ணவர்சூழ் விழைத்திளவற் றுதிபாட க்
கானூர்ந்த மலர்வாவி கடிந்தன்னார் நெடுநெறிபோ ய்
வானூர்ந்த கதிர்சாய்ந்து வாருதிநீ ரொளித்தது வே.

முற்கூறியபடிவானவர்கள் தேன்பாகிலுந், தெளிந்த அமுதத்திலும் இனிமையாகத் தேவகுமாரனைத்துதித்துப்பாடியிருக்கையில் பகலிலேதாங்களெழுந்தருளியிருந்த சுகந்தமலர்த்தடாகத்தின் கரையைவிட் டெழுந்தருளி, நிறைந்த குணத்தையுடைய கன்னித்தாயாருஞ், சூசைமாமுனிகளுந், திருக்குமாரனைத் திருக்கரங்களி லெடுத்துக்கொண்டு நெடும்வழி நடந்தபின்பு, சூரியன் வானத்தில நிறைந்த தன்கிரணங்களோடு கடலிற்புகுந்து அஸ்தமித்து, மீளவு முதயமாகு முன்னமே துயரத்திற்குப்பின்வாங்காமல மேகத்திலொளிக்கு மின்னலகளைப போலவிரைந்துநடந்து, நெடும்வழியிலவருந் துன்பங்களையாற்றும்படி சூழநின்ற வானவரின்பமாய்ப் பேசிக்கொண்டு வரச்சென்று, பூரணசந்திரனைப்போலத் தூயநிறமுள்ள அன்னப்பக்ஷிகள் செப்படைகளைவிரித்து மேலேகுடைபிடித்தாற்போலப் பறந்துவரச் சூரியன் வானத்திலுச்சியில் வந்தபோது ஒருபக்கத்திலே நீர்மேலேதவழும் நெருப்புப்போலவும், பூமகளின் சிவந்தவாய்போலவும், மேகத்தில் தோன்றிய மின்னலபோலவும், கமலங்கள்நிறைவாகப்புஷ்பித்திருக்குந் தடாகமும், வேறொருபக்கத்திலே அந்தப்பூமகளின் காலிலேகட்டிய பொற்சிலம்புபோல இரத்தினங்களைவாரிக்கொண்டு முழங்கி மலர்கள்மேற்றவழ்ந்து ஓடிவரும் நதியும், இரண்டுகரங்களைப்போலத் தோன்றி சூழ்ந்திருக்குந் தேன்மலர்பூத்த ஓர் சோலையை விலையானவையும் வென்ற இம்மூவருங்கண்டு அதைச்சேர்ந்திருக்கையில் மாதவசூசைமாமுனிகள் சுற்றியிருக்கும் வானவரை நோக்கி மேகமண்டலத்தையும், வானமண்டலத்தையுங்கடந்து வாழ்ந்திருக்கும்பராமகாதன் இந்தக்கடல்சூழ்ந்த பூமண்டலத்தில்வந்து முழுதும் எளியவனைப் போல வுருவங்கொண்டிருப்பதால் இப்படிப்பட்டவருடைய வல்லமையை நீங்கள் சொல்லுவீராகவென்றவுடனே இதைக்கேட்ட வானவரெல்லாரு களிகூர்ந்திருக்கும்போது மிக்கயேலென்னும் வானவன் சத்தியவேதத்தைத் தந்த முதல்வனாகிய தேவகுமாரனின் திருப்பாதங்களைவணங்கி, முன்னாளிலே யவர் போர்க்களத்திலே காட்டியவல்லமையைக் காட்டும்படி சொல்லத்தொடங்கிச், சூசைமாமுனிகளைநோக்கிச் சிப்பியில்திரண்டமுத்துப்போலத் துணையில்லாமல கன்னித்தாயாரிடத்துத் திருவுடலெடுத்து மனிதனாகிக், கடலிலே யன்சமுத்திரக்களிருந்தலைவதுபோல அலைந்துதிரியு மிந்தத்தேவகுமாரன் முன்னாளிலே மலைவழியின் றிழிந்துவந்து மணிகளைக்கொழிக்கோடும் இந்த நதியிடத்திலும், வேதத்தைப்பகைக்க பகைவர்படையெல்லாம் வருந்திமடிந்துகெடும்படி இந்த நாட்டினிடத்திலும் கற்றோருஞ் சொல்லத்தகாத விதமான அற்புதமாக நடத்தின சங்கதியை நான்சொல்லநீர்கேட்பீராகவென்று சொல்லத்தொடங்குவார்:

அதெப்படியென்றால்:—கடவுள் இரண்டுகற்பாறைகளிலே சத்தியவேத சற்
பனைகளைச் சீனாய்மாமலையில் எழுதித்தந்தபிறகு அதையெடுத்துக்கொண்டு அந்
தமலையினின்றிறங்கிச், சூரியனைப்போல விளங்கினமுகத்தோடுவந்த மோயிச
னென்பவ ரிறந்துபோனபிறகு, யூதர்குலத்திற்கு ஊனுமிழும் வேலைத்தாங்கிய
சேசுவனென்பவர் அரசனாகி, வல்லமையா லுயர்ந்த தேவமகிமையைக்
காட்டும் உருவோடு விளங்கியபோது, மேகத்தையளாவிய சிகரத்தையுடைய
பர்வதத்திற் பிறந்து,விளங்கும்இரத்தினங்களைக்கொழித்து, மாலைபோலப் பர்வ
தங்களைச்சூழ்ந்தோடிக், குளிர்ந்தமலர்களுக்குள் தவழ்ந்துலாவி, இதச்செல்வ
ட்டிடைபரந்து, முல்லையிடத்திலுண்டாகிய வாரிகளாற்பெருகி, அளவில்
லாதபெருக்கத்தோடோடிச், சென்றவிடமெல்லாஞ் செல்வங்கொழிக்கும்படி
செய்துவிளங்கும் இந்தசோர்தானென்னப்பட்டநதியின்கரையிடத்தில அந்த
யூதர்களும் அவர்கள்கொண்டுவந்த வேதப்பெட்டியும் வந்து சேர்ந்தவுடன்
இந்நதியானது நேராகத்தண்ணீர்பிரிந்து அவர்களுக்குக்கிழக்கிலுள்ள ஜலமெ
லலாந் தன்வழியைத்தொடர்ந்துபோய்விடவும். மேற்கிலிருந்துவருஞ்ஜலமெ
லலாம் அதிசயித்துப் பார்த்திருந்ததுபோல மலைமிசைமலைபடுக்கினதாகப் பின்
னால்வரும் அலைகளோடுஅலைகளேறிநிற்கவும், வழிநடுவில் ஜலமில்லாததரையி
லே யூதர்கள் நனையாமற்சென்று அக்கரையில் சேர்ந்த பிறகு நல்லமுனிவர
டக்கிய பஞ்சேந்திரியத்தையொத்து முன்னம் இரண்டுமதில்களைப்போல வழிவி
ட்டு அசையாமல்நின்ற இந்நதியின் அலைகள் யூதர்கள்கொண்டுவந்த நிகரி
ல்லாத வேதத்தைத் தண்டனிட்டுவிழுந்ததுபோல ஒல்லெனவிழுந்து, இந்தச்
செய்தியை யாவருமறியும்படி சொல்லிக்கொண்டுவந்ததுபோல அதிரும்படி
முழங்கி, முன்போலவோடவே யாற்றைக்கடந்த யூதர்கள் அப்பாற் சென்று
இனியதண்ணீருந், தேனுங்கலந்துபாய்ந்துவிளைய உள்ளேஅன்னங்கள்குதித்து
விளையாடும் வயலைக்கடந்து, நீர்த்திவலைசிதறும்படி கெண்டைகள்குதித்துப்
பாய்கையினால் துள்ளித்தளம்புந் தாமரைபூத்ததடாகத்தையுந்தாண்டி, மேல்நிமி
ர்ந்து நிழலைப்பரப்பும் பூஞ்சோலைகளாற் சூழப்பட்டு, மலையைத்தழுவின மே
கங்கள்போலவும், மேகங்களைத்தாங்கிய மலையைப்போலவும் விளங்கிய எரிக்
கோவென்னும் நகரத்தைச்சூழ்ந்திருக்கும் அழியாதமதில்களை மகிழ்ச்சியோ
டுகண்டு அம்பின்வேகத்திலும் விரைவாக அதன்மேற் செல்லும்போது அர
சனாகிய சோசுவன் யூதர்களைநோக்கிச்சொல்லுவார் : வீரர்களே ! நாம் அந்த
செல்வநகருக்குச்செல்லுங்கோமொழியச் சென்றவுட னதைத்தகர்த்தழிப்போ
ம், ஆயினும் இந்தஜெயத்தைக் கொள்ளும்படி வெற்றிவில்லினு லெய்யப்பட்ட
அம்புமாரியும், விளங்கியவேலாயுதமும வல்லதல்ல; நம்முடைய ஆண்டவன்
தன்வல்லமையை யின்றுகாட்டும்படி யாயுதமொன்றுமில்லாமல் அழிக்கக்கா
ண்பீரென்றுசொல்லவே பின்பு இடிமுழக்கம்போலப் பற்பலவாச்சியங்கள்
முழங்க ஆண்டவன்கட்டளைப்படி யூதர்கள் வேதம்வைத்திருந்த பெட்டியை
யெடுத்துக்கொண்டு, தாங்களொன்றும்பேசாமல் ஆயுதங்களையேந்தித், தழல
விட்டசிங்கங்களைப்போலச்சென்று, அந்தப்பட்டணத்தின் மதில்களை ஒருநாளை
க்கொருமுறையாக ஆறுநாளாய்ப் பகைவரஞ்சும்படி சுற்றிவந்து, ஏழாம்நாளில்
இந்த அதிசயத்தைக்காணச் சூரியனுமுதயஞ்செய்தபோது பர்வதத்திலும் வல
லியபுஜத்தையுடைய அரசனாகிய சோசுவன்கட்டளையினால் வில்லினின்றுபுறப
ட்ட அஸ்திரத்திலும் விரைவாகச்சென்று, ஆறுமுறையாக நகரத்தைச் சுற்றி
யும்வளைத்துவந்து, ஏழாமுறைவானமுமதிரும்படி வாய்விட்டு ஆர்ப்பரித்து
முழங்கி வரும்போது, மேகத்தைக்கிழித்த இடிபோல முழங்கியதிர்ந்து, அக்
நகரத்தின் மதில்கள் தகர்ந்துவிழுந்த மாத்திரத்தி லிதைக்கண்டபகைவர் பதை
பதைத்தஞ்சிவாடும்படி யூதர்களுள்ளே பாய்ந்து, பகைவர்வெள்ளத்தை வெட்ட

டித், தங்கள் வாள்களின் பசியைத் தீர்த்து, நிகரில்லாத வெற்றியைக் கொண்டார்கள்.

இப்படி நிகரில்லாதவல்லமையுடைய அந்தக்கரம் யுத்தமொன்று மில்லாமல் தகர்ந்துவிழுந்தழிந்ததைக்கண்டயாவரும்பயந்து, அதிசயித்து இந்தவல்லமையுடைய கடவுளின் திருப்பாதங்களை வணங்கியிருக்கையில் காபன நாட்டிலிருந்தவர்களுமிந்தவர்த்தமானத்தைக்கேட்டு, வர்னுலகவரசனுகிய இந்தக்கடவுளுக்குப் பயந்துநடுங்கிப், பூமண்டலத்தி னரசனுகிய சோசுவன் இருந்த குளிர்ந்த சோலையிடத்திலவந்து தங்களுக்கடைக்கலந்தரும்படி மன்றுடி, யவனுடைய நிழலிலே யொடுங்கினவுடன் போர்முகத்தி லஞ்சாதகையால எல்லாருங்குறைய்த புகழுடைய சோசுவன் சொல்லுவார் : இங்கேநடந்த அற்புதங்களைக்கேட்ட வுலகத்தார்பயந்தபயத்தோடு நீங்களும்பயந்து அறிவில்லாதபட வுனையண்டியடைக்கலமாகவந்ததினுல இனிமேலஞ்சாதிருங்களென்று அபயங்கொடுத்த பிறகு மற்றநாட்டாரெல்லாருங் காபனர் சோசுவனேடு உறவானர்களென்று கடுங்கோபங்கொண்டு, அந்தக்காபனரைப்பகைத்து, ஆயுதபாணிகளாய் நின்று போர்புரியநினைத்துச்சொல்லுவார்: ஓ! காபனரே! நாங்கள்பேசுமுறைமையும், இருக்குமிடமும், நடக்குமுறையும, சொல்லும்விதமும், குலமும், வணங்குந்தெய்வமும், அநுசரிக்கும்வேதமும், நமக்குமாறுபட்டோராயிருக்க நீங்களவர்களோடு உறவாகுவதெப்படி? எங்கள்சத்துராதிகளோடு ஐக்கியப்பட்ட நீங்களியாவரு மெங்களுக்குஞ் சத்துராதிகள்தானே; இது பெரியவர்களுக்குள்ள முறைமையல்லவோ? ஆதலால் உங்களோடு யுத்தஞ்செய்து உங்களை மடித்தழிப்போமென்றவுடனே, காபனர் வஞ்சித்து உயிரையுண்ணும் வேலேந்திய பகைவர்குழாம் துள்ளின்றிச் சமர்புரியநெருங்கியதைக்கண்டு அஞ்சிச், சோசுவனிடத்துவந்துமெலிந்து அலறி, யவர்பாதத்தை வணங்கிச் சொல்லுவார்: மாற்றருடைய மார்பிலே பாய்ந்துண்ட உதிரத்தையு; மின்னலையும் உமிழாநின்ற வேலேந்தியவல்லவனே! நாங்களுங்களோடு ஐக்கியமாயினேமென்று எங்களைப்பகைத்து, மேககர்ச்சனையிலும் அதிகமாய்க் முரசங்கள்முழக்க விஷத்திலுங்கொடியபடைகளையேந்திக், கண்டவர் அஞ்சிநடுங்கும்படி, பூமண்டல மெங்கும்பரந்து, பிறைதங்கிவில்லினுல் வெல்லப்படாமல் தேன்பொழியும் ஜெருசலேம்நாட்டையாண்ட அதனீசதன் திரசாக்கரசனுகவும், சொல்லுதற்கரிய செல்வத்தையுடையவனுமாய் ஆபிரநாட்டுவேந்தனுமாய்ப் பகைவர்வணங்கும் வேலைத்தாங்கி, நிறைந்தமதத்தைப்பொழியும் யானையின்மேல் ஓவானென்பவனும், பூமியின்வேர் கெடுவதற்குக் காரணமாகிய ஒருசூலத்தைத் தோளின்மேல தாங்கி அழகிய எரிமநாட்டையாளும் பாராமென்னும் நரோந்திரனும், அஸ்கிரமும், மாருதமும், மின்னலும், பின்வாங்கத்தக்க வேகத்தைக்கொண் டோடிப்பாயுங் குதிரையின்மேல் வாளைச்சுழற்றிக்கொண்டு வயல்சூழ்ந்துவளரும் அயிலக்கினநாட்டையாளும் நிகராதயாப்பியனென்னு மண்டலேசுரனும், வாசமலர்பூத்த வயல்களுடையில் நெருங்கிய ஏகிலநாட்டினதிபதியாக அக்கினிக்கொடியையுயர்த்திக் கொடுமையாலுயிர்களைக்கொல்லும் யமனுடைய பாசம்போல்வந்து, சந்திரனைப்போலவும் விளங்கிய சக்கராயுதத்தையேந்தி வீரயானையின்மேலாகத் தாபிரனென்னும் இராஜனுமாகப் பஞ்சஅரசர்களும், எவேயநாட்டாரும், அமூறேயநாட்டாரும், எத்தையநாட்டாரும், எபுசேயநாட்டாரும், பிரேசேயநாட்டாருமாகச்சேர்ந்துகொண்டு, போர்க்களத்திற்பரவிய கோபக்கடலினலைபோலுங், சமுத்திரத்திற்பிரியு மரக்கலங்கள்போலுஞ், செப்பட்டைகளைக்கொண்டு மேகத்துட் பறந்துசென்ற பர்வதக்கூட்டம்போலும்பரந்து, பூமண்டலத்தைக் கீறிவரும் இரதங்களின் திரளையும், ஓடும்வினாவினுற காற்றுப்போலும், அதிருமுழக்கத்தினுற் கடலைப்போலும்,

பொழியுமதங்களினால் மேகம்போலுங், கொடுக்கும்பயத்தினால் விடியைப்போலும், புரியுங்கொலையினால் யமனுடையஇனம்போலும், இன்னுந்தெளிந்து உபமானிக்கக்கூடாதவிதமாய் யுயிர்களைமடித்துச் சிறிமுழங்கும் மதயானைகளின்கூட்டத்தையுந்,தங்கள்மேலேறிச்செலுத்தும் வீரர்களையயுமஸ்திரங்களுக்குமுந்திப்பாய்ந்து, தங்கள்குளம்புகளாற் போர்க்களத்தைக்குழப்பிப், பகைவரைத்தொன்று வானமின்னலைப்போல வொல்கிச் சுழன்றுபாய்ந்து தாண்டி, யுத்தமுகத்துப்பின்வாங்காத குதிரைவெள்ளத்தையும், வீரக்கழலைபணிந்த காலகளையுங், கன்மலையையொத்த புஜங்களையும், பொன்னால்விளங்கிய மாலைகளையும், பலசமர்க்களத்தை நீந்திவென்ற பழக்கத்தையும், அக்கினிசுவாலிக்கும் வில்லுகளும், மழைத்துளிபோல அஸ்திரங்களும் உடையவர்களாகவும், யமனுக்கேற்ற தோழருமாகவும் விளங்கிய கடலைபபோலக் காலாட் படையையும், அளவில்லாமல சேர்த்துக்கொண்டு எங்கள்மேல் எதிர்த்து யுத்தஞ்செய்ய வந்தமையால் அந்தச்சேனாசமுத்திரத்தைவெல்ல யாராலேமுடியுமென்றார்கள்.

இதைக்கேட்டுப் பகைவர்மார்பிலே இறைச்சியைமுகந்து தீயைக்கொப்பளிக்கும் வேலையுடைய சோசுவன் கோபாக்கினியால் ஒரு புன்னகைகாட்டிச் சொல்லுவார்: இன்பஞ்செய்து கெடுக்கும் பாவாக்கிரமபகையை யஞ்சுவதல்லாமல் வேலேந்திப் பகைவர்புரியும் போர்முகத்திலஞ்சுவனோ? ஆண்டவனிரங்கித் திருமுகந்தந்ததவினால் ஜெயமும் நமக்கரிதோ? என்று கண்வழியாகத் தீப்பொறிகளைவிட்டு, யமனைப்போலச்சினந்து, சொல்லிமுடியுமுன்னே சிங்கக்கூட்டம்போலவிருக்குந் தன்சேனாசமுத்திரங்களை யுத்தத்திற்காக வாருங்களென் றழைத்தமாத்திரத்தில் காற்றைப்போல இரதங்கள் தங்களுருளையின்விரைவால் பறந்தாற்போலச்செல்லவும், அம்புபோலப் பாயுங் குதிரையினிரளும், இடிகளைச்சூற்கொண்ட மேகம்போல யானைகளின்கூட்டமும், போர்முகத்தில நெருங்கியபுலிகளைப்போல வீரரின்வெள்ளமுந் செந்தீயைக்கொப்பளிக்கு மூற்றுப்போல ஒளியைச்சிதறிப்படர்ந்து, சூழ்ந்துவருகையில்தானும் உயர்ந்த ஒருதேரின்மேலேறிக்கொண்டு பூமண்டலமெல்லாங்கலங்கிக் கிடுகிடுத்துக்கூசும்படி சென்று, பகைவருடைய படைக்கடலைக் கண்டபோது கண்களிடத்தில் கோபாக்கினிப்பொழியும்படி யுறுக்கின்ற அரசனாகிய சோசுவன்பொங்கிய கோபாக்கினியையுள்ளடக்கிக், தருமசிந்தையினால் பூமண்டலத்தை மூடும்படிவந்த வெள்ளத்தைத்தடுத்தாப்போலக், தனதுபடைகளைத்தடுத்து நிறுத்திச், சத்துராதிகளமார்பிற் படுக்கின புண்ணிடத்தில்பட்டுப்பட்டுத், தெய்ந்த வேலைத்தாங்கிய ஆபன் என்பவனை வரவழைத்துச் சொல்லுவார்: வாசமாலையையுடையவனே! நீயந்த ஐந்தரசர்களிடத்தில் தூதாகச்சென்று எவ்வுலகத்தையுந் தனியேயாண்டு, சத்தியவேதத்தை யருளிய கடவுளை யநுசரித்து, அவரடைக்கலமாகவந்த காபனரை உங்கள்படைமிகுதியால் காவித்துமயங்கிப்பகைத்த தேதென்றுகேட்பாய்; மீளவும் சமர்தொடுக்கும்வீரர்பகையைப் பார்க்கிலுங் கடவுளின்பகை கொடியதென்பாய்; நான்பூவுலகமெல்லா மரசாட்சிசெய்யும் விருப்பத்தினாலுஞ், சூரியனைக்கண்டபனிபோலழியுஞ்செல்வத்தின்விருப்பத்தினாலும், போர்முகத்தில்வதைத்த உயிர்களை விதையாகவிதைத்து அடையும் புகழ்ச்சியைப்பெறும் விருப்பத்தினாலும், பிறரிடத்தில் போர்செய்யமாட்டேன்; ஆனால் நம்முடைய நாதனைப்பற்றிப் போர்செய்யவேண்டில் சற்றும்பொறுக்கவுமாட்டேன்; ஆதலால் ஒருப்பட்டுச் சமாதானமாகுதலே நல்லதென்பாய்; கூடாதபக்ஷத்தில் இன்றுதானேயெதிர்த்துப் போர்புரிந்துகேட்டவரத்தைத் தருவேனென்பாய்; என்றுசொல்லியனுப்ப ஆபனும்மன்னவனைத் தொழுது விடைபெற்று, நெருப்பினுங்கோபங்கொண்டு. அம்பினும்விரைவாக மாற்றாரிடத்திற்சென்று, கூடியிருந்த அந்தமன்னவர்களை வணங்கிச்சொல்லு

வான்: சொல்லிலடங்காத கீர்த்தியையுடைய வரசனுகிய சோசுவன் அனுப்பி வைத்த தூதனுக வந்தேன்; நீங்கள் பூவுலகும், வானுலகுந் தொழுதிருக்கும் உபமானிக்கப்படாத பரமநாதனை வணக்கம்புரியுங் காபனையெதிர்த்துக்கொள்ளும்படி மழைத்துளிகளினும் படைகளைக்கூட்டிவந்ததென்ன? அநந்தகுணமுள்ள அந்தக்கடவுளை யிறைஞ்சுவது உங்களுக்குத் தீதென்றுதோன்றியதோ? இப்படி நல்லறிவு முழுதுமயங்கச் சினங்கொள்ள வேண்டாமென்றபோது இதைக்கேட்ட அந்த ஐந்துமன்னரும் வெகுண்டு நகைத்துச் சொல்லுவார்: காபனும், நீங்களும் ஒன்றானபிறகு யாவரும் எங்களுக்குப் பகைவர்தானேயென்றார்கள். அதற்குப்பறவையெல்லாம் விருந்தாகவந்து மொய்த்துத் துதித்துவாழ்த்தும் வேலுடைய ஆபன்சொல்லுவான்: நீங்கள் வெள்ளம்போலப்படைகளையுடையவரென்று கர்வித்துமயங்கவேண்டாம்; எசித்துநாட்டிலே ஒருசிறியபிரம்பினும் பெருந்துன்பங்களைவிளைத்தவகையும், அடிமணல்காணும்படி கடல் தண்ணீர்களைப்பிரித்து வழிதந்தவகையுங், கரையிலடங்காமற்பொங்கி யிந்தநாட்டிலேபாயுஞ் சோர்தானென்னும் நதிநின்ற தன்மையும், இவையல்லாமல் பரமநாதனுடைய வல்லமையாலான மற்றஅற்புதங்களையுங்கேளீரோ? அந்த அற்புதங்களெல்லாஞ்செய்த கடவுள்தானே நாங்கள்வணங்குங் கடவுள்; ஆதலால் அப்படிப்பட்ட நாதன் கோபித்தால் அப்பொழுது கையிலே வேலேந்திக் கடலைப்போலச் சேனைகள்கூடினாலும் நம்மைக்காக்குங் காவலாகுமோ? உண்மையுடைய துணிவோடு அந்தத்தற்பரன்செய்யுநிழலிலே யொதுங்குதலே நல்லதென்றான். அதற்கு அந்தக் கொடியமன்னர்கள் கோபாக்கினியோடு சொல்லுவார்: நாங்களிந்நாள்வரைக்கும் வணங்கிவந்த தேவர்களைக் கைநெகிழ்ந்து புதிதாய்வந்த ஒருவனைவணங்கச்சொல்லவோ? நீதூதாகவந்தாய்; இப்பொழுதே யெங்களைவிட்டு நீங்கிப்போவாய்; உங்களைவென்றழித்தபின்பு எங்களுடைய வல்லமையையறிந்து நீங்களும் நீங்கள் வணங்குந் தெய்வமும் எங்களைவாழ்த்திச்சொல்லுவீரென்றார். அதைக்கேட்ட ஆபன் இடியேறுகடுப்பக் கோபித்துமுழங்கிச்சொல்லுவான்: நான் யுத்தஞ்செய்வதற்கஞ்சியா? தூதுசொல்லவந்தேன்; எதிரில்லாமல் ஒன்றானகடவுளைநீங்கள்பழித்த இப்பொழுதே மிக்கவேலாயுதத்தைக்கொண்டு நானே போர்செய்யும்படி வாருங்களென்றுசொல்லித்திரும்பிவந்து நடந்தயாவையும் மன்னனாகிய சோசுவனுக்குரைத்தபோது அந்தமகாராஜா கோபித்துநிற்கையில் வானத்திலொரு சப்தந்தோன்ற ஆண்டவன்சொல்லுவார்: பகைவரைவென்று அந்தவகையினல் எமது வல்லமையை யெவர்க்குந்தெரியக்காட்டுவாய்; என்றுரைத்தபோது அதைக்கேட்ட சசோந்திரன் காற்றின்முன்வைத்த பெருந்தீயைப்போலப்பொங்கி யார்ப்பரித்துப் போர்செய்யும்படி படைகளைநடத்துகவென்றவுடனே மேககர்ச்சனையினும் யானைகள் முழங்கவுங், கடலினும் இரதங்கள் முழங்கவும், இரதங்களின் மேல்நின்ற அரசர்கள் முழங்கவும், படைவாச்சியங்கள் எட்டுத்திக்கிலுமுழங்கவும், போராசையினுல் குதிரைகள்முழங்கவுங், குதிரைகள்மேல்நின்ற வெற்றிவீரர்கள்முழங்கவும், இதனால் பூமண்டலமெல்லா முழங்கியிருக்க யூதர்கள் தங்கள் பகைவர்மேலெதிர்த்து நெருங்கினார்கள்.

இப்படி யூதர்களுடைய நால்வகைச் சேனைச்சமுத்திரமுங் கூடிச்சென்று கடலின்மேல்கடலுமோதினாற்போலப் பகைவர்சேனைக்கடலோடெதிர்த்து,வானமாரியைப்போலக்கோதண்டங்களைவளைத்து, விஷத்தையுமிழுஞ் சரமாரியைப்பொழிந்து, இரவைப்போல இருண்டமனத்தையுடைய அப்பகைவரஞ்சிநடுங்கும்படி வாய்விட்டார்ப்பரித்து முழங்கி,யவர்களின்மார்புகளும், மார்பிலணிந்த கவசங்களும், மேகத்தினுமிகுந்த மதத்தைப்பொழியும் யானைகளும், யானைகளின்முதுகின்மேலேறிய வஞ்சகருமடிந்தொழியச்செய்து, பின்னுமெதிர்த்த

தபசிரேஷ்டர்களின் கோபத்தைப்போல விட்ட அம்புகள் பாந்து ஒன்றுந் தவறுமல உயிர்களையுண்பதினலே அணியணியாய்ச்சேனைகள்சாய்ந்திறக்கவும் புழுதியோடுபுழுதியாகப் பெரியவுடல்கள் துவைக்கப்பட்டழியவும், வெட்டுண்டசிரங்கள் கழுகுகளோடு ஆகாயத்தில பறக்கவும், ஆறேறுஆறுகப்பெருகிய இரத்தங் கடல்மேற் புரண்டுவழியவும், யானைகளோடு யானைகளுங் குதிரைகளோடு குதிரைகளுஞ் சமர்புரியவும், அஸ்திரங்களினும் விரைவாகச்செல்லுஞ் சக்கரங்களோடு சக்கரங்கள்படும்படி இரதங்கள் கலந்து நெருங்கிநிற்கவும், மேகத்தையொத்திருக்கும் யானைகளின் தந்தங்களை மிதிப்பதற்கு வேகத்தின்மிகுந்த குதிரைகள்பாயும்போது கிளைவுமாறி யானையென்றுமயங்கி மேகத்திற்பாயவும், பாய்ந்தபின்பு மேகங்கள்பொழிந்த இடிகளைப்போலக் கீழே பாய்ந்து போர்செய்தபகைவரைக் குளம்புகளால புழுதியாகும்படி மிதித்து முழுவதுமழிக்கவும், வேலையும், வாளையுமேந்திய வீரர்கள் மேலேயெதிர்த்துமுழக்க அவ்வொசத்தால் வளைந்துதிரியும யானைகள் போர்செய்தலினுல் சூல்கொண்டு கோபித்திடித்த, மின்னலு, பிடிகளுந் திரண்டெழும்படி காற்றின் முழக்கத்தினுல் வேகத்தோடுதிரியு மேகங்களைப்போலத்தோன்றவும், போர்பொருதும் யுத்தகளத்தில அரசனுகிய சோகவனென்றல் சோடைகாலத்திலே யாவும் வாடியுலரும்படி கொடியதாய்ச் சுடுங்கதிரைவீசிச், சூரியன் வருவதுபோலத் தானெருதேரின்மிசையேறிக் கொடிககட்டாகிய அந்தச்சமர்க்களத்தில் நால்வகைச்சேனையு மழிந்தொழியநின்று, வேகமும் வலியுங்கொண்டு, எய்யும்பாணங்கள்பட்டுருவி, மேகந்தவழு மலைபோலநின்ற யானைக்கூட்டங்களிறந்துருண்டு உமிழ்ந்தஇரத்தம்ஒருகடலைப்போலத்தோன்றவும், விழுந்தயானைகள் அந்தக்கடலிலேயிருக்குந்தீவுகளைப்போலத்தோன்றவும், பின்னுமங்கமகுடாதிபதியொத்த அஸ்திரங்களில் ஒன்றுந்தவறுமல் வெள்ளமாகத்திரண்டு எல்லாவற்றையுஞ் சாய்த்தழித்து அழிக்கவுஞ், சண்டைசெய்து வருகையில் சில பகைவர் காலிறதங்களின்மேலும், பனைகிரண்டுயானைகளின்மீதும், இருது குதிரைகளின்மிசையு மேறிக்கொண்டு, உக்கிரமாக வில்லைவளைத்து, இருபக்கத்திலுஞ்சூழ்ந்து உலகமெல்லாம் பகைக்கும்படி முழங்கி, நெருங்கிவருவதைக்கண்டு நல்லகருமங்களைத்விரும்பிய சோகவன் ஆ! ஆ! ஆ! என்றுமிகவுஞ் சிரித்து முழங்கிக், சோடைகாலத்திடிகளை யுமிழும வில்லையெடுத்து, அண்டாண்டங்களுங் கலங்கும்படி யவர்கள்மேல்வளைத்து, நாணியேற்றின வுடனே யானைகளுங், குதிரைகளும், முத்தாபாணங்களால் விளங்கிய இரதங்களுமழியவும், பின்னும் அஸ்திரங்களை ஆறும்,பத்தும், இருபதுமாக ஒவ்வோர் மாலையாகச்சேர்த்து, இடைவிடாமல் அளவில்லாதவேகத்தோடு எய்தபாணமழையினுல பூமியைப்பிளக்கோடும வெள்ளம்போலக் குருதிநீர்பரந்தோட ஒவ்வொருஅம்பினுல் பன்னிரண்டுபெரும்பிணங்கள்மடியவும், வேலும், வாளும், வில்லும், அழிந்துபோய்த் திரண்டபடைவீரர்கள் காலுந், தொடையுங், கையு, மார்புந், தலையு, மறுபட்டு மடிந்து குவியல் குவியலாக இருக்கவுந், தேருருளைகள்முறிந்து தெறிபட்டுச் சிகரங்களகவிழ்ந்து கொடியோடு எதிர்காப்போலத தேர்களழியவும், யானைகளெல்லாம் வெட்டுண்டுமடியவும், குதித்த குதிரைகளின பேரிலலாமலொழியவும், இப்படியெதிர்த்த படைகளெல்லாம் வெட்டிச் சங்கரித்து வெற்றியடைந்து எதிரில்லாமல் அவ்விடத்தைவிட்டு அப்புறமாகச்சென்றர்.

இவ்வண்ணமாகச் சத்தியவேதத்தினரசனுகிய சோகவன் எதிர்த்தபடைகளயாவையுஞ் சங்கரித்துச், செவ்வமலையையொத்த தனதுபுஜங்களை யுயரவசைத்துப், போர்க்களத்தைக்கலக்கி, புலாவிவருவதைக்கண்டு வாசமலர்பூத்த பொய்கைகளா லழகுபெற்ற வங்கநாட்டரசனுகிய தாமிரன் வேருமிடிகளைச்

சூழ்கொண்டமேகமுந் தோற்கும்படி கர்ச்சித்துக், கோபத்தோடு வேகத்தின்மு
குத்தயானையைநடத்தி, பழகியதன்புஜங்களோங்க ஒருசக்கராயுதத்தைக் கைசு
ழற்றிவந்து, இடிமின்னுங் கொடுமையாகச் சோசுவனை யெதிர்த்துத்தாக்கி, முழ
ங்கி கோஷித்துச்சொல்லுவான்: நானேந்திய இச்சக்கராயுத மிகவும் பசியா
யிருந்தபோதிலும், மற்றவுயிர்களை வெறுத்து உன்னுயிரையுண்டா லொழியப்
பசிதீராது; ஆகலால் சந்தோஷத்தோடு உன்னிடத்திலேவரவிட்டேன்; சீக்கிர
மாக அதன்பசியைப்பாற்றுவாயென்று நகைத்துச்சொல்லிக் கோபித்து, யானை
யின்முதுகின்மேல் காலூன்றி நின்று, விளங்கிய பூரணசந்திரனையொத்த அந்
தச்சக்கராயுதத்தை நாலுமுழுவிழத்தக்க குதிக்கப்பாத கையிலெடுத்துப், போ
ர்க்களத்திலுள்ள யாவரும் எப்படியாகுமோ! வென்று கலங்கி யஞ்சி விலகி
நிற்கத், தீயெழும்படி விசையோடு எறிந்தான். அதற்குச் சோசுவன் சொல்லு
வார்: உன்னுடைய சக்கராயுதம் பசியோடுவருவதானால் அதன்பசிக்கு இனி
யுணவு சிறுதாரையென்று வில்லை வளைத்து அக்கணையில் அம்பைத்தொடுத்
துத், தொடுத்தஅம்பை யெய்ததும், அதிபயங்கரமாய் விளங்கிய அந்தச்சக்க
ரத்தை யிரண்டாகப்பிளந்தது; தீப்பறக்கும்படி பறந்து விண்ணிலே ஆகாயத்திற்
பறப்பதும், அடிப்பதும் மாத்திரம் யாவருங்காணும்படி, காலமையுள்ளதும், வெட்
டெற்கரியதும், பிறைபோலவளைந்ததுமான ஓரஸ்திரத்தைத்தொடுத்துப், பூர
ணசந்திர னிரண்டுபிறையாகும்படி நடுவிலே பிளந்ததுபோல அந்தச்சக்கரா
யுதத்தை இரண்டாகப்பிளந்தவுடன் இதைக்கண்ட தாபிரன் தன்மனக்கோப
த்தினாலவாக நெருப்பைக் கொப்பளிக்கும் ஒருவில்லை வினாந் தெடுத்து,
வளைத்து முருகினிணைத்துடன் வளரும் நாறுவீரர்களோடு ஒருபடையாக
நின்று, போர்செய்யத்தொடங்கி, இடிமுழக்கம்போல ஆரவாரித்து, அவ்விர
ந்த பாணங்களை விடும்போது சோசுவன் ஒவ்வோரம்பிற்கு ஓரம்பினை விடுத்து
த் தடுத்து மீளவும், அவர்களஞ்சி நடுங்கும்படி ஒருவில்லை வளைத்து அவ்வில்
லாற் சாமாரியைப்பொழிய இருபக்கத்திலும் நெருங்கிச்சூழ்ந்த அப்பகைவர்
கோபங்கொண்டு தங்களுடையவில்லைகளை வளைத்து விடாமற்பொழிந்த கணைகள்
சோசுவனுடைய தேரிலேசூழத் தைத்திருந்தபடியால் இறகுகள் புள்ளிபுள்
ளியாய் முளைத்து, மலையையொத்திருக்கும் பறவைத்தேரைச் சிறகுகொண்டு
பறக்கும்படி சோசுவன் நடத்திப், பின்னுந்தான்வளைத்த வில்லாகிய மேகமானது
இடைவிடாமற்பொழிந்த அஸ்திரமாகிய மழைத்தாரை காபிரனேறிவந்த யானை
யாகிய மலையின்மேற் பொழிந்தவுடனே போர்க்களத்திலோடும் இரத்தமாகிய
வெள்ளத்திலே அம்பினால் துணிக்கப்பட்ட குறைப்புடல்களாகிய மச்சங்கள்
துடிக்கக்கண்டு பயந்துநின்றவர் சொல்லுவார்: குதிக்கப்பிளந்தினால் இகழ்ச்சிபட்ட
பகைவர் வில்லுகள் விடாமற்பொழிந்த அம்புகள் தன்மேற்படாமல் தடுத்து
நீக்கினதும், பகைவரணிந்த ஆபரணங்களும், கவசமும், அறும்படி பறித்த
தும், அவர்களின் வில்லின்நுனியும், அடியும், வில்லைப்பிடிக்க விரலும், அடிக்
கடி தோளு மறுபடியுங்கெடும்படி ஒழித்ததும், இவையெல்லாம் ஒருவில்லை வளை
த்த சோசுவனொருவனே செய்ததால் வில்லின்போர்த்திறத்திலே இவ்வாச
னொழிய மற்றவரசாபரொன்று அளவின்றி வாழ்த்துதலசொல்லு, அப்பாஸ்யு
த்தத்தில மூழ்ந்து இளைத்துப்போன அந்த நாறுவீரர்களும், ஆரவாரித்து முழ
ங்கி அளவில்லாத பாணங்களை விடுத்துச் சோசுவனைச் சூழ்ந்துவருகையிலே
சோசுவன் மஹாசினத்தோடு எய்த பாணத்தின் திரள்கள் அவர்கள் மேற்
பட்டுப் பட்டபுண் வழியாக இரத்தத்தைச் சிந்துவார்; அந்த இரத்தத்
தோடெழும்பிக கோபமிகுதியால் இருகையும் ஒருப்பட்டப் பூட்டிநுறுப்போ
ல வில்லைவளைப்பார்; வளைத்தவில்லுகள்முறிய வேறொரு வில்லுகளை யெ
டுப்பார்; அடுத்த முனிந்த வேங்கைக் கூட்டம்போலச் சமர்செய்யத்தொடங்கி

கையில் சோகவன்பிடித்த திருவில்லின் மைப்பகிலையாக யாவருமடுங்கத்தக்க இராமும் பசப்பிய வினைருப்பை மிகுதியாக நாதுவிட்டு மடிந்ததால தனியாக யானைமேலிருந்த அரசனுடைய மார்பை சீறி, வில்லுமிச்சுப மாலையாகே யாக அம்புகளைத்தொடுத்து எய்யுமபோது அந்த அன்றோாகன்யாவரு சோகவனுடைய கணைத்திறத்தைக்கைப்பட்டு, கன்னிறம்போல மேலேதோய்ந்து தேரின்மேல் வெய்ச்சேறுடைய பாதத்தில் யானைமேட்டுறு யாசகர்போல நிலைநிலையாய் விழுந்துகிடக்கையில் அதைக்கண்டமன்னவன் அதைப்பாணங்களைதேடிமரயிந்தகமென்று அவைகளை எடுத்துத் தனவில்லிலேற்றி யானைமேலிருந்த நாகன் சோர்ந்துவிழும்படி யயன்மேலெய்வதல்லாமல், நிலைமேலுதிரும்பதற்கமைத்த இரதமேல்லவினைந்து சோகவனை நம்பொத்தோ பட்டினைமாதவின் சோபம்போல ஒருவனுமுன் தடுக்கப்படாத அம்பினைவிட்டெய்து இரவி சந்திரனையும், ஒருவருமறியாத மறுதாப்போலத் தாபிரலேறியிருந்த யானையின்மீது கரகளைகளையும் அதின்மேலிருந்த மறைந்து அந்த யானைமீதிட்டு யுழுந்தோனை இராமபிக் கூற்றனையொத்திட்டதுபோல வேரொரு வேறுபட அஸ்திரத்தைவிட்டு விளங்குமணிமுடியைசசூடிய அரசனுகிய தாமிரனின்தலையைய யுயோடறுத்துவிழ்த்தினன்.

இவ்வாறுப் போர்க்களத்தில் வெற்றியடைந்ததால பலஜெயபேரிகைமுழங்கினவுடனே வேறொருபக்கத்தில் ஜக்காசர்களும் பல்லாண்டு பல்லாண்டாம் வாழ்ந்திருக்கக்கடவதென்று மங்கலமாகவாழ்த்தி மாலையைசசூட்டிய பாப்பியனென்னும் மன்னவனின்படைத்தலைவனுகிய தக்குரானன் என்பவன் குதிரைமேலேறி, அக்கினியையுமிழும் வேலேந்தி கடலலைபோக்கினதுபோலக் குதித்துவருமபோது சோகவனுடைய சேனைகளுடைய துரோதரன் என்பவன் மேதமே எங்குமவழக்கக்கடவதென்று வாழ்த்தி, அந்தத் தக்குசனன்மேல் வெற்றித்துணைருமையில் அக்கப்பணையை அவனிடத்துச்செலுத்தும் வினைவிழுமவினையாக ஓடிவந்து உனதுடையது இதுவென்று அக்கினியுமிழும் வேலை யெறிந்தான். அதற்குத் துரோதரன் அந்தவேலை தன்மேற்படாதபடி சற்று ஒதுக்கிநின்று அதைத்தன்கையாற்பிடித்து, மீட்டுமறிந்து வேலவிடுக்கவேண்டும், தன்னுடையபாணத்தைப்பார்த்த விசுவிலமானுடைய தென்பாமென்று நினைத்து, அந்தவேல்முனைவழியாகவேதிருப்பிப்பாசைவனமார்படைப்பிளக்கும்படி யெறிந்தபொழுது அந்தவேலானது புள்ளிக்கலழியை யுறித்தோடுவதுபோலக்காற்றிறும்பினையொத்துச்சென்று தக்குரானனமார்பிலேபாய்ந்து தன்னூரின்பொய்யையிலெனுமையம குளிப்பதுபோல உள்ளேமூழ்கி, உயிரைக்கொண்டுபுசித்தும், பிறகு அவவெற்றதனின் கொடியபுரியைப்பறித்து அங்கிருப்பதற்குப்பயந்துவிலமாமற பறந்துவருவதை மன்னவனுகியபாப்பியன் கண்டு வெகுண்டு தன்னுடைய குதிரையை விரைந்தரிச முடுக்கி இடிபெரிந்து கோபத்தோடு விழும் வினையாகத் தீபெரியும்வாயையுடைய கொடியவேலை துரோதரன்மேலெறிந்தபோது அது துரோதரன் மார்பிலே தைத்தவுடன் தைக்கப்பட்ட வேலைபாரித்து அதைஎறிந்தபாப்பியன்மேலெறிந்து, துரோதரனபட்டபுண்ணினமிகுதியால் வைசோர்ந்து உயிர்விட்டு அயர்ந்தான். இதைக்கண்ட பாப்பியன்மகிழந்து முழக்கங்கொண்டிருக்கையில் மூன்றுதுரைக்கத்த அமனென்பவன் பாப்பியன்மேலெறிந்து நவைத்து, இருவரும்அகோரகோபமுகத்தோடு நின்றுவிழு மாண்டு குதிரைகளின்மேலேறிக், தெரிவாகளிநின்ற இருமின்னலைப்போலத் தீயெரியும் இரண்டிவாள்களைவீசிக்கொண்டு, பெருங்காற்றின்றான் னெழும்பிய தூசிபோலே எங்கும்புழுதியின்றகெழும்பப் போர்க்களத்தைமுழக்கியார்க்தாக்கும்போது அமனைவரப்பார்த்தும் இடப்புறமுமாகப் பாய்ந்து மிஞ்சத்தினையொடு யவலையிசினான். அதையாப்பியன் கேடகத்தாலதடுக்க அந்தவேட்கே

கேடகத்திஞேரத்தில் பட்டுச்சரிந்து, குதிரையின் பிடரியின்மேற்பட்டுத் தலையறுத்ததால் யாப்பியனகுதிரையினின்று இடிபோலத்தரையிற்பாய்ந்து நின்றவுடனே ஆபனுங்குதிரையைவிட்டு நிலத்திற்பாய்ந்து தீப்போலச் சினந்து ஒருநிலைகொள்ளாமல் அகலல், அணுகல், பதியல், பாய்தல், முதலிய பல போர்த்தொழிலைச்செய்து கூடியசமயம்பார்த்து, வாளைவீசித் தாளோடு மலர்த்தாமரையை யறுத்தாற்போலப் பகைவனின் அடிக்கைகளும், கைபிடியோடிய கேடகமும், அறும்படி வெட்டிப், பின்னும் இரண்டுவெறுங்கைப்போல இருவரும் புகைமண்டி யெழும்படி போர்புரிகையில் ஆபன் கேடகத்தைப் பறித்து தான்றாதுசொல்ல வந்தபோதுமேற்றித்த எனதுசொல்வதிருநாமத்தின் வல்லமை யிதுதானென்று சொல்லிக், கதிர்வாளைவீசி நல்வினையில்லாத பாவியாகிய யாப்பியன்தலையை மணிமுடியோடு அறுத்துத்தள்ளினுன்.

இப்படிப் பலவிடத்தில் பலபோராகும்போது ஆபரணங்களொன்றோடொன்று போர்செய்வதுபோல அசைந்து விளங்கு மணித்தேரின்மேல் வேதத்திற்கு ஆசனுகிய சோசுவ னெழுந்துநின்று, பகைவர் படையெழுமுனிந்து முரசங்கள் முழங்கவும், குதிரைகளெதிர்த்துப்பாயவும், யானைகள்மதத்தோடெதிர்க்கவும், தேர்கள் காற்றினுமுடுகிச்செல்லவும், விரைவாக வாள்கள்வீசவும், திரளாக அம்புகள்மொய்க்கவும், வில்லுக ளம்புகளை யோயாமலெய்யவும், புகையெழும்பக் கோபத்தோடு படைவீரர் சமர்செய்யவும், கூடியவாசத்தால் மேகத்திலிருந்து விழும்பிடிகள் மெலியவும், அவ்விடத்திலுண்டாகிய முழக்கத்தால் இடிமுழக்கத்துறையவும், கடலலையின்மயக்க மொழியவும், கடிவாளத்தால் முனிந்த குதிரைகள் யானைகளைமுனிந்துதொடரவும், அந்தயானைகள் கொடிபறக்குந் தேர்களைமுனிந்துதொடரவும், கட்டியவீரமணிகளை யசைத்து முனிந்த வில்லுகள் அஸ்திரங்களை புதைக்கவும், அந்த அஸ்திரங்கள்முனிந்து இரத்தத்தைச் சிந்தவும், அந்தப்போரிடத்தில் முனிந்ததுன்பங்கள் அந்தப்போருடலைமுனியவும், அவ்வுடல்கள் தங்களுயிர்களைமுனியவும், அந்தவுயிர்கள்மாளவும், போர்மேவிடுத்துப், பின்னுக் தபசிகளின் கோபாக்கினிபோலப் புகையெழும்படி முனிந்த வில்லைவளைத்து எய்த அஸ்திர மாரிகள் ஒழியாமலும், தணியாமலும் விருப்பமாக முனிந்துகொல்லுவதினல் இருபக்கத்திலும் இருகணையைப்போலப் பிணக்குப்பையாக்கிடக்க நடுவிலமுனிந்து முழங்கிவருமநதிபோல இரத்தமோடிப்பெருகப் பின்னுமந்தப் பிணக்குப்பைகளுயரும்படி மடிந்தவருளைசுவில பெருவெள்ளத்தின் முன்னீண்டகரையோட்டாப்போலக் கறுத்தமேகத்தையுடைய ஒரு ஆறுபடைவீரர்க எத்தகையதியோ பெ இரத்தமாதநிரத்தில் அவர்களில ஒவ்வொருவனுக்கு ஒவ்வோர் அம்பைவிடுத்து அவர்களுயிரைமடித்து அவைகளிட்டு அப்பாற்சென்று யுத்தப்புரியுமன்னராகிலுல் அந்தஒருசோசுவன் ஆயிரஞ்சோசுவன்போலவும், அவ்வரசன் வளைக்க ஒருவில் ஆயிரம் வில்லுகள்போலவுந் தோன்றயாவரும் ஒருவில் லுள்ளகாமம் அவனெடெதிர்த்து யுத்தஞ்செய்யவிதப் படியென்றுமயங்கிநிற்கையில், இரண்டுபேர்கள்தங்களின்மேல்வைத்த ஒருபாரத்தம்போல உயர்ந்த இருபுயங்கள்மேல் பெருமண்டமாகத் தலைதோன்றவும், இரண்டு உலைக்கனத்திலெரிந்த நெருப்புப்போல உயிர்களையெரிக்கும் இரண்டு விழிகள் நிலைக்கொப்பளிக்கவும், இரண்டுகடலைப்போல முழக்குமுங்கொண்டு ஒருஇராக்ஷதன் எதிர்வந்தபோது சோசுவனும் அந்தஅரக்கனுமாக வீரச்சுறாமீன்கள் போர்புரிந்தாற்போலப் போர்க்களமெல்லாம் நடுங்கச் சமர்செய்யத் தொடங்கினார்கள். அதெப்படியென்றால்:— கொடிகளைக்கட்டிய இரண்டுதேர்களின்மேல் இந்த இருவருங் கொலைத்தொழில் மிகுந்த இரண்டு மதயானைகள்போலேறி, பிடிகளையுமீறும் இரண்டு மேகங்கள்போல எதிர்த்து முழங்கி, பம்புகளினுடர்த்தியால் மேகமாகாயத்தை மூடினதுபோலஇருண்டுநிற்கவும், மின்

டலமெல்லாம் இருகடைப்புகமென்று மயங்கவும், இரண்டுவில்லுகளை வளைத்து வலப்புறமும், இடப்புறமுமாக வளைந்து, அகன்றும், பிரிந்தும், எதிர்ந்தும், நெருங்கியுந், திரிந்தும், அளவிறந்தபாணங்களை யெய்யும்போது அவ்வம்புகளெல்லாம் ஒருவர்மேலும்படாமல் நடுவழியிலே யிருபடையாகநின்று தங்களுக்குள் தடுக்கப்பட்டுப், பாம்புகளிரண்டுகட்டடம்போலப் பார்த்திருந்தவர்க ளதிசயிக்கும்படி படத்தைவிரித்து ஆகாயத்திலாடிக்கொண்டிருக்க, இதைக்கண்ட புண்ணியர்நிறைந்த சோகவன் செந்தீயைமொண்டு யானையுஞ் சுடுகின்ற என்னம்புகள் இன்றையதினந் தாங்கள் படித்ததொழிலே மறந்தனவோவென்று கோபித்து, உதயகாலத்தில் சூரியன்தனகிரணமாகிய அம்புகளைவிடுத்து, இருளைக்கொல்லுவதுபோல, இரவிஞருளை மொண்டுகொண்டாற்போ லிருக்குங் கறுத்த இராசூதனுடைய சிரத்தைத்துண்டபதற்குரிய நஞ்சிற்படிந்ததும், மிகுந்தகூர்மையுள்ள நுனியும், பலபோர்க்களங்களில் வென்றதுமாகிய அஸ்திரங்களை யளவில்லாமலெடுத்துப், புண்ணியத்தைக்குறித்து வில்லிற்றொடுத்து, மாலைமாலையாக வரிசையாய்போயாம லெய்யும்போது இராசூதனேறிய தேரிற்கட்டிய கொடிகளும், அதன்சக்கரங்களுஞ், சாரதியும், அதிலேகட்டிய அசுவங்களும், அவனுடைய வலதுகையும், அவன்பிடித்த வில்லும், அணிந்த ஆபரணங்களோடு கால்களும், பகைத்தநெஞ்சமுங், கோபித்ததலையும், அறுபட்டு க்கதருமமுமில்லாத உயிருமழிந்தது.

முற்கூறியபடி பொன்முடிதாங்கிய மண்டலேசுரனாகிய சோகவன் வெல்லப்படாத இராசூதனை வென்றடக்கிக்கொண்ட வெற்றியினால், பூகர்ப்படையெல்லா மேககர்ச்சனையிலு மதிகமாய்முழங்கி யார்ப்பரித்து மகிழ்ந்துயர்ந்து, முதுகெல்லாக் கரும்புகைநிறைந்தபகைவரைத்தொடர்ந்து, எதிர்த்தயாவரும்புறங்கொடுத்து முறிந்தோடும்படி யவர்கள்மேல் சரமாரியைப் பொழிந்து,பின்னும் ஓயாமல் வில்லுக்களினொலிப்பதால் முழங்கவும், ஒழியாமல் இரதங்கள் சுற்றி வருவதால் முழங்கவும், யானைகளுங், குதிரைகளு மிறந்தொழிவதால் முழங்கவும், போர்வினைவதற்கு இடைவிடாமல வாச்சியங்கள் முழங்கவும், இரத்தங்கள்நதிபோலப் பெருகியோடி முழங்கவும், உடல்களைவெட்டி யாயுதங்களு முழங்கவும், ஒழிவில்லாமல வெட்டுண்டபகைவர் முழங்கவுந், தேருருளைகள் துண்டாகமுறிந்து தேரிற்கட்டிய குதிரைகளுமடிந்து பலதேர்க ளழியவும், வாளினாலே வெட்டுப்பட்ட தலைகளுங் கைகளு மற்றுப்போய்ப் பலபோராகப் பிணங்கள் குவியவுந், தண்டாயுதத்தினாலே பகைவருடைய வாள்களும், அம்புகளும், விற்களும், வேல்களுமொடியவும், அஸ்திரங்களினாலே யானைகளும், அசுவங்களுமடியவுங், கீழ்த்திசைக்கடல பொங்கி, மேற்றிசைக்கடலின்மேல் மூண்டு வெகுமுழக்கம்போல ஆழ்ந்த இரண்டுபடையாகிய சேனைகள் எதிர்த்துமுழக்கத் தாழ்ந்தகடல்போல இரத்தங்கள்பெருகி யலைகொண்டோடவும், அதில் கடலிலுள்ள தீவுகளைப்போல இறந்தமதயானைகள் கிடக்கவும், கடலுக்குள் குன்றுகள் அடித்தாற்போல உயிர்விடும்பொழுது யானைகளுங், குதிரைகளும் அந்தக் கடலுக்குள் ஒன்றின்மே லொன்று திரண்டுமடிக்கவும், போர்புரிந்ததன்றி மீளவு மிரண்டுபடைகளும் ஆர்ப்பரித்த மேககர்ச்சனையின் முழக்கத்தால பலயானைகளுங், குதிரைகளு, முறிந்துதைத்துத் துடித்து,உழக்கிக் குதித்துப் பாய்ந்திட, எழுந்த இரத்தத்தின் அலைகள் மிகுதியாககிளம்பி, சூரியன்முகத்திற் பட்டதினாலேயோ! ஒற்றையாழியையுடைய தேரின்மேலெழுந்த சூரியன் சிவந்துபோய் மாலைக்காலமானது. இதைக்கண்ட மன வூக்கமுள்ள சோகவன் மாலைக்காலமானதினால் இனி இராப்பொழுதுவந்தால் பகைவரைவெல்லும்படி நேரமில்லையேயென்று கருதிச், சூரியனைப்பார்த்து நீ யஸ்தமியாமல நில்லென்று சொன்னமாத்திரத்தில் சூரியன் அவ்விடத்தினி

ன்று பெயராமல் ஒருநாள்முழுதும் அங்கேநின்று, மயங்கி யஞ்சிநின்ற வஞ்சப்பகைவர் படைக்கு உதவியாக இருளைக்கொண்டுவந்த இரவென்னு மேறபடைவாராதபடி யதை மறுத்து வெட்டியழித்து, யூதர்கள்மேல் கருணைவைத்துத் தன்தேரைநிறுத்தித் தனது கிரணமாகிய அம்புகளை இரவிற்கெதிராக எய்ததுபோலவும், வேதநாயக னன்றையதினங் காட்டிய அரியபோரின்தன்மையை இருள்கொண்டு வானமறையாமல, பூமண்டலத்தாரறிந்து எக்காலத்து மறவாதிருக்கும்படி நாளு மறையாமல் நின்று தனது கிரணங்களாகிய குறுந்தடிகளைக்கொண்டு கடலாகிய முரசினை யோயாமல் முழங்கிய தன்மைபோலவுந் தோன்றியது.

இப்படியாகச் சூரியனஸ்தமியாம லிருப்பதைக்கண்ட பகைவர் சேனாசமுத்திரம் பதைத்தஞ்சிப் புறங்கொடுத் தோடும்போது, பாராவென்னு மரசனுடைய படைத்தலைவனாகிய கிசிதரன்என்பவன் தேரின்மேலேறிவந்து ஓடியதங்கள்படைகளுக்குக் கொடியஉறுதிமொழிகளைச்சொல்லிக் கூட்டிவந்து, மஹா உக்கிரத்தோடு விழித்தகண்களில் தீப்பொறிபறக்கும்படி யுத்தந்தொடுக்கையில் அதைக்கண்டு சோசுவனின் படைத்தலைவரு ளொருவனாகிய சோணன் என்பவன் சத்தியவேதம் வளரக்கடவதென்று வாழ்த்தி, மணித்தேரின்மேலெழுந்து பகைவனைமுடுக்கி மேகமுழக்கத்தினு மதிகமாய் முழங்கி, மஹா கோபத்தோடு போர்செய்யநெருங்கப், பின்பு நெருப்புப்பொறியுண்டாமட்டுங் கிளம்பும்படி இருவரும் வில்லாகியமேகத்தை வளைத்துஎய்த அம்புமாரியினால், வானமு மிருண்டஞ்சும்படிமொய்க்க மற்றப்படைகளணியாய்முறிந்துநிற்கவும், புண்படுத்திய அம்புகள் செய்தவழியால் வழிந்தஉதிரம் நதிபோல ஓடவும், போர்தொடுக்கும்போது கிசிதரன்பொழிந்த அளவில்லாத அம்புகளால் கொடைதானமில்லாத உலோபியன் பேரழிவதுபோலச் சோணனுடைய தேரின் மேலிருந்த கொடியனைத்தையும் பேரில்லாமலழித்தான். அதைக்கண்ட சோணன் மேகமிடித்தாற்போலமுழங்கி, மாலைமாலையாக அஸ்திரங்களையளவின்றி யெய்ததினால் பகைவனுடைய தேரிற்பூட்டிய குதிரைகளும், அதைநடத்தின சாரதியுமிறந்து தேர்நடையில்லாமல்நிற்கப் பெரியசெப்பட்டைகளை யறுத்த மலைபோல கிசிதரனிருக்கும்போது உலகமுடியுங் கடையுகத்தில் பெருங்காற்றுச்சுழன்றடிப்பதுபோலச் சோணன்மீளவுஞ்சினந்து தன்தேரை முடுக்கிச்சூழ்ந்துநெருங்க அஸ்திரங்களையெய்தான். அதைக்கண்டு தேரின்மேலிருந்த கிசிதரன் வெய்யப்பட்டவர்களுடைய கையிலுள்ள தாற்றூர் சுழலுமாப்போலச் சுழன்று முகமுகமாயெதிர்த்துநின்று முறைதப்பாம லஸ்திரங்களை சரமாரியாகப் பொழிந்தும், அவைகள் பயனில்லாமையா யிருப்பதைக்கண்டு வஜ்ஜிரமலையும் பிளக்கத்தக்க முனையுள்ள ஒரு அக்கினியைப்பறிக்கும் சூலாயுதத்தையெடுத்து, இது உன்தேவனுக்குப் பழியாகவருவதென்று விட்டெறிந்தவுடனே அந்தப்பகைவனுக்குத் தீவினைவிளையுங் காலமானதால தெய்வத்தைப் பழித்துவிட்ட அந்தச்சூலாயுதம் பழித்தபயனைத்தரும்படி சூரியன்முன் னிருள்கெடுவதுபோல வருமவழியிலேயே புகையாக அழிந்தமையால் அதைக்கண்ட சோணனெய்த அஸ்திரங்கள் நிறைந்த தீவினையாற் பழுத்த நெஞ்சினையுடைய கிசிதரன்சினந்து புகைந்தஓர் அம்புக்கூடாயிருக்க தேவனுக்குஇகழ்ச்சியைச்சொன்ன வாய்நிறையப் புகுந்து அவன்மடியும்படிவதைத்தன.

இதைக்கண்டு வாசத்தேன்மலர் புஷ்பித்த ஏரிமநாட்டரசனாகிய பாரான் தனதுபடைத்தலைவ னிறந்தானென்று கோபித்து, மேகத்தினின்றுவரும இடியின்விசைபோல நெருப்பையொத்த அஸ்வங்களாலிழுக்கப்பட்ட மலைபோன்றதேரின்மேல்நின்று சோணன்மேலெதிர்த்து முடுகிவரும்போது, அதைக்கண்ட ஆதிவேதத்திற்கரசனாகிய சோசுவன் காற்றுப்போலப் பறந்துவந்து போரி

டும்படி நெருங்கியவுடனே சூலாயுதத்தையேந்திய பாரான் சோசுவனைநோக்கி
நெடுங்காலமாய்த் தவஞ்செய்தது உன்னுயிரையுண்ணும்படி வரத்தைப்பெற்று
விருப்பத்தோடு இந்தப்போர்க்களத்திலேவந்த சூலாயுதமிதுவென்றுசொல்லிப்
பகைத்தில் சமர்செய்தவரெல்லாரும் பயந்து மூழ்கிநோடும்படி, மேகத்தினின்
றுமிர்ந்த இடியைப்போல அந்தச்சூலாயுதத்தை மஹாவிசையோடு எறிந்த
வுடனே வேதவாசனுகிய சோசுவனதற்கு ஓரஸ்திரத்தைவிடுத்துக், கல்வியின்
முன்னே யறியாமை யழிவதுபோலப் பலதுள்களா யாகாயத்திற் பறக்கும்படி
செய்து, மீளவும் பகைவனுடைய தேரின்சிகரமழியும்படி பலபாணங்களையுந்
தொடுக்கையில் தலைச்சிராவில்மேல் புலியின்முகவடிவுள்ள பாரான் தனது
சூலமழிந்ததைக்கண்டு கோடையிடிபோல ஆர்ப்பரித்து, மீளவுங் கரும்பாம்பு
கவ்வியபிடித்த பூரணசந்திரனைப்போலத் தன்விரல்களாற்பிடித்து ஒருசக்கராயு
தத்தையெடுத்து, எறியுமுன்னமே நரகத்திற்கும்பயமவருத்துந் தருமத்தினுல்
ஜெயங்கொண்ட சோசுவன் இளம்பிறைபோல்வளைந்த ஓரஸ்திரத்தை யெடுத்
துக் காமத்தாலொருவனுக்குத் தீவினைவிளையுஞ் சீக்கிரமாகவிடுத்து, அந்தச்
சக்கரத்தையும், அதைப்பிடித்த அவனுடைய வலதுகரத்தையு மறுத்தபோது
பாரான்வெகுண்டு அடியோடறுபட்ட வலதுகையை இடதுகையாலெடுத்து
ப்பிடித்துச் சக்கரத்தோடுகையையும், சூழநின்றவீரர்கள் இடிபோல முழங்கி
னக்கக்கும்படி யெறிந்தவுடன் கையுஞ், சக்கரமும், நடுவழியில் விசையின்றி
விழுந்ததைச் சோசுவன்கண்டு கொடியற்று அவனுடைய தோழியவும், மார்
புபிளந்து சாரதிமடியவுங், காலகளற்றுக் குதிரைகளொழியவும், அவன்சூடிய
முடியோடு தலையுமற்றுப் பாரானென்னும் பெயருமழியவும் அம்புகளை மாரி
யாகவிட்டுக் கொன்றநேரத்தில் இதைக்கண்டபகைவர் சேனசமுத்திரம்பயந்து
நடுங்கியிருக்க, யூதா படையெல்லாம் மூடுகிச்சென்று சிலயானைகளெதிர்பட்டு
அச்சத்தால மதமொழிந்துநிற்கவுஞ், சிலயானைகள் வெட்டுப்பட்டதினல் தந்
தங்களில்லாமல் முறியவுஞ், சிலதேர் குதிரைகளில்லாமனுஞ், சிலதே ருருளை
யில்லாமலுங் கிடக்கவும், இறகைக்கொண்டு பறப்பனபோலப் பாயுங்குதிரைக
ளில்லாமலும், போர்செய்யும்படி யாயுதங்களுமில்லாமலும், இரத்தம் நதிபோ
லப் பெருகவும், அஸ்திரங்களை ஒழியாமலெய்து நெடும்போர்புரிந்து யாவரை
யுமடித்து ஜெயங்கொண்டார்கள்.

இப்படி ஐந்தரசருள் மூன்றாசரும், அவர்களுடைய சேனைகளு மடிந்
தொழிந்தபிறகுதன்னுமத்தினுல் போர்நொந்தாரையும்படியானவல்லபமுடைய
அரசனுகிய ஓவான்மேகத்தையுந் தோல்விசெய்யுமுயர்ந்தமதயானையின்மேலே
றி, பின்னலைக்கோப்பளிகரும் வேலேந்தி இரத, கஜ, துரக, பதாதியென்னும்
சதுரங்க சேனைகளையுங் கருடவியூகமாக வகுத்துத், தன்படைகள்சற்றுமுறியாம
லிருக்கச்செய்து போர்புரியவருவதைச் சோசுவன்கண்டு தானும் வில்வில்வல்
லவராகிய தன்வீரருமாகத் தேரின்மீதேறி மஹாவிசையோடுவந்து, கருடவியூக
த்தில் விரித்துவைத்த இரண்டிறகுமறியும்படி வேங்கையின் கூட்டம்போலத்
தாக்கி, மீளவும் விட்ட அஸ்திரங்கள் கேடகங்களிற்பட்டு மின்னிறைப்போல நெ
ருப்பைத்திரளா யுமிழ்ந்துநிற்க, யூதர்கள் மாரிகாலத்திற்பெருகின கங்கையில
வரும் வெள்ளத்தையுமறைக்கும்படி திரண்டுவிசையோடு எதிர்த்தபோது தட
விஞற்போலத் தேர்களும், யானைகளும், அஸ்வங்களும், வீரர்களும், அழிந்து
விழக் கருடவியூகத்தி னிரண்டுசிறகு மழிந்தமாத்திரத்தில் கருடன்மார்பிலே
பாய்ந்த அம்புபோல ஓவான் யானைமேலிருக்க பேரணியைத் தாக்கினர்கள்.
அப்பொழுது கணவனுக்கு மிஞ்சிய ஸ்திரீ யொன்றையு மெண்ணுதிருப்பது
போலப் புறப்பகையை யெண்ணுதிருக்க ஓவானிதைக்கண்டு மனத்தில் நொந்
து, பிறவிக்குருடன் திடீரெனக்கண்திறந்து பார்த்ததுபோல வதிசயப்பட்டு,

மல்யிறுச்சி யதிரும்படி முழங்கி, யிடியைப்போல நின்றான். அப்பொழுது சோகவன் தன்வீரர்களோடு பகைவர் போரணியைத் தாக்கினவுடனே கொடிகளுங், குடைகளும், மேகத்தையொத்த தேர்களும், யானைகளுங், குதிரைகளும், நாணியோடு வில்லுகளுங், கவசத்தோடு மார்புகளும், அரசர்கள் சூடிய முடியோடு தலைகளும், அணியணியாயிருந்த படைவீரர்களுமழியவுஞ், சோகவனெய்த அம்புகளுக்குத் தப்புவாரொருவரு மில்லாதிருக்கவும், கூர்விட்ட கடுங்கணைகள் மேகமலருவிபட்டதுபோல கணக்கணவென்றுபோய்ப் பகைவரின் கவசத்தைப் பறப்பதினால் மின்னினைப்போலத்தீயெழும்பவும், மீளவுங்கூரியவஞ்சகராகிய அவர்கள் மார்பிலே பாய்வதினாலே மின்னியபின் மழைபொழிவதுபோல இரத்தவெள்ள மோடவும், அவர்கள் கரியமேகங்களைப்போல இறந்து விழவும், பெரியபர்வதங்களைப்பிளந்து தகர்க்குமிடிபோல யானைகளின் மார்பிலேபாய்ந்து அவற்றை விழுக்கியுமிருக்கையில இடித்த மேகமிரைவதுபோலச் சோகவன் முழங்கிய தேரின்மேலிருந்து கறங்கித்திரிந்து உயிர்களைக்கொன்று போர்செய்யும்போது பலதேர்க குருவில்லாமற் குலையவும், பலதேர்கள் சாரதியில்லாம லலையவும், பலதேர்களமேற்பாரப்பில்லாமல் விலகவும், பலதேர்கள் குதிரைகளில்லாமல் உலைவும், பலதேர்கள் வடிவோடொத்த கொடிஞ்சியில்லாமல் விலகவும், மற்றக்குதிரைகள் காலில்லாமற்கிடக்கவும், வீரர்கள் ஆயுதமில்லாமலும், வில்லுகள் நாணியில்லாமலுங் கிடக்கவும் அழித்துப் பின்னும் நடுவிலிருந்த போரணியை யழித்து வெற்றி சோகவன் உள்ளே நுழைந்தான். அப்பொழுது அக்கினிக்கோட்டையாகப் படைவீரர்கள் நெருங்கிநிற்க நடுவிலிருந்தவரசனாகிய ஓவான் பூதர்கள்வலத்தை காப்பேடிப்படியளவில்லாமலெய்த அம்புகளாற்சிந்திய உதிரவெள்ளம் அந்தக் கோட்டையாகிய தீயை யவித்ததுபோலச் சுற்றிலுமிருந்த படைவீரர்களிறந்தழிந்ததைக் கண்டு, கண்வழியாகத் தீப்பொறிபறக்கும்படி கோபித்து, மதயானையைத்தூண்டிச், சூழ்ந்த படையணியையழித்து, உள்ளே நுழைந்த தாயுபதியாகிய சோகவனுக்கெதிரோடிவந்து நெருப்பையு, மதத்தையுங் கலந்து பொழியும்படி அனேகிய யானையும் காணப்பட முழங்கி, யதன்மேல் காலூன்றி நின்று நெருப்பையுங் கடுமின்ற அழலும், நஞ்சுமளவுந்த இடிபோலும், வேலாயுதத்தையோங்கி, இரண்டுகைகளாலும் பிடித்து மிக்கவிசையோடு எறிந்தான். எறிந்த வேலாயுதமானது இடிபோலவந்து பாய்வதற்குமுன்னம் வில்லின் வல்லமையுடைய சோகவன் இளம்பிறைபோல வளைந்த, ஒரு அஸ்திரத்தை விடுத்து மேலே நெருப்புப்பறக்கும்படி வேலையறுத்து அதன் துண்டுகள் கண்ணுக்குப் புலப்படாமல் ஆகாயத்தில் மறையும்படிசெய்தபோது, இதைக்கண்ட ஓவானும் வில்லெடுத்து இருவருமாகமுழங்கி, இரண்டுபடைகளும் பயந்தழும்பும்படி யெய்த அம்புமாரிகள் வானமண்டலமும், பூமண்டலமும் நிறைவாக மொய்த்து, ஒன்றோடொன்று எதிர்த்துத் தம்முள் போர்செய்து அறுபட்டு விசையாலணைக்கும்படி தீயெழும்பினவி ஒருஅஸ்திரமும் இருவருடலிற் படாமலும் யாதொருக்கமலும் எங்குஞ் சிதறியிருப்பதைக்கண்ட சோகவன் மிகுந்தகோபங்கொண்டு மீளவும் ஆறும், பத்தும், இருபதும், ஐம்பதுமாக மழைமாரியாகச் சொரிந்து வில்லின்காலுந் தீப்பறக்கும்படி யதிசீக்கிரத்தில் கொடிய அஸ்திரங்களையெய்தபோது எய்த அம்புகளைத்தகைப்பம், ஓவான்தாங்கமாட்டாமல் அவன்கோலவண்டு, அவன்மார்பிலே புண்பட்டுக் கீழேவிழுந்த சோகவனின் கோல்ச் சொல்லுவார்: இக்காலவளவில்லம்புகது புறங்கொடுத்துறுகியாத என்று படையுமழியவும், உலகமெல்லா முழுவதுங்கும்படி செய்கின்ற காதுமிகுந்த வருசெயத்து நினைத்த வில்லின்திறத்தினாலல்ல, உன்கடவுளின் வல்லமையி

ராயாகும் என்று சொல்லிக்கப்பட்டு உயிரைத்தந்து இரத்தத்திலே யமிழ்ந்தி ருன். இதைக்கண்ட பகைவர்படையெல்லாம் சோகவ னொருவிலிலாக் கொண்டு போர்செய்யும்போது அவனெதிர்த்துப் போர்செய்தல் சகிக்கார்களாகிய தம்பிமார்களாரொருவருமில்லையெனப் பயந்துமுறிந்து புறங்கொடுத்தோடும்போது பூதர்களவர்களுக் கெதிராக ஓடி, பவர்கள் மார்பினைக்காணப்பிளந்துவந்து வேதத்தின்தன்மைக் குறைச்சொலபோல அவர்கள் மார்பினைப்பொருந்தவரும் கொடியபாணங்களைவிடுத்து, இரத, கஜ, துரக, பதாதி என்னும் நால்வகைத் தானையையும், வேரோடறுத்து அழித்துவருகையில் முன்சொன்ன ந்தராசருள் மிகவும் பெரிய அரசனுகிய அதுனிசதன் என்பவன் ஒருபோரிலே உலகமெல்லாம் புகழும்படி கலைசரும மடித்தொழிந்தபழி தன்னுள்ளத்தை வேகும்படி புகைத்ததினுல் தானேதினைத்தொடுத்துப் போர்க்களத்திலெதிர்த்துவந்தான்.

இப்படியாகச் சிறுகுன்றுபோலப் பறக்குந்தேரும், இலைக்கொப்பளிக்கும் வில்லும், விருதாக மகுடத்தின்மேல் துலங்கும் இளம்பிறையும், தன்னுமையும் தனக்குச்செய்யும் வெற்றியும், வாசனைமாறாத பூமாலையும், பல அரசர்கள் திறைகொடுத்துவணங்கும் பாதமும், ஆகியஇந்தச்சிறப்பெல்லாமுடைய அந்த அதுனிசதமன்னவன் இறந்த நால்வகைசேனைப்பற்றி உள்ளத்தில் வாடினுலும் சமர்முகத்திலே மடிந்தொழியச் சிதறிநின்ற சதுரங்கசேனை அறுபதினுயிரத்தையுஞ்சேர்த்து, இரண்டு சிறகுபோல இரண்டுவகுப்பாய்ப்பிரித்து, இடதுபுறச்சிறகுக்குத்தலைவனுக இருவலனென்பவனையும், வலதுபுறச்சிறகுக்குத் தலைவனுக கலன் என்பவனையும், இரண்டுபோர்முகப் புலிகளைப்போல நிறுத்தித் தான் இரண்டிற்கு முகமாக நடுவேநின்று பொன்னினிருந்து அலங்கரிக்கப்பட்ட தேரின்மேல்நின்று போரைத்தொடங்குகையில் அதைக்கண்டு பெரியோர்கட்டையும்போரைத் துன்பத்திலமைந்து செய்தற்கு அரியனைகளைக்கண்டு மேன்மையுடைய தன்மையுடைய சோகவல்லனானுந் தன்சேனைசமுத்திரத்தை இரண்டுவகையாகப்பிரித்து, மதயானைமேலேறியிருக்கும் கனையனென்பவனையும், சசகதனென்பவனையும், இருபடைத்தலைவராக நிறுத்தின், தானதேவிலிருந்துகொண்டு இடிக்கு மேகமும், அடிக்கும் பெருங்காற்றும், போன்றுங் கடலும், பிசாசகரம் கொடுக்கப் புழுக்கிறிடைப், பூவுலகு நடுநிலையுங் கலங்கும்படி இருபடைகளுங்கலந்து போர்தொடங்கும்போது அத்தலைமையிலும் வேதத்தாசனுடைய சோகவல்லன் போர்முகத்தைக்கண்டபோதே வெற்றிமுகத்தைக்கொண்டும் புகழ்ச்சியைக்கொண்டிருந்தும் இந்தப்போரில் தன்னிலைவாரித்து வெற்றிகொண்டதாகக் கருதுமகிழ்ந்திருந்தான். மீண்டும் இருட்குழுகொண்ட கூந்தலுடைய மாதர்கள் மைசவாடுதல்போல அந்த இரண்டு பெரும்படைகளும் எதிர்த்தும், பிரிந்தும், கலந்தும், இரத்தங்க ளிரண்டாறாக வோடப் பெரும்போர்செய்ய, இரண்டுபடைகளிலுஞ்சோகவிருந்தப்பெரும்போர்நடக்கும்போது ஜெருசலேம் மட்டுமன்னசனுகிய அதுனிசதனின் இடதுபுறப்படைத்தலைவனுகிய இருவலன் மிகவும் ஆர்ப்பரித்துமுழங்கி, தன்சேனைகளுக்குச்சொன்னவுறுதியால் அவர்கள் எரியுந்தீபோல வீரங்கொண்டு பூதர்களமேல் கடும்போர்புரிக்க உக்கிரத்தால் பூதப்படைமுறிந்து ஓடத்தொடங்குகையில் அந்த இடத்திற்குச் சோகவல்லனே படைத்தலைவனுக நியமிக்கப்பட்ட கனையன் இதைக்கண்டு கோபித்துச் சீறிமுழங்கித் தன்படைகள் புறங்கொடுத்தோடாதபடி உறுதிகொடுத்து, அவர்களுக்கு வேதத்தின்னயையும், பூதர்குலத்தின் மாட்சிமையும், அதனையறிந்துந் தாங்கள்செய்த போர்களின்சிறப்பும், வெற்றியும்வெகுவாக உரைத்து, முன்போல அணிவகுத்து நிறுத்திப், பின்புதான் நீதிவந்து சினந்த கோதண்டத்தை வளைத்து நாணியேற்றி, பெய்த சாமரியால் குகிைகளுக்,

குதிரைகளால் மிதிக்கப்பட்ட இரதங்களும், மதயானைகளும், பகைவர் படையு முறிந்தொழியும்படி கரிகளினுடைய திக்கில் மின்னப்புகைத்தபோல புகுந்து, உலர்ந்த மூங்கில்வனத்திலே பெருநெருப்புப்பற்றினாற்போல அழித்த போது பகைவர்படை முறிந்தோடுவதைக்கண்டு அதற்குத்தலைவனாகிய இருலன் மிகுதியுங்கோபித்தும், அதைத் திருப்பிக்கொண்டு வராமையால் தறதறவென்று கையைக்கடித்து ஆர்ப்பரித்த சனியன்மேலே காற்றுப்போலப்பறந்து போயானையைத்தாண்டியெதிர்த்துப் போர்செய்யத்தொடங்கினான்.

இப்படியாகச் சனியனும், இருலனும், பொன்னாலும் முத்தினாலும் மணியும், வஜ்ரத்தாலிரட்டின வில்லும், அக்கினிமயமபொழியு மந்திரமும், சொபத்தாற் புகைந்தசொல்லும், இருமையொத்த கொடியநெஞ்சமும், தீப்பறக்குங்கண்களும், விளங்கிய ஆபரணங்களால் மின்னலையொத்த ஒளியும், புலால்நாற்றநாறுகின்ற வெற்றியாளும உடையவர்களாய்க் கொடியபாறியையொத்த இரண்டு மதயானைகளமேலேறி, இரண்டுமலைபோலத்தோன்றி, மேகத்தினிடியோசையுமுழங்கிருக்கும நீண்டவிற்களை வளைத்து, எய்த் சரமாரிபொழிந்தவாயகொண்டு உயிர்களை ஒழிப்பமதுண்டானபால இரண்டுசேனைகளிலும் இரத்தம இரண்டுவெள்ளம்போல வோடும்படி கொடியயுத்தந்தொடங்குகையில யமனைப்போல யாவற்றையுங்கடிக்கொண்டு வழியில்லா ஒழியாமல் விரைந்த சனியனுடைய மதயானையின் மத்தகத்தினிடையில இருலன்விட்ட அஸ்திரங்களில மூன்றம்புகள் தைத்ததினால் அவன்சற்றேதாழவொண்டாடினான், அதைக்கண்ட சனியன் தன்னுடைய வில்லின்விசையால சடுதியாக மாலைமாலையாக அளவிறந்தபாணங்களைப் பெய்து, இருலனுடைய வில்லையொடித்துப் பின்னு மெய்சமணிந்த அவன்மார்பினையுமபிளக்கும்படி யென்னைப்படாத் கணைகளை மொனையிருதியாள் பின்னும்பிசைவினைய்யோடு வட்டமாகவிற்றலைநிலையாக்கிரத்தில் வளையாதும்படிமுழங்கி, வில்லுமுறித்தது. இப்படி இருவருடைய விற்களை முறித்ததினால் மிகுதியாகக்கோபித்து, இருவரும் பவளத்தின் மரங்களைப் பழுத்திய பழங்களைப்போல உதட்டின்மேல் பல்லழுந்தும்படி கடித்து, வாளையடித்து மீளவும் யுத்தஞ்செய்வதற்கு எதிராய்த்தோன்றுவதனால் தங்கள் யானைகளின் கையிலே கதாயுதங்களைத்தந்து மகிழ்ந்து இருநெருப்புப்போலச் சீறுகின்றயானைகளைச் சமர்செய்யவிடுக்கையில் இரண்டு மேகங்கள் எரிகின்ற பலஇடிகளையுமிழ்ந்து எதிர்த்திரிந்து விளையாடுவதுபோல இரண்டுயானைகளும் போர்க்களம நடுங்கவும், நெருப்புப்பொறி பொழும்பவும், அருகிருந்த படைகளவும் நாசமழியவும், எதிர்ப்பட்டவைகளைத் தீந்து எரியவும், மற்றெவரும் இரிக்கவுமாகவுட, கதாயுதங்கள் திசைகளெங்கும் பறிந்தது வேகமாய், தங்களுக்குள் பிரித்தும், எதிர்த்தும், கதைகளைக்கொண்டு அடித்தும், வருகையில் சனியனுடைய மதயானையானது யானைமேலிருக்கவர்கள் நிலைக்கு வைத்திட இருலனுடைய யானையேந்திய கதாயுதத்தை யாகாயத்திலெழும்பும்படி யடித்தழித்துப், பின்னுங் கதாயுதத்தால் அந்தயானையின் மத்தகத்தை சேதிக்கப்பிளந்து கொன்றுநின்றபோது இருலன் மலையினின்றுபாயும் புலியைப்போல இறந்தயானையினின்று மகாகோபத்தோடு கீழேபாய்ந்து மின்னியயானை புகுவிச் சனியன்மேலே பாய்வதற்குமுன் சனியனேறிய அந்த யானை தனது அழற்பொங்கிய கதாயுதத்தால் இருலனையடித்துமடித்துக் கீழேதள்ளி, பவனி மார்பிலே தனதுதந்தங்களால் குத்திப்பிடித்து, இரத்தமழைசொரியும்படி சுழற்றி யாகாயத்திலெறிந்தது.

இவ்வாறு இடதுபுறத்தில் இருலன் சாகவும், சனியன் ஜெயங்கொள்ளவும், மேகமும் கடலுங்கூடி முழங்கினாற்போலப் பலவாச்சியங்கள் முழங்கவும் போர்முனையின் வலதுபுறத்திலும் பூவுலகிலெங்கிலுமில்லாத முழக்கத்தோடு

பெருமலைகளு மதிரும்படி போர்தொடுக்கும்போது அந்தப்பக்கத்திற்கு சோகனனுடைய படைத்தலைவனுகிய சச்சுதன் தானேறிய யானையை யதட்டித் தீயைப்போலக்கோபித்த கொடியகணைகளை யளவின்றிப் பொழிந்து சிங்கஞ்சினந்து அதட்டியபோது யானைகள் முறிந்தாற்போலப் பகைவரெல்லாம் முறிந்தோடும்படி பந்தியிலும் ஆடுகின்ற அசுவங்களும், மதகஜங்களும், பாயியதேர்களும், எதிர்த்த மற்றயாவருஞ்சாய்ந்திறக்கும்படி யழித்ததால் இரத்தத்தைச்சிந்திய பிணங்கள் இருக்கைபோலக் குவிந்திருக்க, அதிலே பிறைக்கதிபோல இரத்தமோடத்தொடங்குகையில் அந்தப்பக்கத்திலிருந்த அநுனிசகனின் படைத்தலைவனுகிய நிகலனு முயர்ந்ததேரின்மேல் குதித்தேறி கொழுந்துவிட்டெரியுஞ் செந்தீயு மழுங்கும்படி கோபத்தோடு உயிர்களைக்கொல்லுகின்ற கொடியவேங்கை பாய்ந்து மலையுமதிரும்படி சமர்செய்தாற்போலத் தானுமெடுத்தமுழங்கி, அக்கினியாஸ்திரங்களைவிட்டு மட்டிலவாதவுயிர்களை விழுங்கும்படிகொன்று. செக்கீருந்து செந்தியும், புறப்படச்சொரியும் பற்களோடு கர்ஜித்து மிருகஞ் சிங்கத்தின்மேல கோபமிகுந்த வேங்கை யெதிர்த்ததுபோல மஹாபலாக்கிரமமுள்ள சச்சுதன்மே லெதிர்த்தமாத்திரத்தில் உலர்ந்துபோன இரண்டுமூங்கில்காட்டை இரண்டுபெருநெருப்புப் புகுந்தெரித்ததுபோலே இருவருஞ் செய்யுகின்றபோர் பெருகிவரும்போது நிகலன் அகோரமான ஒரு சக்கராயுதத்தை யெடுத்தெறிந்தான். அந்தச்சக்கராயுதமானது கோபித்ததுபோலவந்து கறுத்த மேகத்துள் பூரணசந்திரனுமறைந்ததுபோல சச்சுதனடத்தினயானை சமர்செய்துவருகையில் அதன்மார்பிற்பட்டுருவி, யதனுயிரையுண்டவுடன் யானை முறிந்து கீழேவிழுவதைக்கண்ட சச்சுதன் கரியமேகத்திலின்று மின்னலோடு இடியிடித்துப்பாய்ந்தாற்போல எரிவாளைக் கையிலெடுத்துச் சுழற்றிக்கொண்டு கரிய யானையினின்றுபாய்ந்து நிகலனேறியிருந்த தேரின்மேல் பறக்கும்பாம்புபோல ஓரேபாய்ச்சலாகப் பாய்ந்தேறி, யவனையிரண்டாகப் பிளந்துவெட்டி யாகாயமார்க்கமாயெறிந்து, சத்துராதிகளுஞ்சிக்கலங்கும்படி அந்தத்சேனைத்தானடத்தினுன்.

முன்கூறியபடி யிரண்டுசேனைகளுமுள்ள படைமுகத்திற் போர்நடக்கையில்குவிந்திருந்த பேரணியிலே சோகனும் அதுனிசகனுமாகிய இரண்டரசர்களுந் தங்களுக்குளெதிர்த்து, முரசு, சங்கு, முதலிய மற்றைப் படைவாச்சியங்கள் முழங்குமுழக்குமும்பாய்ந்தோடுகின்ற குதிரைகளும் மதம்பொழியானைகளுஞ் சுழன்றுதிரியுந்தேர்களு முழக்குமுழக்கமும், வீரர்களும் வில்லின்நாணோசையும், வில்லினின்று பொழியுஞ் சரமாரியின்றோசையும், இருபக்கத்திலும் விசிறிவீசாமலும், ஒழிவிலரமதுஞ் சொல்லுந்தன்மையில்லாமல் முழக்கிநிற்க, இரண்டுதேரின்மேலேறி யிடிமுழக்கமொடுதிரியு மேகம்போலத் தோன்றியிருந்து இருண்டமேகத்தைக் கண்ட குயில்கள்மெலிந்து வாடுவதுபோல இவர்களுடைய சிலையாகிய இரண்டுவெகுளுகத்தி லெதிர்த்த படையவர்கள் இறந்தொழியத் தீப்பொறிபறக்கும்படி விசைவேகமோடு கோதண்டங்களைவளைத்து, அளவிறந்த நெருப்பைப்பொழிந்தாற்போல அஸ்திரமழையைப்பொழிந்து அம்புத்தப்புண்ணின்வழியாக உதிரப்பிரவாகம் புரண்டோடவும், வலப்புறமும், இடப்புறமுமாக வரும் ஓசையினுல் காற்றுப்போலவும், வரும் இடங்களிலுண்டாகிய ஓசையினுற் கடல்போலவும், உண்டாகிய பயங்கரத்தினுல் இடிபோலவும், ஒழியாமல்பெய்யுங் கணையால் மேகம்போலவுந், செய்கின்ற கொலையினுல் யமன்போலவுந் தோன்றிக் கணியாத கோபத்தோடு உயிர்களைக்கொல்லுந் தீயைப்போல குவியல் குவியலாக மிகுத்தேறும்படி வெட்டியழித்தபிணக்குப்பைகள்மலைபோலுயர்ந்திருக்கவும், ஆகாயத்தில் மொய்த்துநிறைந்த பாணங்கள் மேகங்களைப்போல இருள்செய்யவும், இறக்கவிட்டதி லெழுந்தநுசை யிருசெவிகளை யடைக்கவும், போர்பொ

குதும்போது காற்றின்முன்னெழுந்த கடலைப்போல இவ்விரண்டு அரசர்களிடத்திலுமுண்டான சேனைவீரர்களும் புறங்கொடாமலெதிர்த்து ஒப்பில்லாத சமர்தொடுக்கும்நேரத்தில் இரண்டுசிறகிலிருந்த படைகளெல்லாங் கெட்டுமுறிந்ததென்று ஒருவீரன்வந்து விருதாக இளம்பிறைபதித்த முடியுள்ள அதுனீசதனுக்குச் சொன்னவுடனே அதுனீசதன் தனது இருபடையுமுறிந்ததென்று நொந்தலறிக் கோபித்துத் தன்தேர் அதிரவும், அக்கினிமேற்பறியவும், வீரக்கழலையணிந்த காலினால் தேரைப்புடைத்து, உடனே ஒருவில்லையெடுத்து, அவ்வில்லையும் அவசரத்திலுல வளைக்கும்போது அவ்வில்லுமுறிய வேறொரு வில்லையெடுத்துவளைத்து நாணியேற்றுவதற்குள்ளாகக் கடவுள்தந்த சத்தியவேதத்தினரசனாகிய சோசுவன் நூறு அம்புக்கு மேற்பட்ட அம்புகளை ஒன்றின்பின்னொன்றாக ஒழிவில்லாமலெய்து, அதுனீசதன் உடம்பெல்லாந் தைத்துருவும்படிசெய்ய, அதுகண்டு அதுனீசதன் மதயானையிலுஞ் சீறிமுழங்கி யொரு முட்பன்றியைப்போலத்தோன்றித், தைத்த அம்புகளைப்பறிக்கையில் வடிந்தோடிய இரத்தவெள்ளத்தினாலே மலைமேற்பவளக்கொடி முளைத்ததுபோலத் தேரின்மேலிருந்து, தானெடுத்த போர்வகையெல்லாஞ் சமயத்திலே உதவாதிருப்பதைக் கண்டு கண்வழியாகக் கோபாக்கினியைப்பொழிந்து முழங்கியிருக்கையில் தர்மத்தையறிந்து போர்செய்யுமன்னவனாகிய சோசுவன்பின்னும் ஒருகணைவிடுத்துப், பாம்பு சந்திரனைப்பிடிப்பதுபோல அவன் விருதாக முடிமேல்வைத்த இளம்பிறையைப்பறித்தழித்து மீளவுமொரு அஸ்திரத்தைவிடுத்துச் சூரியன் கடலிலேயழுந்தினாற்போல அவனணிந்த முடியுங்கவிழ்ந்துவிழும்படி தள்ளினவுடனே அதுனீசதன் பிறைபதித்திருந்த தனது கிரீடம் அற்றுவிழுந்ததென்று மனத்திற்பதித்ததுன்பம் பொறுக்கமாட்டாமல் அலறி, வாசப்பூமாலையும் வெண்டொழிய நெஞ்சினில் தீப்பறக்கக்கோபித்து, உதிரமும், நஞ்சமாயடிந்த மஹாதுனிக் கூர்மையுள்ள ஒருகணையையெடுத்துச் சோசுவனைநோக்கி இனி உன் முடியை நான்சூடிக்கொள்ளுவேனென்றுரைத்து, கருக்கொண்ட மேகமிடித்தாற்போல முழங்கி வில்லைவளைத்து அம்பினுனி புதைத்துமறையும்படி மிகவும்வலித்து வாங்கி, மஹாவிசையோடு விட்டெய்தமாத்திரத்தில் அந்த அகோர அஸ்திரமானது தன்னையெய்த வில்லினுருவத்தை முழுதும்விட்டுப் பிரிவதற்குள்ளாக யுத்தத்தையுதைத்தழிக்குஞ் சிங்கம்போல நிகரில்லாத சோசுவன் ஒரு கணையெய்து அந்த அஸ்திரத்தைக் கடித்தழித்து மீளவும் அதுனீசதன் சொன்னமொழிக்கு மறுமொழியாக இதைமுடியாகப் புனைவாயென்று பிறைபோல வளைந்த ஓர்கணையை யொலியெழும்படியெய்து அவன்நெற்றியை நேராண்டாலம்பிளக்க, அவன் தன்பாபத்தினாலுதைக்கப்பட்டழிந்தான். பின்னுமான்கூட்டம்போலப் பகைவர்படையெல்லாம் புறங்கொடுத்து முறிந்தோடுகையில் சத்தியவேதத்தாராகிய யூதர்களெல்லாருஞ் சிங்கங்களைப்போலத் திரண்டுசீறி ஒன்றின்பின்னொன்றாக வாரியிறைத்த அஸ்திரமழையாலும், பல ஆயுதங்களாலும் பெருங்காற்றின்முன்னே தழைகளுதிர்ந்தாற்போல அளவில்லாத பல உயிர்களழிந்துவிழவும், குருதியலைகொண்டு வெள்ளமாயோடவும், கடவுளுக்குமுன்பாகக் குற்றங்களெல்லாம் மொழிவதுபோல சதுரங்கசேனைகளும், உடம்பிக்கக் கடாதவிதமாய்க் கெட்டழிந்து ஓடும்பொழுது வெற்றியைக்கொண்டு களிகூர்ந்துநின்ற சோசுவன் பகைவரை வெட்டியழித்துத் துரத்தி ஜெயங்கொண்ட தன்படைகள் இனித்தொடராதபடி போனைகிலுத்தினபின்னும் கடவுள் தானிவியே போர்தொடுக்கித் தன்னளவிறந்த வல்லமையை யெவருமறியப் பும்படிகாட்டி, யோடினபகைவர் படையைக்கொன்றார்.

அதெப்படியென்றால்:— முறிந்தோடினபகைவர் ஒருங்குடன் ஒருகணப் பொழுதிற்குமுன் ஜழியும்படி பரந்த அலைகைக்கவிழ்த்தாற்போலக் கோபித்த

இடிகளால் மொய்த்த மேகங்களாய் எங்கும்பரந்து, யுத்தகளத்தில் சேனைகள் முனையும்படி குமுறுகின்ற மேகம்போலவுங் கருகிகொண்ட இடிகளோடு சினைத்தி னால் போர்முகத்தைத் தீவினைவிளைந்த மனம்போலவும் எங்குமிருளும்படி மிகுதி யாக வதிர்ந்து முழங்கி, அசேகடாவதங்களின் கிரகங்க ளொன்றோடொன்று மோதிப் போர்செய்வதுபோல இடிகளொலித்ததுக, சேர்ந்தெரிந்தமேகங்கள் தங் களுக்கு ளெதிர்த்துப் பொருதுவதால், அந்த மலைகள் தாங்களுக்குள்ளெதிர்த்து, துணிதுண்டாகத் தகர்ந்து விழுவதுபோல இடிமுழக்கத்தோடு மழையாகத் திரண்ட பெருங்கல்லுகளைப்பொழிந்து, பல்கவரிவதேர்கள் பொடிபொடியாக ஒடியவும், மதயானைகளுங், குதிரைகளுங் கூடியவும், வில்லுகளும், அஸ்திரங்க ளும், மற்றாயுதங்களு முறியவுங், கையுங், காலுந், தலையும், வேறாக உடல்க ளழிந்து சத்துருவேந்தர்களைப் பகைத்தவீரரும், படைத்தலைவரும், மாசரும், மற்ற வர்களுந் தளரும் வழியவும், விழுந்த இடிகளால் யாவுமெரியவும்; களமெழு பெய்தவிளை லெழும்புமோசையும், இடிகளிடிக்குமோசையும், இடியிறும ஒடி கின்ற தேர்களின்றேசையும், யானைகளுங், குதிரைகளும், இறப்பதினாலுண்டாகு மோசையும், இறந்தொழிபவர் அலறிமுழங்குமோசையுந், திரண்டுமுழங்கவும், பகைவரடங்கி நாகந்திரிவதிய விழுந்தும்போது விண்மண்டலத்தாரும், பூம ண்டலத்தாரும், இதைக்கண்டுபயந்து கடவுளுடைய மேலானவல்லமையைத் துதித்தொடங்குவார்; வில்விசேவல்லவர்கள்செய்த போரவலாமலுஞ் சூரிய னுந் தன்கிரணத்தேர்ப் பெயராமல் ஒருநாள் முழுதும்நின்று போர்செய்யப் போரிலமையாமல் தப்பின சிலவுயிர்களு மழியும்படி கல்மழைபெய்த மேகங்களும், போர்செய்தமையால் ஆண்டவனின் கோபமிகுதி தோன்றிற்றெ ன்பார்; சோகவன் மூசையெழும்படி வளர்த்த ஒருவிசேஷமுகத்தில் ஜூ கசரும் அவர்களுடைய படையும், இருநாளைகருள் வழிந்திறந்தபின்பு இனி மிகவுங்கோபித்துக் கடவுள் போர்செய்யுங்காலத்தில் எவர் வாழ்வாரொன்று அருசி, புலம்பிநிற்பார்; வல்லமைகொண்ட பகைவர் போர்முகத்தில் அழி யாமல் ஆள்வாராயினும், மெலிந்தவர்களுக்குநான் போர்செய்யுங்காலத்தில் தங்கள் தீவினை தகர்ந்திடாமலிருந்தால் அப்பொழுது ஆண்டவனும் வல்ல மையொத்த வனக்கொண்டு போர்செய்வதால் கெடாமற் பொலிவுபெற்று வாழவல்லவர் யார்; என்றுரைத்து அளவில்லாமல் தப்பானை வாழ்த்திப் பணி வார்கள்.

இப்படியாக கொடிய போர்முகத்தில் இவையாவையுஞ் செய்ததாதன் யாரென்றால், வானுலகத்திலுள்ள அழியாதவாழ்க்கையைப் பூவுலகத்தோர்க் களிக்கும்படி தேன்பொழிந்த பூவரும்பின் திருமுகத்தோடுதோன்றித், தனது திருமுகத்திலே யாவரில்லாத அன்பின் கருணையைக்காட்டும் இக்கத்தேவருமா னதாலேயென்று புண்ணிய சோகமலினபமாயாற்றிலுப்போலச் சூசைமாமு னிகளின் துன்பத்தைத்துடைத்து, மனமலர்ந்து சந்தோஷிக்கும்படி வீணையே சிறுபோலப் பாடிநு மினியசொற்கொண்டு கண்களுங்களிகூரக் கிரணத்தை த்தெளித்துச், சதிர்த்தை யெழுதிகாட்டினதுபோல வானுலகத்தாரு மதிச யிக்கு மிந்தச்செயலை மிகவும் விரிவாகச்சொல்லி, மிக்கயேசென்னும் வா னவன் திருக்குமாரனி விரண்டோதாம்புஜங்களையுமவனையெடுத்தே இதைக் கேட்ட கன்னித்தாயாருஞ், சூசைமாமுனிகளும், இப்படிப் பேர்பெற்றுயர்ந்த புக முடைய வெற்றிகொடுக்க இக்காலில் சகிபகோலத்தைத்தியமித்து நமதுமேல வைத்த விருப்பத்திலுங் கருணையாற்களிக்க, மனிதனுயவதரித்த பெருந்தன் மையைப் பாராட்டி, திருக்குமாரனின் கதிரவெழுதப்பட்ட செங்கமலத் திரு வடிகளைப் பலமுறையாக இறைஞ்சிப் பேரின்பகடலில் மூழ்கி பதிசரித்து, நிற்கும்போது சூழவின்றவானவர்கள் வாசமுள்ளப் பூமாலைகளையணிய விணைக

லேயெடுத்து, மரகதமணியையொத்த தாளின்மேற்பூக்க காந்தள்புஷ்பத்தை நிகர்த்த அழகியகைகளால் வண்டினங்களின் இனியகுரலையொத்த சங்கீதத்தைத் தருவதற்குக் காரணமாகிய பலமணி நரம்புகளின்மேல் படர்தல், உரசல், வடித்தல், உந்தல், உறழ்தல், உருட்டல், தெருட்டல், அள்ளல், என்னும் எட்டுவகை இசைகளோடு வாசித்துநிற்கத் திருமணிச்சாயலாள் இருக்கும் தேவ தாயார் தன்திருமகனைநோக்கிப் பாடத்தொடங்குவாள்.

மாற்றாயந்து மயங்குதற்குக் காரணமாகிய வல்லமையுடையோனே! மயக்கமில்லாமல் கோபத்தைக்கொன்றோனே! அருளொழுகிக்க கருணையுருவோனே! அளவிறந்த செல்வத்தில் மிக்கோனே! தெளிந்தகலவியின் வடிவே! பூவுலகமழியாத மனுக்கோலமெடுத்தோனே! செம்பொன்னிற்பதித்த மாணிக்கவுருவோனே! உனது வாசமலர்ப்பாதத்தைத் தொழுதேன் என்பாள்; செவிப்புலனாகிய ஓசையைக்கொண்ட உரையொன்றுமில்லாமல் கல்வியெல்லாமுணர்த்தும் நிலையே! உயர்ந்தருமத்தையே யுடையும் பொருளே! கரையில்லாத சகலநன்மைநிறைந்த கடலே! மோக்ஷத்திற் சென்ற வுயிர்கள்சேருங் கரையே! மட்டில்லாதசுகாநந்தநிலையே! வானுந் தவமொன்றேசேரு மலையே! ஒப்பில்லாத தன்மையாக மனுமகனானவனே! உனது நிறைவாகமலர்ந்த சேவடிகளைவணங்கினேன் என்பாள்; வாசமலர்ச் சோலையையொத்த வருளால் நிழல்செய்தளிக்கவல்லனே! வேத மெய்க்கருத்துப் பயன்தரும்படி வந்தவனே! செவ்வதாமரைகளைப்பொழிப்பு மோக்ஷத்தையொத்த திருக்கமல காழுடையானே! மோக்ஷத்தைத்தரும் தனிமுதலே! வானவரு, மானுக்கரும் மலர்தூற்றி வணங்குந் திருவடிகளையுடையோனே! இக வதரித்துக் குருவாகவந்த நல்லறத்தில் வழுவாதநெறியே! உனது பூங்கழலை யிறைஞ்சினேன் என்பாள்.

[illegible] தாமரை, அல்லி, குவளை, மற்றப் பூக்களெல்லாம் மலரவும், [illegible]
[illegible] இனிதாயக் [illegible]
[illegible]
[illegible]
[illegible] ஆ[illegible]
[illegible] தாமரை [illegible]
[illegible] அந்தத் தடாகத்தினீரை யருந்திய [illegible] ஆபர

ணம்போல விளங்குந் திருக்காலுடைய பரிசுத்ததாயார் மணியின்சாயலாக நின்ற தனது திருக்குமாரனை மூடிவைத்திருந்த தூய அழகிய வெள்ளைவஸ்திரத்தை அதிற்றோய்த்ததினால் அந்தத் தண்ணீரை யுண்டமாத்திரத்தில் பிணிநோயெல்லாந்தீரும்படி அக்காலந்தொட்டு இக்காலவரையிலும், குறையாமல நடந்துவரும்படி † அத்தகு வரங்கிடைத்தபிறகு அந்தத்தடாகமானது தனக்குக் கொடுத்த வரத்தை மதித்தாற்போல அநேகரோகங்களையின்மேன்மேலேற்றி ஆவர் திருபாதத்தையும் வணங்கிய தன்மையாகவுந் தண்ணீரெல்லா மலர்ந்துவரும போது மணத்தபூவெல்லாமாடிநிற்பதால் தன்கையையெடுத்துத் தலைமேலவைத்துத் தொழுததுபோலவுந் தோன்றியிருந்தது.

மேலும், அந்தத்தடாகத்திற்குக் கடவுள் தந்த வரத்தினால் இம்மூவருக்கானும்படி எல்லைமகிழ்ந்ததுபோலவிருந்து பாறைத்திரையுமிழுஞ் சந்திரனின் முகத்தில் இளம்பனிவிழுவதுபோலக் கரையிலிருக்கு மரமெல்லாந் துளித்துளியாய்த் தேனைப்பொழிந்திருந்த, வண்டுகள் தேனிசைக்கொப்பாட நக்ஷத்திரங்களைப் பதித்தாற்போலிருக்குந் தோகையைவிரித்து மயில்கள் நடனமாடவும், அருகாமையில் அக்கரையிலுள்ள பறவையெல்லாம் அக்கரையில் மூழ்கி விளையாடிமாதர்களுடைய பாதத்துத் தாங்களுஞ்சிறகைவிரித்து இனிதாயாடவும், இதுவல்லாமல் நாரைகளுங், கொக்குகளும், அழகிற்சிறந்த அன்னங்களும், பனைவிலையம் போர்புரிந்து உள்ளவும், குதிக்கவுங், குதிக்கவுஞ்செய்து துள்ளிப்பாயுங் குதிரைகளைப்போல எதிரெதிராய்த் தொடர்ந்தலையவும், பறவைகளணியணியாய் வருகையில், கருங்குவளைமுதலிய மற்றமலரின் தேனையுண்ணும்படிவந்த வண்டுகள்செய்யுமுழக்க முரசிதோசையாக எழும்பப் பறவைகள் சமருமப் போர்செய்து, தங்களுக்குள் கூடவும், எதிர்க்கவும், இறகினைவிரிக்கவு, மடிக்கவும், போரில்மெலியவும், போர்புரியவும், மூழ்கவும், வெற்றிகொண்டதுபோலப் பொலியவும், பக்கத்திற்சாய்ந்து பிரியவும், மிருத்தலுமிழுறங்கவும், பற்பல இடத்தில் பற்பல பறவைகள் சொந்துகளுகளையில் ஆனந்தமோசையெழுப்பவும். இன்னுமழுக்குஞ்செய்த பறவைகள் வாசனைபோலிலமைத்த மலர்க்கொம்புமலராமல் தேனைப்பொழியும் பூவிதழ்களையுங் கிழித்துச் சிதறியும், மூக்கினாலெடுத்த நீலச்சிந்தியுஞ் சிந்தைகெடாப்போல முன்றையிலில்லாமற்செய்த விளையாட்டிப்போர முடிவில்லாதிருக்கவும், பலபுள்ளினங்கள் விளையாடிக்கொண்டு வருகையில், ஓராசு அன்னம் ஓடிவந்து தேன்பொழியுந் தாமரைமலரை மூக்கினாற்கவ்வி முன்னேபோடின பெட்டையின்மேல் வாசநீரைத்தூவியடித்து, வட்டத்தருத்தியால்மணைப்பவளிகைக்குள்ளிய பெண்கள் விளையாடினதுபோ லிருக்கவும், அந்தப்பெட்டையன்னம நாணினாற்போலத் தாமரைக்காட்டுள் கடைசியிலே யொளித்திருக்கக்கண்டு கவிழ்விருந்தமலராத அரும்புகள் சிரித்தாற்போல மலரவுந், கற்றிலுங் கூத்தாடியிருக்க பறவைக ளுமுழங்கிச்சிரிக்கவும், இன்னும் பறவையெல்லாம் பூம்பாளைதயொத்திருக்கும் பனிமலர்களை மடலிற்கிழித்து மேலேவிசையாக வீசுவதினால் அம்மலர்களினின்று சந்தனத்துளிபோல வாசமுமனித்துளிவிழுந்து மழைபோல எங்குஞ் சிதறவும், அதன்பின் வானத்தினின் றவிழ்ந்த சந்திரன்போலவும், நக்ஷத்திரங்கள்போலவும், மலரெல்லாந் தடாகத்தில் விழுந்திருக்கவும், பின்னும் நீரைத் திரந்து மனைநீரைச்சொரிந்து பலபறவைகள் ஆகாயத்தில்விரித்த பாம்பின்படத்தைப்போல மேலேமேயாட்டவும், பலபறவைகள் தங்கள் சிறகுகளை யொளிக்கவும், பலபறவைகள் மேகத்திற்செல்லும்படி விசையோடு எழும்பவும், இப்படி அளவில்லாமல் மகிழ்ந்து விளையாடியிருக்கவுந், தடாகத்தில் இனையெல்லாம் விளங்

† அந்தவரம் இந்நாள்வரையிலும், நடந்தேறி வருகின்றது.

அந்நாட்டில் தங்கள் திருப்பாதங்களை யெடுத்துவைத்துச்சேர்ந்தபோது அவ்விடத்தில் வாடாதமலர்த்தரு தேனின்றிரளை பொழியாய்க்கிடந்த வழியெல்லாஞ் சேறாகும்படி மழையைப்போலத்தூறவும், வாசனைவீசும்பூஞ்சோலைகடோறும் மயில்கள் தோகைகளை விரித்தாடவும், மறப்பறவைகளெல்லாந் தேனின்பத்தோடு தேவகுமாரனைப்பாடவுங், கமலமீன்கள் பாய்ந்துகுதிக்கையில் தாமரையினின்றுதிர்ந்த வெண்முத்துக்கள் தண்ணீரோடுகலந்து வயல்களில் பாய்ந்து செந்நெல்முளைகளோடு கிடக்கின்றவை வயல்கள் முத்துக்களாகிய பறவைகளைக்கட்டிச் சிரித்தாற்போலத் தோன்றவும், இவர்களைக்கண்ட யாவருங் கண்களால் பேரின்பத்தையுண்டமையால் பூமாலையின்மேல் வண்டுகள் மொய்ப்பதுபோலச் சிறந்தருமவர்களாகிய இவர்கள்மேல் கண்கள்மொய்க்கவும், சூரியன் இருளைநீக்கி யொளியைப்பரப்புவதுபோல இவர்களுந் தங்களை நோக்கினவர்களுடைய பாவங்களைநீக்கியும் வழிகாட்டுவார்கள்.

இவ்வண்ணமாக நடந்துசென்ற பரமநாதன் எசித்துநாட்டிற்செய்யும்படி முன்னினைத்திருந்தகன்மைகளை இப்பொழுதுசெய்வதற்குத் தொடங்கிக்கொண்டு, அந்நாட்டில் வானுலகதேவராக வணங்கப்பட்ட பசாசுகளை யோட்டினபோது மனிதனை பிரசவிப்பதுபோலக்காட்டி, நாகத்தில் தொண்டுவிடும் வரத்தைத் தருந் தேவர்களாகிய அந்தப் பசாசுக்களெல்லாந் தங்களை வல்லமைகொண்டு உதைத்துத்துரத்தினவ ரின்னாரென்றறியாமல் மெலிந்து பயந்து கூசி, கீழ் நாகத்திற்போய் விழுந்தவுடனே அவைகளை வணங்கும்படியாகக் கட்டின பொற்கோயில்களும், உருவங்களும், உயர்ந்ததேர்களும், மின்னி மறைந்தாற்போல, அழிந்துவிழுந்ததை அந்தஎசித்துநாட்டார் யாவருங்கண்டு, இதுகடவுளின்வல்லமையா லழிந்ததென்று தெரியாம லதிசயப்பட்டுக்கொண் டிருக்கையில் தேன்மலர்பூத்த கொடியுடைய சூசைமாமுனிவர் விந்தையைக் கண்டுமகிழ்ந்து மனத்திலுண்ட பேரின்பத்தைவிடாதிருந்து திருக்குமாரனைநோக்கிச் சொல்லுவார்: ஐயனே! பொய்யான வல்லமையுடைய ஏரோதனுக்குப் பயந்து ஓடிப்போவதுபோல ஒளித்துவந்த குணத்தால் நீ குறித்த தன்மையின் பயனிதுதானோ? உன்னன்பின் மாட்சிமை யிவ்வுலகத்தி லெவரறிவாரென் றுரைத்துத், திருப்பாலகனின் இரண்டு தாமரைப்பாதங்களையுங் கண்ணீராற்கழுவி வணங்கின பின்பு, பூஞ்சோலையில் நிழலைப்போல யாவருக்குந் தன்மையைக்காட்டுந் திவ்வியநாதன் பூமாலை கோத்ததுபோலச் சென்ற இடங்களெல்லாங் கடவுளுக்கிறைந்த நன்மையைச்செய்யும்படி, அந்நாடெல்லாஞ் சுற்றிவருகையில் எருமோபுரமென்னும் ஒருநகரத்தில்சேர்ந்தார்கள். பொன்னலங்கரித்த அந்நகரத்தின் வாசற்புறத்திலே யென்றால்:—மேகங்க ளாச்சரிக்கினைகளிற்றலைசூழ வானமட்டு முயர்ந்து, நக்ஷத்திரங்களைப்போல மலர்பூத்து விளங்கிய ஒருவிருக்ஷம் இருக்கையில அந்நகரத்தார் யாவரும் அதினழகின் மேன்மையாலும், அதின்பெயர் தெரியாததினாலும், அதுபோல வேறொருமரம் அங்கில்லாமையாலும் அதனை பூசைப்பார்த்து திசயித்துப், படித்தறிந்த நாளின்பயனைமறந்து, அதை ஒரு தெய்வமாக எண்ணி, யதற்குத் தூப தீப நைவேத்திய முதலானவையும் நடத்திவருகையில் இந்த அறியாமையைக்கண்ட பசாசு பாவம் விளைவித்தற்கு சமயமிதுவென்று எண்ணி, அந்தப்பூமரத்தில் தான்குடியிருந்து பாம்பினுருவத்தையெடுத்து, அனேகநாளாகக் கேட்டவர்க்கெல்லா மரத்தினின்றிறங்கிவந்து மறுமொழி சொல்லிக்கொண்டிருந்தது. அப்படியிருந்த மரத்தினண்டையில் தேவகுமாரன் சென்றபோது பாம்புருவாயிருந்த பசாசு காரணமொன்றுமறியாமல் செந்நரகத்தில விழுந்தவுடனே, தனது துன்பவினை தீர்ந்ததென்று அம்மரமகிழ்ந்து, தனதுகிளைக்கொம்புகளை வளைத்து, இவர்களை வணங்கினதன்மையாகத்தோன்ற, அந்தமரத்தினிலைகளை யுண்டமாத்திரத்தி லெந்தப்பிணிக

ருந் திரும்படி யம்மரத்திற்கு வரத்தைத்தந்ததினுல் அதுஇந்நாள்மட்டும் நிறைவேறிவருகின்றது. பின்னுஞ் சூரியன்யாவற்றையும் விளக்கித்துடைப்பதுபோல எகித்துநாட்டில் மகிமைமிகும் வானவரும புடையிற்சூழ்ந்து வரப் போகும்போது தங்கவின்பமாகிய மடையைத்திறந்து பாய்ந்தோடின நன்மையின வெள்ளமானது தொடையோடுகலந்த பாக்களைப்போல் எங்கும்பரம்பிற்று.

அன்னங்களெழுந்து வான்மீதிற்பறந்து சுற்றிலும் வட்டமிட்டுவந்து ஓர் தடாகத்தி லிறங்குவதுபோல இம்மூவரும் மலர்பூத்தநாடெல்லாஞ் சுற்றிவந்தபிறகு ஒளிக்குழு மணிகளை வரிசைவரிசையாக அழுத்திய சிம்மாசனத்தின் மேலிருந் தரசாளுகின்ற அந்நாட்டரசன் வீற்றிருக்கும், இரவிமாபுரமென்னும நற்பட்டணமானது கூந்தலாகிய கருமேகங்கள் கோபுரமாகிய முகத்தின்மேலதவழப் பொன்மதிலாகிய சேலையையுடுத்து, அதன்மேல் கொங்கைகளாகிய பொம்மைகளைச்சேர்த்து. அகழியாகிய மேகலாபரணத்தை யிடையிற்றூங்கியிருக்க, அந்நகரத்தின் பாதச்சிலம்புபோல ஒன்றுய்ப்பிறந்து முன் பசாசெடுத்த எழுதலைப்பாம்புபோலப், பின்பு எழுமுகமாகப்பிரியும் நீலநதி யந்நகரத்தைச் சுற்றியோடச் சிறப்புவாய்ந்திருக்கையில் அந்தநகரத்தில் இம்மூவருஞ் சேர்ந்தபோது இவர்களை யழைக்கும்படி, வாய்திறந்து கூப்பிட்டால் கூப்பிட்டசொல் தூரத்திலே கேளாதென்று தென்றலைவீசியுங், கைகளைக்காட்டியு மழைத்ததுபோலப் பொன்மலை மூச்சுவிட்டதாகக் இளம்ப, அகிற்புகையோடு உயர்ந்த மாடங்களிலாடிய கொடிகள்தோன்ற இவர்கள் துன்பமின்றித்தவழியாக ஐம்பதுநாளாய் நடந்துவந்ததினுல், தருமமுந், தவமுந், தானமும், மற்ற நன்மையெல்லாந்தரும் வேதமும், இவர்களுடன்கூடவே யிருப்பதால் பால்வழியா யின்பம்விளைவதுபோலவுங், கோல்வழியாய்ப் பட்டணங்களழுதுபெறுவது போலவும், நல்வழியாகப் புகழ்வளர்வதுபோலவும், அந்த நகருக்குச் செல்வத்தை விளைவிக்கும்படி புள்ளேபுகுந்து குடைகளுங், கொடிகளு மொய்த்துச் செய்யு மிருந்த நிழலினிருளை இரத்தினங்கள்விட்ட ஒளியினுற்கொன்று, வெளிச்சத்தைத்தருகின்ற உயர்ந்தமாளிகைகளையெல்லாம் வெறுத்துநீக்கி, ஒருசிறுமனையிற் குடியிருந்து, உயர்ந்தமரமானது சூரியனுல் தாக்கப்பட்டாலு மதைத் தாங்கிக்கொண்டு யாவருக்கு நிழலைச்செய்து காப்பதுபோலப், பரமநாதனாகிய தேவகுமாரனும் மனிதனென்னப்பட்ட யாவருக்கும் பரமவீட்டிலுள்ளமுடியாதவாழ்வுகளைத் தந்திரக்கும்படி தான்தரித்திரமுதலாகிய துன்பங்களை யின்பமென்று தேடித்தெரிந்துகொண்டார்.

எகித்துசேர்படலம் - முற்றிற்று.

இருபத்துமூன்றாவது - குணுங்குமந்திரப்படலம்

மின்னுநெடித்தேவிரிந்தன்ன வெருவிப்பதறிப்பாய்ந்துருண்ட ள
மின்னுவிளர்க்கும்பேயினங்க ளெகித்துநீங்கித்திசையா ம
பன்னுநியரிலெண்மடங்காயப் பணிப்புற்றூர்பயவீழ்ந்தனகா ந
றன்னுடயர்வுற்றயர்ந்தரசன் றருமிறுற்றாகொடிதென்று ள.

முன்சொன்னபிரகாரத்தேவகுமாரனின்கட்டளையால்மின்னுமயிடித்ததிறடியபோலப் பயந்தருண்டு, செந்திரகம் எண்மடங்காய் நொந்து முழுங்கப்படுபேய்கள் விழுந்தபோது, நாகத்தினரசனுகிய மூர்ப்பசாசு இதைக்கண்டு நீங்கள் இங்கேவந்தகாரணமென்னவென்று விசாரிக்க, அதற்குப்பசாசுகள்சொல்லும்: அழுதம்விரோம் எகித்துநாட்டில வணங்கப்பட்ட தேவர்கள்நாங்களே ; அவ

இருக்கொரு மேலான பலத்தினால் இங்கே யிருக்குமாத்திர மறிவோமே
யல்லாமல், வல்லமைகொண்டு எங்களைத்துரத்தின பலத்தை யறியோமையா
என்று அடியார்களுஞ் சொன்னபோது, நரகஅரசன் சொல்லுவான் : பின்
னாரைத் வருசனையுடையகாறுல செய்வதற்கருமை யொன்றுண்டோ ? உங்
களைத்துரத்தின காரணமுங்காணுமற் பதறியிருந்து, என்வல்லமையு மென்
னுள்ளிருக்கிறோ ? என்றுஞ்சொல்லிச் சினந்து, நானே அந்த இடையூறுகள் வந்த
காரணத்தைக யறியும்படி யங்குசெல்வேனென்று எசித்துநாட்டில்வந்து அன்
னாடு இடங்களையெல்லா மண்டிப்பார்த்துக், தேவருடைய உருவங்களும், பழு
மகோவில்களுங், தேர்களுந் தகர்ந்துவிழுந்து, புழுதியோடு புழுதியா யிருக்கக்
கண்டு, பின்பு இக்கக்காரணத்தினால பலர்பொய்த்தேவரைவிட்டு மெய்த்தேவ
னைவணங்கவுங்கண்டு, தானுங்காரணத்தையறியாமல்வருந்தி மீளவும் நரகத்தில
விழுந்து செம்மறிக்கிடாய்க் கொம்புபோலப் பதினாலுகொம்பும், நீண்ட செஞ்ச
டையுள்ள ஏழுதலைகளுந், திசைக்கொப்பளிக்கும் இரத்தம்பாய்ந்தகண்களும்,
மதங்கொண்டதைபுமிழும் யானைததுதிக்கைபோல நீண்ட மூக்குந், தீயையுமிழு
மூக்கொன்ற பிறையையொத்த பற்களையுடைய ஊத்தைவாயும், வேல்போ
லவிரிந்து, கழுதையின்காதைப்போலவிரிந்து, மயிர்களுள்ளசெவிகளும், ஊத்
தையொழுகும் பிணங்கள்நிறைந்த உதடுகளுந், தென்னைஓலைக் காடுபோலச்
சிவந்துநீண்ட தாடியும் உடைத்தாகிக், கரியவானரத்தின் முகத்தோடு பாம்பி
னுருவெடுத்துத் தான வாளிழந்தபழியை விடாதமனமும், நாகிற்குடியேற்று
தற்குரிய கோபமும், மனிதர்களுயிர்களையுண்ணும் வஞ்சகவிளைவும், எட்டுத்தி
சைகளையும் அசைக்குங் கட்டளையும், பூவுலகைநடுங்கச்செய்யுஞ் சூலமுங்கொ
ண்டு, நெருப்பாற்செய்த பீடத்தின்மேலெழுந்திருந்து இனியாதலெல்லாம் நி
னைத்துக் தன்னைப்போ லுருவெடுத்து ஒழுங்கில்லாமற் புடைசூழ்ந்திருக்கும்
பேய்களிற் பெரியோரை யழைத்துச், சினந்துநோக்கிச் சூளைவாய்திறந்தது
போலத் தீப்பறக்கும்வாயைத்திறந்து மேகவிடிபோல முழங்கிச்சொல்லுவான்

வல்லமையுடையவர்களே பெருமாசீமைபோதி நாமுன்வாழ்ந்திருந்த
போசனத்தின் செல்வங்களையிழந்து, நரகத்திற்சேர்ந்தாலும், இதுவரைக்குவந்த
கேடென்று எண்ணுமல் என்வல்லமையினறிவால் பெரியநரகம், பெருங்கீர்
த்தியுமடைந்து, இக்காள்வரைக்கும் வீற்றிருந்து கடவுளெனக்குப் பகைசெய்
தாலும், நானபூவுலகில் வெற்றியைக்கொண்டு, மனிதரென்னை வணங்கவும்,
எனக்குப் பொற்கோயில்களை யமைக்கவுஞ் செய்வித்த பின்பு இன்றையதினம்
பூவுலகில் பகையின்வழியைக்காணுமல் என்வல்லமை குறையக்கண்டேன் ;
ஈசெருசலேம யாளுகின்ற எசித்துநாட்டில இப்பொழுது பழமையாகத் தே
வரென்று வணங்கப்பட்ட என்சேனைகளெல்லாந் அஞ்சிக்கெட்டியந்து யிங்
கேவந்துவிழவுங்கண்டேன் ; மேகங்களதவழு மலைகளிலும், மலர்நிறைந்த பூஞ்
சோலைகளிலும், அழகுமிகுந்தஊர்களிலும் மற்றவிடங்களிலுங் கட்டியிருந்த,
சொர்க்கிற்சிறந்த பொற்கோயில்களும், பொன்வாயினால் பிரகாசத்தைத்தும்பி
யாழ்கும்பெற கலைகண்ணுமமாற்செய்த தேவருருவங்களும்; அவ்வுருவங்களின்
மணிமுடியும், மாணிக்கவடங்களும், அழகிற்சிறந்தகோசங்களும், மற்றஅணிகள்
யாவும் தன்தூளியாய்த்தகர்ந்து, இங்கேவிழுந்த பேய்களோடு அனையும்விழக்
கண்டேன் ; எசித்திலுள்ளோர் இதைக்கண்டுபயந்து மெலிவடைந்து, நாட்டை
விட்டோடின தெய்வங்கள் வரங்கொடுக்குந் தெய்வமோ?வென்று சிந்தித்து,
அவைக்கு மலர்மாலைச் சாத்தாமலுஞ், சந்தனமும், தூம்புகையுங் காட்டாமலும்,
வாசநீராட்டாமலும், ஒருவணக்கமுஞ்செய்யாமலுமிருக்கக்கண்டேன்; மீளவும்
இருமாபுரத்தண்டையிலிருந்த மாத்திற்குச்செய்த வணக்கத்தால் பாவங்கொ
ண்டு கெடும்படிமலர்ந்தமரமானது இப்பொழுது நோய்ப்பிணியாவையுந் தீர்க்

கும்படி கடவுள்தந்த வரத்தைப்பெற்றதினால் அதில்குடியிருந்த பேய்களோட யாவரும் வணங்காதிருக்கக் கண்டேன்; யாவரும் இதைச் சொல்லும்படி மனிதரைமயக்குந்திறமுடைய எனது செங்கோலும் வசைபட அழிகின்றதைக் கண்டு என்னுற்ற அறிவைக்கொண்டு பூவுலகின் எவ்விடத்திலுஞ்சுற்றி யாராய்ந்துபார்க்கும்போது ஒன்றுங்காணேன்; ஆயினும் ஏதோ காரணத்தைப் பற்றி எசித்துநாட்டில் மரியென்பவளுஞ், சூசையென்பவனுமாகிய இரண்டு பூதர்கள் வந்திருப்பதாக என்சூழ்ச்சியாலறிந்த நாதனயிதுதானோ; அந்தப்பூதர்கள் தருமத்திலும்பார்த்தோராயினுந் தரித்திரமுடையவர்களாய் உடல்மெலிந்து திரிகின்றவராதலால், அவர்களாலே யென்னகூடும்; அவர்களைப்பார்க்கும்போது நானெடுகொள்ளச் செய்த வஞ்சதந்திரங்களுக்கு அஞ்சாமலும், பூவுலகவாழ்வுகளை விரும்பாமலுஞ், சரீரத்தைப்பற்றிவருந் துன்பங்களில் தளராமலும், புகழின்மேலாகக் கொடுஞ்செய்யப்படுந் தவத்திற்குமேலாகத் தவமுடையவராயும் இருக்கக்கண்டேன்; ஆயினும் வானுலகோர்முதலா யென்னைப் படைத்தாலுங், கடவுளுக்குமொழிய வேறொருவருக்கும் பயப்படேன்; இவையெல்லா மிப்படியானதன்மையை நானாராய்ந்தும் அறியக்கூடாமையால் உங்களையழைத்தேன்; கொல்லும்புலியினுங் கொடியநெஞ்சுடையீரோ! இந்த இடையூறுகள் தீருமாயினுந், தீராதாயினுஞ் செய்யவேண்டிய கருமத்தைச் சொல்லுவீரென்று பெருங்கவலைகொண்டு பேய்க்கரசன் சொன்னபோது பூவுலகத்தையேய்க்கும் பசாசுக்களுக்குள் பழுத்ததுபோலக் கூர்த்த அறிவுடைய இடாகியனென்னும் பேயானவன் அரசனடியை வணங்கித் தீயையுமிழ்ந்து சொல்லுவான்,

வஞ்சனையுடையவர்கள் கண்டதையெண்ணிப் பார்ப்பார்களொழிய அதனால் குறைவந்ததென்றுமயங்கார்; அப்படிமயங்கினு லறிவுமயங்கிப் பிழைபடுதலாகும்; முன்னாளில் வானுலகத்தினின்று நாளிங்கே விழுந்ததினால் வந்ததேயன்றோ? அதன்பின்பல்லோ பூவுலகெல்லாமுன்னை வணங்க அரசு செய்கின்றாய்; இருளின்வழியே மயக்கங்கொண்டு ஞானமும், விளையு நிறைவாகவுள்ள மனிதரை நரமேய்த்துப்போடுவது அரிதோ? அவர்களின் தீக்குணங்களைக் கொஞ்சஞ்சொல்லுகிறேன் நீயறியாததும் ஒன்றுண்டோ? ஆயினுஞ் சிறிதுகேள் மன்னவனேயென்று மீளவுஞ்சொல்லுவான்: முன்னாளிலொருவன் தனது மகனிறந்தானென்று கொண்டதுயர மாறும்படி பிள்ளைமேல்வைத்த பக்ஷத்தால் அவனைப்போல ஒருருவைச் சமைத்துவைத்தபின்பு தகப்பன் வருந்துவதைக்கண்ட அவனூழியக்காரர் அவனுடைய மனந்தேறும்படி யவ்வுருவுக்கு வாசப்பூம்புகைகாட்டி, யதைத்தெய்வமாகப் பூசித்து வருத்தமிதைக்கண்ட ஓர்செல்வக்கனும் இறந்துபோன தன்தகப்பனையுமப்படியேசெய்து பூசிக்க, யாவருமிப்படியே காலவட்டத்தில் பலர்களராதனைசெய்து மெய்யங்கடவுளைமறந்து நரகிலவிழும்படி நானே யென்வஞ்சனையால் செய்தகாரியத்தை நீயுமறிந்திருப்பாயே; ஆகலால் மனிதர்களை யிப்படியிருக்கையில், எசித்துநாட்டில் நடந்தவற்றைக்குறித்து நீகலங்குவானேன்? அந்நாட்டிலுள்ளயாவரும் மின்னல்மின்னி மறையுஞ் சீக்கிரத்திலுன்பாதத்தை வணங்கும்படிசெய்ய என்னொருவனுடைய வஞ்சனையே போதுமென்று சொல்ல, மற்றப் பசாசுக்களு மிதற்குச் சம்மதித்தவுடனே மாயாவித்தையிற் சிறந்த வின்முனென்னும் ஒருபேயானவன் முன்சொன்னவன் சொல்லைமறுத்துத் தீவினையை மாலையாகவணிந்த பேய்க்கரசனைநோக்கிச் சொல்லுவான்,

மனிதரைவெல்லுவது அரிதோ? நீரிருக்கும்போது தடாகத்தைக் காத்திருந்த பறவையெல்லாம் நீர்வற்றியபோது நீங்குவதுபோல மனிதர்களுஞ் செல்வகாலத்தில் செய்யுந்தொழில்களைத் துன்பகாலத்தில் கைவிட்டு, பால

மாக மாற்றுவார்; அவர்களை யேய்ப்பது வல்லமையென்பாரோ? கடவு
ளின் அளவில்லாத வல்லமையை ஏய்த்தாற்போல அவனவனே தன்னிஷ்ட
மாக மனுக்குலத்தை விசாரிக்கும்படி செய்கிறதைக்கொண்டு நானவ்வுயிர்க
ளுக்குக் கேடுவரும்படிசெய்தே னெனதக்கசெருமென்று மீளவுஞ்சொல்லுவா
ன: சிறுஞ்சோலை சூழ்ந்த * எகித்துநாட்டைவிட்டுக் கானகத்தின் வழியாக
யூதர்கள் வரும்போது ஆண்டவருக்குக் குறையாக முறைப்பாடுகளைச்சொன்ன
தினுல் ஆண்டவர் கோபத்தோடு அனுப்பிய விஷப்பாம்புகள் மொய்த்துக்கடிப்
பதில் அவர்களிறப்பதைக்கண்டு, மீளவு மவர்கள் கடவுளைநொந்து ஏக்கிவேண்
டினவுடனே கடவுளவர்கள்மே லிரங்கித்தந்த கட்டளையினல் அவர்களுக்குத்
தலைவனுகிய மோயீசன் இனியொருவருஞ் சாகாதபடி செம்பினுலொருபாம்
புருவத்தைச்செய்து, அதையொருகம்பத்தின்மே லேற்றிவைத்துத் தந்தகட்ட
ளைப்படி பாம்புகளாற் கடிபட்டவர்கள் மேலேயிருக்குஞ் செம்பினுற்செய்த
சர்ப்பத்தைப்பார்த்தவுடனே சுகமடைந்திருந்ததுமல்லாமல் ஆண்டவர் தங்க
ளுக்குச்செய்த நன்றியைமறவாமல் இந்தஇடையூறகன்றகாலத்திலும் அந்
தப்பாம்பைவைத்திருந்து பிற்காலத்திலவந்த தங்கள் பிள்ளைகளுக்கு மதைக்
காட்டிக், கடவுள்செய்தருளிய நன்றியைச்சொல்லுவார்கள், நானிவைவெல்
லாங்கண்டு பாவமறுவழியும் வழியென்றெண்ணி யிட்டபுகுந்து, இந்தக்கதை
நடந்தகாலமதி லிருந்தவர்க ளிறந்துபோன பின்பு, பின்னேவந்த சந்ததியார்
அதற்கு வாசப்புகையு மணமலர்மாலைகளையுஞ்சாத்திப், புகழ்களைப்பாடி, அதற்
கோர் உயர்ந்தகோவிலைக்கட்டி, வானகாதிபதிய கடவுள்செய்த நன்றியைமறந்து
மன்னோர்க்கு அதுவே நன்மைசெய்ததாகக்காட்டி, அதைத்தெய்வமாகவெண்ணி
யதற்கு நாகநாதனென்னும் பெயருமவைத்து, அதைக்கும்பிஞல் கடித்தபாம்பின்
விஷமாறுமென்றுசொல்லிச் சருககளையை மேலேபூசி, கறுத்தையுமுடனதுபோல
பலபொய்க்கதைகளையுங்கட்டி, நாகநாதனுக் காரதனைசெய்யும்படி செய்வித்
தேன்; மோயீசன் அந்தப்பாமபுருவத்தை யுண்டாக்கி ஆயிரத்தைம்பத்திர
ண்டுவருஷம்போனபின்பு யூதநாட்டையாண்டிருந்த எசேக்கியவென்பவன்
அந்தப்பாமபுருவத்தை வணங்காதபடி அதையழித்துத்தூளாக்கினன்; ஆயி
னு மின்னம் பலதேசங்களில் அந்தவணக்கத்தைச் சிலர் விடாமலிருக்கின்றார்
கள். இப்படிப்பட்ட காரியங்களைச்செய்த என்வல்லமையினலாகாததும் ஒன்
றண்டோ? என்று பித்தன்வெறிதாகமதாலேப்பேசினதுபோல வின்றுன் சொ
ன்னவுடனே வஞ்சகநிறைந்த கிழநாயின் முகத்தினருவெடுத்துப பாவத்தில்
மூழ்ந்த சத்தனுகளன்னும் ஒருபேயானவன் பேய்க்கரசனைநோக்கிச் சொல்
லுவான்.

நீர்மேனுரேன் குமிழ்போலவுங், காற்றின்முன்னுடுக் கொடிபோலவும்,
மேகத்திற்றேன்று மின்னல்போலவு, மனிதர்களும் ஒழுங்குபட ஒன்றை
நினைத்தபோது அதில் நிலைகொள்ளாமல் நொடிநேரத்துக்கு ஒருமனமாக
ஆயிரமனமாய்த் திரும்பிநிற்பாரானகையா லவர்களையேய்த்து, நமது கொடியமா
யைதப்பாமல் மயக்கத்தைவிளைவித்துப், பூவுலகிற்புகுந்து இந்நாள்வரையி
லும் ஆளுகைசெய்தது உண்மைதானே; ஆயினும் இனியிப்படிச்செய்வது
அரிதையா; ஏனென்றுல் நாம்வருந்தும்படி இந்தக்காலத்தில் நடந்த பல
அற்புதங்களைப்பார்க்குமிடத்தில் பூவுலகில் போகாமல் இருண்ட இந்நரகத்தி
லேயிருந்துகொண்டு உன்னுஞ்சனையை யிங்கேதானே நடத்துவது நல்லதாகு
மென்று சத்தனுசொன்னவுடனே காய்மகாரத்தோடு இந்தசத்தனுனை யெ
ப்பொழுதும் பகைத்திருக்கும் நிரங்காவென்னும் ஒருபேயானவன் பகைமெ

* மோசே நாலாமாகமம். 21-ம். அதிகாரம்.

ழும்படி பிறையையொத்த பல்லுகளேகிட்டி வாய்திறந்து, பேயரசனைநோக்கிச் சொல்லுவான்: வஞ்சகர்வணங்கும் இராஜாவே! மாய்கையில்மெலிந்திளைத்தவனாய், இளைத்த ஒருகைம்பெண்சாதிக்குப் பயந்தவனாயிருக்கும் இவன்சொன்னதற்குச் சம்மதிக்கவேண்டாம்; பயந்துசோர்ந்தவர்க் கெக்காலத்தும் வினை ஏதுவாமோ? என்று சொன்னபோது இதைக்கேட்ட சத்தனும் இடியைப் போலவந்துநின்று என்னைநிந்தைசொல்ல என்னோடெதிர்த்த பேய்நீயா? பேயினங்களின் கீர்த்தியையழிக்கும்படி நீபோய்முளைத்தாய்: முதுகுகொடுத்தோடும் வல்லவனேயென்றான். இப்படி ஒருவனுக்கொருவன் நிந்தைசொல்லிவைது, பின்பு கண்வழியாக அழல்விரித் திரங்கரன்வந்து சீறிக்கோபத்தோடு உடலெல்லாம் பதைக்கும்படி சத்தனைக் குத்தினவுடனே சத்தனும் பதைத்துடல் இருபது அகத்தையுயரமாகப் பாய்ந்து, சிகைத்திரள் கொடி தாப்ததுள்ளிவந்து, இரண்டுகாலாலும் இரங்கரனையுதைத்தபோது அவனுமிடி போலமுழங்கிச் சத்தனைசையுடலிலடித்துப் பல்லின்வழியாய் இரத்தமொழுகும்படி கடித்தான், கடிபட்ட சத்தனும், கடித்தஇரங்கரனும் மேகங்கள் இருமேகங்களைப்போல முழங்கி, இருமலைகள் குதித்தாப்போலத் துள்ளித், தீப்பறிய இறுகப்பிடித்துக் கீழேதள்ளிப், புரண்டு சுழன்று ஒருவனையொருவன்விடமெட் பின்யாமனுஞ் சிறிதுபொழுது பிரிந்து, பின்பு இரண்டு கூடிச்சீறித், தீக்கலவிழிசுற் அஞ்சாமலும், கலங்காமலும், மெலியாமலும், அக்கினிமேகங்களைப்போல் மீளவும் போர்செய்து எழுந்திருந்து ஒருவனுக்கொருவன் தங்களுடைய இருகொம்புகளையும் இருகிப்பிடித்து, மண்கொம்புக ளிவன்கையிலும், இவன்கொம்புக ளவன்கையிலுமாயிருக்க இருவருமவிழுந்து வெட்டிக் கோபித்துநின்றார்கள்.

இதைக்கண்ட மற்றப் பசாசுகள் மிகவுஞ் சிரித்தபோது பேய்க்கரசனிதைக்கண்டு துன்பமிகுதியால் சிரிக்கமாட்டாமல் மற்றப்பசாசுகளையுங்கோபித்து, இருவருடையபோரையும் நிறுத்தினவுடனே சத்தனும் மீளவும் பேய்க்கரசனைநோக்கிச் சொல்லுவான்: நான்ஒரு கைம்பெண்சாதிக்குத் தோற்றுப் போனேனென்று இரங்கரன் சொன்னதே இப்பொழுது அல்லாமல், நானுமாக நமதுகுலத்தின் வஞ்சகமிகுதியால் ஏவுதல்செய்த வல்லமையின் தொழிலை இருவருஞ் சொல்லிக்காட்ட இருவருள் வலியவனென்று நீங்களே சொல்லி ன்றுசொன்னவுடனே பேய்க்கரசன் சம்மதித்ததுபோலப் புன்னகைகொண்டிருக்க, மீளவுஞ் சத்தனும் தான்செய்த வல்லமையைச் சொல்லுவான்: அரசனே! மணிக்களங்கொழிக்குங் கடலொருபக்கமும், மேகந்தவழு மலைகளொருபக்கமுஞ் சூழ்ந்திருக்க, நவிலென்னைக்கொழிக்கும் நதிபோகின்ற தேசத்தைக்கெடுக்கும்படி நீயல்லவோ? எனக்குக்கட்டளையிட்டாய்; நான் எல்லாருக்கு முன்னையிருந்து அங்கே இருமாதிப் பயத்தைக்கொண்டுவிட்டு அனேகமக்களைத் திருமேனிவணங்கச்செய்தேனே; நானங்கேவணங்கச்செய்த தேவர்களென்னவேண்டில் கணக்கர்கள்கலங்குவார்கள்; அந்தத்தேவர்களைப்போல அவர்கள் பாவிகளானார்கள்; அந்தத்தேவர்கள் செய்தவற்றைச் சொல்லுவார்; அந்தத்தேவர்களின் குணம்போல அவர்களுக்குள்ளே கட்டிப்பவனைக்கண்டால் அவனைக்கொல்லவுஞ்செய்வார்; மீளவுந் தன்மனையாளைப் போகும்பொழுது விமரிசைகளும், பனிமி யைகாலெட்டுப்பட்டு ஓடலும், அவளைத் தன்மேலே சுமத்தலும், அவருடைய ருசுப்பிரத்தத்தை அழகாக தெரிவித்ததும், இவையெல்லாம் சூரதங்களைக்காட்டித் தேவர்களுக்கியல்வேசமிட்டேனே; வினைமாதவைத்தேடிப்புணர்தலும், பாதிக்கவரவிரும்புதலும், மன்மதன்கணையசெலுத்த காமத்தினால் தவிக்கக் குளிர்மலைநாடுதலும், பகைவருடைய வில்லுக்குப்பயந்து முதுகுகொடுத் தோடினதையும், இவையெல்லாம்

வர் தேடுமாகாடித் தேவர்க்கேற்ற விலையென்றேன்; [illegible] போல பெத கமெல்லாம் பெண்ணிற்றோன்றலும், ஒருவன் [illegible] பிறப்புவிழ தலும், இருகுலங்களும் புணர்ச்சியின் [illegible] தேவு [illegible] அவனி த்தலும், இவையும் இறைவியோடொத்தவையுங் காட்டி [illegible] குரிய முறையுமில்லையென்றேன்; கருணையோடு சேர்ந்தவனிவன், ஒரு [illegible] கத்தி [illegible] பதிற்றுமிவ பெண்சாதி [illegible] கொண் டவனையுங் [illegible] யாக [illegible] னையுங் [illegible] தொடு புணரும்படி [illegible] கட்டினவனையுங், [illegible] தலைவைத்த [illegible] னையும், இவ்வாறு [illegible] தேவராகவணைக்கச்செய்தேனை; இப் பழித்தேவத்தில் [illegible] படுமெனப் [illegible] ன அப்[illegible] [illegible] தேவராகவணைத்த திருவி [illegible] நாடுபேன், மீளவும் உயர்ந்த கோபிசுவிடத்தில் சித்திரமாக எழுதப்பட்ட அந்தத் தேவர்களுடைய [illegible] [illegible] கண்டால் வெட்கத்தோடு கையினுல் முகத்தை மூடிக்கொண்டு பின்பு அதைச்செய்தவரைத் தேவராகவணைத்து, அவற் [illegible] [illegible] மயக்கத்தால் [illegible] [illegible] செய்தேன்; [illegible] [illegible]; இவையுந் [illegible] [illegible] வெட்டவெளியாகத்தெரியும்; இரு [illegible] [illegible] இவைகள் [illegible] சொல்வான்; [illegible] [illegible] காமத்தால் [illegible] [illegible] [illegible] தோன்றுதற்கு தேவர்களுங் காமத்தினமிழ்ந்தில் பெருங்கேடுண்டா மென்று அதைமறித்து [illegible] செய்த ஒருவனையுமில் [illegible] [illegible]? [illegible] [illegible] முகத்திலடிப்பது [illegible] [illegible] கொடியுடன் [illegible] [illegible] கனைக்காட்டி [illegible] போலவே, அதைக்கண்டு [illegible] [illegible] பேய்க்காரன் இரக்கம் மறுமொழிசொல்லமாட்டாமல் [illegible] [illegible] நோக்கிச் சொல்லுவான்; இவையெல்லாம் நீசெய்ததினுலே [illegible] [illegible]; அன்றியும் [illegible] [illegible] [illegible] ஒருவனாகையால் [illegible] [illegible] [illegible] கொடியுன் [illegible] [illegible] காட்டினேனென்றுகாட்டி, என்னெஞ்சோல் [illegible] [illegible] [illegible] நீ முன்சொன்னகாரணத்தை விபரமாய்ச் சொல்லென்றபடியே [illegible] [illegible] கொடியனுசனையுடைய [illegible] சொல்வான்.

வானத்திலிருந்து தள்ளப்பட்டு நரகத்தில் விழுந்தபோதும், தேன்ம [illegible] [illegible] ஆதிமனிதனைக் கெடும்படி [illegible] செய்தபோதும், ஆண் டவன் [illegible] இனிமேல் [illegible] மறுவுடலின் [illegible] [illegible] னென்று நமக்குச் சொன்னாலல்லவோ? அந்தத்துன்பகாலம் வந்ததாகவும், * பதினுமாசத்திற்குமுன்னும், [illegible] மாசத்திற்குமுன்னும், [illegible] [illegible] இப்போதைத்துன்பத்தின் [illegible] [illegible] துன்பம் வந்ததற்கு ஒருகாரணமுந் தெரியாமலிருந்தோமல்லவோ? மீளவும் நரகத்தி னின் றெழுந்திருந்துபோய்ப் பூவுலகத்திலவந்த அதனையெல்லாமென்று [illegible] கரும்போது அவைதனைக் குறிய [illegible] [illegible] முன்னிருந்த ஒளியினும் [illegible] [illegible] பரப்பப், [illegible] [illegible] இராக்கா லங்குறுகவும், பூவுலகெல்லாம் [illegible] [illegible] கண்டோமல்லவோ?

* பதினுமாதத்தின்முன் [illegible] [illegible] மாதத்தின்முன் [illegible] பிறந்தனமாம்.

அன்றையதினமே பலசோலைகள் பருவமில்லாதிருந்து நிறைந்த தேன்மணக்க
லைப்பூத்து வாசக்கனிகளைக்காய்த்து மகிழ்ந்ததுபோலத்தோன்ற வானுலகத்
தின் அமிர்தவெள்ளம பூவுலகத்தில் திரண்டாற்போலவாகி, வானுலகைப்
போலப் பூவுலகுஞ் சிறப்படைந் திருந்ததைக் கண்டோமல்லவோ? அன்று
தயைபுரிந்து நாதனவதரித்தாரோவென்று கேட்டார்கள்; அதற்குநான் பெத்த
லேம் நகரிடத்தில ஒருதெளிந்த ஒளியுள்ள ஒருபிள்ளை பிறந்ததென்றேன்;
நீங்கள் ஆண்டவன் இருண்ட இராவினில் ஒளித்துவர மாட்டார், என்றீர்;
நம்பப்படும்படி யிப்பொழுது நடந்தவற்றை யாராய்ந்து பார்த்தால அன்று
பெத்தலேமிடத்தில் பிறந்தபிள்ளை யவதரித்தநாதன்தானென்று தோன்றுமென
றதனன்று நாய்முகங்காட்டிய சத்தனுஞ்சொன்னதற்கு வேங்கைமுகத்தை
யுடைய அசித்தன் அதிசயப்பட்டு இது சத்தியமாகுமென்றபொழுது, சிசா
யவனென்னும ஒருபேயானவன் அதைமறுத்து நகைத்துச் சொல்லுவான்;
நீசொன்னபடி பெத்தலேமில பிறந்தபிள்ளை மிருகமொதுங்குங் குகையிலல்
லோ பிறந்தது; அப்படியாக ஆண்டவன்பிறப்பாரோ? அன்றியும் அந்தப்
பாலகனவன் தரித்திரத்திற்பிறந்து கொக்கழும்படி பலவினைகளைக்கொ
ண்டு தனக்கெதிராகப் பகைவருமிருக்க, அவருக்குப்பயந்து தன்னாட்டை
விட்டுப் புறநாட்டிற்போயலைந்து திரியும்போது மூவுலகத்தையுந் திறம, நீதி,
ஞானமென்னு மூவிரல்களாற் றாங்குங் கர்த்தாவென்று சொல்லலாமோ? என்று
சொல்ல மற்றப்பேயினங்களு மதற்குத்தகுதியாகப் பலகாரியங்களைச் சொன்
னபிறகு, பேய்க்கரசன்சொல்லுவான: குறைவாத கற்புடைய ஒருகன்னிகை
வயிற்றில் கடவுளவதரித்துப் பிறப்பாரென்று வேதத்திற சொல்லியிருப்ப
தால புருஷனையுடைய மரியென்பவள் பெற்றபிள்ளையைப் பரமநாதனென்ன
லாகுமோ? அப்படியானால் கடவுள் புருஷனுடனில்லாமற் கன்னிகையா
யிருந்து தன்னைப்பெறுந்தாயக்குச் சூசையை மணவாளனாகக் கொடுத்த
போது தன்னுடைய அவதாரத்தைப் பசாசுக்களறியாதிருக்கும்படி அம்மு
றைத்தை முடித்தாரல்லவோ? அன்று கடவுள் நினைத்தபயன் இன்றுவெளிப்
பட்டதென்றுசொல்லவே மற்றப்பேய்களெல்லாம் இருட்டறையில தெரியா
தவன் பொருளைத்தேடினாற்போல முடியாத ஆலோசனைசெய்து, நிலைகாணு
மல பயமென்னுங்கடலைக் கடக்கமாட்டாதிருக்கும்போது, மீளவுஞ் சினந்து
பேய்க்கரசன் சொல்லுவான்.

ஆண்டவனவதரித்துப் பிறந்தாரோ? இல்லையோ? என்னும் பல நினைவு
களை விடுங்கள்; பூவுலகத்தைப்பிரகாசித்து நம்மாலுண்டாகும் வஞ்சனையை நீக்கப்
பிறந்தவரல்ல; இதுவேமெய். அவருதயவெளிவினையினுடைய நாமறியப்படாமல்
பிறந்தாரென்பது பொய்; இது அறியார்சொல்லுஞ் சொல்லென்று நிச்சயித்து
இதைமறுத்து நமக்குவந்ததுன்பத்தை நீக்கும்படி யுபாயஞ்சொல்லுங்களென்
றுபேய்க்கரசன்கேட்க, அதற்கு இருகொம்பினிடையிலே தலைசிராவை யொப்
பப் படத்தைவிரித்து ஆடுகின்ற பாம்புருவத்தைத்தரித்துக்கொண்டு செம்மறிக்
கடாவின்முகத்தோடு விரகநோயையுண்டாக்கும் விரகவாயுவென்னும் பேயா
னவன் வெறுப்பசிரித்துச் சொல்லுவான்: எசித்துநாட்டில் அருச்சனை
செய்யும் நமதுருவங்களும், பொன்கோயில்களுந் தகர்ந்து தூளாகி, யக்கா
ட்டை நாமிழந்துவந்த துயர்களை யெண்ணி மயங்குவானேன்? காமமொன்
றினால் எல்லாங் கைகூடுமல்லவோ? போர்முகத்தஞ்சாத வில்லின்வல்லவ
ரும், மிகுந்த புகழுள்ள கல்வியின்வல்லவருஞ், செல்வத்துயர்ந்த செங்கோ
லோச்சிய பூமியின்வல்லவருஞ், சிறந்தமற்றயாவருங், காமத்தி னுட்பட்டால்
அழியாதவரு முண்டோ? மழைத்துளியைப்போல அளவில்லாமல் பூமி
னின்று நரகத்தில்விழு மனிதருயிர்களைப் பார்த்தால் நிறைதவிர்த்த காமத்

தழுக்கிய பாவிகளெல்லாமல் மற்றப்பாவங்களால்விழும்பாவிகள் கொஞ்சமாகும்; காமத்தால்வரும் கேட்டை விஸ்தரித்துச்சொல்லுவானேன்? முன்பு பெரிய பேய்களெல்லாம் காட்டிய வல்லமையைப் பார்க்கில் காமத்தினுடைய தானே; அதைப்பலதொழிலாகச்சொல்லுவானேன்; காமத்தினாலேதென்றால் எல்லாமடக்கிவிடும்; ஆதலால் மனிதர் காமத்தினாசையைவெறுப்பாராகின் வேறொருவழியால் அவர்களைக்கெடுப்பதென்பது வீணாகும்; நிறைதவிர்ந்த காமத்தின்மேலவர்கள் ஆசைவைக்கும்படி உபாயம்பண்ணித்தா நாம்செய்தால் வெற்றியுண்டாகும் என்றான். இதைக்கேட்ட மற்றப்பேய்கள் கூத்தாடி, மிருகங்களில் உயர்த்தமில்லைய மற்றொருமலைக்குழியினுற்போலப் பொய்வல்லமையுடைய பேய்க்கரசன் விரகவாயுவின் புஜங்களைக்கட்டிக்கொண்டு வஞ்சனைக்கேற்ற இலைமுயற்சிகளைச்சொல்லுவான்; தாங்கப்படாதபாரத்தைத் தடிகளைப்போட்டுத்தாக்குவார்போல நீயுமனிதரைவெல்லும்படி வஞ்சகத்தொழிலையுதவியாகக்கொள்வாய்; அனைத்துக்குமெரியாமல் வரப்பட்ட கொலையுதத்தைத்தடுக்கமாட்டாமல் ஒருவனுயிரிழப்பதுபோல நீயும் பாவமென்று தோன்றாதபடி, பாவமென்னும் ஆயுதத்தைமறைத்தாயானால் எளிதில் ஜெயங்கொள்வாய்; அறிவதற்கருமையாக ஆண்டவர் மனத்திற்புதைந்திருக்கும் ஞானத்தைமாத்திரம் வென்றுவிட்டால் இனைக்காத மனமுயினையும், பாக்கினின் தொடைபோலச் சகலபாவமும்விளையும்; ஞானத்தைவெல்லுதற்குபாயமேதெனில், தங்கையும், தமயனும் பற்றிய அன்பென்னும் பொழுதை நாட்டிச், 'சற்கைமென்னும், சாதிமுறையென்றும், பலவிளையாட்டுகளைப்புணர்த்தி, ஞானமழியும்படி பெண்ணின்மேல் பழகினானானால், தீயகன்றுபோனாலும் தீமுன்னைவைத்த வைக்கோல்போலக் காமத்தீயிலே வேகுவான்; முன்னமேன்கட்டளையினுல் கல்வியில்வல்லோர் அரியதாயின்பம் தேன்மொழிபோல இன்பமாய்ப்பாடிக் காமநோய் நிறையச்சொன்னபாட்டுகளை மற்றவர்களையாற்சொல்லவும், காதாற்கேட்கவுஞ்செய்வாயப்பொழுது பாலோடுகலந்த நஞ்சுண்டாற்போல கொண்ட காமத்தினசை மீளாது; இன்னும் ஒவ்வொருவர்செய்த குற்றத்தைப் பலருஞ்சொல்லவும், கேட்கவுஞ் செய்தாயானால், கொதித்திரியுங் கொடும்புலிகளினும் பழக்கத்தினுற் சிறுவரும் பயப்படார்போலப், பிறர் குற்றத்தைச்சொல்லவரும், கேட்டவரும், குற்றமடைவதல்லாமல் மற்றவரும் நாணமழியும்படி செய்வாய்; இப்படியாகிலும் பாபத்திற்கஞ்சினாராகில் ஒருமுறைமாத்திரஞ் சமயமப்பிரென்று பலகாரணஞ் சொல்லிவைத்தால், ஒருமுறைசெய்த இன்பத்தினால் மலையினின்றுருண்டுவரும் பெருங்கல்லானது தடுக்கப்படாமல விழுவதுபோல ஒருபாவத்திலிருந் தொருபாவத்தில் விழுவார்; புருஷனும், பெண்சாதியும், அன்போடுசேர்ந்திருக்கும்படி பகையும், கோபமும், விளைவிச்செய்வாயானால் ஒருகொம்பி லிருந்து விழுந்த பூங்கொடி மண்டையிலிருந்து மறுகொம்பிற் படர்வதுபோலப் புறத்திலே காமத்தை யிச்சித்துப் பாவத்தைச்செய்வார்; பெண்கள் தமது ஆணியாகிய கற்பும், பெருமையுஞ், சிறந்த குலப்பிறப்பும், நிறைந்தவொழுக்கையுங் கெடுமென்று ஒருமுறையாகிலும் பார்த்துக் கினைக்காவிட்டால் துணைபிறந்த மனமாயினுங் கெடும்படிசெய்தால் வேர்காய்ந்தபின்பு மரமெல்லாங்கெடுவதுபோல, அவர்கள் பாவத்தை முடிக்கும்படிசெய்வதும் எளிதாகும்; என்று மனிதரைக் கெடுக்கும் இவற்றையும் இன்னும், களவு, பழி, கொலைமுதலிய மற்றப்பாவங்களையுஞ் செய்துவைப்பாயாகவென்று பேய்க்கரசன் கெடுதாய்ச் சொல்லிக்காட்டினான்.

இவைகளைக்கேட்டு யானைமுகத்தையுடைய கோரதரனென்னும் பேயரசன் ஞானைத்துச்சொல்லுவான்: பொய்யான வஞ்சனைகொண்டு பாவத்தை

விளிவிக்கச்செய்தவழியை மெய்யானவேதநூல்விளக்கைக்கொண்டு வெளியாக்கினல் இதுபாவமில்லாததாகுமல்லோ? ஆதலால் கடவுளின் திருத்தன்மையாகப் பாவத்தைமறைக்கும்படி பொய்யான புராணங்களைப் படிப்பித்து, இதனால் மோக்ஷமுண்டென்று சொன்னால் நீதிவிலக்கொழுகும் பாவிகள் முதலாய்ப் பாவஞ்செய்தாலும் கடைசியில் வான்வீட்டைச் சேருவோமென் றெண்ணித் துரோகில்விழுவார்கள். அதெப்படியென்றால்:— பலவிசேஷநதியில் முழுகவும், காலையில் உயரநீரைத்தெளிக்கவும், பலபெயர்களையோதவும், பலவகைப்பெருமணிகளைத் தரிக்கவும், பெருஞ்சடைவளர்க்கவும், சுட்டசாம்பலைப்பூசவும், செத்தவர்க்கு என்றும், பாலுமிறைக்கவும், இப்படிப்பட்டவற்றைச் செயவுடன் கோடிபாவஞ்செய்திருந்தாலுங் கடவாமல் வான்கதி சேருவோமெனெண்ணும்போது சகலபாவத்திற்கும் வழியாகுமே; ஒருவரும்புகலாணு எதிருக்கும் பள்ளத்தில் முந்திவிழுவதற்கு வழிகாட்டினார்போல நான்சொன்னபடி பொய்மறைகளைக்காட்டினால் நரகத்திற் கேகும்வழியுங் காட்டலாகுமோ? என்றான். இதைக்கேட்ட மற்றப்பேய்களெல்லாங் கடலொலியினும்மிகுதியாய்முழங்கியிருக்கச், சடக்கலியென்னும்பேயானவன்முன்னே குதித்தோடிவந்து சொல்லுவான்: அறிவுமயங்கி யழன்ற பேய்களே! நெஞ்சு பிளக்கும்படி முழக்கமுமென்னை? மனநோகும்படி மயக்கமுமென்னை? நான்சொல்வதைக் கேளுங்கள் இப்போது எதிர்த்துநாட்டில் நாமதேடின பாவத்துக்கு லாபமாயிற்று. அதெப்படியெனில்:— முன்னுள்ள லௌகிகர் ரதியின்றி நரகத்தில் விழுந்தார்; இப்பொழுது நாம் நரகத்தில் விழுந்ததும், நமது கோயில்க ளிடிந்ததும் அறிந்து, அங்கிருக்குங் குருசைமாமுனிவர் மெய்வேதத்தைப் போதிக்கும்போது இவ்வேதத்தை யறிந்து, முன்னையபார்க்கிலும் எட்டுப்பங்குபாவ மவர்கள் கட்டிக்கொள்வதால் நமக்குப்புகழ்ச்சியுங், கடவுளுக்கு இகழ்ச்சியு மாகுமென்றான். அதற்குப்பேயரசன் சொல்லுவான்: பஞ்சேந்திரியங்களை யடக்கிய குருசைமாமுனிசொல்லும் வேதத்தினுறுதியைக்கொண்டு எதிர்க்கார் தவத்திலே நிலைகொண்டால் நமக்குப்புகழாகுமோ? என்றான். அதற்குச் சடக்கலி வஞ்சனைவழியாய் நானங்கேசென்று கொக்கினிறகுகளைமுடியாகச்சூடி, நீண்ட சடைவளர்த்துச், செவிகளில் குண்டலங்களும், நெற்றியில் விபூதியுந், தவத்தின்சாயலும், வாடியமுகமும், மார்பில் அக்குமணித்தாவடமும், கையிற்றண்டுகோலுங், கரகமும், ஒருங்குடன்தரித்து மகாருஷியைப்போலத்தோன்றி யங்கிருப்பவரையேய்த்துச்சொல்லும்போது பழமையாயுங்களையிரக்ஷித்த தேவரைக் கைவிட்டுப் புதிதாய்முளைத்த ஒருதேவனைவணங்குவானேன்? முன்னிருந்தபெரியோர்செய்கை பழுதாமோ? நீங்கள் நெடுநாளாகச்செய்த தபோபலமெல்லாம் இப்பொழுது ஒரு அறிவிலான்சொன்ன பயனைக்கேட்டு ஒருகணத்தில் இழக்கலாமோ? பசும்பயிரிடத்துண்டான களைகளைப் பறிப்பதுபோல இப்பொழுது நீங்கள்கொண்ட கொடியமுறையைப் பிடுங்கிப்போடுங்களென்பேன்; மீளவுங் குருசையை நீசர்குலத்துப்பிறந்து பிழைப்பின்றிப் புறநாட்டிவந்து இரந்துண்பவனுச்சகத்தே யவன் உங்கள்மொழிகளை யுச்சரிக்கமாட்டாமல் பெற்றியகனையைகேட்டு மேற்குலத்தாராகிய நீங்கள் தலைகுனிதலருமாயமோ? இது உங்கள் குலத்திற் கீனமல்லவோ? என்று சொல்லி, பாவனையு மெய்த்துப்போடுவதற்கு என்வல்லமைக் கரியதுமுண்டோ? என்றான். அதற்குப் பேயரசன் சொல்வான்: நீபொய்யாகச்சொன்னதெல்லாம் வெளியாகி மந்தவேதம் பூவுலகோடு கூடப்பிறந்த பழையசத்தியவேதமென்றும், நீபழித்தகுருசை மணிமுடியரசர்குலத்திற்பிறந்த முனியென்றும், அவன்பிறந்த நாடு, செல்வமும், புகழுங், கல்வியும், நீதியும், ஞானமும் நிறைந்த நாடென்றும், எதிர்த்தாரெப்படியாகிலு மறிவாராகில் உனக்குக்கேடுதியல்லவா? என்றான். அதற்குப் பேயி

ணமெல்லாம் பேய்க்கரசன் சொன்னதற்கு ஒத்துக்கொள்ளுகையில், சடக்கிலிப்பேயானவன் இடிபோல வெடித்தசொற்கொண்டு மனிதர்கள் கண்ணுற்கண்டதற்குமுன் காதினாற்கேட்டதை யெண்ணுவரோ? கடல்வாழு மொருகுருவின்கதையைக் கேளுமென்று மீளவுஞ் சொல்லுவான்: ஒருநாள் வெள்ளமோடிவருகையில் எதிர்த்துவந்த குருகுட்டிப் புரண்டு, ஆற்றுநீரோடுபோயொருகிணற்றில் விழுந்தவுடனங்கிருந்த மீன்களெல்லாம் நீ யெந்தவிடத்திலிருக்கிறதென்றுகேட்க, அச்சிறுகுருக்குட்டி நான்கரைகாணாதகன்று மிகுந்த ஆழமுள்ளதான மணிகளைக்கொழிக்குஞ் சிறந்தகடலிடத்திலிருப்பதுஎன்று சொல்ல, மீன்கள்சிரித்து, இந்தக் கிணறுபோலச் சிறந்தநீரிடமு முண்டோ? என்றுசொல்ல, அதனால் குருக்குட்டிநாணி, நானிங்கேயிருக்குமளவும் நீங்கள் சொல்லுமிகழ்ச்சி செல்லுமென்றது. அதுபோலக் குசை தன்னிடத்தைவிட்டிங்குவந்ததால் இகழ்ச்சிப்படுவது அருமையல்ல; பின்னும் எசித்தாரிடத்தில் கருப்பங்கூடாதபடி வித்தையழிப்பேன்; கருக்கூடினாலுந் திரண்டபின்பு அழிப்பேன்; கெடாமலிருந்து பருவத்தில் பிள்ளைகள் பிறந்தாலும், பிறந்தபோது அழிப்பேன்; அப்படியழியாமலிருந்து கல்வியடையும் பருவத்தி லழிப்பேன்; அப்படியுமழியாதாயின் நோயினால்கெட்டுமெலியவுஞ்செய்வேன்; இவ்வகையாக அவர்களின் பிள்ளைகளிடத்து நான்செய்யும்போது நாமங்கே யாளவும், அத்துயர்களைத்தீர்க்க நமக்காகாதவனை திரும்பிச் செய்யவுஞ்செய்வேன்; இவையெல்லாஞ் செய்யாதபடி யாண்டவன் விலக்கினால், மழையில்லாமை, தீப்பற்றல், பயிரழிவு, குடிப்பகை முதலிய காரணத்தால்வருகின்ற நோய், துன்பம், இடையூறுகளெல்லாம் நீங்கள்கைவிட்ட பழயதேவர்கள் செய்ததாகச் சொல்வேன் அப்பொழுது குசைமுனி பிழைப்பது யரிதாகி நீயே யவ்விடத்து எதிரின்றி அரசாள்வாயென்றான்.

இப்படியாக மேகத்திறைவியுங், கடலோசியு மயங்கப் பேய்களெல்லா முழக்கி வஞ்சனைத்தொழிலால் எட்டுமாதமும்போக்கி, முன்சொன்ன ஆலோசனைப்படிகளைச் செய்திருக்கையில் இவையெல்லாங்கேட்ட பேய்க்கரசன் இழுங்குபடலின்று நீண்டசெவிகளைக்குலுக்கி, உயர்த்தகொம்புகளை யசைத்து, வாக்கைவாயைத்திறந்து சொல்லுவான்: தாழ்வுங், கலக்கமுமில்லாமல் செயதற்கரிய வஞ்சனைசெய்யுஞ் சேனைகளே! மயக்கமில்லாமல் நீங்கள்சொன்ன ஆலோசனையால் நான் அனேகக்கட்டளைச்சித்தி பின்பப்பயனை யடைந்ததல்லாமல் தெளிந்தகாட்சியு, மாயையின் சூழ்ச்சியுமிகுதியாகவுடைய நீங்கள் துணையிருக்கும்போது என்பெருமையுஞ் செங்கோலுமழியுமோ? நீங்கள்செய்த ஆலோசனைப்படியோய் இன்பங்காட்டிப் பாலோடுகலந்த பாபத்தின்மையை யெவர்க்குமூட்டி, ஓரோரிடத்து வருந்தும்படி பயங்காட்டி, யோரோரிடத்து மகிழும்படி புகழும், அன்புங்காட்டி யெவரும் பின்பு நரகில்விழும்படி வருத்திச்செய்யுங்கள்; நமக்குப்பிழைப்பிதுவேயாகும்; ஆகிலும் இந்தஆலோசனை வஞ்சனை விளங்காதபடி யந்த எசித்திலிருக்குந் தெளிந்த அறிவுடைய யூகராகிய மரியுங், குசையுங்கொண்ட தவமழியும்படி செய்தாலொழிய நினைத்ததற்குக் காரணமாகிய பாவங்களைச்செலுத்தி, நாமங்கே யாளமாட்டோம்; காரிய மிப்படியிருப்பதால் நாமெல்லா மொருஅணியாகநின்று எப்படியாகிலும் பொய்யைக்கொண்டு அவ்விருவர் கெடும்படி மூர்க்கபோர்செய்துவென்றால்* எசித்து நாட்டையெல்லா மெளிதாய் வெல்லலாம்; ஆதலால் அரியவஞ்சனைச் சூழ்ச்சியால் வெல்லப்படாத போர்செய்தவரெல்லாருக்கும் நான் கிடைப்பதற்கரிய வரிசைகொடுப்பேனென்று கோபத்துடனே பேய்க்கரசன் சொன்னபோது மற்றப்பேய்களெல்லாம் ஒன்றாகக்கூடி யிடிகள்திரளாய்விழுந்ததுபோல தங்

கன்கொம்புகள் சொருகுதுவிட்டெழுந்து மிகவுந்தைக்கும்படி பாசன்பாதத்தில்விழுந்து, மேகமுழக்கத்திலுங் கொடிதாய்ச் சப்தித்து எழுந்து, கின்னத்தை முடித்தாப்போல, வாத்தையை யத்திறந்து காகமுறங்கும்படி திட்பமாக்கச் சிரித்துக்கொக்கரித்து, முழங்கித் துள்ளிமகிழ்ந்து, சிறகுகள்ளுங் கொடிதாய் வெற்றிவெற்றியென்றுசொல்லி பூமழையாக நெருப்புமழையை யிறைத்து, உயர்ந்தோர் புகழ்ச்சிவருங்காலத்தில் பின்பு இகழ்ச்சி வருமென்றெண்ணி பயப்படுவார்போலவிராமல் தங்களுக்குக்கேடுவரும்வழியை யறியாது கடைசியில் மயங்கிவழியுமட்டு அன்றையதின மகிழ்ந்திருந்தன.

குணுங்குமந்திரப்படலம் - முற்றிற்று.

இருபத்துநான்காவது - சோகுதோர்வைப்படலம்.

காமவெயலர்க்கோலானுங் கன்னியக்துணைவியானு க
தாமலிதவத்தினிஞ்சி தளர்ந்திடைக்கதுவிட்டெருச த
தீமலிகுணுங்கலாமேழ் செயிர்க்குரியணிகளேழாவ ப
பூமலிகடிக்கிறக்கசப் புதுவொழிந்தனபோரோர்க் தே.

முன்சொன்னபடியே பூங்கொடியுயர்த்திய குசைமாமுனிகளுடையவுங், திருக்கக்கித்தாயாருடையவு நிறைந்த தவமாகிய கோட்டை யிடிந்துவிழும்படி யவர்கள்மேல் போர்புரிய நரகத்திலுள்ள பசாசுக்களெல்லாந் திரண்டுகூடிப், பயமென்னு மதயானைக வொருவெள்ளமும், ஆங்காரமென்னுந் தேர்க ளிரண்டுவெள்ளமுங், கோபமென்னும் அஸ்வங்கள் நாலுவெள்ளமும், புலனுசைகளென்னுங் காலாள் கணக்கில்லாமலுங்கூடி, ஆங்காரம், உலோபம், காமம், கோபம், காய்மகராம், ஆகாரப்பொம்மல், கருமத்தில்தளர்ச்சியாகிய ஏழுபிரதானபாவங்களுக்குரிய ஏழுவகுப்பாய்ப்பிரிந்து, காமத்தை அம்பாகவுங், கோபத்தை வாளாகவும், குரோதத்தைவேலாகவும், உலோபத்தைச்சக்கரமாகவும், பொய்யை யீட்டியாகவும், சோம்பலைக் கதாயுதமாகவுங், கரங்களிற்பிடித்துப் பூவுலகநடுங்கவுங், கடலொதுங்கிய பொங்கவும், வானுலக மிரக்கங்கொள்ளவுங், காரணமறியாமல் மனிதர்யாவரும் வருந்திக்கூசவும், இருபக்கத்திலுஞ் சூழ்ந்துவரப் பேய்க்கரசனானவன் நரகத்தைவிட்டெழுந்திருந்து இடியைப் போலத் தனது ஏழுவாய்களுமுழக்கக் கண்வழியால் தீக்கொழுந்தைத் தும்மிப்புறப்பட்டுப், பூவுலகில்வரும்போது இதைக்கண்டவரனைவர் மனிதர்களுக்காகச் செத்தொழிக்கதுபோல இரக்கங்கொண்டுவினைத்த தன்மையென்றால்:— பஞ்சேந்திரியங்களாகிய ஐந்துபகைகளும், உயிரைவருத்திச்சூழ்ந்திருக்க உடலினைக்கொண்டு மயங்குமனிதர்களுக்குள் பொய்காட்டி வஞ்சனைசெய்யும் பேய்களெல்லாம் கூடிமகிழ்விக்கும் போர்முகத்திலே எவர்நிற்பார், மீளவும் பூவுலகெல்லாம் நடுங்கி, ஞானமுந், தெளிவுங், தவமும், மற்றதருமத்தின்நிலமும் அகன்றுபோகும்படி பசாசெல்லாம ஒன்றாகத்திரண்டு இங்கேவந்ததினால் இனி பொய்யுங், களவுங், காமமும், மற்றப்பாவங்களும பரந்து விளையும் பொழுது மனிதர்க்குள் கெடாமலிருப்பவரார்? நல்லொழுக்கத்தைப்பூமியில் நிறுத்தும்படி யவதரித்த காதனிது மிக்கப்பசாசுக்களின் பகைக்கு இலக்காரோ? என்றெண்ணும்பொழுதே தவத்தைவிடாத திருக்கக்கித்தாயாரையுங், குசைமாமுனிகளையும இக்கப்பேய்கள் வெல்லுமோவென்று மீளவும் நகைத்துக் கொக்கரித்து அன்றிரக்கருணைபோடு அவ்விருவரிடத்தில் அவதரித்தப்பிரகத

வர் ஆண்டவனென்றறியாமலல்லவோ மயக்கிய நெறியிலே வெற்றிகொண்டோமென்ற பசாசுக்களை சூரியன்முன்னிருள் கெடுவதுபோலக் கெடும்படியாகத்து மெலிந்து, மீளவுமயங்கி நரகில் வீழுமெனப்பார்; இனிச் ஞானசமாதிகளைக் தொடுக்கும் பூங்கொடியின்வாசனையே அலைகளாமப்பகருமென்பார்; அந்தச் ஞானசமாதிகளின் ஆன்மவிசேஷங்கள் பூமாலையையொத்த கற்புமரியம்மாளின் கற்பை விளங்கச்செய்ய அவைகளைச் சூடச்செய்ய அவர்க்கின்பமுடைகளெல்லாம் தெரியுமென பார்; இப்படிப் பலவகையுஞ் சொல்லிப், பூமாலையொ முத்தாரங்களும் உண்டாய சேர்க்கையாயிருக்கத் திருக்கன்னித்தாயாருக்கு ஞானசமாதிகளும் அடைக்கலமேயிருக்கப் பூமழைபொழியும்படி. தேவமனோகரங்களையேந்திய பசாசின்கோலவியைக் காணவிருக்கும்போது ஊசப்பூக்கொடுத்த மலைமேல்போலக் கன்னித்தாயார் இருக்கையின் திருக்குமாரனின் திருமுகத்தின் ஒளிவீசிய பெரியைத்தைத் தேவமனோ கொருண்ணுமாப்போலச் ஞானசமாதிகள்நிறையவுண்டு களித்திருக்கையில் வருத்தமுடைய பேய்கள் போர்செய்யத் தொடங்கின.

* அப்பொழுது தேவகுமாரனையும், தேவமாதாவையும், ஞானசமாதிகளும் ஒருமித்து பூமழைபோலத் தேவவருளி ஞானத்தகலையைவிடாமல் நாடுகொண்டிருக்கும்போது பேய்களுக்குப் போர்தொடங்கும் நிலைமையில் இருக்க ஒரு மேலனவல்லமையால் தடுக்கப்படும் நெருக்கத்தால் ஒருகாலத்தில் விருத்து தங்களின் நெருக்கடப்பட்டுச் செய்கைகளையே யெதிர்க்கவறியாமல் கோபித்து, நாமப்படிப்பேதது? இச்சத்திலிய பிரண்டுமனிதரின் வல்லமை மிகுதிகளைக்கு மிருந்திலேதும் உலகெங்கும்கெட்டியும் மீன்றவரோடும் வென்ற நமது வருன்ன இப்பொழுது மெலிந்தேமென்றுரைத்து, அப்புறம் போகமாட்டாமலிருக்கப் பின்வரிசையில் நின்றபேய்களை மிக்கசேவைக்கொடு முன்வரிசையிலுளளபேய்களை சீக்கிரம்போக்கவென்று உதைத்துத்தள்ளத், தாயெறிதட்டின கொடியவேதனைகளை சொடுத்தோரை சங்கிலியைக் கடந்துவிட்ட நாயுதிறது போல அப்புறமும், இப்புறமும் போகமாட்டாமல் சினந்து முழங்கிக் குதிரைகளைப்போலவும், ஆடுகள்போலவும், கடாக்கள்போலவும், யானைகள்போலவும், கழுதைகள்போலவும், குரங்குகள்போலவும், சிங்கங்கள்போலவும், கரடிகள்போலவும், பன்றிகள்போலவும், நாய்கள்போலவும், புலிகள்போலவும், பலவுருவங்களையெடுத்துத் தனித்தனியாகக்கூடி உலகமெல்லாம் அதிர்ந்து கூவிக்கொக்கவும், மனங்கொட்டவும், இடியையும் மாரியும் பெய்து, நெருப்பையும் ஆகாயமுகலாகிய பலவுருக்களையெடுத்து வாதுபண்ணவும், பூமியைக் கிழிக்கப்போலப் பொலச் செந்நீர்பெருக்கும் சினந்துமுழக்கி எதிர்த்தபார்க்கும் திருக்கன்னித்தாயாருக்கு, ஞானசமாதிகளுக்கு, கடவுளின் தேவதிருச்சபையை இடமாகக்கொண்டு அதனமேலேறிநின்று, கல்விநின்ற கரிமையைக் கவசமாகவணிந்து குற்றமறியாத கோட்டைமதிலாக அருட்கவசத்தைப்பூண்டு இருக்கையால் அந்தப்பேய்களின் புகழெல்லாம் அக்கோட்டையின் மதிலோடுபட்டு கடுவழியிலேயே நீருமாய்ப்போனது. மீளவுமந்தக் குறுங்கினங்களெல்லாம் கடவுளின் வல்லமையைக்கொண்டு அருமைசொரூபிகளாயிருக்கும் கன்னித்தாயார்மீதும், பூங்கொடிபோன்ற ஞானசமாதிகள்மீதும் பலவகையுந்தங்களைப் பாதித்தும் அவையெவையும் உதவாமலழிந்து தாங்களுங்கெட்டு நிந்தைப்பட்டிருக்கையில் காதல் மிகுதிகொண்ட குணத்தையுடைய அவ்விருவரும் பேய்கள்செய்தபோரைச் சற்றுமெண்ணாமல் உட்கொண்ட மகிழ்ச்சியைவிடாமல் விளங்கினர்.

இத்தன்மையாகத் திருக்கன்னித்தாயாருஞ், ஞானசமாதிகளுந், தங்களின் தாமரைவிழிகள்முதலிய பஞ்சேந்திரியங்களைக் காத்துப் பேய்களிட்ட அம்புகளால் ஒருகாயமுமபடாமல் அறியாதமகிழ்ச்சியையடைந்து அசையாதகோட்

டைப்போலிருக்கையில் இதைக்கண்ட அப்பசாசுக்கள் மிகுந்த துயரமும், யாதொருகருவினால் கலக்கினால் அதுவுஞ்சேருமதுபோல நாஞ்செய்யும் போர் கெடுத்து மனிதப்படைக்கு கலக்கினால் பாவமேவந்து சபைவிக்குமென்று யோசித்து, யாவருங்கலங்கத்தக்கப் பயங்கரங்களையெடுத்து அவ்விருவருக்கலங்கு மஞ்சமடி போர்செய்யத்தொடங்கின.

அதெப்படியென்றால் :— மும்மதமாருஞ் கொடியயானைகளும், மேகங்களைத்தாவிய உயர்ந்தகொடிஞ்சித்தேர்களும், குதித்துப்பாயும் அவ்வங்களும் நெருப்பைக்கொப்பளித்து கஞ்சொரிகின்று எரிக்கும வில், வாள், சக்கரம், வேல் முதலியவாயுதங்களையேந்திய வீரருங் கணக்கில்லாமல் தோன்றிக், கனைகாலுத கடலைப்போல ஓர்பெருமபடையாகநின்று புழுத்தவாயும், விழித்தகண்ணும், பொருதகையும், கதிபோலநெருப்பைச்சிந்தும மழுவும், கோலும், வில்லும், தீயைக்கொப்பளித்துப் புகையுவும், மதயானைகளுங், குதிரைகளும், மேகத்தினின் றிடிவிழுந்தாப்போல அவைகளின்வாயினின்று அழல்புறப்படவும், இப்படிப்பலவழியாகவிழுந்த தீயின்மிகுதியால மேகங்களும், மேகத்தினிடிகளும், வானமண்டலமும், வான்மண்டலத்திற்றிரியுஞ் சூரியனும், பூமியும், மலைகளும், அவைநின்றோடும் ஆறுகளும், பூவுலகமாறுதிசைகளும, கடலும வெகுமென்று தோன்றவும், அதைதினைத்த பூராமும வேகவும், பல்வினவழியாய்க தீயைக்கொப்பளித்து ஓரம்பினையெடுத்து விலைவிற் றொடுக்கும்போது நூறாகவும், எய்யும்போது ஆயிரமாகவும், அவ்வம்பு ஆகாயத்திற்போம்போது கோடியாகவும்விட்டதால அக்கினிவெள்ளத்தால பதிசைகளும் வெந்தொழிந்ததாகத்தோன்றவும், மீளவும் மதயானைகளைக் கையால்வாரிக்கொண்டுவீசியாகாயத்திலெறியவும், அக்கயானை மிசைமுழுதிலி விசையாகசசுழன்று உலாவினதால் மேகங்களொதுங்கவுரு, சூரியனைமறைத்து சீக்கிரமாயோடவும், யுகமுடியுங்காலத்தில காற்றின்முகத்தில் மேகங்கள் மேற்விழுந்ததுபோல யானைகளும் பூமிதிங்கியாங்கப்படி மேற்விழவுங், தேர்களோவென்றால், இறகுகளுமுளைத்த மலைகள் பறக்கைபோலவும், இடிமின்னலிடியோடு மேகங்கள் படர்ந்தனபோலவும், நிலத்திற்பதியாமல மேகத்தில் தேருருவாய பதியும்படி யூர்ந்து, பொய்பறக்குரு சீக்கிரமாக ஓடிக், தங்களோடுதாக்கள் யுத்தஞ்செய்கையினிரதமுங், தீயுங்கலந்தெழும்படி அப்புநாரியை அவினைற்ப பொழிந்தும், ஒவ்வொருவரையாக நாறுபாணங்களையெய்தும், தேர்கள்நெருங்கும்படி திரிந்தும சேத்தியகன்றும், யுத்தத்திலெழுந்த தீயினுலெரிக்கும், மீளவுங் தங்களுக்குள் சுழன்றுகமற்றும், அக்கினி இடியைப்போல அஸ்திரங்களை யெறிந்தும ஏற்லைகேடோடு மேற்விழுந்து பாணமிருணடும் பெருமபோர் செய்தார்கள்.

இவையெல்லாம ஒருபக்கத்திலாகும்போது, பயங்கரமுகத்தைக்காட்டி விருபக்கத்திலின்ற மற்றப்பசாசுக்கள் முழக்குமபடி எவ்விவ்னைனறும், மைத்தனென்று மிரண்டுபோய்கள் தங்களுக்குருமவந்தெல்லாம அடைப்பட்டு தவிடும்படி மற்றபேய்களைப்பார்க்கிறு மாயவித்தையோடு போர்செய்யத் தொடங்கின. அதெப்படியென்றால் — மதயானைகளையொத்த கோபத்துடனே கொடியவாய்முகத்தையுடைய மைத்தன் சிங்கங்கள்கட்டிய தேரின்மேலேறி அக்கினியாஸ்திரங்களை யெய்துவருகையில் நீண்ட அழைப்புக்களோடு சிங்கமுகத்தையுடைய வேதிகன புலிகளைப்பூட்டிய தேரின்மேலேறியெதிர்த்தான். உடனே காய்முகனுகிய மைத்தன் மலைகள்முதலாய்ச் சுழலும்படி பெருமுசுக்குவிட்டுருட்டி கெடிதாய்கோபித்து, அவைகிமிதைத்துக்குள்ளே நிழலாகுமபடி விருளைக்கொள்ளவும், அணியணியாய்நின்ற பேய்களுக்குப்பட்ட புண்வழியாக வரும் புகைபோல இரத்தமோடவும், வளைத்தவில் நிமிராமல் அம்புகளையெ

ய்தபோது வீரவடுவனும், கொடிய இரண்டு பர்வதத்தைப்போத்த இரண்டு தோள்களையுமசைத்து நெடியதொருபர்வதத்தைத்திரட்டினைத்ததைப்போத்த ஒரு வில்லைவளைத்து வளைத்து, பூமியும் உருவிடயாமும்படி அஸ்திரங்களை வேகமுடன் தைக்கவும் சிலஅம்புகளைவிட்டு வடிவனின் வில்லைமுறித்து, மிகவுஞ் சிரித்தான். இதுகண்டு வடுவன்கோபித்து, இடிகளைக் கருக்கொண்ட ஒருமேகத்தைக் கையாற்பற்றி, மற்றப் பேய்களுமஞ்சும்படி அதைச் சக்கராயுதமாக மைத்தனமே வெறிதவனாவில், மைத்தனுந் சில கொடியபாணங்களைவிட்டு, கட்டுமையத்து அவைகளைக்குட்டிபோடும்படி யம்மேகத்தையும், மேகத்திலுள்ள இடிகளையுந், தூளாய்ப்பறக்கச்செய்தான். இதைக்கண்டு வடிவன் பூவுலகத்தைவேரோடலசைக்கவும், நாகத்தினைப் தூண்டவும், உரித்தாகிய ஒருசூலாயுதத்தை இருகையினாலுமெடுத்து எறிந்தனனவில் மற்றப்பேய்களும் நகைக்க, மைத்தனேறிய தோளனது தீப்பற்றி நீறுகவெக்கவுடன் மைத்தன் மேகத்தைத்தூக்கி ஆகாயத்திடபாய்ந்து, பின்பு இறங்கிழுந்தாற்போல வடுவனை முன்பாகக்குதித்து, வடிவனேறிய உயர்ந்திரதத்தைக் கையால்வாரிக்கொண்டு மேகங்களுமப்படி மேலேசுற்றினவிசையால் இரதமானது அழுலோடுபறக்க இடிகளோடு மேகங்கள் வேகவும், எட்டுத்திசைகளும் வேகவுந், சிங்கமுகனுடைய வடிவன் தனகன்களோகஇழித்த தீயழுன்றுவேகவும், அக்கினிமழையைப் பொழிந்து கீழேவிழுந்தான்.

இப்படி இருவருடைய தேர்களுமழிந்தபிறகு நிலையப்பதிக்கும் இரண்டுகதாயுதங்களையெடுத்து இருவருமவ்விவரும்போதுகளமிழுமிருக்கும் யானைகளுந், குதிரைகளுந், தேர்களும், எரிந்தழியவும், மற்றப் பேய்களைப்பிடித்த வில்லுகளும், அம்புகளும், வேல்களும், வாள்களும், இரிந்தொழியவும், பார்த்தவிழிகளுஞ் சிவக்கமனங்களும், கேட்டசெவிகளும் முழுக்கினவாய்களுந் தெரிந்து புகையுமக்கினிக்குதித்து இட்டியகன்று புஜங்களோங்கி முழங்கிப்புரண்டு வெருண்டு இரத்தத்தைச் சிந்திவருந்தவும், மதயானைகளை யாகாயத்தி லெறிந்தும், வெங்கைபுருவமெடுத்துப்பாய்ந்து, வயிரமலைகளை யடியோமிபெயர்த்து எதிரிருந்தவர் மார்புகளைக்குப்படி யெறிந்தும், அமர்ந்தும், ஒடின உயிரவெள்ளத்திலமுழ்கியுந், தன்பத்திரன் சடைகளைக்கடித்து இரத்தத்தையுமிழ்ந்தும், மூளை கெட்டாத முரசு, முருடு, முழவு கட்டிழந்த படைவாசகங்கள் முழங்கவும், ஓடினதேர்களும், பாய்க்குதிரைகளும், மதத்தயானைகளும் புழுங்கவுந், சித்தினஇரத்தமும், வீசினவாள்களும், எறிந்தவேல்களுந், கழற்றினகதாயுதங்களும், வளைத்தவில்லுகளும், எய்தஅம்புகளு முழங்கவும், இன்றுமின்மூன் மேகமுழக்கமுங், கடல்முழக்கமுங் குறையவும், பாவத்தின்வழியாக நிறைய வளருந் துயர்களைப்போல வில்லுகளினின்று மட்டிலாத பாணங்கள் புறப்படவும், அம்புகள்செய்த புண்வழியாய் மலையாறுபோல இரத்தமோடவும், மேகத்தினின்றுவிழு மிடியைப்போலப் பலஆயுதங்கள்வழியாய்த் தீப்பறக்கவுந், சொல்லடங்காதகோப மேலுமேலும் பெருகவும், போர்புரிந்து அவர்களுக்குள்ள வல்லமையெல்லா மற்றப் பசாசுகளோடு செய்துவருகாலுந், குசைமாமுனிவர்களும் அவருடைய திருத்தாயியாராகிய திருக்கந்தித்தாயாருஞ் சற்றுங்கலங்காமல் எதிர்த்திருப்பதைக்கண்டு மேகமுழக்கத்திலு மிகவுங்காசித்துக் கோபித்து, மனத்தி லருகதுன்பத்தைக்கொண்டு நொந்து, புகைந்து, பயந்து, நாம் செய்தபோரெல்லாம வியர்த்தமெனத்தெளிந்து மெலிந்துநின்றனர்.

இவையாவும்பூவுலகத்தாரிலொருவருமறியாமல் திருக்கந்தித்தாயாருங், குசைமாமுனிவனுந், திருக்குமாரனும், வானவருமாததிரமறிந்திருக்கையில் வயிரப்பொன்மலையைப்போத்த அசையாத மனத்தில்தெளிந்த வுணர்வுடைய குசைமாமுனி

கன் மாயவித்தையினால் பசாசுக்கள்காட்டின வஞ்சகத்தைக்கண்டு மனிதர்க்காக இரக்கங்கொண்டு சொல்லுவார்: ஆண்டவரால்வல்லமைபெறாத பேயினங்கள் நீண்ட கொம்புகளையசைத்து, அஞ்சாதுறையாமல் சடையுகப்போலப் பூவுலகெல்லாம் விழுங்கினதாகப் போர்செய்த வல்லமை யிதுதானோ? என்பார்; மீளவும் அந்தப் பசாசுக்கள்செய்த போரைப்பார்த்தால் மின்னலுமேகங்களுங்கூடிய ஆகாயத்தையும், பொன்னும் மணியுங்கூடிய உடுவையும், மலைகளையும் பூவுலகினிலுள்ள வெள்ளமுறையும்யழிக்கச் சுட்டதுபோலத் தோன்றிப்பின்பு பசும்புல்லின்மேலுறைந்துகளை யித்தேக யழிந்ததல்லவோ? என்பார்; வானுலக நன்மையை யிழந்ததனால் உட்கொண்ட பழியைப் பூவுலகத்தார்மேல் வைத்திருக்கும் பசாசுக்கள் கண்ணின்மேல்வைத்த கொக்கிபோல மனிதரைக்கெடுக்க எண்ணப்பட்டதெல்லாம் பயமாய்வீசித்தன் கட்டின மாயத்தொழில் விழுவாதும் என்பார்; அப்படிப்பழியைக்கொண்ட பசாசுக்கள் பாவங்களை விளைவிக்கத் தொடர்ந்தழிவோடு பூவுலகங்கெட்டதென்பார்; இப்படியல்லவோ? பசாசுக்கள் இரவிலே பொய்யைத்தோற்றுவித்த கனவுகளை உண் மெய்பிற்றெளிவாம அறிவுகெட்ட பாவங்களை விளைவிமென்பார்; அப்படிப்பசாசுக்கள் பயங்கரமான கனவுகளைக்காட்டிப் பூசித்து வல்லின மனிதர்களிடத்தில் விரும்பின அன்னங்களைக்கொண்டு அருந்தும் விளைவிப்பேனென்றதை செல்வங்களைமாற்றித் தரித்திரமுண்டாக்கிப்பேனென்றும் அக்கினியிலேபோனவி, மனிதரைமயக்கும் என்பார்; உலகத்தையெல்லாம் விழுங்கவேண்டுமென்பதுபோல எப்பொழுதும்விழித்திருக்கும் கடலானது தன்கரைகளுக்குமேலே பொங்கிச்செய்வதுண்டோ? அப்படி யாண்டவன் பாதத்தைச்சேர்ந்தவரிடத்தில் பயப்படும்படி கூப்பிடும் பசாசுக்களென்னசெய்யும்; அன்றியுங் கட்டப்பட்டு நிற்கின்ற காய்முளைத்தாலும் கிட்டுவதாயிருக்காமல் மறுமுனை பொன்னைச் செய்யுமென்பார்; பின்னும் ஆடியாத்துன்பங்களை மாற்றப்படாமல் சாகத்தீ செய்யுமென்பார்; மின்னும் நீதியாற்றெரிந்து கொண்ட நிச்சயமாகவே பசாசுக்கள் மனிதரைக்கொண்டு இராத்தியாதிகளைத் தீர்க்கவும், நீங்கயாதனையைக் காவற்செய்வோமென்று சொல்லுமென்பார்; இன்னும் நெடும்வழிப்பிரயாணத்தில் கொண்டுபரிக்கும் கள்ளனைத் துணையாய்க்கொண்டதுபோலத் தம்மை வணங்கினவர்க்குப் பரமகதிவாழ்வைத் தருவோமென்று பேய்கள் சொல்லுமென்பார்; இப்படிச் சினங்கொண்டு பசாசுக்கள்செய்யும் வஞ்சனையுணராமல் ஏய்க்கப்பட்ட மனிதர்பிடாமற் பாவங்களைக்கட்டிக்கொண்டு தாங்கள்கும்பிட்ட பேய்களோடு நரகத்திலே வேகும்படி விழுவாரல்லவோ? என்று முன்சொன்னபடி பசாசுக்கள் போர்செய்து வருகையில் இப்படி மனிதர்க்காக இரங்குவார்.

இத்தன்மையாகப் பசாசுக்கள் நடந்ததற்குக் காரணமாகிய மதுமலர்க்கொடிபெற்றிய ஆசைமாமுகிகள் மனிதர்களுக்கிரங்கினபிறகு பூவுலகெல்லாங் கெடுக்கக் கொடியபழியைக்கொண்ட பசாசுக்கள்பார்த்து நிற்கும்படி தனது அருந்தவத்தை விலைசப்பிடித்து, பலதருமங்களை யாபுமாலையாக அதிலே தொடுத்து அந்தப்பேய்களைநோக்கி அவற்றின்வல்லமை குறையும்படி கெடுத்து, போராகததாக்கியெதிர்த்து, வானுலகும் வணங்கப்பட்ட தனது வில்லில் பேற்றிய பல அஸ்திரங்களைப்பெய்து, பசாசுக்கள்விடுத்த ஆயுதங்களையெல்லாம் விலக்கித் தூளாயெரித்து, கெட்டழிந்த அப்பேய்களெல்லாம் கொந்தளாம் காணும்படி பவத்தைபொருமிக்க இருகாலினால் புழியோடுதேய்த்தாப்போல வென்றழித் தொடுக்கினபிறகு, மீளவு மனிதர்க்காக இரக்கங்கொண்டு இன்பமாக இலங்கினாலிக்கும் அழகியதிருமுகத்தோடு அவதரித்த தேவதிருக்குமரனைநோக்கிச் சொல்லுவார்: ஐயனே! நீ யெனக்குச்செய்த கருணையின

மிகுதியாய்ப்பானஞ்சாதிருப்போறுமினும், விரித்தபூவுலகத்தின் மற்றமனிதர்களைக் இரக்கமபுரிந்து கட்டமாய்வந்த பேய்களெங்களையாவையும் எரிநரகத்திற்றள்ளித் போட்டுவாயென்று வேண்டினவளவில் கன்னிகையாயிருந்து தன்னையீன்ற திருத்தாயாரின் திருக்கமலக்கரமாகிய ஆசனத்தெழுந்தருளிய தேவகுமாரன் நக்ஷத்திரத்திலும் விளங்கிய அறிவெல்லைகடந்த ஞானியின் மேன்மையையுடையவராயினும் அவதரித்த உடலின்வகையிலே அறியாத மற்றக் குழந்தைகள் போலத் தானிருந்தும் ஒருவருக்குமாய்ப் பேசாதிருந்து அன்றையதினம் வாசமொழிந்து மலர்ந்தகமலமாகிய தனது திருவாய்மலரது தேவாமிர்தத்தை யூற்றுகவொப்பளித்து, மழலைச்சொற்கொண்டு பேசத்தொடங்கி, யருகேயின்ற குசைமாமுனிகளை நக்ஷத்திரங்கள் மின்னிப்பார்த்தாற்போலப் பார்த்துக் கருத்தோடு அப்பாவென்றபோது உள்ளமகிழும்படி திருக்குமாரன சொன்ன திருமொழியைக்கேட்ட குசைமாமுனிகள் பயந்தாற்போல அதிசயித்து, மறுமொழிசொல்லுவார்: என்னுடையனே! எல்லாப் பிதாக்களுக்கு மூத்தபிதாவுநீயே; உலகமூன்றையுமுண்டாக்கிய தகப்பனுநீயே; அவதரித்து மனிதனானபோதும் புருஷனுதவியில்லாமல் கன்னிமாமுத தாயின்பிள்ளையுநீயே; நீயிப்படியாகையில் என்னை அப்பாவென்றதேனோ? என்றுரைத்து இன்பமாமாருவின்கடலில் மூழ்கி மகிழ்ந்திருக்கையில், திருக்குமாரனுச்சரித்த அந்தவொருதிருமொழிச்சப்தத்தின் வல்லமையினால் மயங்கின பேய்களெல்லாம்பயந்து, மேகத்தினின்று முழக்கிவிழு மிடியைப்போல விழுந்தருண்டு, மிகவு மார்த்துக்கதறிக், தீயெரிநரகினுள்ளே விழுந்தழுந்தின. இப்படிப்பேய்களெல்லாம் நரகத்தில் விழுந்தபிறகு ஆகாயத்தில் நின்றிருந்தவானவர் ஒளியின் மழையும், உயர்ந்தபுகழாகியசொல்லின் மழையுந், தேன்மலர்மழையும், மேகங்கள்வழங்கு மழையைப்போலத் தூவிவருகையில், மிகவுக் தேவகுழந்தை குசைமாமுனிகளைநோக்கி மழையாகத்திருமுகத்தி விளங்கிரணத்தைப் பரப்பிச் சொல்லுவார்: என்பிதாவே! நீயுன்தவத்தின் வில்லினால் பேய்களெல்லாவற்றையும் நிக்கிரகபட்டவென்றாய்; ஆகையால் இனிமேல் மற்ற மனிதர்களும் வணக்கத்தோடு உன்பெயரை நினைக்குமாத்திரத்தில் அந்தப்பேய்களைச்செயித்து வெல்லும்படி பெருமைபெற உனக்குவரக்கத்தேனென்றுசொல்லப் பேய்களைவென்ற தவத்திறுண்மையிற்சிறந்த வீரனாகிய குசைமாமுனிக ளிதைக்கேட்டுத் தேவபாலகனை மிகவும்வணங்கி யுள்ளத்திலதிசயித்து நெடிய துதிகளைச் சொல்லி, தமதுணர்வெல்லாங்கடந்த மூன்றைத் ஸ்வாமிப்புகழ்ந்தார்.

சோகுதோர்வைப்படல - முற்றிற்று.

இரண்டாங்காண்ட முற்றுப்பெற்றது

சேசுமரியாயி குசை துணை.

மூன்றாங்காண்டம்.

இருபத்தைந்தாவது - குழவிகள்வதைப்படலம்.

சொன்முகத்திடிச் சினத்தொனிமுழங்கிய வெம்போ ர்
கொன்முகத்தெரி குறுங்கிணமியற்றிய கா லை
பொன்முகத்தொளிப் புரிசைமாநகரிலா யவைநா ஞ்
சொன்முகத்திவட் டொடையொடுதொடருது முரைத் தே.

முன்சொன்னபடியே மேகத்திடத்தில் இடிகள்காட்டுங் கோபத்தோடு மிகவுமுழங்கிய கொடும்போரை விளைக்கப்பசாசுக்கள் நடத்திவருகையில் பொன்னால் விளங்கியுயர்ந்த மதிலாற்சிறப்புற்ற ஜெருசலமாநகரிடத்திலாகிய கெடுதியை நானிவ்விடத்திற் சொல்லிக்காட்டத் தொடங்கினேன். அதெப்படியென்றால் :— புகழ்பொருந்திய பழயவேதத்தை யநுசரிக்கும் யூதருடைய நாட்டிலுள்ளதையும், மலையையொத்தபுஜமும், இடியைவிடும்வில்லேந்திய கரமும், தாமரைமாலையும், யானைக்கொடியும் உடைய எரோதனென்னுங் கொடுங்கோல்மன்னவன் அந்நாளிலே எருசலமாநகரிடத்தில் வீற்றிருந்து உலகமெல்லாந் தானொருவனே யாளுமாசையினால் பாவத்திற்கஞ்சாமல் புறநாடுகளையுந் தனக்குக்கீழ்ப்படுத்திச், செங்கோன்முறைமை தவறிக்கோபித்தநெஞ்சுடையவனாய் மயங்கி, யறிவுகெட்டுக் கொடியசிந்தையுடையவனா யிருக்கையில் முன்னே ஆண்டவர்மனிதனாய்ப்பிறந்தகாலத்தில் பெருமையினுயர்ந்த மூவரசர் ஆண்டவனைத் தேடிவந்தபோது அவர்கள்சொன்னதைக்கொண்டு வானநக்ஷத்திரம் நவமாயுதித்தசெய்தியும், பூவுலகை இரக்ஷித்துத் தனியேயாளும்படி கடவுளங்கே பிறக்கசெய்தியுங் கேட்டுமயங்கி, வேதபாரகர்யாவரையு மழைப்பித்து, இந்தப்பூவுலகையாண்டிரக்ஷிக்கவருங் கடவுள் எங்கேபிறப்பாரென்று விசாரித்தபோது அவ்வேதபாரகர் எருசலேம் நகரத்தினண்டையிலுள்ள பெத்லேம் நகரில் பிறப்பாரென்றுசொல்ல, இதைக்கேட்ட எரோதன் அவ்வாசகம் வேலைப்போல உள்ளத்திற்புகுந்ததால் தானினைத்தகொடுமையை மறைத்து, வந்தமூவரசரைநோக்கிச் சொல்லுவான் : நீங்கள் முன்பாகப்போய்ப் பிறந்தநாதனைக் கண்டுவணங்கிப், பின்பு இங்கேவந்து நீங்கள்கண்ட யாவையும் எனக்குச் சொன்னதின்மேல், நானுமவரை வணங்கப்போவே னென்று சொல்ல, அப்படியே மூவரசரும் புதுநக்ஷத்திரங் காட்டியவழியாய்ச்சென்று மீளவும் எருசலேமுக்கு வாராததைக்கண்ட எரோதன் சிலஇடையர்கண்ட காக்ஷியுந், இவ்வியநூலால் சீமையோன் திருக்கோயிலிலே சொன்ன விசேஷத்தையுங்கேட்டுத் தனக்குள்ளே யாராய்ந்துபார்த்து, முகத்திலே துக்கந்தோன்றும்படியயர்ந்து, சிலபடைவீரரை யழைப்பித்து, நவமாய்வந்த அரசன் முன்னம் பிறந்தஇடமும், அதைவிட்டு எருசலேம் நகரத்தில்வந்து, போன இடங்களையுந் தொடர்ந்துதேடி யாகாயத்திற்போனாலு மவனைவிடாமற் பிடித்துக், கண்டவிடத்திற் கொல்லுங்களென்று கட்டளையிட்டவுடனே அப்படியே வீரர்களுஞ் சென்றுபார்த்தவிடத்தில் எங்குங்காணாமையால் எரோதன் மிகவும் வருந்தி நானாளுகைசெய்யும் இந்நாட்டில் வேறோரரசனவதரானவனுக்குச் சிறந்த இந்தச்செங்கோலைத்தந்து, பின்பு நானும்வணங்கவோ ? என்செல்வநாளழிந்து உயிர்விடுங்காலமாயிற்றோ ? என எண்ணங்கொண்டு, கடவுளுலகத்தை இரக்ஷிக்கப்பிறந்த தன்மையில் மயங்கி, வானுலகம்பெருமைகொள்ளவும்,

அவன் தீவினை கொள்ளவும், பூவுலகத் தன்குறையாமறக்கவும், அவனை தன்னு ள்ளா மறக்கவுமிருந்து, துக்கமிகுதியால் துயரமாகிய செந்தீயவன்மனத்தை புண்ணுறுகையில், அனுதாபமுமை, உறக்கமனுங், கொறுவுக்குவோர்மனும் மயக்கியிருந்தான்.

இப்படி மாலைக்காலத்தையெத்திய இராக்காலத்தில் கள்ளர்கவைத்து மயி லைக்கொன்று பறிப்பதுபோல தீநிதவழிய கொடுங்கோலை யேந்திய ஏரோத னும், முன்சொன்னபடி கொண்டநினைவிருள்மயக்கி, மனத்திலிருள்கொண்ட போது அவனைமுழுதுங்கெடுக்கப் பசாசுசேர்ந்து அவன்மனத்திலுள் தீயசொ ருத்தினைப்போலக் கொடியவுணர்வுகளைச் சொல்லும்: தெவீக்கப்பெரிய அரசு தாங்குமிருட்டின செங்கோலைப் பிறர்க்குக்கொடுத்தென்ப சுகமேல்லாம் உயிர் வைத்திருப்பாரோ? தங்கள்தாயென்று முதலாயென்றும் தங்களுக்குவந்த பகைபுதிர்வதற்குமுன்னே பகைதபடியோட்டவெட்டித்தங்கள் செங்கோலை நிறுத்துவாரல்லவோ? ஆதலால் நீயுந்தப்படி வேமாய்ப்பிறந்த அரசனைக் கொல்லுக்காய்; இல்லாவிடில் உன்முடியும்வாழ்க்கையும்விட்டாய்; அவனைக் காணுமற்போனால் எந்தமுள்ள குழந்தைகளைக் கொல்லுவாய்; அதிலொரு வனுக அவனகப்பட்டுச் சாவானென்று பேயமனத்தில் நாலுமுந்துசொன்னது அ து ஏரோதன முழுதுஞ்சம்மதிப்பட்டானும் இருண்டஇராத்திரிப்பொழுதினை மேகம இருள்கொடு எண்கூச மின்னுமாப்போல, அனவிறக்கவல்லபத்தால் சமஸ்தமனிதர்களினுள்ளத்திலிருந்தனைநேருங் கடவுள் யாவருக்குங் காட்டி யெருநுசனவுணர்வுகளாகிய தேவமுகத்திரிவின்நெருமுருவ் சதிர்களின்னின வ்வியகளுஸ் தானினைத்த கொடுமையிவகோரத்தைக்கண்டுகூசிப் பின்னும்முரா னவுணர்ச்சியாகிய திருவிளக்கிறெளிவைப் பணிந்தான், கொடியவுணர்ச்சியால் செய்பதொடங்கியதீமை தான்செய்ததாகத் தோன்றாமனு, பிறை யாவருமறி யாமனுமிருக்கத் தானமேகத்தைப்போலக் கொலைக்குக் கருமபூதியாகிய கவ லேனவிராஜா வீற்றிருந்த பன்னிரண்டு மெழுகிப்பாங்களால் அமைக்கப்பட்டு மின்னியகலரத்தினங்களால் காந்திவீசியபொன்னாசனத்தி லெழுந்தருளி, வந் தெரிவினைவருசசரிப்பட்டு முரசுகளைச்சொல்லும் அறிவிற்சிறக்க கன்னூலா னைத் தேடிப்பரைப்பித்தவுடனே, அருப்பொருள்சொல்லும் மந்திரிமார்களும், தீபாசிரேஷ்டர்களும், மற்றுந்தந்திரிமாரும், படைத்தலைவருமாகிய இவர்களெ ல்லாருங்கூடிவந்து மகிமைக்கிரகங்களுக்குள் பொங்கிநெருங்கிய தூபோலச் சூழ்ந்தி ருக்கையில் மகிமையின்மேலாகிய கொடுமைபொருந்து நிலைகொள்ளாத ஈகத்தை யையுடைய ஏரோதனைநிரைசிறந்து விளங்கிய இரத்தினங்களாற்பூணித்த தன் அருமுடியும், செங்கோலும், செல்வருவனுமகருக்கருமோ! என்றதுநினைதால் கனது கொடியவஞ்சகவினைவை வெளியிடாமல் தான்சொல்லுஞ் சொல்லை மறைவாகச் சொல்லியவர்களிடத்தில் காணதேறும்படி ஒருகலை அபேவாசனை லையகேட்டதுபோலக் கேட்கத்தொடங்கினன்.

அதெப்படியென்றால்:— பகைவர் பகைசிலலாமல் காநெறுவனே யா ருமென்ற சொலலுமக்காரிப செவ்வம்பொலிக்க இக்காட்டிலுள்ள விக்காரநி லைப்பக்கத்தில் எனமேதக்கவிச வேலெருஞராஜா பிறந்திருக்கின்றதென்று உலகமெல்லாம் ஒரேவாய்மொழிபாகச் சொல்லக்கேட்டு அப்படிச்சொன்ன வார்த்தை நான் மறந்துவிட்டேனெனத்தப் பிறபாடு சம்பவிக்க பலகாரியங்களை யா லோசிக்கும்போது அக்கேசுறனைஉடனேதால் அதுசெலியும்படி யுங்களையாருக் கேள்; நீங்கள் நானசெய்யவேண்டிய முயற்சியைச் சொல்லுமென்றுன், அதற்கு நீ அதிகத்தைக்காட்டுமைபவிக்கு, கெஞ்சன் கடுத்ததைக்காட்டு முக மென்பதுபோல” அரசன் மனத்திலினைத்த கொடுமையையும், கோபத்தையும், முகச்சாயலினால் கண்டுபிடித்துச் சூழ்ச்சியுமிருக்க மந்திரிமுதலாகிய பெரியோ

ர்களும் அரசனெவ்வழி யவ்வழி குடிகளென்பதுபோல தாங்களும் நீதிநெறியைக்கைவிட்டுத் தருமசிந்தையைத் தவிர்த்துநிற்கையில் அவர்களுக்குநாஇதுவு சொல்லேபுடைய நயன மூர்த்திசொல்லுவான்; முரசொலிமாருமலை தேனைப் பொழியும் வளமுள்ள நாட்டரசனே! ஆசைபோடு சொல்லுமுண்மை மொழிகளைக் கேட்டருளவேண்டு மினவுஞ் சொல்லுவான்; மனத்திற்கொண்ட வாக்கத்தினாலாக அறிவில்லா மன்னவனே! பகைவர்த்துருமாக்கும் போதே யவை ஆகிய பின்வெட்டத்தவர்களை அக்கப்பகையளார்த்து முறிக்கிறது தங்களகம்யைமயிரு வைதப்பிக்க மாட்டார்கள்; ஆகலால இன்விடத்தில் முன்னமே வந்துபோன மூவைசசேேட நாமும்போய் அன்றுதானே யப்பகையைப் பொழிக்காதிருக்கோம்; இன்றைக்காகிலும்போ யதனை யழிக்காவிட்டால் அந்தப்பகை வெள்ளமாகத்திரண்டு முறிக்கப்பிறகு பேதையர் போல வருத்தப்படுவோம்; நீதிநெறியுடைய பெரியவர்சாகளுக்குத் துன்பமவெய்தவர்களுக்குள் தெளிந்த அறிவுடையோர் அந்தத் துன்பத்தை நஞ்சிறுவைத்தோலைப்போல உடனே நீக்கித், தங்களைக் காப்பாற்றிக்கொள்வார்கள்; இதுவரையிலும் இலாபமென்றெண்ணிச் சகலசத்துருக்களையும் இரக்ஷித்துவந்ததினால் இப்பொழுது ஒருபிசாசகோட்டைசெய்து அப்பகையைநீக்குவதற்கு அஞ்சுகின்றீரோ? அதற்கு அஞ்சவேண்டாம்; உலகத்தை யிரக்ஷிக்க மழையைப்பெய்யு மேகமுஞ், பயிர்களை விழவைவிட்டுக்கொல்லுவது மறியீர்; பின்னும் பாபாதவெள்ளையாகிய வெள்ளைமரத்தை ஒருவனென்னவோ அதைப்பாருகின்ற வேங்கையாகிய புலியென்றுநினைத்துப் பயப்படுவது ஆராய்ந்துபாராத பேதமைபல்லவோ? அப்படிப்போலச் சம்பவித்த பகையைக்கொல்லுது நீதிகோறுதலெவ்கோவி வாசாலமூவிச்செய்யுங் குறமாகுமோ? அல்ல; அவர்கள்செய்யவேண்டியவைதுரும; ஆகலால் இதற்கு தொலைத்தொழிலைச்சூழ்ந்து இவைக்கொல்லாததயைவருங் கொடுமையென நாம் எண்ணவேண்டாம் என்றான்.

இதைக்கேட்டு அரசன் தானிருப்பத்தோடு நன்றேடின விலையேறப் பெற்ற பொருளைக்கண்டதுபோல மகிழ்ந்து, உள்ளந்தேறி விரிதாய் காபுகை கோக்கி மலர்கதுமுதுரிய தேன்போல முகக்காலகாட்டிய மகிழ்ச்சியை யாவருங்கண்டு அந்தத்தேனின்மேல் வண்டினமொய்ப்பதுபோல நாயன் சொன்னதற்கு ௧ப்பப் பலமொழிகளைச் சொல்லுகையில் அரசன்சொல்லுவான்; அந்த பகைவரைக் கொல்லுவது நன்மையாகிலும், முன் பெற்றமை கெட்டதின் ரேமெல்லாம் பாய்ப்பேடியாகப் பிரத்தியக்ஷமாக அவ்விடத்திலிலேயாம்; இப்பொழுது இன்னவிடத்தி லிருக்கின்றதென்று தெரிப்பார்தவர்களுக்கு சொல்லவில்லை; காரியமிப்படியிருக்கையால் நாம்செய்யவேண்டியதைச்சொல்லுகவென்று கேட்டவுடனே மரியாதையுள்ளவன் நகைத்து, அரசனை யாழ்ந்திச் சொல்லுவான்: மன்னவனே! வருத்தப்படும்படி சம்பவித்த இந்த அபாயமாதம்படி நான்சொல்லுகிறதற்கு நீர் சம்மதிப்பீரானால் அந்தப்பகைவின் பழியைய முத்து உமது பொன்றுடியுஞ், செங்கோலும், சுமிம, பகைவின்றி வாழும்படி செய்வேன் அதெப்படியென்றால் — கேள்மலைச்சோலைகளாற் சூழப்பட்டு அழகிதுமிகுந்த காயிக்கமென்று மலையின்மேல் நெருங்கிய நிழல் படர்ப்பும், ஒருபுலைமாருமுண்டாம்; அதின்வளிகளிலுள்ள ஆயிரங்கோடிகளில் எல்லாம் மதுரத்தைத்தர ஒருகவேமாத்திரம் ஏகசாயிருக்குமாம்; அப்படிப் பட்டகனி யுமக்குக்கிடைத்தால் என்னசெய்வீரென்றான். அதற்கு மன்னவனாகிய அரசன் சொல்லுவான்; மதுரத்தைத்தரு மதுரகனிகளுக்குள் கஞ்சுக்கின் கின்னதென்றறியேனுமில் எல்காவற்றையுந்தான் எதிர்பார்த்திலேனென்று சொன்னவுடனே, மரியன்சொல்வான்: அப்படியே பகையாகப்

பிறந்திருக்கும் குழந்தையைக்காணாதபோது, இந்நாட்டிலுள்ள குழந்தைகளை யெல்லாங் கொல்லவேண்டுமென்றான்: இதைக்கேட்டவருள் சிலர் இதுதான் குணமென்று வாழ்த்தவும், சிலர் அது குற்றமென்று மனத்தில் கூசியஞ்சவும், அரசனுட்கொண்ட மகிழ்ச்சி நெஞ்சிலடங்காமல் கண்வழியாய்ப் புறப்பட்டு வருகையி லதனையொளித்துப் போயிருக்கவுங்கண்டு, இது சிலர்க்குப் பொருந்தாதென்று அறிந்தமையா லதற்குவேண்டிய உபாயமாகவுநீதியுமாகியசொல்வான்: வேந்தனே! சூரியன் மாலையிருளை நீக்கி வரும்போது, தாமரைமகிழ்ந்து மலர்ந்தாலும், அது சிவந்த ஆம்பலுக்குப் பொருந்துமோ? அதுபோல ஒருவன் தருமவொழுக்கத்தை நன்றாயறிந்து நடந்தாலும், உலகத்திலெல்லாரும் பொருந்தும்படி செய்பவனுமுண்டோ? இல்லையென்றுரைத்துப் பின்னும் யாவருஞ் சம்மதிக்கச்சொல்வான்: ஒருவனுடைய நாட்டில் சிறிதுநிலத்தை வேறொருவன்பிடித்து ஆளுகைசெய்தால் அவன்சாகும்படி போர்புரியும்வீரரை யனுப்புவது கொடியசெய்கை யல்லவென்பவர்கள் இப்பொழுது இராஜாங்கமும், நாடும், கெடும்படிவந்த துன்பத்தைத்தீர்க்க இங்கேயிருக்கும் சில அற்பவுயிர்களைக் கொல்லுவது கொடியதென்பார்களோ? இன்னும் உயிர்களைக் காப்பாற்றும்படி மலையிலிருந்துவரும் வெள்ளமானது வழியிலிருக்கும் பயிர்களையழித்தமையா லதைக்கொடியதென்பாரோ? ஆதலால் வருத்தப்படும்படி வந்ததுயரைமாற்றுதற்கு நான் முன்சொன்னதுபோலச் செய்யாவிடில் உமதுவாழ்வையும், அரசையுமிழப்பீரென்றான். இதையிப்படியிருக்கக் காற்றின் முன்னசையாத வயிரமலைபோலக் கொடுங்கோன்மன்னனுந், தன்னைக்கொல்லவருந்துன்பத்தின்முன்னுந் தவறாத நீதிமொழிகளைச்சொல்லுகின்ற ஏலியனென்பவன் மற்றவர்சொன்னமொழிகளால் துக்கமடைந்தமுகத்தைக்காட்டிச்சொல்லுவான்: தருவினைப்போலத் தாமாகுதவிசெய்யும் மற்றவுயிர்களையுந் தாங்கிக் காப்பாற்றுங்காரணமாக மணிமுடியைச்சூடிய அரசர்கள் தம்முயிர்க்கு ஒருதுன்பமாகுமென்று காரணமில்லாமல் சந்தேகத்தினால் பல மன்னுயிர்களைக்கொலைசெய்வது குற்றமில்லாதநீதியாகுமோ? என்றான். அதற்குச்சிலனென்பவன் சொல்வான்: இராஜாங்கமழியாமற் காக்கும்படி கொலைத்தொழிலாகிலும் மற்றெந்தத்தொழிலாகிலுஞ்செய்தால் தாழ்வுண்டென்று சொல்வாருமுண்டோ? பின்னும் பிறர்வாழ்வதற்குக்காரணமாகிய அரசன் தான்வாழும்படி யென்னசெய்தாலும் குற்றமில்லையென்றான், அதற்குக் கல்வியிறும்பெறலித்த ஏலியன் குருடன் சித்திரக்கையெழுதினதுபோல நீ இதைக்குறித்திருப்பதைப்பற்றி யிப்படிச்சொன்னதென்ன சிலசொல்லைமறுக்குமவனுடையவன் பாதத்தைவணங்கி நூலெல்லாம் புகழப்பட்ட அரசனே! கண்சென்ற அளவிற்கு அப்பால் பார்க்கக்கூடாத புல்லறிவாளர் சொல்லும் குற்றமாகிய மொழிகளைக்கேட்டால, அதனால் கேடுவருமென்றெண்ணி யவற்றைக்கேளாமல் வானுலகும் புகழப்பட்ட வேதவசனங்களை நான்சொல்லக் கேட்பீரென்று சொல்லுவான்: ஒருவனாக இருந்து யாவற்றையும் ஆக்கல், காத்தல், அழித்தலைச்செய்யுமிடத்துப் புறத்துவேண்டாத கடவுள் நிறைந்தகருணைபுரிந்து பாவத்தைப்போக்கி நம்மையிரக்ஷிக்கும்படி மனதிரங்கி, உடலின்தன்மையினால் மனிதனுமாவோனாதும், அப்படிப்பூவுலகில் மனிதனாய்ப்பிறக்கும்போது உலகத்திலெத்திசையிலுமுள்ள இருளையொழிப்பதொன்றாமையால் அவர் பிறந்தகாலத்திலேதானே வானுலகில் ஒருபுதுநக்ஷத்திரந் தோன்றுமென்றும், வேதத்திற்சொல்லியிருப்ப தறிவீரே; பின்னும் அந்தப் புதுநக்ஷத்திரத்தைக் கண்டு மூவரரசர் அந்த நக்ஷத்திரங்காட்டிய யூதர்நாட்டரசன் எங்கேபிறந்தானென்றுகேட்க, அதையும் நீர்கேட்டிருக்கிறீர்; மீளவும் முன்பல இடையரிசயாபட்டுக் கண்டகாக்ஷியுந், நீவிரேகேட்டிய மாதவருடைய சிமையோன

தன்னிடம்வந்த அந்தக்கடவுளுக்குத்தந்த சாகஸிம், புகழ்ச்சியும், இப்படிப்பட்ட மற்றமாகூடியுறனடைய செஇதியெங்கும் வழங்கக்கேட்டீரோ; மேலும் ஆண்டவனிலேபெற்ற தன்னாசினைவிட்டுவிலந்தனைப்போல தமக்குவான்வீட்டினாசைத்தரும்படி வானின்னின்றிறங்கி வந்தவராகையினால் உம்மைப்பார்த்து உம்முடைய சிற்றரசைப்பறிக்கவந்தாரென்று வீணாக அரசத்தன்மை கலைய யும்படி எண்ணலாமோ? அப்படி உமது அரசைப்பறிக்கவந்தாரென்றெண்ணினாலும், பூவுலகையும், வானுலகையுமாளு மிராஜாக்கள் அவருடைய செங்கோலின்கீழிருந்து அரசுசெய்திருக்கையில், கண்ணைப்பார்க்கிற பிள்ளைகளை அவருக்குக் கொல்லுவீரோ? கொலைசெய்தாலும் அதன்பின்பு உமதரசு நிலைபெறுமோ? ஆயினும் அவரைத்தேடியுங்காணாமையால் நாயினும் மிகுந்த அன்புடைமை அரசருக்கு இயல்பாதலால் நீர்வெகுதீமையுங் கொடியவெண்ணங்கொண்டு குழந்தைகளெல்லாவற்றையுங் கொல்வது நல்லதென்று விரும்பிச் செய்வீரோ? நீரிறந்துபோவதற்குப் பயந்தீரோ? இவையெல்லாஞ் செய்யத்துணிகின்றீர்; ஆகிலும் சாகிறதற்குப் பயந்தவர் சாகமாட்டாரோ? தீவினைக்குப்பயந்தவர்மாத்திரம் செத்தாலுஞ் சாகாதவரைப்போலக் குறைவில்லாதவனலினியிலிருக்கும் புகழோடு என்றும் வாழ்ந்திருப்பார்; குறையாதநிலைபெயரும்போல வெகுமுறைமையுடையீரே? என்று எளியனுஞ்சமம்படி வேதநூலின்பிரகாரஞ் சொன்னபிறகு, அதற்குக் காவியுள்ளவனை அரசன் முகத்தைநோக்கி மனமயக்கிக்கோபித்து எளியனைநோக்கிச்சொல்லுவான்: நீசொன்னது வீரர்க்குரியதொழிலோ? பயந்து ஏவலுக்கொண்ட பெண்களுக்குரிய தொழிலோ? மாசில்லாத வேதபாரகர்சொல்லுந்தன்மையாகப்பேசி, யாசினியல்புகெடும்படி நீயேயினர்க்குரிய தொழிலைச்சொலவிக்காட்டினாய்; அவ்விறைதகுதியைக்கடவுளின் கட்டளையிறைவல்லவோ? பெருமையோடுமுன்னிருந்த நமதுமூதாதையர்கள் தங்களாயுதங்களின்வலியால் விரத்தியோடும்படி பகைவரை வெட்டிக் கொலைசெய்து, பொன்முடிசூடினார்கள்; பின்னோரையும்போல நடந்தவர்களுக்குத் தாமொருதாயைப்போலப் பாதுகாத்துநடப்பது தருமமாகிலும் பகைவராக வரவுநேரிடத்தவரைப் பாசன்கொல்லுவது கொடியதீவினையாகுமோ? என்றபிறகு மாதவர்செய்யப்பட்ட பதுமை, பொன்னுலகினித்ததுபோல அங்கிருந்த மற்றப்பெரியோரும், வீரமென்னும் பெரும்பெயர் வழங்கும்படி வஞ்சகத்தாலழியும் புன்றொழிலையுரைத்த முன்னே நீதிவழியினிசெங்கோல் மின்னுமுழுதும் தவறிக்கெடும்படி பேசினவுடனே, இந்தக் குற்றமுள்ளசொற்களைக்கேட்ட நல்லொழுக்கத்துயர்ந்த எளியன் அரசன்மிகுதியுங்கெடுவானென்று இரக்கங்கொண்டு மீளவும் உயிர்களியாவுக்கும், நிழலைச்செய்யும்பெருமையுடைய குடை, தன்மைதரும்படி யாசியல்கெடாமையை விரும்பிச் சொல்லத்தொடங்கினான்.

அதெப்படியென்றால்:—இருசெவிகளுங் கசக்கச்சொன்னமெய்யை யினிதாய்க்கேட்டவர்க்கு முன்கேட்ட பொய்யினால்வந்த நோயைத்தீர்க்க, அது மருந்தாகும், ஆகையால் செங்கதிர்விளக்கிய முடியைச்சூடின அரசனே! அன்புகொண்டு நானினித்தஉண்மையை நீர்கோபித்தாலுஞ் சொல்லிக்காட்டுவேனென்றுமீளவுஞ்சொல்லுவான்: நூலின்வழியில்நடக்கும் நல்லகேள்வியைநோக்கினநல்லவர்கள் ஒருவர்க்குமுகஇச்சையாகப்பேசமாட்டார்; அரசினியல்புகெடும்படி சார்ந்துபேசுகிறவர்கள் பகைவரிலுந் தீயவராவார்: ஆகையால் காற்றுவீசவடிபோலாடுங்கொடியையொத்தவர்கள் சொல்வதைக்கேட்பீராகில், வேலேந்தியவீர்க்கும் பகையுமில்லாமல உமதுவாழ்க்கை வேரோடுகெடுமென அறிவீர்; அதனால் கற்றகல்வியின் மாட்சியைக்கொண்டு மாசில்லாத வேதநூல்தங்கசில மெய்ப்பொருள்களைத் தேர்ந்து நான்சொல்லுவதில் துணிவில்லாதவேதனை

யாகத்தோன்றினுஞ் சொல்லுவதை முழுதுங்கேட்டுப், பின்பு கோபித்தெழுந்தான்று வேதத்திலுள்ள பலகதைகளைச் சொல்லுவான்: தேர்ந்த தவத்திற்சிறந்த மோயீசனை அபிரோன், தாத்தான், கோரை, என்னும் மூவர் நிந்தித்திருக்க, உடனே பூமிபிளந்து அம்மூவரையும், அவரோடுசேர்ந்த இருநூற்றைம்பது பேரையும் விழுங்கினவுடன் அவர்கள் நரகத்திலமிழ்ந்தி வெந்துபோனார்கள். மீளவுமந்த மோயீசனுடைய பெருமையை இகழ்ந்துபேசின அபிராமையால் அவ்விடத்திலேதானே ஆண்டவனுடைய நீதியையுணர்ந்தமாத்திரத்தில் புண்ணழுகும்படி புடனேயெழுந்த திரண்டசெந்தீயில் பதினாலாயிரத்தெழுநூறு பேரும் வெந்துசாம்பலானார்கள். இன்னுந் தொகுக்கப்படாத மாட்சிமையிற் சிறந்துவரும் பொருளைச்சொல்லுந் தீர்க்கதரிசியாகிய எலிசேயு என்பவரை மயிரில்லாத தலையனே! யென்று சங்கையீனமாக நாற்பத்திரண்டு பிள்ளைகள் சொன்னமாத்திரத்தில் கொடிய இரண்டுகரடிகள் புறப்பட்டு, அவர்கள்மேற் பாய்ந்துகொன்றன; பின்னும் ஆதியந்தமில்லாத கடவுள் சீனாயிமாமலையில் தந்தருளிய வேதத்தை யெழுதப்பட்ட இருகற்பலகைகளடக்கிய பசும்பொன்னாலலங்கரித்த பேழையை கல்லொழிவழியாக குருக்கொடுத்துக்கொண்டு போகையில் மற்றயாவரும் நாலாயிரமடியளவு தூரத்தில் நிற்கும்படி கடவுள் செய்தகட்டளையை வேதத்திலறிந்திருக்கின்றீர்; ஒருநாளந்தப்பெட்டி பெதசமித்தார் நாட்டில்வருகையில் அவர்கள் கரங்களைக் குவித்துவணங்காமல் ஆங்காரத்தோடு அதைப்பாராமலிருந்தபடியால் அவ்விடத்திலே பெருங்காற்றின்முன் கொம்பிலசையும் இலைகளைப்போல எல்லாரும் வருந்தியிருக்க, அவர்களுக்குள் ஐம்பதினாயிரத் தெழுபதுபேர் விழுந்திறந்தார்கள்; பின்னும் ஒருநாள் திரண்டுவரும் படைவீரர்களினடுவே தாவீதுமகாராஜா கூடவரும்போது தேரின்மேலேற்றிய அந்தப்பேழையானது விழுமென்று மலர்மாலையணிந்த ஓசனென்பவன் தான்தீண்டத்தகாதது அதுவென்று பயப்படாமலதைத் தாங்கும்படி கையால்தீண்டினவுடனே உலகமெல்லாஞ்சிரிக்கும்படி பிணப்பட்டாற்போல அங்கேவிழுந்திறந்தான்; இப்படியாகக் கடவுள் முற்காலத்தில் மிகுதியாகக்கோபித்துப் பூவுலகெல்லா மஞ்சும்படி செய்துகாட்டிய நீதியை நீரறிந்திருக்க நானுமக்குரைப்பானேன்? ஆதலால் நீர் மெய்யென்று அநுசரிக்கும் வேதத்திலெழுதப்பட்ட இவையெல்லாவற்றையுஞ் செய்த கடவுள் யாவரென்றால் நிறைமதிபோலும்படி நீர் இப்பொழுது கொல்லத்தேடிய குழந்தை யவர்தான். ஆகையால் தருமத்தின் மாட்சியுஞ், செங்கோலின் வல்லமையும், புகழும், இவையெல்லாம் நீங்கும்படி பாவத்தினால் வருங்கேடுகள் தன்னிடத்தில்வந்தபிறகு நன்மையென்ன? கல்வியிற்சிறந்தோர் முன்காட்டிய நீதியால் மற்றவர்க்குவந்த கேடுகளைப்பார்த்து, அது தமக்கு வாராதபடிக்குத் தப்பிப் பிழைப்பார்; ஞானமறிவில்லாத சடாபார்த்தைகளை யுக்தியென்றுங்கொள்ளாமல் பூவுலகத்தை யிரக்ஷிக்க ஆண்டவனிங்கே மனிதனாய்ப்பிறந்தாரென்று தேர்ந்து நீருங்கூட அவரை வணங்கினீராகில் பூவுலகரசு ஒழிந்தபின் வானுலகரசாளுக விசேஷமொன்றுமில்லாமல் எக்காலமும்வாழ்ந்திருப்பீர்; என்று ஏலியான் சொன்னபிறகு வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பாவாகிய, நாற்கவியின் பாடலை இன்பந்தெரியாமற் கேட்டிருந்த கழுதைபோலவும், பாற்கடலில் கெடுகொளாகவுண்ட பாலினால் தனக்கு நஞ்சுபெருகும்படி பாலைக்கொண்ட பாம்புபோலவும், ஏரோதன் ஏலியன்சொன்னதற் கிணங்காமல் பெருங்காற்றின்முன் பொங்கியகடலைப்போலக் கோபித்துச் சொல்லுவான்: வல்லமையுடையவர்கள் சாருகற்கு அஞ்சமாட்டார்; நாமாண்ட செங்கோலைப் பிறர்க்குக் கொடுப்பதிலும், இறப்பது நல்லதாகும்; ஆதலால் நமக்கு விரோதஞ்செய்யப் பிறந்தவனைக்கொன்று ஆயுத்தினால் அவனுயிரை யுண்ட

பின்பு நானிறந்தாலும் முடிபோடு இறப்பேனென்று கூறித் தனக் கெதிரிலிருந்த யானைக்கோபத்தை வென்ற படைத்தலைவனாகிய மலக்கன் என்பவனை நோக்கி யிடிபோல முழங்கிச் சொல்லுவான்: பகைவருடலைப் பறவைகட்கு விருந்திடும் வேலாயுதத்தை யுடையானே! என்னாட்டிலுள்ள குழந்தைகள் யாவையும் உறவினரென்றும், பிறரென்றும் பாராமல் உடனே கொல்லவேண்டுமென்று ஆக்ஞாபித்தான். அதைக் கேட்டுப் பர்வதங்களையும் வென்ற புயங்களையுடைய மலக்கனென்பவன் அரசன் பாதங்களை வணங்கி ஆண்டவனே! உமது நாட்டிலுள்ள எல்லாப் பகைவரையு மொடுக்கி யுமது இஷ்டப்படி செய்வேனென்று கூறி அப்படியே செய்யத் தொடங்குகையில் அரசனாகிய ஏரோதனு மெழுந்து தன்னரண்மனைக்குட் சென்றான்.

அதன்பின் படைத்தலைவனாகிய மலக்கன் ஆயுதபாணிகளான அநேகவீரரைக் கூட்டிக்கொண்டு சிங்கங்களும், புலிகளுந் திரண்டு ஆட்டுக் குட்டிகளின்மேற் பாய்ந்து கொல்லுதல்போல, மிக்க உக்கிரமாய்க் கணக்கற்ற குழந்தைகளைக் கொன்றுவருகையில் சிலசேவகர் கண்களில் தீப்பொறி பறக்கச்சினந்து தாய்மாரது முலைப்பாலையுண்டு அவர்கள்மடியிலிருக்குங் குழந்தைகளைப் பாலும், உதிரமுஞ் சிந்தும்படி வெட்டிக் குவித்ததனால் அந்தஉதிரத் துளிகளும், பாற்றுளிகளுங் கடலிலுள்ள செம்பவளம் போலும், வெண்முத்துப் போலும் விளங்கின. இன்னொரு பக்கத்தில் சிலகயவர்கள் செந்தாமரைகளின் ஆயிரம் இதழ்களையுங் கிழித்தெறிந்தாற்போல அன்னைமார்களுடைய ஸ்தனங்களையும், அவைகளைத் தழுவிய இளங்குமாரர்களின் கரங்களையுந், தலைகளையும், மார்பு, வயிறுகளையுந் துண்டந் துண்டமாய் வெட்டிப், பலவிடங்களிலும் எறிந்தார்கள். வேறொரு பக்கத்தில் சிலகொடியர் சிறுவர்களைக் கொல்லும்படி கொடுவென்று தாய்மாரைக் கேட்க அவ்வன்னைமார் அன்பின்மிகுதியால் மறுக்கக் குழந்தைகளை மார்போடிறுகத் தழுவும்போது அரும்போடுகூடியபூங்கொடியை யறுத்ததுபோல இருவருயிரையு மாய்த்தார்கள். மற்றோரிடத்தில் ஒருதாய்க்கு ஒரேபிள்ளையாயிருந்த குழவியைச் சேவகன் கைப்பற்றி ஒருபுறத்திழுக்கக் கொடேனென்று மறுத்துத் தாயாரொருபுற மிழுக்கக் கடைசியாய்ச் சேவகன் குழந்தையைத் துண்டு துண்டாக வெட்டிப் பெற்றவள் முன்னிலையி லெறிந்தான். பின்னொருபுறத்தில் கொலைக்காரருக்குப் பயந்து பெற்றவர்கள் குமாரரைமறைக்க உபாயந் தேடினாலுஞ் சிறுவர் இளமையினாலும், அறியாமையினாலும் தாய்மார்கள் செய்வதைத் தெரிந்து கொள்ளாமல் அழுவதினால் கொடியபாவிகள் கைகளால் இரத்தஞ்சிந்தி யுயிர்விடுவார்கள். இப்படி அங்கங்கே கொலைப்பாதகராகிய வீரர்கள் ஆர்ப்பரித்துத் தங்கள் கொடிய வாள்களை மின்னலாகவும், தங்கள் பயங்கரமான முழக்கமே இடிமுழக்கமாகவும், அன்னைமார் விரித்த கூந்தல்களே மேகமாகவும், அவர்களழுத கண்ணீர்களே மழைத்துளியாகவும், குழந்தைகளினிரத்த வெள்ளமே பெரிய ஆறுகளாகப் பாயவும் குழந்தைகளைக்காலோட்டுவாரித் தரையில் மோதியும், குருதியா றொழுகத் தடிகளால் மண்டையிற் புடைத்தும், மாதர்கள் கைகளினின்று மக்களை வெட்டியும் இருப்பட எல்லாக்குழந்தைகளையுங் கொன்றார்கள். கொன்றபின்பு தாய்மார்கள் வெட்டுண்ட குழவிகளை நோக்கி; மகனே! என்கண்ணே! எனக்குயிரூந்தே! என்னரும்பேறே! என்னுயிருக்கின்பமே! உன்னைப்பிரிந்து உயிர்வாழ்வேனோ? வென்றழுது பிரலாபித்தது மல்லாமல் கொங்கைகளுங் காரணமாகின்ற குழந்தைக ளில்லாமையால் கொங்கைகள் அழுதனபோல முலைப்பாலைச் சுரந்தழவும், குழலுக்கணியாக நின்றகுமாரர்களிறந்தமையால் மதுமலர்மாலையை நீக்கிக் கூந்தலைவிரித்தும், சரீரங்களுக்கு

அணியாகநின்ற தனயனொழிந்தமையால் சீரங்கள் சோர்ந்து தரையில்விழவும் இவ்வண்ணந் தாய்மாரழு மோசையோடு இறந்தமக்களின் னோசையும், இரத்தப் பெருக்கினோசையும், கொல்லும்படி வீசினபலவாயுத வோசையும், வீரிடு வார ஓசையும், அய்யோவென்று துக்கித்தோரோசையும், இந்தக்கொடுமையைக் கண்டு அஞ்சின நல்லோரோசையும் ஒன்றாய்த் திரண்டு கடலின்னோசையையும், இடியின்னோசையையும் அடக்கின.

இவ்வண்ணமாக ஜெருசலேம் நகரத்தில் குழந்தைகளெல்லாம் இறந்தபின்பு தன்வினை தன்னையே கெடுப்பதுபோல எரோதன் செய்த தீவினையால் அவனை யெல்லாரும் நிந்தித்திருந்தார்கள். அப்பால் தேன்பொழிந்த எசித்து நாட்டிற்போயிருக்குந் திருக்குமாரனாகிய சேசுநாதர் தாரகையைத் திருமருபமாகத் தரித்த தமது திருத்தாயாருக்கும், வெண்மலர்க் கொடியேந்திய சூசைமாமுனிக்கும் ஒரு பரம காக்ஷியைத் தந்து அந்தக் காக்ஷியில் ஜெருசலே பட்டணத்தில் எரோதன்செய்த கொடுமையையும் அதனால் மாசில்லாத குழந்தைகள் இரத்தஞ் சிந்தியதையும், நீதிநெறியைவிட்டு நடந்தவரடையுங்கெடுதியையும், கமலப்பள்ளியி லிருக்கும் அன்னக்குஞ்சுகளைக் கொடியபறவைவந்து பறித்துக்கொண்டபோது தாயன்னமழுவதுபோலத் தாய்மாரழுவதையும், பலாத அரும்புகள் கொடிய காற்றின்முன் பட்டாற்போல மக்கள்வெட்டுண்டிறந்ததையுங் காண்பித்தார். இவற்றைக்கண்ட மரியம்மாளும் சூசைமாமுனிவரும் ஆண்டவனைப் பகைக்கும் மனிதராலோசனைபயன்படுமோ? பின்னும் எல்லா நாளும் வாழ்வில் இருந்திருக்க நமதுசுதேசநாடு ஒன்று மாத்திரம் வருந்தியிருப்பது தாமடைந்த பெரும்பயனோ? வென்று மனத்துயரோடு இரங்கியழுது கொண்டிருக்கையில் குழந்தைச் சேசுநாதர் அந்த அழுகையை மாற்றினாற்போல மீளவும் ஒரு காக்ஷியை யவர்களுக்குத் தந்து, இறந்த குழந்தைகளெல்லாம் வான வொளியோடு மோக்ஷத்திற் சேர்ந்தவர்களாகக் காண்பித்தார். இதைக்கண்ட கன்னித்தாயாரும், பூங்கொடி யுயர்த்திய வனும் சந்தோஷங் கொண்டு வீணையினுமினிதாய்ப்பாடித் திருக்குமாரனை வணங்கித்துதிசொல்லத்தொடங்கினார்கள்.

அதெப்படியெனில்:—என்னாண்டவனே! கடலையொத்த அமுதமே! மோக்ஷவாசலே! திருவுடலினாலுயிர்களை விளக்குமொளியே! யாவர்க்குமுயிரே! உயிர்களுக்குவல்லமையைத் தரும் அணியே! அருளே! உயிரைவருத்தும் விஷத்தைத் திவ்விய அமுதமாக்கியதுபோல எரோதன் கொடுமையாலிறந்த மக்களைத்தெய்வவொளிசிறக்குந் திருவடிவத்தோடுவிளங்கச்செய்தாய்; சூரியன்முன்னிருள் நில்லாததுபோல உன்னைச்சேர்ந்தவர்களை வான்வீட்டில்வாழச்செய்தாய்; இழிவான தடாகங்களில் தாமரைமலர்வதுபோல நீ இழிவாகிய பூவுலகிலிறங்கி மனிதாவதாரமெடுத்துப்பாவத்தால்வருந்திய மனுமக்களை இரக்ஷிக்கும்பெருங்கருணையைக் கற்றறிந்தவரும் புகழக்கூடுமோ? இன்னும் நீ பயந்தொளித்தவரைப்போல இந்த எசித்துநாட்டைச்சார்ந்து இந்நாட்டார்வணங்கியபொய்த்தேவரையெல்லாந்துரத்தி யவர்களுக்குத்தயைசெய்தாய்; அன்றியும் நீஇங்கே யொளித்தமையால் சுதேயநாட்டில்வெட்டுண்ட குழந்தைகள் இவ்வுலகத்திற்கு இறந்தவராகக்காணப்பட்டு எப்போதும் இறவாதவராகவுஞ் சாவக்கஞ்சாதவராகவுஞ் செய்தாய்; காற்றின்முன் னரும்புகள் உதிர்ந்தாற்போல இறந்தபிள்ளைகளை யுன்தயைநிறைந்த மார்புக்கு ஆபரணமாலையாகத்தரித்துக்கொண்டு தேவுலகத்தை யெங்களுக்குத் தரும்படி பூவுலகில் நீதுன்பத்தோடு யவதரித்ததனுள் புண்ணில் நீயைவைத்ததுபோல மனுமக்கள்

உன் துயரத்தின்மேலுந் துயரஞ்செய்வாரோ? நெருப்பானது பொன்னைக்கெடுக்காமல் பொன்னொளியைக் காட்டுவதுபோல நெருப்பையொத்த மனிதர் உலகவாசையால் உன்னைத்துயரப்படுத்தினாலும் உனதுகருணையைக்காட்டுவார். என்றுபலவாறாகத்துதித்துக்கன்னித்தாயாரும், சூசையப்பரும்வணங்கிநிற்கையில் அருகேதிருவுருவோடு நின்றவானவர்களும் அவர்கள் சொன்னதுதிகளுக்கு இசைகூட்டினாற்போலப்புகழ்ச்சிகளைப்பாடித் தேன்மலர்மழைசொரிந்து தேவபிரானைவிசுந்தேவகுழந்தையின் திருப்பாதங்களைவணங்கினார்கள். இனிமேல்தேவபாலனுக்கு முன்றூதனைத் தெரிந்துகொண்ட கருணையனென்னும் அர்ச். அருளப்பரும் எரோதன்கொடுமையில் உயிர்தப்பிய விதத்தைக் காகூறியாலறிந்த மரியம்மாளும், சூசைமாமுனிகளும் மனமகிழ்ந்ததைச் சொல்லுவாம்.

குழவிகள் வதைப்படலமுற்றிற்று.

இருபத்தாறாவது-கருணையன் மாட்சிப்படலம்.

அல்லறத் தோங்குதிங்க ளணிந்தமின் பாப்புப் போலப்
பல்லறத் தொகுதிவாய்ந்த பனிபுனை சக்கரிய
னில்லறத் துணைவிகுன்றத் திணையகற் பெலிசபெத்தை
சொல்லறத் துணையாய்த்தம்முட் டுணைபுறத் தின்றிநின்றார்.

சந்திரனைச்சூழ்ந்த பலநக்ஷத்திரங்களைப்போலப்பலதருமங்களையும் ஆபரணமாகக்கொண்டு இராஜசந்ததியிற்பிறந்து குருப்பிரசாதியாகிய சக்கரியனென்பவர் வயிரமலையையொத்தபெருங்கற்புடைய மனைவியாகிய எலிசபேத்தென்பவளோடு தருமம், தவம், வாய்மை, பொறை, அன்பு முதலிய நற்குணங்களுடன் வாழ்ந்துவருகையில் இவர்கள் உடலுக்கொருதுணையாகிய மக்களில்லாதகுறை யொன்றுமாத்திரமல்லாமல் வேறொருகுறை யில்லாமலிருந்து இதுதெய்வத்திருவுளமென்றெண்ணி நல்லதருமத்தையும், வேதநூற்கல்வியறிவையும் ஒருதுணையாகக்கொண்டு மற்றவர்க்குத்தாங்கள்ஞான அறிவைத்தரும் ஒருதுணையுமாகிச் சோலைகள்செய்யுங்குளிர்ந்த நிழலைப்போல இருவருந்தங்கள் கைகளாகிய தாமரைகள் கொடுக்குந் தேனாகியகொடையை யாவருக்கு மூட்டித் தம்முயிர்போல மன்னுயிரனைத்தையும் விசேஷ அன்போடு பேணியிருந்தார்கள். இப்படியிருக்குங்காலத்தில் கடவுள் புருஷனுதவியின்றிக் கன்னிமையாமுகதாய்மரியின் திருக்கர்ப்பத்தில் அவதரிக்குமுன்னமே தமக்குத்தருமத்திற் சிறந்த தூதனொருவன் மலடியின் பிள்ளையாய்ப் பிறக்கவேண்டுமென்று திருவுளங்கொண்டிருந்தபடியால், அதைநிறைவேற்றும்படி ஒருநாள்குருப்பிரசாதியாகியசக்கரியன் தமக்குவந்த முறைமைப்படிதேவாலயத்தின் பலிபீடத்தில் தூபங்காட்டிநிற்கும்போது ஆண்டவனுடையகட்டளைப்படி காபிரியேல் என்னுந்தேவதூதன் அவர்கண்முன் தோன்றினதினால்அவர்பயந்துநடுங்குகின்றார். இதைக்கண்டவானவன் அஞ்சாதீர், அஞ்சாதீர், நான் கடவுளால் அனுப்பப்பட்டு உமக்குத்தூதுசொல்லவந்தேன்; அதென்னவென்னில்: மாட்சிமையிற்சிறந்த தருமமே ஒருருவாகக்கொண்டு உமக்குஒருகுமாரன் பிறப்பான்; அவனிடத்திற்காணப்படும் நற்குணத்துக்குத் தகுதியாகஅந்தப் புத்திரனுக்குக் கருணையனென்று நாமகரணஞ்சூட்டுவாய்; அந்தச் சிறுவனே யினியவதரிக்கு நாதனுக்குமுன் தோன்றி அவருக்கு வழியைச்செப்பமிட்டுப் பாவி

கள் நற்கதியேறச்செய்வாரென்றார். அதற்குப்பேரறிவுடையோனாகிய சக்கரீயன்என்னது வயதுகாலமுதிர்ந்து போனபடியால் நான் பிள்ளைபெறுவதெப்படியென்றுவினவ அதற்குவானவன்: நீர் உள்ளத்திற்சந்தேகப்பட்டமையால நான்சொன்னவற்றை நீர்பார்க்குமளவும் ஊமையாயிருக்கக்கடவீரென்றுமறைந்துபோயினார். பின்பு வானவன் சொன்னபடி மாதவனாகிய சக்கரீயனூமையாகியாவரு மதிசயிக்கும்படி வருந்திச்சயிக்கைசைகையாற்பேசிச் சருவேசுரன் திருவுளப்படியாகக் கடவதென்று சொல்லிப், பின்பு தமது மனைவியாகிய எலிசபேத்திடம் அற்புதமாக உண்டாகிய மேலான கர்ப்பத்தையுங்கண்டு ஆண்டவன் பாதத்தைவணங்கி யிருந்தார். இவ்விதப்படி யிருக்க இளம்பிறை வளர்வதுபோல எலிசபேத்தின் கர்ப்பத்தில் கருணையன் வளர்ந்து ஆறுமாதமாகும் அளவில் முற்கூறியபடி நம்மை இரட்சிக்கத் திருக்குமாரன் கன்னித்தாயார் திருவயிற்றி லவதரித்தார். (ஐயத்தோற்று படலத்திற்காண்க.) அப்போதுகன்னியேசெல்லனும் வானவன் தமக்குச் சொல்லிய மங்கள வார்த்தையின்படி வானுலகத்திலும் விரும்பப்பட்ட வானராணியாகிய கன்னித்தாயார் தமக்குண்டாகிய தேவகர்ப்பத்தினால் தமது நெருங்கிய பந்துக்களி லொருவளாகியும், முதிர்ந்த வயதுடையவளாயும், மலடியாயும், புத்திரனைப்பெறும் பருவத்தைக் கடந்தவளாயுமிருக்க எலிசபேத்தின் கர்ப்பத்தில் ஆண்டவன் செயலால் அவ்வாண்டவனுக்கு முன்னோடியாகக் கருணையன் அற்புதமாய் அவதரித்திருப்பதைக்கண்டு தாயும், பின்னையும் அருளினுயரும்படி அந்த எலிசபேத்தைப்போய்ச் சந்திக்கவேண்டுமென்று நினைத்துத் தேவதாயார் சூசைமாமுனிவரிடஞ் சொல்ல ஞானஅறிவையுடைய மெய்த்தவத்தோனாகிய சூசைமாமுனிவரும் அதற்குச்சம்மதித்துத் தேவகணங்கள்புடை சூழ்ந்துவர இருவரும் யூதமாபுரத்திலிருக்கும் எலிசபேத்து வீட்டிற்குச்செல்லப் பிரயாணமாய்ப் புறப்பட்டார்கள்.

அதெப்படியெனில், இருளுக்குப்பகையாகிய சூரியகிரணத்தைக் கமலங் கண்டதுபோலப் பாவத்தின் பகையாகிய கர்த்தனைத் திருக்கர்ப்பத்தில் சூலாகக்கொண்ட நாலாநாளில் தேவமாதாவும், அந்தத்திருச்சூலின் வகையறியாமல் ஆனந்தக்கடலில் மூழ்கியிருக்குஞ் சூசைமாமுனிவரும் தாம்குடியிருந்த நசரைமாபுரியினின்று புறப்பட்டு, முத்துத்தாழ்வடத்தின் கடைப்பூட்டைப்போல இருவரும் பிரியமெல்லாம்பட்டு நடந்து குயில்களினிசைக்குச்சரியாக மயில்கள் நிர்த்தனஞ்செய்யுஞ்சண்பகப்பூஞ்சோலைகளையும், செந்நெல்வயல்களையும், தாமரைத்தடாகங்களையுங்கடந்து, வானமட்டுமெட்டிய அந்நகரத்தின் மதிலையுந்தாண்டி, அப்பால் இருள்நிறைந்த மலர்ச்சோலைகளாற் சூழப்பட்டுப் பல இரத்தினங்களையும் அணியாகக்கொண்ட ஒருபர்வதத்தைக்கண்டு, சூரியனுதயகிரிமேலெழுங்காற்போலத்தாங்களும் அம்மலையின்மீதேறிப், பின்புமேகத்தில் காணப்பட்டு மறைந்துவரு மின்னல்களைப்போல அம்மலையைத் தொடர்ந்தபலமலைகளையும் ஒவ்வொன்றாகத் தாண்டிப் பாவத்தால் வருந்துபவர்களைக் கருணையனுக்குப் போக்கவேண்டுமென்னும் ஞாபகத்தினால் அனிச்சம்பூவினும் மெல்லியதாகிய திருப்பாதங்கள் கல்லினும் முள்ளினும் அடிப்படுவதையுங் கருதாமற்சென்று, இவ்வாறுபோகிறபோது அம்மலைகளின் மேற்புறத்தில் நெடிதாகப்பிரிந்து செல்கின்ற மருத நிலத்தின் மார்க்கத்தைத் தங்கள் ஆசையென்னும் இறகினால் சீக்கிரமாய்த் தாண்டி அந்த மார்க்கத்தி லிருந்து பிரிந்துபோகும் வேறொரு கிளை வழியையுங் கடந்து, தாங்கள் நினைத்துவந்த யூதமாபுரத்தின்நெடிய மதில்கள் வானமட்டும் எட்டியிருப்பதைக் கண்டார்கள். அவ்வழகியமதிலைக்கண்டு அதைக்கடந்து,பட்டணத்துள் பிரவேசித்தவுடனே இவ

ர்களின் வருகையை யறிந்து மின்னலை எதிர்கொண்ட விளக்குப்போலவும், பொன்னை எதிர்கொண்ட மாணிக்கம்போலவும் மாதவனாகிய சக்கரிய னென்பவரும், கற்புக் கனிகலமாகிய எலிசபேத்தம்மாளும் எதிர்கொண்டுவந்து மலரும் மலரின் மணம்போலவும், மாணிக்கமும் மாணிக்கத்தினொளிபோலவும், கனியும் கனியின் இரசம்போலவும் உடனே தன்னுயிரைத் தழுவினதுபோல மாதவத்தோராகிய சக்கரிய னென்பவரும், சூசைமாமுனிவரும் ஒருவரையொருவர் தழுவிக்கொள்ளப் புஷ்பித்த பூங்கொம்பைப் பூங்கொடி சுற்றியதுபோல அருளில் பிறந்தவளாகிய தேவ கன்னிகையும், எலிசபேத்தம்மாளும் ஒருவரையொருவர் தழுவிக்கொண்டு பேரானந்தக் கடலில் மூழ்கினார்கள்.

அதன்பின்பு மோக்ஷ இராக்கினியாகிய கன்னித்தாயார் எலிசபேத்தம்மாளை நோக்கிச் சொல்லுவாள்: கோடைகாலத்தில் வற்றிய தடாகம் மழைக்காலத்தில் நிரம்பியதுபோல உன்வாழ்நாள்முழுதும் குழந்தையில்லாமல்வருந்திய நீ மகிழும்படி யிப்பொழுது பிள்ளை வரமடைந்து கர்ப்பிணியா யிருக்கின்றாயென்று சொல்ல இந்தவாக்கியம்எலிசபேத்தம்மாள் செவியிற்பட்டமாத்திரத்தில் அவள் கர்ப்பத்தி லுள்ள குழந்தையாகிய கருணையன் உடனே கர்ப்பவழியால்வந்த ஜென்மப் பாவத்தினின்று நீங்கிப் பேச வாயில்லாமையால் உள்ளத்திலே மகிழ்ந்து தேர்ந்த அறிவினையடைந்து கடவுள்தந்த கணக்கற்ற வரங்களையும், கருணையையுங்கொண்டு, மலராத அரும்பில் வாசனை வீசியதுபோலக் கன்னிமுத்திரைகெடாத தேவ்தாயார் திருவயிற்றி லிருக்குந் திருக்குமாரனைக் காட்சியா லறிந்து மகிழ்ந்து தமதுதாயின்வயிற்றி லிருந்தும், தமக்குண்டாகிய அருளின் பெருக்கத்தால் அவதரித்த நாதனின் திருப்பாதங்களை வணங்கினார். இப்படி வணங்கியகருணையன் அப்போது இன்னும் அதிக அருளின் வரங்களை யடைந்தமையால் அந்த அருள்வெள்ளப்பெருக்கெடுத்து,மேல் புரண்டோடுகையில் அவர் தாயாராகிய எலிசபேத்தம்மாளும் நிறைந்த காட்சியறிவையடைந்து அங்கிதைச் சொல்லுவாள்: கன்னிமையழியாத தேவதாயே! நீ கன்றைத்தேடிவரும் பசுப்போலவும், உலர்ந்தபயிருக்குப்பெய்யும மழைபோலவும் எனக்கு எல்லா வரப்பிரசாதங்களையும் அருளும்படி கெடிய வழிகளைக்கடந்து என்னைத் தேடிவந்தாய்; மன்னுயிரை இரக்ஷிக்கும்படி மனுவுருவெடுத்துச்சகலவுலகங்களினுமடங்காத கர்த்தரவை நீ யுன்திருக்கர்ப்பத்திலடக்கியதால் தேனினுமினிய இன்பத்தையெனக் கூட்டமாட்டாயோ? யாவரும் அடையக்கூடாத மேலானமாட்சிமையை நீயடைந்ததினால் சகல மாதர்களுக்குள்ளும் ஆசீர்வதிக்கப்பட்டவள் நீயே; உனது திருவயிற்றின் கனியாகிய திருக்குமாரனும் சகல வாழ்த்துதலினும் ஆசீர்வதிக்கப்பட்டவருமாமே; உனது திருவாய்மொழி என் செவிகளிற்பட்டமாத்திரத்தில் என்வயிற்றுப்பிள்ளைமகிழ்ந்து மின்னலைப்போலஉள்ளே அன்போடு குதித்து உனதுதிருவாய் மொழியால்மனமகிழ்ந்தான்; கடவுள் வேதாகமத்தில் திருவுளம்பற்றினயாவும் உண்மையாகி யுன்னிடத்துச் செலுத்துவாரென்றமையால் உன் புகழ்ச்சியையாவருந் துதிப்பாரென்று எலிசபேத்தம்மாள் சொல்லியபோதுகண்ணாடிதன்மேற்பட்ட சூரியகிரணத்தைத் திருப்பிச் சூரியன்மேல் விட்டதுபோலத் தேவதாயார் அந்தத்துதிகளையெல்லாம் கடவுள் பேரில் திருப்பித்துதிக்கத்தொடங்கினாள்.

அதெப்படியென்றால்: ஞானத்தால் தெளிந்த என்னுள்ளமே! என்னாண்டவனைத் துதித்து வணங்கக் கடவாய்; அருளினால் நிறைந்த என்னுயிரே! என்னை இரக்ஷித்த நாதனிடத்தில் மகிழக்கடவாய்; தளர்ந்து மயங்கின இந்த அடிமையை ஆண்டவன் தயையோடு பார்த்ததினால்எல்லாத்தலைமுறையிலும்

என்னைப் பாக்கியவதி யென்பார்கள்; மூவுலகத்தையும் ஆண்டுவரும் நாதன் பெருமையுள்ள இவையெல்லாம் என்னிடத்திற் செய்தமையால் அவருடைய திருநாமம் வாழ்த்தப்படக் கடவது; மனத்தில் கர்வங்கொண்டவர்களைச் சிதறடித்தார்; வல்லமையிலுயர்ந்த பாவத்தாற் கெட்டவர்களையுயர்ந்த ஆசனங்களினின்று தள்ளினார்; தருமத்தினால் தாழ்ந்தவரை யுயர்த்தினார்; பசித்தவரை நிரப்பினார்; பொருட்செல்வம் விரும்பினவரைத் தரித்திராக்கினார். நமக்குப் பயந்தவர்களைத் தலைமுறை தலைமுறையாகக் காப்பாற்றுவே னென்று அபிரகா முதலிய பெரியோர்களுக்குச் சொன்னபடி பார்வோனடிமைத் தனத்திலிருந்த இசரவேலரைக் காப்பாற்றினார்; அவர் கைத்தலத்தின் முன்னிற்பவர் யாரென்று தேவதாயார் கடவுளைத் துதித்தபின்பு மிகுந்த அருளைக் கொண்ட எலிசபேத்தம்மாள் வீட்டிலேயே தேவமாதாவும், சூசைமாமுனிகளும் மூன்றுமாதவரையி லிருக்கும்போது சூரிய வுதயத்தைக் காட்ட விடியற்காலை வெள்ளியுதயமானது போலத் திருக்குமார னவதாரத்திற்குமுன் காரண மறியாமல் உலகமெல்லா மகிழும்படி இளம்பிறை வடிவோடு கருணையன் பிறந்தார். பிறந்த குழந்தையைத் தேவமாதா இனிக்கடவுளைத் தாங்கப்போகுந் திவ்விய மலர்க்கரத்தில் தாங்கி வானவருக்கு மெட்டக்கூடாத வரங்களைப்பொழிந்து, மார்போடு அணைத்துக்கொள்ளவே குழந்தை வடிவாகிய கருணையனும் தேவதாயாரின் திருமுகத்தைப்பார்த்து அருட்கடலில்மூழ்கித் அன்பமுழுதுந் தீர்ந்து அறிவிற் சிறந்து வாய்பேசக் கூடாமையால் திருக்கரத்திலேயே துதித்த பாவனையாகத் தலைகுனிந்து நமஸ்கரித்தார். அதன்பிறகு வரிவேத முறைமைப்படி எட்டாநாளில் செய்யவேண்டிய கடனெல்லாம் நிறைவேற்றிக் கருணையனென்னுந் திருநாமகரணமுஞ் சூட்டியபோது அழகியகுழந்தையின் கருணைவிளங்கும்படி தகப்பனாகிய சக்கரீயன் என்பவர் கட்டப்பட்ட தமதுநாக்கவிழ்ந்து ஞானசந்தோஷமடைந்து கடவுளைத்துதியும் ஸ்தோத்திரமுஞ்செய்தார். இவையெல்லாமுடிந்தபின்பு சந்நிதானமிதித்தெழுந்த தேவகன்னிகையும், சுருதிவடிவாகிய சூசைமாமுனிகளும் தெய்வப்பிரபை விளங்குங் கருணையனை ஆசீர்வதித்து யாவருக்கும் உபசார துதிகளைச் சொல்லி, யவ்விடத்திலிருந்து பிரயாணப்பட்டு வாளாலறுக்கப்பட்ட வுயிரைப்போலப் பிரிவினால் மனஞ் சகிக்கப்படாமல் தங்கள் பட்டணம் போய்ச் சேர்ந்தார்கள். அதன் பின்பு ஏரோதனுக்குப் பயந்து தேவகுழந்தையை யெடுத்துக்கொண்டு எசித்து நாட்டுக்குச் செல்லும்போது பெரியோருடைய நட்பு இடையறாததுபோலத் தேவமாதா கருணையன்மேல் வைத்த அன்பை அப்போதும் மறவாமல் மாதவனாகிய சூசைமாமுனிகளை யழைத்துச் சொல்லுவாள்: கொடியநெஞ்சுள்ள ஏரோதன் தேவகுழந்தையைக் காணாமையால் இந்நாட்டிலுள்ள எல்லாக் குழவிகளையுங் கொல்லுவான் அத்தருணத்தில் கருணையனும் இறப்பானே? இல்லையோ? ஆதலால் அவனையுங்கூட அழைத்துப்போவோம், வாருமென்றுசொல்லஅதற்கு, மிகவும் பயப்படுகிறவன் கேட்ட ஓசையெல்லாம் இடியோசையாக நினைப்பதுபோலத் திருக்குமாரனுக்கு எங்கே இடையூறு வரப்போகிறதோ வென்று பயந்து தாம்சம்மதியாமல் உடனே இருவரும் எதிர்நின்ற வானவரி லொருவனை யழைத்து எலிசபேத்தம்மாள் கருணையனைக் கடுங்கொலையினின்று காப்பாற்றும்படி வேண்டிய உபாயங்களைச் சொல்லி யனுப்பினார்கள்.

இப்படிச் சென்ற வானவன் நடந்த விஷயங்களைச் சொன்னபோது அதைக் கேட்ட எலிசபேத்தம்மாள் வானவீட்டின் செல்வங்களை நமக்குத் தரும்படி யவதரித்த நாதனுக்கு இப்படிப்பட்ட துன்பமுஞ் செய்வார்களோ? என்

ற தீயிற்பட்ட மலரைப்போல மனம்வருந்திமூர்ச்சையானாள்; பின்பு சற்றுமூர்ச்சை தெளிந்தெழுந்து சொல்லுவாள்: ஆண்டவன் இந்நாட்டைவிட்டு மிக்கதூரத்தேதொடு எசித்து நாட்டுக்குப்போனது தன்மையறியாமல் இந்நாடுசெய்த பாவமோ? அல்லது அந்த எசித்துநாட்டார்செய்த புண்ணியமோ? யாதோ வெனத் திகைத்தழும்போது எதிர்நின்றவானவன் இது திருவுளத்தின் செயலாயிருக்க நாமென்ன செய்யலாமென்று தேற்றியதனால் ஒருவாறு அலையமர்ந்த கடல்போல மனந்தேறி, மாதவனாகிய சக்கரியனென்னும் புருஷனும் இறந்து போனமையால் புருஷனுதவியு மில்லாமல் தேவதூதன் சொற்படி தனது அருமைத் திருமகனாகிய கருணையனை யெடுத்துக்கொண்டு மின்னலைப்போலழியும் உலகப்பொருள்களை யெல்லாம் இரப்பவர்க்குக் கொடுத்துவிட்டு சீர்வளமுள்ள யூதேயநாட்டை விட்டுப் புறப்பட்டு ஒரு கானகத்தில் ஒளித்திருக்கப் போயினாள். இப்படி மனிதசஞ்சாரமற்று இருள் குடிகொண்டிருக்குங் கானகத்திற்குத் தனது அன்பும், பயமும் காட்டிய வழியாகப்போய் வண்டுகள் முழங்கிக்கொண்டிருக்கும் அவ்விடத்தில் குடியிருந்து, வேடனுக்குப்பயந்து தாமகோடரிலிருக்குங் குஞ்சுகளோடு தாயன்னமும் புறப்பட்டுவந்து கானகத்தில் மூழ்கியிருப்பதுபோல ஏரோதனுக்குப்பயந்து தன்குமாரனை யொளித்து வந்தவெலிசபேத்தும் அழுது, மெழுக்காற்செய்த பிரதிமை தீயிலுருகின்றாற்போலமனம்வருந்தி ஏரோதன் எல்லாக் குழந்தைகளையுங் கொன்றுவிட்டானென்று கேள்விப்பட்டு அந்தக் கொலைத்தொழில் தன் புத்திரனுக்கில்லாமல் காப்பாற்றின தயாபரனாகிய சுவாமிக்குத் தோத்திரம் பண்ணிக்கொண்டிருந்தாள். இப்படிச் சிலகாலம் போனபின்பு சந்திரனைச் சூழ்ந்த பல நக்ஷத்திரங்கள் போலப் பல தருமங்களைக் கொண்ட இந்தப் புண்ணியவதிக்கு நாளுக்குநாள் தனது தேகமிளைத்து வருவதால் தனது மரணகாலம் கிட்டியதென்று ஞான காட்சியாலறிந்து இதனைத் தெளிவு மின்பந்தருகின்ற தன் புத்திரனாகிய கருணையனுக்குத் தெரிவியாமல் நாம் பிரிந்தபின்பு இக்கானகத்தில் இந்தக்குழந்தை என்னபாடுபடுவானோ? என்ற ஏக்கங்கொண்டிருந்து இப்படிப் பலநாள் கழிந்தபின் ஒருநாள்வேறொரு காட்சியைக்கண்டு அதனால் மனந்தேறிமகனையருகேயழைத்து அப்பா! எல்லாவின்பத்திலு மினிமையுள்ள என்மகனே! கடவுட்குகந்த அருளுடையோனே! உன்னை மடிமேலிட்டு பெற்றெடுத்த யான் உனக்கின்னம் நாலுபிராயமாகுமுன் உன்னைவிட்டுப் பிரிந்து மோக்ஷகதி சேருங்காலமாயிற்று; இதுவோ திருவுளச்செயல் அதைத்தடுக்க யாவராலு முடியாது. ஆதலால் உன்னைத் தனியேவிட்டுப் பிரிவதினால் எனக்கு யாதோர் வருத்தமுமில்லை; ஏனெனில் இதற்கு முந்தியே நீ எல்லா அறிவுமடைந்து பிறக்குமுன் முதலாய்ப் பிரம்ப வரங்களைக் கொண்டிருக்கின்றாய்; என்னிருகண்மணியே இந்தக்காட்டில் தனித்திருப்பதற்கஞ்சாதே; தேன்போலவஞ்சகத்தை யூட்டுமனிதர் துணையைப்பார்க்கிலும் மிருகங்களின் துணையே நல்லது; பின்னும் பிறந்தநாட்டையும், நகரத்தையும், மற்றநன்மையுமிழந்தோமே யென்று வருந்தாதே; இந்தச்செல்வங்களை விரும்பிவான்வீட்டின் செல்வங்களையிழக்கும் நீச மனிதரினுமுடனில்லை; மேலும் உறவினரை யிழந்தோமேயென்றுங்கலங்காதே; உனக்கு மனத்தைரியமே பிதாவாகவும், நல்லதவங்களே மாதாவாகவும், மெஞ்ஞானஅறிவே பிரியாததோழனாகவும், கருணையே மனைவியாகவும், ஒழியாத பொறுமையே புத்திரனாகவும், கொண்டு உயிர்க்குலாபதனைத்தரும் இந்த உறவினரோடு வாழ்ந்திருந்து மனதுக்கமாகியவினைவிளைப்பதினால் அதுமெய்ஞ்ஞானமாகியமாமுனைத்துத் துக்கமாகிய வேர்பாய்ந்த பொறுமையும், இரக்கமுமிருந்தாக

ளாக நிழலிச்செய்துமகிழ்ச்சியாகியமலர்பூத்து மோக்ஷமென்னலாகிய கனிபழுக்க, அதனைநீயுண்டுசுகித்து வாழ்ந்திருப்பாய்; உனக்குநானே உபதேசஞ்செய்யுங்குருவில்லையென்று கலங்காதே; அதியுதயத்திலே வாசனையைப்பரப்பிமலர்கின்ற மலர்களும், இனியதொனிசெய்யப்பாடுகின்றபறவைகளும் நீகேட்டுவாழ்த்தும்படி கற்பிக்கின்றஇருங்குருக்களாயிருக்கின்றன. உனக்குப்படிக்க வேதசாஸ்திரமில்லையென் றெண்ணாதே; செல்வமுதலிருப்பின் அதனால் நில்லாமையும், காடுமேடாகியவற்றுக்குப் பயந்து அதனாலில்லாமையும் ஒரேமுகமாய்ப்பொடிக்கடலில்விழுகின்ற இக்காட்டு துள்ள நதிகளையே நீ வேதநூலாகக்கொண்டு உலக சிற்றின்பத்தை விரும்பாமையும், துன்பத்திற் கஞ்சாமையுஞ்சகலநன்மைக்கடலாகியகடவுளைச் சேருமவழியைக் கற்றுக்கொள்வாய். இவையெல்லாங் கூடாதாயினும் முன்னமே என்னையும் உன்னையும் இரட்சித்த கன்னித்தாயாரிருக்கின்றாள்; அவளுன்னுயிருக்குயிராயிருந்து உன்னை இரட்சிப்பாள், அவளைவிட வேறொரு துணையுனக்கு வேண்டுமோ? அவளிப்பொழுது தூரதேசத்திலிருக்கின்றாளென்று நினையாதே; வான்மீதுள்ளகரியமேகத்தைக்கண்டமாத்திரத்தில் மயில்கள் இங்கேகளித்து ஆடுவதைப் பார்த்ததில்லையா? அதுபோல அன்புடையோருக்குத் தூரமென்பதுகிடையாது. என்றிவையெல்லாம் எலிசபேத்தம்மாள்சொல்லி உயிரும், உடலும், அன்பும் ஒன்றாகும்படி மகனைத்தழுவித் தடவி அழுதகண்ணீரால் கழுவிக் கலங்கியுருகினாள், இதைக்கண்ட கருணையனும் நெருப்பிலிட்ட மலர்போலவாடி, அந்நெருப்பிற்கருகும் பூங்கொடிபோலச் சரீரஞ்சுருண்டு கருகி, மின்னலைப்போல அசைந்து, நீர்தாரையைப்போலக் கரைந்து துக்கசாகரத்திலமுந்தி ஒன்றுஞ்சொல்லமாட்டாமல் திகைத்து நின்றார்.

இங்கே நடந்த வர்த்தமானமெல்லாம் நூறு காதத்திற்கப்புறமாகிய எகிப்துநாட்டிலிருக்குந் தேவகுமாரனும், கன்னித்தாயாரும், சூசைமாமுனிவரும் ஒர்காட்சியாலறிந்தார்கள், பின்னுங்கருணையுருவாகிய தேவதாயாரும், மாதவசூசைமாமுனிவரும் அன்றையதினமே கருணையன்சோர்ந்து கலக்கப்பட்டு மனமழிந்திருக்கிறதைத்தெரிந்து, சர்க்கரைக்கட்டியுண்டாற்போலமகிழ்ந்து திருக்கரத்திலிருக்குந் திருக்குமாரனைவாழ்த்தி மாலைபோலஇன்பமுந்துன்பமும் விடாமல் தொடர்ந்துவருவது கடவுள் நீதியாகையால் பின்பு எலிசபேத்தம்மாளின் மரணகாலஞ் சமீபித்ததைப்பற்றித் துக்கித்தும் மலரும், மலர்பூத்த கொடியும் நெருப்பிற்பட்டாற்போலத் தாயும், பிள்ளையும் வருந்துவதினால் தாங்களும் வருந்தினார்கள், அதன்பின்பு மோக்ஷ விராக்கினியாகிய மரியம்மாள் சிலவானவரை யனுப்பி அவர்களுக்குஆறுதல்சொல்லச் சொன்னதினால் அப்படியே வானவரும் போய் அழகியஉருவோடுநின்று வியாதிக்காரனுக்குமருந்தூட்டியதுபோல வானவருக்கேற்ற சில உறுதிகளைச் சொன்னார்கள். இதைக்கேட்டிறக்கவிருந்த எலிசபேத்தம்மாள் தன்னுயிர்தேறி வந்தவானவரை நோக்கிச்சொல்லுவாள்: என் தாயாராகியகன்னித்தாயாரால் அனுப்பப்பட்ட பெரியோரே! நீங்களென்னுயிரை யாண்டவன் திருப்பாதத்தில் சேர்த்துவிடுகு பிரியாதஎன்குழந்தைக்குத்தகப்பனும், தாயுநீங்களே; என்று சொல்லிப் பிள்ளைக்குப்பல வாசீர்வாதமுந்தந்து பிள்ளையின்மேற் சாய்ந்து ஒளிவிளக்கவிந்தபடியுயிர்விட்டாள். இப்படித்தாயிறந்து விழுந்தவுடனே கொழுங்கொம்போடு பூங்கொடியற்று விழுந்ததுபோலக்கருணையனுந் தரையில் விழுந்து அறுத்தபசோட்டமுகையில் அருகேநின்ற வானவர்சொன்ன உறுதியாலெழுந்தபொழுது உயிர்தேடிவந்தாற்போலவிசைவுமெழுந்து நின்று அவ்விடத்துள்ள

வண்டுகள் மொய்த்த சோலையு முருகும்படி யுருகியழுது, பின்பு காயம்பட்ட புண்ணுலர்ந்து நல்லுடம் பானாற்போலத் தெளிந்தவர் காதலால் மனத்தைரியங் கொண்டிருந்தார்.

இப்படிப் பத னழிந்து விழுந்த பழத்தைப்போல விழுந்த எலிசபேத்தம்மாள் சரீரத்திற்குச் செய்யவேண்டிய முறையெல்லாம் வானோர் குறையாமற் செய்து முடித்தபின் குழந்தைமுனிவனாகிய கருணையன், தமது சிறுமலர்க் கண்கள் பொழிந்த கண்ணீரால் தாயாரி னுடலைக் கழுவிப், பல தருமங்களையு மணிந்திருந்த மார்புக்குப் பலமலர்மாலையணிந்து, சூரியாஸ்தமானத்தில் குவியுந்தாமரைபோலக் கரங்களைக் கூப்பிக் கும்பிட்டு வண்டுகளுங், கிளிகளும், அன்னங்களும், நாகணவாய்ப்பறவைகளும் ஓசையால் அழுதிரங்கவும்; தழைகளையசைத்து சலசலவென்றழவும்; காற்றுகளசைவென்று வீசியழவும்; ஜலதாரமெல்லாம் ஓல்லென முழங்கி யழவும்; அந்தக்கானக மெல்லாமழவும்; தாமழுது தேவதூதரெடுத்துச் செல்லும் தமது தாயாருடையசடலத்துக்குப் பின்னாகச் சென்று, அடக்கவேண்டிய இடத்தி னுள்ள குழியில் மலரிணை பரப்பித், தருமத்திற்சிறந்தவுடலையடக்கி அங்கேபின்னும்இரண்டுகைகளையுங்குவித்து மண்ணே! இவ்வுடலைநன்றாய்க்காப்பாற்றக்கடவாயென்றுசொல்லி மலர்மழையுங் கண்ணீர்மழையுஞ்சொரிந்து அழுது, திரும்பிவரும்வழியில்தமக்கு வேறொருதுணையில்லாமையைத்தெரிந்தும்,முன்செய்யநினைத்ததவத்தைநினைத்தும் நிறைபட்டுத் தமது மனம்போலஅலைந்திருக்கும், ஓர்தடாகத்தருகாண்மையில்தனித்து நிற்கும்போது கூடவந்த வானவர் மறைந்துபோயினர்.. பின்பு தனித்திருக்கும் இளமுனியாகிய கருணையனுக்காக இரக்கங் கொண்டதுபோல அந்தத் தடாகத்தின் ஜலமெல்லாம் ஓல்லென்று ஓடிவரவும், அத்தடாகத்தின் குவளை மலர்கள் அதிசயித்தாற்போல மாதவனைப் பார்த்து நிற்கவும், முன்பு இனிய இசைகளைப்பாடிய வண்டுகளுங், குயில்களும் துக்க இராகத்தைப் பாடியழவும், இருந்தன. அதன்பின் அழுதபறவைகளும், வண்டுகளும், மற்றுமுள்ள தண்ணீர், காற்று முதலியவும் துக்கத்தினாலும், ஆச்சரியத்தாலும், சும்மா விருப்பதுபோலச்சத்தப்படாமலிருக்கக் குழந்தை முனிவன் புலம்பிச் சொல்லுவார்: பெரியோரானவர் உலக செல்வ மெல்லாம் நீர்மேற் குமிழிபோலவும், தெருநிலையைப் போலவும், மின்னலைப்போலவும், கடலலையைப்போலவும் அழியுமென்றார்; ஆயினும் ஞானச்செல்வத்திற்கு இவ்வகை யழிவுண்டோ? இல்லை. மாசுபட்டவஸ்திரத்தை யம்மாசொழிய வெளுத்தாற்போல, நானும் என்தாயார் வயிற்றில் ஜென்மமாசோ டிருக்கும்போதே இளம்பிறையை மிதித்தெழுந்த தேவதாயார் கருணையோடுசொல்லிய வார்த்தைகளால் அந்த ஜென்மமாசொழிந்து கல்வியால் வருகின்ற அறிவையும், ஞான காதலினையும் நான் கற்காமலே அடைந்து அற்புதமாக எல்லாவரப்பிரசாதங்களையு மடைந்தேன்; பின்புபாலிற்பழம்விழுந்தாற்போலவும், முத்து ஜனிக்கும்படி சங்கினுள் பனித்துளி விழுந்தாற்போலவும், நான் என் தாயார் வயிற்றிலிருந்து பிறந்தபோது இப்பொழுது உலகத்திலே இரட்சகன் சாய்ந்திருப்பதுபோல அந்தக் கன்னித்தாயாருடையதிருக்கரங்களில் நானுஞ்சாய்ந்திருந்தேன்; இன்னும் யாதொருபிரயோசனமு மில்லாத எனக்கு ஞானமு முண்டாகும்படி என்னாண்டவன் கொடுத்த வரங்களை ஊமையாகிய யான் சொல்லக் கூடுமோ? இப்படிப்பட்ட மாகதிமையோடு பிறந்தநான் இப்பொழுது பெற்றதாய் தந்தையை யிழந்தேன். பெற்றதாயின் கண்ணீர் ஆறாகவோடும்படி என்னைப்பெற்றதந்தையுமிறந்தார். ஜோதகன் கொலைக்குப்பயந்து இவ்வனத்தில் கொண்டுவந்து யாசேசென்றால் ஏரோதன் கொலைக்குப் பயந்து இவ்வனத்தில் கொண்டுவந்து என்னைவைத்திருக்கையில் தாமரையில்வாழும் அன்னக்குஞ்சைப்போல்நானும் அவன்

கையில்வளர்ந்து காட்டிலிருக்குந் தன்மை தோன்றாமல் வானவிட்டிலிருப்பது
போலவிருந்தேன்; என்தாய் சொல்லியாகல்லுணர்ச்சிகளைக்கேட்டு அவளுக் கொ
ருமாணிக்க ஆரம்போல அவள் மார்பிலே படுத்திருந்தேன். என்தாயாருமிறந்த
பின்பு ஐயோ! மழையின்றிவாடி மணிபிடிக்குமுன் காய்ந்துகிடக்கும் பயிரை
ப்போலானேன், ஐயோ! பறித்த மலரைப்போலவாடி, அம்புபட்ட புண்ணைப
போலநொந்து, சேடுபிரிந்தஅன்றில்போலவிம்மி, தேம்பிஅழுது, இந்தவழுக்
குநிலத்திற்போகும்வழியையறியாமலும், ஒருவர்துணையில்லாமலுந் தனித்தே
ன். ஐயோ! இந்த அரணியத்தில் அஞ்சிவாழு மான்களே! சோலையில் வாழும்
ஆண்வண்டுகளே! பெண்வண்டுகளே! புலிகளே! காடுமுதலாகியமிருகங்களே!
தனித்து வாழ்வதிலுந் தீமை வேறுண்டோ? சொல்லுங்கள்; நான் பிழைக்
கும்வகையையும், என்னையவங்களல்லாமல் சரீரத்தை நடத்து முறையை
யும், சரீரம்விரும்பின உணவுகளைச் சேகரிக்கும் வகையையும் அறியேன், ஆ
னால் என் தாயாரின் கையை மாத்திரமறிந்திருந்தேன்; அவளும் இறந்து எ
ன்னைத் தன்னந்தனியாக விட்டுப்போனாள். இதுவல்லாமல் மனத்தைரியத்
தை ஒரு ஏராகப்பூட்டித் தவமாகிய உழவனால் உடலாகிய வயலையுழுது, வி
ரதமாகிய செந்நெல்விதைத்து, ஒழுக்கமாகிய தண்ணீர்பாய்ச்சி, ஐம்பொறி
களாகிய வேலியை நன்றாகக்காத்துவந்தால் பேரின்பமாகியபலன் விளைவதுநி
ச்சயந்தான்; ஆனாலும் நான் காது பிராயமுமாகாத குழந்தையா யிருக்கையி
ல் புலிகளினுங்கொடிய பசாசுக்களும், அந்தப் பசாசுக்களிலுங் கொடிய சரீர
முஞ் செய்யுங் கொடுமையிலிருந்துத் தவத்தின் வழிபோகத் துணிந்தால் வ
ழுவாமல் அவ்வழி செல்வதற்குத் தருமவழி அரிதாயிருக்கின்றது. அதெப்
படியென்றால்: கண்ணாடியில்லாமல் அடுத்தபொருள் காணப்படாததுபோல
ஆசாரியனுடைய கண்ணாடியாகிய மொழியில்லாமல் ஒருவன் தன்மனத்திலுள்
ளபாவத்தையறியமாட்டான். அப்படித்தன்மனத்தைத்தானறிவது அரிதாயிரு
ப்பதினால் பொங்கியெழுங்கோபத்தை நீதியாகவும், கொடியகாமத்தைச் சி
நேகமாகவும், பொருளாசையே ஒழியாத ஆசையாகவுமிருக்கும் பாவத்தைய
றிவதெப்படி? இப்படியாகவரும்பாவத்தை அறியாதகுழந்தையாகிய நான் த
ப்புவதெப்படி? அல்லது தடுத்து நல்வழியிற்சென்றாலும் வழியில்தவறிவிழு
வேனாகில் என்னைத்தூக்கிப்பின்வாங்காமல், இப்படிநடவென்று காண்பிப்பதற்
கு ஒரு ஞானதேசிகன்வேண்டாமோ? என்று இவையெல்லாஞ் சொல்லித்தரு
மதத்தையேஇரத்தினமாலையாகப்பூண்ட கருணையன்புலம்பும்போது அந்தக்கான
கத்திலுள்ள பொருளெல்லாம் சத்தப்படாமல் கேட்டிருந்து பின்பு அழுமோ
சைபோலச்சத்தித்தழுதன்ன. இப்படிப்பிராயத்தினால் இளையவனும், ஞானஅ
றிவினால் பெரியமுனிவனுமாகிய கருணையன் தாமே தம்மை நம்பாமலும், மன
வுறுதியைக் கைவிடாமலும் அழுதகண்ணீரோடு தடாகத்தின் கரையிலுள்ள
தர்மனைக் குப்பையின்மீது நித்திரைசெய்தார்.

இவ்வண்ணமாக அரணியத்தில் நடந்ததெல்லாவற்றையும் எசித்து இரா
ச்சியத்தி லிருக்குந் திருக்குமாரனும், தேவதாயாரும், சூசைமாமுனிவரும் கா
க்குச் சில ஞானவுறுதிகளைச்சொல்லியனுப்பும்படி அருகேநின்ற வானவரித்
ிலையங்கூப்பிட்டுச் சொல்லுவார்: வல்லமையில் நிறைந்த தேவதூதரே! கு
ளத்தினின்று பறித்தகமலங் கரைமேல் வாடுவதுபோலப் பூந்தடாகத்தின் க
ரைமேல நித்திரைசெய்யும் இளமுனிவனாகிய கருணையனிடத்திற்சென்று அ
வனைத்தேற்றிச் சிலஞானவுறுதிகளைச்சொல்லுங்கள். அதாவது — "கருமக்க

ளைக்களைந்துத் துறவறத்தை விரும்பி நல்விரதங்களைக்கைக்கொண்டபின்பு உலக இன்பத்தால் உறவின்முறையாரைத் தேடி வருந்தலாமோ? மெய், வாய், கண், மூக்கு, செவி, என்னும் பஞ்சபொறிகளைக்கொண்டு உயிரைக்கெடுக்கும் உடலைவாட்டித் துறவறத்தைச் செய்யவிரும்புவோர் யாவரும் துன்பத்துக்கஞ்சாமல் தோலுரிக்கும்பாம்புபோலாகவேண்டாமோ? துறவறத்திலுயர்ந்த பெரியோர் தமதுடம்பின் தன்மைபொய்யென்று ஐம்பொறிகளை யடக்கிக் கொன்றபின்பு இவ்வுலகின்துணையை விரும்புவாரோ? என்று கேளுங்கள், அதற்கு அவன் பொன்னும், மலரும்விளங்குவதற்குத்துணியும், வாசனையுந்துணையானதுபோல ஞானதேசிகன் துணையில்லாவிடில் ஞானம் எப்படி வருமென்று கேட்டான். அதற்கு ஜன்மப்பாவத்தோடு பிறந்தவனுக்குக் குருத்துணைவேண்டியது அவசரந்தான். ஆயினும் கர்ப்பத்திலேயே ஜன்மப்பாவம்நீங்கி, ஆண்டவன் கருணையால் அறிவின்மேலும் அறிவைப்படைத்திருக்க உனக்குக் குருத்துணைவேண்டுமோ? அல்லாமலும் நீ தாய்கருப்பத்திலிருக்கும்போதே சகல கல்விகளையும் கற்கும்படி ஒரு குருவாக்கண்டாயா? இது திருவுளமென்றறிந்தபின்பு உனக்குத் தேறுதல்சொல்லொருவர் வேண்டுமோ? தேவஇரக்கத்தையுட்கொண்டபின்பு துன்பங்களுன்னையென்னசெய்யும்? பின்னும் நான் என்னும் அகப்பற்றையும், எனது என்னும் புறப்பற்றையும் தவத்தினால் ஒழித்தவொருவன் மூவுலகத்தையும் அசைக்கவேண்டின் அசைப்பதற்குச் சந்தேகமுண்டா? இப்படி ஒழுங்குபடநடப்பவன் ஆண்டவனருளால் மனமகிழ்ந்து வாழ்வானென்று சொல்லுங்கள்" என்று கருணையனுக்குச் சொல்லும்படி திருக்குமாரன் சொல்லி யனுப்புகையில் அருகேயிருந்த கருணைசமுத்திரமாகிய கன்னிமரியம்மாளும் கரும்புந், தேனுங், கனியும், வெல்லப்பாகும், பாலுங்கூட்டிய முறைபோலச் சுவையிருந்த ஓர் விருந்து செய்து மேற்கூறிய குழந்தைமுனிவனுக்குக் கொடுக்கும்படி தூதுபோகும் வானவர் வசமளித்தாள். அப்பொழுது தாயின் அன்பினு மிக்கஅன்புடைய குசைமாமுனிகளும் தேவதூதரை நோக்கிச் சொல்லுவார்: தாழ்ந்த அத்தன்மையுடையநான் வரப்பிரசாதத்திலுயர்ந்தபடி. ஆண்டவனெனக்குச் செய்கதெல்லாம் அவனை நினைந்திருந்தும் வருந்தலாமோ? ஆதலால் தாழ்ச்சியி லுயர்ந்தோர் மாட்சியிலுயர்வாரென்று சொல்லுங்கள் என்றார். இப்படி மூவருஞ் சொல்லி யளவிறந்த ஆசீர்வாதமுந் தந்து வானவரையனுப்ப அவர்களும் இவர்கள் திருப்பாதங்களை வணங்கி ஒருகணப்பொழுதில் அங்கிருந்து புறப்பட்டுப்போய்ப் பெருந்தவமுனிவரால் பின்னப்பட்ட ஆடையையுடுத்துக் குகைக்கட்டில் சயனித்திருக்கும் கருணையனைக் கண்டார்கள். உடனே கருணையனும் இவர்கள்வந்த ஆரவாரத்தினால் சந்தேகப்பட்டுத் திடுக்கென எழுந்திருந்து இவர்களைக்கண்டு, நீங்கள்யார்? எங்குவந்தீர்கள் சொல்லுங்கள் என்றுசொல்லி அப்புறம் வானவரென்று தெரிந்து இரண்டுகைகளையுங் குவித்து வணங்கி நிற்கையில் வந்த தேவகணங்கள் மூவர் சொல்லிய நன்மதிகளைச் சொல்லிக் கன்னித்தாயார் கொடுத்த தேவ அமுதத்தையுங் கொடுக்கக் கருணையன் தேவ அமுதத்தையுண்டு தேவ காதலிற் சிறந்து, தேவதூதர்பாடிய இசைப்பாட்டுகளோடு தாமும்பாடி மோட்சத்தை விரும்புபவனைப்போல மகிழ்ந்து, ஆண்டவனைத் துதிப்பவர்கள் யாரோ, அவர்களுடைய பெருமையைப்பற்றிப் பாடத்தொடங்கினார்.

அதெப்படியென்றால் "யாவருக்குந் தாயினுமிக்ககருணைசெய்யுஞ் சகலவியாபகனை குனிந்துபணிந்த திவ்வியபாதங்களைப் பணிந்தோர் துன்பத்தையுள்ளளவும் ஒருநாளுங் கெடுதியை யடையமாட்டார்கள். பேரின்பச் செல்வத்தையுமுடைய

வனாகி, மனிதனை இரட்சிக்க இவ்வுலகில் வந்தவதரித்தருளிய வானவர்வணங்குங் கடவுளை வணங்குபவர் எந்நாளுந் துன்பமடையார்கள். நான் எக்காலமும் வாழும்படி அருட்கடலிற்பிறந்த தாமரைபோலவிருந்த தயாத்தோடுவந்து பிறந்த தேவகுமாரனை வணங்கித்துதிப்பவர் என்றுமடையாத பயமொன்றுமில்லை. தேவலோகத்தார்க்குப்பேரின்பத்தை யருளிப்பூவுலகத்தார் மீதுவைத்த கருணையால் சிறுவுருவெடுத்துமாணிக்கப் பாத்திரத்தினமுதம்போலப்பிறந்தசுந்தரக் குமாரனைத் தியானிப்பவரெல்லாம் மோக்ஷவாசலிற்சேருவார். வானுலகத்தாரும் விரும்பி வணங்கும் மாட்சிமையிற்சிறந்த இளங்குமாரனை வணங்காதவர் என்றும் நரகாக்கினியில் நொந்தலைந்தழிவார்கள்."

என்று இளமுகியாகிய கருணையன்சொல்லிச் சொல்லி அருகில் நின்ற வானவரோடு மகிழ்ந்திருந்து அன்றையதினமேவண்டுகளின் இராகத்தையொத்துக் குயில்கள் பாடவும், மயில்கள் ஆடவும், மற்றப்பறவைகள் அதைப்பார்த்திருக்கவும் தேன்மலர்பூத்துக் கலியாணப்பெண்ணைப்போலிருக்கும் அந்தக் கானகமுழுமையும் மின்னலைப்போலச் சுற்றித்திரிந்து, தம்முள்ளத்தில் வந்தெழுந்தருளிய சுத்தாக் கடவுளை யெங்குந் தேடித்தேடிக் காணாமல், பின்பு தம்முள்ளத்தில் தேடித்திவ்யநாதனின் திருப்பாதகமலங்களையடைந்து வணங்கி, நெடுநாளாகத்தேடிய ஒரு செல்வப்பொருள் வாய்த்தாற்போலப் பலமுறை மகிழ்ந்து பரவசானந்தக்கூத்தாடி யிருந்ததுமல்லாமல் பூர்வத்தில் மோயீசனென்பவர் தரிசித்த ஒருமரம் சிவந்த அக்கினியாற் பற்றியெரிந்தாலும் வெந்தொழியாமல் குளிர்ச்சியோடு இருந்ததுபோலச் சுந்தரவடிவொழுகுந்தமது திருமுகம்அக்கினிமயமாய்ப் பிரகாசிக்கக்குளிர்ந்ததம்மனமகிழவும் தேவவருளைநிறையவுண்டு உயிர்வாழ்ந்தாலும், சரீரத்திற்குவேண்டிய உணவுகளைச் சேகரிக்கும் பருவமில்லாமையால் பசியிருந்து மலர்போலுமெல்லியவுடல்வாடிச், சோர்ந்திருப்பார். இப்படியிருக்குஞ் செல்வக் குழந்தைக்கு உணவுதேடும் பருவகாலம் வரும் வரையில்மோக்ஷஇராக்கினியாகிய கன்னித்தாயார் சம்மனசுக்கள் மூலமாயனுப்பிய விருந்துணவுகளைக் குவிந்த தாமரையொத்த தமது கைகளால்வாங்கியுண்டு களித்திருப்பார். இப்படியிருக்கும்போது தேன்மலர்க்கொடி யொத்த சூசைமாமுநிகள் இவையெல்லாந் தெரிந்து, ஒருநாள் அன்பின்மிகுதியால் திருமகனாகின்ற இரக்ஷகரை நோக்கிச்; சுவாமீ கருணையனிக்கானகத்தில் வருத்தப்படாமல் அவனை யுனது மலர்ப்பாதத்தில் சேர்த்தருளலாகாதோ? என்று கேட்க அதற்குமது மொழியாக இறப்பு, எதிர்வு, நிகழ்வு என்னும் திரிகாலங்களையும் ஏககாலமாயறிகின்ற திருக்குமாரன் சொல்லத்தொடங்கினார்.

ஐம்பொறிகளையுஞ் செயித்த தவத்தோனே! நான் சொல்வதைக் கேளும், கருணையன் சங்கதியைப்பற்றிச் சொல்கின்றேன் அதாவது: பூவுலகத்தின் துயரத்தை யொழிக்க மனுமகனான எனக்கு முன்னே அந்தக்கருணையன் ஒருதூதனாகி எனக்குவழியைச் செப்பனிடும்படி நான் தெரிந்துகொண்டபடியால் இனத்தாருடைய குறைகள் அந்த இனத்தைச் சேர்ந்தவர்களுக்குமுண்டாவதுபோல இவனுக்கு அந்தக் குறைகள் அணுகாதபடி என்கட்டளையால் வனத்திலே சேர்ந்து என் தயையாகிய கையில் வளர்கின்றான். இன்னும் மதுரக்கனிகளைத் தருகின்ற விருக்ஷத்தின் செல்வத்தைப் பார்க்கிலும், உயர்ந்து வளர்ந்தபின்பு, வேலாயுதத்திற்கு அஞ்சாத வீரசிங்கம் காட்டிலிருந்து வெளிப்பட்டதுபோல அவனுந் தானிருக்குங் காட்டினின்று வெளிப்பட்டு, வழுவில்லாத நீதிகளை யாவருக்கும் உபதேசித்தும், கடைசியாய் மனு

னின் றிழிக்கோடும் யோர்தானென்னும் நதிக்கரையில் வந்திருந்து, பழம்புல்லைத்தீயினாற் சுட்டாற்றினும்போலத் தன் சொல்லாகிய வாளினால் பாவங்களை யறுத்தெறிந்து, தான் கொண்ட வரப்பிரசாதங்களினால் மோக்ஷத்தை சேரும்வழியை யாவருக்குங்காட்டி, தானவதரித்த செய்தியையுஞ் சொல்லிக், கல்லாதவருமுணரும்படி விரலால் என்னைச் சுட்டிக்காட்டுவான். அக்காலத்தில் அந்நாட்டை யாண்டுவரும் அரசனாகிய எரோதன், தன் தம்பியாகிய பிலிப்புவின் மனைவியைத் தான் வைப்பாட்டியாக வைத்திருந்து மதயானையைப் போலக் காமக்கடலில் மூழ்கியிருப்பான். அப்போது பலநாளும் கந்தோடுபழகியநாய்க்கு மதுரத்தை யறியாததுபோல இந்தக் கருணையன் சொல்லும் நீதித்துறைகளை அரசன் அறியாமலும், தரும சிந்தையையுணராமலும் தன் வைப்பாட்டியைக் கருணையன் விட்டுவிடும்படி சொன்னகாரணத்தால் கருணையனைச் சிறைச்சாலையி லடைவிப்பான். பின்பு அவ்வரசன் வைப்பாட்டியும் இதை யுணர்ந்து இவனை யெவ்விதத்திலும், கொல்லவேண்டுமென யோசித்துச்சமயம் பார்த்திருக்கும்போது அரசன்பிறந்தநாள் வந்து அவனும் அவனோடு மற்றப்பெரியோரும், விருந்துண்டுகளித்திருக்கையில் அந்த மன்னவனுக்கு இவ்வைப்பாட்டியினிடம் பிறந்த வேலைப்பழித்த கண்ணுளாகிய குமாரத்தி வந்து சபையிலுள்ளவரும், அரசனும் சந்தோஷிக்கும்படி மின்னலைப்போலத் துவண்டு, மலர்மாலை யவிழ்ந்து தொங்கவும், அதினின்று தேன்புரண்டோடவும், ஆபரணங்களொளியைவீசவும், நூபுரமுழங்கவும், கையின்வழியே கண்ணுஞ் செல்லவும், நின்று வீணை குரலோடு பாடிய பாட்டுக்கிசைய நடனஞ்செய்வாள். அதைக்கண்டு அரசன் ஆ! என்னருமை மகளே! உனது நாட்டியத்தை மகிழ்ந்தேன் அதனால் உனக்கு வேண்டியதைக் கேள்; தடையின்றி கொடுப்பேனென்று ஆணையிட்டுச் சொல்லுகையில் அந்தப் பெண்ணானவள் தனது தாய் சொல்லிய தீய ஆலோசனையினால் கருணையன் தலையைவெட்டிக்கொடுக்கும்படி கேட்பாள். அப்படியே மன்னவன் தன் ஆணையை மறவாமல் தலையை வெட்டின வுடனே மாறாத்தவத்தினையுடைய கருணையன் மோக்ஷத்திற்சேர்ந்து முடிவில்லாத இன்பத்தை யநுபவிப்பானென்றார்.

இப்படித் திருக்குமாரன் சொல்லிய மொழிகள்யாவையுங்கேட்டு, அதற்குச் சூசைமாமுனிவன் அமுதத்தை யுமிழ்ந்தாற்போலச்சொல்லுவார்: மனுமகனாகப் பிறந்த என் ஐயனே! நஞ்சாண்பதிலும் பலத்த கொடுமையை யுடைய மாதர்கள்மேல் கொண்ட காமவாசையானது வேலைப்போலவுயிரைக்கொன்று, புலியைப்போல உடலை வருத்தி, வீரம், ஒழுக்கம், தருமம், அறிவு வாழ்க்கை, கீர்த்தி, நீதி, சத்தியம், அன்பு, முதலியவற்றை அக்கினியைப்போல எரித்துக் கெடுக்கும். ஆதலால் அந்தத் துராசையை மனிதர் ஆராயாமலிருப்பது என்ன காரணமோ? என் ஆண்டவனே! சிற்றின்பத்தை விரும்பியபடியால் பகைகொண்டு, அந்த அரசன் செய்யுங் கொடுமையினால் கருணையன் மோக்ஷவீடடைந்து வாழச்செய்வது உனது வல்லமைதானே. உலகமெல்லாம் ஒருப்பட்டுப் பகைத்தாலும், உனக்குஅச்சமுண்டோ? என்று பலவாறாகத் திருக்குமாரனை நாள்தோறும் வாழ்த்திப், பின்னையும் நினைத்த பொழுதெல்லாம் தமது நாவில் அமுதஞ் சுரக்கும்படி கருணையனை நினைத்திருந்தார்.

கருணையன்மாட்சிப்படலம் முற்றிற்று.

இருபத்தேழாவது ஞாபகப்படலம்.

மனையிடை யிவையெலாம் வழங்குங் காலையிற்
கனையிடை முரசதிர் கன்னி மாபுரம்
வினையிடை வினைசெயிர் விலகி ஞாபகச்
சினையிடை மலர்ந்தநற் சீலஞ் செப்புவாம்.

இவ்வண்ணமாகக் கந்தித்தாயாரும், அர்ச். சூசைமாமுனிகளும் தமது திருக்குமாரனோடேகூட மேக முழக்கம்போல முரசவாத்திய முழங்கும் அந்தக் கன்னிமா புரத்தின் ஓர் சிறுமனையிற்குடியிருந்து முன்கூறிய தாமச்செய்கையெல்லாம் நடத்தியபின்பு அவர்களுடைய மெய்வேதஉபதேசமாகிய பூங்கொம்பிலே பூத்தமலராகியநல்லொழுக்கத்தை இனிச்சொல்லத் தொடங்குவோம். அதெப்படியென்றால்:—முன்னமே சோகுதோர்வைப் படலத்திலே சொல்லியபடி இம்மூவர் பேரிலும், எதிர்த்துப் போர்செய்யப் புறப்பட்டபசாசுக்கள் நரகத்தில் வீழ்ந் தழிவதற்குக் காரணமாகத்தெய்வத்திருக்குமாரன் அந்நாள்வரையிலும் பேசாதிருந்து, தேனினது இனிமையும், குயில் வீணை இவற்றின் குரலும் நாணும்படி முதல் வார்த்தையுச்சரித்த அன்றைய தினமே தாமரைத் தளிரை வென்ற சிறிய மெல்லிய திருவடிகள் நோகும்படி முதன்முதல் அடியெடுத்துவைத்துநடக்கத் தொடங்கினார். அப்போது அருகேநின்ற வானவர்களும் மோக்ஷத்தில்கொண்டாடுந் திருவிழாவாகத் தோத்திரப் பாமாலைகளைப்பாடி நிற்கையில் தெய்வதாயார் முன்னமே தமது திருக்கரங்களால் நெய்தலும், இசைப்பு இல்லாமல் செய்ததும், அன்னத்தினிறமும், மின்னிடத்தகுந்த வெண்ணிறமுடையதுமாகிய ஓர் மெல்லிய சட்டையை மும்முறை பணிந்து, தெய்வகுழந்தையின் திருமேனியிலணிந்தமாத்திரத்தில் தேவர்களெல்லாரும் ஆச்சரியப்பட்டு ஆ! இதென்ன ஆடை, இது நமது ஆண்டவர்க்குத் தகாதென்று நடுநடுங்கிச் சொல்லினார்கள். பின்பு மூன்று லோகத்திலும் ராசசெய்து மூன்றுமகுட கதிர் முடியைச் சூடிய அந்த உலகரக்ஷகன் பாவிகளை யிரக்ஷிக்க வந்தவதரித்த பாலகனுடையயால் தரித்திரர்க்குரிய அந்தச் சட்டையை யணிந்து தமது இனியமழலைத் திருமொழியைக் கேட்ட யாவருந் தமது விதியடிபோலத் திருப்பாதங்களைவிட்டு நீங்காமல் சூழ்ந்து திரிய முதல்மொழி பேசிய அன்றையதினமே நிமையெல்லா மொழியவும், கேட்போருள்ளமும், காதுங் குளிரவும் வேதவடிவாகிய சூசைமா முனிகளுக்குத் தயை திருவாய் மலர்ந்து சில நீதிகளைச் சொல்லத் தொடங்கினார்.

அஃதெப்படியெனில்: மலர்த்த பூங்கொடியேந்திய பெரியோனே! முன்னமே எசித்துநாட்டார் தெய்வமாகவணங்கிய பசாசுக்களை நரகத்திலோட்டின த ஞானமாகியவனைக்கொண்டு அங்கிலத்தைஉழுது நல்லொழுக்கத்தருமமாகிய விதைவிதைத்து, பேரின்பப்பல்ன்யாவருக்கும்விளையும்படி பிரயாசைபடவேண்டும். அப்படிச்செய்தால்மாதமும்மாரிபோல என்னருளைப்பொழிவேன். அவ்வருளானது உமது மனத்தைக்குளிரச்செய்து, பேய்களின் மயக்கத்தைத் தெளிவிக்கும் தீபம் போலுமாகும். இப்படி நீர் பயிரிட்டு வருகையில் பசாசுக்களுந் தாங்கள் பயிரிடும்படி ஆசைகளை ஏராகப்பூட்டி, மயங்கிய மனங்களைச் சேறாக்கித், தங்களைவணங்காதவர்களைக் கொல்வேன், கெடுப்பேனென்றும்

வீண்குரலினால்உழுது, பாவவிதைவிதைத்துத், தங்களை நம்பியவொவ்வொருவருக்குத் வியமுதலிய பலவாழ்வைப் பயிர்போலக்காட்டிமுடிவிலொன்றும் உதவாம லழிந்துபோக நரகத்தின் ஊழித்தீயாகிய விளைவின் பலனைத்தரும். அப்படிப் பசாசுக்கள் செய்கையில், மாதவமாகிய மலையில், தேவ வசங்களாகிய மழை பொழிந்து, உபதேசமாகிய வெள்ளமோடிவந்து, அந்தப் பாவப்பயிரைவேரோடு பிடுங்கினபின்பு நீர்கல்லொழுக்கம் விளையும்படி செய்யவேண்டுமென்று சொல்லினர். அதற்குச் குசைமாமுநிகள் சுவாமி! ஆந்தைகள் ஒளியைவிரும்பவும், வேங்கைப்புலிகள் மனிதர்க்கிரங்கவும், நெருப்புகுளிரவும், விஷமாக்கனிகள் உயிரை ரக்ஷிக்கவும் இத்தொகைப்பட்ட புதுமையெல்லாம் நீ விரும்பினால் செய்வதருமையோ? அதுபோல நானும் வேதநூலைச் சொல்லுகின்ற திறமையும்படி செய்தருள்வாயென்றுசொல்ல அதற்குத் தேவசுதன் சொல்லுவார்: வான்மேற் றிரியுஞ் சூரியன் எங்கும் பிரகாசிக்கவும், மலர்ந்த புஷ்பங்கள் வாசனையையுந், தேனையும் பொழியவும், அவைகளுக்குயாராகிலுங்கற்பித்தார்களோ? அதுபோல மிகுந்த அன்பும், அறிவுமுள்ள உமக்கு நான்கற்பிக்கவேண்டுமோ! பேரின்பநாட்டில் மனுமக்களைச்சேர்க்க அன்புகொண்டு நான் அவதரித்ததனால்அவர்கள் மீது நீரும் அன்புவைத்து வேதநூலை யுபதேசிக்க வேண்டுமென்று அவருக்காசிர்வாதமுந் தந்தருள உடனேகுசைமாமுநிகள் ஆண்டவன் திருவடிகளைத்தமது தலைமேற்கொண்டு வணங்கிப் புறத்திலே வேஷங்காட்டுகின்ற அரசனைப்போலவும், புறம்பேபழுதுகாட்டிக் கொல்லும் எட்டிக்கனிபோலவும், வீணையினரம்புகளுக்கு ஓசையைத்தந்து தான் ஓசை பெறாதிருக்கும் முறுக்காணிபோலவும் பயனற்றிராமல், இரத்தினங்களைப்போல மேன்மைப்பட்டனவாகவும், தேன்மலரைப்போல இனிமையுள்ளனவாகவும், அமுதத்தைப்போல உன்னதத்தக்கனவாகவும், முறைவழுவாத ஒழுக்கத்தைத் தருவனவாகவும், பேரின்பத்தைக் கொடுப்பனவாகவும் கருணைநிறைந்த நெஞ்சினால் பல உபதேசமொழிகளை யெவர்க்குஞ் சொலலத்தொடங்கினர்.

இப்படிக் கருணையையே முத்துத்தாழ்வடமாக அணிந்த குசைமாமுநிகள் துன்பமாகிய அக்கினியை யவிக்குமழை யாகவும், நோயைத் தீர்க்கு மருந்தாகவும், பசாசுக்களால் வரும் பாவவிருளை நீக்கும் விளக்காகவும், பெற்ற தாயைப்போலவும், பயன்றரும்வேதம் போலவும் எல்லாவுயிர்களிடத்தும் இரக்கம்வைத்து, அன்பில்லார்க்கு உபதேசஞ் சொன்னால் அது ஈரமில்லாத நிலத்தில் விதைத்த விதையாகுமென்று கேட்போருடைய அன்பைத்தாமே படையும்படி கருதித், தம்முயிர்போல யாவரையும் ஓம்பி அவர்களுக்குத் தமது அவயவங்களிலொன்று வேண்டியிருப்பினுங் கொடுக்க விரும்பித், தரித்திராயிருப்பவர்க்குத் தாமேயிரந்து வந்துகொடுத்தும், அறிவில்லாதவர்களுக்கு அறிவைத்தரும் விளக்காகியும், மயக்கத்தால் தளர்ந்தவர்களுக்கு உறுதி துணையாகியும் நின்று வேதோபதேசங்களைப் படிப்படியாய்ப்போதித்து ஒவ்வோரிடங்களிலே பழம்புண்ணை நெருப்பாற் சுட்டு ஆற்றுவாரைப்போலப், பழமையாகிய பாவவடுவைச் சுடுஞ் சொல்லாலாற்றாமல் மலர்ந்த முகத்தோடு இனிய சொற்களாலாற்றிக் கேட்டவர் மனங்களைக் குளிர்ச்செய்து, உலகம்யாவையும்படைத்தகடவுள் ஒருவரேயென்றும், அவரால் கொடுக்கப்பட்ட வேதமும்ஒன்றேயென்றும், அப்படிப்பட்ட மெய்க்கடவுளை வணங்குவதே கற்றகல்வியால் வரும் பயனென்றும் சொல்லிப் பின்னும் புறத்தியாரையுந் தங்களைப்போல நேசிக்கவேண்டுமென்றும், தங்களுக்குத் தீ

முடங்கினவர்களைக் கோபிக்கவேண்டியவேளையிலும் கோபியாமல் கோபத்தையடக்கவேண்டுமென்றும், நிலைகெட்டவர்களை மீளவும் அந்நிலையில் நிறுத்தவேண்டுமென்றும் இவை முதலாகிய நல்லொழுக்கத் தருமங்களையுபதேசித்துவரும் பொழுதில் அந்த நாடுநகரங்களிலுள்ளோரெல்லாம் தேனிறைந்தமலரில் வண்டுகள்மொய்ப்பதுபோல இந்தமாதவமுனிவரைச் சூழ்ந்துமொய்த்திருந்ததால் அவர்களில் அநேகர் மயக்கமெல்லாம் நீங்க மெய்ந்நிலையடைந்தார்கள். இது இப்படியிருக்க ஒருநாள் சில தனவந்தர்களெல்லாம் ஒருங்குகூடி மாதவத்திற் சிறந்த ஐயனே! தருமத்தினுள்வரும் பலனைக்குறித்து எங்களுக்குக்கொஞ்சஞ்சொல்லவேண்டுமென்று மிகுந்த வணக்கத்துடன் கேட்க அதற்குத் தபோநிதியாகிய *ஞானசமாமுநிகள் உலகசம்பத்தெல்லாம் புகையைப்போலவும், நீர்க்குமிழி போலவும் அழியும். கொடையினுள்வருந் தருமப்பயன் ஒருநாளுமழியாது. ஆகலால் அதைச் சொல்லுகின்றேன் கருத்தாகக் கேளுங்களென்று அவர் மீளவுஞ் சொல்லத் தொடங்கினார்.

அதெப்படியென்றால் அநேக பொய்வழிகளுள்ள கானகத்தில் ஒரு மெய்வழிகண்டுபிடித்துச் செல்வது அருமையானதுபோலத் தருமத்தின்வழியைக்கண்டுபிடிப்பதும் அருமையாகும். ஆதலால் கொடுக்குந் தானதருமப்பயனைச்சொல்லுவதற்கு முந்தி அதற்குரிய முறைமைகளைச் சொல்லுகிறேன். அதாவது: மேகமானது கொடியவிடிகளை யிடித்து இருண்டுமுழங்குவதாயினும் மழையைப்பொழியுங் குணத்தினால் அதையாவருந் துதிப்பார். அதுபோல ஒருவன்பாவநிறைந்தவனாயினும் குறையாமல் கொடுக்குந்தொழிலினால் அவனை யாவரும் புகழ்வது உலகவழக்கமே. அப்படிப் புகழ்ந்தாலும் நஞ்சு அமுதமாகாததுபோல் பாவியானவன் தான்செய்யுந்தருமத்தினால் புனிதனாகமாட்டான். அவன் தருமமும், புகழும் பயன்படாது. பின்னும் அறிவில்லாத கெட்டமக்கள் தமதுகைப்பொருளைக்கொடுத்துப்பயனில்லாதபுகழையடைவார்கள். அப்படியல்லாமல் ஒருவன் தருமத்தின் பயனை அடையவிரும்பினால் பிறர்தன்னைப் புகழ்வதற்கு அஞ்சவேண்டும். மேலுந்திரண்ட பொருள்களைக்கள்ளருக்கு ஒளித்திருப்பது போலத் தருமங்கொடுப்பவன் பிறரறியாமல் கொடுத்தல்வேண்டும். அப்படிக் கொடுத்தாலும் திரவியமுள்ளாருக்குக் கொடாமல் தரித்திரர்க்கே கொடுக்க வேண்டும். ஏனெனில் தாழ்ந்த நீர்நிலையிலோடி வயல்களிற் பாயாமல்கடலில் விழுகின்ற நதியைப்போலத் திரவியமுடையாருக்குக் கொடுக்குந்தருமம் பயனற்றதாகும். நீரில்லாமல் வாடியபயிர்களுக்குமழைபெய்ததுபோலப் பொருளில்லாத ஏழைகளுக்குச்செய்யும் தருமம் மாட்சிமைப் பட்டதாகும். இப்படித் தருமஞ்செய்தோனாகிய ஒருவன் அதற்குக் கைம்மாறாக வான்வீட்டுச்செல்வத்தை யடைவதற்குமுன் கடவுளவனுக்கு இப்பூவுலகத்திலேயேகடத்திய பிரதியுபகாரத்தைச்சொல்லுகின்றேன். இனி நீங்களுமப்படியே வெளிப்புகழைவிரும்பாமல் தருமஞ் செய்யுங்களென்று பூங்கொடியுயர்த்திய ஞானசமாமுநிகள் மீளவுஞ் சொல்லத்தொடங்கினார்.

அதெப்படியென்றால் நீர்வளம், நெல்வளம் நிறைந்த வயல்களாலும், நிழல்வளம் நிறைந்த பூஞ்சோலைகளாலும் சூழப்பட்டு நல்ல செல்வங்களுந், தருமங்களுங்குடிகொண்டிருக்கும் கலிலேயநாட்டில்எல்லா அழகுகளையும்ஒருமிக்கச்சேர்த்துக் கட்டிய கொடிகள்வரிசையாய் நின்றசைகின்ற பொன்மதில்சூழ்ந்த உப்பரிகைகளிருக்கும் நெற்றனியாபுரமென்னும் ஒரு பட்டணமுண்டு. அந்தப் பட்டணத்தில் பொருட்செல்வத்திலும், அருட்செல்வத்திலுங் குறையாதபேர்பெற்றுவிளங்கிய *பிரோசல் என்பவனொருவன் கற்பின்மலையையொத்த அன்

ஊம் என்னும் மனைவியோடுகூடிச் சகலசற்குணமுநிறைந்த தயோதான் என்னும்
புத்திரனைப்பெற்று, யாதொரு குறையுமில்லாமல் வாழ்ந்திருக்குங்காலத்தில்
இல்லறத் தருமத்தின் கண்ணாடியாகிய தோபியாசனும், அவன்பத்தினியும் கட்
டப்பட்ட பூமாலையைப்போலப் பிரியாமல் ஒருமனப்பட்டு, விளைகளுக்கு இரா
கமும், மேகங்களுக்கு மழையும், கண்களுக்குத் தயையும் அழகுசெய்வதுபோ
லப் பிறர் துன்பத்திற்கு இரங்குதலே யழகென்றுநினைத்து, மேகமும்வெட்கப்
படும்படித் தங்கள் பொருள்களைத் தரித்திரர்க்கு மிகுதியாகக்கொடுத்துச், சில
நாளுக்குப் பின்பு நின்னிவையென்னும் நகரத்திற்குடியேறி அவ்விடத்திலுஞ்ச
லியாமல் இரண்டுகைகளாலும் வாரிக்கொடுத்துத், தருமத்துக்கொரு விளக்கா
கி விளங்குங்காலையில் நெருப்பிலிட்ட பசும்பொன் அதிகமாய் விளங்குவது
போல இவர்கள் தருமமும் விளங்கும்படி ஆண்டவர் இவர்களுக்குத் தரித்திர
த்தை வருத்திவைத்ததுமன்றிப் பிணியினால் தோபியாசி னிரண்டுகண்களுங்
குருடாயின. இப்படிக் கண்களில்லாமல் தரித்திரத்தில் வருந்தினாலும் இரப்
போர்களுக்குக் கூடியபொருளை வழங்கிக் கூடாதகாலத்தில் இனியமொழிகளை
ச்சொல்லித் தேற்றுவார்களாகி யிருந்தார்கள். பின்பு தோபியாசன் இவையா
வும் ஆண்டவன் செயலெனவுணர்ந்து தனக்குத் தன்னூடாகிய கலிலேயா
நாட்டில வரவேண்டிய கடன்பணம் இரண்டுகோடி திரவியத்தையும் வாங்கிவ
ந்து தன் புத்திரனாகிய தயோதானுக்கு விவாகஞ்செய்யவும், அதற்குவேண்
டித் தன் மரபிலுள்ள ஒருபெண்ணைப்பேசவும் ஓர் மனித னகப்படவில்லையே
யென்று வியசனமுற் றிருக்கும்வேளையில் கடவுள்திருவுளத்தால் இரபேயலெ
ன்னும்வானவன் ஓர்மானுவஷியவடிவங்கொண்டுவந்து எதிர்நின்று தோபியாசை
நோக்கி: ஐயா! உமது மகனை யென்னோடு அனுப்பினால் நான்சென்று உமக்கு
வரவேண்டிய கடனையும் வாங்கிக்கொண்டு உங்கள் மரபிலேயே உமது மகனு
க்கு விவாகமுடித்து வருவேனென்றுகூற அதற்குத் தாயுந், தந்தையுஞ் சம்மதி
த்துத் தயோதானை வானவன்பின் மகிழ்ச்சியோடு அனுப்பினார்கள்.

இப்படித் தயோதான் தாய்தந்தைகளைப் பணிந்து விடைபெற்று வான
வன் பின்னாக உயிருமுடலும்போல மகிழ்ந்துசென்று நீண்டபாதைகளைக்கட
ந்து போகும்வழியில் இருகரையும் பெருகிவரும் ஓர் நதியைக்கண்டு அதில்
இறங்கிப், பின்பு அதன் கரையோரத்திலிருக்கும் விருட்சத்தி னிழலில் தங்கியவு
டனே, பாவவினையானது உயிரை விழுங்க வருவதுபோலத் தன்னை விழுங்கு
ம்படி ஓர்பெரிய மீனானது அந்நதியினின்று கோபத்தோடு வருவதைக்கண்
ட தயோதான் பயந்து நடுநடுங்கிக் கூக்குரலிட்டு வானவனை யழைத்தமாத்திர
த்தில் துணையாகவந்த வானவனும் ஓடிவந்து அந்த மச்சத்தைக்கொன்று அம்ம
ச்சத்தின் ஈரலும், பிச்சும் திவ்யமருந்துக் குதவுமென்று தயோதானுக்குச் சொ
ல்லி அதை யெடுத்துக்கொண்டு தாங்கள் குறித்த கலிலேயா நாட்டிற்போய்ச்
சேர்ந்தார்கள். உடனே அங்கிருப்பவர்களெல்லாம் வரையாதுகொடுப்போனு
கிய தோபியாசவள்ளலின் குமாரன் வந்திருக்கிறானென்று உபசாரமொழிகளை
க்கூற, இவர்கள்வரவேண்டிய கடன்பணத்தை வாங்கிக்கொண்டு கலியாண விஷ
யமாக அவ்விடத்தினின்று புறப்பட்டுத், தோபியாசனுடைய வம்மிசத்தார் இரு
க்கும் முகலிமாபுரத்தைச் சேர்ந்தார்கள். அந்த முகலிமாபுரத்தில் சகல தரும
குண சம்பன்னனாகி விளங்கிய இவலனென்பவன் ஒருவன் நெடுநாள தவஞ்செ
ய்து சிறந்த பூங்கொடியைபொத்த சாரியென்னும் ஒரு கன்னிகையைப் பெ
ற்று அந்தப்பெண்ணுக்குத் தனது வம்சத்திலேயே யோக்கியமான புருஷனை
யாகுவர் வாய்க்கவேண்டுமென்று தாயுந், தந்தையும் சுவாமியைப்பார்த்து இடை

விடாமல் பிரார்த்தித்துக்கொண் டிருக்கையில், கருங்குவளை மலரையும் வருத்தஞ்செய்யுங் கண்களையுடைய அந்தப்பெண்ணினழகை விரும்பி மணஞ்செய்யும்படிவந்த ஏழு குமாரர்களையும் அவ்விடத்துள்ள சில பசாசுக்கள் கொன்றவிட்டபடியால் பூமாலை மணநாறுங் கூந்தலையுடைய அந்தப்பெண்ணும்; அவளை அருமையாகப்பெற்று வளர்த்த தாய், தந்தையரும் உள்ளநடுங்கிக்கொண்டு ஆயரமாருமல இது திருவுளச்செயலென்று யோசித்திருக்கும்போது தயோதானை வானவன் அழைத்துக்கொண்டு நிவலன்வீட்டிற்சேர்ந்து நிவலனைநோக்கி: ஐயா! இவன் உமக்கு உறவின்முறையாகிய உயர்ந்தகுலத்திற் பிறந்த தோபீயாசன் குமாரன். இவன் பெயர் தயோதான். இவனுக்கு உமது ஏக புத்திரியை மணஞ்செய்விக்கும்படிவந்தேன். உமது சம்மதியென்னவென்று முறையோடு கேட்கையில், அதற்கு நிவலன் நீர் சொல்வதெல்லாம் மெய்யே. அப்படியே நானுஞ் சம்மதிக்கிறேனென்று முன்புகூறிப், பின்புபெண்ணைக் கலியாணஞ்செய்யவந்தவர்களின் விர்த்தாந்தத்தையும் விரிவாயெடுத்துக் காட்டினன். அதுகேட்ட வானவன் புன்னகை நகைத்து, அந்தப் பசாசுக்களுக்கு நீரஞ்சவேண்டாம், அவைகளை நானே முன்னின்று தடுத்துவெல்லுவேன்; நீர் மணத்தை நிறைவேற்ற வேண்டுமென்றுசொல்ல உடனே புருஷனுக்கும், பெண்ணுக்கும் மணக்கோலமிட்டுச் செய்யவேண்டிய முறைகளெல்லாஞ்செய்து சூரியனுஞ், சந்திரனும் ஒருமெல்லணைமேற் சேர்ந்திருப்பதுபோல இவர்களை ஓர் இரத்தினாசனத்திலிருக்கச்செய்த பின்பு, தோழனாகவந்த வானவன் முன் கொண்டுவந்த மச்சத்தினீரலை நெருப்பிலிட்டுப் புகையெழுப்பி அப்புகையை மணவாளனறிந்து காட்டினமாத்திரத்தில் அங்கிருந்த பசாசுக்களெல்லாம் பயந்து நடுங்கி ஓடிப்போக அதைக்கண்டு யாவரு மகிழ்ந்து அலங்காரத்தோடு கலியாணத்தை முடித்தார்கள். இப்படி மணமுடித்தபின்பு தயோதான் சிலநாளவ்விடத்திலே யிருந்து தன்னூருக்குப் போகும்படி மாமனாகிய நிவலனைவிடைகேட்க, நிவலன் மனமகிழ்ந்து மகளையும், மருமகனையுமழைத்து உங்களிடத்தில் கறவைப்பசுவைப்பார்க்கிலும் மிகுந்த தயையும், பறவையுமுகனிழலும்போலப் பிரியாதநேசமும் வளரக்கடவது. நீங்கள் பந்துக்களை மறந்தாலும் இரவலரை மறவாமல் அவர்களுக்கு வேண்டியதைக் கொடுக்கக்கடவீர், என்று இன்னுஞ் சில புத்திமதிகளைச்சொல்லி ஆசீர்வதித்துப் பெண்ணுக்குச் சீதனமாக யானை, குதிரை, தேர், காலாட்படை, குடை, கொடி, கன்றுகையோடு அளவிறந்த திரவியமுங்கொடுத்து விடைதந்து தனது உறவினரோடு கொஞ்சதூரம்வந்து வழிவிட்டு வீட்டுக்குத்திரும்பியபிறகு தயோதான் தன் மனைவியாகிய சாரமியோடும், வானவனோடும் தன்னூரம்வந்து சேர்ந்தான்.

இப்படித் தயோதான் மீண்டுவந்து சேருமுன் அவனைப்பெற்ற மாதாவாகிய அன்னமென்பவள் பேதமை புத்தியால் தன் புருஷனாகிய தோபியாசை நோக்கி: ஐயா! நமது புத்திரன் நினிவை நகரத்துக்குச் சென்று நெடுநாளாயிற்று, நாம் பொருளிழந்து தரித்திரரானதும் போதாமல் பிள்ளையையு மிழந்து தனியானேனும்; நீருங் கண்ணிழந்து குருடனானீர்; இதுதானோ யாசகருக்குக் கொடுத்த தருமத்தின்பலன் என்றனள். அதற்குத் தோபியாஸ் பெண்கள் புத்திபேதமையாதலால் இப்படித் தருமத்தை நிந்தித்தாய். இனித் தயையில்லாத சொல்லைச் சொல்லாதே நான் சொல்வதைக் கேள்: இவ்வுலகத்தில் பாவமல்லாமல் மற்றத்துன்பங்கள் பொல்லாங்கலவாகும். நல்ல தருமமொன்றே நன்மையாகும். உடம்பை வருத்திச் சாவதும், துன்பத்தால் மயங்கியழுவது மெளிதான காரியம். துன்பம் வந்தபோதெல்லாம் திருவுளச் செயலென்றிருப்பதே உத்த

ற் காய்க்க இரும்பைப் பதம்பார்த்தெடுத்துக் கருமான் உப
த் தமையுள்ள கடவுள் நம்மையுந் துன்பத்திற் பதஞ்செய்திருந்
ற்றுவாரென்று தன் மனைவியோடு பேசிக்கொண்டிருக்கை
ச் சீக்கிரத்தி லோடிவந்து உன்னுடைய புத்திரனாகிய தபோதான்
கிவரு ஆடம்பரத்தோடு வருகிறானென்று சொன்னாள்.

தொபியாசும், அவன் மனைவியும் மிகுந்த சந்தோஷத்தோடே
ர்க்கும்போது தபோதான் தன் மனைவியாரோடும்,
ற்நின்று தகப்பன் பாதங்களில் விழுந்து கண்ணீ
ந்தையாகிய தொபியாஸ் வணங்கிய மகனையெடுத்து
ணைக்கித் ஐயோ! மகனே! அழும்படி உன்னுடைய
கண்ணில்லாதவனானேனென்று சொல்லித் தங்கி
ற வானவனையுந் தழுவிக்கொண்டழுதான். பின்பு
க்கி: ஐயா! உமது கண்ணோயை நானே தீர்க்கிறே
ன் கொண்டுவந்த மீன்வயிற்றுப் பித்தையெடுத்துக்
னைத்துங் கண்ணின்மேற் பூசியவுடன் மீனிலிருந்து அதன் செதும்புகள் விழு
வதுபோலக் கண்ணினின்று இரண்டு பில்லைகள் கீழேவிழுந்து கண்கள் வெளிச்
சமாகத் தொபியாஸ் வயிரமலையையொத்த தன்மகனையும், மாணிக்கம்போல்மினு
ங்கு மருமகளையும், சதுரங்கசேனைமுதலிய மற்றத் திரவியங்களையுங்கண்டு மகி
ழ்ந்து இது கடவுளின் செயலென்று கடவுளை வணங்கிப், பின்பு தேவதூதனையும்
வணங்கி அப்பால் தன் புத்திரனாலே நினிவைமாபுரத்தில் நடந்த விசேஷங்க
ளெல்லாங் கேட்டுக்களித்து, மகனைத் தனிமையாயோரிடத்தி லழைத்துப்போய்
என்னருமை மகனே! இவ்வளவு பேருதவிசெய்த தோழனுக்கு என்ன பிரதி
யுபகாரஞ் செய்யவேண்டுமென்று கேட்க, அதற்குத் தபோதான் ஐயா! என்
னைக் கொல்லவந்த கொடிய மீனையுங் கொன்று, வரவேண்டிய கடனையும் வாங்கி,
என் மாமனார் மனையிலுள்ள பேய்களையு மோட்டி, எனக்கு மணமுமுடித்து, அள
வில்லாத செல்வங்களையும் நமக்கு வருந்துவித்து, உமக்குக் குருட்டுத்தன்மை
யை நீக்கி இரு கண்களையுந்தந்த தோழனுக்குச்செய்யுங் கைம்மாறு முண்டோ!
ஆயினும் நமக்குள்ள செல்வத்தில் பாதி பகுத்து அவனுக்குக் கொடுக்கவேண்
டுமென்றான். மகன் சொன்னதைக்கேட்ட தொபியாசும் அதற்கிசைந்து தோ
ழனாவந்த வானவனின் கையைப்பிடித்துக்கொண்டு ஐயா! நான் சொல்ல வாயி
லாதபடிக்கு நீர் செய்த உதவிக்குப் பதிலுதவி நானென்ன செய்யப்போகி
றேன்? நானிந்த நன்றியை மறியத்தக்கவனோ? இல்லை. பின்னும் உமது புக
ழைப் பூவுலகில் பரம்பச்செய்ததல்லாமல் வானுலகத்திலும் செல்வம் விளைவித்
தீர். ஆனாலும் உமது அடியேன் கோரிக்கைப்படி நீர் கொண்டுவந்த திரவியங்க
ளில் பாதியை யெடுத்துக்கொள்ளவேண்டுமென்று வணங்கியபோது வானவன்
புன்னகைகொண்டு சொல்லுவான்: கொடையில் மிகுந்த வள்ளலே! இவ்விடத்தி
லிங்களுக்கு உருவோடு காணப்பட்ட நான் உருவமில்லாத இரபேலென்னும்
வானவனாகும்; நீர் யாசிப்போருடைய கைகளாகிய வயலில் பொருளை விதைத்
தமையால் அதன் விளைவின் பயனாக செல்வத்தையும், புகழையும் அடையும்படி
ஆண்டவரா லனுப்பப்பட்டு வந்தேன்; பொன்னானது சுடச்சுட விளங்குவது
போலச் சிறிதுநாள் தரித்திரத்தில் வருந்திப் பிற்காலத்தாரும்புகழும்படி நீரிச்
தச் செல்வங்களை யடைந்தீர்; சோலைநிழலைத் தருவதுபோல ஒருவன் கொ
டுத்த பொருளாகிய விதை எப்போதும் அழியாமல் விளையும். ஆதலால் நன்மை
தீமையும் பகுத்துக்கொடுக்கும் ஆண்டவனுக்குக் கீழ்ப்படிந்திருங்களென்று

சொல்லி யாசீர்வதித்து மின்னலைப்போல மறைந்துபோயினன். தன்னைத் தாயு,மகனுஞ் சாஷ்டாங்கமாக விழுந்து தேவதிருவுளத்தை, த்திம் வந்தபோது தாழாமலும், செல்வம்வந்தபோது ஆங்காரி த்தையும் பழித்து இவர்க்குக்கொடுத்து இனிது வாழ்ந்திருந் தனர்? கொடையினால்வரும் பயனேயென்று ஞானசமாமுனிகள் செ ந்த யாவரும் அதுமுதல் மடைதிறந்தாற்போல இரப்பவர்க்கு [illegible]ட்டார்கள்.

இப்படிச் ஞானசமாமுனிகள் சொல்லச் சூழ்ந்திருந்த சை வகனென்பவனொருவன் அக்கப்பாளைக்குக் கோலை மும், மார்பிலக்குமணிமாலையும், தலையில் கொக்கின வேடக்காட்டி யுள்ளத்தில் ஒழுக்கமில்லாதவனும் எ ப்பர் சொன்னதற்கு ஒப்பச்சொல்பவனைப்போலச் சொல்லு லைப் படித்தபோது அதனுடன் கூடவருவதுபோல இப்பிறப்பி கொடுத்தநம்மை மறுபிறப்பிலு மழியாமல் தொடர்ந்துவந்து அவனு னைத்தருவது ஞாயந்தானேஎன்றான். அதற்கு ஞானசமாமுனிகள் அவனறியாமை யையறிந்து மலர்ந்த முகத்தோடு சொல்லுவார்: வீண்கதைகளை வேதமாகச் சொல்லலாமோ? பிறந்த ஒவ்வொருவனும் இறப்பது மெய்யே. ஆனாலும் அந்த உயிர் மற்றொரு உடம்பிற்புகுந்து மறுஜனன மெடுத்துவருவது பொய்யே. அப்படி மறுஜனன முண்டானால் பூர்வ ஜன்மத்தில் நடந்தகாரியம் மறுஜனனத்தில் யாவருக்காகிலுந் தெரியுமா? தெரியாதே யென்றார். அதற்கு அச்சைவன் கோபித்துப் பிறந்த யாவரும் மறுபடி பிறவாமல் இறந்துவிட்டால் அவர்கள் செய்த பாவங்களொழிவ தெப்படி? யென்றான். அதற்கு மெய்ம்மொழிகளின் இருள்விளக்காகிய ஞானசமாமுனிகள் வேதநூற்பயன்படி சொல்லுவார்: முதிர்ந்த பெரும்பாவத்தோடு இறந்தவர்களினுயிர்கள் முடியாத நரகாக்கினியில நீங்காத விலங்கிடப்பட்டுத் தீராகிய சிறைச்சாலையில் வருந்தும். நலத்தினும் பாவங்கள் முற்று மறுத்துப் புண்ணியராக இறந்தவர்களினுயிர்கள் எக்காலத்தும் கடவுளை முகமுகமாய்த் தரிசித்து, மிகுந்த அருளைக்கொண்டு வானவீட்டில் ஒழியாத பேரின்பத்துடனே வாழ்ந்திருக்கும். முழுதும் நல்லவரும், முழுதுந் தீயவருமல்லாமல் நடுவாயிருந்து இறந்தவரினுயிர்களோவென்றால் கலப்புள்ள பொன்னானது உலைக்களத்திலிட்டுக் களங்கமில்லாத தங்கமாகி யாவருக்கும் ஆபரணமாவதுபோல அவனவன்செய்த அற்பப்பாவங்களுக்குத் தகுதியாகக்குறித்த கோமட்டுக் குறித்த அக்கினியோடு உத்தரிப்பு ஸ்தலமாகிய ஒப்பனைத்தி யுலகத்தில் அக்கினியில் வெந்து பரிசுத்தமாகிக் கடவுளின் மார்பணியாக நித்தியமோக்ஷத்தில் வாழ்ந்திருக்கும். பின்னும் உத்தரிப்பு ஸ்தலத்திலிருக்கும் உயிர்களைக்குறித்து நாம் செய்யும் திவசமுதலாகிய பல தருமங்களால் அவ்வுயிர்கள் வேதனை குறைந்து பாமகதியை யடையும். அல்லாமல் மோக்ஷத்திலும், நரகத்திலுமிருக்கு முயிர்களுக்கு முடிவுகாலம் இல்லை என்று *எழுபத்திரண்டு வேதாகமங்களிலும் விளக்கியிருக்கின்றன: ஆதலால் இறந்த வுயிர்கள் மறுவுடலில் புகுந்து பிறப்பதென்பது இரவிற்கண்ட கனவை யொக்குமென்றார்.

---

* எழுபத்திரண்டு வேதாகமமாவன: மோயீசனாகமம்—5. சோசுவனாகமம்—1. நீதியாகமம்—1. இருத்தாகமம்—1. அரசராகமம்—4. நாளாகமம்—2. எஸ்திராகமம்—2. தொபீயாஸ் ஆகமம்—1. சுதித்தாகமம்—1. எஸ்தேராகமம்—1. சோபாகமம்—1. கீதவாகமம்—1. சாலமோனாகமம்—3. ஞானகமம்—1. சழுதீராகமம்—1. புரோகிதராகமம்.-17. மக்கபேயராகமம்—2. சுவிசேஷாகமம்—4. அப்போஸ்தலாகமம்—1. பத்திராகமம் 21. காணத்தாகமம்—1.

இப்படிச் ஞானசமாமுனிகள் சொன்னதைக்கேட்ட சிவாசிவன் சொல்லு
வான்: நூல்களிலும் தெளிந்த அறிவுள்ள முனிவரே! நீர் சொல்லியது மெய்
தான். ஆனாலும் மறுபிறப்பில்லையென்றால் சிலர்கூன், குருடுமுதலிய அங்கவீன
ங்களோடும், சிலர் சிறந்த அழகோடும், சிலர் செல்வத்தோடும், சிலர் வறுமை
யோடும் பிறப்பதெப்படி? முற்பிறப்பிற்செய்த பாவபுண்ணியந்தானே யிதற்
குக் காரணமாக வேணுமென்றான். அதற்குச் ஞானசமாமுனிகள் மிகுந்த அன்
போடு சொல்லுவார்: எக்காலத்திலுமுள்ள கடவுளொருவருக்குமாத்திரந் துவ
க்கமும், முடிவுமில்லை; வானவர்க்கும், மக்களுக்குந் துவக்கமாத்திரமுண்டு, முடி
வில்லை. வான்வீட்டறிவில்லாத மிருகமுதலிய உயிர்களுக்குத் துவக்கமு முடி
வுமாகிய இரண்டு முண்டு, என்பது வேதத்திற் கூறப்பட்டது. ஆகலால் மனி
தர் பாவங்களைச் செய்யுமுன்னம் ஆதியில் படைப்புண்டபோது அவர்களுயிர்
முதலுடலிற் புகுந்ததெப்படி? அப்படி எல்லாமனிதரு முடலோடு தோன்றி
னபோதே துன்பநீங்கிச் செல்வத்தோடு அரசராயிருந்தாரோ? அப்படியில்லா
திருக்க நானாவிதமாய் மக்கள் பிறப்பது கடவுளுடைய நீதியேயாகும். அது
கடவுளினுடைய நீதியென்றால் இப்பொழுதும் நானாவிதமாய்வந்து பிறப்ப
தும் அந்த நீதியேயாகுமல்லவோ? வென்றார். அதற்குச் சிவாசிவன் சொல்லு
வான்: முற்பிறப்பிற்செய்த பாவபுண்ணியத்துக்குத் தக்காப்போல ஆண்டவ
னவனவன்தலையி லெழுதியவிதியே எல்லாத்திற்குங் காரணமாயிற்றென்றான்.
அதற்குச் ஞானசமாமுனிகள் நீதியும், அன்புமுள்ள கடவுள் ஒருவன் செல்வத்
தையும், மற்றொருவன் வறுமையையும் அனுபவிக்கத்தலைவிதி யெழுதுவது
நியாயமும், இரக்கமுமாமோ? வென்றார். அதற்குச் சிவாசிவன் கடவுள் திருவு
ளமே தலைவிதியின் வேறுபாட்டிற்குக் காரணமென்றான். அதற்குச் ஞானசமா
முனிகள் அந்தத் திருவுளமே யிப்பொழுது தோன்றும் செல்வத்திற்கும், வறு
மைக்கும் காரணமென்றால் குறையுண்டோ? வென்றார். அதற்குச் சிவாசிவன்
மாறுத்தரஞ்சொல்ல வகையறியாமல் மயங்கித் தத்தளிக்கும்போது மலர்க்
கொடி யுயர்த்திய ஞானசமாதவன் அவனைநோக்கி அவன் அகவிருள்நீங்க வேத
விளக்கேற்றிப் பின்னுஞ் சொல்லுவார்: ஓ, சிவாசிவனே! இந்தப் பூமண்டலத்
தில் செல்வரும், தரித்திரரும் கலந்து இருப்பதால் உனக்கு இந்த மயக்கம் நேர்
ந்தது; அது நீங்கும்படி நான் சொல்வதைக்கேள்: மெஞ்ஞான சொரூபியாகிய
கடவுள் கானகத்திற்பெய்து பயன்படாத மழையைப்போலப் பாவிகளிடத்தி
லும் அழிவுள்ள பொருட்செல்வத்தைத் தருவார். அருட்செல்வத்தையோ
வென்றால் அவனவன் ஆசைக்களவாக அதைக்கொண்டு உயரும்படி எல்லாருக்
கும் வல்லமையைத் தருவார். ஆகலால் மயக்கந்தரும் பொருட்செல்வத்தை
முற்பிறப்பிற்செய்த தருமப்பயனென்று சொல்லலாமா? மேலும் பெய்தமழை
யெல்லாம் ஒரேவகை நிலத்திற் சேருமோ! மரங்களுக்கெல்லாம் ஒரேவகைக்
கனியோ? நிலங்களுக்கெல்லாம் ஒரேவகை விளைவோ? நமக்கெல்லாம் ஒரேவ
கை முகமோ? இவற்றைப்போல சகலமும் வெவ்வேறாக எப்படித் தோன்று
மோ அப்படியே மனிதரெல்லாரும் தம்முள் வேறுபடும் நிலையுடையவராவார்.
நல்ல தருமமோ எல்லா நிலைக்கும், எந்தக் குலத்திற்கும் மெலியாத செல்வமாக
ப்பொதுவாயிருக்கும். ஆதலால் பெரியோர் தருமத்தைமாத்திரம் விரும்பி மற்ற
வற்றை ஒன்றும் நினையார். இதுவுமல்லாமல் வறியருஞ், செல்வருங் கலந்திருப்
பதே யுலகத்திற்கு நன்மையாம். ஏனெனில் செல்வருடைய கைப்பொருள்
எளியவருக்கு வேண்டியிருக்கின்றது. எளியவருடைய கைத்தொழில் செல்
வர்க்கு வேண்டியிருக்கின்றது. எல்லாருஞ் செல்வராயிருந்தால் உலகவியாபா
ரம் நடப்பதெங்ஙனம்? ஆகலால் செல்வமும், வறுமையும் ஒருபடித்தாகவே யிரு

க்கு மனிதரைச் சூழுவுகின்ற இராசன் கைபோலுமாகும். பின்னும் தருமாற ஊடேயோரெல்லாம் செல்வராகவும், பாவிகளெல்லாம் தரித்திரராகவும் இராதது என்னகாரணமென்றால், பஞ்சு போட்டாற்போல நல்லவர்கள் வாழ்ந்தும், பாவிகள் தாழ்ந்தும் இருந்தால் இதுதான் நல்வினை தீவினைக்கேற்ற பலனென்று மனிதர் மயங்கிப் பின்வரும் மோக்ஷ நரகபலனை நினைக்கமாட்டார்கள். மேலும் இவ்வாழ்வுகளெல்லாம் நிலையில்லாதனவாகி நாம் பிறக்கும்பொழுது ஒன்றுங் கொண்டுவாராதவர்களாகி யிருக்கக், கடைசியில் நாம்செய்த புண்ணியப்பயனுக்கேற்ப மோக்ஷசம்பாவனை கிடைப்பதே அழியாத செல்வமாகும் என்றார்.

பின்னுஞ் சூசைமாதவன் சொல்வதற்குமுன்னம் சிவாசிவன் பலமுறையும் தலைவிதி யுண்டென்று ஆக்ஷேபித்ததினால் அந்த ஆக்ஷேபணையைப் பொறுக்கமாட்டாமல் தூமாவென்பவ னெழுந்து நானொரு உபாயத்தினால் தலைவிதியைத் தீர்த்துப்போடுவேனென்றுசொல்லிச் சிவாசிவனைப் பிடித்து, அடா பாவி! அடிக்கப்படாத தலைவிதி யுண்டென்றாயே அப்படியே யிதுவோர் பெரிய தலைவிதியென்று காலோடுகைத்துப் புரட்டிப்புரட்டி அடித்தபாத்திரத்தில் சிவாசிவன் மிகவுங் கூவென்றழ அதற்கு தூமாவென்பவன் அடா! நீயழாதே இது நான் பகையினால் செய்யுந் தொழிலல்ல; உன் தலைவிதிப்பயனே யிதுவென்று மிகவும் புரட்டிப்புரட்டி யுதைக்கக் கூட்டமாக நின்றவர்களெல்லாம் பெருநகைகொண்டு சிரித்துத் தலைவிதி யென்பதொன்றில்லை எல்லாங் கடவுள் செயலேயென்று சம்மதித்தார்கள். உடனே யுதைபுண்ட சிவாசிவனெழுந்து ஒரு புன்னகைகாட்டி இந்தத் தலைவிதி மிகவுங் கொடியது, சற்றுநேரத்துக்குள் ளென்னைக் கொல்ல நினைத்தது என்று கூறிப் பின்பு சூசைமாமுநிவரை நோக்கிப் புகழ்கடந்த அறிவையுடைய ஐயா! கற்றோரெல்லாம் ஊழ்வினைப்பயனுண்டென்று சொல்லுவதினால் தலைவிதியை மறுக்கலாமோ? ஆதலால் இந்தச் சந்தேகத்தை மாத்திரம் நிவர்த்திசெய்யவேண்டுமென்று சொன்னான். அதற்குச் சூசைமுநிவர் சொல்லுவார்; கற்றுணர்ந்தவர்கள் ஊழ்வினை உண்டென்று சொன்னாலும் அது நீ சொன்ன தலைவிதியின்பயனல்ல, அப்படித் தலைவிதி யுண்டானால் ஒருவன்செய்யும் புண்ணியபாவங்கள் தலைவிதியினுடைய புண்ணியபாவங்களல்லாமல் மனிதர்கள் மனதுபொருந்திச் செய்யும் புண்ணியபாவங்க ளொன்றில்லாமற் போகும். ஆகலால் மெய்யான வேதநூலின்படி சொல்லிக் காட்டுகிறேனென்று பின்வருஞ் சொல்லத் தொடங்கினார். அதெப்படியென்றால்: கடவுள் உலகம் யாவையும் படைத்தநாளில் ஒளி குன்றாத இரத்தினங்களைப்போல ஒரு புருஷனையும், ஒரு ஸ்திரீயையுமுண்டாக்கி அவ்விருவரையும் ஓர் இரத்தினமாலைபோலக் கலியாணமாகச்சேர்த்து மிகுந்த வளமுள்ள ஓர் சிங்காரவனத்தி லிருத்தி அவர்கள் தங்களைப்படைத்த ஆண்டவ ரொருவருண்டென்று அறிந்து வணங்கி வாழும்படி, ஆஞ்ஞாபித்து அரசனிடுங் கட்டளையைப்போல இப்பூங்காவனத்திலுள்ள விருக்ஷங்களின் கனிகளையெல்லாம் புசித்து, விலக்கிய ஒரு மரத்தின் கனியைமாத்திரம் புசியாதிருக்கக் கட்டளையிட்டுப் பின்னும் கட்டளைபோல நடந்தீரானால் நீங்களும், உங்கள் மக்களுஞ் சகல செல்வத்தோடு வாழ்ந்திருப்பீர்; தவறிநடந்தால் துன்பமும், நோயும், சாவுமடைந்து இச்சோலையை விட்டகன்று போவீரென்றார். இதைக்கேட்ட ஆதித்தாய் தந்தையும் கடவுளிட்ட கட்டளைப்படி நடந்துவருகையில் ஒருநாள் வானவனாகப் படைக்கப்பட்டு ஆங்காரத்தால் மோக்ஷத்தன்மையை யிழந்த பசாசு பொறாமைகொண்டு மனிதர்களை வஞ்சிக்க எண்ணி, ஒரு படமெடுத்த பாம்பினுரு வெடுத்துவந்து அம்மரத்திலிருந்துகொண்டு, கணவனை நீங்கித் தனித்து அம்மரத்தண்டைவந்த ஆதித்தாயை நோக்கி:

மாணிக்கம்போல வடிவழகுள்ள பெண்ணே! நீயெல்லாக் கனியையும் பறித்துப்
புசித்து இம்மரக்கனியைமாத்திரம் புசியாதிருப்பதற்குக் காரணமென்னவென்
றினவ, அதற்கு ஆதித்தாய் எனைப்படைத்த பிதாவாகிய கடவுள் இம்மரக்
கனியையாத்திரம் தின்னுதிருக்கக் கட்டளையிட்டு, மீறித் தின்றால் சாவீரென்று
திருவுளம்பற்றினு ரென்றாள். அதற்குப் பசாசு புத்தியில்லாதவளே! நேத்திர
மேதாரமும், அழகுமுள்ள இப்பழத்தைத் தின்றுபார், சகல்வரங்களையு மடைந்து
தேவனைப்போ லாவாயென்றான். இதைக்கேட்ட ஆதித்தாய் முன்பு அந்தக்கனி
யைப்பார்த்து அதனாலுண்டாகிய விருப்பத்தால் மதிமயங்கி, யொருகனியைப்
பறித்துப் புசித்தாள்; புசித்தபின்பு சாவு வரவில்லையேயென்று தனக்குள்ளே
யெண்ணிக்கொண்டு கனியின் மதுரத்தால் மற்றொரு கனியையும் பறித்து
அதைத் தன்கணவனுக்குக் கொண்டுபோய்க் கொடுத்தாள். இதைக்கண்ட ஆதி
த்தகப்பன் பயந்திருந்தாலுந் தன் துணைவியின் குளிர்ந்த முகத்தைப்பார்த்து
வேண்டாமென்று சொல்லாமல் ஏக்கங்கொண்டிருக்கையில், இதையறிந்த பசாசு
நீ யிக்கனியை யுண்ணாதிருந்தால் உன்தேவி யிறந்து நீ தனித்திருக்க வேண்டு
மென்றான். அதற்கு ஆதித்தகப்பன் ஒரு பெண்மேல்கொண்ட விருப்பத்தால்
உலகமெல்லாங் கெடும்படி யக்கனியை விழுங்கினான் என்றார்.

இவற்றைக் கேட்டிருந்த யாவரும் பூங்கொடியையும், இரத்தினமாலையையும்
ஒத்த பெண்களுக்குமுன் மயங்காதவர் யாவரென்று நிடுகவிட்டு நிற்கும்போது
அக்கூட்டத்திலிருந்த விகாரனென்பவ னொருவனெழுந்து மாதவமுனிவரை நோ
க்கி: ஐயா! நீர் சொல்லிய ஆதிமனிதர் விலக்கின கனியையுண்டு கெடுவாரென்று
ஆண்டவரறிந்திருந்தும் இப்படிக் கற்பனை யிடுவானேனென்று கேட்டான்; அத
ற்கு முன்கலைவிதியால் உதைபட்ட சிவாசிவன் எழுந்து கலகலவென்று
சிரித்து விகாரனென்பவனைப் பார்த்து ஞாயஞ் சொல்லுகிறான்: பொருத்தமற்ற
சொல்லைச்சொல்கின்ற விகாரனென்பவனே! அரசன் தான்வைத்த மரக்கனியை
யாவரும் பறித்துண்பாரென் றறிந்திருந்தாலும் அதை யாரும் பறிக்கப்போகா
தென்பதும், பறித்தவர்களைத் தண்டிப்பேனென்பதும் குற்றமாமோ? என்றான்.
பின்னுங் குசைமாதவரெழுந்து சொல்லுவார்: அப்படி ஆதித்தாய்தந்தையரிரு
வரும் கனியாகிய நஞ்சையுண்டதனால் மோக்ஷத்தையும், தமது வாழ்க்கையிழ
ந்து பூஞ்சோலையினின்றுந் துரத்தப்பட்டு மனம் வருந்தியிருக்கையில், அப்
பொழுது அழும்படிக்குப் பலவகை நஞ்சும், தரித்திரமும், பிணியும், நோயும்,
மரணமும், காட்டின முள்ளும், கொல்லு மிருகங்களும், மண்ணுலகினமேல் பூமண்
டலமெங்கும் பரம்பின. இதுவல்லாமல் வாயாலுண்ட விஷம் மற்ற அவயவமெல்
லாம் பரவினாற்போல ஆதித்தாய்தந்தையர் செய்ததீவினை அவர்கள் மக்களாகிய
நம்மிடமெல்லாம் பரவியதினால் நாம் ஜென்மப்பாவத்தோடு ஜெனித்து அறிவில்
லாமல் [illegible]ய்களைப் பாலகவுண்டு துன்பத்தின்கையிற் பட்டுத வருந்துகின்
றோம். ஆதலால் ஆதித்தாய் தந்தையரைப் படைத்தகாலம் எல்லாமனிதர்க்கு
முற்பிறப்பாகையால் அதைத்தான் பெரியவர்கள் முற்பிறப்பென்றார். பின்னும்
அவர்கள் வழியாய்நமக்குவந்த தீவினை பழையவினையாகையால் அதை ஊழ்வினை
யென்றார்களே யல்லாமல் வேறே பிறந்து பிறந்திறப்பதும், ஊழ்வினையும், தலைவி
தியுமில்லையென்றார். இதைக்கேட்ட சிவாசிவன் சூரியன்முன் விளங்கும் விடியற்
காலத்தைப்போல மனமயக்கமெல்லாந் தெளிந்து குசைமாமுனிகளை நோக்கி:
கவி, கமகன், வாதி, வாக்கியென்னும் நால்வகைப் புலமையிலுஞ் சிறந்த அறிவு
டைய ஐயனே! நீரே என்மன அழுக்கைக் கழுவித்துடைத்துத் தயைபுரிந்திர
க்ஷித்தீர். பெரியோர் சொல்லிய உண்மைப்பொருளை யறியாம லிதுவரையிலும்

தவசிகேட்கத் தீவினை இருப்பாரென வகையைச்சொல்லுமென்றுகேட்க, மீளவும் அந்நாள் ஞானம் நிறைந்த குன்மொழுநிகள் சொல்லுவார்: முன் சொன்னதுபோல வந்த ஆதிவினையைத் தப்போல்மாற்றப்படாதென்று கருதிக் கருணைநிறைந்த கடவுளே மனித அவதாரமாகித்தீர்த்து, எல்லாத் துன்பங்களையுந் தாமே யநுபவித்து; நம்மை இரக்ஷித்து வானவீட்டிற் சேர்ப்பாரென்று வேதத்தி லெழுதியிருக்கின்றதென்றார். அதுகேட்டுச் சிவாசிவன் மிகவும் மனம்பூரித்து அவருடையவன் எந்த நாட்டில் எந்தக்காலத்தில் எந்தக்குலத்தில் திருவவதாரமாவாரென்றான். அதற்குச் சூசையப்பர் ஆண்டவனாகிய திருக்குமாரன் தாம் வசித்தநாட்டில் ஒளித்திருக்கும் சக்தி பிறர்க்குத் தெரியப்படாதென்று திருவுளங்கொண்டிருப்பதை யறிந்து, தெய்வகுமாரன் தமது திருக்காக்களிலிருந்தாலும் வெளிப்படுத்தாமல் சொல்லுவார்: வேதத்தை யாராய்ந்து பார்க்குமிடத்து மூவுலகுஞ் செங்கோலோச்சும் ஆண்டவனே என்னுடைய நாட்டில் என் குலத்தில் இந்தக் காலத்தில் மனிதனாகப் பிறந்திருப்பாரென்று சொல்லவேண்டும். பின்னும் முன்னொருநாள் அரிபோதயநேரம் அதிகப்படவும், இராப்பொழுது குறையவும், பருவமில்லாத காலத்தில் சில விருக்ஷங்கள் புஷ்பிக்கவும், வேதப்பொருளை யுரைக்கு மாக்குப்பேட்கை ஒரு நக்ஷத்திரந்தோன்றி விளங்கவும், அவதரித்த தேவகுழந்தையின் திருவடிகளை வணங்கும்படி மூவரசர் தேடிவரவும், சில இடையர் கண்டதாகையால் மகிழவும், கண்டதினால் பெரியோர் கடவுளவதாரமாயிற்றென்றார்களென்றார். இதை யுற்றுக்கேட்ட சிவாசிவனுக்குத் திருக்குமாரன் மனவுறுதியைக் கர்த்தபடியால் அவனு மனந்தெளிந்து சில காலத்திற்கு முன் இந்நாட்டிலுள்ள பொய்த்தேவரெல்லாம் ஒளித்துக்கொண்ட காரணத்தை இப்பொழுதே கண்டுபிடித்தேனென்று கடவுளவதாரத்தை நிச்சயமாகக்கொண்டான்.

இப்படிச் சிவாசிவன் உயர்ந்த ஞானத்தையடைந்தபின்னால் கையிலேந்திய மயிலிறகும், குளழும், காதிலணிந்த குண்டலமும், மார்பிலணிந்த அக்குமணிகளுந், தலையிலணிந்த கொக்கிறகுகளும், மற்றதும் பாவம்விளைக்கும் அஞ்ஞானக் கோலமென்று இகழ்ந்தெறிந்து மயக்கந்தெளிந்து மெய்யங்கடவுளை வாழ்த்தத் தொடங்கினான். துவக்கமுடிவில்லானே! முப்பொழுதும் ஒக்குற்றமுமில்லானே! உடலின்றிக், குறைவின்றி, எதிரின்றி, நிகரின்றி யிருப்போனே! நீதிமுதலாகிய் சகலநன்மையும் இயல்பாகவுடையானே! வான்மேல் வணங்கப்படுவோனே! எல்லாவிடத்திலு மொன்றாகி ஒவ்வோரிடத்திலும் பூரணமாய் நிற்போனே! இரணத்தைத்தப்பாப்பி யென்னுள்ளத்திலிருக்கும் பரஞ்சோதியே! தாயைப்பார்க்கிலு மன்புடைய தயாபரனே! நானிந்த நாள்மட்டும் பசாசுக்களைத் தெய்வமாகவெண்ணிவணங்கிய பொங்கிய அங்காரத்தினால் காமசேற்றிலமுந்தி, அணிந்திருந்த கோலங்களும், செய்த தவங்களும், படித்த சாத்திரங்களும், கொடுத்த ஈகையும், அடுத்த கீர்த்தியும், கடந்தின தருமங்களும் பயனில்லாமற் போயின. வானுலகத்தி லாசாக்ஷிசெய்யும் நீயோ அடியேன்கொண்ட பாவவினையெல்லாமறுத்து நான் வான்வீட்டில் வாழும்படி பூவுலகி லவதரித்து மனுமகனாகப் பிறந்தாய். நீ பிறந்த இடத்தில் நான் வரக்கூடாமையால் இவ்விடத்திலேயே உனது மருமலரடிகளை வணங்குகின்றேன்; நீ பூமியிற்பிறந்து மிக்கதுயரத்தைக் கொண்டாயோ! இது உன்னன்பின் தன்மையோ? என்னையனே! பாவக்கடலில் மூழ்கிய என்னை இன்று நீ கரையேற்றி யென்னுள்ளத்தினழுக்கெல்லாந்துடைத் திரக்ஷித்தாய். இனி யுன்தாசனென்னும் பெருமையிற்சிறந்த பெயரைப்பெற்றுச் சதாகாலமு முன்னை வாழ்த்துவேனென்று சாஷ்டாங்கமாகவிழுந்து வாழ்த்தி வணங்கினான்.

மாதவத்தால் மலர்க்கொடியுயர்த்திய ஞானசைமாமுனிகள் இவையெல்லாங் கேட்டு, மார்போடு தழுவநின்ற தேவகுமாரன் சிவாசிவனுக்குச் செய்த கருணையை நினைத்து, அத்திருக்குமாரனை வாழ்த்திப், பின்பு விழுந்துகிடந்த சிவாசிவனையுந் தூக்கிக் கண்ணீர் துடைத்து, மார்போடு தழுவி அன்போடு கருணைக்கண்ணோக்கினார். உடனே தேவகுழவியுந் தமது கமலக்கண்ணால் சிவாசிவனைப்பார்த்து ஞானத்தெளிவை யவன்மனத்திற் புகுத்தினார். பின்பு சிவாசிவன் பாவமயக்கம் நீங்கினபடியால் சூழநின்ற மற்றவரும் இடியோடுதோன்று மேகமின்னலைப் போலப் பாவத்தோடு தோன்றியழியும் உலகப்பொருள்களை விரும்பாமல் நல்ல தருமசிந்தையராகி மேலான புகழுள்ள சத்தியவேதத்தைத் துதித்துச் சொல்லுவார்: விஷத்தோடுகலந்த அமுதமானது உயிரைக் கொல்லுவதுபோலப் பலபேர் சொன்ன பொய்கள் வேதத்தோடு கலந்து, வேதம் பொய்வேதமாகி உயிரைக்கொல்லும் நஞ்சானதுமல்லாமல் பொய்யையும், மெய்யையும் பிரித்துணராத தன்மையால் மனிதர் உயிர்பிழைக்கும் வகையில்லாதிருந்தது. ஆனாலும் இப்பொழுது சூரியனைக்கண்ட இருள்போல இந்த மாதவமுனிவரால் மயக்கஞ்செய்யும் பொய்யெல்லாம் நீங்கி யொழிந்தன வென்றார்கள்.

இப்படியே உயர்ந்த மலையின்மேல் வைத்த பெருந் தீபத்தைப்போலச் செல்வநிறைந்த இரவிமாபுரத்தில் மிகவுங் கீர்த்திபெற்ற சிவாசிவன் மனந்திரும்பி மெய்வேதத்தை யுணர்ந்தமையால், தெளிந்த அறிவுடைய அனேகர் அவ்வேதம் அந்த நகரிடத்தெங்கும் வழங்கும்படி அனுசரித்து வணங்கிவந்தும் சிலர்க்குச் சந்தேகந்தோன்றித் தெளியாம லொருவர்க்கொருவர் போராடியிருக்கையில் ஒருநாள் மாதவமுனிவர் மலர்ந்த ஒரு பூஞ்சோலையிடத்து வருவதைக்கண்டு, யாவரும் எதிர்கொண்டுபோய்த் தண்டமிட்டு அவர் திருவாய்மொழியைக் கேட்கவிரும்பிச் சுவாமிகளே! இங்கே யெழுந்தருளுமென்று ஓராசனத்திலிருத்திச் சொல்லுவார்: சுவாமீ! இருந்தாப்போலவிருந்து இக்காலத்தில் இந்நாட்டிலுள்ள எங்கள் தேவர்களெல்லாம் போயொளித்தார்களே அது நாங்கள்செய்த குறையோ? அல்லது தேவர்கள்செய்த குறையோ? யாதுந் தெரியவில்லை. அது தெரியும்படி நீரே சொல்லவேண்டுமென்று கேட்கச் ஞானசைமாதவர் சொல்லுவார். உங்கள் தேவர்களுக்கு இங்குப் பிழைப்பில்லாமையால் வேறூரிடத்திற்குப் போயினார்கள் என்றார். இதைப் பரியாசமென்றுணர்ந்த விருதத்தன் புறப்பட்டுச் சுவாமீ! எங்களுக்குச் சந்தேகந்தோன்றிய வகையைக் கேளுமென்று சொல்லுவான்: பூர்வத்தி லெழுதப்பட்ட எங்கள் நூல்களில் அளவில்லாத வல்லமையுடைய ஒரு கடவுள் இந்நாட்டில் வந்தவுடன் மற்றத் தேவர்களெல்லாம் பயந்தோடுவார்களென்று சொல்லியிருக்கிறபடி இந்நாளில் சம்பவித்ததைக்கண்டு சந்தேகம் வந்ததென்றான். அதற்குச் ஞானசைநாதன் அப்படி மற்றத்தேவர்களை யோட்டிய ஓரே கடவுள் வேண்டுமோ? அஞ்சியோடின பலகடவுள் வேண்டுமோ? என்று கேட்க விருதத்தன் அந்த ஓரேகடவுளும், பல தேவரும் வேணுமென்றான்; அதற்குச் ஞானசைமாமுனிவர் இது கனவிற்கண்ட ஆலோசனையென்று மீளவுஞ் சொல்லுவார்: குலமுங், குணமும், உரிமையும் பாராமல் பலர்க்குந் தங்களுடலை விற்கின்ற விலைமகளிரைப்போலப் பல தேவருக்கும் வணக்கஞ்செய்து, மெய்யங்கடவுளுக்குரிய இயற்கையை யாராயாமலிருப்பது பேதமை யென்றார். அதற்கு விருதத்தன் அரசரைச் சூழ்ந்திருக்கும் அமைச்சர், படைத்தலைவர்முதலியவரைப்போல முதல்வனாகிய கடவுளைச் சூழ்ந்திருக்கும் பலதேவருண்டென்று அவர்களை வணங்கினாற் குறையுண்டோ? வென்றான். அதற்கு நிறைந்த தவமுடைய ஞானசைமாதவர் சொல்லுவார்: மந்திரிகளையும், படைத்தலைவர் முதலியவ

ரையும் மன்னவராகவெண்ணி யரசருக்குரிய வணக்க மவர்களுக்குச் செய்தால் குற்றமல்லவோ? அதுபோல முதற்கடவுளைச் சூழ்ந்தவர்களுண்டாயினும் அவர்களைத் தேவரென்று எண்ணித் தேவனுக்குரிய பூசைசெய்து வணங்கலாமோ? மேலும் வேந்தர்களெல்லாம் அறிவுணர்த்தும்படி மந்திரிகளையும், பகைவர் திறத்தை யழிக்கப் படைவீரரையும் வைத்திருந்து யாசகரைப்போல அவர்கள்மூலமாய்ப் பெருமை யடைவார். கடவுளோவென்றால் எல்லாவற்றையும், அறியவும், நினைத்ததை நினைத்தபடி செய்யவும், வல்லவனாதலால் வேறொருவர் துணையும், அறிவும் அவர்க்கு வேண்டியதென்றால் குறையாகுமல்லவோ? என்றார். இதைக்கேட்டு அருகேநின்ற வசிட்டனென்பவன் வினைத்தனைக்கோபத்தோடு பார்த்து அடா! இருட்டறையில் பொருள் தேடினாற்போலத் தேவகுணங்களையறியாம லிப்படிச் சொன்னாயென்று பலவாறு கண்டித்துப், பின்பு சூசைமாமுனிகளை நோக்கி: வேதப்பொருளின் கரைகண்ட ஐயனே! அரும்பொருளாகிய தேவதத்துவத்தைச் சொல்லுமென்று வணங்கினான்.

இப்படி வசிட்டன் கேட்டதற் கிணங்க அங்கிருந்த சில பெரியோரும் கடவுள் ஒருவரோ? பலரோ? வென்றறியும்படி தேவதத்துவத்தைச் சொல்லுமையா? வென்று வினவச் சூசைமாமுனிகள் தாம் சொல்வதை யாவருங்கேட்டு மகிழவும், அதைப் பிறர்க்குரு சொல்லவும், அவர்கள் வானவீட்டிற் சேரவும் வழியாகத் திருவாய்மலர்ந்து தேவதத்துவத்தைச் சொல்லத் தொடங்கினார். எப்படியென்றால் யாதொரு குறைவில்லாமையும், எல்லாநன்மையும் நிறைவாக வுடைமையும், ஆகிய இவ்விரண்டு குணங்களே தேவகுணங்களாகும். இவற்றை மாத்திரமின்றி பல கிளைகள் பரவினாற்போலப் பெரியோர்கள் ஆறு இலக்ஷணமாக விரித்து இவ்வாறு இலக்ஷணங்களையுடையோனே மெய்யான தேவனென்றும்; இவற்றில் ஒன்றேனுங் குறைவுபட்டால் தேவனல்லவென்றும் எழுதிவைத்தார்கள். ஆதலால் அந்த ஆறிலக்ஷணமாகிய தேவதத்துவத்தைச் சொல்லக் கேட்பீர்களாகவென்று மீளவுஞ் சொல்லுவார்: தானாயிருத்தல், துவக்கமில்லாதிருத்தல், உடலில்லாதிருத்தல், சகலநன்மைச் சொரூபமாயிருத்தல், எங்கும் வியாபித்தல், எவற்றிற்கும் ஆதிகாரணமாயிருத்தல் ஆகிய இவ்வாறு இலக்ஷணங்களுமேயாம். இவற்றை என்புன்சொற்கொண்டு விளக்குகின்றேன் கேளுங்கள். தேவனுக்குச் சமானமானவரும், அதிகமானவரும் இல்லாதிருக்கு மேன்மையே தேவதத்துவத்துக் கியல்பாகும். ஆகையால் தனக்கொருகாரணமு மில்லாமல் தானே சகலத்திற்குங் காரணமாயிருந்து நிலைபெற்றிருப்பதால் கடவுள் தானாயிருப்பது முதல் இலக்ஷணமாகும். இப்படிக் காரணமில்லாதபோது துவக்கமும், முடிவுமான காலங்களில்லை. ஆதலால் துவக்கமில்லாமையாகிய அநாதியாயிருப்பது இரண்டாம் இலக்ஷணமாம். இப்படிக் காரணமில்லாமலும், காலமில்லாமலு மிருக்குங் கடவுளுக்கு ஓரளவுமில்லை, ஓர் ஆயாமுமில்லை. சரீரத்துக்கெல்லாம் சிறிதும் பெரிதுமாகிய அளவுமுண்டு, ஆயாமுமுண்டு. ஆதலால் கடவுளுக்கு அந்த அளவும் உடம்புமில்லாதிருப்பது மூன்றாவது இலக்ஷணமாகும். மேலும் உடலில்லாதபோது ஐம்பொறிகளுக்குரிய வடிவுமில்லை. ஆகையால் ஆண்டவன் கண்களுக்குரிய சோதியுமல்லை, மூக்குக்குரிய வாசனையுமல்ல, வாய்க்குரிய சுவையுமல்ல, காதுகளுக்குரிய ஓசையுமல்ல, கைகளுக்குரிய கண்டிப்பு மல்லவாம். இப்படிக் காரணமும், காலமும் உடம்பும் இல்லாமல் செல்வம், ஞானம், நீதி, அன்பு, வீரம், திறம், தயை, ஆனந்த முதலிய சகல நன்மையும் பலவகையாகாமலும், ஒன்றுங் குறையாமலும், எல்லாமு எல்லாமுமாகி, ஒன்றுமாகி ஏற்றத் தாழ்ச்சியில்லாமல் நிறைந்திருப்பதே கடவுளுக்குச் சொரூபமாதலால், சகல நன்மைச் சொரூ

யமாயிருப்பது நாலாவது இலக்ஷணமாம். இப்படி எல்லா நன்மையும் ஒன்ருகாமல் பலவாகிநின்று கூடுவது கடவுளுக்குரிய தல்லவாம். இத்தன்மையாகிய கடவுளுக்குச் சமஸ்த வுலகங்களிலும், அவ்வுலகங்களிலுள்ள சமஸ்த பொருள்களிலும் பரிபூரணமாய் நிறைந்து ஒவ்வோர் குறுகின அற்பப்பொருளிலுங் குறையாது; முழுதும் வியாபித்து அப்பொருளழியுங்காலத்தில் தான்மாத்திர மழியாமல் மெய்ஞ்ஞானத்தா லெல்லாவற்றையு மறிந்து எல்லாவற்றிற்கும் ஞானச்சோதியாகித் திறத்தால் நிலையாகி, நீதிய ரசாகி, எல்லாமுமாகி, எல்லாவற்றையுந் தானே கடந்து எங்கும் வியாபித்திருப்பது ஐந்தாவது இலக்ஷணமாம். இவ்வகைப்பட்ட கடவுளுக்கு *முதல், துணை, யென்னுங் காரணமில்லாமலும், பிரயாசையில்லாமலும், காலமில்லாமலும், செய்யப்படும் பொருள்களுக்குப் புறத்தில்லாமலும் அளவிறந்த பொருள்களைத் தானே யுண்டாக்கிக் காத்து, அழிக்கும் வல்லமையுடைத்தாகி யவற்றிற்கெல்லாம் ஆதியும், அந்தமுந் தானேயாகி முதற்காரணமாயிருப்பது ஆருவது இலக்ஷணமாம். இந்த ஆறு இலக்ஷணங்களில் ஒன்று குறைந்தாலும் அவன் தேவனல்லவெனப் பெரியோர் கூறுகின்றனர். ஆகையால் எல்லா நன்மையும் ஓரே கடவுளுக்குச் சொருபமாயிருக்கையில் அந்தக் கடவுளோடு மற்றக் கடவுளருண்டென்று சேர்த்துவைத்தால் அவர்களுக்கு வேறென்ன நன்மையுண்டு? பின்னும் ஆறிலக்ஷணங்களையுமுடைய கடவுள் முதல்வராயிருக்க அவருக்குக் கீழ்ப்படிந்து மற்றத்தேவர்களுமிருக்கலாகாதோ? வெனின் ஓர் அரசன் தன்தேசத்திலுள்ள பல நகரங்களையெல்லாம் அதிகாரிகள் மூலமாய் அரசுசெய்துவந்தால் அவ்வதிகாரிகளெல்லாம் அரசனுவார்களா? மீளவும் பல தேவர்களில் ஒவ்வொருவனுக்கும் எல்லா நன்மையு முண்டு என்றாலும் அவர்களுக்குள் வேறுபாடறிவ தெப்படி? ஒன்று குறைந்தாயினு மிகுந்தாயினு மிருத்தல் வேண்டும்; அப்படி ஒன்று குறைந்தும், மிகுந்து மிருந்தால் தெய்வலக்ஷண மென்பதொன்றுமில்லை. ஆதலால் பலதேவருண்டென்ருலொரு மெய்யான்தேவனும் இல்லை யென்ருர்.

இவ்வண்ணமாகச் ஞசைமாமுநிகள் சொல்லிய தெய்வ இலக்ஷணத்தைச் சுற்றிலுமுள்ள யாவருங்கேட்டுச் சூரியகிரணங்களைத் தாமரை யுண்டதுபோலத் தாங்களும் மெய்யறிவைக்கொண்டு சந்தேகமெல்லாம் நீங்கித் தெளிந்து, அவர்களுள், சிலர் வானத்திலிருக்குஞ் சூரியனஸ்தமயமானபின் பல தீபங்களை யேற்றிவைப்பதுபோல நாற்கவிகளையு முணர்ந்த வித்துவான்களும் தேவ இலக்ஷணத்தை யறியாமையால் பல தேவர்களுண்டென்று வேறுபட விரிதெழுதினுர்கள் என்பார்; சிலர் வெள்ளத்தி லகப்பட்டவன் கரையை நோக்கிச் செல்லாமல் வெள்ளம்போகும் வழியேசென்று கெடுவதுபோல, இந்நாள்வரையிலும் பல தேவருண்டென்று நம்பிப், பாவவெள்ளத்தி லகப்பட்டுமோக்ஷகரையைச் சேராதிருந்தோம் இப்பொழுது அந்தப் பலதேவர்கள் வணக்கமொழித்து ஒன்றான மெய்க்கடவுளை யறிந்தோமென்பார்; இப்படி யவரவர்கள் சொல்லிவரும்போது மீளவும் வசிட்டன் ஞசைமாமுநிகளை நோக்கிச் சொல்லுவான்: சுவாமி! இந்நாள்வரைக்கும் எங்களுக்கு இராவிருள் நீங்கி விடியாததுபோல உலகம் படைப்புண்ட நாள்தொடங்கி இந்த மெய்வேதம் உலகமெங்கும்பரவிப் பரம்பின ஞானக்கதிரை நாங்களும் எங்கள் பெரியோர்களும் கண்டுபிடியாததற்குக் காரணமெ

*முதற்காரணமாவது.—காரியத்தோடொற்றுமை யுடையது. அது மண்ணாற்செய்த குடம்போலும். துணைக்காரணமாவது.—காரியப்படுமளவும் காரியத்தோடுடனிகழ்வது. அது தண்டசக்கரங்களாற்செய்த குடம்போலும்.

ன்ன? வென்றான். அதற்கு மாதவமுனிவர் சொல்லுவார்: சூரியோதயத்தைக்
கண்டபோது தாமரையின் இள அரும்புகள் மலராதது சூரியனது குறையோ?
அதுபோலக் கடவுள் சகல சற்குண சம்பன்னனென்றும், ஒப்பில்லாதவனென்
றும், அறிவுக்கெட்டாதவ னென்றும் நீங்களே சொல்லிக்கொண்டிருந்தும்,
பின்பு அப்படிப்பட்ட கடவுள் ஒருவனென்று அறியாமல் அவனுக்கு உறவின
ராகப் பல தேவர்க ளுண்டென்று சொல்லுகிறீர்கள். மேலும் அந்தக்கடவுள்
ஒருவனேயென்று காணாதிருந்ததற்குக் காரணம் யாதெனில்? பாவத்தால் விளை
ந்த இருட்புகை உள்ளத்தில் நிறைந்து, ஆசையென்னும் விலங்கினாற் பூட்டப்
பட்ட மெய், வாய், கண், மூக்கு, செவியென்னும் ஐம் பொறிகளும், அறிவும்
கலங்கிக், குளத்திலிருக்கும் பாசியைப்போல மனமும் அலைந்துதிரியப், பசாசு
பகைத்து முழுது மயங்கச்செய்வதினால், ஒரு ஸ்தம்பத்தில் கட்டப்பட்ட ஆ
னை அதனைச் சுற்றிவருகையில் யாதொரு பயனுமில்லாமல் முன்பு வாழ்ந்திரு
ந்த மலர்த்தடாகங்களை நினைப்பதுபோலக் கொடிய ஆசைகளால் நாட்டப்பட்ட
ஐம்பொறிகளாகிய ஸ்தம்பத்தில் கட்டப்பட்ட மனமானது அதைப் பிரியாமற்
சுற்றிவரத் துன்பமிகுதியால் ஒவ்வொருபொழுது நன்மையை நினைத்தாலும்
அந்நன்மையில் நின்று அதையடைவது அரிதாகும். பின்னும் குளத்திலிருக்குந்
தவளைகள் அவ்விடத்துள்ள மலர்த்தேனையருந்தாததுபோலஅந்தத் தேனுக்குச்
சமானமாக முன்னோர் சொல்லிய அரியபொருள்களை யாவருங் கைக்கொள்ளா
மல் பொய்ப்பொருளை விரும்பினதால், பாவம் விளைவதற்கு இந்த அறியாமை
யே காரணமாயிற்று. ஆதலால் தெய்வ இலக்ஷண மின்னதென்றும், வேத மின்
னதென்றும் தெரிந்துகொள்ளவேண்டியதானால், ஆசையாகிய இருளை மனத்தி
னின்றும் ஒழிக்கவேண்டும்; ஆசைமிகுந்தகாலத்தில் அறிவைத்தரும் நூல்க
ளும் பயன்படாவென்றார். இதைக்கேட்ட யாவரும் பல வாத்திய கோஷம்போ
லப்பலபறவைகள் பாடிக்கொண்டிருக்கச் சூரியாஸ்தமயமானபின் இராக்காலமும்
வந்து வானமாகிய பூந்தோட்டத்தில் வெண்மலர் பூத்ததுபோல நக்ஷத்திரங்களு
முண்டானமையால், அந்தப்பூஞ்சோலையினின்று புறப்பட்டு விடியற்காலை யொ
ளிபோலச் சூசைமாமுனிகள் சொன்ன யாவையுந் தெரிந்து தங்கள்தங்கள் வீட்
டிக்குப்போய்ச் சேர்ந்தார்கள்.

ஞாபகப்படலம் முற்றிற்று.

இருபத்தெட்டாவது, வாமனாட்சிப் படலம்.

தண்டவத் தளைய பைம்பூக் கருத்திர ணிழற்றிக் கவ்வு
மண்டபத் தொருநாள் வைகி மறுகலம் பொழிவாய்க் கஞ்சம்
விண்டவத் தொழிய மாந்தர் விடுறச் செப்பங் காட்டி
யொண்டவத் திறைவன் சூசை யுரைவிரித் திமிழிற்சொல்வான்.

இத்தன்மையாக மாதவமேலோருக்கொண்டுவந்த சூசைமாமுனிகள் பா
வத்தால் உண்டான புண்ணுக்கு மருந்திட்டதுபோல யாவருக்கும் நன்னெறி
புணர்த்தி வந்து, ஒருநாள் பூஞ்சோலைகளாற் சூழப்பட்டுக் குளிர்ந்திருக்குமொரு
மண்டபத்தில் வீற்றிருந்து தமது வாயாகிய தாமரையைத் திறந்து யாவரும்

யான வீட்டிற் செல்லும் வழியை யருளிச்செய்கையில் அங்குக்கூட்டமாக வ
ந்திருந்தவர்களெல்லாம் வண்டுக்கூட்டங்கள்போல மொய்த்திருந்து மாதவரின்
திருவாயாகிய தாமரையிலிருந்து புறப்படுந் தேனாகிய அறிவென்னும் அமிர்த
உபதேசத்தைக்காதுகளாகியவாயினாலுண்டிருக்கையில், விற்போரில்வீரமுண்ட
யவனுமாய், விலைமகளிர்போரில்மெலித்தவனுமாய், போர்முகத்தில்பின்வாங்காத
சிங்கத்தையொத்தவனுமாய், ஆபரணங்களால்விளங்கியதோள்வலியுள்ளவனுமா
ய்க்கல்வியறிவுள்ளவனுமாய்விளங்கியவாமனென்பவனொருவன்தடாகங்களிலுள்
ளபாசிகள் அதிலேநிலைகொள்ளாதனபோலச் சூசைமாமுனிகள் சொல்லியஉபதே
சம் தனக்கேசொன்னதாக நினைத்து உபதேசத்தில் நிலைகொள்ளாமல், தருமத்
தின்மேல் விருப்பங்கொண்டாலும் காமவசத்திலகப்பட்டவனுதலால், ஒரு பக்
கம் புண்ணியமும், ஒருபக்கம் காமமும் போர்செய்ய நடுவேயகப்பட்ட மலர் மா
லையைப்போல மனமானதுசோர்ந்திருக்கப், பின்பு நன்னெறியொழுக்கத்தைவி
ரும்பி ஒருவாறு மனந்துணிந்து, சூசைமாமுனிவனை நோக்கிச்சொல்லுவான்: வேத
நூல்களெல்லாம் உயிர்பெற்றதுபோல வடிவங்கொண்ட மாதவனே! சிலம்பத்
தொழில்கற்கும் சாஸ்திரத்தை முடவன்படித்தாற்போல நீருணர்த்தியமெய்ந்
நூற்பயனை நான் கேட்டிருந்தும் மகிழ்கொண்டேனேயல்லாமல் அந்த நூன்
முறைமைப்படி நடக்குதல் என்னாலே கூடாதென்றான். அதைக்கேட்ட மகாத்
துமாவாகிய சூசைமாமுனிகள் வாமனைக்கருணையோடு நோக்கி நிறைந்ததேவகா
ருணியால் அவன் உள்ளத்தையுத் தெரிந்து அவன மகிழ்கூரும்படி திருவாய் மல
ர்ந்துசொல்லுவார்: விற்றொழிலின் வீரத்தன்மையில் ஆண்சிங்கத்தையொத்தவ
னே! வில்லைப்பிடித்து யுத்தஞ்செய்யும்போது அந்த வில்லைவளைத்து நாணியே
ற்றலும், அஸ்திரத்தைத் தொடுத்தலும், இரண்டுதோள்களும் நிமிர நிறுத்த
லும், குறிவைத்தலும், அஸ்திரத்தை யெய்தலும், அதுசென்று குறித்தகுறிப்
பிற்படுதலும் ஆகியஇவையெல்லாம்வில்லின்பழக்கமில்லாதவர்கண்டால் ஆச்சரி
யப்படுவார்களல்லவோ? பின்னும்ஒருவன் ஒருபாணத்தைப்பிரயோகிக்கமற்றொரு
வன் அதைத்தடுத்தலும்,போர்க்களத்தினின்று தப்பிவருதலும், பகைவர்க்குத்
தெரியாமல் தன்னுடலைத் தன் கைப்பிடித்தபரிசைக்குள் ஒளித்தலும், செய
ற்கரும் வழியையுணர்ந்து போர்க்களத்தைச் சுற்றி வருதலும், வாளைச்சுழற்றி
வெட்டுதலும் ஆகிய இச்செய்கை யெல்லாம் ஒருநாளும் போர்முகத்தில் ப
ழகாதவர் கண்டால் மயங்குவார்களல்லவோ? மேலும் இடிமுழக்கங்கொண்ட
மேகத்தை யொத்த யானைகளோடு எதிர்த்துப் போர் செய்கிறவர்கள் அதன்
முன்னங்காலிலொளித்தலும், தும்பிக்கையைப்பற்றிச் சுற்றித்திரிதலும், பின்
னங்காலிடத்து வளைத்தலும், கொடிகளைக்கட்டிய உயர்ந்த ரதங்களைக்கொ
ண்டு செய்யும், யுத்தமும் மதகஜங்களைக்கொண்டு செய்யுஞ் சமரும், புழுதி
யெழும்படி பாய்ந்து கொல்லுந் துரகங்களைக் கொண்டு செய்யும் போரும்,
சிங்கத்தொனிசெய்யும் பதாதிகளைக்கொண்டு செய்யுஞ் சமரும் எப்பொழுது
ம் பாராதவர்களுக்கு அருமையாயிருக்குமல்லவோ? இன்னும் இரத்தினங்களை வ
ரிசைப்படவைத்ததுபோல, எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடைகளாற்ப
ந்துவகையழகும், ஆழ்ந்த பொருளும்பொருந்த அலங்காரத்தோடு செய்யுள்
செய்ய வல்லவர்களாகிய வித்துவான்களும் பாடுந்திறமையைத் தாங்கள் கற்பத
ற்குமுன் பாட்டுபாடுவதைப் பார்க்கிலும் பர்வதத்தைத் தாங்கலா மென்பாரல்
லோ? மீளவும் வீணைவாசிப்பவர்கள் முதலில் இசை யெழும்பும்படி வீணையின
ரம்புகளை ஒவ்வொன்றாகத்தடவி மாத்திரை நிறைய நரம்புகளைத்திருத்திப் பின்பு
முழுவிரலால் தேனினுமினிய கீதங்கள் எழும்ப வாசிப்பதைக்கண்ட யாவரும்
நாமுமிப்படி வாசிப்பது எளிதென்று நினைப்பார்களா? இதுவுமல்லாமல் சித்தி

ரக்காரர் சித்திரமெழுதுந் தன்மையும், பொற்கொல்லர் பொன்னையுருக்கி ஆபரணஞ்செய்யுந் தன்மையும், வைத்தியர் நாடியின்வழியால் வியாதிகளை யறியுந் தன்மையும் அவற்றில் பழகாதவர்களுக்கு எளிதாகுமோ? இல்லையே. அதுபோலப் பழக்கத்தினால் சமஸ்தமுங் கைவசப்படும் என்பதிற் சந்தேகமில்லை. ஆதலால் ஆசைக்களவான பயனைத்தருகின்ற தூயதருமத்தைச்செய்யத் தபசிகளைப்போலக் கானலிலும், மலைகளிலும் சஞ்சரிக்கவேண்டியதில்லை. பாவமில்லாத நல்லமனத்துணிவு ஒன்றுமாத்திரமிருந்தாற்போதும் என்று சொல்லிய குசைமாமுநிகளை நோக்கி: வாமனென்பவன் சொல்லத்தொடங்கினன்.

அதெப்படியென்றால் வாசனோட்டிச், சந்தனகதம்ப முதலிய வாசனைத்திரவியங்களைப்பூசி, அகிற்புகையூட்டி, இரத்தினாபரணங்களை யணிவித்து, மலர்மாலைசூட்டி உயிரைப்பார்க்கிலும் மேம்பாடாக நாம் எண்ணுகின்ற ஊத்தைநாறும் இந்த உடலைப் பொருந்தச்சமைத்த ஆண்டவன் எலும்புகளை வரிசையாய்வைத்து, நரம்புகளாற் பின்னித், தசையையுள்வைத்து, மேலேதோலைப்போர்த்தி, உதிரத்தைப் பாய்த்து, அதன்மேல் உரோமங்களையெழுப்பி, அழகோடு ஒன்பதுவாசல்களுமமைத்து, அதனுள் நல்ல உயிரையும் பொருத்தி நம்மைப் படைத்திருப்பதினால் அந்த நல்லஉயிரானது உடலோடுகூடி மெய்யான உணர்வையடையவேண்டியிருக்க அவ்வுடலே உட்பகையாய் நின்று அவ்வுயிர்க்குச் சகல கேட்டையுந் தருமானால் உயிரைக்கெடுக்கவேறேயுட்பகையும் வேண்டுமோ? பின்னும் புறப்பகை ஒன்றிருக்கின்றது. அதாவது எல்லாவறிவையுங் கடந்த தேவநாதன் ஆணுக்கொருதுணையாக நியமித்த அழகிய பூங்கொடியையொத்த பெண்களேயாகும். அப்பெண்கள் கூட்டமே பாலோடுகலந்த நஞ்சையூட்டி உயிரைக் கெடுத்துக் காமப்போராத்தந்து உடலோடுகூடி நம்மைக் கொல்லும் பகையைச்செய்கின்றது. ஆதலால் எவ்வகைப்பட்ட போருக்கும் அஞ்சாதநான் காமப்போருக்குமாத்திரந் தோற்று வருந்துகின்றேன். பின்னும் ஒவ்வொருசமயத்தில் நல்லதருமத்தைவிரும்பி நற்செய்கையைச் செய்யப் புகுந்தால் மயிற்சாயைவாய்ந்தமாதர்களின் முகத்தைக்கண்டபோது அவர்களுடைய மணிமாலையும், குண்டலங்களும் கதிர்விட, வேல்போலுங் கண்கள் என்மனத்தைச்சுட அதனால் நான் மெழுகுபோலுருகுகின்றேன். மேலும் அம்மங்கைமாரது மேகத்தையொத்த கூந்தலானது இருளுக்கிடமாகவும், சத்துருக்கள் ஒளித்திருக்குங் காடுபோலவும், கறுத்தநஞ்சுபோலவும், உயிரைக்கொல்லும்யமனைப்போலவுமிருக்கின்றது. இன்னும் அந்நங்கைமார் தங்கள் புருவமாகிய வில்லுகளைவளைத்துக் கண்களாகிய அம்புகளைத்தொடுத்து பலநாளுஞ்செய்யுந் தருமவினையையழித்து மனங்கலங்கும்படி செய்யும் யுத்தத்தில் தோல்வியடையாதவர் யார்? பாற்கடலில் நஞ்சும், அமுதமுங்கூடப்பிறந்தன என்னுங் கட்டுக்கதைபோல அந்தத் தையலார் வாயோவென்றால் இனியசொல்லாகிய அமிர்தத்தோடு நஞ்சையும் உமிழ்ந்து உயிரைக் கொல்லுகிறது. இவ்வண்ணமாகப் பசுந்தோகைமார் தங்கள் கூந்தலைக் கயிறாகக்கொண்டு உயிரைப்பிணித்தும், இனியசொல்லைக் கொண்டு நஞ்சையுமிழ்ந்தும், சிலம்புகளினோசையால் மயக்கியும், பார்வையாகிய அம்புகளையெய்தும், அணிந்த இரத்தினாபரணங்களின் ஒளியால் மனத்திலிருளை நிறைத்தும், இதுவும் போதாமல் மற்ற வுறுப்புகளெல்லாம் கொடுநெருப்பாகி உயிரைப் புசித்தாலும் பசிக்குப்போதாதென்பார். பின்னும் அந்தப் பாவைமார் வாசிக்கும் வீணையின் இராகஞ் செய்யுங் கொலையோவென்றால் அதின் இசையிற் பாடுபட்டு வருந்தியவர்களுக்கு மாத்திரந் தெரியும். மற்றவர்களுக்குத் தெரியாது. மேலும் அவ்வீணையின்குரல் சாந்த அமுதம்போலக் காணப்பட்டாலும் அதையே

வேலாகவும், விஷஜலமாகவும் கமதுகாதுகளிருந்தி யுயிரைக் கொல்லுவார்கள், இன்னும் அம்மாதரைப்பற்றி யதிகம் நான் சொல்லவேண்டுமோ?ஐயா!ஐம்பொறிக ளையும் வென்றவரே! விண்ணுலகையின்னலே பிடித்தொடாத காலமிருந்தாலும் மண் ணுலகை யின்னலாகிய பெண்களை விரும்பியபோதுகூட கெடுதி தொடாத காலமி ல்லை. இவையெல்லாம் காமப்பிணியிலகப்பட்டு நொந்திருக்குமானதிலேவேனோ மொ றிய பஞ்சபுலன்களையும் வென்றவராகிய நீ ரறியமாட்டீர். ஆதலால் வில்லுகளா லெய்யப்பட்ட பாணங்களைப்பார்க்கிலுங் கொடிய பாணங்களாகிய கண்களையு டைய மாதர்களின் வடிவத்தைக்கண்டால், அதன்முன் கற்றகல்விகளும் பயன் படுமோவென்று? வணங்கிச் சொல்லினான். இப்படி வணங்கியவாமன் சொன்ன தைக்கேட்டுச் குசைமாமுனிவர் வேலின்திறத்தில் மிகுந்தவனே!யென்று அவனை யிரக்கத்தோடு தழுவி அவன் காமநோயாகிய அக்கினி தணியும்படி தமது கரு ணைக்கண்ணீரால் கழுவிக், காமமிஞ்சியவிடத்துக் கற்றகல்வியெல்லா முதவாது என்றுமே ஆண்டவன் நரகத்திலிட்டு உபாதிக்கும்போது காமிகள் என்னசெய் வார்களென்று மீளவுஞ் சில நீதிகளைச் சொல்லத்தொடங்கினார்.

அதெப்படியென்றால், குசைமாதவர் வாமனை நோக்கி: ஐயா! உடலைப்பற்றி வரும் வியாதியை வைத்திய னறியவேண்டியதேயொழிய வியாதியஸ்த னறிய வேண்டியதில்லை. உயிரைப்பற்றிவரும் பாவநோய்கள் அவனவன் தேடிக்கொ ண்டதனால் அவனவன் அறிந்துகொண்டாலொழிய அது தீராது. தண்ணீரால் கூட்டிய சேற்றைத் தண்ணீர்விட்டே கழுவுதல்போல மனத்தினாற்செய்த பாவ ங்களை மனத்தின் மனஸ்தாபத்தாலே நீக்கவேண்டும்; அப்படித் தம்பாவத்தை யறியாதிருப்பவர் தருமப்பயனை மறந்து பாவங்களில் நீங்கவுமாட்டார். பலநோ ய்களைப்பார்க்கிலும் இன்பத்தால்வருங் காமநோய்செய்யும் புகையினால் மனத்தி னிருள் மூடியதென்று சிலர் அறியா திருந்தாலும் அவற்றை நன்று யறிந்திருந் தும் நீ அறிந்தும்விஷத்தை யுண்ணுகின்ற பேதையரைப்போல அந்தக் காம நோயை விரும்பலாமோ? விஷத்தை அமுதமென்று புசித்தாலும் விஷம் அமு தமாகுமோ? காமத்தினாலுன்னுயிர் பாவச்சேற்றில் வீழ்ந்தமிழ்ந்திருக்கும்போதும் நீ அக்காமவாசையை விடாதிருப்பதேன்? பின்னும் காம ஆசையே ஒருகயிறா கி என் கைகால்களைக் கட்டியிருக்கின்றது. அதனைநான் பிரிப்பது எப்படி? என பாய். அப்படியானால் ஆசையே கயிறாயிருக்க அவ்வாசையை, நாளுக்குநாள் வி ருத்திமாக்கி இன்னும் அந்த ஆசைக்கயிற்றை ஏன்? இறுக்கிக்கொள்கின்றாய். மே லுங் காமக்கொடுந் தீயை யவிப்பது என்றால் எப்படிக் கூடுமென்பாய். அப்படி யானால் உன்னால் அணைக்கக்கூடாத காமத்தீய்க்கு நீயே ஆசையாகிய விறகுகளை இன்னும் ஏன்? சேர்க்கின்றாய். மீளவும் மாதர்கள் முகத்தைக்கண்ட மாத்திரத்தி ல் வளரும் ஆசையை நீக்குவது எப்படிக் கூடுமென்பாய். அப்படியானால் வருத் தம் வருமென்றறிந்தும் காஞ்சிரப்பழத்தை யுண்பானேன்? நெடுநாளாக இருந் த நோய் மருந்தினால் உடனே தீர்வது எப்படி? யென்பாய். அப்படியானால், நெடு நாளாகக் கொண்ட காமநோய் இன்னும் வளரவும், உயிரழியவும் மீளவும் ஆ சையாகிய விஷத்தை ஏன்? உண்ணுகின்றாய். அன்றியும் மாதர்களுடைய அழ கிய வதனங்களை விஷமாயிருக்கையால் அதனைக் கண்டவர்களில் ஒருவரும் பிழைக்கார் என்றாய். அப்படியானால் கெடாத அழகுள் உயிரானது வருந்தி எக்காலுந் திரும்பக்கூடாத சாவுக்குப் பாத்திரமாகும்படி நீ மாதர் முகங்களைப் பார்ப்பானேன்? ஆகையால் அம்புகளைக்கொண்டு செய்யும் யுத்தத்தை அம்புக ளால் தடுத்து வெல்லலாம். மாதர்களுடைய காமப்போரிலோவென்றால் புறங் காட்டி ஓடினால்தான் வெற்றியைத் தரும். ஏனெனில் முன்னமே நீசொல்லியபடி.

பெண்களி னவயவமெல்லாம் உயிரைக்கொல்லும் நஞ்சாகவிருக்கையில் அம்ம
டந்தையரைக் கண்களாற் காணாமலும், அவர்கள் சொற்களைக் கேளாமலும், அவ
ர்களை விரும்பாமலும் புறங்காட்டியோடினால் அந்நஞ்சு உன்னைக்கொல்லுமோ?
உயிரை வருத்தும் உடம்பும், மற்றப் புறப்பகையும் உள்ளே நுழையாமல் நீ
மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து வாசலையும் அடைத்துவைத்தால்
உனக்குப் பயமேது? இதுவமன்றித் தோன்றி மறையு மின்னலைப்போல அழ
குகாட்டிய மாதர்களது முகமும், பவளக்கிண்ணத்திற் சேர்த்த முத்துமாலை
போல விளங்கும் பற்களும், வளைந்த வில்லையொத்த புருவங்களும், நக்ஷத்திரங்
களையொத்த விழிகளும், பிறையையொத்த நெற்றியும், கமலத்தையொத்த வா
யும் ஆகிய இவையெல்லாம் சுடுகாட்டிற் காணப்பட்ட பசையில்லாத வெள்
ளெலும்புகளேயென்று மனத்தில் தெளியக்கடவாய். ளவும் மலர்ந்தமலரைப்
போல மலர்ந்தமாதர்முகத்தழகு முதுமைப்பருவத்தில் வாடியமலரைப்போலச்
சுருங்கிப் பயன்படாதென்று நினையாமல் சிலர் பாவத்தை விளைத்துத் துன்பத்
தைக் கொள்ளுவார். இன்னும் இன்று உயிரோடு வாழ்பவர்கள் நாளையிறப்பார்,
அப்போது அவர்கள் விரும்பின பொருளெல்லாங் கூடவாராமல் பாவங்களொ
ன்றே கூடவரும். அதனால் விளையுந் துன்பங்கள் சொல்லுந் தன்மையோ? ஆத
லால் நீ காமவாசையை விட்டொழிதல் வேண்டுமென்று பல நீதிமொழிகளையுங்
காட்டி ஆரியனாகிய சூசைமாமுனிகள் சொன்னதற்கு வாமனென்பவன் காற்றிற்
பட்ட கடலலைவதுபோல மனந் தெளியாம லலைந்துநின்றான்.

அதைக்கண்ட சூசைமுனீந்திரர் கசப்புள்ள மருந்தை வெல்லத்துள்வைத்து
மூடிச் சிறுவர்க்கு வெல்லமென்றுசொல்லி மருந்தை யுண்பிக்குங் கருணைத்
தாய்மார்களைப்போல இதுவரையிலும் இன்பத்தோடு வாமனுக்குச் சொல்லிவந்
ததை அவன் மறுத்தமையால் பழம்புண்ணைத் தீவைத்து ஆற்றினாற்போல
பெருத்த பயங்கரமுண்டாகும்படி மீளவுஞ் சொல்லுவார்: பகைவர் வணங்கும்
வேலாயுதத்தை யுடையானே! மலைகளிலிருந் தோடிவரும் நீரருவிபோல அழ
கோடுவளரும் இளமைப்பருவமும் சீக்கிரத்தில் மறைந்தழியும். அதனை நம்ப
வேண்டாம். சுழல்காற்றின்முன்னே காய்களும் உதிர்வதுண்டு. ஆதலால் மயக்
கத்தினால்வரும் பாவங்களை விடவேண்டும்; அப்படி விடாவிட்டால் நரகத்தீயில்
விழுந்து வேகவேண்டும். தீவினையானது யாரையும் விடுவதில்லை. நீயும் நரகத்தை
யடையவேண்டுமானால் காமவாசையை விரும்பக்கடவாய் என்றார். இதைச்சூ
ழ்ந்து கேட்டிருந்தவர்கள் யாவரும் சூசைமாதவரை நோக்கிச்: சுவாமி! இதுவரை
யிலுஞ் சொல்லிவந்ததிருக்க இப்பொழுது நரகக்குழியென்று சொன்னீரே அந்
தச் சொல்லைமாத்திரம் நாங்கள் கேட்டிருப்பதல்லாமல், அந்தநாடு எவ்விடமிரு
ப்பதென்றும், அதிலரசுசெய்பவர் பேய்களோ? மனிதரோ? வென்றும், அதன்
குண மெப்படியென்றும், நம்மைக் கெடுக்கும் பசாசுகள் யாரென்றும், அவற்
றைப் படைத்தவர் யாரென்றும், படைத்த காரணம் யாதென்றும் நாங்களறி
யாமையால் அதை எங்களுக்கு விளக்கச்சொல்ல வேண்டுமென்றுகேட்க, அத
ற்குச் சூசையப்பர் உங்கள் கேள்வி நன்றாயிருக்கின்றது. இப்பொழுதே நரகத்
தின் பயங்கரமான வேதனையைக் கேட்டிருந்தால் முடிவில் அதற்குப் பயந்து கட
க்கலாம். ஆதலால் சொல்லுகின்றேனென்று மீளவுஞ் சொல்லுகின்றார்: சருவஜீவ
தயாபரக்கடவுள் ஒருவரே யல்லாமல், மற்றப்பொருள்களெல்லாம் அவர்வல்
மையால் வேறு துணையின்றி படைக்கப்பட்ட பொருளாகும். அந்தப் பொருள்
களெல்லாங் கடவுளால் படைக்கப்பட்டபோது யாதொரு கோணலுமில்லாமல்
அழகோடிருந்து இக்காலத்தில் பாவத்தாற் கோணலாயின. அப்படிப் படைப்

புண்டகாலத்தில் நாம் காண்பதற்குரிய வடிவிரு லடையப்படாத அழகைத் தீட்டி, உடலில்லாத உயிர்களாகிய மனங்களைக் கடவுள் வானவராகப் படைத்து வானலோக அரசனின் வீரரைப்போல வைத்தார் என்று சொல்லிவருகையில், அருகே நின்றிருந்த வாமன் உடனே யெழுந்து மெய்யான அறிவுணர்ந்தும் ஐயனே! நீர் சொல்லிய மனங்களைத்தானே நாங்களுங் கடவுளர்க் கூட்டமென்றும், தேவகூட்டமென்றுஞ் சொல்லுகின்றோம்; இதில் வித்தியாசமென்ன இருக்கிறதென்றான். அதற்கு மாதவர் புன்சிரிப்புகாட்டி வாமனை நோக்கி: மூடவர் பறக்க நினைத்தாற்போலப் பித்தர் சொன்னவையெல்லாம் நம்பி மயங்கலாமோ? நான் சொல்லுவதை அவசரப்படாமல் முழுதுங் கேளென்று மேலவுஞ் சொல்லுவார்: இப்பொழுது நான் சொன்ன வானவர்கள் கடவுளால் படைக்கப்பட்டுப் பல பெயர்களை யுடையவராகி மிகுந்த வல்லமையும், வரங்களுமடைந்து, ஆண்டவரின் சிங்காசனமாகிய வானவுலகத்தில் அவருடைய அரசகூட்டமாகக் காணப்பட்டு அவர் கட்டளைப்படி வேண்டிய வுறுதிகளை நமக்குச் சொல்லவும், நமக்காக ஆண்டவனையிரந்து, வேண்டிய வரங்களைக் கொண்டுவந்து நமது ஆபத்திற்றந்து உதவிசெய்வார்களேயல்லாமல் அவர்கள் தேவருமல்ல, நமது துயரத்தை நீக்கவும், வரங்களைக் கொடுக்கவும் வல்லவருமல்ல; அசரீரிகளாகி வானுலகத்தி லிருப்பதால் வானவர் என்னப்படுவார். சகலத்தையும் படைத்த ஆண்டவரொருவரே நம்மை யிரக்ஷிக்கவும் வேண்டிய வரங்களைத் தரவும் வல்லவராவர். இப்படியிருக்க நீங்கள் அந்தச் சரீரமில்லாத வானவரைப் பூவுலக மனிதரைப்போல நினைந்து அவர்களுக்குக் கண்களிருக்கிறதென்றும், இமைக்காதவரென்றும், அவர்களணிந்த மலர்மாலை வாடாதென்றும், அவர்களிற் சிலர் ஆண் என்றும், சிலர் பெண்ணென்றும், தேவர்களென்றுஞ் சொல்லிக் காமத்துக்குரிய பல கட்டுக்கதைகளைப் புராணங்களாக்கி, அப்புராணங்களில் தேவர்களுக்குப் பிறப்பும், இறப்பும், கர்ப்பமும், கூட்டமும் உண்டென்றும், அவர்க ளொருவர்க்கொருவர் எதிர்த்துப் போர்புரிந்தார்களென்றும், அவர்களுடைய பொன்னுலகத்தில் நீண்ட பாதைகளும், உயர்ந்த பர்வதங்களும், பூஞ்சோலைகளும், மருமலர்த்தடாகங்களும் உண்டென்றும் நம்பி வானவுலகத்தையும் பூவுலகம்போல நினைத்துச் சொல்லுகின்றீர். யானையின் துதிக்கையைத் தடவி உலக்கையென்றும், அடிகளை யுரலென்றும், செவிகளை முறமென்றும், வாலைத் துடைப்பமென்றும் சொல்லிய குருடரைப்போல நீங்களும் மனுமக்களைப்போலத் தேவர்களை அற்பமா யுரைக்கின்றீர்கள். அப்படியானால் வானவீடு எப்படிப்பட்டதென்னில்: அளவில்லாம லகன்ற விசாலமாகி, நக்ஷத்திரங்களுந் தனக்கு நிகராகாதென்றதுபோல நக்ஷத்திரங்களைப் புறத்திற்றள்ளிச் சகல நன்மையும் நிறைந்து விளங்கும் உலகமாம். அதின் பெருமையை நாம் அவ்விடத்திற்சென்று கண்டளவில் தெரியுமேயொழிய மற்றப்படி தெரியப்படாது. நக்குதற்கும் போதாத செல்வமுடைய பூமியை அதற்கு நிகராகச்சொல்வது பேதமையாகும். இப்படிப்பட்ட மோக்ஷவாழ்வுகளைத் தந்து கடவுள் வானவரைப் படைத்தபின்பு அவ்வானவரிற் சிலர் தெளியாத மயக்கங்கொண்டு அகங்காரத்தினால் ஆண்டவன் கட்டளையைக் கையிகழ்ந்து தீவினையை மனத்திற்கொண்டமாத்திரத்தில், ஆண்டவனிட்ட சாபத்தினால் நரகபசாசுக்களாகி ஆண்டவன் முடித்து வைத்த செய்கையெல்லாங் கெடும்படி பாவத்தை மனுமக்கள் மனத்தில் நுழையவிட்டுச் செய்யும்பகையை யறிந்துகொள்ளுங்கள் என்றார். இதைக்கேட்ட யாவரும் வானவராக வாழ்ந்திருந்த உயிர்கள் பாவத்தால் இப்படிக் கெட்டழிந்து பசாசுக்களாகிப் போனமையால், உயிரோடுகூடிய நம்மை அப்பாவங்கள் பகை

த்தால் நமக் களவில்லாத கேடுதிவாராதோ? என்று ஒருவர்க்கொருவர் பேசிக்கொள்ளப் பின்னுஞ் சூசையப்பர் சொல்லத் தொடங்கினார்.

அதெப்படியென்றால்.—சூழநின்றவர்களை நோக்கி: நான்வானவரைக்குறித்துச் சொன்னபோது நீங்கள் ஒன்றைவேறொன்றாக நினைத்ததுபோல இப்போது சொல்வதில் இராக்ஷதர்கள் வேறு, நரகத்திற்கிடக்கும் பசாசுக்கள் வேறென்று எண்ண வேண்டாம். இரண்டும் ஒன்றேயாகும். ஆதலால் அந்தப் பசாசுக்கள் யாவரென்றால் மோக்ஷகதியையிழந்த துயரத்தைப் பொறுக்கமாட்டாமல் நம்மைக்கெடுத்து நரகத்திற் சேர்க்க நம்மோடும், வானவரோடும் பகைத்துவானவரைவெல்லமாட்டாமல் பாவம்விளைக்கும் பேய்க்கூட்டங்களாம். இது இப்படியிருக்க நீங்கள் இராக்ஷதர்கள் அநேகநாள் தவஞ்செய்தார்களென்றும், தபோபலத்தினால் அளவிறந்தவரங்களை யடைந்தாரென்றும் அடைந்த வரங்களால் வானவரோடு போர்செய்து அவர்களைப் புறங்காட்டச் செய்தாரென்றும், இப்படிப்பட்ட கதைகளைச் சொல்லுவது மயக்கமல்லவோ? அம்மயக்கந் திருப்படி நான் சொல்வதைக் கேளுங்கள்: அந்த இராக்ஷதர்களாகிய பேயினங்கள் நீதியாளுடைய வல்லமையால் மோக்ஷத்தினின்று தள்ளப்பட்டு மேகத்திலிருந்து விழுகின்ற இடிபோல விழுந்துகிடக்க நரகத்தில் மூடப்பட்டன. அந்த நரகம் யாதென்றால்: கடல் பொங்கிக் கரைபுரண்டாற்போலக் கொடியஊழித்தீ நிறைந்து இடித்த இடியோசையைப்பார்க்கிலும், நெருப்பில் வேகின்றவர்களது வெடித்த பேரோசை யுண்டாகிச், சகலதுன்பங்களுக்கும் இடமாகி, ஒருநொடிநேரம் நூறு வருஷம்போல வேகின்றவர்களுக்குக் காணப்பட்டு, ஊழித்தீயின் காணியாகிப் பூமியின் கீழிருக்குஞ் சிறைச்சாலையாகிய பாதாளலோகமேயாம். அந்தப் பாதாளமாகிய நரகத்தில் நெருப்பினால் வருந்துபவர்கள் இடைவிடாமலழுகின்ற கண்ணீர் மழைபெய் பெரிய அக்கினி சமுத்திரமாகிப், பூவுலகத் துன்பமெல்லாம் ஒருங்குகூட்டினாலும் ஒன்றுமில்லையென்னும் பெருந் துன்பத்தோடு பசாசுக்கள் தாங்களும் வெந்துநொந்தலறி, மற்றமனுஷர்களையும் வருத்தி அரசுசெய்யும். அந்நரகத்திலிருப்பவர் யாரென்றால்: ஒன்றாகிய மெய்யங்கடவுளை வணங்காதவரும், அக்கடவுளருளிய மெய்வேதகற்பனையைக் கடந்தவர்களும், கோபங், காமங், கொலை, களவுமுதலியவற்றை விரும்பிச் சாவானபாவத்தோடிறந்தவர்களுமாம். இவர்களுக்குத் துணையானோர் யாரென்றால்: கொல்லும் புலிகளும், சீறும் பாம்புகளும், மதத்த யானைகளும், கொடிய சிங்கங்களும், அவியாத அக்கினியும், மீளாத தங்கள் பாவமும், அலறுகின்ற கர்த்தநரோகங்களும், தீராத நோயும், பிறரையுந் தங்களையுஞ் சினந்த கோபமும், தங்களை ஓயாமலுபாதிக்கும் பசாசுக்களும், சண்டாளருமாம். வருந்தச்செய்கின்ற இவர்களல்லாமல் ஆறுதல் சொல்லித் தேற்றுவோர் ஒருவருமில்லை. ஆதலால் இப்படிப்பட்ட துன்பத்தோடு கிடப்பதற்கிடமாகிய நரகத்தின் முறைமையை யின்னுஞ் சொல்லுகின்றேன் கேளுங்களென்று மீண்டுஞ் சொல்லத் தொடங்கினார்.

அதெப்படியென்றால்: சகல துன்பங்களுக்கும், நடுநடுக்கப் பயங்கரத்திற்கும், இருப்பிடமாகிய நரகத்திலுள்ள ஊழிகாலத்தும் முடியாத கொடிய நெருப்பானது பூவுலகத்தில் மனிதர்க்குப் பயன்படுகின்ற நெருப்பைப்போலல்ல. அது நரகத்தினின்று மேற்கிளம்பித் தன்னுடைய ஓரொரு கொழுந்தினால் நக்கிப், பிரமாண்டமாகிய குளிர்ந்த பர்வதங்களைத் தண்ணீரையொப்ப உருகச்செய்வதாகும். பின்னும் ஆண்டவன் நல்லவர்க்கும் உதவியாக இவ்வுலகத்தீயை யுண்டாக்கிப், பாவிகளுக்குத் தமது நீதியின் கோபத்தையும், வல்லமையுங்காட்டி அவர்

களுக்கு ஆக்கினையாக நரகத்தீயை யுண்டாக்கினதினால், நரகத்தீ சூரியனையும்,
பூவுலகத்தீ மின்மினிப் பூச்சியை ,- ஒக்கும். இப்படிப்பட்ட நரகத்தீயானது
பொறிகள் சிதறக் கொதித்தும், கொழுந்துவிட்டெரிந்து புகைகிளம்பி இருண்டு
நிறைந்து பிரகாசமில்லாமலிருக்க, அதில் வேகும் பாவிகளையெல்லாம் சூரியதி
ந்து சுட்டாற்போல அவனவன்செய்த பாவத்தி னளவாகச் சுட்டெரித்துப்
பின்பு சுட்ட துவாரத்தின்வழியாக உள்ளே சென்று, மறுபடியும் வெளியில்வரு
ம்படி கண், வாய், மூக்கு, செவி முதலிய துவாரங்கள்வழியாய்ப் புறப்படுவதினா
ல் அதில் பாவிகள் சாம்பலாகாமல் அந்தத்தீயே படுக்கும் பஞ்சணையாகவும், உடு
க்கும் உடையாகவும், உண்ணும் உணவாகவுந், தரிக்கும் ஆபரணமாகவும், குளிக்
க்குந் தண்ணீராகவுங்கொண்டு, நெருப்பு மூச்சுவிட்டு அக்கினிக்கடலில் கரைகா
ணமலலைந்து திரிவார்கள். இன்னும் அந்தப்பாவிகள் சூளையில்வேகுங் கல்லைப்
போலவும், செக்கிலிட்ட எள்ளைப்போலவும், தங்களுக்குள் பின்னிக்கொண்டு
சேற்றி லகப்பட்ட முள்ளைப்போலவும், வில்லில் கட்டிய நாணியைப்போலவும்,
ஆலைக் கரும்புபோலவும், தென்னம்பாளையினெருங்கிய அரும்புபோலவும் அந்த
நரகத்தீயில் தப்பிப்போகாம லகப்பட்டு எப்பொழுதுஞ் சாவில்லாமல் நெருப்பி
ல்வெந்து இவ்வுலகத்தி லனுபவித்த அற்பசுகத்துக்கு எத்தனையோகோடி முடி
விராத துக்கத்தை யனுபவிப்பார். மேலும் அந்தப்பாவிகள் இந்தத்தீயினால் உபா
திக்கப்படுவதும் போதாமல், கொடிய பசாசுக்களால் ஒருபக்கம் தோல்களையுரி
த்தும், ஒருபக்கம் விடா மழையைப்போல அக்கினியைப் பொழிந்தும், ஒருபக்
கம் நெருப்புக்கட்டிலிற் கிடத்தியும், ஒருபக்கம் உருகின ஈயக்குழம்பினால் குளி
ப்பாட்டியும், ஒருபக்கம் உடலைக் கண்டகண்டமா யறுத்தும், ஒருபக்கம் நானா
வித பயங்கர உருவங்களைக்காட்டி யஞ்சச்செய்தும், தீப்பறக்கக் காய்ந்த நெரு
ப்பு அங்கியைத் தரிப்பித்தும், பாம்புகளை ஆபரணமாகச்சூட்டிப் புஷ்பசயனத்
தில் நித்திரைசெய்து வாழுங்களென்று அக்கினிச்சுவாலை வீசும் இருப்புமஞ்ச
த்தில் கிடத்தியும், சொரித் தவளைகளையும் விஷசர்ப்பங்களையும் நாறின மலங்க
ளையுஞ் சுடச்சுட அமிர்தமென்று குடிக்கக்கொடுத்தும், மலரைப்பார்க்கிலு மிரு
துவான உங்கள் உடலைத் தடவுவோமென்று அக்கினிக் கொழுந்துவிட்டெரி
யுந் துறடுகளால் சதையைக்கிழிக் காமநோய்க்கேற்ற மருந்து இதுவென்றும் பல
வகையாயுபாதிக்கப்படுந் தன்மையை நாம் சொல்லுந் தரமுமல்ல; நூல்களிலெ
ழுதுந் தன்மையுமல்ல; அந்தப்பாவிகள் பொறுக்குந் தன்மையுமல்ல. ஆதலால்
தீவினைக்கேற்றபயன் நரகத்திற் போனபின்பு தெளிவாயறியலாம். என்றுசொல்
லிப் பின்னும் அர்ச். சூசையப்பர் ஜனங்களை நோக்கி: பாவிகள் மெய், வாய்,
கண், மூக்கு, செவியென்னும் பஞ்சேந்திரியங்களால் நரகத்தி லனுபவிக்குந்
துன்பங்களைக் கேளுங்களென்று மேலுஞ் சொல்லத்தொடங்கினார்.

அதெப்படியென்றால்: பாவிகள் காமத்துக்கேற்ற அகிற்புகை, புனுகு, கஸ்
தூரிமுதலிய பரிமள சுகந்தத்தை முகர்ந்த நாசிகளுக் காக்கினையாக நரகத்துவா
ரங்களில் துர்க்கந்தம்வீசிய புகையை யூதப்பட்டுப் பூவுலகிலுள்ள சகல துர்நாற்ற
மலங்களெல்லாம் நரகத்தில் ஒன்றாய்க்கூடியதையொத்த அலைமோதுந் துர்க்க
ந்தமலக்கடலில் மூழ்கிக்கிடப்பார்கள். பின்னும் இன்பமென்று பாவத்துக்கிசை
ந்த மொழிகளைக்கேட்ட காதுகளுக் காக்கினையாகக் காதுகளில் பசாசுக்கள் அக்
கினி நாராசத்தை விட்டமாத்திரத்தில் பாவிகள்வாயாற் றீயைக் கொப்பளித்து
மயங்கி நிந்தைசொல்லுவோர் முழக்கத்தையும், புலம்பியழுவா ரோசையும், அக்
கினிக்கடலில் அமிழ்ந்துவார் பேரொலியும், புதிதாய்த் தினந்தோறும் நரகத்தி
ற்கு வருகின்றவ ரோசையும் இவைமுதலிய மற்றத் துன்ப ஓசையெல்லாங்கே

ட்டு வருந்துவார்கள். இன்னும் வாயினாற்செய்த குற்றங்களுக்கு அவ்வாய்க்கு ஆக்கினையாகப் பேயினங்கள் கொடிய விஷத்தையும், புழுத்த நாயின் ஊத்தையையும், மற்றத் துர்க்கந்தம்வீசும் கசப்பான பொருள்களையும் உண்ணக்கொடுத்து உதிரங்களொழுக வாய்களை யறுத்து, அறுத்தவாயில் நெருப்பிட்டமூக்கித் துன்பப்படுத்தப் பாவிகள் தீயைக் கொப்பளித்து அலறி அழுது வருந்துவார்கள். மேலும் கண்கள்வழியாகக் காமத்தை யுட்கொண்டாரென்று கண்களுக் காக்கினையாகப் பசாசுக்களெல்லாம் வண்டுகள்போ லுருவெடுத்துப்பறந்து கண்களைக் கிழித்துத் தீப்பொறிகளை யதிற்போக்கிப் பயங்கரமாகிய பல உருவங்களைக்காட்டப் பாவிகள் நித்திரையென்பது சற்றுமில்லாமல் கண்ணீரையும், நெருப்பையு மழைபோலச் சொரிந்து புலம்பி அழுது வருந்துவார்கள். இதுவல்லாமல் மேற்கூறிய நாலுபொறிகளுங்கூடி ஐந்தாம் பொறியாகிய உடலுக்கு இன்பத்தை விளைவிப்பதால், உடலினால்வரும் பாவம் அதிகமென்று அதற் காக்கினையாகப் பசாசுக்கள் நரகத்துன்பமெல்லாம் ஒன்றாகக்கூட்டிப் பெரு வாதையாகச்செய்ய இப்படிப் பாவிகள் மயங்கித்திகைத்துத் தீக்கடலில் மூழ்கி உலைக்களத்திற்பட்ட இரும்பைப்போல வெந்துவெந்து, மரங்களி னிலைகள்போலவும், மழைத்துளிகள்போலவும், கடல் மணல்போலவும், அவ்வளவு வருஷகாலஞ் சென்றும் நீங்காமல் முடியாத துன்பத்தை யனுபவித்துத் துன்பத்திற்குப் பயந்து இறந்துபோக விரும்பினாலும் இறவாமல் நரகத்திற்சென்ற முதல் நாள்போல எந்நாளுங் குறையாத துயரப்பட்டுக், கடைசியாய் நன்மையென்பது ஒன்றுமில்லாமலும், மோக்ஷவீட்டைச்சேரும் வழியில்லாமலும், தீவினைப்பகையை வெல்லயாதோர் வகையில்லாமலும் நித்தியகாலம் நரகத்தீயில் வேகுவார் என்றார்.

இவையெல்லாங் குசைமாமுநிகள் சொன்னபின்பு மீளவும் பாவிகள் நரகத்திற் புலம்புவதைச் சொல்லுகின்றார்: எப்படியெனில் சிலர் ஐயோ! மோக்ஷநன்மையை யிழந்து நரகச் செந்தீயில் முழுகவந்தோம் என்பார்; சிலர் ஐயோ! அற்பசுகத்தை விரும்பியதால் இங்கு வெந்தொழிகின்றோம் என்பார்; சிலர் ஐயோ! நாம்செய்த தீவினையினாலல்லவோ இக்கொடுமை நேர்ந்ததென்று புலம்பியழுவார். சிலர் ஐயோ! நாம் வாழ்ந்தபொழுதில் மின்னலைப்போலத் தோன்றியழியும் பொய்யான நன்மைகளைத் தேடிக்கொண்டதினால் வந்தபயனிதுவோ! என்பார். சிலர் கண்ணின்மேல் மாசுவைத்ததுபோல இருதயத்திற்கொண்ட பேராசையால் பிறர்கைப்பொருளைக் கவர்ந்ததினால் நரகத்தி லெல்லாத்துயரையுஞ் சேர்த்துவைத்தோமென்பார். சிலர் கொடியபகையைக்கொண்டு பூமியில் நமது பகைவரைப் பழிவாங்கியதால் இந்த நரகத்தில கொடியபசாசுக்கள் நம்மைப் பகைத்துப் பழிவாங்குகின்றன என்பார். சிலர் பலநூல்களையும் கற்றறிந்தும் அவற்றின்படி நடவாமல் காமாதுரராக நடந்தமையால் ஆண்டவ னீதிமுறையினால் சாகாமற்செத்து இங்கே வேகின்றோமென்று தளர்ந்து மயங்குவார். சிலர் மெய்யான வேதநூலை யிகழ்ச்சிசெய்து பொய்யான பல கதைகளையும் படித்துப் பொய்த்தேவரை வணங்கியதால் அந்தத்தேவர்களோடு, நாமும் அழுது வருந்துகின்றோமென்பார். இப்படிச் சத்தியத்தை யுணராமல் நல்லதருமத்தைநிந்தித்து அழிந்தபாவிகளெல்லாரும் அந்நரகத்தில் எந்நாளுங் கொடிய விஷத்தை யுண்பார். அதையுண்டும் பசியையாற்றார். உண்பதையுங் கைவிடார். மிகக்கோபத்தோடு முழங்கி யாரவாரிப்பார். தீக்கடலில் முழுகுவார். கரைகாணாமலும், நீந்தமாட்டாமலும் தீயோடு வெந்தொழிவார். என்று யாவருக்கும் பொதுவாக இவைகளைச்சொன்னபிறகு திரும்பவுங் குசைமாமுநிகள் வாமனைநோக்கித் தனியாகச் சொல்லுகின்றார்: பகைவரை வணங்கச்செய்யும் வேலையுடையானே! நீயி

ன்பமென்று மனத்திற்கொண்ட காமவாசையை மறுத்துத் தருமஞ்செய்யத்து
ணிவது அரிதென்றாயே அதற்கு ஆக்கினையாக நரகத்தில் வேகுவது எளிதெ
ன்பாயோ? ஆதலால் ஆசையால் விளைந்த பாவத்தைத்தீர்க்க உத்தம மனஸ்தாப
மும் நல்லொழுக்கமும் வேண்டும்; இல்லாவிடில் முடியாத நரகத்தீயில் வேகவே
ண்டும்; இவ்விரண்டிலொன்றே எல்லா மனிதர்க்கு முடிவாகும் என்றார். இதைக்
கேட்டிருந்தவர்களெல்லாரும் காதாற்கேட்டவற்றை கண்களாற்பார்த்ததுபோல
ச்சத்தியவேதநூலைக் கைக்கொண்டு தங்கள் பாவங்களைச் சிந்தித்துப் பயந்தழுது
இதுவே நமது ஆசையாகிய தீயையவிப்பதற்கு வழியாகுமென்று நினைத்து அவ
ர்களிற் சிலர் இன்பமாகக்கொண்ட பாவத்தினால் வரும் பயன் நரகமாதலால் து
ன்பமாகிய மாதவமே நல்லதென்பார். சிலர் நரகபயங்கரத்தை எண்ணுதவர்க ள
ல்லோ? பாவத்தை யின்பமென்று கொள்வாரென்பார். சிலர் பெண்களின் முகத்
தழகை விரும்புதலைப்பார்க்கிலும் வேறே நரகமும், பகையும், பழியும், பாவமு
ம், பயங்கரமுமில்லையென்பார். சிலர் மின்னலைப்போல அழியும் இவ்வுலகப் பொ
ருளைப்பார்க்கிலும் உயிரைக்கொல்லும் வேறு பகையில்லையென்பார். சிலர் நரக
த்தீயை நன்றாயாராய்ந்துபார்த்தால் அந்தத்தீயே காமத்தீயை யவித்து நம்மை
மோக்ஷத்திற் சேர்க்கும்வழியாகுமென்பார். இப்படி யவரவர்கள் அழுத கண்ணீ
ரோடு உள்ளத்திலுள்ள பாவத்தீயையவித்து, மனங்குளிர்ந்து நல்லதரும வொழு
க்கங்களைச் செய்யத்துணிந்தார்கள்.

இது இப்படியிருக்கத் தேன்மலர்க்கொடியோனாகிய ஞானசமாமுனிகள் தமது
கமலவாய்மலர்ந்தருளிய தேன்மொழியினால் சந்நிசிரணத்தையொத்த வேதநூ
லினைத்தையும் வாமனென்பவன்கேட்டுக் காய்ச்சியபால் பொங்குவதுபோல உள்
ளத்தில் பொங்கிய மனஸ்தாபத்தினால் ஆறுகக்கண்ணீரைவிட்டழுது பாவச்சிந்
தையைமுற்று மறுத்துக் ஞானமுனீந்திரரை நோக்கிச்சொல்லுவான்: நூற்கட
லினைத்தையுங் கடந்த அறிவும், பெருங்கருணையும் நிறைந்த ஐயனே! உமது வா
ய்மொழியாகிய பாற்கடலில் எனது கண்களாகிய தாமரைகள் இமையாமல் மல
ர்ந்து, திருவாய்மலர்ந்தருளிய உபதேசத்தைச் செவிகுளிரக்கேட்டது மல்லாமல்
எனக்குத் தீயோரடையும் நரகபயங்கரத்தையும், பின்பு நல்லோரடையும் வான
வீட்டையுங்காட்டினீரென்று சொல்லிவாமன்ஞானசமாமுனிகள் திருப்பாதங்களில்
விழுந்து வணங்கியழுதகண்ணீரால் அப்பாதங்களைக் கழுவினான். அப்பொழுது
அறவிகளுக்கெல்லாம் இறைவனாய் விளங்குஞ் ஞானசயப்பர் காலில்விழுந்த வா
மனை இருகைகளாலுந் தாங்கியெடுத்து, இருவரன்பு முயிரும், ஒன்றாகும்படி மா
ர்போடு தழுவி அவன் கண்ணீரைத்துடைக்கத் தற்சமயம் உரைத்த உரைகளால்
அவன் முழுதுந்தேறி மீளவுஞ் ஞானசமாமுனிகளை நோக்கிச் சொல்லுகின்றான்: த
வத்தின் கடற்கரையைக்கண்ட சுவாமி! நீர் வானவர்வணங்கும் வேதநூலை உமது
தேன்மொழியால் விரித்துரைத்துத்தந்த நல்லறிவினால் யானையாகிய என்மதமெ
ல்லாமொழிந்தது; மேலும் நீர் நரகமானது கொடிய நெருப்பும், இருண்ட புகை
யும் நிரம்பிய உலகமென்றீர்; அதனால் எனக்கு நரகநெருப்பு காமநெருப்பை ய
விக்கும் குளிர்ந்ததடாகமாவும், அங்குள்ள புகை மனத்தைத் தெளிவிக்குந் திரு
விளக்காகவும் ஆயிற்று. என்றுசொல்லிப் பின்னும் வாமன் தன்னெஞ்சோடுசொ
ல்லுகின்றான்: எப்படியென்னில் ஜென்மப்பாவத்தோடுவந்த தீவினையாலழியும்
என்னெஞ்சமே! நீ அகிற்புகை முதலிய பலவாசனைப்புகைகள்வீசத் தேன்மலர்ப
ரப்பிய மஞ்சத்திற் படுத்துப், பூங்குழல் மகளிரதுகரத்தில் இப்பொழுது சயனி
த்தபடியால் இறந்தபின்பு அக்கினிக்கட்டிலிற்படுத்து ஊழியுள்ளகாலங் கொடிய
புண்படுவது உனக்கு அழகோ? பின்னும் என்னெஞ்சமே! நீ பிறைச்சந்திரனை

யொத்த நெற்றியின்கீழிருக்கும் அம்புகளைப்போன்ற கண்களைவிரும்பி விலைமாத
ர் வஞ்சனையில்மயங்குவது நரகத்தில் நெருப்பும், கொடியவேலும், வாளும், வில்
லும் இருகண்களிலும்பாய்ந்து மலையாறுபோலக் கண்ணீர்விட்டழுவதற்குக் கார
ணமாகுமல்லவோ? மேலும் என்மனமே! உயிரைக்கொல்லு மாதர்களது பொய்
வாய்மொழியைத் தேனினுமின்பமொழியென்று காதுகுளிரக்கேட்பது செத்த
பின்பு நரகத்தில் வாதனைபொறுக்கமாட்டாமல் பாவிகளலறி யழுகின்ற ஓசையை
யும், பசாசுக்கள் கோபத்தோடு அதட்டுகின்ற ஓசையையும்,காதுபிளக்கக்கேட்ப
தற்குக் காரணமாகுமல்லவோ?மீளவும் என்னுள்ளமே!நீ நல்ல வுயிர்களைப்பிடிக்கும்
படி வீசிய ஆபரணங்களாகிய வலையிலகப்பட்டுக் காமக்கடலில் அமிழ்ந்திறுவாய்;அ
து நரகத்திக்கடலிற்கிடந்து சர்ப்பங்களுமிழ்ந்த நஞ்சினையுண்டு சாகாமற் செத்து
வருந்துவதற்கு ஆதாரமல்லவோ? இன்னும் என்னெஞ்சமே! கொம்பினின்றும் பி
ரிந்த மலரழிவதுபோல அழியும் மாதர்களழகைவிரும்பி மலரி னிதழினின்றூறி
யுந் தேன்றுளியையொத்த சிற்றின்பத்தை நக்கி,வான்வீட்டுவாழ்வுகளை யிழந்து
நரகத்தில் வேகின்ற அறிவில்லாரிலும் அறிவில்லாருண்டோ? இல்லை. ஆதலால்
சுழல்காற்றின்முன் முதிராதகாயும், மலராதபூவும், பிஞ்சும் உதிருமென்றறிந்து,நீ
இளமைப்பருவத்தை நம்பாமல் காமத்தால்வரும் நரகாக்கினையை நிதானித்துந
ல்லொழுக்கங் கடைப்பிடித்து இந்நாள்வரையிலும் நக்கினகாமவிஷத்தையுமிழ்ந்
து பிழைக்கக்கடவாய். திரும்பவும் என்மனமே! மெழுகினாற் சித்திரித்த பிரதி
மைகள் தீயின்முன்னழிவதுபோல நீநினைத்த அருங்காரியங்களெல்லாம் நரகத்
தீயில் வெந்தொழியும். ஆதலால் நமது ஐயனாகிய ரூசைமுனிவரர் போதித்த
ருளிய வேதநூலாகிய கண்ணாடியில் முன்செய்த பாவங்களைத்தெரிந்தபின்பு ந
ல்ல தவமாகிய தடாகத்திற்குளித்துப் பாவமலங்களைக்கழுவிக் கடைத்தேறக்க
டவாய். அல்லாமலும் என்னுள்ளமே! நீ முன்னம்விரும்பிய பாவங்கள் இன்பமா
கத்தோன்றியபொழுதும் நரகவேதனையைப் பலதரமுஞ் சிந்தித்துத் தளராதம
னவூக்கங்கொண்டிருக்கக் கடவாயென்றான்.

இப்படி வாமன்சொல்லியபிறகு சூழ நின்று கேட்டிருந்தவர்களிற் சிலர் நம
து மனத்தைநற்றிருப்பிய இவ்வேதநூலுக்கு உவமைசொல்லிப் புகழ்வதற்கு நா
மெம்மாத்திரம்? எல்லாவற்றையும் அலங்கரிக்குஞ் சூரியனுக்கு மற்றோர் ஆபர
ணம்வேண்டுமோ? என்பார். சிலர் நரகபயங்கரத்தை யறிந்ததினால் மோக்ஷவ
ழியைக்கண்டோமென்பார். சிலர் ஆசையைத்தவிர உயிரைக்கொல்லும் பகையு
மில்லை; படித்தநூலை மறக்கச்செய்யும் வேறு காரணமுமில்லை; நரகவேதனைவிளை
வதற்கு வேறுவிதையுமில்லையென்பார். சிலர் பாவிகளிறந்தபின் னனுபவிக்கும்
நரகவேதனையை உயிர்வாழ்பவரெல்லாம் உற்றுயோசித்தால் தாங்களிறந்தபின்
நரகிற்சேராமல் செல்வத்திற்சிறந்து வானவீட்டில் மகிழ்ந்திருப்பாரென்பார். இ
ப்படியாவரும் ஒருவர்க்கொருவர் சொல்லிக்கொண்டு ஞானத்திற் றெளிந்துமோ
க்ஷபாதையைக் கைக்கொண்டு முன்னமே நிந்திக்கப்பட்ட வாமன் உண்மைதெ
ளிந்து ஞானகாட்சியிற் சிறந்தமையால் அவனையும் புகழ்ந்து செல்வருடைய பா
வமும், புண்ணியமும் சூரியகிரணத்தையும், பிரகாசத்தையும் ஒத்திருக்குமென்
றுசொல்லி மகிழ்ச்சியிற் சிறந்தார்கள்.

இப்[illegible]யாவரும் மகிழ்ச்சி கூர்ந்திருக்கும்பொழுது சுருதிவடிவாகிய ரூசை
மாமுனி[illegible] மழைபெய்தகாலத்தில் புழுதியெழ வுழுதநிலத்தில் விதைவிதை
த்தபோல வாமன்தெளிந்த மனமுடையவனாகவிருப்பதால் அவன் றுன்பத்
தில்துக் தளராமற்படிக்கு அவனை முழுதும் இரகூஷிக்குங்காலம் இதுவே-

று துணிந்துமீளவும் வாமனைநோக்கிச்சொல்லுவார்: மதயானையின் திறத்தைக் கீழ்ப்படுத்திய வல்லமையிற்சிறந்தோனே! நீ உயிர்க்குப்பகைசெய்யும் ஐம்பொறிகளையும் ஆராய்ந்தடக்கி, ஆமையைப்போலாகிப் பாம்பின் சிறியபல்லின்விஷம் பெரியயானையையுங் கொல்லுவதுபோல ஐம்பொறிகளால்வரும் பகையைச்சிறியதென்றெண்ணாதே. நீ வெறுத்தொழித்த பாவங்கள் விளையும் இடத்திற்குத் திரும்பவும் போகாதே. முழுதும் நீங்கியதுபோலக் காணப்பட்டு நீங்காமல் உறக்கங்கொண்டிருக்கும் கொடிய ஆசையானது சமயம்வந்தபோது விழித்தெழுந்து உயிரைக்கொல்லும். இதுவுமல்லாமல் மனத்திலுள்ள காமக்கொடுந்தீயைமுற்றும் அவித்தோமென்று நம்பாதே. ஏனெனில் அவிந்தாற்போல மங்கிக்கிடக்குந்தீயும் காற்றின்முன்பலமுறை கிளம்புவதுபோல அந்தக்காமத்தீயுங்கிளம்பியுயிரைக்கொல்லும். மீளவும் வேதாகமத்தி லெழுதப்பட்டபடியே * பூர்வகாலத்தில் யூதர் ஒரு பாழ்ங்கிணற்றி லொளித்துவைத்த நெருப்பு நெடுங்காலத்தாக்குப்பின் குழம்பிய தண்ணீர்போலிருக்க அதை அந்தயூதருடைய மக்கள் குடங்களிற்கொண்டுபோய் விறகுக்கட்டுகளின்மேல் ஊற்றினபோது சூரியகிரணம் பட்டமையால் நீர்போலிருந்தநெருப்புத் தன்குணமாறாமல் பற்றியெரிந்தது. அதுபோலக் காமத்தீ மனத்துள்ளவிந்ததென்று தோன்றினாலும் மாதர்களது அழகியமுகத்தைக்கண்டபோது மனம் புண்படும்படி பற்றியெரியும். அன்றியும் நமது உயிரைப்பகைத்துத்திரியும் பசாசுக்கள் உயிரைக்கொல்லும் பலமுயற்சிகளைச் சுற்றிலும்பரப்பி நடுவே தீவினைவிளைக்கும்வலையை விரித்திருப்பதால் அதில் அகப்பட்டுத்தப்புவது அரிதென்றெண்ணி அசையாததவத்தின் துணையைக் கொண்டு அவ்வலையினின்று நீங்கவேண்டும். இன்னும் வில்லைவளைத்துச்செய்யும் போருக்கு எதிர்நின்று யுத்தம்பண்ணுவதுபோலக் காமப்போருக்கு எதிர்நில்லாமல் பின்னோடினால் ஜெயத்தையடைவாய். என்றுகூறித் திரும்பவுஞ்சுற்றிலிருப்பவர்களை நோக்கிச்சொல்லுவார்: உடலாகியவண்டியை யோட்டுகின்ற சாரதிகளே! ஞானமும், ஊக்கமுமாகிய எருதுகளைப்பூட்டி உடலாகியவண்டியை நடத்திவருகையில் அதில் ஆசையாகிய சரக்கை ஏற்றிப் பாவமாகியசேற்றிலமிழ்ந்தி உயிராகிய அச்சாணிமுறிந்தபின்பு வேறு உயிராகிய அச்சாணியில்லாமையால் பலர் நடக்கக்கூடாமல் நரகத்திலவெந் தழுவார்கள். நீங்களோ சன்மார்க்கத்தையறியும் ஞானமும், அதற்குவரும் இடையூற்றைத்தடுக்கும் ஊக்கமுமாகிய இரண்டெருதுகளைப்பூட்டி உடலாகிய வண்டியில் தருமமாகிய சரக்கை ஏற்றி உயிராகிய அச்சாணி முறிவதன்முன் சாவதானமாய் மோக்ஷக்கரையிற் சேருங்கள் என்றார். இப்படிச்சூசைமுனீந்திரர் சொல்லியபோது அன்னங்கள் விளையாடுஞ் செந்நெல்சாய்ந்துகிடக்கும் வயல்சூழ்ந்த அந்த எகித்துநாட்டார் யாவரும் சூரிய கிரணத்தைத் தாமரையுண்டதுபோலச் சூசை மாதவமுனிவர் சொன்னவுணர்வுகளைக் காதுகளினாலுண்டு உள்ளத்திற்றெளிந்து சங்குகள் பனித்துளிகளை முத்துகளாகச் செய்தாற்போலப் பழையமயக்கத்தை நீக்கித் தருமச்செய்கையாக வாழ்ந்திருந்தார்கள்.

வாமனுட்சிப்படல முற்றிற்று.

* மகாபெயராகமம். 1-அதிகாரம். 19-வசனம்.

இருபத்தொன்பதாவது, வேதக்கெழுமைப்படலம்.

தாயணி யாகமார்பிற் றனையனே துஞ்சும்போ ல
வேயணி யாகவேய்ந்த வேதநூல் துஞ்சுமார்ப ன்
காயணி யாகவாய்ந்த காவின்மீண் டொருநாள்வை கி
வாயணி யாகவோதி வகுத்தநீ ரைத்தான்மன் னே.

இந்தன்மையாகத் தாயின்மார்பில் முத்தாசமாகப்படுத்து நித்திரைசெய்யு
ங் குழவியைப்போல வேதநூலே யாபரணமாக மார்பிலணிந்த குசைமாமுனிகள்
பின்னும் ஒருநாள் கனிகளை யாபரணமாகவுடைய ஒரு பூந்தோட்டத்தில் வந்தி
ருந்து சத்தியவேதநூலை விரிவாயெடுத்துச் சொல்லிவருகையில் சுற்றிலுமிருந்
த ஜனங்கள்யாவரும் காதாரக்கேட்டுத் தேனுண்டவண்டுகளைப்போலச்
குசைமாமுனிகளைப் புகழ்ந்துகொண்டாடிவந்தார்கள். இதைப்பொறுக்கமாட்டா
த கனிவளர்ந்தவுடலும், நடுநடுக்கிய தலையும், தொங்கியதசையும், குருட்டுக்கண்
களுமுடைய சாமியென்னும் ஒருகிழவி ஒருகோலையூன்றிவந்து நடுவேநின்று வா
னவனுருவோடுநின்ற குசைமாமுனிகளை நோக்கி: ஐயா! இனிமேல் காய்க்குமெ
ன்று நினைத்து மலர்ந்தபூவைநம்பிக் கையிலுள்ள கனியை யெறிந்தாற்போலப் ப
லகாலுஞ்செய்த தவப்பயனுக வணங்கிய தேவரையிகழ்ந்து நவமாய்வந்த வேத
நூலை ஒருவன் கைக்கொள்ளுவது அழகோ? என்றாள். அதற்குச்குசையப்பர்
ஒருவன் நேர்மேற்கிருக்குந் தேசத்துக்குப்போகப் பயணப்பட்டுச்சென்று வ
ழிதப்பி நெடுநேரமாய் வேறொருதிசையிற் செல்லுகையில், அதைக்கண்ட வே
றொருவன் இதுவழியல்ல அதுவழியென்றுகாட்டினால் பிரயாணக்காரன் முந்தி
யே நேர்வழியில் போகாததைப்பற்றிவருந்துவானேயொழியப் புதிதாய்க்காட்
டிய நல்வழியிற்செல்லாமலிருப்பானோ? அதுபோல நவமாக நான்காட்டியவழி
வான்வீட்டுவழியாகையால் முன்னடந்தவழியை நீங்கி யிவ்வழிநடப்பது அறி
வாகுமென்றார். அதற்குக்கிழவியாகிய சாமி நீர்காட்டியவழி மெய்வழியென்று
நீரே சொன்னாற்போதுமோ? என்றாள். அதற்கு மாதவமுனிவர் நான் அந்நெறி
நன்னெறியென்று சொன்னால்மாத்திரம் நீங்கள் நடக்கவேண்டாம் அவ்வழியறி
வுக் கொத்திருந்தால் அதனைக் கைக்கொள்ளவேண்டுமென்றார். அதற்குச் சாமி
நீர்சொல்லு மொழிகளெல்லாங் கண்கட்டுவித்தையாகுமென்றாள். அதற்குச் கு
சைமாமுனிவர் ஒருவனுக்குண்டான கண்படலங்கள் மெல்லமாறிமுன்போல உள
ளேயும் ஆறியிருந்தால் அதுமாயவித்தையாமோ? அதுபோல நான்சொல்லும்
வேதவழியினன்மையை அதைக் கைக்கொண்டவர்களடையும்பயனே காட்டுமென்
றார். அதற்குச்சாமி, ஐயா! நான்நேற்று இரவில் ஒருதடாகத்தின் ஜலமெல்லாம்
வற்றி அதிலலர்ந்த பலபுஷ்பங்களும் வாடியிருக்க ஒருகனா கண்டேன் அந்தக்
கனாவின்பயன் உமது போதனையைக்கேட்ட இந்நாடு இனிமேல் வீணாயழியுந்
தன்மையா யிருக்கின்றது என்றாள். அதற்குச் சுற்றிலுமிருந்தவர்கள் கிழவி
யைப்பார்த்து அம்மா! பகலிற்கண்தெரியாத கிழவிகள் இரவிற் காட்சிகாண்பது
நியாயந்தானேயென்று சிரித்தார்கள். அதற்குக்கிழவி சிரித்தவர்களைப்பார்த்து
நீங்களாவது வடிவோடு காணப்படும் கனா பொய்யென்றும், அதில் பொருளில்
லையென்றும், தோன்றுங்காரண மின்னதென்றுஞ் சொல்லுங்களென்றாள். உட
னே குசைமாமுனிவர் ஒருவன்கனாவிற்கண்ட காக்ஷியானது கனாவிற்கண்ட திர
வியத்தைப்போலப் பொய்யேயாகும். அதனை நினைக்குந்தோறுங் குற்றமேயல்
லாமல் பயனொன்றில்லை. ஆதலால் கனாவின்குணங்களை நானேசொல்லுகின்றே
னென்று மீளவுஞ் சொல்லுவார்: நினைவு, மனப்பற்று, பித்தம், என்னு மூன்று
மே கனாவிற்குக் காரணமாம். அதெப்படியென்றால்: சித்திரப்படத்தைப்போலப்

பகற்காலத்தில் கண்முதலிய வுறுப்புகளை வளர்த்த விருத்தியெல்லா. நித்திரையில் பதி த்திருப்பதினால், இரவில் கனவுதோன்றி நினைவை மயக்குவிக்கும் பொய்மைத் தோற்றுவிக்கும். இவர் பகலில் பானையையும், பறவையையும் கண்டபின்பு இர வில் பானை ஆகாயத்தில் பறப்பதுபோலவுங் காண்பார். இவற்றிற்கெல்லாம் நினைவே காரணமாகும். இரண்டாவது: கண்ணுடி தன்னைமறைத்தபொருளைக் காட் டுவதுபோல மனத்திற்பற்றிய பொருளைக் கனவிற்காண்பதினால் தாய்மார் இற ந்த மக்களைக் கனவிற்காண்பார், பயந்திருப்பவர்கள் படைவருவதாகக்காண்பார், சுவியாதியிற் கிடப்பவர் தாகமிகுதியால், தண்ணீர்த் தடாகங்களைக் காண்பார். பகைவர்மேற் பழிவைத்திருப்பவர் அப்பகைவர் கெட்டு மாறிவதாகக்காண் பார். வறுமையோர் செல்வம் வருவதாகக்காண்பார். இவற்றிற்கெல்லாம் மனப் பற்றுதலே காரணமாகும். மூன்றாவது, இவர்திருள்சூழப் புகைபோர்த்தது போ ல அறிவுமயக்கப் புகைந்து பித்தந்தலைக்கேறுவதினால் ஒழுங்கில்லாதனவு க ண்டு அதற்கு அஞ்சிப்பதைத்துப்பின்னும் அஞ்சாமலிருப்பார். இவற்றிற்கெல் லாம் பித்தமே காரணமாகும். ஆதலால் பகற்காலத்திலும் ஒழுங்கில்லாமற் பிதற் றும் அத்தப்பித்தருடைய சொல்லைப்போல இரவில் மெய்போலக் காணப்படுங் கனவு பொய்த்திருக்குமல்லவோ? என்றார். இவையெல்லாங்கேட்டிருந்த விறலிச் சாமி என்பவன் வெளியேக்காணுதபடி நோயுள்ள கண்களை மூடிக்கொள்வது போல மனத்திலொன்றுந் தெளியாமல் வயிரம் பற்றியமரம் கைக்குவளையாத துபோலவும், பழமையாகிய புண் ஆறாததுபோலவும் வஞ்சனை மாயத்தை மாற் ருமல் ஒருபுறம் ஒதுங்கி கிடந்தான்.

இப்படிக் கோபத்தோடு சென்ற விறலியானவன் எதிர்நாட்டுக்கு நன்மை வரும்படி மாதவமுநிவர் சொல்லிய வேத உணர்வுகளை மறைக்கப் பிரயாசைப் பட்டுத், தனது வஞ்சனைநிறைந்த நெஞ்சோடு புலம்பிச் சொல்லுவான்: இந்த எதிர்நாட்டில் பொன்னுற் சமைத்த எனது தேவர்கோயிலெல்லாம் அடி யோடு தகர்ந்துவிழுந்தும், இன்னும் நறுமணை வாழ்கின்ற நாடுகளைக்காட்டி வணங்கிய பழைய தேவர்களை யாவருமிகழ்ந்தும் நாடு, குலம், முறைமை ஒவ் வொன்றும் பாராமல் யாவரும் இரக்ஷணியவேதாசாரியாகிய ஒருமுநிவன் கூறிய ஞானவேதத்தைக்கைக்கொண்டிருப்பதல்லாமல், மிகுந்தவல்லமையுடைய ராமெனப்படுவாரும் அவ்வேதத்தைக் கைக்கொண்டபின்பு மாத்த வேதத்தைப் பின்பற்றியிருப்பார்கள். ஆகையால் இனி சும்மாவிருப்பது பாவமாகும்; இதற் குத் தகுந்த யோசனைசெய்து, எப்படியாகிலும் அந்த ஞானவேதத்தைக் கெ டுப்பேனென்று நிச்சயித்துக்கொண்டு அமர்ந்து சிந்தனைசெய்தான். அப்போது அந்நாட்டில் பழமையாகத் தேவனென்று வணங்கப்பட்ட பசாசு பல காலமாகு ஞானமுநிவர்மேல் வைத்த பகையையெண்ணி, இதுதான் நல்ல சமய மென்று யோசித்து அந்தச் சாமியினது கனவில் ஒரு பூஞ்சோலையில் அவன் வணங்குந் தெய்வவடிவமாகத் தகதகவென்ற ஒளிவருவதுபோலக் காணப் பட்டது. அந்தப்பசாசைக்கண்டவுடனே வணங்கிச் சுவாமி எல்லா ருக்கும் இன்பமாயக்கும் நீ வருத்தமென்ன? அளவிறந்த திறமுடையவனு க்கு வந்த பகையென்ன? அப்பகையைத் தீர்க்க என்னுலாகவேண்டிய தென்ன? என்று சொல்லிப்பின்னுந் தொழுதுவணங்கினான்.

இதைக்கண்ட பசாசு மின்னிறுப்போல அவனைப்பார்த்துச் சொல்லுகின் றது: நக்ஷத்திரக் கூட்டங்களைப்போலப் பல விளக்குகளையேற்றிப் பரிமள புகை காட்டிப் பொன்பதித்தகளைத் துப்பட்டு, நவரத்தினங்களாலும் அலங்கரிக்கப்

பட்டு, விளங்கிய நமது ஆலயங்களெல்லாம் அடியோடே தகர்த்தன. நேமத்திரைத் தவிர மற்றவரெல்லாரும் குலம், நாடு, பெருமையெல்லாமிழந்து ஒரு முனிவன் பிதற்றிய சொல்லைக்கேட்டு என்னைக் கைவிட்டார்கள். பெருகிவரும் வெள்ளத்துக்குமுன் அணையிட்டதுபோலத் திரண்டுவரும் இந்தத் தீமைக்கெல்லாம் நீயுதவிசெய்தாலல்லாமல் வேறு பயனில்லை. ஆதலால் இந்தப்பகையெல்லாம் நீயே யறுத்தெறியவேண்டும் என்றது. இவற்றைக்கேட்ட காமி கொல்லென் றலறிப் பதைத்தெழுந்து கனவிற்கண்ட, வெளியும் உருவமும் ஒன்றுங்காணாமல் கண்ணீ ராறுகச்சிந்தியழுது, பின்பு உயிரை யுடல் தேடுதல்போலப் பலவாறுகத் தனக்குள்ளே யோசித்து ஒன்றுந் தெளியாமல் கடைசியாய் ஒரு உபாயந் தட்டுப்பட்டுத் தனக்குள் தானே சொல்லிக்கொள்வாள்: வான்மேல் வணங்கப்படும் சத்தியவேதமாக அந்த முனிவன் சொல்லிவரு மொழிகளைத் தடுத்துப் பேச நமக்கு வல்லமையில்லை அது அரசர்களுக்கே தகுதியாகும். ஆகையால், நூலின் முறையைப் பார்த்தவனும், பொங்கிய முன்கோபமே நீதியாகக் கொண்டவனும், இடியையொத்த கொடியவனும், இவ்வூர் அரசனுக் குகந்தவனும் நினைத்ததை முடிப்ப வல்லமையுள்ளவனும், அருளா நெஞ்சினனுமாகிய காவலனென்னுஞ் சேவகனிடத்தில் நாம் போய் இந்தக்கொடுமையைச் சொல்லுவோமானால், நமது சொல்லுக்கு அவன் இரங்கிக் கொடிய கோபத்தினால் அவ்வேதத்தைப் படியோடே பெயர்த்தெறிவானென்று சொல்லிக்கொண்டு அதிவேகத்தோடு அவனிடமெழுந்துபோயினாள்.

இவ்வண்ணமாகச் சென்ற பாவம்நிறைந்த கிழச்சாமியானவள் கொங்கள் தோறும் கொடிகளாடாநிற்கும் ஒரு மாளிகையில் நவரத்தினாசனத்தில் வீற்றிருக்கும் படைவீரனாகிய காவலனைக்கண்டு, அவன் பாதங்களில் விழுந்து அழுத மாத்திரத்தில் அக்காவலன் கிழவியோடு தானுமழுது, அவளைத் தூக்கித்தேற்றி நீ வந்தகாரியத்தைச் சொல்லென்று கேட்கக், கிழவி காவலனைப்பார்த்துக் கனியவுடலைக் கோலின்மேல் ஊன்றிநின்று பெருமூச்சுவிட்டு மழைபோலக் கண்ணீர் சொரிந்து சோர்ந்து அயர்த்தோடு சொல்லுவாள்: வில்லின் மாரியால் போர்க்களத்தை வென்றுமதயானையைப்போலப் பின்வாங்காத வல்லமையையும் மன்மதனையும் வென்ற அழகுமுடையவனே! நான் சொல்வதையெல்லாஞ் சற்றுக்கவனமாய்க் கேட்கக்கடவாய். அதாவது: குலமும், உறவின் முறையுமில்லாத யாரோ ஒரு அந்நியன் முனிவனைப்போலத் தவவேடம் பூண்டுவந்து நமது நாட்டிற் குடியேறிப் பனிபோற் குளிர்ந்த அன்புகாட்டி நூதனமான ஒரு வேதத்தைப் போதித்ததினால், தேன்மொழியும் இந்த நகரத்தார்களெல்லாரும் செல்வம் விளையும் இந்நாடு தாழ்வடையும்பொருட்டு அம்முனிவனது கனிந்த சொல்லாகிய கண்ணிவலையிலகப்பட்டு, நாம் வணங்கிவந்த பழைய தேவர்களையெல்லாம் நீக்கித்தள்ளி இருக்கு, யசுர், சாமம், அதர்வணமாகிய பழைய நாலுவேதங்களையு மறந்து புதிய வேதத்தைக் கைக்கொண்டார்கள். இது மாயமோ? மயக்கமோ? என்ன காரணமோ? நானறியேன். ஆதலால் நீ முன்னமே பூவுலகத்தை பிரகாசித்தாய்; இப்பொழுதோ பொன்னுலகத்தையும் பிரகாசிக்கவேண்டும். நீ முன்னம்யுத்தகளத்தில் உன்னைப்பகைத்தவரை வென்றாய். இப்பொழுதோ நமது தேவரைப் பகைத்தவரை வெல்லவேண்டும். யாவரும் பழையவேதத்தைத் தள்ளிப் புதிய வேதத்தை யனுசரித்தமையால், பொன்னுற் கட்டப்பட்ட தேவாலயங்களைத் தகர்த்தன. பின்னும் நமது தேவரும் என்று சொல்லி விழுக்கழிவாரோ? என்று சொல்வதற்குள் கிழவி துக்கத்தினால் சோர்ந்து தரையில் விழுந்தாள். விழுந்த கிழவியை காவலன் தூக்கித் தேறுதல்சொல்லி அவள்

மகிழும்படி நாலிந்து அரிந்திருக், நீசரும் நமது தேவாராதனையை விட்டதினுல் நீ மயங்கி யழுவாயோ? என்றுன். அதற்குச் சுரமி ஐயா! நீ சொல்லியது நன்ருயிருக்கிறது; பேர்போன பூமனென்பவனும், கல்வியிற்றேர்ந்த புரட்டனென்பவனும், செல்வத்திலுயர்ந்த தாமனென்பவனும், சிரீத்தனென்பவனும், புகழ்கடந்த வீரனுகிய வாமனென்பவனும், இன்னு மற்ற அறிவுள்ளவரும் வெள்ளம்போலத் திரண்டு அப்புதியமறைக் குட்பட்டார்கள். அல்லாமலும் இன்றைய ராத்திரியில் நமது தெய்வமும் என்கண்முன் தோன்றித் தன்னை யெல்லாருங் கைவிட்டுப்புதிய வேதத்தைப் பரம்பச்செய்கிறார்களென்றும், அதையடியோடே கெடுக்கவேண்டுமென்றும் எனக்குச் சொன்னமையால், நானப்பொழுது பெலிந்து வருந்திப் பின்பு உன்னை நினைத்துத் தேறினேன். தேவர்களுனக்கு மிகுந்தசெல்வமும், வீரமும், கீர்த்தியுந் தந்தது, தேவர்களுடைய இக்கட்டைத் தீர்ப்பதற்கல்லவோ? ஆகையால் நீ தர்க்கஞ்செய்யப் புகுந்தால் அறிவில் மிகுந்த முனிவனுகிய அந்தச்சுருஷ உன்னை வென்றுவிடுவான். உனக்கும், அரசனுக்கும் பிரியத்தோச முண்டானதினுல், அரசனுக்குக் கோபம்வரும்படி இவையாவுமெடுத்துச்சொல்லி இராஜதண்டனையை யாவருக்கும் விதித்தால், அத்தண்டனைக்கு யாவரும் பயந்து பழையவழியிற் றிரும்பி நமது தேவனை வணங்குவார்கள். நீ நினைத்தால் நினைத்தபடி முடிப்பது உனக்கருமையாமோ? என்று நாவகனை வணங்கினுள். இதைக்கேட்ட நாவகன் வாமன்முதலிய மற்றப் பெரியோரெல்லாம் புதுவேதத்தைக் கைக்கொண்டாரென்றமையால் மிகவுங் கோபித்துக், கிழவியை நோக்கி: அம்மா! தாயே! நீ யுன்வீட்டுக்குப்போ; நீ களிகூரும்படிசெய்வேனென் றவளை யனுப்பிவிட்டுப் பின்பு பொங்கிய கோபத்தோடு யோசிக்கலாயினுன்.

இவ்வண்ணமாக நாவகன் யோசனையிலிருக்கும்போது அவனைப்பெற்ற பிதாவாகிய அறிவிற்சிறந்த குணனென்பவன் நூற்றிருபதுவயதுக்கு மேற்பட்ட பிராயமுடையவனுய்ப், பவளத்துண்டு பாற்கடலில் தோன்றுவதுபோல வெண்மயிர் பரப்பியஒருகட்டிலில் முதிர்ந்தவயதினுல் படுத்திருந்து, சுகந்தத்தினுல் மலரையும், புகையினுல் நெருப்பையும் அறியும் பிரமாணம்போலத் தனது குமாரனது முகக்குறிப்பினுல் அவனுள்ளத்திலிருக்கும் கோபச்செய்கைகளை யறிந்து மகனை யருகே யழைத்துச் சொல்லுவான்: அப்பா! மகனே! 'அடுத்ததைக்காட்டும் பளிங்குபோல் நெஞ்சங் கடுத்ததைக் காட்டுமுகம்;' என்பார். அதுபோல உன் முகக்குறிப்பினுல் உன் மனத்தில் ஏதோ ஒரு விதனங்கொண்டிருப்பதாகத் தெரியவருகின்றது. அதை நானறியும்படி பயப்படாமல் சொல்லவேண்டும். ஏனெனில், கண்களுக்குத் தீட்டிய அஞ்சனத்தைக் கண்கள் அறியாததுபோல ஒவ்வொருவருந் தங்கள் குற்றங்களைக் காணமாட்டார் என்றுன். அதற்கு நாவகன் எழுந்து, மிகவும் பயங்கரத்தோடு எதிரே நின்று இந்நாட்டாரெல்லாரும் பழையதேவனை யிகழ்ந்து புதிதாய்வந்த வேதத்தை யனுசரித்து நின்றதும், பின்னுஞ் சுரமிசொல்லிய மற்றதும் சொல்லித் தகப்பன்பாதங்களில் விழுந்து வணங்கினுன். அதற்குத் தகப்பன் இதற்காக நீ செய்யும் யோசனையாதென்னவென்று கேட்க, மகனுகிய நாவகன் இது தெய்வநிந்தையின் விஷயமாகையால், நமது அரசனேடு சொல்லி அந்தப் புதியவேதத்தை யடியோடறுப்பதே யெனது யோசனை யென்றுன். இதைக்கேட்ட தகப்பன் மகனை யருகேயழைத்துக்கட்டிலின்மீ துட்காரவைத்துச் சொல்லுவான்: நான் இளமைப்பருவத்தில் விற்போருக்குத் தலைவனுகி பூதர்நாட்டில் குடியிருந்த சிறிதுகாலத்துக்குமுன் அந்த பூதரைப்படைத்த ஒருவன் கெடும்படி யவனுக்குச் சம்பவித்ததைக் கேட்பாயாகவென்று மீளவுஞ் சொல்லத் தொடங்கினுன்.

மலையினின் றிழிந்துவரும் பேராறுகள் கைகளைப்போற் றவழப்பட்டுப் பலவகைநன்மையும் அடைக்கலம் புகுந்திருக்கும் அசிரியமென்று ஒருநாடுண்டு. அந்நாட்டில் பகைவர் வணங்கும் மதயானைக் கொடியையுடையானும், அரசர்களுடைய கிரீடங்கள் ஓயாமற் படுவதினால் சிவக்கும் பாதங்களையுடையானும், மன்னவர் கொண்டுவந்த திறைகளை வாங்குவதினாலவர்கள் நடுநடுங்கச்செய்யும் ஆணையுடையானும், கோடையிடியைப்போன்ற அஸ்திரங்களை யெய்யும் வில்லையுடையானும், சாணைக்கல்லாகப் பகைவர்மார்பில் தீட்டிய வாளையுடையானும், காற்றுக்கு முந்திச்செல்லுந் தேர்ச்சேனையையுடையானும், பூமண்டலமெல்லாம் நடுங்கச்செய்யும் நஞ்சும், தீயுநிறைந்தகண்களையுடையானும், பேய்களும், யமனும், வஞ்சனையுங் குடிகொண்டிருக்கும் நெஞ்சுடையானும், கடுஞ்சொல் நிறைந்த வாயுடையானும், பொய்ப்புகழை விரும்பிய செவியுடையானும், தன்னால் துன்பமடைந்தவர்கள் சொல்லும் பழிமொழிகளையும், பொன்முடியையுஞ் சுமந்த சென்னியையுடையானும், ஆற்றுநீர் சழுக்கென்றும், கடல்நீர் உவர்ப்பென்றும், குளத்துநீர் சேறென்றும் நீக்கித் தன்னால் துன்பப்படுவோரழுங் கண்ணீரே நன்னீரென்று அதில் குளிப்பானும், இன்னரம், குழல், வீணை, இவற்றினோசை யினிதல்லவென்று வெறுத்து உயிர்களைக் கொல்லும்படி வளைத்த வில்லோசையையும், அவ்வில்லினாலிறந்தபுருஷனை யிழந்த கைம்பெண்களழும் ஓசையையும் விரும்புவானும், நல்லோர் தனக்குவேற்றுமையென்றுந், தீயோர் தனக்கு எதிரிகளென்றும் வெறுத்து, யாவரையும் பகைப்பானுமாகிய சினக்கரனென்னும் அரசனராசர்க்கரசனாயிருந்தரசு செய்திருந்தான். அவனெல்லாத்தேசத்தரசர்களையும் போரில் வெற்றிகொண்டு தனக்குக் கீழ்ப்படுத்தியபின் கடைசியாய்ச்சத்தியவேதமாகவழியிற் சிறந்த யூதர்நாட்டையும் வெற்றியடையும்படி யோசித்து ரதகஜதுரகபதாதியாகிய நால்வகைச் சேனாசமுத்திரத்தையுங் கூட்டிவந்து யூததேசத்தின் இராஜதானியாகிய எருசலேம் நகரில் பாளையமிறங்கி யூதரரசனுக்குத் தூதனுப்பி யூதர்கள் தங்களுடைய வேதத்தைவிட்டுத் தன் பாதங்களை வணங்கித் தனக்குக் கீழ்ப்படியவும், இல்லாவிடில் போர்க்குப் புறப்படவுஞ் சொல்லியனுப்பினான்.

இப்படிச் சினக்கரனுத்தரவின்படி தூதனாகவந்தவன் யூதவரசனைக்கண்டு மிகுந்த கோபத்தையுடையானாகி யூதர்களுடைய குலமேன்மையையும், அவர்கள் வணங்குங் கடவுளின் மகிமையையும், அவர்களுடைய மெய்வேத நன்மையையும், அரசனுடைய பெருமையையுஞ் சிறிது மெண்ணாமல் நீர் இப்பொழுது வணங்குங் கடவுளையும், வேதத்தையும் கைநெகிழ்ந்து எங்கள் அரசனாகிய சினக்கரனுத்தரவின்படி நடக்கவேண்டும்; இல்லாவிடில் போர்முகத்தெதிர்த்து யுத்தஞ்செய்யவேண்டும். இது எங்களரசன் கட்டளையாதலால் உமது சம்மதியைச் சொல்லவேண்டுமென்று கேட்க, அதற்கு யூதவரசன் பொங்கியபாலைத் தண்ணீர்விட்டாற்றினாற்போலக் குளிர்ந்த மொழிகொண்டு கோபந்தணித்துச் சொல்லுவான்: ஓ! தூதனே! நீ தூதாகவந்ததினால் தப்பித்துக்கொண்டாய். வேறொருவர் எங்கள் தெய்வத்தையும், வேதத்தையும் நிந்தித்துரைத்தால் இதுவரையினும் உயிர்பிழைப்பார்களோ? உங்களரசன் என்னையும், எங்கள் கடவுளையும் பகைத்தபின் எங்கள் கடவுளே யவனுக்கு மறுமொழி சொல்வாரல்லாமல் வேறொருவரில்லை. இதுவே மறுமொழியாக உங்களரசனுக்குச் சொல்லென்றான். அதுகேட்ட தூதன் இதுவரையிலும் பூமண்டில முழுமையும் நாங்கள் ஜயித்து வெற்றியடைந்து யாவரையுங் கீழ்ப்படுத்தியபோது அவர்கள் தெய்வமெல்லாம் எங்கள் கண்ணைக் கெடுத்தார்களோ? அல்லது தாக்கினார்களோ? உங்

கள் தெய்வமாத்திரம் அந்தத் தெய்வங்களிலு மிக்கவரோ? ஆகலால் நீர் உமது செல்வநாட்டைக் காப்பாற்ற வேண்டினால் எங்களரசனுக்குக் கீழ்ப்படியவேண்டுமென்றான். அதற்குத் தரும சிந்தையுள்ள பூதவரசன் குலுங்க நகைத்துச் சொல்லுவான்; மற்றத் தேசத்தார் வணங்குங்கடவுள் தூங்கினரோ? அல்லது உங்களுக்குப் பயந்தார்களோ? நானறியமாட்டேன். ஆனாலும் எமது தேவன் அவர்களிலும் மிக்கவரோ? இல்லையோ? என்று நீயே சண்டைப்போதில் கண்டறியக்கடவாய். இதனால் யாலும் யுத்தத்துக் கஞ்சேன்; மனமிருந்தால் இப்பொழுதே புறப்பட்டு வாருங்களென்றான். அதற்குத் தூதுவன் ஐயா! அரசனே! நானுமக்குத் தகைபொருந்திய தூதுரைக்கவந்தேன்; நீர் அதனை யெண்ணாமல் என்சொல்லை மறுத்தீர். இனிமேல் உம தெண்ணப்படியேயாமே நடக்கக்கடவதென்றுசொல்லி அரசனை வணங்கி விடைபெற்றுப் பின்பு தன் பரிவாரமிறங்கியிருக்கும் இடத்துக்குச் செல்லுகையில் இராக்காலம் வந்தமையால் அவ்விரவில் தன்னரசனைக்கண்டு வணங்கி அவனுக்கு நடந்த சங்கதியெல்லாஞ் சொன்னான். அதைக்கேட்ட சினக்கான் மிகுந்த கோபங்கொண்டு, ஒருவராலும் வெல்லப்படாத யுத்தங்களையெல்லாம் வென்று பேர்பெற்ற எனது சயினியத்தின் பெருமையைச் சற்று மதியாமல், மாற்றரசன் என்சொல்லை மறுத்தானோ? சூரியோதயமானவுடன் அந்த பூதர் நாடெல்லாங் காடாகும்படி ஒரு நிமைப்பொழுதில் செய்வேனென்று நித்திரைசெய்தான். கேட்டாயா? மகனே! இப்படி நித்திரை கொண்ட சினக்கான் பொழுதுவிடிந்து எழுவதற்கு முன்னமே கடவுள் அவனுடைய உயர்ந்த தேர்களும், பாய்ந்த குதிரைகளும், மதத்த யானைகளும், வாள், வில், வேல்முதலிய ஆயுதபாணிகளாகிய நூற்றெண்பத்தையாயிரம் வீரர்களும், மற்றெல்லாரும் அன்றைய இரவிலேயே நிமைப்பொழுதில் செத்து மடியும்படி செய்தனர். சூரியோதய மானவுடன் சினக்கா னெழுந்து தனது பரிவாரமுழுதும் யாதோர் காரணமுமில்லாமல் இறந்திருப்பதைக் கண்டு கடவுள் முனிவினாலே தானரசனல்லவென்றஞ்சி யோடும்போது வழியில் வந்த அவனுடைய இரு குமாரர்களும் எங்களுக்கு நிந்தையை வருத்திவைத்தாயே பாவியென்று ஒருவிசாக அவன் தலையைவெட்டிச் சாய்த்தார்கள். ஆதலால் மகனே! கடவுளின் வல்லமையின்முன் நமது வல்லமை பயன்படாது. இதுவல்லாமல் இன்னமொருகதை சொல்லுகிறேன் கேளென்று, மீளவும் குன்னன் தனது மகனாகிய நாவகனுக்குச் சொல்லத்தொடங்கினான்.

கேட்டாயோ? மானே! மேலே சொல்லிய சங்கதியெல்லாம் நடந்த சிலகாலத்துக்குப் பின்பு, முன்சொன்ன அந்த அசிரிய நாட்டுக்கு நபூக்க னென்பவன் அரசனாகி அரசாட்சி செய்து வருகையில், அவன் தான் கொண்ட அங்காரத்தாற் பொங்கித் தனது நாட்டிலுள்ள யாவரும் யூதர் வணங்குந் தேவனை வணங்கவேண்டாமென்றும், தனது சாயலாகப் பொன்னினாலொரு உருவத்தை யுண்டாக்கி நவமணிகளாலும் அதை யலங்கரித்து, அவ்வுருவத்தையே தெய்வமாக வணங்க வேண்டுமென்றுங் கட்டளை யளித்தது தன்னாடு முழுதும் பறைசாற்றுவித்தான். அப்பொழுது அந்த நாட்டிலிருந்த யூதகுலத்தோராகிய மூன்றுபேர் அனாதி ல்லாத சகல தன்மைச் சொரூபியாகிய எங்கள் கடவுளையே யல்லாமல் இவ்வுருவமாகிய தேவனை வணங்க மாட்டோமென்றார். இதைக்கேட்ட நபூக்கன் இடியைப் போலக் கோபித்து, உலகமெல்லாம் அஞ்சும்படி இம்மூவரையும் அக்கினிச் சூளையில் போட்டெரிக்கத் தனது சேவகர்க்கு விடையளித்த வுடனே அந்தத் துராத்துமாக்களாகிய சேவகர் சற்று மிரக்கமில்லாமல் இம்மூவரையுங் குண்டுகட்டாகக் கட்டிச் சூளையினுள்ளே யெறிந்தபோது, சூளைவாய் வெடித்துப் புறப்பட்ட பு

கைப்போடு சேர்த்துக் கிளம்பி, அருகே நின்ற எல்லாச் சேவகரையுஞ் சுட்டெரிக்கவே குண்டத்திலிருந்த மூன்று யூதர்களுங் குளிர்ந்த சோலையிலிருந்தாற் போலச் சுகித்திருந்தார்கள். இந்தச் செய்தியைக்கேட்ட அரசனாகிய நபூக்கன் ஓடோடியும் வந்து பார்க்கும்போது, எரிக்க குழியில் நாலுபேர் மனமகிழ்ச்சியோடு நின்றிருப்பதைக்கண்டு அதிசயித்து இங்கே வாருங்களென்று அவர்களை யழைத்தவுடனே மூன்றுபேர் மாத்திரம் வந்து எதிர் நின்றார்கள். இதைக்கண்ட மன்னவன் குழியில் நாலுபேரைக் கண்டேனே, நீங்கள் மூவர் மாத்திரம் வந்தீர்களே அழகோடு நின்ற மற்றொருவன் எங்கேயென்று கேட்க அதற்கு மூவரும் அவன் எங்கள் கடவுளால் அனுப்பப்பட்டு எங்களுக்கு மனத்திடஞ் சொல்லவந்த தேவதூதனென்றார்கள். இப்படி யூதர்வணங்குங் கடவுளின் மாகத்மையையும், அவர்கள் வேதத்தின் மகிமையையுங் காட்சியாகக் கண்டபின்னும் நபூக்கன் தான் கொண்ட கர்வத்தை விடாதிருந்து, தன்னைத் தேவனாக நினைத்த பாவத்தினால் கடவுளவன்மேல் வைத்த கோபாக்கினைப்படி பிற்காலத்தாரும் பயங்கரங்கொள்ள அவன்மனிதர்க்குரிய அறிவுமாத்திரம் மாறாமல் மிருகவடிவமாகி ஊராரால் அஞ்சித் துரத்தப்பட்டு, அரசையிழந்து, நகரமுமிழந்து, ஏழுவருஷகாலங் காட்டிற்றிரிந்து குனிந்தமுகத்தோடு புற்களைத் தின்று அதன்பின் நல்லுணர்வடைந்து யூதர்வணங்குந் தேவனை யாவனும், வணங்கியதால் பழைய மனித உருவமும், அரசும் நகரும், சம்பத்தும் அடைந்து அந்தக் கடவுளின் மகிமை யெங்கும் விளங்கும்படி அவனொரு பெரு விளக்கானான். ஆகையால் இன்னும் என்னருமை மகனே! நான் சொல்வதைக் கேள் முன்னொரு காலத்தில் *அந்த அசீரிய நாட்டை யாண்டிருந்த அரசனொருவன் யூதருடைய தேவாலயத்தில் திரவிய மிகுதியா யிருப்பதென்று கேள்விப்பட்டு அதைக் கொள்ளையாடி வரும்படி எல்லியோதுரை என்பவனையனுப்பினான் அவனும் உடனே புறப்பட்டுக் கொடிய சேவகர்களோடு வந்து தேவாலயத்திற் புகுந்தவுடனே, ஆகாயத்தி லொருமனிதன் பொற்கவசமணிந்து வெள்ளைக்குதிரையின் மீதேறி வருகையில் அந்தக்குதிரை எல்லியோதுரையுடைய மார்பில் கோபத்தோடு தன் உதைத்ததை யுதைக்க அவனுந் தரையில் விழுந்தான். கூடத் துணைவந்த சேவகரெல்லாரும் ஓட்டம்பிடிக்கவே மீளவும் இரண்டு வானவர் இருபக்கத்திலும் நின்று கைப்பிடித்திருந்த குதிரைச் சம்மட்டியால் விழுந்துகிடந்த எல்லியோதுரையை நசுக்கத்தாக்கிக் கோரமாயடித்துக் கொன்றார்கள். அப்பொழுது அக்கோவிலின் பெரிய ஒருகுருப்பிரசாதி அவன்மேலிரக்கங்கொண்டு அவனுயிரோ டெழுந்திருக்க ஆண்டவனை மன்றாடினதால் குருப்பிரசாதியின் மன்றாட்டின்படி கடவுள் கட்டளையால் இருவானவரும் அவனை உயிரோடெழுப்பித் தேறுதல்சொல்லி, இந்தக் குருவானவரால் நீ மீளவும் உயிர்பிழைத்தாய், இனி உனக்குயிர்தந்த ஆண்டவனைவாழ்த்தி நடந்த யாவையும் எல்லாருக்குஞ் சொல்வாயாக என்றுரைத்து மறைந்தனர். அதன் பின்பு அவன் சாகுந்தனையும் யூதர் வணங்குங் கடவுளை வணங்கி நின்றான். இப்படியே அந்த உயர்குலத்தாராகிய யூதர்வேதத்தைப் பகைத்த பன்னிரண்டரசரும் தீங்குப்பட்டதை மகனே! நானறிவேன், அந்த யூதர் வணங்குங்கடவுளைப் பகைத்தவர் யாவரும் உயிர்வாழமாட்டார், ஆகையால் பொய்யாகிய வார்த்தைகளைக் கேட்டு நீ யந்த வேதத்துக்குச் செய்ய நினைக்க கெடுதியை விட்டுவிடென்று குண்ணன் தன்மகனாகிய நாவகனுக்குச் சொல்லிமுடித்தான்.

இப்படித் தகப்பனாகிய குண்ணன் மொழிந்த நயமுள்ள மதுரமொழிக் கடலில் சந்திர கிரணத்தை யொத்த முத்துமாலை தவழுமார்பனாகிய நாவகன் கு

---

* மக்கபேயர், ௨-ம். ஆகமம், ௩-ம், அதிகாரம், ௨௫-ம். வசனம்.

வித்துத், தானின்பங் கொண்டாடொழிய மனையகத்தை விடாமல் தகப்பனை நோக்கிச் சொல்லுவான்: ஐயா! யூதர்கள் தங்கள் வேதமுந், தெய்வமும் பெருமையுடையதென்று அவர்கள் மட்டிலே யிருந்தால் ஒருவாறு பொறுத்திருக்கலாம். அப்படிக் கில்லாமல் பிழைக்கும் வகையை விரும்பி நமது நாட்டில் வந்து இரண்டொன்றும் யூத முனிவனொருவன் நமது நாட்டிற்குரிய தெய்வமுறைமை, குலமுறைமை, நூல்முறைமை, வழக்கமுறைமை, ஒழுக்கமுறைமை யென்று பாராமல் எல்லாமுறைமைகளையுங் கெடுத்து இனியமொழியால் இந்நாட்டிலுள்ளாரைக் கெடுத்துத் திரிந்தால் பொறுக்கலாமோ? என்றான். அதற்குத் தகப்பனவனைநோக்கிப் பெருமூச்செறிந்து அப்பா! மகனே! மதிகெட்ட ஒரு குருட்டுக் கிழவி பேதமையால் சொல்லியதை நீ நம்பி மனங்கலங்கலாமோ? காற்றின் வசமாயாடுங் கொடிச் சீலைகளைப்போல மயங்கும் அறிவில்லாருடைய பொய்யுரைகளைக் கேட்கவேண்டாம்; நானந்த யூதநாட்டில் நெடுங்காலம் படைத்தலைவனாக இருந்தமையால், அவர்கள் முறைமையெல்லாங்கண்டு அவை தெளிந்தமுறைமையென்று நானே வாழ்த்தினேன். இதுவலலாமல் நாட்டுமுறைமையும், குலமுறைமையும் அவனவனுக்கு உரியது. அதை யொழித்து எல்லார்க்கும் பொது முறைமையாகிய மெய்வேத முறைமையும், நல்ல தருமமுறைமையும் யூதரிடத்தில் நன்றாக விளங்குவதை நீயே காண்பாயாகில் அவர்கள் வேதத்தையும், தருமமுறைகளையும் நீயே புகழ்ந்துகொள்வாய். அல்லாமலும் நீ பலதரமுஞ் சென்று பூஞ்சோலையிடத்தில் ஆசைமாமுனிவர் சொல்லிவருகிற நல்லுணர்ச்சிகளைக் கேட்டுவருகின்றாயே அது உனக்கு நன்மையாய்த் தோன்றுகின்றதா? இல்லையா? நீயே சொலலென்று சொல்ல, அதற்கு நாவகன் தன் தகப்பன் பாதங்களை வணங்கி நல்லதென்று சொல்லி அவ்விடத்தினின்று புறப்பட்டு, மெய்வேதப் பற்றுதலில்லாமல் தானினைத்த தீவினையையே மேற்கொண்டு அதை முடிப்பதற்குச் ஆசைமாமுனிவர் உபதேசிக்கு மிடத்திற்குச் சென்றான்.

இவ்வண்ணமாக நாவகன் தீவினையை உள்ளே மறைத்து, முகத்தில் குளிர்ச்சியைக்காட்டி மலர்ச்சோலையிடத்து வருவதைக்கண்ட ஆசைமாதவர் தமது தபோபலமாகிய திருவிளக்கினால் அந்த நாவகனிடத்தில் கிழச்சாமி சொல்லியதையும், அவன் தகப்பன் சொல்லியதையும் கண்ணூற் கண்டவரைப்போலத் தெரிந்து, அவன் நினைத்துவந்த தீவினையை அந்தப் பூஞ்சோலையிடத்திற் கூட்டமாயிருக்கும் சிஷைகளுக்குப் பொதுவாய்ச் சொல்லுவதுபோலச் சொல்லத் தொடங்கினர். அதெப்படியென்றால்: நீங்கள் உங்களுக்கிருக்கும் உயிர் ஒன்றேயென்று நினைத்து அவ்வுயிரைப் பகைத்துக் கொல்லும் யமனாகிய பாவத்தைப் பகைத்து விட்டுவிடக்கடவீர். பாவமே உயிரைக்கொல்லும் யமனென்று பெரியோரறிந்ததினுல், அதன்பெயரை முதலாய்ச்சொல்ல அஞ்சுவார்கள். மேகமண்டலத்தைத் தாண்டிய உயர்ந்த மலையினுச்சியிற் பனியில்லை; அதுபோலத் தருமப்பலனு அயர்ந்து வாழ்பவர்க்கு ஒரு தீங்குமில்லை. தருமவாளர் நஞ்சையுண்டாலும் அமுதமாகும். தீயோர் அமுதத்தை யுண்டாலும் நஞ்சாகும், பாவங் தவிர மற்றப் பூமண்டலப் பொருள்களுக்கெல்லாம் அழிவுண்டு. தன்னிழலை தனது பாதங்களை விடாததுபோல இன்று ஒருவனுக்குத் தீமையை நினைத்தால் னாளை தனக்குத் தீமைவருவதைக் காண்பான். எட்டிமரத்தை வைத்தால் அதன் கனி கைப்பாகவே யிருப்பதுபோல ஒருவன் தீமையை விதைத்தால் தீவினையே வினையின் பலனைக் காண்பான். தீமையைச் செய்தவர் தீயவரே யாவார். அந்தத் 'மையைப் பொறுமையோடு சகித்தவர் தேவரை ஒத்தவராவார். அகிற்கட்டையை வேகச்செய்யுந் தீயைப்பார்க்கிலும், அகிலின்மணம் இன்பமாய்ப் பரிமளிப்ப

துபோலவும், பொன்னைச்சுட்ட தீயைப்பார்க்கினும், பொன்னின்றெளிவு அதிகப்படுவதுபோலவும், தீமைபொருந்த கோபத்திலால் பிறர்க்குத் துன்பத்தைச் செய்பவரைப் பார்க்கினும் அந்தத் துன்பத்தைப் பொறுப்பவரே பெரியவராவார் என்றார். இதைக் கேட்டிருந்த கோபகொடியனாகிய ராவகன் தான் நினைத்து வந்ததையெல்லாம் ஆசைமாமுனிவன் சொன்னமையால், சற்று மனந்தளர்ந்திருந்தாலும் பின்னும் எதிர்த்துக் கொடியர்களாகிய பூதவேதத்தாரைத் தண்டிப்பதே புண்ணியமென்னுங் கருத்தை யுள்ளத்தில் வைத்து வெளியில் தீயவர்க்குத் தீமையே செய்தால் புண்ணியமாகுமென்று மிகுந்த கோபத்துடன் சொல்லினான். அதற்கு மாதவமுனிவர் அவன் வாயாற் சொன்னதைவிட்டு மனத்தில் நினைத்ததைத் தெளிவாயறிந்து சொல்லுவார்: பகைவர் வணங்கும் வேலுடையானே! மெய்யை நினைத்துப் பொய்யைக்காட்டுஞ் சித்திரமெழுதினவனைப் போல் செருவில் வஞ்சங் கொண்டவர் ஒரு மெய்யையூன்றிய பொய்யைக் காட்டிச் சொல்வதை நம்பவேண்டாம். நிலத்தின் குணம்போல அதில் விழுந்த தண்ணீரின் குணமு மாறும். அதுபோல உலகமெங்கும் மனப்பற்றின் காரணமாக ஒருவன் மேலி லன்புண்டானால், அவன் தீமைசெய்தாலும் நல்லதாகும்; பகையுண்டானால் அவன் நல்லது செய்யினும் தீயதாகும். பின்னும் வெளிப்புறம் அழகுகாட்டி யுள்ளே கசப்பைத் தருகின்ற எட்டிக்கனியினிதோ? வெளிப்புறம் முள்ளுக்களைக்காட்டி யுள்ளே மதுரச் சுளைகளைத் தருகின்ற பலாக்கனியினிதோ? ஆதலால் மேகத்தில் மின்னி மறையு மின்னலை விரும்பாமல், எல்லாப்பொருளின் உட்குணங்களையு மாராய்ந்து நல்லது இது கெட்டது அது என்று நிதானித்தல் வேண்டும். செய்ததீமை செய்தவர்மேலேயே வருவது ஒருநாளுந் தவறாதென்று நீயே நிச்சயித்து, நீ நினைத்துவந்த தீயமுடிவு உனக்கே தீமையைத் தருமென்று அதை நீக்கக்கடவாய். என்று முன் பொதுவாகச் சொல்லிவந்ததை இப்பொழுது நீயே என வெளியாக்கமாகவுங் குறித்துக் காட்டினார்.

இப்படி மெய்வேதமாகிய பூங்கொடி படருங் கொழுகொம்பாகிய ஆசைமாமுனிவர் சொல்லியதற்குப், பர்வதங்களையும்வென்ற புயங்களையுடைய வாமன் தனது மனக்கருத்தைக் கண்ணாற் கண்டதுபோல இம்முனிவர் சொல்லிவிட்டாரேயென்று அதிசயத்தோடு நாணினாலும் கோபத்தை விடாதவனாய்க் கண்ணில் தீப்பொறிபறக்கப், பொங்கிய ஆங்காரத்தோடெழுந்து, இடிபோலப் பாய்ந்து ஒருவர் சொன்னதுபோலச் செய்வது நல்லது. ஆகையால் புண்ணைச் செய்வதினும் புண்படுவதே யினிதென்று முன்னமே நீ சொல்லியபடி நீயே புண்படாயென்று நிந்தையாய் நகைத்து ஆசைமாதவனின் கன்னத்தில் அடித்தான். அதற்கு மாதவமுனிவர் பூரணச் சந்திரனைப்போலக் குளிர்ந்த கதிர்வீசி ஆரியனைக்கண்ட கமலம்போல மலர்ச்சியாகி விளங்குந் திருமுகத்தை வாடச்செய்யாமல் மகிழ்வோடு ஒன்றும் பேசாமல், அவனைப் பார்த்தமையாலே அங்காவகன் மனத்திற் றெளிவடைந்து மகாவிரக்கத்துடனே ஆசைமாமுனிவரை நோக்கி அவர் பாதத்தில் விழுந்து வணங்கிச் சொல்லுவான்: தீவினையை யறுக்கு மாதவனே! நீர் பகர்ந்த மொழிகளை அப்போதிசைத்துவரும் இனிய போதகத்தைத் யிதுவரையிலும் நான் தெளியவில்லை. வெய்யையைப் பொருந்தச் சொல்லுவாருமுண்டு. அப்படியே புன்மையும் மதிமயக்கத்தால் எண்ணிவிட்டேன். நான்செய்த பெருங் குற்றத்தைக் நீர் பொறுத்தருளிய சற்குணமே மெய்வேதத்தின் விதியென்று நான் தெரிந்துகொண்டேன். ஒளியைப் பொறுக்காத கண்ணால் சூரியனை விழிக்க நிலைக்காதுபோலச் சத்தியவேதத் தொளியைப் பொறுக்காத நானும் அவ்வேதத்தைத்தழுவி

க்கும்படி நினைக்கேன். கிணற்று மீனைப்போல உயர்ந்த அறிவில்லாமற் பாவக் கிணற்றிற்கிடந்து, முழுதும் பசாசினுல் மயங்கிய நான், இந்நாட்டிலுள்ளதை மாத்திரம் மதித்து வேறு நாடுகளிலுள்ள நல்ல நூலையும், நன்மையையு மென்னுமல் நிந்தித்திருந்தேன். மேலும் மிகுந்த கோபத்தினால் மெய்யை யுணராமல் வஞ்சகங்களை நினைத்திருந்த என்னெஞ்சிலுள்ளவற்றை யெல்லாம் நீரேயறிந்து கண்ணுற் கண்டது போலச் சொல்லியதனால் உள்ளத்தில் நாணமடைந்தேன். ஆயினும் தற்பெருமையினும் வலிய நெஞ்சினனா யிருந்தேன். உலர்ந்த மரத்தில் தீப்பற்றியதுபோல ஞானத்தால் வருந்திய என் மனத்திலுண்டான கோபமிகுதியால் உம்மைத் திருக்கன்னத்தி லடித்தபோது நீர் வணங்கிய பாவனையாய் நின்று மலர்ந்த முகத்தைக் காட்டினபடியால் பாலர்களைப் படிப்பிக்கும் பாடசாலையாக இக்கானனத்திலும் நானநுசரித்த பொய்வேதத்தை யொழிக்க நினைத்தேன். காமத்திற்கே யல்லாமல் நல்ல கல்விநூலை யறியேன். ஆபரண ஒளியல்லாமல் மெய்ஞ்ஞான ஒளியை யறியேன். ஆகலால் மாட்சிமை யில்லாத பாவியாகிய நான்செய்த தீவினையை நீரே முற்று மறந்து இரக்கித்தீர். இனி உமது திருநாமத்தையே வாழ்த்துவதன்றி வேறொன்றுஞ் சொல்லத் துணியேனென்று சொல்லக் குசைமாமுனிவர் நீ பின்னலைப்போலழியும் உலக செல்வமெல்லாம் வீணென்று வெறுத்து நல்ல தருமமொன்றையே கைக்கொள்ளுவையேயாகில் உன்னிழ லுன்னைவிடாததுபோல ஆண்டவன் பாதநிழற்கீழ் இனிமையாய் வாழ்ந்திருப்பாய் என்று ஆசீர்வதித்தார். இவை யாவையுங் கேள்விப்பட்ட குணசேனனென்பவன் தன்மகன் நாவகன் சாவையிற்பிடித்த இரத்தினத்தைப்போலத் தேவவருளாற் சிறப்புற்றானென்று கிடைப்பதற்கரிய அன்போடு கிடைக்கப்படாத பொருளைக் கண்டதாகப் பெருமகிழ்ச்சிகொண்டு அதனை யுள்ளத்தி லடக்கக்கூடாம லிருந்தான். முன் சொன்ன வாமனென்பவனும் ஆயுதப்பயிற்சியில் தன்னேடொத்த நாவகன் இப்பொழுது வேதநூற் கேள்வியிலுந் தன்னேடொத்திருப்பதையறிந்து பெருமகிழ்ச்சியோடு அவனுடன் சேர்ந்து இருவரும் வானத்திற்சஞ்சரிக்கும் சந்திர சூரியரைப்போல விளங்கினார்கள். இதைக்கேள்விப்பட்ட நல்லோர் யாவருங் கூட்டமாய்வந்து நாவகனைப்புகழ்ந்த தன்மைசொல்லுந் திறமோ? இது இப்படியிருக்கப் பசாசின் சேவைப்பட்ட கொச்சைப்பிரத்தியம் மேகமுழக்கம் போல வெகுண்டு புலம்பிக்கொண்டு நீதிமொழியிற் றெளிந்த நாவகனே! ஆ! நீ செய்தது நன்றாயிருக்கின்றது என்று அவனை நகைத்துத் துன்பமிகுதியால் வெந்துகருகின விறகுபோல வுடல்கருகிப் பசியால் வருந்திய நாயைப்போலத் தானேதன் கையைக்கவ்விக்கொண்டு நெருப்பிற்பட்ட சர்ப்பத்தைப்போல உடல் சுருண்டு ஐயோ! எனினத் தந்திரத்தால் வந்த பயனிதுதானே? வென்று அலறி விம்மி அழுது. இவனைப்பற்றி எல்லாரும் நமது தேவர்களை யிகழ்வார்களேயென்று பலவாறு நினைத்துத் துக்கித்துக் கடைசியாய்ப் பசாசுக்களெல்லாம் மகிழும்படி நாக்கைப் பிடுங்கிக்கொண்டு இறந்தான். இப்படித்தீமையைநினைத்த கிழவன் நரகிற் சேர்ந்தபிறகு அறிவுடையோரால் புகழப்பட்ட சத்தியவேதமானது அழிக்க நினைத்தவழியாய்ப் பூவுலகமெங்கும் பரவித் திருச்சபை வளர்ந்து அன்புத்தாற் புண்ணியங் குறையாதென்பதற்குச் சாக்ஷியாயிற்று.

வேதக்கொடுமைப்படல முற்றிற்று.

முப்பதாவது, மீட்சிப்படலம்.

எம்பட வருடமில்லா தியல்பட வொழுகிற்றுகிப்
போழ்படக் கல்லுஞ் செந்தீப் புழுங்கிய வனம்போற்பாவத்
தாழ்பட வழன்றவங்கா டரண வருளிபாயச்
சேம்பட மலர்ந்தசோலைக் கிழமையி னெழுவிற்றன்றே.

இவ்வண்ணமாக அர்ச். சூசையப்பர் திருக்குமாரனோடுந் தேவ கன்னிகையோடும் எசித்து நாட்டிலிருந்த ஏழுவருஷகாலமும் தீவினைக்காடுபோ லிருந்த அந்நாடு புண்ணிய பூஞ்சோலையைப்போல வளரும்படி வேதோபதேசமாகிய தண்ணீரைப்பாய்ச்சித், தம்மை வருத்தியவரையெல்லாம் சாபமேதேசித்து, யாவருக்குங்குளிர்ந்த கருணையைச்செய்து வருவதல்லாமலும் நக்ஷத்திர மகுட சேகரியாகிய தேவதாயாரோடு தாமும் வானவர் முதலாய்ச் சொல்லத்தகாத திருக்குமாரனுடைய தயை நிழற்கீழ் ஒடுங்கி அந்தத்திருப்பாலகனது தயைக் கடலாகிய மார்பில் முழுகிச் சிறந்தஞானத்தை யுட்கொண்டார்கள். இப்படி யுட்கொண்ட ஞானத்தைப் புறத்திலே யுமிழ்ந்தாற்போல மாதவமுனிவர் தினந்தோறும் அந்த இரவி மாபுரத்தாருக்குப் பெரும்பயனாக உபதேசித்து வந்தபடியால் யாவருந் தீவினைப் பகையை நீங்கி மெய்வேதப் பயனைக்கண்டு மகிழ் கூழ்ந்திருந்த தருணத்தில் கோடைகாற்றின் முன் வாடிய பசும்பயிர்போல அந்நகரத்தாருடைய மனங்கள் வாடி வதங்கும்படி அவர்களுக்குச் சம்பவித்த துயரத்தைச் சொல்லுவாம். அதெப்படியென்றால்: அளவில்லாத கருணைக்கடலாகிய கடவுளினுடைய கட்டளைப்படி வானவுலகினின் றிறங்கிவந்த ஓர் வானவன் சூசைமாமுனிவரை நோக்கி: ஐயனே! வாசமதுமலர்க்கொடியேந்திய கையனே! மிகுந்த தூயனே! மெய்யனே! நான் ஆண்டவனா லனுப்பப்பட்டு உமக்கு ஒருசொல்லவந்தேன். அதாவது: திருக்குமாரனைக் கொல்ல நினைத்திருந்த எரோதன் இறந்துவிட்டானாகையால் நீர் உடனே புறப்பட்டுத் தெய்வதாயாரையுந், திருக்குமாரனையும் அழைத்துக்கொண்டு உமது நாடாகிய யூதேயநாட்டுக்குப் போகவேண்டுமென்று சொல்லி மின்னலைப்போல மறைந்துபோனவுடனே சூசைமாதவமுனிவர் தெய்வதாயாருந், திருக்குமாரனுமிருந்தவிடத்துக்குச் சென்று தேவதூதனா லறிவிக்கப்பட்ட சங்கதியை யவ்விருவர்க்குஞ் சொன்னபோது தேவபாலகனும் நல்லதென்று தேன்சிந்துங் குதலைத் திருவாய் மலர்ந்தருளினார். பின்பு சூசைமாமுனிகள் தங்கள் பிரயாணத்தை ஒருவருக்கு மறிவியாமல் அவர்களுக்குச் சில உறுதிமொழிகளைச் சொல்லுவார்: நீங்கள் காற்றுக்கசையாத பர்வதங்களைப்போலத் துயரத்துக்கஞ்சாதிருங்கள். இடையிலே நில்லாமற் கடலைநோக்கிச் செல்லும் நதிகளைப்போலப் பூவுலக செல்வத்தில் நில்லாமல் ஆண்டவன் திருப்பாதங்களைத் தேடிச் செல்லுங்கள். தீயைப்போலத் தீவினைக் கஞ்சுங்கள். அழியுங் கடல் நுரையைப்போல இவ்வுலகவாழ்வை யெண்ணுங்கள். நோய்களுண்டானாலும், அண்டினபோது அவற்றைத்தீர்த்து உங்களைக் காப்பதுபோலத் தீவினை யுண்டாகாமலும், உண்டானபோது உடனே அவற்றைநீக்கி உயிரைக் காப்பாற்றுங்கள். நீந்துகின்றவர் கரையை நாடுவதுபோல வானவீட்டுக்கதியை விரும்புங்கள். இதுவேவழுவாத நன்னெறியாகுமென்று சொல்லியருளினார்.

இப்படிச் சொல்லியருளிய சூசைமாமுனிகள் தேவதூதன் கட்டளைப்படியே வானமளாவிய கொடிகள் கட்டிய மாளிகைகள் நிரையாயிருக்கும் அந்த

இராவிமா புரத்தினின்று புறப்பட்டு, வானவர்க ளிருமருக்கும் அணியணியாகச் சூழ்ந்துவரத் திருத்தாயாரையும், திருப்பாலகனையுங்கூட்டிக்கொண்டு ஒருவருக்குந் தெரியாமல் அர்த்தராத்திரியில் சூதேயா தேசத்துக்குப் பயணப்பட்டுப்போகும்போது நீந்த அறியாமல் நீர்ச்சுழியி லகப்பட்டவனைப் போல மகாத்துமாவாகிய சூசையப்பர் ஏரோது நாட்டார் நம்மைத்தேடி மயங்கிப் புலம்புவாரே யென்று ஒருபக்க மனத்திலெண்ணி யிரங்கினாலும் ஆண்டவன் கட்டளையைக் கடப்பதினும் அவர்கள் பகையே நல்லதென்று மனத்திற்றேறி வழிநடந்தார். பின்பு அந்த நகரத்தாருடைய அன்பத்தீயினால் வெந்து வெச்சாற்போலச் சூரியன் கடல்மீது உதயமானவுடன் யாவருமெழுந்துவந்து இம்மூவரையுங் காணாமையால் அந்நகரமுழுதுந்தேடிக் கடலோசையைப்போல அவரவர்கள் புலம்பிச் சொல்லத்தொடங்கினார்கள், சிலர்முன்னம் எங்களிடத்தில் வழங்கிய பொய்யையும், பாவத்தையும், அப்பாவத்திற் காதாரமாகிய பலநூல்களையும் ஒழித்து எங்களுக்கு மெய்யான வேதத்தை யுபதேசித்த நீங்கள் இப்பொழுது பிள்ளையை விட்டகன்ற தாயைப்போல ஐயோ! எங்களை விட்டகல்வது தர்மமோ? வென்றுகைகளை விரித்தழுது கலங்கி உயிர் பிரிந்தவரைப்போல மெய்ம்மறந்து நிற்பார். சிலர் முச்சுடரையொத்த நீங்கள் சூரியனின் சுடர் மறைந்தபின் இருளிலொளித்துச் சென்றகாரணமென்ன? எங்கள் பாவந்தானோ? நீங்கள் மலையிற்புதைத்த மாணிக்கங்களை யொத்தவராச்சுதே யென்று மனங்குழைந்தலறி வருந்துவார். சிலர் மந்தரமலையை மத்தாகநாட்டிக் கடலைக் கடைந்தபோது அமிர்தமும், விஷமும் கூடப்பிறந்தன என்னுங் கட்டுக்கதையை முற்காலத்தில் கேட்டிருந்தோம். இப்பொழுதோ தவமே களையா யிருக்குந் தருமக்கடலாகிய உங்களிடத்தில் முன்பு நீங்கள்காட்டிய அன்பாகிய அமிர்தமும், பின்பு நீங்கள் பிரிந்ததினால் துன்பாகிய விஷமும் பிறந்தன என்பார். சிலர் வாசனையுள்ள முல்லைக் கொடிகளைநட்டுப்பொன்னினால் வேலியமைத்துப் பனிபோலக்குளிர்ந்த பூமாலையால் மேல்பந்தலிட்டுக் கீழே மணலாக முத்துக்களைப் பரப்பித் தண்ணீராகத் தேனைப்பாய்ச்சிநீங்களருமையாய் வளர்த்த இராவிமா புரத்தாரென்னும் பூங்காவனம் துன்பத்தீயால் வெந்தொழியும்படி விட்டுப் போனீர்களோ? என்பார். சிலர் தாமரைகள் வாடும்படி இன்று சூரியனஸ்தமித்தாலும் மறுநாள் அவைமலரும்படி சூரியனுதயமாகும். ஐயோ! நீங்களோ இன்று வாடித்துன்பத்தால் மெலிந்த எங்கள் மனப்புண் ஆறும்படி என்று காணப்படப் போகிறீர்களோ? என்று பரிதாபத்துடனழுவார். சிலர் அன்புடைய ஒருவனழுதகண்ணீர் அந்த அன்புடைய மற்றொருவனுக்கு விலக்கா யிருக்குமென்று ஆலோசித்தல்லவோ எங்கள் கண்ணீரைக் காணாதபடிக்கு இராவிலொளித்து எங்களுக்கு ஒருவார்த்தையாகிலுஞ் சொல்லாமற்போய் விட்டீர்கள். ஆனாலும் நீங்கள் செல்லுங் காட்டுவழியில் துணையைப்பிரிந்த மயில்கள் வருந்துவதைப் பார்த்த போதேனும் எங்களைப்பிரிந்த நீங்கள் மனம் வருந்தமாட்டீர்களோ? என்பார். சிலர் நீங்கள் கானகவழிப்போகையில் தங்கள் குஞ்சுகளை நீங்காதிருக்கும் பறவைகளையும் இடிக்கஞ்சுகின்ற பெண்யானைகளுக்கு ஆண்யானைகள் செய்யும் ஆதரவையுங் காணமாட்டீர்களோ? அப்போதாகிலும் உங்களால் கைவிடப்பட்ட எங்களை நினைக்கமாட்டீர்களோ? ஆ! இது உங்களுக்குத் தகாது என்பார். இப்படி யவரவர்கள் சொல்லிப்புலம்பிக்கொண்டு கடைசியாய் அந்நகரத்திலுள்ள யாவரும் ஒருங்குசேர்ந்து சேசுமரி சூசையென்னுந் திருக்குடும்பத்தாரைத் தேடி அவர்கள் சென்றவழியாக நடந்தார்கள்.

இப்படி இரவிமாபுரத்துள்ள அனைவரும் புறப்பட்டுத் தேறுவும், தெளிவும், செல்வமும் நிறைந்த மொழிகளையுடைய மூவரும் போனதினும் போனவுயிரை யுடல் தேடினாற்போலக் காட்டுவழியே யவர்களைத் தொடர்ந்து போய்க் கண்டுபிடிப்போமென்று ஒருவர்க் கொருவர் பேசிக்கொண்டு செல்லுகையில், வழியில் பெரியோர் துயரத்தைக்கண்ட சிறியோர் நகைத்தாற்போல் முல்லைக்கொடிகள் நகைத்து மலர்ந்த ஒரு பூஞ்சோலையைக்கண்டு அந்தச்சோலையில் கலாபம்விரித்த மயில்களும், தேனுண்ணும் வண்டுகளும் உறவின்முறையார் வந்தழுதாற்போல இவர்களைக் கூடவிட்டழுவதையும் அதைக்கண்ட குயில்கள் இவர்கள் துயரத்தைக்கண்டு இதுதகாதென்று கூவியராக்குலத்தையும்பார்த்துத் தாங்களுந் துயரங்கொண்டு பின்பு தோகையை விரித்த மயில்களே! பலவகையான வண்டுகளே! காடைகளே! பச்சைக்கிளிகளே! கருங்குயில்களே! காக்கைகளே! எங்கள்நாடு சுடுகாடுபோலாகி வருந்தும்படி மேகத்துள்மறைந்த சூரியனைப்போல மூவர் மறைந்திருக்குமிடத்தைச் சொல்லுங்கள் என்பார். மலையிலிருந்துவரும் நதிகளே! மேகமட்டுமுயர்ந்த மரங்களே! மணமலர்பூத்த தடாகங்களே! பூமாலைநிறைந்த சோலைகளே! எங்களுயிரைப் பார்க்கிலுஞ் சிறந்த வுயிராகிய மூவரிருக்குமிடத்தைத் தெரிவியுங்களென்பார். இப்படிப் பலமுறையுங் கூவியழுது தேரிற்கட்டிய கொடிச்சீலைகள் அசைந்தாடுவதுபோல மனமொருவழியில் நிலைகொள்ளாமலும், அரும்பொருளைத் தேடினாற்போல் மூவரையும் எங்குந்தேடிக் காணாமலும், கடைசியாய் மணமலர்ச் சோலையிற்புகுந்து இந்தவழியேயும்போ யிருப்பார்களோ? வென்று தரையை உற்றுப்பார்க்கு மளவில் நடந்துபோன மூவருடைய அம்போருகத் திருவடிகளி னடையாளங்களைக் கண்டுபிடித்தார்கள். அப்படிக் கண்டுபிடித்தபோது சிலர் சூரியனோ? சந்திரனோ? நக்ஷத்திரமோ? இம்மூன்றுஞ் சேர்ந்த ஒளியோ? தேவபாலக னடந்துவைத்த சிற்றடியின் அடையாள மிதுவென்பார். சிலர் வேதக்கொடிபடருங் கொழுகொம்பின் வடிவுடையாளும், மேகமும் மின்னிட்டோடும் பெருங்கருணை யுடையாளும், மாதர்களுக் கரசியுமாகிய கன்னிகையம்மாள் தமது மெல்லிய திருவடி தோயவைத்த அடையாள மிதுவென்பார். சிலர் இல்லறந் துறவறமென்னு மிரண்டையும் ஒன்றாகச்சேர்த்துத் தயைநிறைந்த மார்புக்கு முத்தாரமாகப் பூண்டவரும், சகலநூற்றுறையை யுடையாரும், வேதநூற்பொருளில் தெளிந்த போதகாசிரியருமாகிய சூசைமாமுனிகள் நடந்துவைத்த தாமரைப் பாதச்சுவடு இதுவென்பார். இப்படி யவரவர்கள் பேசிக்கொண்டு அம்மூவருடைய திருவடி யடையாளங்களின்மேல் கொடிப்பூ, கோட்டுப்பூ, நீர்ப்பூ, புதற்பூ என்னும் நால்வகைப் புஷ்பங்களையும் பரப்பி அருச்சனைசெய்து பின்பு சூசைமாமுனிகளைக் குறித்துச் சொல்லுவார்: எப்படியென்றால்: சிலர், இப்பூவுலகிற் காவலாகுகின்ற மாதவனே! நாங்கள் உமதுமேல்வைத்த பட்சத்தை நீ ராலோசியாமல் இருப்பது முறையோ? எங்களைப் பாராமல் நீக்குவதும் நீதியோ? என்பார். சிலர், ஐயனே! நீர் சென்றபின்பு எங்களுயிரைத் தேற்றுவார்யார்? எங்களுயிரைக் கொல்லவருந் துயரத்தையினிமேல் தடையுரித்து நீக்குவார்யார்? உம்மையல்லாமல் தனியே தீவினையைவென்று பெருமைப் படுவார்யார்? ஐயோ! உம்மாலினிதாய் வாழ்ந்த எங்கள் காரியமெல்லாம் இனித் தீப்பற்றி வேகுமே என்பார். சிலர் ஐயனே! நீர் போகுமுன்னமே இரண்டு துன்பமலைந்தாலும் மலையைப்போல, அசையாமலிருக்கவென்று திருவாய் மலர்ந்தருளினீர்; ஆனாலும் நாங்களும்மைக்காணாத திறத் கொண்ட துன்பமாகிய தீயில் அந்தமலையும் வெந்து நீறாகுமேயென்பார். இப்படியவரவர்கள் மேகத்தினிடிபோல முழங்கி விம்மியழுது கண்ணீர்

மழைபொழிந்து மெலிந்து நின்றாலும், அன்போடு நிறைந்த தயையுளளோர்க்கும் வானவீட்டிற்செல்லும் அறிவுடையோருக்குந் தூரமென்ப தொன்றில்லை யாதலால் ஆசைமாமுனிகளைக் காணவேணுமென்னும் பேராசையால் மீளவும் நடக்கத் தொடங்கினார்கள்.

இப்படித் திருவடிகளி னடையாளங்களைக் கண்டு ஜனங்கள் நடக்கத் தொடங்கியபோது பெருநெருப்பைத் தூண்டினால் அது மிகவுங் கோபிப்பதுபோல அன்புடையாரைப் பிரியும்போது அவர்களோடு வார்த்தையாடிப் பிரிந்தால் துன்பம் அதிகப்படுமென்று நினைத்து யாவருக்கும் பிரயாணத்தைச் சொல்லாமல் புறப்பட்டுப்போன மூவரும் நெடுந்தூரமாக அகன்றுபோனாலும் தங்கள் திருவடிகளைக்கண்ட ஜனங்களிடத்தில் அங்குநடந்த விஷயங்களையெல்லாங் கண்ணாரக் கண்டதுபோலத் தேவகாஷியா லறிந்தார்கள். அப்போது தேன்றுளிக்கும் பூங்கொடி யுயர்த்திய முனிவராகிய வளன் ஜனங்களுமேலன்புகூர்ந்து, வான்மீன்கொடியையும், மேகவாகனத்தையு முடைய தயைநிறைந்த தேவபாலகனை நோக்கி: ஐயா! நம்மைத் தேடிவருபவர்களெல்லாம் கானகத்தின் வழியாக வரும்போது அவர்களைக்காத்து ரக்ஷிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ள, அதற்கு மூவுலகத்தையும் மூன்று சந்திரவட்டக் குடைநிழலாகசெய்து யாவரும் வணங்கப் பொன்முடிதரித்த திருக்குமாரன் கருணைகொண்டு, தமது திருக்காத்தி ஆசிர்வாதந் தந்தமாத்திரத்தில் அலைகடந்து பெருகிவருஞ் சமுத்திரத்திற்குக் கரையிட்டதுபோலத் தங்களைத் தொடர்ந்துவந்த பிரசைகள் யாவருங் காரணமறியாமலும், அப்புறம் நடவாமலும் நின்று, உண்டவிஷம் அமுதமானாற்போலப் பேரின்பக்கடலில் முழுகி ஞான அறிவையடைந்து திருவுளத்தால் வந்ததின்மையும் நன்மையாகும்; பாவத்தால்வந்த நன்மையுந் தின்மையாகும்; ஆதலால்தம்மைவிட்டு அம்மூவரும்போனது திருவுளச் செயலென்று நினைத்துக்கொண்டு பின்பு தாயே! திருக்குமாரனே! அருந்தவத்தி னிறைவனாகிய ஆசைமாமுனிவரே! உங்களை எங்களுயிராக எண்ணி யுங்க ளடைக்கலத்தி லிருந்த எங்களைத் தனியாக விட்டுப் போனீர்கள். ஆயினும் எவ்விடத்திலேயும் எங்களைக் காப்பாற்றுங்களென்று சொல்லிக்கொண்டே தங்கள் நகரமாகிய இரவிமா புரத்திற்குத் திரும்பிப்போனார்கள்.

இவ்வண்ணமாகப் பூவுலக பாவங்களைப் போக்கவந்த சேசுமரி ஆசைமுனிவன்ற மூவரும் இரவிமா புரத்தாருக்கு இத்தொகைப்பட்ட நன்மையெல்லாம் புரிந்து, எவ்விடத்திலும் சந்தோஷத்தை யுண்டுபண்ணி, எசித்துநாட்டை விட்டுப் புறப்பட்டுத் தீயோர் உறவுபோலப் போகப்போகக் குறுகிவரும் பல சிறுவழிகளையுங் கடந்து, துன்பம் வந்தாலும் நல்லோர் தருமத்தை விடாதிருப்பதுபோலப் பதினாயிரம் வானவரும் நீங்காமற் புடைசூழ்ந்து வீணையினுமினிதாய்ப் புகழ்ச்சியைப் பாடிவரநடந்துபோய், ஒரு பூந்தடாகத்தைச் சேர்ந்தபோது அத்தடாகத்தின் குவளை மலர்கள் இவர்களை மைபூசிய மாதர் கண்களைப்போலப் பார்க்கவும், தாமரை மலர்கள் அம்மாதர் கைகளா லழைப்பதுபோல அசைந்தாடி யிருக்கவுங்கண்டு, மெய்வேத மந்திரக்காரராகிய இவர்கள் பொய்யினு லெங்களை மயக்கவோ? அழைக்கின்றீரென்று சொல்லி யதை விட்டெழுந்து அப்புறம் மலர்ச்சோலைசூழ்ந்த ஒருவழியில் நடக்கும்போது அந்தப் பாதையில் அன்னப்பறவைகள் வெண்குடை விரித்தாற்போல இவர்களுக்குமேலே பறந்து நிழலைச்செய்யவும், குயில்கள் வீணையைப்போலக் கூவ

வும், மயில்கள் கலாபத்தை விரித்து முன்னே ஆடிக்கொண்டு போகவும், இவர்களுடைய பாதாரவிந்தங்கள் நோகாதிருக்கும்படி மலர்களைப் பரப்பியிருக்கவுங்கண்டார்கள். பின்பு விளிகளைச் சுமந்து பொருக் கதிர்களைவிட்ட தினைக் கொல்லைகளையும், மேகத்தையொத்த மதயானைகளிருக்கும் ஒரு காட்டையுந் தாண்டி, அப்பால் பாலைவனத்தைச் சேர்ந்து இம்மூவரும் தவத்தோடு உண்டாகிய ஞானம்பிறழாததுபோல ஒருவர்க்கொருவர் பிரியாமலும் பாலைவனமென்று மனஞ் சலியாமலும் நடந்தார்கள். அப்பொழுது இம்மூவருடைய திருவடிகள் பட்டமையால் அந்தப் பாலைவனமானது சூரியனைக்கண்ட இருள் நீங்குவதுபோலவும், புடத்தில் இரசவாதத்தை கூட்டிவைத்த இரும்பு செம்பொனாகுவது போலவும், தனது தீயழகைமாற்றிக், குளிர்ந்த மணமலர் பரப்பிய படத்தின் பரப்புப்போலாயிற்று. மீண்டும் ஆண்டவன் முன்காலத்தில் ஆகட்டுமென்று சொன்னநேரத்தில் எல்லா வுலகங்களும் நன்மையோடு தோன்றியது போல இப்பொழுது நீங்கிய அந்தப்பாலைவனம் எல்லா நலங்களும் நிறைந்து விளங்கியது. இப்படியிருக்க அவ்வனத்தின் ஒருபுறத்தில் உத்தமமான வனத்தைக்கண்டு கைவிரித்து அதிசயித்தாற்போல மலர்ந்த கார்த்திகைப்பூவை ஒருகலாப மயிலானதுகண்டு இதுபடம் விரித்த பாம்பென்று மயங்கி அதின் மேற் பாய்ந்து பின்பு பொய்யென் றறிந்து வெட்கி மற்ற மயில்களுக்கெல்லாம்தலைக்கு அப்புறஞ்சென்றது. ஒருபுறத்தில்மயில்களின்கழுத்தின்நிறம்போல மலர்ந்த காசாம்பூவைக் கண்ட வண்டுகள் மயில்களென்றே பொளித்திருக்கின்றனவென்று பயந்து ஓடிப்போகையில் அதைக்கண்ட முல்லைக்கொடிகள் உண்மையை நினைத்துப் பற்களைக் காட்டிச் சிரித்ததுபோல அரும்புகளை விரித்து நிற்கையில், அதைக்கண்ட வண்டுகள் மிகவுங் கோபித்துப் பெரியோர் தாழ்ச்சியைக் கண்டு சிறியோர் சிரித்ததுபோல நீங்களும் எங்களைக்கண்டு சிரித்திர்களாதலால் உங்கள் பற்களை யுடைப்போமென்று அந்த முல்லைக் கொடிகளை மேற் பாய்ந்து அரும்புகளை யுடைத்து உதிர்த்தன. ஒருபுறத்தில் படித்தவர்க்கள்போல வேஷங்காட்டித் தமது சொற்களைப் பிதற்றி மேன்மைகாட்டிப், பிறர் கைப்பொருளை வஞ்சிக்கும் வஞ்சகரைப்போல வண்டுகள் அவ்விசைக்காடிப் பாடிப்புகழ்வது போல் ரீங்காரஞ்செய்து மலர்களி னிறைக்குடைந்து தேனையுண்டன. ஒருபுறத்தில் பிறருடைய அன்பைத் தேடினார்போல வேஷங்காட்டி அவர்கள் கைப்பொருளைப் பறித்துக்கொண்டு கைவிட்ட பின்பு அவர்களை நிந்திக்கும் சீஷருக்குச் சமானமாக வண்டுகள் மலர்களிற் சார்ந்த தேனையுண்டு தேன்மாறினபின்பு அம்மலர்களை நிந்திப்பதுபோல அருகேசென்று முழங்கின. இப்படிப்பட்ட பெருமையுடைய அந்தக் கானகத்தில்மரகதப் பலகையில் பலரத்தினங்களைப் பரப்பியதுபோலப் பசும்புற்களின்மீது மூன்று சுடராகிய திமூவரும் நடந்துபோகையில் கருணைசெய் தொழுதும் இவர்களுடைய திருவந்த அழகைக்காணும்படி உடலெல்லாம் கண்களாயிருக்கத் தோகைமயில்கள் நிர்த்தனஞ் செய்தன. அப்பால் அந்தப் பாலைவனத்தில் இம்மூவரும் நடந்துபோன வழியெல்லாம் பின்பு பழம்படி திரும்பித் தன்னுடைய கன்மையன்றி மறுஒருவ ரழகைப் பாராத கற்புடையாள்போலவு மிருந்தது.

இவ்வண்ணமாக மூவரும் பலநாள் நடந்து நடுவனத்தில் வந்தபொழுது ஒருநாள் தேவ திருக்குமாரன் ஒருபர்ந்த மணல்மேட்டிலிருக்கும் சண்பகச் சோலையி லிறங்கிவெ பெருந்தருணி அருமைத்திருவாய் மலர்ந்து தமது அன்னையாகிய கன்னிமரியம்மாளையும், கைத்தாதையாகிய சூசைமாமுனிவனையும் நோக்கிச் சொல்லுகின்றார்: நாம் கடந்துவந்த பாலைவனத்து வழியெல்லாம் நாம் நட-

க்கும்பொழுது குளிர்ந்திருந்தது இப்பொழுது மிகுக்க நீரைப் பாய்கிறதும்
நாம் நமது பாதங்களைவைத்து நடந்தபடியால் அந்தவனம் பிற்காலத்தில் ப
லைகவர் கொடுக்க கற்பகங்கள் அரசனாண்டமலையில் நிறைந்திருப்பதுபோலப்
பல தருமங்களையும் நிறைவாய்க் கொண்டிலங்கும். பின்னும் இன்னைந்நாதின
ம் பேழுகோடி விளங்கும் இக்கானகத்தைத் தப்பாருங்கள். இனி இவ்வனத்தில்
முற்றுந் துறந்த தபோதிசேஷ்டர்கள்வந்து தவம்புரிய அவர்களிடத்தில் விள
ங்கும் தன்மையைப்பற்றி வானவருமிங்கு வருவார்களாதலால் இது மோ
க்ஷநாட்டையுமொத்திருக்கும். ஆகையால் அத்தபோதனர்களிற் சிலரையெ
டுத்துரைக்கின்றேன் கவனமாய்க் கேளுங்களென்று திருக்குமாரன் மீளவுஞ்
சொல்லத்தொடங்கினார்: எப்படியென்றால், அதோ எதிரில் தோன்றுகின்ற
மலைக்குகையில் பாவுலனென்னும் முனிவனொருவன் நெடுநாளாகத் தவத்தைச்
செய்து ஒரு காக்கையினுல் தினந்தோறுங் கொண்டுவரப்பட்ட கனிகளையு
ண்டு, வேதத்தையுரைப்பதில் வல்லவனாய்த் தவமாகிய மரக்கலத்திலே
றிப் பாவக்கடலைக்கடந்து அவன் தேகம் இவ்விடத்தி லிருந்தாலும் நமதுமே
லில்வைத்த விசுவாசத்தினுல் அவனுயிர் மோக்ஷநாட்டில் வாழவும், காட்டா
னைமுதலிய பல மிருகங்களும், பறவைகளும் அவன் கட்டளைப்படி நடக்கவும்
முனிவர்க்கெல்லாந் தலைவனாக வாழ்ந்திருப்பான். பின்னும் அந்தோனியெ
ன்னு முனிவனொருவன் மன்மதன்செய்யுங் காமப்போரைவென்று, தவஞ்செ
ய்ய இவ்வனத்தில் வந்தபோது பசாசுக்களெல்லாந் திரண்டு சிங்கமுதலிய பல
மிருக வடிவமெடுத்து அவனோடு போர்செய்ய அம்முனிவன் அந்தப்போரை
யும் தவத்தின் வலியால் ஜெயங்கொண்டெழுந்து அந்தப் பர்வதத்திலே அரு
ந்தவம் புரிந்து சூரியோதயத்திற்கொண்ட ஞானத்தைச் சூரியாஸ்தமனம் வ
ரையும் விடாமல் மோக்ஷகாமியைப்போலக் காத்துக்கொண்டு மலைமேல் வைத்த
தீபம்போல எத்திசையிலும் விளங்குவான். மீளவும் அம்மலையில் இலரியோ
னென்னு முனிவனொருவன் பல நக்ஷத்திரங்கள் சந்திரனைச் சூழ்ந்திருப்பது
போலத் தன்னிறையாயிர முனிவர் சூழ்ந்திருந்தாலும் தானதனித்த நிலையைப
றுப் பாரமில்லாத தூலாகாரத்துப்போல ஆண்டவனில்லாமல் வேறு நன்
மையில்லையென்று நினைத்து ஆண்டவன்பாதங்களை வாழ்த்தியிருப்பான். இன்
னும் அம்மலைக்குகையில் சோணமாமுனிவென்பவ னொருவன் வெயிற்பட்ட பச்
சையிலையைப்போலத் தவத்தின் மிகுதியால் வடிவமாறி ஐம்பொறிகளையும்
வென்று வானுலகத்தைக்காணாமல் நெடுநாளாகப் பெருந்தவம் புரிவான். பின்
னும் அம்மலையில் அபோதரனென்னும் ஒரு தபசி உட்பகையாயும், புறப்ப
கைநுழையும் வாசலாயிருக்கும் பஞ்சேந்திரியங்களையும் அடக்கிப் புறப்ப
கைவர் எய்யும் பாணங்களைத் தாங்கும்படி ஞானத்தைப் பொற்கவசமாக அணி
ந்து, விரதமாகிய வாளைக்கொண்டு பசாசுக்களை வென்று, பல காலந் தவம்பு
ரிவான். இதுவுமன்றி அவ்விடத்தில் அவாவனென்னும் முனியொருவன் ஆ
சையாகிய மதத்தினுல் அறிவாகிய பாகனை யெதிர்த்த யானையாகிய இவ்வுடலை
மனதுக்கமாகிய அங்குசத்தாலடக்கி, விரதமாகிய தூணில் தவமாகிய கயிற்றாற்
கட்டி, வானுலகத்தாரும் ஆச்சரியப்படும்படி தவத்தைச்செய்வான். மீளவும்
அம்மலையில் மதித்தகன் என்னு முனியொருவன் தவமாகியவண்டியில் வீ
ட்டுப்பொருளாகிய புண்ணியமென்னுஞ் சரக்கையேற்றி உயிரையும், உடலை
யும் ஏராகப்பூட்டிப் பாவமாகிய சேற்றிலழுந்தாமல் வான் வீட்டிலடைத்தேசா
த்துத் தவம்புரிவான், மேலும் அம்மலையில் அசோகன் என்னு முனியொருவன்
தயையாகிய மணல்நிலத்தில் நல்ல தருமங்களை முல்லைக்கொடிகளாக நட்
டு, மாதவத்தினு லடக்கிய ஐம்பொறிகளையும் வேலியாகச் சுற்றிலும் வளை

த்து, ஒழுக்கமாகிய தண்ணீர்பாய்ச்சி வானுலகமட்டும் பரிமளம் வீசும் பூந்தோட்டம்போலப் புண்ணியமாகிய மலரைப் பூப்பித்துத் தவத்தை முடிப்பான். இன்னும் புரோதாசனென்னு முனியொருவன் மாதவமாகிய உலைக்கனெருப்பில் பஞ்சேந்திரியமாகிய இரும்பைவைத்தூதி, ஞானமாகிய இரதத்தைச்சேர்த்துத் தங்கமாக்கி அதை வேதமாகிய அச்சிலேவார்த்துப் பலவகைப்புண்ணியமாகிய இரத்தினங்களைப்பதித்து ஆண்டவனுக்கு மாப்பணியாக விளங்கித் தவம்புரிவான். இப்படி யெண்ணப்படாத அநேக நற்றவத்துயர்ந்த முனிவர்கள் நக்ஷத்திரக் கூட்டங்கள்போலத் தோன்றி இருவகைப் பற்றையும் அறுத்தெறிந்து என்னுடைய திருவடிப்பட்ட இடமிதுவென்று தெளிந்து, கூட்டங்கூட்டமாய் வந்து இவ்விடத்தில் தவம்புரிவார்கள். இதுவுமல்லாமல் ஆண்மக்கள் துறவைப்பார்க்கிலும் இல்லறத்தை விரும்பிய பெண்மக்கள்துறவு அரிதாகையால் அப்பெண்மக்கள் துறவைப்பற்றிக் கொஞ்சஞ் சொல்லுகிறேன் கேளுங்களென்று மீளவும் தேவபாலகன் சொல்லத்தொடங்கினார். எப்படியென்றால் முன்பு நாணத்தையழித்துக் காமத்தி லழுந்திய எசிப்திய மரியாளென்பவ ளொருத்தி கண்களுக்கெழுதிய அஞ்சனத்தைக் கண்களறியாததுபோல மணலினுமதிகமாகச் செய்த தன்பாவங்களைத் தானறியாமலிருந்து பின்பு எல்லாவற்றையு முணர்ந்து மனவூக்கத்தை யிறகாகக்கொண்டு, நாணமாகிய போர்வையைப்போர்த்து இவ்வனத்தில் வந்து தவம்புரிவாள். பின்னும் அவள் காமமாகிய பறக்குந் தேளைக்கொண்டு பாவமாகிய பாலைவனத்தைச் சேர்ந்திருந்ததை யொழித்துத், தெய்வபயமென்னுந் தேர்மேற் பறந்து வந்து தவமாகிய குறிஞ்சி நிலத்தில் சிறிதுநாள் குடியிருந்து பின்பு ஞானமாகிய தேர்மேற் பறந்தோடித் தருமமாகிய முல்லை நிலத்திற்சேர்ந்து கடைசியாய் எனது நாமமாகிய தேரிலேறி வான்வீடாகிய மருத நிலத்திற்சேர்ந்து வாழ்வாள். இப்படியாக இங்கே சொல்லப்பட்டவர்களும் மற்றவர்களும் கூட்டமாகவும் தனித்தனியாகவும் இவ்வனத்தில் தவம்புரிந்து என்னைத்துதிக்குமோசை கடலினும், மேகத்தினும் அதிகமாய் முழங்கும். மேலும் தபசிகளெல்லாம் தவமாகிய கப்பலிலேறி மனவூக்கமாகிய பாய்மரத்தில் தெய்வபக்தியும் பயமுமாகிய இரண்டுபாய்களை விரித்து தெய்வவரங்களாகிய காற்றுவீசவும், ஓயாத தியானமாகிய மாலுமி அந்தக்கப்பலை நடத்தவும் பாவசமுத்திரத்தைத்தாண்டி மோக்ஷகரைசேருவார்கள். இதுவல்லாமல் தபஞ்செய்வது அருமையானாலும் அந்தத்தபத்தைக் கைவிட்டவர் மோக்ஷகரைசேர்வது அதினும் அருமையாகும். ஆகையால் இப்படிப்பட்ட தவமாகிய கப்பலில் ஏறிவருகின்ற தபசிகளில் அநேகர் இடையில் தவங்கெட்டு அம்மரக்கலங் கவிழ்ந்ததுபோலப்பாவக்கடலில்கவிழ்ந்துவிழுவார்கள். இரண்டொருத்தர் மாத்திரம் மனஸ்தாபமாகிய மரக்கலத்தை விடாமற் பிடித்துக்கண்ணீராகிய கடலைநீந்திச்செவ்வனேபோய் மோக்ஷகரையைச் சேருவார் என்றார். இதைக்கேட்டிருந்த ருசைமுனீந்திரர் காந்த அமுதத்தை யுண்டாற்போலத் தேவமதலையின் திருமொழிகளை இருசெவியாலும் நிரம்பவுண்டு சொல்லுவார்: குடம் பச்சைமண்ணாயிருக்கும்போதே யுடைந்தால் மறுபடியுங் குடமாக்குவதற்கும், குலையிற்போடுவதற்கும் எளிதாகும். தீயில்வெந்த குடமுடைந்தால் மறுபடி குடமாக்குவதற்குக்கூடாது. அதுபோலக் கைக்கொண்ட தவத்தையிடையில் விடுபவர் மறுபடியும் நல்லவர்களாகுதல் கூடாதகாரியந்தானே யென்று திருமகனை வாழ்த்தினார்.

இவ்வண்ணமாகத் திருக்குமாரன் சொல்லிய திருமொழிகளைக்கேட்டு கண்ணைப்படாதவானவர் அசகூட்டம்போலப் புடைசூழ்ந்து சூரியனைக்கண்ட சகோரப்பட்சிகள் விழுவதுபோலத் திருப்பாதங்களதிற்றடிகளில் சிலர் விழுந்து வணங்கிச், சமுத்திரத்தின் மதிமாக முழங்கி அந்தப்பாலைவனத்தைப் புகழ்ந்து இரத்தினங்களினால் அலங்கரிக்கப்பட்ட உப்பரிகைகளிருக்கும் நகரங்களைப்பழிக்குஞ் செல்வங்களையுடைய இந்தக்கானகமானது ஆயாசத்தைத் தரும் தவத்தின் முகத்தை யாவருக்கும் அந்தப்படி காட்டினாலும், நிறைந்த அருளும், வரங்களும் கிளைத்து பான்விட்டுக்கொப்ப விளங்குவதால் இதன்மாகிமையைப் புகழத்தகுமோவென்பார். சிலர் உயிரைக்கொல்லும் பஞ்சேந்திரியங்களால் வருகின்ற ஆசையானது உலைக்களை நெருப்பினுங் கொடியதாயிருக்க அதைத்தவமானது அவித்து நிற்பதால், அந்தத்தவத்தைச்செய்வதற்கிடமாகிய இவ்வனம் தன்னில் நிலைகொண்ட தீத்திரளைமாற்றி எல்லாத் தருமங்களும் வளர்ந்து குளிர்ந்த பூஞ்சோலையை ஒத்திருக்கு மென்பார். சிலர் திருக்குமாரனை நோக்கி: வானோர்வணங்கு பரசனே! நீர் இவ்வுலகத்தில் உடலோடு அவதரித்து இவ்வனத்தில்வந்தபடியால் இரவு, பகலைப்போலவிளங்கவும், நெருப்பு பனிபோலக் குளிரவும், நஞ்சு அமுதம்போல இனிக்கவும், கடினமலைகளுங் கற்பாறைபோல நிலைக்கவும் செய்தது உமது மலர்ப்பாதங்களின் செல்வமல்லவோ என்பார். இப்படிச் சந்திரனிலுமிருந்த அழகுவடிவுள்ளவானவர் அணியணியாக நின்று அவ்வனத்தைப் புகழ்ந்து, பின்பு திருக்குமாரனுடைய திருவடித்தாமரைகளை வணங்கிப் புகழ்ந்துபாடி வாழ்த்தியிருக்கையில், மலர்ந்த புஷ்பங்களிலிருக்கும் வண்டின்கூட்டங்கள், வானவரினும் இனிதாய் முழங்கவும், கருங்குயில்கள் அந்த இசைக்குத் தகுதியாகப் பாடவும், மற்றப்பறவைகள் இதை ஆச்சரியத்தோடு பார்க்கவும், தோகைகளைவிரித்துமயில்களாடவும், இடங்கள்தோறு முழங்கி அழகிற் சிறந்த அவ்வனம் செல்வத்தி லுயர்ந்தது.

இவ்வண்ணமாக மாகமிற் சிறந்த செல்வகுமரன்தன் பிரயாணத்திற்கு எழுந்திருக்கக் கடவீரென்றுசொல்லி, மூவரும் எழுந்து மெல்லியமலர் பரப்பினவழியாய் நடந்து, அந்தக் கானகத்தைத் தாண்டியவுடனே, அக்கானகம் இம்மூவரையும் நினைத்து வணங்காத பாவிகள் அன்பத்தீயில் வெந்தெரிவது போல இவர்கள் திருப்பாதங்கள் நீங்கியபடியால் பழையபடி யிருந்த தீப்பற்றி யெரிந்தது. அப்பால் இம்மூவரும், அநேக நெடியானதையெல்லாங் கடந்து சூரியன் அஸ்தமித்து நடுக்கடலில் மூழ்கினதுபோல, நெருங்கியடர்ந்த ஒருபெருங்காட்டில் நுழைந்து, பகைவர் நினைவுபோலவும், பாம்புகளூர்ந்தவரும் வழிபோலவும், வளைந்துதோன்றும் மின்னலைப்போலவும், வஞ்சியர் நெஞ்சம்போலவும் வளைந்திருக்கும் பலகிளைவழியெல்லாம் நடந்து செல்லுகையில், இடையில் ஒரு மலைவழியைக்கண்டு அவ்வழியே சிலதூரஞ்சென்று அம்மலையை நெருங்கியபோது அதன் அடிவாரத்தில் ஒருபால் எட்டிமரங்கள் மேலன்புகாட்டி உள்ளே மயக்கந்தருஞ் சொற்களைப்பேசும் மகளிரது செவந்தபவள இதழ்களைப்போலச் செவந்தழகுள்ள நச்சுக்கனிகளைக் காய்த்திருந்தன. ஒருபால் வேங்கைமரங்களின் உச்சியிற்கட்டியிருக்குந் தேன்கூண்டைக்கிழித்துச் செல்லும்படி மடல்விட்டோங்கினகமுகமரங்கள் பழுத்தபாக்குக் குலைகளை முத்துக்களாக உதிர்த்தன. இச்சிறப்பு யாவற்றையும் பார்த்துக்கொண்டு அம்மலையை வலதுபுறமாக விட்டுவிட்டு அப்புறம் நடந்துபோய், இடையர் மாயமாகிய புல்லாங்குழலினால் மான்களைப் பக்கத்தேவரச் சேர்த்து, மேய்க்கின்ற செல்வம் நிறைந்த முல்லை நிலத்தைச்சேர்ந்து, அம்முல்லை நிலத்தில்

ஒருபெண் ணெஞ்சிற்கொண்ட காமவாசையை அவளது சிரித்த சாயல்காட்டுவதுபோலச் சுற்றிலும் வேலியாக அடர்ந்து நின்றபெரிந்து மரங்களின் குடக்கையிலே ஒளித்திருக்கும் பூந்தோட்டத்தை முல்லைக்கொடிகள் சிரித்தது போல அரும்பெடுத்து வாசனையால் காட்டியதையும், பின்னும் அம்முல்லைநிலம் பூமியினுடைய மலர் மாலையணிந்த கூந்தலைப்போலச் சிங்காரம் வாய்ந்திருப்பதையுங் கண்டுமகிழ்ந்து அப்பால், இந்தப் பூமிக்கு ஒருவதனம்போல விளங்கும் தங்கள் நாடாகிய யூதேய நாட்டைக்கண்டு, அங்குத் தங்களுக்கெதிரில் தோற்றிய ஒரு பிரமாண்ட பர்வதத்தையுந் தாண்டிச்சென்று, நாட்டுக்குள்ளிருக்கும் சிறந்த வனப்புவாய்ந்த ஒரு பூந்தோட்டத்தில் புகுந்து, இதுவரையிலும் நடந்துவந்த திருவடிகளின் வருத்த மாறும்படி அவ்விடத்துள்ள ஒருமணல் மேட்டிற்றங்கி யிளைப்பாறினார்கள்.

இவ்வண்ணமாக மூவரும் மணல்மேட்டிற் றங்கி யிருக்கும்போது சுகந்த பரிமளம்வீசி யெதிராகக் காணப்படும் மோரியமாமலையைத் தெய்வத்திருக்குமாரன்கண்டு தமது மலர்ந்த திருமுகத்தினிற் கண்ணீர்விட்டழுதார். இதைக் கண்ட தேவதாயாருந் தமது திருக்குமாரன் மனநொந்து கண்ணீர்விட்டழுவதைத் தெரிந்து, தாமுங் கண்ணீர்விட்டழுது பின்பு திருமகனைநோக்கித் தேனிலும் இனிய குதலைமொழியையுடைய என்னருமை மகனே! நீ கண்ணீர்விட்டழும்படியான காரணம் யாதென்று வினவ அதற்குத் தேவபாலகன் தமது கன்னித்தாயாரையுஞ், சூசையப்பரையும் நோக்கிச் சொல்லுவார்: மேகங்களைக் கூந்தல்போல உச்சியிற்றாங்கிப், பலநதிகளை உடுத்த ஆடையைப்போல இடையிற்றரித்துச், செல்வத்தினுயர்ந்து நமக்கு எதிராயிருக்கும் அந்த மோரியமாமலையைப் பாருங்கள். அம்மலையை நினைத்துத்தான் நான் மனநொந்தழுதேனென்றார். அதற்கு மாதவ சூசையப்பர் திருக்குமாரனை நோக்கிப் பூவுலகத்தை யிரட்சிக்கப் பிறந்த என்னையனே! அந்த மலையின் விசேஷமென்ன? வென்று கேட்கத் தெய்வவடிவாகிய திருக்குழந்தை மறுமொழிசொல்லுகின்றார்: பூர்வகாலத்தில் ஆபிராமென்பவ னொருவனிருந்தான். அவன் நெடுநாளாகப் பிள்ளையில்லாமல் பல தவங்களைச்செய்து அற்புதமாக ஒருகுமாரனைப்பெற்று, அந்தக் குமாரன் தனக்குமோக்ஷகன்மையைக் கொண்டுவந்தானென்று அவனுக்கு (தமிழ்மொழியால் நகுவனென்று சொல்லும்) ஈசாக்கு என்னும்பேரிட்டுப்பெருமகிழ்ச்சியோடு வளர்த்துவந்தான். இப்படி வளருங் குழந்தையாகிய ஈசாக்கென்பவன் அறநலம், அருணலம், பொருணலம், கல்விநலமெல்லாங் கற்றுத், தாய், தகப்பனை முறையோடுபணிந்து வாழ்ந்திருக்கையில் கடவுள் ஆபிராமென்பவனைநோக்கி: ஓ! ஆபிராமே! நீயுன்மகனை வெட்டிக்கொன்று எனக்குப் பலியிடவேண்டுமென்று சொல்ல அதற்கு ஆபிராம் மனத்திலுண்டாகிய துக்கத்தைப் பொறுக்கமாட்டாதே போனாலும், ஆண்டவன் கட்டளை யிதுவென்று நினைத்து அந்தக்கட்டளையைத் தலைமேற்கொண்டு, உடனே தன் வீட்டுக்குப் புறப்பட்டுப்போய்த் தனது மனைவியிடத்துஞ் சொல்லாமல், செல்வத்திருமகனைக் கூட்டிக்கொண்டு ஆண்டவன் குறித்த அந்த மோரியமாமலையில்வந்து தகப்பனும், பிள்ளையுமாக அம்மலைமீது ஒரு பலிபீடத்தையுண்டாக்கினார்கள். பின்பு கடவுள் கட்டளையை யறியாத செல்வமகன் பலியிடுகிறதற்கு வேண்டியவாளும், விறகும், நெருப்பும் கொண்டுவந்து தகப்பனைநோக்கி: ஐயா! பலியிடும் பொருளெங்கே யென்று வினவினன். அதற்குத்தகப்பன் ஆண்டவன் கட்டளையை வெளிப்படுத்தி, மகனைக் கட்டிக்கொண் டழுதான். அதற்கு மகன் மகிழ்ந்தமுகத்தோடு தகப்பனைநோக்கி: ஐயா! இன்பந் தந்தாலுந், து

ண்டகந்தாலும் நூறு விதமாய் அன்புக்காட்டும் ஆண்டவன் எனக்குக்கொடுத்தவுயிரை அவருக்கு நான் கொடுப்பதில் வருந் துன்பமென்ன? நீர் மனம்வருந்தவேண்டாமென்று துணிந்து சொல்லித், தகப்பன் அழுதகண்ணீரைத் துடைத்து ஆறுதல் செய்து, அவன் பாதத்தில் விழுந்து வணங்கி மலர்மாலையைச்சார்த்தி அடியேன் உமக்குச்செய்த குறைகளையெல்லாம் பொறுக்கக்கடவீரென் றுரைத்துப், பின்பு தானே அப்பலிபீடத்தின்மேலேறி யிரண்டுமலர்க் கரங்களையுங் குவித்துநின்றான். இதைக்கண்ட பிதாவாகிய ஆபிராம் இது திருவுளச்செயலென்று மனத்திற் றேறித்துணிந்து, தனது செல்வமகனது குடுமியை யிடதுகையாற்பற்றித் தலையறுந்து விழும்படி யேந்திய வாளைக்கொண்டுவீசினான். அப்பொழுது ஆண்டவன் இவ்விருவருடைய துணிவையுங்கண்டு மகிழ்ந்து, ஆபிராம்வீசிய வாளையுங் கையையுந்தாங்கி, வெட்டவொட்டாமல் நிறுத்தி, உலகமெல்லாம் இந்தச் செயலைக்கண்டு மகிழும்படியாகவும், இவ்விருவரும் எக்காலமும் வாழும்படியாகவும் ஆசீர்வதித்தருளினார். இந்த வர்த்தமானம் நான் மன்னுயிரை யிரக்ஷிக்க வேறொருமலையின்மேல் பலியாவதற்கு முன்னடையாளமாயிற்று. அப்பால் இனி நான் என்னுயிரைத் தருங்காலம் வருமளவும் எனக்கு நல்லுயிரில்லையென்று அருமைத் தேவகுமாரன் திருவாய்மலர்ந்தருளிக் கருணைமிகுதியால் மீளவும் அழுதுநின்றார்.

இப்படித் திருக்குமாரன் சொன்னதைக்கேட்ட தவத்திராசாவாகிய குலசைமாமுனிவர் திருக்குமாரனது காணாறுக் கருணைசமுத்திரத்தைக்கண்டு அழுது மறுமகனைநோக்கி: மிகுந்த கருணையுள்ள என்னையனே! நீ சொன்னபடி ஆபிராமும், ஈசாக்கும் இறப்பதற்குத் துணிந்ததுவே போதுமென்றுமே அதுபோல மனிதரை யிரக்ஷிக்க நீ கொண்ட ஆசைபோதாமல் இறப்பதற்குந் துணியவும் வேண்டுமோ? என்றார். அதற்குத் திருமகன் சிவந்த பவளத்தை நெருப்புக்குச்சமானமாகச்சொன்னாலும் பவளஞ் சுடுமோ? இல்லை. அதுபோல உபமானத்திற்காக குருவையென்பவனைக் காட்டி அவன் துணிவுகொண்டதுபோலுமென்றாலும், உபமேயப்பொருள் நானாகையால் மனிதர் பாவத்திற்காக நானிறக்கக்கடவேனென்று மீளவு மழுதுசொல்லுவார். நான் மனுமக்களுக்காக இறக்குங்காலம் வந்தாலொழிய இங்கேயெனக்கு மகிழ்ச்சியுண்டோ? உலகத்தை யிரக்ஷிக்குஞ் சிலுவைமரத்தைநெடுநாளாகக் காணாமையினல்லவோ? முடியாத ஆயாசத்தைக் கொண்டேனென்றார். இப்படி ஞான சூரியனாகிய திருக்குமாரன் திருவாய் மலர்ந்தருளியபோது இவர்கொண்ட வருத்தமாறும்படி தேவலோகத்து வானவர்கள் ஆகாயத்தில் வந்துநின்று அங்குச் சந்திரசூரிய நக்ஷத்திரங்களின் பிரகாசத்தை ஒன்றாகச்சேர்த்துக் காட்டியதுபோல ஒரு அலங்கார பிரகாசமுள்ள சிலுவையைக் காட்டினார்கள். அந்தச் சிலுவையைக்கண்ட தேவசுதன் ஆயாசமெல்லாம் நீங்கி அமுத மொழுகுங் குதலைத் திருமொழி கொண்டு சொல்லுவார்: எனக்கமுதிதுவே, அன்பிதுவே, என்னன்பிற்கிசைந்த இரத்தினக்கதிரிதுவே, எனக்குச்சிறந்த ஆபரணமிதுவே, நான் மோக்ஷவீட்டைத்திறக்குந் திறவுகோலிதுவே, நான் அரசாட்சிசெய்யுஞ் செங்கோலிதுவே, நான் பகைவனைவெல்லும் பெரும்படையிதுவே, என்னுயிரினும் எனக்கினிய வுயிரிதுவே வாழிவாழியென்று புகழ்ந்துரைத்துப், பின்பு தமது அன்பின் வேகத்தினால் உடலோடு எழும்பி ஆகாயத்திற் றோன்றிய சிலுவையைத் தமது மார்போடு இறுகத்தழுவிப் பரமானந்தக்கடலில் முழுகினாற்போல அசைவற்றிருந்து அனுபவித்த இன்பக்குறையாமல் சூரியனைப்பார்க்கிலும் பிரகாசத்தைப் பரப்பிநின்றார். இப்படிக் கடல்மேலெழுந்த சூரியனைப்போலத்

தேவகுமாரன் ஆகாயத்திற்பொலிந்து விளங்குவதைக்கண்ட சூசையப்பரும், சுத்தத்தேவதாயாரும் அந்தத் திருக்குமாரனுக்குப்பின் மனதுகளுமுயிர்களுந் தொடர்ந்து சென்றபடியால் வெற்றுடம்பினராகிப் பேசாமலும், அசையாமலும் தீயிலிருக்கின இரண்டு சித்திரங்களைப்போல அழுது நின்றார்கள். இந்தத் துயரத்தைக்கண்ட அருட்கடலோனாகிய தேவபாலகன் மீளவும் அவர்களிருக்கும் இடத்தினிறங்கி அவர்கள் துயரம் நீங்கி மகிழும்படி ஒரு புன்னகைகாட்டி எழுந்து, பிரயாணப்படுங்களென்று சொல்லச் சூசையப்பரும், கன்னிமரியம்மாளும் தேவகுழந்தையை வாழ்த்தித் திகைத்து வழிநடந்து போகும்போது பாவிகள் மனம்போல இருண்ட வழியோடி ஒருமலையைக்கண்டு அதனடிவாரத்திற்போய்ச் சேர்ந்தார்கள்.

இப்படி மூவரும்போய்ச் சேர்ந்த அம்மலையினடிவாரத்தில் அன்றைய இராப்பொழுதைக் கழித்துப், பொழுதுவிடிந்தபின்பு அம்மலையின் மேலேறி யானைக்கூட்டங்கள் சந்தனத்தழைகளை மேய்ந்து முழங்கவும், தோகைமயில்கள் நிர்த்தனஞ்செய்யவும், இரத்தின ஆரம்போல ஓடும் அருவிகள் ஒலிக்கவும், மானினங்கள் துள்ளியோடவும், மலர்ச்சோலைகளில் நறுமணம் ஒருகாதந்தூரத்துக்கப்புறம் பரிமளிக்கவும் கண்டு, பின்பு பலாக்கனிகளைக் குரங்குகள் உடைக்கின்றதால் அவற்றினின்று வழியுந் தேன் அருவிபோல வெள்ளமாய் ஓடுவதையுங்கண்டு, அவ்விடத்தைவிட்டு வடப்புறமாய்த் திரும்பி மரங்கள் ஒன்றோடொன்று கையைப் பின்னினதுபோல அலங்காரஞ்செய்யும் மலைச்சாரல் வழியாகச் செல்லுகையில், அவ்விடத்தில் சண்பகச்சோலையும், சந்தனச்சோலையும் வெயிலை மறைத்து நிழல்செய்ய தங்களை நினைப்போர் மனம்போல உச்சிப்பகலில் குளிர்ந்திருக்கும் ஒரு பூந்தடாகத்தைக் கண்டார்கள். அப்பொழுது இவர்களைக்கண்ட பறவையெல்லாம் இனிதாகப்பாடின. இவர்களைக் கண்டதைக் காணும்படி உடம்பெல்லாம் கண்ணுள்ளதுபோலத் தடாகமெல்லாம் புஷ்பித்தன. பின்பு இவர்களை இன்னாரென்றறியாமல் வில்லேந்திய கையோடு சிலவேடரும், வேட்சியரும் சூரியனைக்காணவரும் இருள் கூட்டம்போலவந்து, தங்கள் குலத்தாருக்குரிய அன்புகாட்டிப் பலவகை கனிகளைப் பரப்பி உண்ணுங்களென்று உபசரித்தார்கள். இதைக்கண்ட மெய்வேதக் கிழவனாகிய சூசைமுனிவர் அவர்களை நோக்கி: இம்மலையில் வாழுகின்ற நீங்கள் யாரென்று வினவ அதற்குக் கருஞ்சேற்றில் விழுந்த யானையைப்போலக் கரியமேனிகொண்ட கிழவனொருவன், வெண்மணலாகிய திண்ணைமேலிருந்துகொண்டு ஒரு மைக்கடாக் குரலோடு சொல்லுவான்: முச்சடையைப்பொருந்த முனிவரே! நாங்கள் யாரென்றுகேட்டால் முன்னாளில் சிறந்த இம்மலையிடத்தில் யூதர் குலத்தாருள் ஒரு குலத்தார்களாகிய மக்கபேயர் என்பவர்கள் ஒளித்திருந்தபோது அவர்களுக்கு உதவிசெய்த வேடர்களைக் குளிர்ந்தபாராமரத்து நிழலிலிருந்து ஆண்டோரும் தலைவன் நானே. மேலும் அதோ தடாகத்தருகாமையில் பூஞ்சோலைகளாற் சூழப்பட்டிருக்கும் வெளியிடத்தைப் பாருங்கள். அந்த இடத்தில்தான் மக்கபேயருக்குத் தலைவனாகிய யூதா என்பவன் ஆண்டவனுடைய கட்டளைக்கொண்டு பகைவரோடு கொடிய போர்செய்யும்போது அவனுக்குத்துணையாக சூரியகிரணங்களைப்போல ஐந்து குதிரைகள்மேலேறிவந்த ஐந்துவானவர்கள் வல்லமையோடெய்த அம்புகள்பட்டு நிறைந்த கடலைப்பொருந்த பகைவர் இரத்தஞ்சிந்தி யுயிர்விட்டார்கள். அதனால் மக்கபேயர் ஜெயங்கொண்டார். இதல்லாமல் அவர்கள் வணங்குங் கடவுளைப் பகைத்தவர் உயிர் வாழார், நாங்களும் அந்தக் கடவுளையே வணங்கித் துதித்துக்கொண்டு வருகையில் எங்களுக்குப்பிணியும்

துன்பமும் தொடர்புவிடாமல் வருகின்றனவே அது என்னகாரணமென்று வினவினன். அதற்கு அருந்தவனாகிய குசைமாமுனிகள் மறுமொழிசொல்லுவார்: ஆண்டவர் பயனில்லையென் றெண்ணிப் பொருட்செல்வத்தைப் பூமியி லெறிந்ததுபோல அச்செல்வங்கள் பாவிகளிடத்திலு மிருக்கக்கண்டோம். கண்டபின்பும் அதை விரும்பலாமோ? மழைநீர் தங்கும் இடமும், மாங்களின் கனிகளும், நிலங்களின் விளைவும் பலவகையாவதுபோல நமக்கும் பலநிலைகளுண்டாகிச் செல்வரோடு வறியரும், வாழ்வரோடு தாழ்வாருமாகக் கலந்திருக்கிறோம். எல்லாக் குலத்திற்கும், எல்லாநிலைக்கும் பொதுவான புண்ணியத்தின் மாட்சிமை நாம் தேடினபோதும் பாக்கியம் வந்துசேரும். அதுசேர்ந்தபின் செல்வப்பொருளை விரும்பலாமோ? மேகத்தைக்கண்டபோது முல்லை மலரும், சூரியனைக்கண்டபோது தாமரைமலரும் மலர்வதுபோலச் சிலர் செல்வமடைந்தபோது தருமஞ்செய்வார். சிலர் அன்பமைந்தபோது தவத்தை முடிப்பார். இப்படிப் பூவுலகில் பாவத்தனிசப் பயன்படாததில்லை. இப்படியிருக்க நீங்களும் வேடராகையால் அறிவைமயக்கும் மதுவை யருந்தாமல், களவுத்தொழில் மறந்து, தீய ஆசையைக்காட்டும், ஐம்பொறிகளின் பொய்மையை யுணர்ந்து, காமம், கோபம், சோம்புமுதலிய பாவங்களையும் ஒழித்து நல்ல தருமநெறியே கைக்கொண்டு இருப்பீர்களாகில் வானுலகத்தின் மேற்குலத்தாராகிவாழ்வீர். பின்னும் அவனவன் பிறக்கும்பொழுதே தனக்குப் பூவுலக செல்வமும், குலமுந் தெரிந்துகொள்ளவில்லை. வானுலக செல்வமோவென்றால் அவனவன் பாவத்தை நீக்கித் தருமவழியில் நடந்தால் எல்லாருக்கு முண்டாகும். தருமஞ்செய்தால் நாமிறக்கும்பொழுது அதன் பயனை யறியலாம். ஆகையால் வானுலக செல்வத்தில் வாழவேண்டுமானால், இப்பொழுதே பாவத்தை யொழித்துத் தரும மாட்சிமையைத் தேடவேண்டும். இவ்வுலகத்தில் மனிதர் குலங்களினுல் வேறுவேறாகத் தோன்றுவதுபோல வானுலகத்தில் தருமத்தினளவாக வேறுவேறாகக் காணப்படுவார். ஆகையால் மலையில் வாழும் நீங்களும் சமயமறிந்து தரும முறையை நடத்துங்களென்றார்.

இப்படிச் குசைமுனிவர் வேடர்களுக்குச் சொல்லியதைக் கேட்டிருந்த வேடச்சியர் மதுமல ரருப்புகளைப் பூமாலையாகக்கட்டித், திருக்குமாரன் திருப்பாதத்தண்டையில் வைக்கவே — அக்கண்ட எழுவாது குழந்தையாகிய தேவபாலகன் திருவாய்மலர்ந்து, நீங்கள் இவ்வளவு பிரயாசத்தோடு ஓடினது வாடு மலர்மாலையைக் கொண்டுவரவோ? உங்களாலானது இதுதானோ? வென்று புன்னகைகாட்டிச் சிரித்தார். அதற்கு அம்மாதரு ளொருத்தி ஐயா! நிகரில்லாத அழகுள்ள நீயே வாடாதமலரொழிய இங்கே வேறே வாடாதமலரில்லையென்று சிரித்துச்சொன்னாள். பின்னும் வாடாதமலர் கொம்பின்மேலும், கொடிமேலும், தண்ணீர்மேலும் எங்கேயாவது உண்டானால் நீயே சொல்லுவாயென்றாள். அதற்குக் கன்னித்திருமகன் மாதவமாகிய சோலையில் மலர்ந்த கற்புமுதலிய புண்ணியங்களே வாடாத மலராகுமென்றார். அதற்கு வேடச்சி குவளைமலரினு மழகிய கண்ணுடைய மாதர்களுக்குக் காணியாகிய கற்புபளிங்குபோல மிருதுவாகி ஆவிபட்ட மாத்திரத்தில் அழுக்கடையு மென்று சொல்லுவதினால், அந்தக்கற்பை வாடாத மலரென்ப தெப்படியென்றாள்? அதற்கு மனுமகன் ஆவிபட்ட மாத்திரத்தில் கற்பு அழியுமென்றால் அதுபடாமல் மனந்துணிந்து ஐம்பொறிகளையும் காக்கக் கடவீரென்றார். அதற்கு வேடப்பெண் மனத்தில் மகிழ்வுண்டாகும்படி எதிர்வருமின்பத்தைஐம் பொறிகளுமநாடியிருப்பதால் அவற்றைக்காப்ப தெப்படி? ஆண்டவனே நம்மைப்படைக்கும் அத

தப்பொறிகளைப் படைத்து நமக்குத்தந்த தெப்படி? என்றான். அதற்குத் தேவகுமாரன் இதோ அது நம்மைச் சேர்காவிடினும் அதை விலைபட மெனவேயோ? அதுபோல ஐம்பொறிகளும் நமக்குவேண்டியது தானே. பொறிகளையும், தேவையும் உபயோகப் படுத்தும் வழியைத் தெரிந்து கேடொன்றில்லாமல் உபயோகம் பண்ணிக்கொள்ள வேண்டுமென்றான். இப்படித் திருக்குமாரனுஞ் சூசையப்பரும் பல பிரயாசங்களை யெடுத்துச் சொன்னமையால், அங்கிருந்த வேடரும், வேடச்சியரும் மனத்தி லுள்ள கல்தோண் நல்லுணர்வடைந்து மகிழ்வெல்லாம் அடைந்து புதிதாய் மலர்ந்ததுபோல செஞ்சிய மலர்ந்து, நல்ல தருமத்தின்மேல் ஆசை கொண்டு, இம்மூவர் திருப்பாதங்களிலும் விழுந்து வணங்க, அப்பால் இம்மூவரும் அம்மலையிலிருந்து புறப்பட்டார்கள்.

இப்படி மூவரும் அம்மலையினின் றபுறப்பட்டபோது மலையின்கண் ணுள்ள வாசனையும், மலர்வாசனையும், தடாகங்களின் வாசனையும் வரிசைவரிசையாக எதிர்கொண்டு வந்திருந்தவர்போல வாசனைவீசவும், மலராகிய கண்களைத் திறந்து சோலையெல்லாம் பெண்களைப்போலப் பார்க்கவும், வழிகடந்து தங்கள் நாடாகிய யூதேய நாட்டைப் பெருமகிழ்ச்சியோடு சேர்ந்தவளவில் அவ்விடத்திலுள்ள சில இடையர் வந்து இம்மூவரையுங் கண்டு, இவர்களைப் பகைத்த அரசனாகிய ஏரோதனிறந்து அவன் மகன் அரசாளுகிறானென்று சொன்னவுடனே சூசைமாமுனிகள் மிகவும் பயப்பட்டு வருந்தியிருக்க, உடனே வானுலக அரசனாகிய கடவுளாலனுப்பப்பட்ட தேவதூதன் வந்து, எல்லாவுலகங்களையும் அரசாளும் கடவுள் வல்லமையினால், இங்கே அரசாளும் ஏரோதன் மகன் உங்களுக்கு ஒருதீங்குஞ் செய்யமாட்டானென்று சொல்லியதால், சூசையப்பர் மனந்தேறி இன்பமுந் துன்பமும் மாலைபோலக் கலந்துவர நடந்துபோய்ச் சூரியனைக்கண்ட தாமரை மலர்வதுபோல யாவரும் மகிழும்படி தாங்களில்லாமல் பாலைவனம்போலிருந்த நாசரேத்தென்னும் நகரம் தருமச்சாலை போலாகும்படி அந்நகரத்திற் சேர்ந்தார்கள்.

இவ்வண்ணமாக மூவரும் நசரையாபுரஞ் சேரும்பொழுது அந்நகரமானது கொடிகளாகிய கைகளை நீட்டிச் சீக்கிரம் வாருமென் றழைப்பதுபோலவிருந்தது. அந்நகரத்திலுள்ளவர் கொடிகளுங், குடைகளும் பிடித்து வானவர் இம்மூவரையும் நெருங்கிச் சூழ்ந்து வருவதைக் காணாமல், காட்டுவழியில் நடந்து வந்த திருவடிகள் வருந்தாதிருக்கும்படி நகரத்தோரணங்களை மாத்திரம் கண்டார்கள். பின்னுந் தாமரைத் திருமுகத்தையுடைய திருக்குமாரனும், நகைத்திருமுடியைத் தாங்கிய தேவகன்னிகையும், மலர்க்கொடி போன்றிய சூசைமாமுனிவரும் நகரிற்புகுந்தது தேவமகிழ்ச்சியோடு தங்கள் குறைதீரும்படி யென்றுகண்டு, யாவருந் திரண்டுகூடிச்சென்று இவர்களோடு அறமும், அருளும், திறமும், வேதநூலும், மற்ற நன்மைகளும் நுழையும்படிக்கு வாருங்கள் வாருங்கள் என்றழைத்த ஓசை நகரமெங்கும் நிரம்பிற்று. அவ்விடத்தில் சங்கு, ஊதுகொம்பு, இனிக்குழல், வீணை, முரசு, பேரிகைமுதலிய வாத்தியங்களின் கோஷம் மேகமுழக்கத்தையும், கடலோசையையும் அடக்கின. பின்னும் யாவரும் இவர்களைச் சூழ்ந்து, புத்திசாலி வாழைநற்போல நாங்கள் வருந்தியழும்படி யெங்களை விட்டுப்போன நீங்கள் இப்பொழுது அதுவனர்தற்கு மழைபோலத் தேவவரங்கள் பொழியும்படி வந்தீர்கள் என்பார், மேலும் கொடியபாலை வனத்துவழியும், யானைகளிருக்கும் மலைவழியும், வேங்கைகளிருக்குங் காட்டுவழியும் கடந்துவந்து இந்தப்பட்டணத்தில் சேர்ந்த உங்கள் திருப்பாதங்களை நாங்கள்

கண்டுகளிக்கிறோம் என்பார். அந்தக்கொடிய வழிகளெல்லாம் உங்களுக்குத் துன்பத்தைத் தந்தன. ஏனெனில் உங்களிரிய வரன்முறைகளைக்கேட்டுப் பசி, தாகம், யாதின முதலிய பிணிகளெல்லாம் உங்களுக்குப் பணிபுரியும். உங்களுறவைக் காணும்படி உன்னந்த வனங்களும் விழித்தாற்போலப் பூக்கின்றன. நீங்கள் நின்ற பாலைவனமெல்லாம் உங்களைக் கண்டு வாஞ்சித்திருப்ப இப்போதாகும். நீங்கள் இருக்கும் தேசம்பின்பு எரோதன் கொடுக்கப்பட்டுக் குழந்தைகளே பிறந்த காக்கள் வெளிவிடைக்க அழுகின்றோம் என்பார். மேனும் நீசகனோ இந்த காரணத்தைக் கடந்துபோனபடியால் மாசொரு குறைவில்லாமல் இனே திருக்கவென்றி மெருகியிருக்கொண்டு வாழ்கின்றீர்கள் என்று பலவிதமாய்ப் உபசரித்துப் புகழ்ந்து வாழ்த்தினார்கள்.

மீட்சிப்படலம் முற்றிற்று.

முப்பத்தோராவது, பிரிந்த மகனைக் காண்படலம்.

ஆழிசூழுல கனைத்தினு மாழிபொன் னுருட்டி
வாழியாவரும் வளம்பெறத் தோன்றினனாத
னேழியாக்கையோ டக்கிரு மருளொழுக்கன்மை
சூழியாப்புள தொடைமினு வியாப்புறும்பாலே.

இவ்வண்ணமாக மூவரும் நசரைமாபுரியிற் சேர்ந்து ஒரு கிராமத்தினில் குடிபுகுந் திருக்கும்போது கப்பல் திசைதப்பிப்போனதைப்போலும், அன்னப்பறவைகள் பறந்துபோன வழியுங்கண்டு பிடித்தாலும், எவ்வளவதையும் ஒருவடைநிழல் ராசபுரியுந் திருக்குமாரன் தாம்கட்டிய அருமொடு திருவுடலும் வளர்ந்து வருங்காலத்தில், தாம் தமைப்பரித்துச் செய்த காரியங்களைத் தேவதாயாரும், சூசைமாமுனிவரும், ஏனையரும்பல்லாமல் மற்றவரறியக் கூடாமல், மின்னும் தேவலோகத்தையொத்த அந்தச் சிராமத்தினில் திருக்குமாருடைய பரிசுத்தியாகிய கருணைப்பிரகாசம் உள்ளடங்காமல் பெருகிப் பாய்ந்ததால் அவர் திருநாமத்தின் அருளாகிய வெள்ளமே காடெங்கு மொய்த்து நிரம்பியது. இவ்வுமன்றித் திருப்பாலனுடைய திருவிழிகளாகிய மேகங்கள் பொழிந்த கருணைமழையால் உயிர்களைத் தீயாக எரிக்கும் பாவங்களுந், துன்பங்களும் ஒருப்பட ஒழிந்தன. இப்படி யாவும் நன்மையாய் நடக்கத் தேவதிருமகன் அவதரித்த வுடலோடு வளர்ந்து பன்னிரண்டு வயதாகும்போது, பொன்மதில் சூழ்ந்த ஜெருசலேம் பட்டணத்தி லிருக்கும் சுவாமிகோவிலை யலங்கரிக்கப்பட்ட தேவாலயத்திற்குச் செல்லும்படி இருவரொழிப்ப புறப்பட்ட சூரியனைப்போலப் புறப்பட்டார். இப்படித் திருமக னெழுந்துபோகையில், மலரோடு மணமும், மணியோடு ஒளியும், சோலையோடு நிழலும், உடலோடு உயிருஞ் சேர்ந்துபோவதுபோல எப்போதும் பிரியாத அவரோடு திருக்குமாரனை வளர்த்த கைத்தாதையாகிய சூசையப்பரும், கன்னிமை குன்றமற் பெற்றெடுத்த தேவதாயாரும் திருப்பாலன் திருவடிகளைத் தடவிக்கொண்டே நீல காதலராகி, அவனைப் பின்செல்ல மூவரும் ஒருப்பட்டு நடந்துபோய் ஜெருசலேம் பட்டணத்தைச்சேர்ந்து தேவுலகத்தார் பூவுலகிலிறங்குதற்கும், பூவுலகத்தார் தேவுலகிலேறுதற்கும் வழியாகிய அந்தத் தேவாலயத்தைக் கண்டபோது திருக்குமாரன் விண்ணவாய்த் தாலோடு குளிர்ந்த மொழியினால் சொல்லத் தொடங்கினார்.

அதெப்படியென்றால் தமது கந்தித் தாயாரையும், வளர்த்தாதையாகிய சூசைமாமுனிவரையும் நோக்கி முற்காலத்தில் யாக்கோபு என்பவனொருவன் இத்திடத்தில் ஒரு காட்சிகண்டான். அந்தக்காட்சியிலொரு ஏணியைக்கண்டு அந்தஏணியின் அடிப்புறம் பூமியைஎட்டியிருக்கவும், மேற்புறம் வானவுலகத்தெட்டி என் பிதாவினுடைய திருக்கரங்களை மேலேந்தியிருக்கவும், அந்தஏணியின்வழியாக வானவர் ஏறவும் இறங்கவும் கண்டான். அந்தக் காட்சியைக் கண்ட இடம் இதுவானதால் அந்தச்சிறப்பைக் குறிக்கும் குறிப்பாக இவ்விடத்தில் பொன்னிறையும், மணிநிறையும் அமைந்த இந்தத் தேவாலயங் கட்டப்பட்டது. பின்னும் முன்சொன்ன யாக்கோபு இந்தக் காட்சிகண்டதினால் அவன் முழுதுங் களிகூரும்படிக்கு இனி உன்குலத்தில் பிறக்கும் பிள்ளையால் உனக்கு மிக்க புகழுண்டாவது மன்றி அந்தப்பிள்ளையே நீ கண்ட அதிசயமெல்லாம் நிறைவேற்றுவானென்று ஆண்டவர் யாக்கோபுக்குச் சொன்னார். ஆதலால் ஆண்டவன் யாக்கோபுக்குச் சொன்னபிள்ளை நானே; அவன் காட்சியிற்கண்ட ஏணி இந்நகரத்தில் இனிநா னிறக்குஞ் சிலுவைமரமே யாகும். பின்னும் அந்தக் காட்சியின்படி வானுலகமும், பூவுலகமும் ஒன்றுபட்டு மகிழ்ச்சியடையும்படி சிலுவையி லுயிர்விட்டு இறப்பே னென்றார். இதைக்கேட்ட கந்தித்தாயாரும், சூசையப்பரும் திருக்குமாரன் சொன்ன சொற்களாகிய வேல் காதில்நுழைந்து மனத்திற்செய்த புண்ணினினைப்போல மிகவும் வருத்தியழும்போது மீளவும் திருமகன் ஒரு புன்னகைகாட்டி, இப்பூவுலகமும் வானுலகத்தைப் போல விளங்கி மகிழ்வது ஆகாதோ? சொல்லுங்களென்றார். பின்பு தேவதாயும், சூசையப்பரும் திருக்குமாரன் இறப்பது திருவுளச்செயலென்று மனந்தேறித் திருக்குமாரனோடு சேர்ந்து பூம்புகைகமழும் தேவாலயத்திற் போய் மூவரும் தமக்காகக் கடவுளை மன்றாடினார்கள்.

இவ்வண்ணமாக மூவருந் தேவாலயத்துட் சென்று வேண்டிக்கொண்டு ஜனத்திரளுட் புகுந்து வீட்டிக்குத் திரும்பிவரும்பொழுது, பெண்பிள்ளைகள் போகும்வழியில் கந்தித்தாயாரும், ஆண்பிள்ளைகள் போகும் வழியில் சூசைமாமுனிவருமாக வேறு வேறாய் நடந்துவந்து ஒருவழியி லிருவருங் கூடின மாத்திரத்தில், திருமகனைக்காணாமல் கந்தித்தாயார் சூசைமாமுனிவரை நோக்கித் திருக்குமாரன் உம்மோடு வரவில்லையா? என்று கேட்கச் சூசையப்பரும் தேவமாதாவை அப்படியே கேட்கக், கடைசியாய்த் திருக்குமாரனைக் காணோமேயென்று இருவரும் மகாதுக்க வியாகுலப்பட்டு மின்னி விழுந்த இடியைப்போலத் திடுமென்று விழுந்தெழுந்து, ஆறுபோலக் கண்ணீர்விட்டழுது ஆபரணத்திற் பதித்த இரத்தினம் விழுந்துபோது விழுந்த இடம் சிறுகுழியாய்ச் சிறப்பில்லா திருத்தல்போல, இவர்களுக்கு ஜீவரத்தினமாகிய அருமைமகன் பிரிந்ததினால் உயிரில்லாத வெற்றுடம்பாய் நின்றார்கள். பின்னும் அந்தத் திருமகனைத் தேடுவதற்கு உயிர்வேண்டியபடியால் உயிர்பெற்றாற்போல நடந்து கறவைதன்கன்றைத் தேடினதுபோல முன்னமே நடந்துவந்தவழியெல்லாந் திரும்பவும் வந்துதேடிப் பழைய உறவின்முறையா ரிடத்தும், மற்றவரிடத்தும் பல முறையுங் கேட்டுக்கேட்டுக், கல்நெஞ்சினர் முதலாயிரங்கியழும்படி விம்மிவிம்மி யழுது தேடியுங்காணாமையால், இருவருந் தேவபாலனை நினைத்துப் புலம்பிச் சொல்லுவார்கள். எங்களுக்கு ஒரு பிள்ளையுமானவனே! தவறி நாங்கள் செய்யும் பிழைகளைப் பொறுப்பவனே! திருமகனே! நாங்கள் ஒரு கண்ணின்வழியாய் எங்களுயிரா க நீ பறிக்கவோ? இன்று ஒளிந்து எங்கள் மனத்தில் துயரத்தைப் புகுத்தினாய். எங்கும் நிறைந்தவனே! எவ்விடத்

னிலும் அடங்காதவனே! இறப்பு, எதிர்வு, நிகழ்வு என்னு மூக்காலங்களையுங் கடந்தவனே! எல்லாவற்றையும் முக்காலத்திலு மறிபவனே! உன்னால் காங்களடைந்த வருத்தத்தையறிந்து நீயதனை யுடனே தீர்க்காதபடிக்கு எங்களை மறந்தாயோ? சீக்கிரத்தில் வாராயோ? ஒரு திருமொழியுரையாயோ? என்று பலவாறு கூவியழுது தேடுகையில், இந்தத் துயரைப் பொறுக்கமாட்டாததுபோலச் சூரியன் மேற்கடலில் அஸ்தமிக்க இராத்திரிகாலமெல்லாம் தங்கள்பெரும்வருத்தத்தைச் சொல்லிக்கொண்டு எங்குந் திரிந்து தேடியழுதுகொண் டிருந்தார்கள்.

இவ்வண்ணமாக இராப்பொழுதெல்லாம் இருவருந் தேடிக்கொண்டு திரிகையில் கன்னித்தாயார் சொல்லுவாள்: கருணாகரனே! பேரின்பமிருக்குந் தேவாலயமே! அழகிற்பொலிந்த எனது அருமைத் திருமகனே! எல்லாவற்றையுந் தெளிவோடறிந்த நாயகனே! நான் மயங்கித் துயர்க்கடலில் வருந்துவதற்கிரங்கி என்னைக்கரையேற்ற தயைபொருந்தி நீயிருக்கும் இடத்தைக் காட்டாயோ? என்று விம்மியழுதாள். பின்பு சூசைமாமுனிவர் தேவமாதாவை நோக்கி அழுது சொல்லுவார்: ஆதியந்தமில்லாத திருக்குமாரனிப்பொழுது இறந்தானோ? மறவாத அன்புடையோன் இன்று தனது அன்னையை மறந்தானோ? உன்னையும், என்னையும் விட்டகன்ற தேவகுமாரன் இப்பூவுலகைவிட்டு நீங்கினானோ? ஆயினும் இது தருமந்தானோ? மகனே! நீயே சொல்வாயென்று மீளவும் விம்மியழத் தொடங்கினார். அதற்குக் கன்னிமரியம்மாள் மாதவச் செல்வத்திற் செல்வமென்று சொல்லிக்கொண்டிருந்த திருக்குமாரன் வனத்திற்போய் முனிவனானானோ? என்றாள். அதற்குச் சூசையப்பர் மனிதர் பாவங்களைத் தீர்த்திரக்ஷிக்கும் விருப்பத்தினால் இன்று தன் உயிரைத் தந்தானோ? என்றார். அதற்குத் தேவமாதா சொல்லுவாள்: நாம் இந்நாட்டிலிருந்து திரும்பி வரும்போது திருக்குமாரன் தெளியாமல்கொண்ட ஆசையை யாற்றும்படிக்கு வானவர் ஒரு சிலுவையைக்கொண்டுவந்து காட்டினபோது அந்தச் சிலுவையேயானது செங்கோலென்றும், இந்தச் சிலுவைமேல் இறந்தா லல்லாமல் மகிழ்வடையேனென்றுஞ் சொன்னதல்லவோ? என்றாள். அதற்குச் சூசை மாமுனிவர் யாக்கொப்பு பூமியில் அடி எட்டவும், வானுலகில் கடவுள் தமது திருக்கரங்களால் நுனியைத் தாங்கவுங் கண்ட ஏணியே நானிறங்குஞ் சிலுவை மாத்திரமாக ஜெனித்த நகரில் இறப்பேனென்றதல்லவோ? என்றார். பின்பு தேவதாயார் திருமகனை நினைத்துப் பசாசுக்கள் மனுக்குலத்தார்மேல் வைத்த பழியைத்தீர்க்க நீயே பலியாவேனென்று வேதவுதாரணங்களால் நானே அறிந்தும் உன்னைப்பெற்றேன். ஆசையாற்பிரியாத அன்புடைய திருமகனே! சாகப்போகிறதற்குமுன்னேவந்து எனக்காசீர்வாதந்தந்துபோனால் ஆகாதோ? என்றாள். பின்பு சூசைமாமுனிவர் இன்றைக்காகிலும், நாளைக்காகிலும், எப்பொழுதாகிலும் ஒருநாள் எங்களை இரக்ஷிக்க மலரின்மடலையொத்த உனது திருத்தேகம்பாடுபட்டு இறந்தலே விரும்பிய மகனே! உனக்குச் சமானமாகிய அவ எங்களுக்குமுண்டானால் உனது திருத்தோளும், எனது தோளும் ஒருப்பட ஒருமரத்தில் அறையுண்டாலாகாதோ? என்றார். பின்பு கன்னித்தாயார் வானமேல்வாழும் தேவவானவரே! நீங்கள்வந்து கனிகூர்ந்து எல்லாமாதர்களுக்குள்ளும் மிக்கசெல்வியென்று என்னைச் சொன்னீர்களல்லவோ? இப்பொழுது துன்பசாகரத்திலகப்பட்டு அதனைக் கடக்கமாட்டாமல் வருந்தும் அடியாளின் தன்மையைக் காணமாட்டீர்களோ? என்றாள். பின்பு பூங்கொடியுயர்ந்த சூசைமுனிவர் அழகுஞ், செல்வமும் நிறைந்த இந்நாட்டில் நாங்கள்வந்து

சேரும்பொழுது பயங்கொண்ட அடியாளாகியவென்னை அஞ்சாதே! அஞ்சாதே! இக்காலத்தில் உங்களுக்கு இன்பமே விளையுமென்று சொன்னவனல்லவோ! இப்பொழுது கடல்களெல்லாம் ஒன்றாய்க்கூடினுமுஞ் சமானமில்லாத அப்பசமுத்திரத்தில் நான் மூழ்கியிருக்க எனக்கு அழகும், இன்பமுமாய் நின்ற தேவகுமாரன் இங்கே என்னைவிட்டகன்று போனானேயென்றார். இவ்வண்ணமாகக் கன்னித்தாயாரும், சூசைமாமுனிவரும் பலவிதமாகத் துக்கித்துத் திருக்குமாரன் இறந்துவிட்டாரென்று நினைந்து வருந்துவதைக்கண்ட வானவர் இவ்விருவருக்குந் தரிசனையாகித் தாங்களுங்கூட வருந்தினதுபோலக்காணப்பட்டுச் சொல்லுவார்: கன்னிமைகெடாத தாயாரே! மகாத்துமாவாகிய சூசைமாமுனிவரே! நீங்கள் துக்கமுந், துயரமும் அடைந்து வருந்துவானேன்? உங்கள் மனம் முன்னமே வாழ்ந்திருந்த பேரின்பக் கடலைவிட்டுப் பிரியவேண்டாம். அழியாத திருக்குமாரன் பிரிந்ததினால் மயங்குவானேன்? மனமுருக மயங்கி வருந்தவேண்டாம். உங்கள் திருக்குமாரன் சாகவில்லை. என்று சொல்லித் தேற்றினார்கள். இப்படி வானவர் சொல்லியதால் கன்னிமரியம்மாளுஞ், சூசையப்பரும் திருமகனிறந்தாரோ? என்னுஞ் சந்தேகம் நீங்கிச், சற்று மனந்தேறினாலும் பின்பு இருளை நீக்குஞ் சூரியனுதிக்கும் நேரமாகையால் தங்கள் மனத்தை விளக்கும் ஞான சூரியனாகிய மகன் பிரிந்துபோனமையை நினைந்து எங்களுக்கு ஒளியில்லாமல் இருகண்களும் நீங்கின என்றார்கள்.

பின்பு பொழுது விடிந்தவுடன் தேவதாயார் திருமகனைத் தேடிக்கொண்டு அந்நகர்முழுதிலுஞ் சுற்றித் திரிகையில் சூசைமாதவர் நகரத்துக்கு வெளியிடங்களிற்போய் மலர்ச்சோலையிடத்தெல்லாந் தேடத்தொடங்கினார். அப்படிப் பூஞ்சோலை வழியாகத் தேடிவரும் சூசையப்பர் புலம்பியழுதவண்ணஞ் சோலையுஞ், சோலையிலுள்ள பறவைகளும், வண்டுகளும் அழுதிரங்க மலர்களெல்லாம் வாட அவற்றைநோக்கிச் சூசையப்பர் அருமைத்திருமகனைக் கண்டீர்களோ? சொல்லுங்களென்றழுது பின்பு அருகேயுள்ள ஒரு நதியைக்கண்டு நானலைவதுபோல நிலையில்லாமலலைந்துதிரியும் நதியே! நீ கருங்கடலை நோக்கிப் போகிறதுபோல நானும் ஒரு கருணைக் கடலைத்தேடி யலைந்தனனென்றோ தேங்கவும், நீளநோக்கவும் அருட்கடலாகிய திருமகன் இங்கு வந்தாரோ என்பார். மீளவும் அப்புறம்போய் ஒரு பூங்காவனத்தைக்கண்டு கண்கள்போலவும், இரத்தினங்கள் போலவுந் தோன்றி வாசமலர்பூத்த பூங்காவனமே! வீணையுந், தேனும் நிகராகாத திருமொழியாளருந் திருக்குமாரன் வருத்தத்தினால் நான் வாடும்படி தேவலருளைப் பூத்து இங்கு வந்தாரோ? என்பார். அப்பால் ஒரு சோலையைக்கண்டு என்மனம்போல எப்பொழுதும் இருண்டிருக்குஞ் சோலையே! உன்னுடைய கருத்துபோல மட்டில்லாத அருளைத்தந்து எல்லாவுயிர்களையுங் காப்பாற்றுங் கருணையீசன் இங்கே வந்தவுடன் அவனுனக்குச் சமானமென்று அவனைப் போகவொட்டாமல் நிறுத்திவைத்திருந்தால் எனக்குங் கொஞ்சங் காட்டுவாயாக என்றார். பின்புமொரு பூந்தடாகத்தைக்கண்டு சந்திரனுக்குத் தோற்றுக் குவிந்த தாமரைகள் பூத்த தடாகமே! சூரியனையொத்த அழகுடைய ஒரு திருமகன் சந்திரனுக்குந் தோற்காத பாததாமரையை உன்னிடத்தில் வைத்து உனக்குக் கருணைபுரிந்து உனது தண்ணீரை யுண்டு போனாரோ? என்பார். பிறகு பக்கத்திலிருக்கு முயர்ந்த மலையைக் கண்டு பெரியோர் மனத்தைப்போல உயர்ந்து வளர்ந்த பர்வதமே! உனது சிகரத்திலிருக்கும் மேகம்போல எனது மனமிருண்டு கருகுதற்குக் காரணமாக உனது அருவிபோல அழியுமித்தகை செல்வத்தைவெறுத்துத் தவத்தைமுடிக்கநிப்

இல்லாதிருக்குமாசனுடைய திருக்கைக்குள் புகுந்தாளோ? என்பார். பின்பு அவ்விடத்திருக்கும் பறவைகளை நோக்கிக் குயில்களே! மயில்களே! கிளிகளே! வெண்ணாரைகளே! அன்னங்களே! மற்றப்பறவைகளே! எனக்குக் குளிர்ந்த பொழிப்பாகிய திருமகளிருக்கும் ஊரையும், காட்டையும் சொல்லமாட்டீர்களானால் நானுயிர் பிழைத்திருப்பேனென்று நீங்களாவது அத்திருமகளுக்குச் சொல்லுங்கள். அவளை அவளிருக்கு மூரிலாவது இந்தக் காட்டிலாவது இருக்கிறாள் அதற்குப்போகும் வழியிதுதான் என்றாவது எனக்குச் சொல்லுங்களென்பார். இப்படிச் சுசமுகிர்த்திரர் அழுது புலம்புகின்றவனுடைய நாதன் பிரிவை யபாரத்தை எங்களிடத்திலிந்த மகிழ்ச்சியெல்லாம் கட்டிக்கொண்டு போய்விட்டாளோ? வென்றதுக்கிக்கும் பேசோசையைக்கேட்ட கிளிகளும், அன்னங்களும், குயில்களும், மயில்களும், நாகணவாய்ப்பறவைகளும், நாரைகளும், வண்டுகளும், மான்களும், சோலைகளும், தடாகங்களும், கடலுமழுதின்றன. அப்பாலரசர்க்குள்ள சொக்குத் திருமகளைத்தேடிப் புலம்புகின்ற தேவதத்தைத்தாயாருடைய விருத்தாந்தத்தை யடியிற்சொல்லத் தொடங்குவாம்.

இவ்வண்ணமாகத் தேவதாயார் பட்டண முழுமையுஞ் சுற்றித் தேடிவரும்பொழுது தமது திருமகளை யொத்த அழகுடைய ஒரு பூந்தடாகத்தைக்கண்டு அதன்கரைமேல் நின்று தமது அருமைமகளை நினைத்துத் தேனிலு மினிய சொல்லைக்கொண்டு சொல்லுகின்றாள். அதெப்படியென்றால் எழுதிய சித்திரத்தைப்போலப் புஷ்பங்களை யழகுபெற்ற பூந்தடாகமே! உன்னைப்போல நானும் களிகூர்ந்திருக்கும்படி தேவகத்தாலுள்ள ஒரு தெய்வமுள் என்மனைத்திற் புஷ்பிக்க என்னுள்ளம் ஒரு பூந்தடாகத்தைப்போ லிருந்தது. அத்தெய்வமணமலர் பிரியாத என்னிலிருந்து தானாகவாடியதோ? அல்லதியாரேவர்வந்து பறித்துச் சென்றாரோ? தெரியவில்லை. பின்னும் அத்தவள மலரின் வாசனையால் என்னுள்ளம் நெருப்புப்பற்றி யெரிகின்றது. என்று சொல்லியிளவும், திருமகளே! அழியாத திருவழகுடைய அருமைக்கண்மணியே! நீருயில்லாமல் வாடியகுளம்போலவும், வாசனையில்லாமல் வாடிய மலரைப்போலவும் நான் வாடி வருந்தியழும்படி பிரியாத என்னை விட்டுப்பிரிந்து எங்குதனித்து விளையாடுகின்றாய்? நீ அன்னப்பறவையும், நான் ஒரு தாமரைமலருமாகப் பிரியாம லிருந்தோமல்லவா? அப்படியிருக்க நீ விரும்பின தாமரைமலர் வாசனையில்லையென்று என்னை நீக்கிக் காட்டுக்குச் சென்றாயோ? மகளே! முன்னமே இன்பமாக என்னிடத்தி லிருந்தாய். இப்பொழுது இன்பமில்லையென்று நீங்கினாயோ? தண்ணீரிலிருக்குந் தாமரை தண்ணீர் வற்றியபோதும் அதைவிட்டு நீங்குமோ? மகளே! மலரினும் மிருதுவான திருவடிகள் நோகும்படி என்னை விட்டுப்பிரியாமல் என்னுயிரிடத்து இனிது வீற்றிருக்கக் கடவாய். இப்படிச்செய்யாமல் நீ பிரிந்துபோகுமளவானால் என்னுயிர் தரித்து வாழுமோ? அதனை இனைக்குவரும் நன்மையுமொன்றுண்டோ? மகளே! உன்னுடைய தருமத்துக்குரியதோ? ஆனாலும் நீ தருமத்தைக் காத்தாலும் ஒப்பில்லாத கொடுமையென்னெஞ்சில் மூட்டிவைத்தால் இதோ இரண்டு தருத்திகொண்டு ஊதினாற்போலென்னுள்ளம் பற்றியெரிகின்றதே. என்னருமைச் செல்வமே! வெண்ணெயாற்செய்த ஒருமலை வெந்தழலினுற்போல நானும் மனம் நொந்துருகி இருகண்ணீராறுகச் சிந்தியழும்படி மின்னொளிற் செந்தீயைப் புகுத்தி மேகத்திற்றோன்றி மறையுமின்னலைப்போல நீயும் மறைவாயோ? மகளே! முன்பு நாமிருவரும் இன்பக்கடலில் மூழ்கியிருந்ததை நினைக்கும்போதெல்லாம் பற்றியெரிகின்ற என்மனம் துன்பக்கடற் சுழியிற் சிக்கிச் சுழலும்படி நீ அன்பில்லா

மலென்னை விட்டுச்செல்லலாமோ? மாணிக்கப்பாத்திரத்திலுள்ள அமுதம்போல, அளவில்லாத கருணையுள்ள என்மகனே! நிறைந்த இருளைச் சூரியனுதயமாகி நீக்கினாற்போல நீயும் என் கண்முன்தோன்றி என் மனக்கவலையை நீக்கமாட்டாயோ? என் கண்களே! நீங்கள் கயல்மீன்களாகவும், என்மகனொருபெரிய கடலாகவும் இருக்க அவனிடத்தில் எந்நேரமும் விளையாடிக்கொண்டிருக்கிறீர்களென்றதல்லவோ? அவன் பிரிந்துபோனான். இனி நானுயிர்பிழைக்கும்படி அவனை நீங்களே காட்டக்கடவீர். என்னெஞ்சமே! சுந்தரமும், தேனுமாறாமல் பொன்னிதழ்விரித்ததாமரைபோலத் திருமுகத்தையுடையவென்மகனை நீநன்றக நேசியாததினாலல்லவோ? அவன் என்னைவிட்டுப் பிரிந்துபோனான். இனி நீ உண்பதற்கு அமுதமில்லாமல் நஞ்சையுண்டு வாடிவெந்து கிடக்கக்கடவாய் என்று இவையெல்லாந் தேவமாதா சொல்லிச்சொல்லி அந்தத் தடாகக்கரையின் மேற்புலம்பினின்று பின்னும் அப்பட்டணத்து வீதியெல்லாந் தன்மகனைத் தேடத்தொடங்கினாள்.

இத்தன்மையாக நக்ஷத்திர மகுடசேகரியாகிய நமது கன்னித்தாயார் அந்தப்பட்டண முழுமையுஞ் சுற்றித்திரிந்து திருமகனைத் தேடிவருகையில் வழியில், ஒருபெண்பிள்ளை அந்தத் தேவமரியைக்கண்டு பட்ட புண்ணில் தீயைவைத்ததுபோல நீ துன்பத்தோடு வாடியிருப்பதற்குக் காரணமென்னவென்று கேட்டாள். அதற்குச் சூரியனை யாடையாக வுடுத்த தேவமாதா, பொன்னைப்பார்க்கிலுஞ் சுந்தரமுள்ள என்னருமைமகனைத் தேடித்திரிகின்றேனென்றாள். அதற்கு அந்த மங்கை, நானும் பிள்ளைகளைப் பெற்றதாய்தான் ஆதலால் பூவரும்பு மலர்ந்தாற்போல நீ பெற்ற திருமகனுடைய அடையாளத்தைச் சொல்லுவாயென்றாள். அதற்குக் கன்னிமரியாள் அடையாளமா? கேட்கின்றாயென்று பெருமூச்சுவிட்டு மகனைக் காணவேணுமென்னும் விருப்பத்தினால் சொல்லுகின்றாள்: பாவி நான்பெற்ற பாலகனுடைய குணமும், செயலுங் கேட்கின்றாய் கேள். குளிர்ந்த கமலத்தை யொத்த திருவாயும், கருங்குவளையையொத்த கருணைகுடிகொண்டிருக்குஞ் செழித்த திருவிழிகளும், அருள்நிறைந்த திருமொழியும், சூரியகிரணத்தைப் பார்க்கிலும் விளங்கிய திருத்தலைமயிரும், சந்திரனைப்பார்க்கிலும் விளங்கிய திருநெற்றியழகும், முல்லையரும்பிலும் அழகிய பல்வரிசையும், தாமரையைப்பழித்து மலர்ந்த திருவதனமும், சொர்ண பர்வதத்தை வென்ற திருப்புயங்களும், கருணைக்கடலையொத்த திருமார்பும், மேகத்தைப்பழித்த திருக்கரங்களும், கமல அரும்பைப் பழித்த சிற்றடிகளும் உடையவன் என்னருமை மகனாகும். இன்னும் பன்னிரண்டு பிராயமுடையவன், அன்பின்குளிர்ச்சி நீங்காத கருணையுள்ளவன், நிறைந்த மாட்சிமையுடையவன், இருளுக்கஞ்சாத ஒளிவுள்ள காக்ஷி நீங்காதவன், சொல்லும் புகழைக் கடந்த கீர்த்தியாளன், பிறருடைய மனமாகிய தாமரைமலர்வதற்குக் காரணமாகிய கிரணமுள்ள பார்வையுடையவன், பெற்ற தாய்மாரைப் பார்க்கிலும் யாவரிடத்திலும் நிறைந்த அன்புடையவன் என்மகனாகும். வாசமலர் தேனைக்கொப்புளித்ததுபோல அவன் திருவாய்மலர்ந்து சொல்லும் ஒவ்வொரு திருமொழியாலும் சூரியனைக்கண்ட இருள்போல யாவருக்கு முண்டான துயரமெல்லாம் நீங்கும். இன்னும் அவன் குணாதிசயத்தைப்பற்றி யுனக்குநான் சொல்லவேண்டுமோ? எதிரும், நிகரும் இல்லாதவனாகிய அவன்ஒருமுறைமாத்திரம் உன் கண்களுக் கெதிராகப்பட்டிருந்தால் நீகண்டிருக்கலாம். என்று எனக்குந் தயைசெய்யுங் கன்னிமரியம்மாள் சொல்லியதைக் கேட்டு, அந்தப்பெண்பிள்ளை மகிழ்ந்து சொல்லுவாள்: அன்புடையதாயே! புகழ்ந்தலங் கரி

க்கப் படுவதற்குப் பெருமையையுடையவனாக நீ சொல்லி வந்த சற்குணங்களுடைய பாலனை நானிங்கே கண்டேன், கண்டும் இவனோ? வென்று நிதானியாமலிருந்தேன். நீ சொன்ன தன்மையை யோசிக்கும்போது அவனே உன்னருமை மகனாகுமென்றாள். அதற்கு வாடிய விருக்ஷம் மழைத்துளியைப்பெற்றுத் தழைத்ததுபோலத் திருத்தாயாரும் மனமகிழ்ந்து அவனைக்கண்ட இடமும், நேரமும் யாதென்று வினவினாள். அதற்கு அவள் மின்னலையொத்த தாயே! நன்றாய்க் கேளென்று சொல்லுவாள்: கரும்பினும் இனியசொல்லையுடைய உன் மகன் நேற்றைய சாயங்காலம் என் துயரமெல்லாம் நீங்கும்படி யென் வீட்டில்வந்து தனது திருமுகக் கிரணத்தினால் செந்தாமரை மலர்வதுபோல மலர்ந்த இரண்டு கைகளையும் நீட்டிச் சூரியன் முன்னே நக்ஷத்திரங்கள் ஒளிப்பதுபோல இரண்டு விழிகளுந் தாழ நோக்கித், தான் பிறர்க்குக் கருணைசெய்பவனாகித் தானுண்பதற்கு உணவுகேட்டு யாசித்தான். நான் அவனைக்கண்டு இவ்வளவு பெருமையையுடையவன் யாசிப்ப தேதென்று மனதிரங்கி யுணவுகொடுத்தேன். அவனும் என்னுள்ளத்தில் அழியாத அமுதத்தையூட்டியதனால் நேற்று என்மன மலர்ந்தோங்கினேன். நான் கொடுத்த வுணவைவாங்கிச் செல்லுகையில் தாமரை மலரைவிட்டு வண்டினங்கள் நீங்காததுபோல அவன் திருமுகத்தை விட்டென்கண்கள் நீங்காதிருந்தன. என்மனத்துள்ள குற்றமெல்லாம் நீக்கி எனக்கருளைச்செய்து குற்றமும், நிகருமில்லாமற் சென்றவன் உன்மகனே யாகுமென்றாள். இவற்றைக்கேட்ட நமது கருணைச் செல்வியாகிய மரியம்மாள் மனத்தில்நொந்துருகிச் சகலவுயிர்களுக்கும் உணவளிக்குந் திருமகன் தானுண்பதற்கு ஓரிடத்திற்சென்று யாசித்தானோ? வென்று சொல்லியழுது பின்னும் திருக்குமாரனை எங்குந் தேடத் தொடங்கினாள்.

இவ்வண்ணமாகக் கேள்விப்பட்ட தாயார் மனங்களித்து அவள் சொல்லியதை யோசித்துக்கொண்டே செல்லும்போது உயிரைக் காணாமல் வருந்தும் உடலைப்போலக், காடெல்லாஞ் சுற்றித் திருமகனைக் காணாமல் ஞானமாமுனிகள் நகரிடத்தில் வந்து தேவமாதாவை எதிர்கண்டு பெருமூச்சுவிட்டு ஐயோ! எனது துயரத்தைத் தீர்க்கவல்ல திருப்பாலகனைக்கண்டு கூட்டிவந்தாயோ? இல்லையோ? என்று கேட்க, அதற்குப் பரிசுத்தமாதா தாம்வழியில் கேள்விப்பட்டதையெல்லாஞ் சொல்லிப் பின்னும் நமது திருமகன் இந்நகரத்தைவிட்டுச் சென்றவனல்ல, ஆயினும் அவனை யெங்கும் காணேனென்றாள். அதற்கு வேத வடிவாகிய சூசையப்பர் நாமிருவரும் பொன்னாற்செய்த தேவாலயத்திற்சென்று தீவினையெல்லாம் நீக்குகின்ற தயையுள்ள கடவுளை நமது திருமகனை காட்டச்சொல்லி வேண்டிக்கொண்டால் அவரே நமது துயரைத் தீர்ப்பாரென்றார். இப்படி யிவர்கள் மூன்றுநாளாய் மிக்க துயரத்தோடு திரிந்து வருந்தியிருக்கையில் நிகரில்லாத பெருமையுடைய திருமகன் மூன்றுநாளும் அந்தத் தேவாலயத்தி லிருந்துகொண்டு, சத்தியவேத சாஸ்திரிகள் கூட்டத்தில் படிக்க வந்தவனைப்போல அணுகிப், பல ஞாயங்களை வினவிக்கொண்டு யாவரும் அதிசயிக்கும்படி செய்துவருகையில் மூன்றுநாளில் சாஸ்திரிகளெல்லோரும் ஒருங்குகூடி நம்மை யிரக்ஷிக்கக்கடவுள்மனிதனாய்ப் பிறந்தாரோ? இல்லையோ? வென்று ஒருவர்க்கொருவர் தெரியாமல் பலவாறு பிதற்றிக்கொண்டு வருகையில் ஒன்றும் படியாமல் எல்லாவற்றையும் அறிந்த ஓர் என்றழைக்கப்படுந்திருக்குமாரன் அவர்களெல்லாரும் வேதநூலைப்பார்த்தால் இன்னுங் கடவுள் அவதரிக்கவில்லையென்று சொன்னதைக்கேட்டு மனத்தி லிரக்

கங்கொண்டு அவர்கள்சொன்ன தப்பிதத்தை மறுக்கவும், தாம் இன்னுனென்று அவர்களறியாதிருக்கவும் வீணையின்சுவை, கனியின்சுவை, பாலின்சுவை, தேனின்சுவை முதலிய சுவைகளெல்லாம் ஒன்ருய்த் திரட்டிச் செவியிலூட்டினற்போல இனிய சொல்லினுல் மூர்த்தி மனிதரைப் படிப்பிக்கத் தொடங்கினர்.

அதெப்படியென்ருல் வேதசாஸ்திரிகளைப்பார்த்துத் திருக்குமாரன் சொல்லுவார்: சிவந்த தாமரை மலர்ந்துமகிழும்படி சூரியனுதித்தாற்போலச் சிவந்த உடலைப்போர்த்த தேவநாதன் நாமெல்லாம் மகிழும்பொருட்டுத் திருக்குழந்தையாகப் பிறந்தாரென்று நான் கேள்விப்பட்டேன். இதல்லாமல் பன்னிரண்டுவருஷத்துக்கு முன்னம் ஒருநாள் சூரிய னஸ்தமித்தபின்பு வந்த இராத்திரிப் பொழுதில் மிகுந்த ஒளியுண்டாகிச் சங்கீதங்களைக் கேட்ட பல இடையர் ஆர்ப்பரித்து அரிய காகுபியின் ஒளியைக் கண்டார்களென்று கேள்விப்பட்டேன். மீளவும் அன்றையதினமே வானம் நமக்குச்செய்த நன்மையைக் காட்டும்படி அவ்வானமே பொய்யாத நாவைப்போல ஒரு புது நக்ஷத்திரத்தை உதிப்பிக்க அதனைக்கண்ட அரசர் மூவரும் எழுந்து அவதரித்துப் பிறந்த நாதனைக்கண்டு வணங்கும்படி, அந்த நக்ஷத்திரம் காட்டிய வழியாக இவ்விடம்வந்து பிறந்தநாத னெங்கேயென்று உங்களை வினவியபோது, நீங்களே பெத்திலேம் நகரில் ஆண்டவன் மனுவுடலோடு பிறப்பாரென்று சொன்னீர்களல்லவோ? என்ருர். இதைக்கேட்ட அந்த வேதசாஸ்திரிகள் மலர்ந்த கமல மலரையொத்த திருமுக வடிவுடைய பாலகனே! நீ சொன்னதெல்லாவற்றையும் நாங்கள் முன்னமே யாராய்ந்து அப்படிக்கில்லாமையால் உடலோடு ஆண்டவன் பிறந்தார் என்பதில் சந்தேகமுண்டாயிற்று. ஆயினும் மற்ற அரசர்கள்வந்து வணங்கி நிற்கப் பிறந்தஆண்டவன் அரசராவாரென்று வேதநூலிற் சொல்லியபடி நாங்கள் காணுமையால் கடவுள் பிறக்கவில்லையென்றேம். என்ருர்கள். அதற்கு உருவத்தில் சிறியவனுகக் காணப்பட்டு எல்லாக்காலத்துக்கு முன்னிருந்த அநாதியாகிய திருக்குமாரன் சொன்ன தென்னவென்ருல் ஐயன்மாரே! இப்பொழுது நீங்கள் சொன்னதுமாத்திர மல்லாமல் ஆண்டவன் ஆபாதமின்றுடிவுமில்லாமல், வறுமையினுல் உறவினருமில்லாமல், விரும்பின பொருளு மில்லாமல், குடியிருக்க ஒருமனையு மில்லாமல் எளியவனுய்த் திரிந்து, பின்பு அருமாந்தி லதையுண்டு இறப்பாரென்பதும் வேதத்திலுள்ள தன்மையல்லவோ? ஆகையால் அவதரித்த நாதன் ஆளவும், படவும், வருவாரென்று வேறுபட எதிரிடையாகச் சொன்ன மொழிகளின்பொருள் இன்னதென்று அறியாத சிறுவன் வாய்ச்சொல்லென்று வெறுப்பில்லாமல் கேட்பீர்களானுல், கற்றுணர்ந்தோர் சொல்லிய மற்றையதும் சொல்லுகிறேனென்று மீளவுஞ் சொல்லுகின்ருர்: பாவத்தா லழிந்திருக்கு மனுக்குலத்தாருக்குத் தருமவழியைக்காட்டி, யாவரையும் இரக்ஷிக்க ஆண்டவன் ஒருமுறை இங்கே மனிதனு யவதரித்த பின்பு, மறுபடி யுலகமெல்லாம் வெந்தொழியும்போது நீர்வையிட்டு அவரவர்க்குரிய பலனைத் தரும்படி இரண்டாமுறையும் இங்கே வருவார். என்றுவேதத்திற் சொல்லப்பட்டிருக்கிறதல்லவோ? அப்படி ஆண்டவ னிரண்டாமுறை மனுவுருவோடு எழுந்தருளி வரும்போது வேதத்திலுள்ளதாக இப்பொழுது நீங்கள் சொல்லியபடி வானாசனுக் தோன்றி இடிகளிடிக்கவும், ஆகாயமெல்லாம் எரிந்து முழங்கவும், எங்கும் பயங்கரத் தோன்றவும், வானவர்கள் சிலுவைக்கொடிகளைப் பிடித்து எச்சரிக்கை கூறி முன்னே செல்லவும், மனிதரும், பேசாசுக்களும் நடுநடுங்கித் தெண்டனிட்டு வணை

க்கவும், மிகவும் இடித்து எரியும் மேகவாகனத்தின்மே லெழுந்தருளிக் கதிர் பரம்பிய முகத்தோடு அன்றையதினத்தில் காணப்படுவா ரல்லவோ? அப்படி யெழுந்தருளிவருங் கடவுள் அதற்கு முன்னமே மனிதனாய்ப்பிறந்து, கீர்த்தி, பொருள், இன்பம் இவற்றால் உலகங்கெட்டுப் பாவம் நுழைந்தமையால் அம்மூன்றும் அழியுஞ் செல்வங்களென்று வெறுக்கச்சொல்லியும், எளிமை, பொறுமை, வெறுமை இம்மூன்றும் அழியாத செல்வங்களென்று தேடச் சொல்லியும் போதிப்பாரல்லவோ? அப்படிப்படிப்பிக்கும் கடவுள் தாமும் உலக செல்வங்களை வெறுத்து எளியவனு மவதரித்துக் குளிர்ந்த மொழிகொண்டு உபதேசிப்பதே நம்மை யிரக்ஷிக்கப் பிறந்த மனுஷாவதாரத்தின் இயல்பாகு மல்லவோ? அப்படி யிருக்க ஆண்டவன் ஆளவும், படைவும் வருவானென்று எதிரிடையாகச் சொல்லிய வேத வசனங்களை ஒன்றுக்கச்சேர்த்து முன்சொன்னபடி பன்னிரண்டு வருஷத்துக்கு முன் தோன்றிய புதுமைகளைப்பற்றி ஆண்டவன் நம்மை யிரக்ஷிக்கப் பிறந்தாரென்பது பேதமையாகுமோ? என்றார். இவையெல்லாங் கேட்டிருந்த வேதசாஸ்திரிகள் எல்லாரும் அதிசயப்பட்டு ஒருவர் முகத்தை யொருவர் பார்த்துக்கொண்டு பின்பு திருக்குமாரனை நோக்கி: அறிவுள்ள பாலகனே! உனக்குத் தாய் யார்? தந்தை யார்? நீ பிறந்த வூர் எந்த வூர்? உன் குலம் எவ்வகைக்குலம்? சொல்லுவாயாகவென்று அன்போடு கேட்க அதற்குத் திருக்குமாரன் தாம் இன்னாரென் றறியாமல் மறைவாக மறுமொழி சொல்லுகின்றார்: * எனக்குத் தகப்பனுண்டானால் தாயில்லை, தாயுண்டானால் தகப்பனில்லை, நானிருக்குந் தன்மையைப் பார்த்தால் எனக்கு ஊரில்லை, நான் கலந்த இருகுலத்திற் பிறந்தும் என் குலம் இழிவானகுலமு மல்லவென்றார். இதைக்கேட்ட சாஸ்திரிகளெல்லாரும் ஆச்சரியப்பட்டு மகிழ்ச்சியோடு சிரித்து இந்தப் பூவுலகில் இவனை யொப்பாவா ரொருவருமில்லையென்று புகழ்ந்து, திருமகன் சொல்லியருளிய நியாயங்களைச் சிந்தித்துக்கொண்டே அவரவர்கள் வீதிக்குச் சென்றார்கள்.

இப்படி வேதசாஸ்திரிகள் அவரவர்கள் தங்கள் வீதிக்குச் செல்லுகையில், பட்ட துயரத்தையாற்றுங் காலமாகிக் களித்தாயும், மாசில்லா சூசையப்பரும் தேவாலயத்துட் சென்று தேவ சுந்தரமுள்ள திருப்பாலகனைக் கண்டவுடனே சூரியனைக்கண்ட தாமரை மலர்வதுபோலத் திருக்குமாரனுடைய முகத்தொளியினால் இருவருடைய மனங்களும் மகிழ்ந்து, மகனைக் கண்டதாக்கல் லீர் அளிப்பதுபோல ஆனந்தக் கண்ணீர்விட்டழுது அருகில்சேர்ந்து பூமாலைபோன்ற திருமகன் மேனியெல்லாம் கண்ணீரால் கழுவப்பட இறுகத் தழுவிக் கட்டிக்கொண்டார்கள். இப்படி மகனைக் கட்டிக்கொண்டு களித்த தாயார் சொல்லுவாள்: கதிர் வீசிய திருவடி வழகுள்ள மகனே! நீ பிரிந்ததினால் அன்றுமுதல் நாங்கள் உயிர் பிரிந்தாற்போல வருந்தி யழுது திரிந்தோம். இத்தனை துயரம் நாங்கள் பட்டிருக்க எல்லையற்ற நீ எங்களைத் தள்ளி உன்னை

---

* திருக்குமாரனுக்குத் தேவ தத்துவமும், மனுஷ தத்துவமும் உண்டானபடியால் தேவ தத்துவத்தில் பிதாவன்றித் தாயில்லாமையால் "தகப்பனுண்டானால் தாயில்லை" என்றார். மனுஷத்தத்துவத்தில் கன்னிமை மாறாமல் புருஷனுதவியின்றித் தம்மைப்பெற்ற தாயல்லாமல் தகப்பனில்லாமையால் "தாயுண்டானாலும் தகப்பனில்லை" என்றார். தேவதத்துவத்தில் எங்கும் நிறைந்தவராகவும், மனுஷத்துவத்தில் மாட்டுக்கொட்டிலின் குகையிற் பிறந்தவராகவு மிருப்பதால் "எனக்குஊரில்லை" என்றார். தேவகுலமும், மனுஷ குலமும் தம்மிடத்தில் அழியாமல் கலந்திருப்பதால் "கலந்த இரு குலத்திற் பிறந்தும் என் குலம் இழிவான குலமுமல்ல" என்றார்.

க் காட்டா திருந்ததென்ன! இன்றுமொருகாலுன்னைக் காணாதிருந்தோமேயானில் சாவது நிச்சயமேயென்றாள். அதற்குத் திவ்விய பாலகன் நீங்கள் பட்ட துயரமெல்லா மறிந்து அகம்மிரங்கினேன். ஆனாலும் மற்றப் பெற்றாரெல்லாம் கொன்று புதைத்தாற்போல மறுத்து, என் திவ்விய பிதா வெனக்கருளிச் செய்து காட்டினவற்றைச் செய்யாதிருப்பேனோ? என்று சொல்லிப் பின்பு புதிதாய் நட்டிய பயிரை விரும்பிப் பெய்த மழையைப்போல இருவருக்கும் ஆறுதலாக அரிய கட்டிலைக்காட்டி இன்பத்தைப் பூட்டினார். இவையெல்லாங் கண்ட வானவர் மூவருங் காணும்படி உருவத்தோடே அங்கே தோன்றிப் பூமாரி பொழிந்து, வீணையின் இசைகளைக் கிளப்பி, மதுரவாய்க் குரலோடேபாடி வானுலகிற்குரிய திருவிழாவாக வாழ்த்தினார். பின்பு முன் பிரிந்தபடி பிரியாமல் இறுக்கக் கட்டப்பட்ட அன்பின் இன்பத்தையுடைய மூவரும், காவியத்தவில் பல பாட்டுகள் பிரிக்கப்படாமல் இனிதாய் ஒன்று படுவதுபோலவும், மலர்மாலைபோலவும் ஒருவரைவிட் டொருவர் பிரியாமல் தங்கள் கோமாகிய கனேரேத்தாருக்குப் பிரயாணமாகிச் சென்றார்கள்.

பிரிந்த மகவைக் கண்டபடலம் முற்றிற்று.

முப்பத்திரண்டாவது, புரோகிதப்படலம்.

விருத்.

மேகமாலை மிடைத்துறை மேல்வரை
மேகமாலை மிடைந்தனைக் கிழு   றை
நாகமாலை நடந்தென நீரைக   ர்
நாகமாலை நடந்தகன் றூர   ரோ.

இவ்வண்ணமாகப் பிரயாணப்பட்ட மூவரும் மேகங்களை மாலையாகவணிந்துயர்ந்த பர்வதங்களின் கீழிருந்து அப்பர்வதங்களோடே பல பர்வதங்கள் தொடர்ந்தாற்போலிருக்கும் இராஜமாளிகைகளும், கோபுரங்களும், கடலைப்போலத் கடைத்தெருவும் இவைமுதலிய பலவளங்களும் நிறைந்த ஜெருசலேம்பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டுச், சாயங்கால நேரத்தில்வழிநடந்து போகையில் வழியில வாசமது மலர்களில் படிந்துவரும் காற்றுகள் தென்றலாக் கிந்தமபடி பரிமளத்தோடு வீசின. பசுமையன்று மரத்தின் கொம்புகள்தோறும் தங்கிய பறவைகள் பாலிறுமினிமையாய்ப் பாடின. அப்பொழுது இராக்காலமக்கு வந்தபடியால் வானமெல்லாக் திருக்குமானது பெருமையைக் காட்டும்படி சேற்றில் முளைத்த தாமரை முதலிய பலமலர்போலப் பல நக்ஷத்திரங்களைப் பூத்தன. பின்னும் அவ்வானமானது தேனைவிரும்பும் வண்டுகள்மொய்த்த பூஞ்சோலைத்தைப்போலச் சந்திரனில்லாமல் பல நக்ஷத்திரங்களைக் கண்களாகக்கொண்டு மலர்ந்த பூவுலகுக்கு ஓர் கண்ணாக வருகின்ற இப்பூவனையும் பார்த்தது. மீளவும் குழந்தையாருக்கமைவானவன் பாடிய சங்கீதத்தோடே இப்பூவுலகும் இசைபாடிப் பரப்பிய பிரகாசத்தினால் பூவுலகை முன் தேவலகம்போல விளக்கியது. பின்னும் வீணைகளைத் தடவியும், பாடியும் வானவர் பரப்பிய பிரகாசத்தைச் சூரியவொளியென்று மயங்கி மாலைக்காலத்தில் தாமரைகள் மலரவே பூங்கொம்புகளெல்லாம் குனிந்த மாலைகள் தொங்கினாற்போலத் திரளாய்மலர்ந்தன. இப்படிப்பட்ட சிறப்பமைந்த வழியை யெல்லாங் கடந்து திருக்குமாரனும், தேவகன்னிகையும், தவத்திராசனாகிய சூசைமாமுனிவரும் தங்கள் பிர

பாணத்தை நிறுத்தி, அன்றைய இரவில் அவ்வூரிலுள்ள இடையர் வீதியிற் றங்கினார்கள். பின்பு பொழுது விடிந்தவுடன் வானத்திற் றிரியுஞ் சூரியன் உதயகிரிமே லெழுந்து சொற்ற அழகுடைய திருக்குமாரன் தேவ குருவாக வந்தபடியால் அந்தத் திருக்குமாரனின் திருப்பாதங்களை வணங்கத் தன் கைகளாகிய கிரணங்களைக் கொண்டு தெண்டனிடும்படி நினைத்துப், பின்பு தன்கை சுடுகின்ற தியென்று நினைத்துப் பனியோடு கலந்து பனியைப்போலக் குளிர்ந்து காணப்பட்டது. அப்பால், இம்மூவரும் எழுந்து வழிநடந்து போகையில் மலர்களெல்லாந் தேன்களைத் துளித்துப் பரிமளித்தன. மலைகளி னின்றுவரும் நதிகளிலும் பூத்த பூஞ்சோலைகளிடத்துந் தோகை மயில்களெல்லாம் நிர்த்தனஞ் செய்தன. சூரியகிரணம் படாமல் வெள்ளைக் குடைகளைப் பிடித்தது போல ஆகாயமெங்கும் மேகங்கள் பரவியிருக்கக் கீழிடமெங்கும் பூமாலைகள் பரப்பினதுபோல வழியெல்லா மலர்கள் புஷ்பித்தன.

இத்தன்மையாக நடந்துவந்த இம்மூவரும் கருங்குவளை, செந்தாமரை, செவ்வல்லி முதலிய நீர் மலர்களும், புன்னை, கோங்கு, சந்தனம், சண்பகமுதலிய சோலைமலர்களும், கொடி மலர்களும், புதர் மலர்களும் விருந்துசெய்யத் தமது நகரமாகிய நசரைமாபுரியைச் சேர்ந்து அவ்விடத்திலிருக்குந் தங்கள் சிறுமனையிற் புகுந்தவுடனே திருக்குமாரன் பிரிந்திருந்த தேவதாயும், சூசையப்பரும் பட்ட வருத்தத்திலும் அதிகமாய்ச் சந்தோஷிக்கும்படி தேவசேனைகளாகிய வானவர் உருவமேந்தி எதிர்கொண்டு தூய வெண்கலைகளை யுடுத்தக் கிரணங்களை யெங்கும் பரப்பி இனிய தென்றற்காற்று வீசினதுபோல வாசனையிற் வெண்சாமரைகளைவீசிப் பரிமளப் பூம்புனுகுகாட்டிப் பூமாரிபெய்து சிலர் துதி முறையோடு வீணைகளை வாசிக்கச், சிலர் அவ்வீணையி னிசைக்குச் சரியாகக் குரலோசையாற் பாட்டிசைகளைப்பாடி மோக்ஷத்திற் குரியதோர் திருவிழாவைக் கொண்டாடி, நம்மைப் புத்திரசுவீகரிக்கப் பிறந்த திருக்குமாரனை அத்திருக்குமாரன் காட்டிய சுவையோடு புகழ்ந்து அப்பாலகனுடைய ஆயிரந் திருநாமங்களையும் யாவருங் களிக்கும்படி சங்கீர்த்தனஞ் செய்தனர்கள். இவையெல்லாங் கேட்டிருந்த மாதவராகிய சூசைமாமுனிவர் பலாக்கனி முதலிய பலவகை மதுரக்கனிகளினின் றொழுகியதேனும், தேன்கூட்டினின்று பெருகி வழிந்துவந்த தேனும், பொங்கிப்பொழிவதுபோல இனிதாய் மனத்திற்களிப்படைந்து, ஆனந்தக்கண்ணீர் சொரிந்து பின்னும் அந்த மகிழ்ச்சியுள்ளே யடங்காமல் திருமகனை நோக்கிச் சொல்லுகின்றார். பூவரும்பி னமுதை மறந்தவின்ற அழகு வடிவுள்ள திருமகனே! செல்வர்கள் தங்கள் பாவங்கள் தொலையும்படி அளவில்லாமற் பொழிகின்ற பொன்மணிமுதலிய பின்னிடும்படி உனது திருமலர்ப் பாதத்தில் நவரத்தினங்களையுந் திரளாய்க் குவித்தாலும் போதுமோ? திருமகனே! நிர்ப்பிய பாலைவனத்திலே பசையற்றுலர்ந்த முள்ளுமரத்தி னுச்சியில் வாசனைவீசுங் குவளைமலரும், தாமரைமலரும் உண்டாவதற்குக் காரணமாக வந்ததுபோல ஒழுக்கங் குறைந்த நானும் உன்னாலல்லவோ? மோக்ஷத்திலிருக்குந் தன்மையை யடைந்தேன். இவ்வுதவிக்குக் கைம்மாறு முன்போ இல்லையே. இப்படி நானுன் திருவடியைச் சேர்ந்தமையால் வானவர்க்குள்ளே நானும் ஒருவனானேன். நீ பெத்லேமில் என்னைச் சார்ந்தபடியால் உனக்கேற்ற வீடுமில்லாமல் தரித்திரனானாய். நீயினியொருவனை சேர்த்தபோதே யிப்படித்தான் நீ பலவை விளக்கும் என்றுசொல்லி அழகிய திருப்பாலகனது இரண்டு பொற்பாதங்களையும் அளவில்லாத அன்போடு வணங்கிநிற்கையில் திருக்குமாரனும் தென்றற்காற்றினால் முல்லைகள் வாய் மலர்ந்தாற்போலத் திருவாய்மலர்ந்து ஒரு புன்னகைகாட்டி இனிமேலவை

ருக் காலத்தி லுண்டாகும் பெரும் பயன்களை விரிவாய்ச் சூசைமாமுனிவருக்குச்
சொல்லுகின்றார்: தேனையுண்டு வாழ்பவர் கசக்கும் வேம்பினை விரும்பமாட்டா
ர்களல்லவோ? அதுபோல வானுலகத்திலுள்ள செல்வத்தி லுயர்ந்தவனாகிய நான்
பூவுலகச்செல்வத்தை விரும்பியா? இவ்விடமேவி பிறந்தேன். இல்லாமையும்,
துன்பமும் வேறுமென்று நான் இப்பூவுலகில் வந்தபடியால் உமது வீட்டைத்
தெரிந்துகொண்டு இங்கே பிறந்தேன். பெருமை யில்லாதவர்கள் தாம் குடி
யிருக்கும் மனையின் சிறப்பினாற் பெருமையடையும்படி பெரிய வீடுகளைத் தே
டுவார். பூஞ்சோலையால் மலர்களழகுபெறுமல் மலர்களால் பூஞ்சோலைக ளழகு
பெறுவதுபோல நானும் இப்பூவுலகின் பாவக்கறைகளை யொழிக்கும்படிவந்து
இந்தச் சிறுமனையைத் தெரிந்துகொண்டபடியால் இந்தச் சிறுமனையே பிற்கால
த்தில் சிறப்பு பெறுந் தன்மையைச்சொல்லக் கேட்பீராகவென்று மீளவுந் திரு
மகன் சூசைமாமுனிவரை நோக்கிச் சொல்லத்தொடங்கினார்.

அதெப்படியென்றால் மலையி னுச்சியில் மேகங்கள்பொழிந்த நீரினால் ம
ணிகளைக் கொழித்துவரும் அருவிகளோர்ந்து கீழேபாய்ந்து வயல்களைச் செழிப்
பிக்கின்ற நீர்வளமுள்ள இத்தாலியநாடு என்றொரு நாடுண்டு. அந்நாடானது
தேவலோகத்துக்கிணையாகப் பூவுலகில் நிலைபெறுவது தன்னிடத்தில் முத்துக்
களைப் பிறப்பிக்குஞ் சங்குகளுள்ள கழனியாற் சூழப்பட்ட தடாகங்கள் பூத்திலங்க
வும், வண்டுகளி னிராகத்திற்கிணங்க மயில்கள் நிர்த்தனஞ்செய்யவும், பூஞ்சோ
லைகள் மதுரக்கனிகளைத் தரவும், இல்லறந்துறவறமென்னு மிருவகைத் தருமங்
களையும், அருட்செல்வம், பொருட்செல்வம், கல்விச்செல்வம் என்னும் மூவகைச்
செல்வங்களையும், இடம், உண்டி, உடை, தருமம், கல்வி, பொருள், அவை இவற்
றால் வரும் எழுவகை யின்பங்களையும் உடையதாய் மாட்சிமையிற் சிறந்து விள
ங்கும். பின்னும் அந்த இத்தாலியதேசம் கானிப்பூவுலகிற் பிறந்து வேதமாக
விளிக்கும் தேவாலயமெல்லாந் தனக்கொரு திருவிளக்காக ஏற்றிக்கொண்டு
மற்ற நாட்டுக்கெல்லாந் தானொரு அருள்விளக்காகக் காணப்படும். அல்லாம
லும் பொதுவற அரசுபுரிந்து நீதிச்சக்கரத்தை நானிலமுழுவது முருட்டி வீற்றி
ருக்கும் அரண்மனையுமாகும். ஆதலால் இவ்வகைப்பட்ட செல்வங்களிலெல்லா
முயர்ந்து மற்ற இராசாங்கமெல்லாந் தன்னைப் பணியப் பெருமையாயிருக்கும்.
அப்படியிருக்கையில் சிலகாலத்துக்குப்பின்னால் இந்தச் சூதேயநாட்டில் கொடு
ங்கோலரசர்தோன்றி வேதநெறியைக் கைவிட்டு நடப்பார்கள். அப்போது
இந்தச்சிறுமனைக்கு அழிவுவருமென்று வானவர்க ளிறங்கிவந்து இந்தச் சிறும
னையைக் கையிலேந்தி யெடுத்துக்கொண்டு கடல்களையெல்லாங்கடந்து சென்று
முன்சொல்லிய அந்த இத்தாலியநாட்டிலுள்ள ஓர்மலையி னுச்சியில் வைப்பார்
கள். அப்போது இச்சிறுமனையானது கோடிதூண்கள் கால்களாகக் கீழே தா
ங்கப்படவும்; வானமட்டும் அளாவிய இரத்தினச் சிகரத்தின்மேல் கோடி கொடி
களாடி நிற்கவும், புகழ்ந்துவாசித்த கோடிவீணைகளும், புகழ்ந்து பாடிய கோடி
குரல்களும், இசைபடப்பாடி நிற்கவும், வணங்கிநிற்பார் முடிகளொருகோடி
கீழேபணிந்து நிற்கவும், மாணிக்கத்தீபங்க ளொருகோடி சூரியனைமறைத்தப்
பிரபைவீசவும், முரசுமுதலிய பலவாத்தியங்க ளொருகோடிமுழங்கி யதிர்ந்து
நிற்கவும், நிகரில்லாமல் விளங்கிப் பின்னும் பெரியவுடம்புக் கழகுசெய்யு முகத்
தைப்போலவும், அம்முகத்திற் றோன்றிய கண்கள்போலவும், அந்தக்கண்களில்
தோன்றிய மணியைப்போலவும், மார்பிற்றோன்றிய ஆபரணம்போலவும், தலை
மேற்சூடிய முடியைப்போலவும், அம்முடியிற் பதித்த மாணிக்கத்தைப்போல
வும், அந்தமலையின் சிரத்தில் ஆண்டவன் தந்த திருவிளக்காகச் சூரியனைப்போ

வையும் காணப்பட்டுப், புவனத்துக்கு மோட்சவீட்டாகி மோட்சநகரத்தைச் சேர்ப்பவர்களுக்கு அம்மோக்ஷத்தின் வாயிற்படியாகவும் விளங்கியிருக்கும். ஆகையால் அன்பமுள்ள வீடிதுவென்று காணவிரும்பி மிகுப்பிறந்தேன்; இனிமேல் என்பாதம் தங்கினவீடிதுவென்று யாவரும் இதனை வணங்கும்படி இத்தாலியநாட்டிற் சென்று உலகெலாங் கூடியிருக்கும் வீடிதென்றுதோன்ற வந்தயாவரும் கனகிமாலைகளையும், பொன்னையுங் காணிக்கையாகத்தருவார்; அப்போது இச்சிறுமனை பூமியிலுள்ள மோக்ஷவீடிதுவென்று புகலப் பெருமையிற் சிறக்கும் என்ருர். இப்படி முக்காலங்களையுங் கடந்த அறிவுடைய திருக்குமாரன் திருவாய்மலர்ந்து *என்னையீன்ற இத்தாலியநாட்டின் நிகரில்லாத மாட்சிமையைச் சொல்லக்கேட்டிருந்த பூங்கொடியேந்திய சூசைமாமுனிவர் அதிசயப்பட்டு மனத்திலுண்டாகிய சந்தேகந்தீரும்படி பின்னும் திருமகனுடைய செந்தாமரைத் திருவடிகளை வணங்கிச்சொல்லுவார். சுவாமி! தயைபுரிந்து நீ பாதுகாத்தகாலத்தில் இதுபெருதரும் ஒன்றன்றோ? நீ கோபித்தகாலத்தில் பூவுலகனைத்தையும் ஒருப்படப் பெயர்த்தசைப்பதும் உனக்கருமையாகுமோ? அப்படியே உன்னாலாகாதது ஒன்றுமில்லையாயினும் நீ இப்போது புகழ்ச்சியாகச்சொன்ன இத்தாலியநாட்டிலுள்ளோரெல்லாம் அறியாமையால் பூவுலகத்தார் வணங்கும் பொய்த்தேவரை வணங்குவாரென்று கேள்விப்பட்டிருக்கின்றேன்; இதிப்படியானபின்பு நீ சொன்னதன்மை உண்டாகும்வழி எப்படியென்று வினவினார்.

இவ்வண்ணமாகச் சூசையப்பர் கேட்ட சந்தேகத்திற்குத் திருக்குமாரன் திருவாய்மலர்ந்து மனிதர் காட்சியையும், அறிவையும் கடந்த அருபியாகிய நான் அளவுங் கணக்குமில்லாமல் நிலைமையைக்கொண்ட பூவுலகத்தார் வானராச்சியஞ் சேர்ந்து வாழும்படி உருவெடுத்து இங்கு மனிதனாய்ப்பிறந்து, பூவுலகெல்லாவற்றையும் கீழ்ப்படுத்தி நான் அரசுசெய்யுந் தன்மையைக் கேட்பீராகவென்று சொல்லத்தொடங்கினார். அதெப்படியென்றால் மழையில்லாத காலத்தில் மான்கூட்டங்கள் தாகத்தினால் தத்தளித்து ஒரு பூந்தடாகத்தைக்கண்டு ஓடும் ஆவலைப்போல மனிதர்களும் எல்லாப் பாவத்தின்மேலும் விருப்பம்வைத்துப் பாவிகளாகித், தங்களுயிர் பாவத்தாற் கெட்டபின்பு சாற்றடிக்குங்காலத்தில் தழைகளுதிர்வதுபோல அனுதினமும் நரகில் விழுவது யாவருமறிந்தகாரியமே. அப்படி மனுமக்கள் நரகத்தீயில் விழுந்தழிவாரென்று இரங்கி நானே தருமவழியைக் காட்டும்படி மனுமகனுய்வந்து துன்பங்களை இன்பமாகத்தேடி யாவருக்கும் வேதத்திற் சொல்லப்பட்ட நன்னெறிமுறைகளைப் போதித்து என்னைப்பகைத்தவர் செய்யும் வருத்தத்தையெல்லாம் விரும்பித் திரிவேன். அப்படி நானொருதாயைப்போல எல்லாரையும் என்னினத்தாரைப்பார்க்கிலும் மேலாக நேசித்து அவர்களுக்குவந்த நோயுஞ், சாவும், மற்றத் துன்பங்களையும் நீக்கி வருகையில், நான் செய்த நன்மையை யெண்ணுமல் பாவிகளெனக்குச் செய்யும் யட்டில்லாத துன்பங்களை மகிழ்ச்சியோடனுபவிப்பேன். பின்னும் இந்தப் பூமியிலுள்ளவர் பகைவரை வெட்டிக் கொலைசெய்து போராடினால் ஜெயத்தையடைவார்கள். நானோவென்றால் யாவரும் வருத்தப்படாமல் வாழ்ந்திருக்க நானொருவனே வருந்தித் தெய்வமருந்தாக என்னிரத்தத்தைச்சிந்தி உயிர்விட்டிறந்தபடியால் அரியவெற்றியைக் கொள்வேன். என்று திருக்குமாரன் சொல்லியதைக்கேட்ட அருந்தவத்தின் சூசையப்பர் மீளவுந் திருமகனை நோக்கி: சுவாமி! நீ இறந்தாற்போல இறந்து சொன்னபடி முடியாதவெற்றியைக்கொள்வது மே

*இந்தக்காவியத்தை யெழுதிய வீரமாமுனிவர் தாம் பிறந்தநாடு இத்தாலிய நாடாதலால் என்னையீன்ற நாடென்ருர்.

ய்யே. ஆனாலும் நீ ஜெயங்கொண்டாயென்று நீ போனபின்பு அன்பமைந்த மனிதர் நீ காட்டின நல்ல தருமவழியில் வழுவாது உறுதியாய் நிற்பது எப்படியென்றுகேட்க அதற்குத் திருமகன் மீளவுஞ்சொல்லத் தொடங்கினார்.

அதெப்படியென்றால்: மனிதரென்னப்பட்ட யாவரும் பூமாலையைப்போல உடனுக்குடனேவாடிக் கடலினலையைப்போல அசைந்தாடிப் பலனொன்றுமில்லாமல் ஊனுள்ள உடலால் மெலிந்தவர்களா யிருப்பதால் உள்ளத்திலும் நிலையொன்றில்லாமல் இருப்பது மெய்தான். ஆனாலும் நான் செய்யுந்தயையி னுறுதியை யடைந்தாராகில் அம்மனிதர் அறநெறிதவறாதிருப்பது அரிதாகுமோ? இல்லையென்றுசொல்லிப் பின்னும் திருக்குமாரன் அக்காலத்தில் செய்யவிருக்கும் அளவில்லாத கிருபையின் முறைமைகளைச் சொல்லுவார். கல்விச்செல்வமும், பொருட்செல்வமும், வேலேந்திச் சேவகர்கள் சூழ்ந்திருக்கக் கோலேந்தியாளும் அரச உத்தியோகச்செல்வமும், மற்ற எல்லாவகைச்செல்வமும் இல்லாத எனக்கொத்த சில தரித்திரரை நான் தெரிந்துகொண்டு அவர்களால் வான்வீட்டு நன்மையைப் பெறும்படி நான் கொடுத்த வேதத்தை எவ்விடத்திலும் போதிக்கச் செய்வேன். அவர்களும் அப்படியே செய்கையில் எனது வேதம் எங்கும் பரம்ப நானே எல்லா உலகங்களையும் ஆள்வேன். இதுவல்லாமல் நான்வேதத்தைப்போதிக்க அனுப்பும் அந்தத் தரித்திரரை அரசர் முதலாய் கண்டு வணங்குவார்கள். கற்றறிந்த பெரியோர்களும் தாம் கற்றறிந்தது பொய்யென்று மறுத்து அவர்களுபதேசத்தையும் அவர்களையும் புகழ்வார்கள். உலகத்தா ரெல்லாரும் அவர்களைக் கண்டு அதிசயித் திருப்பார்கள். அவர்கள் வாயினின்றுவந்த பொய்யாத அற்புதநாக்கையும், சகல தேசபாஷைகளையும் அடைந்து, கொண்டவரப்பிரசாதங்களினால் எவ்வித அற்புதங்களையுஞ் செய்துவுலகத்தைக் கட்டியாட்சிப்பார்கள். அப்படியாகும்போது பாடினவர் வாய்க்குரலும், வீணையின் வாய்க்குரலும் வேறுபடாமல் இசைத்தால் யாவருமினிதாய்க்கேட்பது போல அந்தத் தரித்திரர் பிறருக்குச் சொல்லிக்காட்டும் வேதமுறைமைப்படி தாங்களும் அறநெறி வழுவாமல் நடப்பாராகையால் பாவிகள் முதலாய் இவர் பக்கங்கொண்டு மனமுருகிச் சொன்னதைக்கேட்டுத் தருமத்தின்மேல் ஆசைவைப்பார். மேலும் இப்படிப்பட்ட நன்மையை யெவரும் அடையவும் அடைந்த நன்மைகளில் நிலைபெற்றிருக்கவும் நானே ஏழு பொதுவரங்களைத் தருவேன். அவற்றுள் முதல்வரமாவது: தூய்மையாகிய வெள்ளைவஸ்திரங்கொண்டதாக நிற்கும்படி சந்திர கிரணங்களிலுள்ள தூய்த்தன்மைபோல் மனிதரும் பாவத்தோடுகொண்ட மாசுகளைப் பிரயாசையில்லாமல் நீக்க அவர்களுக்குத் தேவதிருவருளைத் தரும்படி கொடுக்கும் ஞானஸ்நானமாம். இரண்டாம் வரமாவது: ஞானஸ்நானம் பெற்றபின்பு இளமைதனைப்போலப் பாசம்பிடித்து மனங்கலங்கச் சுடுகின்ற கொடிய ஆசையின் ஊட்டமே மீளவும் மனத்தளர்ந்து பாவத்தைச் செய்து ஞானஸ்நானத்தாலடைந்த தூய்மைக்கு மாசுகொள்ளாமல் மனம் உறுதியாய் நிற்கும்படி கொடுக்கும் உறுதிப்பூசுதலாம். மூன்றாவது: தாமிறுதிக் கருணையை நானேநினைத்து வான்வீட்டின்பத்தோடு யாவரும் முன்னுறும்படி நானே அவர்களுக்குத் தேவவிருந்தாகின்ற நற்கருணையாம். நான்காம் வரமாவது: இவையெல்லாம் நடந்தபின்பும் பாவங்களை யொருவனுண்டாக்கொண்டால் அதைப்போக்கும் தேவ மருந்தாகக்கொடுக்கும் பாவ விமோசனமாம். ஐந்தாம் வரமாவது: யாவரும் இறக்குங்காலத்தில் பழம்பழியைச்செய்யும் பேய்கள் அவர்கள்மேற் செய்யும்போரில் ஜெயங்கொள்ளும்படி தருகின்ற தேவதைலப் பூசுதலாகிய அவஸ்தைப்பூசுதலாம். ஆறாம் வரமாவது: பூவுலகெங்குமெய்

ந்த பாவவிருளைக்கருக் திருவிளக்காக வேதகன்னெறியைக் காட்டுதற்கு மெய் ஞான தாரணருக்களுண்டாகும்படி தருகின்ற குருத்துவமாம். ஏழாம் வாமா வது: சித்திரப வாழ்வுகளை பலுபவிக்கும்போது முதலாய் அதிரத்தரும் பாவ வொரதபடிக்குத் தேவவருளைப் பாக்குமட்டாக உடலைவாழ்விக்கத் தருகின்ற மெய்விவாகமாம். இத்தொகைப்பட்ட வரங்களைக்கொண்டு திறயில்லாத மனி தாளுதும் வயிரமிலைமையொத்த நன்னெறி வழுவாம விருப்பார். பின்னும் னுடைப்பாகிய மேகமானது உயர்ந்த ஓர் மலைநெற்சியில் கருணையாற்பொசி த இரத்தமழையைப் பொழிவதினுல் அம்மழையானது கருணைவெள்ளமாக டு வழுவகங்களாகிய ஆறாகளாகப்பிரிந்து யாதொரு நன்மையுமில்லாத பாலை னப்போ விருக்கும் இப்பூமண்டலத்தைக் குளிர்ந்த பூஞ்சோலைபோலச்செ ய அதில் மனிதரெல்லாருந் தங்கள் துயரமின்றி உயிர்வாழ்வார்கள். என்று திருக்குமாரன் சொன்னபோது பேருகோடு அங்கிருந்த வானவரெல்லா மகிழ் து வணங்கி யற்றித் திருமகனின் புகழ்ச்சிமையகூற, வாசகவொழியுக் தேவம ச்செழுவயர்ந்திய குசைமாமுனிவரும் திருமகனை வாழ்த்தத் தொடங்கினர்.

அப்படியென்றும்: நன் துயில்லா திருக்கையில் யாதொரு வுதவியுமி லாமல எல்லாவற்றையும் படைத்த ஆண்டவ னல்லயன் இப்பொழுது நன் மையு மில்லாத இப்பூவுலகில் இந்த நன்மை யெல்லாவற்றையுஞ் செய்பவர் உன க்கு ஒரு நன்மையுமில்லாமல் எங்களுக்காக உயிர்தந்து நாங்கள் உயிர்வாழும்ப டி செய்துகொள்பவனுகிய நீயல்லாமல் வேறொருவர் உண்டோ? பின்னும் மிக்க அன்புடையோர்களும் வேண்டும்போது தங்களுடைய தப்புகளி லொன்றைச் சேதி த்துச் சிநேகிதர்களுக்குக் கொடுப்பார். ஆனாலும் தன்னுயிரையும், உடலையும் ஒருவருக்குவிட்டுத் தந்து உண்ணக்கொடுக்கும் அன்புடையோர் எவ்வகையினு வுயிரையும் எல்லோருக்குந் தந்து பின்பு இப்பூவுலகில்வந்து மாசித்து உண்ணு ம் நீயல்லாமல் வேறொருவருணடோ? மேலும் தனக்கு இங்கே ஒரு பிரதிபல னத்தையும் விரும்பாமல் தனது அன்பினால் உன்னையளிக்க நாங்க ளெல்லாருஞ் சகல நன்மையும் தெரியும்படி மிகுந்த கருணைகொண்டவர் நாங்கள் மே வீட்டில் வாழும்படி தாமே வருந்தி உயிர்தந்து இரட்சிக்கும் உன்னையன்றி வேறுண்டோ? என்றார்.

இப்படியாக அர்ச. குசைமுனிந்திரர் திருமகனைப் பலவாறு புகழ்ந்து அந்த த் திருமனையிலேயே நாள்கழித்து மென்மேலும் தேவாரக்களை பணிந்துயர்ந்து ன்மையைற் பெருமையடைந்து வருகையில், மீளவும் ஒருநாள் நடப்பதை நட ந்ததுபோல அறியும் அறிவுள்ள திருக்குமாரன் குசைநாதனுக்கு ஒரு காட்சி யைக்காண்பிக்க அம்முனிவர் அன்றாகக்கண்டதாவது: வானத்தில் சிங்கங் களைப் பூட்டின சில தேர்களும், புலிகளைக்கட்டின சிலதேர்களும், குதிரைகளைப் பூட்டின சிலதேர்களும், யானைகளைக்கட்டின சில தேர்களும், இரத்தினங்களா ல் சிறப்புபெற்ற சிலதேர்களும், இவ்வகைப்பட்ட பலதேர்கள் ஒருபால்விளங்க, மரகதப் பச்சைகளால் செய்த சில பசுங்குடைகளும், பவளங்களால் அமைந்த சில செங்குடைகளும், வயிர மணிகளால் செய்தமைத்த சிலவெண்குடைகளும், முத்துக்குடைகளும், சிவந்த மாணிக்கக்குடைகளும், சந்திரவட்டக் குடைகளும் நீலமணிக்குடைகளும், குடைகளிற் கட்டப்பட்ட நீண்ட மயிற் தோகைகளும், கவமணிக் கோவைகளும், வெயிலைப் பரப்புவதினுல் சூரியனொ ளியை மறைத்து சிறப்புச்செய்து ஒருபால் விளங்கவும், கொடிகளிற் பதித்த இரத்தினங்களும், கொடிச்சீலைகளோடு ஆடி வெயிலைப்பரப்பின

றைச்செய்து ஒருபால் விளங்கவும், அளவுபடாத தேர்க்கொடிஞ்சிகளும், தேரிற் கட்டிய அழகிய துகிற்கொடிகளும், பொன்னாற் செய்த ஆபரணங்களும், வானநக்ஷத்திரனும் அதிகமாய் ஒருபால்விளங்கவும், முரச முதலிய பலவாத்தியங்களின்றொலியும், குதிரை, யானை, தேர் இவற்றினோசையும், கொடிச்சிலைகளாடிய ஓசையும், ஆபரணங்களசைகின்ற ஓசையும், இவ்வோசையெல்லாங்கூடி ஒருபால் சூல்கொண்ட மேகமுழக்கத்தை மறைக்கவும், சிலர் நக்ஷத்திரத்தை யொத்த மேனியையுடையராய் வானவீட்டின் பேரின்ப மகிழ்ச்சியைக் கொண்டும் மகா வீணை முதலிய பல வீணைகளால் ஒருபால் இசையைப் பரப்பவும், உச்சிப்பகலிலும் விளங்கிய சேனைகள் தங்களைச் சூழ்ந்துவரச் சில அரசர்கள் மேகத்தைப் போல மதம் பொழியும் யானைகள் மேலும், சில அரசர் உயர்ந்தமலையையொத்த தேர்களின்மீதும், சில அரசர் மனோவேகத்தோடு அகன்றுபாயுங் குதிரைகள் மேலும், சில அரசர் படைக்கலங்களை யணியணியாக வகுத்து அவர்கள் மத்தியிலும், வெயிலைமறைக்கும் பிரபையுள்ள மணியாரங்கள் மார்பிலசையப் பொன்முடியைச்சூடி உலாவித் திரிவார்கள். பின்னும் அவ்வரசர்களுள் சிலர் மின்னலுருவாகவும், சிலர் ஒளியைப்பரப்பும் பொன்னுருவாகவும், சிலர் செக்கிறமாகிய நெருப்பினுருவாகவும், சிலர்மலர்ந்த செந்தாமரை உருவாகவும், தோன்ற அவர்களோடொட இதழ்விரிந்த மலர்மாலையும், இலங்கனாற் செய்யப்பட்டதாகத் தோற்றும் ஆபரணங்களை அணிந்து, சூரியனுருவைக் காட்டும் வானவீட்டிற்குரிய அழகோடு பலமாதர்கள் பனிநீரினும் மெல்லிய வஸ்திரங்களை யுடுத்துத், தாமரை மலர்போலு முகமுடையவும், கருங்குவளையை யொத்த செழித்த கண்களும், கஸ்தூரிமுதலியபலவாசனைகள் பூசியகூந்தலும், உடையவர்களாய்ப் பார்ப்பவருயிர்கள் அவர்கள்பின்னே செல்லச்செய்கின்ற அழகுமுடையவராய் உயிரைத் தீயவழியில் செலுத்தாதவர்களாகி வானத்திலுலாவித் திரிவார்கள். மேலும் அந்த மாதர்கள் சூடின முடிகளிற் பதித்த இரத்தினங்களும், மார்பில் நெருங்கி புலாவின மணிகளும், கையிலணிந்த வளைகளிலுள்ள மணிகளும், மின்னலின் கிரணத்தைப் பரப்புவதினால் அம்மாதர்கள் நக்ஷத்திரங்களின் நடுவே வளர்ந்துவரும் பல சந்திரனை யொத்து நிற்பார்கள். பின்னும் மேலேவிளங்கிய திங்கட்குடை பலவற்றின்கீழ் அணியணியாக அழகிய முகத்தோடு இரத்தினச் சித்திரப் பதுமைபோல வரும் அம்மாதர்கள் பல சந்திரன் கீழே பல சந்திரன் வருவனபோலத் தோன்றுவார். மீளவும் பல பர்வதங்கள் இறக்கையோடு பறந்துவந்தாற்போலத் திரியும் பொற்றேர் மீதுவரும் அம்மாதரிற் சிலர் உதயகிரியிற்றோன்றுஞ் சூரியனைப்போலத் தோன்றுவார். இவ்வண்ணமாக மன்னவரும், மாதர்களும் எட்டுத்திக்கிலும் வான்மீதுலாவி வருவதைக் காட்சியாற் கண்ட சூசைமாமுனிவர் உலகத்தை இரட்சிக்கப் பிறந்த திருமகனைநோக்கி: சுவாமி! இப்பொழுது நான் கண்ட மன்னரும் மாதரும் யார்? அவர்கள் வான்மீது திரிந்துவரும் விதம் எது? எனக்குத் தெரியும்படி சொல்லவேண்டுமென்று திருமகனின் திருப்பாத மலர்களை வணங்கினபோது முக்காலத்தையும் ஒர்காலமாக அறிந்திருக்கும் நமது கடவுளாகிய மனுமகன் திருவாய்மலர்ந்து அவற்றின் வரலாற்றைச் சொல்லத் தொடங்கினார்.

அதெப்படியென்றால், திருமகன் சூசைமாமுனிவனை நோக்கிச் சொல்லுகின்றார்: ஐயா! விளங்கின மேனியோடு அங்கேதிரியும் அந்த அரசர் கூட்டமென்றும் செல்வமிருந்த பலநாடுகளை யாண்டவராகி நானிங்கே கொடுத்த குற்றமில்லாத வேதமே கலை வேதமாக உணர்ந்து, அதை யநுசரித்து இனிமேல்வருங்காலத்தில் அவர்கள் என்னைச் சேர்ந்து சாருந்தனையும் அவ்வேத வழிப்பட்டு

பின்[illegible]வராசராய் வாழ்பவர்க ளாவார்கள். இதுவுமன்றி அவர்களில கு
றிப்[illegible] விழுங்கும் ஒளிபரப்பின முடியோடு இருதலைப் பறவையாகிய
ஆ[illegible]றக்கொடியாக வேந்தி, எல்லாரிலும் மேலாகத் தோன்றுவோர்
யா[illegible]ெறிக்கும் அருவிபாயும் வயற்செல்வங்களையுடைய்தா
ய[illegible]ருப்பதாயுமுள்ள உரோமை நாட்டை அரசர்க்கூ
[illegible]டமாம். பட்டமணிந்த யானைகள்மே லிப்புறத்தி
[illegible]லில் மிகவுமுயர்ந்த உக்காரிய இராச்சியத்
[illegible]ங்கள் விளங்கக் குதிரைகள் மேலே
[illegible]ற்றால் பகைவரஞ்சி வணங்கப்படும்
[illegible]ல் மின்னி விளங்கும் வேலை விரு
[illegible]ரொளில் பலவாயுதங்களைக்கொ
[illegible]லேந்திய பாவாரையாளும் அரசர்
[illegible]வரிக் குடைகள் செய்யும் இருளை
[illegible]ரையமணிந்த அரசர்கள் யாவரென்
[illegible]மணிகள் விரவுள்ள சுவேவியநாட்ட
ரசர்க்[illegible]. அங்கை பாணிக்க லூடேகினம் பதித்தழகு பெற்ற கொடிஞ்சி
த் தேர்மேல் சிங்கங்களைப் போலத் தோன்றுகின்றவர் யாரென்றால்: இருண்ட
கிறுமேச்செய்யும் சோலைகள் சூழ்ந்த தானியநாட்டரசர்க் கூட்டமாம். மீனவும் அ
ங்கே வானவருருவோடு தோன்றினவர் யாரென்றால்: மலையினின்றிழிந்துவரும்
பேராறுகளால் செந்நெல்விளைவுள்ள ஆசிய நாட்டரசர்க் கூட்டமாம். வான
நக்ஷத்திரங்களுக்குள் கலந்த கொடியை விரித்த தேர்களின்மே லெழுந்த வே
ந்தகையை விருதாகவேந்தி தோன்றினவ யாரென்றால்: கஸ்தூரி முதலிய வாச
னையாலும், பல மலர்களின் வாசனையாலும், பேர்பெற்ற மக்களை முடைய[illegible]
ந்த ஜூராவிய தேசத் தரசர்களாம். பகைவர் மார்பிலுண்ட இரத்தத்தினும், ஒளி
யிருளும் விளங்கிய வெற்றிவாளையேந்தி இடப்புறம் நிற்பவர் யாரென்றால்: தே
ன்மலர்ச் சோலைசூழ்ந்த சிலேசியநாட்டு மன்னவர்க் கூட்டமாம். உயரத்திலுல
மலையையும், வேகத்திலுங் காற்றையும் ஒத்த தேரின்மேலெழுந்த அவ்வரசாக
ள் யாரென்றால்: அருட்செல்வம், பொருட்செல்வமாகிய இருவகைச் செல்வத்தை
யுமுடைய கிசில்லாத பூவேலிய வசர்க்கூட்டமாம். பின்னும் கோபாவே
சங்கொண்ட பாவியை விருதாக வேந்தி அங்கே காணப்பட்டவ ரரென்றால்:
கல்லைப்பார்க்கினுங் கலங்காத நெஞ்சில் மிக்க கருணையுள்ள சகோனியவரசர்க்
கூட்டமாம். சிறிய முகத்தோடு இருசிறகுளை விரித்த சிங்கமதை விருதாக
வேந்தி யங்கே தோன்றுகிறவர் யாரென்றால்: பசும்பொன் மிகுதியாற் செல்வ
மோங்கிய விதேசிய நாட்டுவேந்தர்க் கூட்டமாம். பூரித்து அசைவார்த்த முகத்
தோடு இனியதாய்க் குதிரைமேல் வரும் அவ்வரசர் யாரெனில்: மிக்க கல்வியி
ற் சிறந்து நீர்வளம் பொலிந்து விளங்கும் எத்திறுரிய நாட்டு மன்னவராகும்.
மேகத்தோடு நீங்காத மின்னல் தோன்றினாற் போலக் கரியயானைமேல் ஒளிவி
டும் வயிரமலையை யொத்தவர் யாரென்றால்: கரும்புகள் காடாக வோங்கிவளர
்கின்ற வயல்களையுடைய இசிலிய தேசத் தரசர்க் கூட்டமாம். பகைவர் உதிரத்
தையும், ஒளியையும் கொண்ட வாளையேந்திய அவ்வரசர் யாரென்றால்: அழிவி
ன்றி யெந்நாளும் வளரும் மெய்யைப்போலச் செல்வங்களும், தருமங்களும்
வளர்கின்ற மிக்க பேர்பெற்ற நாப்புலித்தேசத்து மன்னவராகும். கண்கடந்த
அழகைக் காட்டும் மார்பில் தாமரை மாலையணிந்தவர்கள் யாரென்றால்: வீணைக
ளின் குரலைப்பழிக்கும் அன்னங்கள் தங்குகின்ற வயலிடமுள்ள மாந்துவைநா
ட்டையாளும் வேந்தர்க் கூட்டமாம். பின்னும் உயர்ந்த மலர்க்கொடிகளை யேந்தி

இரதங்களை நடத்திச் செல்லும் அரசர்கள் யாவரென்றால்; எண்ணப்படாத பசுக்குலங்கள் கன்றை நினைத்துப் பொழிந்த பால் ஆறுபோல் வழியும் பார்மகாட்டை யாள்பவராகும். அங்கே செம்பவளச் சிலுவையை விருதாக வேந்திக் குதிரைமேல் வருபவர் யாரென்னில்; பவளக் கொடிகளை [illegible] யெடுக்கும் சேனுவநாட்டரசர்க் கூட்டமாம். வாசனைமிக ம[illegible] விருதாக வெள்ளைப்புறா விளங்கித் தோன்றும் அ[illegible] ளால் வந்த செல்வங்களைக் கொண்டு வாழும் சா[illegible] திரண்ட பணிகளையொத்த புயங்களையோங்கிச் சிங்க[illegible] யிருப்பவர் யாரென்றால்; வானுலக அழகை ஒரு பட[illegible] தப்படம் உயிர்பெற் றிருப்பதுபோலத் தோன்றும் [illegible] வராகும். மாலைசூழ்ந்த வேலைத்தாங் [illegible] க்கே தேரின்மேல் தோன்றுபவர் [illegible] ரித்த இரண்டு சிலங்களையும் ஒருப்பட[illegible] வரும் இஸ்பானியா தேசத்தரசர்களாம். [illegible] களை மேலிருந்து அங்கே பொலிந்து தோன்றுபவர் யாரென்[illegible] கொண்ட செல்வமிகுதியால் தன்னைச் சூழ்ந்த நாடுகளையும் காப்பாற்று மியல்புடைய இபெரிய இராச்சியத்தரசர்க் கூட்டமாம். வளையாத செங்கோலும் குளிர்ச்சி நீங்காத வெண்கொற்றக் குடையுமுடையோராய் அங்கே தோன்றும் வெற்றிவேந்தர் யாவரென்றால்; பூவுலக எல்லையன்றி வேறே யெல்லை யில்லாமற் படரும் அரசன்ன உலுசித்தானிய நாட்டையாள்பவராகும். அங்கே குதிரைகளைப் பூட்டிய தேர்மேலெழுந்து கீழ்த்திசையிலுதிக்குஞ் சூரியனைப்போல விளங்கும் அரசர் யாரென்னில்; மலையும், மணியையும் ஒன்றாகக் கோவைசெய்த மாலையையொத்த அங்கிலியதீவை யாள்பவராகும். மீளவும் மேகத்திற் புகுந்து அம்மேகத்தையொத்த யானைகள்மேல் செங்கோலைத்தாங்கி யிருக்கும் வேந்தர்யாரென்னில்; எட்டுத் திசையிலுமுள்ள செல்வங்களை ஒருப்படத்திரட்டிக்கொண்ட ஈரலாந்து தீவை யாள்பவராகும். ஒரே விசையினுல எய்யப்பட்ட அம்புகளையுந் தவிர்ந்து ஓடுகின்ற குதிரையின்மேல் அங்கே பசும்பொற் செங்கோல் கொண்டிருப்பவர் யாரென்றால்; பாலாவினு மெல்லிய வஸ்திரங்களைத் தம்பாலாக்வுடைய பாத்தவனியாவெனும் மன்னவராகும். மின்னும் காற்றின்விசையினு மதிகவேகத்தோடுந் தேரின்மேல் மகிழ்ந்து நிற்பவர் யாரென்றால்; நாலைப்பார்க்கிலும் கோணாத நீதியையுடைய கோர்வெந்த இராச்சியத் தரசர்களாம். வாளெனும் ஒட்டியாடுங் கொடிகளைக் கட்டிய தேரின்மேலிருந்து ஆபரணங்களைப் பூண்டவர் யாரென்றால்; வீரத்திறத்தில் மெலியாத பிறுசிய வரசர்களாகும். வீணைக் குரலோடு இசையுடப் பாடினவர் சூழ்ந்துவர வானவரை யொத்து அங்கிருப்பவர் யாரென்றால்; கண்டவுடனே இன்பத்தைத் தருகின்ற அழகுவாய்ந்தபொவானிய நாட்டரசர்க் கூட்டமாம். பவளத்தினு லிருந்த செந்நிறங்கொண்டு வானவருக் கிணையாக சுதந்திர விருதேந்தி யிருப்பவர் யாரென்னில்; உலக செல்வங்களை யெல்லாம் வைக்கும் பேழைபோலிருக்கும், சிப்புறொன்லைத் தீவினரசர்களாம். குருக்கதிரைப்பரப்பும் பெரிய வயிரமணியை மார்பிலணிந்து விளங்குவோர் யாவரென்றால்; இனிய கனிகளை நாள்தோறுந் தந்து இனிமையைச் செய்கின்ற கான்றியதீவின் மன்னவர்களாம். என்று இவ்வண்ணமாகச் சூசையா முனிவர்க்குத் தேவகுமாரன் வானத்திற் றேன்றிய காட்சியி லுண்டாகிய முப்பத்தோ ரரசரு மல்லாமல், எண்ணப்படாத வேறே நாட்டரசர்களையுங் காண்பித்து இருள் நீங்கவைத்த திருவிளக்காக நானிப் பூவுலகிற் பிறந்து மனத்தி விளக்கக்கொண்டு ஒளிதருஞ் சத்தியவேதமே சூரிய

னது கிரணம் பட்ட இடமெல்லாம் தட்டாய மில்லாமல் நுழைந்து உலகமுழுவதும் உலாவி வழங்கியிருக்கும் என்றார்.

இப்படித் திருக்குமாரன் திருவாய் மலர்ந்தருளிய அரசசொல்லாளையுங் கண்டு, மதுமலர்க் கொடியேந்திய ஆசைமாமுனிவர் தமது திருவிழிகள் பிரளாமல் நோக்கி: நீயே கிடைத்தற்கரிய பேரின்பத்தை யெனக்குச் செய்தாயென்று திருமகனின் திருவடிகளை வணங்கி அநுபவித்த இன்பத்தால வானவரிலொருவராக விருந்தார். இது இப்படியிருக்க மிகுந்த கோபத்தோடு உயிரை யுண்ணவரும் யமனென்றும், நரகத்திலுள்ள பேயென்றும், அவ்விரண்டினுங் கொடியதென்றும், எதுவென்றும் நிச்சயிக்கப்படாமல் ஏழு கொம்புகள் முளைத்த ஏழு தலைகளை யுடையதாய் இரண்டு சிறகுகளை விரித்துப் பெரியதோர் சர்ப்பத்தின்மே லேறிக்கொண்டு வாயினால் திரண்ட அக்கினியைக் கொப்புளித்து முழங்கிப், பூவுலகமும் முழங்கி நடுக்குறும்படி பூமியிளைந்த வழியால் புகை கிளம்ப நரகத்தினின்று புறப்பட்டு ஒரு பூதம் எழுந்துவந்தது. அப்படிக் கோபத்தோடு மேகமுழக்கம்போலவந்த பூதத்திற்கு இருபுறத்திலும் அரசனைச் சூழ்ந்த வீரரைப்போல எண்ணப்படாத சேவகரும் சூழ்ந்துவந்தனர். அப்படி வந்த சேவகர் யாரோவென்றால்: மிக்க கோபத்தையுடைய நாய்களைப்போலச் சீறிக்குரைத்து நன்மை யெல்லாவற்றையும் பகைத்துப் பசாசுக்கள் மகிழும்படி சத்தியவேதத்தை யழிக்க வருந்தி, நல்லோர் யாவரையுங் கொல்லத்துணிந்து மூங்கிற் காட்டை யழிக்கப்புகுந்த செந்தீயைப்போலப் பாவத்தை நுழையவிடும் பாவிகளாம். பின்னும் இவ்வகைப்பட்ட தீயோரிடத்தில் அவர்கள்பகையால் நல்லவர்கள் உயிரைத்தந்து இறந்துபோனாலும் அந்த நல்லோர் புதுக்கலத்தில் வைத்தபால் கடக்கடப் பொங்குவதுபோல அஞ்சாமற்றுணிந்து மனமகிழ்ந்து சத்தியவேதத்திற்காக உயிரை வலியத்தந்து விண்வீட்டில் ஒளி குன்றாத முடியைத் தரித்து வாழுவார். என்று திருக்குமாரன் சொல்லியபிறகு பெரும்பகை செய்த தீயோர் தாழவும், பகைக்கப்பட்ட நல்லோர் மேன்மேலும் வாழவுந் ஆசைமாமுனிவர்கண்டு திருமகனை நோக்கி: ஐயா! இது வென்னவென்று எனக்குச் சொல்லுவாயென்று கேட்க, எல்லா அருளையும் எனக்குத் தந்து காப்பாற்றிவரும் திருக்குழக்கைச் சேசுநாதர் சொல்லத் தொடங்கினார். அதெப்படியென்றால்: திருமகன் ஆசைமாமுனிவரை நோக்கி: அருந்தவத்தை யுடையீரே! யான் சொல்வதைக்கேளும்; காளிக்கப் பூவுலகில் பிறந்து பசாசுக்க ளாண்டுவரும் கொடுங்கோலைப் பிடுங்கி எனது செங்கோலை நிலைபெறச் செய்வேன். என்பதை யறிந்த பசாசுக்கள் இப்பூமியில்வந்து நம்மைச் சார்ந்த யாவரையும் பகைத்துச், சில பாவிகளைக்கொண்டு நமது வேதத்தார்மேல் பெரும் பகையையுஞ் செய்விக்க அவர்கள் நமது வேதத்தை யநுசரித்த யாவரையும் கீழ்மக்களென்றும், கசடரென்றும், ஒன்று மறியாத மடையரென்றும், வேதமுறை, குலமுறை, செலவுமுறை மற்ற எல்லாமுறையும் இழந்தவரென்றும் குறைவு, துயரம், நிந்தை, நோய் இவைமுதலிய தீவினையுடையவரென்றும் சொல்லுவார்கள். பின்னும் தாய்தந்தைமுதலிய உறவின் முறையாரினாலும் உறவினராலும் நமது வேதத்தாரை நகைத்தும், அடித்தும் தங்கள் குலமாயுக்கு அப்புறப்படுத்தியும் வெகுவா யுபாதிப்பார்கள். அப்போது நோயுந் துன்பமும் அடைந்த நம்மவரோ வென்றால் உலைக்களத்தில் வைத்தபொன் அதிக ஒளியைப் பெறுவதுபோலப் பட்ட துயரத்தினால் உயர்ந்த மாட்சிமையைப் பெறுவார். இதுவுமல்லாமல் செங்கோல் முறைதவறிய சில அரசர்களும் குற்றமில்லாத நமது வேதத்தை யநுசரித்தவர்கள் இரத்தத்தைச் சிந்தி உயிர்விடும்படி வேல், அம்புமுதலிய

ஆயுதங்களைக்கொண்டு சேவகர்பல வொப்புவித்துக் கொலைபுரிவிப்பார்கள். அப்
படிக் கொலைசெய்யுங் கொடிய சேவகர்கள் அவர்களை வருத்தவருந்தச் சேவகர்
கள் பலவிதத்திலும் அயர்ந்து விழுவார்களே யல்லாமல் அந்த நல்லோர் மெலி
வில்லாமல் மனமகிழ்ந்து வேதனையை யெல்லாம் இனிய அமுதமாக வுண்டிருப்
பார்கள். பின்னும் அந்த நல்லவர்கள் சேவகரை நோக்கிக்: கொடிய சேவகரே!
உங்களாலாகிய தொழில் இவ்வளவுதானோ? உங்கள் கைகளினால் எங்கள் உடல்
விழுந்து சாகுமே யொழிய உயிருஞ் சாகுமோ? என்று நகைப்பார். பின்னும்
அப்படி எனது வேதத்துக்காகப் பாடுபடும் நல்லோ ரெல்லாம் பகைவராலே
செய்யப்படும் உபத்திரவ ஆக்கினைகளில் அழல் மிகுந்த தீயெல்லாம் குளிர்ந்த
தேன்மலர்போ லிருக்குதென்பார். தங்கள் அவயவங்களை வேறுவேறாக அறுக்
கும் ஆயுதங்களே அணியத்தகுந்த ஆபரணமென்பார். நஞ்சுகளை யுண்ணத்தகும்
அமுதமென் றுன்னுவார். நிராகத் தங்களுக்கு நேருந் துன்பத்தையெல்
லாந் திருக்கலியாணமென்பார். இவ்வகையாக அந்த நல்லோர் சொல்லி மெலி
யாத துணிவோடு சாகுவார்கள். இதைக் கண்ட மற்றவர்களும் அந்த நல்லோர்
அநுசரித்தவேதம் சத்தியவேத மானதினால்தான் அவர்களுக்கு அப்படிப்ப
ட்ட தைரியமும், துணிவும் உண்டாயிற்றென்று நிச்சயித்து, வேதத்துக்காக
ஒருவர் சாகையில் ஆயிரம்பேர் மனந்திரும்பி முன் னநுசரித்த பொய்ம்மதங்
களை விட்டு என்வேதத்தைக் கைக்கொள்ளுவார்கள். பின்னும் விதைநந்த வயல்
கள் விளையும்படி நீர் பாய்ச்சுவதுபோலக் கொடியவர்கள் இறைத்துவைத்த நல்
லோருடைய உதிரத்தால் எனது வேதமும் வளரும். அல்லாமலும் நான்
சொல்லியபடி வேதத்திற்காக இரத்தத்தைச் சிந்திய வேதசாக்ஷிகளெல்லாம்
இன்று அரசர்களாகி ஆகாயத்தில் பேரழகோடு திரிவதைப் பாரும். தீயோர்
நம்முடையவரைப் பகைத்துச் செய்த கொடுமையெல்லாம் சுடச்சுடச் செம்
பொன்னினொளியை அதிகப்படுத்தும் நெருப்பைப்போலக் கடைசியாய் யா
தொரு பயனின்றி அந்தக் கொடியவர் நொந்து மெலிந்து வாடும்படி எனது
வேதத்தி னுண்மையையும், என் வல்லமையையுங் காட்டுகின்ற தயிரியமுடை
யவர் தங்கள் பகைவரை வெல்லுவார், என்று மேகவாகனனாகிய திருக்குமாரன்
சொல்லியபோது இவை யெல்லாவற்றையுங் கண்ணாரக்கண்டும், காதாரக் கேட்
டும் அதிசயப்பட்டிருந்த ஞானமாமுனிவர் மீண்டுந் திருமகனை நோக்கிச் சொல்
லுவார்: உலகத்தை இரக்ஷிக்கப்பிறந்த திருக்குழந்தை வடிவாகிய நாயகனே!
எனக்காக நீ இறந்ததுபோல இறந்து பூவுலகத்தை இரக்ஷிக்கவும், உன்னைச்
சார்ந்தவர்களெல்லாம் உன்னைப்பற்றிச் செத்தாற்போலச் செத்துத் தங்கள்
பகைவரை வெல்லவும் அனபிறகு உன்னை நிகர்த்தவர் ஒருவராயினு முளரோ?
அப்படியே நானும் உன்னைப்பற்றி என் இரத்தமெல்லாஞ் சிந்தி யுயிர்விட்டு
நானும் வானுலக அரசாக்ஷியைப் பெறும்படி யெனக் கிரக்கஞ் செய்வாயென்று
திருமகனின் திவ்யபாத கமலங்களை வணங்கினார். அதற்குத் திவ்விய குழந்தை
யாகிய நாயகன் வானுலகமுதலாய் களிகூரும்படி ஒரு புன்னகைகாட்டி, இருவ
ருடைய அன்பும், உயிரும் ஒருப்படச் ஞானமாமுனிவரை மார்போடு இறுகத்த
ழுவித் திருவுளம் பற்றுகின்றார்: தேனைப்பாய்ச்சி மலர்ந்த மலர்க்கொடியை விரு
தாகவுடைய அருந்தவரே! உம்முடைய அன்பு தெளிவாகக் காணும்படி நீர்
இறத்தல் வேண்டுமோ? நீர் மிகுந்த விருப்பத்தோடே இந்த வரத்தைக் கேட்டுக்
கொண்டதே போதும். பின்னும் கொடிய ஆயுதங்களாற் செய்த புண்ணின்
வழியாய் இரத்தத்தைச் சிந்த அதனால் வரும் அரசாக்ஷி யென்னுடையதாகும்.
பிணி, நோய், செய்யுந் துன்பங்களைப்பட்டு நீர் காட்டின பொறுமையால்வரும்
அரசாக்ஷி யும்முடையதாகும் என்றார். அதற்கு ஞானமாமுனிவர் திருவுளக்

தை வணங்கி புடன்பட்டமையால், இனி வருங்காலத்தில் ஒவ்வோரிடங்களில்
நல்லோரும் படுந்துன்பத்துக் காறுதலாகச் சூசையப்பர் அநுபவித்த பிணிநோ
நோயின் தன்மையை இனிச் சொல்லத் தொடங்குவாம்.

புரோகிதப் படலம் முற்றிற்று.

முப்பத்து மூன்றாவது, பிணிதோற்று படலம்.

வென்முகத் தசடர் கையால் வீழ்ந்திறப் பரிதென்கே றோ?
நான்முகத் துறுநோய்த் தெஞ்சா நபத்தமை வரிதென்கே றோ?
கோன்முகத் தீண்டேசாதல் குணமெனப் பலகாள் வெங்நோய்ப்
பான்முகத் தவலமாற்றுப் பலர்தமைக் கொல்வாரன் றோ.

அதெப்படி யென்றால்: சிலர் தீயோர் கைகளால் வெட்டுண்டிறப்பது அரு
மையென்றும், சிலர் நான்கு பக்கங்களிலு மிருந்துவரும் நோய்களை உள்ளத்
தின் துணிவுகெடாமல் பொறுப்பது அருமையென்றும், சிலர் இவ்விரண்டைப்
பார்க்கிலும் இது நல்லதென்று நோயினால் வரும் வருத்தத்தைப் பொறுக்க
மாட்டாமல் ஆயுதங்களால் தாங்களே தங்களைக் கொலைசெய்து இறப்பது யா
வரு மறிந்த விஷயமே. அப்படி யிருக்கப் பாவத்தினால் வந்த துன்பங்கள் தங்
கள் குணமாறி நல்ல தருமத்திற்கு உதவும்படி இருமகனா யவதரித்த கடவுள்
எளியவனுணதுந் தவிர, தமக் கிவ்வுலகில் கைத்தாதையாக அமைந்த சூசைமா
முனிவர் எல்லாத் துன்பங்களிலும் அரிய துன்பங்களை யனுபவித்துப் பொறு
மையி னாசுசெய்யும்படி திருவுளமாகி, அம்முனிவர் பல பிணிநோய்களை யனுப
விக்கச் செய்தார். இதுவுமல்லாமல் இப்பூவுலகத்தில் பொருட் செல்வத்தில்
மிருந்தவர் பொருளி னாலாக மேன்மையைப் பெற்று இங்கே அரசராகுவார்
கள். சூசைமாமுனிவரோ வென்றால்: இவ்வரசரு, செல்வமும் நிலையில்லாதனவென்
று உணர்ந்து வருத்தத்திற் கொண்ட பொறுமையினால் வானுலகின் அரசனுமி
மாகதிமையிற் சிறந்த மேன்மையைச் சொல்லலாகுமோ? பின்னும் முன் சொ
ன்னபடி துன்பங்கள் யாவும் பாவத்தால் விளைந்தன. ஆனாலும் நல்லவர்கள்
அந்தத் துன்பமே நல்வினைக் குதவுமென்று தெளிந்து தங்களுக்கு அத்துன்
பம் வந்தபோது மயங்காம லிருக்கும்பொருட்டு மாதவத்தையுடைய சூசையப்
பரோ பல நோய்களால் வருந்தி மனந் தளராமல் பூவுலக முழுமைக்கும் ஒரு
திலகமாக விருந்தனர். மீளவும் அந்தச் சூசையப்பர் அவதரித்த நம்முடைய
ஆண்டவனுக்கு ஒரு கைத்தாதையாக விருந்து சகல புண்ணியங்களையும் மல
ராகப் புஷ்பித்து, வேதமாகிய பூங்கொடி மேற்படர்ந் தோங்குதற்குக் கொழு
கொம்பாகிப், பிணியின் வருத்தத்தால் பொறுமையிற் றளர்ச்சி யடையாமல்
அந்தப் பொறுமையைத் தாங்கும் நிலமாகி, நாம் புலம்பிவருந்துந் துன்பங்களு
க்கெல்லாம் மேலான மருந்துமாகி நாம் துன்பத்தில் மகிழும்படி அம்முனிவரோ
நமக்காகத் துன்பமடைந்தார். இன்னும் அம்முனிவருக்குப் பிராயம் ஐம்பத்தி
ரண்டானபடியால் அப்போது முதுமைப் பருவத்தால் நரைகொண்டு தீயில்
வாடிய மலர்மாலையைப்போல உடல் தளர, வெள்ளம்போலத் திரண்டுவந்த
பல நோய்களும் மொய்த்துக்கொண்டு நரம்புகளை யிழுத்து எலும்புகளை குடை
ந்து வருத்தின. அப்படி வருத்தினும் முனிவர் போர்முகத்தி லஞ்சாத வீர

யானைபோலவும், கடல் மோதுவதினா லசையாத பெருமலை போலவும், நெடுநாளாகவந்த நீங்காத பிணியினால் சற்றுந் தளர்ச்சியில்லாமல் இடியிடித்தபோது மலரும் முல்லைக் காடுபோல மனமலர்ந்து இது தேவதிருவுளமென்று ஆண்டவனைத் துதித்துப் பின்னும் அந்த வருத்தத்தில் சொல்லுவார்: மனிதனென்னப்பட்ட நாமெல்லாரும் தீயபாவங்களை விரும்பித் தேடியபின்பு வருந்திய வருத்தத்தைப் பொறுக்கா திருக்கலாமோ? என்பார். நீங்காத பாவமே கேடொழிய வேறேகேடு என்பதொன் றுண்டோ? என்பார். தெய்வத்தின் நட்புத்தன்மையறிந்தவர் திருவுளத்தின் சங்கற்பப்படி வருகின்ற நன்மைகளையுந், தின்மைகளையும் ஒன்றாக எண்ணுவாரொழிய இது வேறு அது வேறு என்று சொல்லுவார்களோ? என்பார். பொய்யை விளைக்கும் பாவமாகிய நஞ்சையுண்டு நோய்கொண்ட பின்பு அந்நோய் தீரும்படி கசக்கு மருந்தினை யுண்ணாமல் அது ஒழியுமோ? என்பார். சம்பவித்த வருத்தம் நாளுக்குநாள் அதிகப்பட்ட போதும், பொறுமையா லதைச் சகித்து வானுலக பேரின்பத்தை நினைந்தால் அந்தத் துன்பமெல்லாம் முழுமையும் அவிந்தாறும் என்பார். முக்குடை நிழலாகிய அளவில்லாத ஞானத்தாலும், தயையாலும் எல்லாவற்றையும் தனியரசுபுரியும் இறைவன் இப்பூவுலகில் திருமகனாகப் பிறந்து நமது தீவினையைத் தீர்த்து வருந்தி யிறக்கும்படி எழுந்தருளினபின்பு நமக்கு இன்பமேயொழியத் துன்பந் தகாதென்பாரும் உண்டோ? என்பார். மிகுந்த செல்வத்தை யுடைய கடவுள் இவ்விடத்தி லவதரித்து விரும்பித்தேடியது துன்பந்தானே என்பார், இவ்வண்ணமாக மாதவமுநிவர் வருத்தஞ்செய்யுந் துன்பத்தை இன்பமாகத் தாங்கிக் கொண்டு கைகளா லொருவேலை செய்யவும், கால்களா லோரடி யெடுத்து வைக்கவு மாட்டாமல், சரீரம் உருகிவாட மனவூக்கம் ஒருபொழுதும் வாடாமல் எவற்றாலும் நிகரில்லாத மாட்சிமையை யடைந்து விளங்கினார்.

இத்தன்மையாக உடலினால் வருந்திய ஞானசமாமுனிவர் மனத்தினால் மகிழ்ச்சியடையும்படி பலவானவர்கள் அழகிய வடிவெடுத்தாற்போல உருவெடுத்து, எதிரேதோன்றிக் கைகளிலேந்திய வீணையின் குரலுக்கொப்பத் தாங்களும்பாடி, பெரிய திருநாளாக கீர்த்தனஞ்செய்து தேவ திருநாமங்களைப் புகழ்ந்தவுடனே வளனென்று சிறப்பித்துச் சொல்லும் மாதவ முநிவரும் நிறைந்த பேரின்பத்தை விடாமற் புசித்துத் தாமும் அவ்வானவர்களோடொத்துத் துதித்துத் தமக்கு வந்த துன்பங்கள் ஒன்றுந் தோன்றாமல் வந்த வானவரில் ஒரு வானவனாக இருந்தனர். அப்படி யிருக்க அந்தத் துன்பநோய்க ளெல்லாம் உடலைவருத்தி வருகையில் உயிரானது மிக்க மகிழ்ச்சியை யநுபவிப்பதால் கொடியபாலை நிலத்தில் குளிர்ந்த மதுமலர் பூத்தது போலாயிற்று. இப்படி யிருக்க வியாதிகளெல்லாம் மாதவ முநிவருடைய உடலை மிகவும் வருத்துவதைக்கண்டு என்னையாளும் பொற்பாத கமலங்களுடைய கன்னித்தாயார் மனத்திலிரக்கங்கொண்டு அந்த நோய்களுக்குக்கொடுத்த கட்டளையினால் அவை இரண்டுபொழுது தடுக்கப்பட்டுப் பின்பு மீளவும் மிக்க கோபத்தோடு வந்து முநிவனை மொய்த்தன. அப்போது இளம்பிறைச் சந்திரன் மேலெழுந்த மலர்ப்பாதத் தழகுடைய கன்னித்தாயார் தமது ஏவலினால் சற்றடங்கிய நோய்கள் பின்னும் வந்து முநிவனை வருத்துவதைக் கண்டதினால் அந்நோய் முழுதும் நீக்கும்படி தமது திருமகனை வணங்கிப் புதியமலரின் தேனைப்போல இனிய மொழிகளாற் சொல்லுவாள்: என்னருமைத் திருமகனே! மூவுலகிலும் அரசாட்சி செய்யுஞ் செங்கோலுடையானே! மேகவாகனனே! பெரியகடலுஞ் சமானமாகாத கருணையுடையானே! வேண்டுமென்பதை வேண்டியபடியே எக்காலத்திலுஞ் செய்ய வல்லமையுடை

ய நீ உனது தகப்பன் கெடுநோயாகப் படும் வருத்தத்தைக்கண்டு மனமிரங்காயோ? பின்னும் யாவருடைய துன்பங்களையும் நீக்கிக் கருணைசெய்யும்படி நீயிங்கே பிறந்ததினால் மற்றவர்களுக்குச் செய்யுந் தயையை யிப்பொழுது உன் தகப்பனுக்குச் செய்யாயோ? அல்லது உனக்குநட்புள்ள யாவரும் துன்ப மனுபவிப்பதே நல்லது என்றாலும் உன் தகப்பனுக்கு வந்த துன்பங்களை நானே யனுபவிக்கக் கட்டளைதாராயோ? மகனே? என்று நக்ஷத்திர மகுடசேகரியாகிய தேவதாயார் திருக்குமாரனின் திருவடிகளை வணங்கினாள். அதற்குத் திருமகன் தமது தாயாரை நோக்கி: திருவாய்மலர்ந்து சொல்லுவார். நான் மனிதனாகப் பிறந்து தேடவந்த உடலால் விளையுந் துயர்களை நல்லதானாலும் இனிய துன்பமதின் செய்தியைக்கேளும் அதாவது: துன்பத்தின்வகை பலவகைப்படும். அப்படிப் பலவகைப்பட்ட துன்பங்களில் பிணிநோய்கொண்டு வருந்துந் துன்பத்தின்பங்கு சூசைமாமுனிகளுடையதாகும். பின்னும் காயம்படுவது என்னுடையதாகும். நாங்களிருவரும் படும் இந்த இரண்டு துன்பங்களையுங் கண்டு மனமிரங்கிவருந்துந் துன்பத்தின்பங்கு உம்முடையதாகும். தயையின் சூழ்ச்சியால் துன்பங்களை வகுத்த முறை இதுவேயென்றார்.

இவ்வண்ணமாகத் திருக்குமாரன் திருவாய்மலர்ந் தருளியதைக் கேட்ட தேவதாயார் இது திருவுளமென்று திருமகனை வணங்கிப், பின்பு தமக்கொரு துணைவராக விருந்த சூசைமாமுனிகளுக்கு வந்தநோய் துணியாததைப்பற்றி மனமிரங்கி யழுது, தமது இரண்டு விழிகளாகிய தாமரையைத் தீயாற் சுட்டதுபோல வாடி எல்லா இன்பங்களையுங் கடந்த திருமொழிகளால் முனிவருக்கு ஆறுதல் சொல்லி உயிரைக் காப்பாற்றும் உடலைப்போலப் பகலும், இரவும் பிரியாதவருகேயிருந்து காத்து, மகிழ்ச்சியோடு அம்முனிவருக்குச் செய்யும் பணிவிடையைக் கண்ட அந்த நோயும் போகாத வாழ்வினு மினிய சுகத்தைத் தந்தது. அப்பால் தேவதாயார் தேன்கலந்த சுவையும், தெளிந்த சுவையில் மிகுந்த திவ்வியபாலும், தேவுலகத்தின் அமுதமும், அங்கே மலர்ந்த மலரின் தேனும் இணையாகாமற்படிக்குத் தமது யோசனையால் நாள்தோறும் தெய்வ பரிமளம்வீசப்படுகிற விருந்துகளை யுண்டாக்கிப் புசிக்கக் கொடுத்துக் கண்ணிமைபோலப் பாதுகாத்து வருகையில், எல்லாவற்றையும் உண்டாக்கிக் காப்பாற்றிவரும் திருக்குமாரனும் வானுலகத்தாரு மதிசயிக்கும்படி தமது தாயாரோடு கூடிக்கொண்டு முனிவருக்கு வேண்டிய பணிவிடை யெல்லாஞ் செய்துவந்தார். இப்படித் திருக்குமாரன் செய்துவந்தமையால் எல்லாருக்கும் உணவளிக்கும் மனுமகனுக்கு; முன்பு சூசைமுனிகள் உழைத்துத் தந்த வுணவைச் செல்வமென்று சொல்லலாமோ? அல்லது இப்போது மனுமகன் சூசையப்பருக்குத் தந்த வுணவைச் செல்வமென்று சொல்லலாமோ? ஆகையால் துன்பமும், இன்பமும் மாலையாக வருகையில் நோய் உடலை வருத்த உயிர்மேன்மையிற்சிறந்த பொறுமைக்கோர் இறைவனாகிக் கற்றோருடைய புகழெல்லாங் கடந்து விளங்கினார்.

பிணிதோற்ற படல முற்றிற்று.

முப்பத்துநான்காவது, தூதுணர்ப்படலம்.

தீய பிணிகளெண் வருடநீங்கி லா
வாடிய வுடற்குயிர் வாடிலாவனர். த்

தோடிய மீன்மிதித் துயர்ந்து வானவ ருந்
சூடிய தன்மையிற் சூசை யாயின ன்.

முன்சொன்ன வண்ணமாக அர்ச். சூசையப்பர் எட்டுவருஷ காலமாகக் கொண்ட கடும் பிணியால் தமது உடல் வாடினாலும், உயிர்வாடாமல் வளர்ந்து மோக்ஷத்திற் சென்று மோக்ஷ மாகிமையை யடைந்தவராக விளங்குகையில், கண்களைக் கடந்த அழகோடு உருவில்லாத வானவர்கள் பளிங்குபோல உருவெடுத்து வானினின்றிறங்கி வந்து மகர வீணை முதலிய பலவீணைகளை யெடுத்து மலர்க்கரங்களால் தடவி வீணையினிசையோடு இனிய குரலினோசையும் வேறுபடாமற் பாடி, மேகம்பொழிந்த நீர்மழைபோல வானிற்பூத்த மலர்மழையும், கமழும் பனிநீர் மழையும், நாவினாற் றுதிக்கும் பாமழையும், பகலு மிரவு நீங்காமற் பொழிந்து அம்முனிவரை வானராச்சியத்திற் கழைத்துப் போகவந்தனர். இப்படி ஒன்பது நாளும் வானவர் இரவும், பகலும் செய்த ஒளிவின் சிறப்பிற் போனபின்பு சூசையப்பர் ஒப்பில்லாத வல்லமைகொண்டு அகக்கண்ணினால் ஒருமறைவிடமு மில்லாமல் மிகுந்த பிரகையினால் தேவசுபாவத்தைமுகமுகமாய்க் குறையின்றிக்கண்டார். இவ்வண்ணமாகச் சொல்லினும், நினைவினும் அடங்காத மாகிமையுள்ள தெய்வத்தை மறைவின்றிக் கண்டவளவில் அத்தத்தேவமுகமாகிய பொன்மலையினின் றெழுகிய ஒளியும், மகிழ்ச்சியுமாகிய வெள்ளத்துக்குள்ளே இப்பூவுலகங் கடற்கலைப்போல நிறைய முழுகி ஒரு குறையுமில்லாமல் பேரின்பத்தை யனுபவிக்கும்போது ஆண்டவன் சூசைமாமுனிவர் இன்னும் விளங்கும்படி மோக்ஷபேரின்பத்தை விளைவிக்கும் நோக்கத்தோடு அவரை நோக்கி: திருவாய் மலர்ந்தருளிச் சொல்லுவார்; நீ உன்னுயிரைப்பார்க்கிலும் திருமகனுடைய உயிரையும், அத்திருமகனது தாயாரையும் பாதுகாத்து வந்தாய். ஆதலால் அதற்குரிய பலனைப்பெற்று நல்லோர்களுக்காகக் குறிக்கப்பட்ட வானுலகத்தில்வந்து உயிர்வாழக்கடவாய். பின்னும் நீ பருமையோடு வளர்த்த நரதேவன் தாயினு மிக்க அன்புகொண்டு உலகத்தை யிரக்ஷிக்கத் தான் பாடுபட்டிறந்தாலொழிய வான்வீட்டி லொருவருஞ் சேரமாட்டார். ஆகையால் நீ யுன்னுடலைவிட்டு நீங்கினாலும், நெடிய கவத்தினால் எனது தயையின் குடைநிழலில் பிதாப் பிதாக்கள் தங்கியிருக்கும் நாட்டிற் சென்று மனிதனாய்ப் பிறந்த கடவுள் இறந்தவர்களை யிரட்சிக்குந் தயையின்காலம் கிட்டிற்றென்றும், இனி அவர்கள் மோக்ஷவாழ்வை யடையுங்காலஞ் சமீபித்ததென்றும், அந்தப் பிதாப்பிதாக்களுக்குச் சொல்லி நீயு மவ்விடத்தி லிருப்பாயென்றார். இதைக்கேட்ட சூசைமாமுனிவர் தமக்கு இனிமையைச் செய்யுந் திருக்குமாரனையும், திருமணமாகச்சேர்ந்துள்ள கன்னித்தாயாரையும் விட்டு நீங்குவது தமது சாவைப் பார்க்கிலும் மிகுந்த வருத்தத்தைச் செய்தாலும் திருவுளத்துக்குச் சரியான தன்மை யில்லையென்று மனத்திற் றேறினார்.

இத்தன்மையாகச் சூசைமாமுனிவர் மனத்திற்றேறி ஆண்டவன் திருவடிகளை வணங்கி மறைவில்லாமல் முன்னமே தோன்றிய காக்ஷி மறைந்தவுடனே அருகாமையில் திருக்குமாரனுந், தேவதாயாரும் களிகூர்ந்திருப்பதைக் கண்டு தேவபுதல்வனை நோக்கிப்: பெருமூச்சுவிட்டுச் சொல்லுவார். மகனே! தேவசுபாவத்தில் உன்னோடு ஒன்றுபட்டிருக்குங் கடவுள் எனக்குக் கற்பித்த கட்டளையை நீ யறிவாய். நான் வேறுபட்டு உன்னையும், உன் தாயாரையும் விட்டுப் பிரிந்துபோகுதல் எனக்கு எல்லாத் துன்பத்தினு மேற்பட்ட துன்பமா யிருக்கின்றது. ஆனாலும் எல்லாச் செல்வத்திற்கும் காரணமாகிய தேவதிருவுளம் என்

லா நன்மையிலும் உத்தம நன்மையாகு மல்லவோ? மகனே! உன்னை நான் மக னென்று சொல்லும்படி நீயல்லோ எனக்கு வரங்கொடுத்தாய். பின்னும் நீ எனக்குச் செய்த நன்மைக்கெல்லாம் நானுனக்குச் செய்யுங் கைம்மாறு முண்டோ? கதியைப்போலத் திரளாக எனக்குக்கொடுத்த செல்வத்தி னளவாக நீ துன்பத்தை யனுபவித்தாய். இப்படி யென்றால் நீ துன்பத்தை யனுபவித்தா லும் எனக்கு நன்மையையே செய்தாய். மகனே! மீளவும் நான் மாகநிமையி லோங்கவும், வானவரெல்லாம் அதிசயப்படவும் நீ யென்னை யென் பிதாவே! யென் றழைத்தாய். ஆதலால் உன் பிதாவாகிய எனக்காக இரங்கித் தேவபிதா வின் பணிவிடையை முடிக்க எனக்கு உன் திருமலர்க்கரத்தி னாசிர்வாதந் தந்தரு ள்வாய் என்றுரைத்துத், திருமகனது திருவடியில் விழுந்து வணங்கும்படி ஆசை யோடு எழுந்தபோது பலனில்லாமல் கீழேதலறி விழுகையில், அருகே நின்ற திருக்குமாரன் மூவுலகத்தையும் மூன்று விரலாற் றாங்குந் திவ்விய கரத்தினால் ஒருபுறத்திற் றாங்கவும், மற்றொரு புறத்தில் வானவரெல்லாம் வணங்கும் தே வதாய் தாங்கவும், ஆண்டவன் கட்டளையிட்ட பிதாப்பிதாக்கள் ஸ்தலத்திற்குப் போக நினைத்துத் தமது உடலை உயிர்விட்டுவிடுகிற தருணத்தில் அவ்வுடலை அன்பு காரணமாக விடாதிருந்ததுபோல மீளவுஞ் சூசைமாமுனிவர் இரண்டு திருக்கரங்களையுங் குவித்துநின்று சற்றுநேரம் பேசாமலிருந்து பின்பு தேவ தாயை நோக்கிச் சொல்லுவார்: சொல்லுக்கடங்காத நன்மையெல்லாம் நான் உன்னாலடைந்தேன். என்றாலோ வென்றால் நீ பலகுறைவுகளையு மடைந்தாய். ஆயினும் அந்தக் குற்றங்களை நீயே பொறுப்பதல்லாமல் வேறெவர் பொறுப் பார்? இந்தக் குறையெல்லாம் நீக்கி உனது அன்பின் றயையை நினைந்து என க்கு ஆசிர்வாதந் தந்தருள்வாயென்று துதித்து வணங்கினார். அப்போது இரு பக்கத்திலு மிருந்த தேவமகனுந், தேவதாயாரும் மகிழ்ந்து ஆசிர்வாதந் தந்து தயைநிறைந்த சொற்களால் தேற்றிக்கொண்டிருக்கையில், வானவர் உருவத் தோடு எதிர்வந்து நின்று, பாவிசைகளைப் பாடி மணமலர் தூற்றி அவரை வழியி லழைத்துக்கொண்டு முன்னே செல்ல, அறுபதாம் பிராயத்தில் தமது திருவுட லைவிட்டுச் சூசைமாமுனிவருடைய நல்லுயிர் நீங்கி உடலில்லாதவரிருக்கும் நா டாகிய பிதாப்பிதாக்கள் ஸ்தலத்திற்குத் தூதுசொல்பவனைப்போலப் போய்ச் சேர்ந்தது. பின்பு சந்திரப்பிறைமேலெழுந்த பாதபங்கயத்தையுடைய எங்கள் கன்னித்தாயாரும், வான அரசர்களுக் கரசனாகிய திருமகனும் அந்தத்திருவுடலுக் குச் செய்யவேண்டிய முறையின்படிசெய்து அதை நன்றாயலங்கரித்து வானவ ரணியணியாகப் புடைசூழ்ந்து கீதங்களை முழக்கிவரக் கொண்டுபோய்த் தேன் பொழியு மருமலர் நிறைந்த ஓர் பூங்காவனத்தி லடக்கியவுடனே திருக்குமாரன் பூமியை நோக்கிச் சொல்லுவார்: தேவதூதனுக்குச் சூசைமாமுனிவருடைய உயிர் போய்த் திரும்பிவருமளவும் பூமியே! நீ யிவ்வுடலை நன்றாகக் காப்பாற்றக் கட வாயென்றுசொல்லி ஆசிர்வாதந் தந்தபோது, பூமியும் அந்தச் சொல்லைக்கேட்டு மகிழ்ந்து அன்று தானடைந்த நன்மை மூடியொளிக்கப் புஷ்பித்த மலர்களால் பூம்போர்வை மேலிட்டாற்போல மலர்ந்தது.

இவ்வண்ணமாகப் பூங்கொடியேந்திய சூசைமாமுனிவர் திருவுடலை நீக்கிப் பிதாப்பிதாக்களுக்கு அமிர்தக்கடலும் நிகராகாத செய்தியைச் சொல்லும்படி நிந்தை, துன்பமுதலிய இக்கட்டுக ளில்லாத நாடாகவும், தருமவழியில் நடந்து பிதாவாகிய கர்த்தாவின் பாதங்களை வணங்கித் திருமகன் பாடுபட்டுத் தரும் பல னால் மோக்ஷபாக்கியத்தை யடைய நம்பின பிதாப்பிதாக்க ளிருப்பதற் கிடமா கவும், இருளும், மயக்கமும், பாவமும், பொய்யும், இல்லாமலும் உடலும் உட

வால் வரும் பாடுகளு மில்லாமல் அளவற்ற நன்மையை யனுபவிப்போருக் கிடமாயும், மோக்ஷவாச வீடுவென்று சொல்லும் வளமையுடையதுமாகிய பாதாளலோகத்திற் சென்று பல நக்ஷத்திரக் கூட்டத்தில் ஒரு பூரணசந்திரன் தோன்றினாற்போலப் பிதாப்பிதாக்கள் நடுவில் சூசையப்பர் அழகிற்சிறந்த உருவோடு காணப்பட்டார். அப்போது அங்கிருந்த நல்லவரெல்லாரும் அவ்வுருவைக்கண்டு மிகவும் அதிசயத்தோடு மகிழ்ந்து ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துச் சொல்லுவார்: பூவுலகத்தைவிட் டிங்கேவந்த நாமெல்லாரும் களிகூரும்படி கண்கடந்த தன்னழகினைக்காட்ட மாசில்லாத காந்தியைப் பரப்பி இவ்வுருவோடு வானவன் வந்தானோவென்பார். மீளவும் துவக்கமு முடிவுமில்லாத கடவுள் மனுஷாவதாரமெடுத்துப் பாடுபட்டிறந்து மோக்ஷவாசலைத் திறந்தாரோ? அதைத் திறந்தபடியால் நாமடையும் பெருமையின் தன்மை யிவ்வுருவே என்பார். அல்லது பூவுலகத்தை யிரக்ஷிக்கப்பிறந்த தேவசுதன் பூவுலகத்தை யிரக்ஷித்தபின்பு அன்புள்ள தாயைப்போலவந்து நம்மை மோக்ஷத்திற் சேர்க்க இவ்விடத்தில் வந்து காட்டும் உருவம் இதுவோ? என்பார். இப்படியாகப் பிதாப்பிதாக்கள் சந்தேகப்பட்டிருக்கையில் அவர்கள் மனத்திற்கொண்ட சஞ்சலந் தீரும்படி பொன்மலையை ஒத்ததிருத்தோளில் மணமாலை விளங்கத்தோன்றின சூசைமாமுனிவர் தமது மலர்ந்த பூங்கொடியை யாவருக்கும் விளங்கக்காட்டி அவர்கள் நடுவேநின்று சொல்லத் தொடங்கினார்.

இத்தன்மையாகச் சூசையப்பரைக்கண்ட பிதாப்பிதாக்கள் இவரார்தானோவென்றுகேட்டுப் பலவாறு சந்தேகப்பட்டிருக்கையில் அவர்கள் சந்தேகந் தெளியும்படி அருகத்தில் யிருந்த சூசைமாமுனிவர் சொன்னதாவது: சந்தேகத்தினாலும், விருப்பத்தினாலும் மயங்குகின்ற தருமவான்களே! பூவுலகத்தாருடைய பாவங்களை நீக்கி மோக்ஷவாழ்வைத் தரும்படி நமது ஆண்டவர் பூவுலகில் வேதவடிவாகிய அப கன்னித்தாயார் திருவயிற்றி லவதரித்துப் பிறந்து இப்பொழுது இருபத்தாறு வருஷமாகின்றது. மனிதரை யிரக்ஷிக்கக் குறித்தகாலமுங் கிட்டிற்று. பின்னும் முன்சொன்ன கன்னித்தாயாருக்கு மணத்துணைவனாகவும், அந்தக் கன்னிகை முக்காலத்திலுந் தன் கன்னிமுத்திரை கெடாமல் யீன்ற நரதேவனாகிய திருமகனுக்கு கைத்தாதையாகவும் வரம்பெற்றிருந்தவன் நானே. பின்பு அந்த நரதேவனுக்குத் தூதனாக உங்களிடத்தில் வந்தேன். இனி இந்நாளிலேயுங்கள் சிறை தீர்ந்ததின்பின்பு நீங்கள் மோக்ஷத்தில் அந்த ஆண்டவனுக்கு ஒப்பில்லாத துணைவராகநின்று வாழ்வீர்களென்றார். அதற்குப் பிதாப்பிதாக்கள் சூசைமாமுனிவர் சொல்லிய இனிய சொல்லையுங் கேட்டுக், கையி லவரேந்திய கமழ்மணப் பூங்கொடியையுங்கண்டு, மனிதக்குலத்தாருக்கு இப்படிப்பட்ட பெருமையு முண்டோ? வென்று தங்களுக்குள் ஆச்சரியப்பட்டு வானுலகவாழ்க்கைப்பெற்ற சூசைமாமுனிவரை யாவரும் வணங்கி வாழ்த்தத் தொடங்கினார்கள். அதெப்படி யென்றால், வேதவடிவுடைய மாதவமே! வேதம் ஊன்றிப் படருங் கொழுகொம்பே! ஆதிகாரணனாகிய கடவுளைக் களிகூரக் கண்களினாற் கண்டு மார்போடணைத்த கைத்தாதையே! அருளால் நிறைந்தவரே! நாங்களெல்லாருங் காண விரும்பின காலத்தை யடைந்தீரோ! இன்பப் பெருங்கடலாகி யாவருமடையாத பாக்கியத்தை நீரே யடைந்து வசமடைந்த மாதவராகித் தவத்தினைசக் கனாகண்டீரோ. முக்காலங்களையுங் காட்டுகின்ற திருவிளக்காகிய தவத்தினால் நாங்கள் அக்காலத்தில் கண்ட மறைவோடு அக்காலத்தில் சொல்லனவினால் வருவானென்று தீர்க்கதரிசனமாகச் சொல்லிய ஆண்டவனை நீர் இக்காலத்தில் அவதரித்து வந்தானென்று உமது திருக்கரங்களால் காட்டவும், வந்த

வும், மார்போ டணைக்கவும், வளர்க்கவும் செய்தீர். ஆதலால் மெய்யைக் காட்டவந்த நாதேவனுடைய இயல்பை யெங்களுக்கு விளங்கச்சொல்ல வேண்டுமென்று கேட்கச் சூசைமாமுனீந்திரர் சொல்லுகின்றார்: ஐயா! மாதவத்தோரே! கடவுள் கீழ்த்திசையில் வருஞ் சூரியனைப்போலப் பூமியி லவதரித்து அவரவர்கள் விருப்பத்தின்மேலும் மிக்க தயைசெய்து காட்டும் இயல்பேதென்று கேட்டீர். ஆதலால் அதைச் சொல்லுகின்றேனென்று மீளவுஞ் சூசையப்பர் சொல்லுவார்: அவதரித்த நாதனியல்பேதென்றால் நோய்கொண்டவர்களுக்கு நல்ல மருந்துபோலவும், தீவினைத் தீயைக்கொண்டவர்களுக்குக் குளிர்படப் பெய்யு மேகம்போலவும், அழுகிய வடிவுருவத்தில் மருமல கரும்புபோலவும், தயையினில் கரைகடந்த கடல்போலவும் விளங்கி உலகத்தி லுள்ளோருக்கெல்லாம் அந்த நாதேவனே ஒரு தாயாகவும், ஒரு தகப்பனாகவும் இருப்பான். பின்னும் அத்திருக்குமாரன் பாவவிருளை நீக்கும்படி நக்ஷத்திரத்தை யொத்த திருவிழிகளையும், வேதநூலைச் சொல்லும்படி வாசனையுள்ள கமலத்தையொத்த திருவாயையும், கசக்குந் துயர்களை நீக்கத் தேனையொத்த சொற்களையும், வானுலக அழகைக்காட்ட மலர்ந்த சந்திரவதன அழகையுங் கொண்டவன். மீளவும் கருணைநிறைந்து ததும்பும் நெஞ்சமும், எல்லாக் குற்றங்களையும் நீக்கவும், எல்லாக்குறைகளையும் தீர்க்கவும் கொண்ட மேகத்தையொத்த திருக்கரங்களும், நீதிமுறைமையைக் காட்டும் தருமநெறிவழுவாத திருவடிகளும், பசாசுக்களை வெல்லும் நாமவேலு முடையவன். இதுவுமல்லாமல் அந்த நாதேவனாகிய மனுமகன் அருளின் மிகுதியால் பகையின் வெள்ளத்தை முழுதுங்கடந்தான். தானேதிவரும் வேத வொளியினால் பாவப்பகையையும், உலக இருளையும் கடந்தான். பொருள் மிகுதியால் வரும் அகங்காரக் கடலைத் தான்யாசித்துண்டு கடந்தான். ஆசைக்கடலைத் தவத்தாற் கடந்தான். இன்னும் இதன்மேலும் நான் சொல்வதென்ன? என்னாண்டவன் அவதரிக்குங் காலத்தில் நடக்கும் விர்த்தாந்தங்களை நீங்களே திரிக்கதரிசனமாக முன்னமே குறித்துரைத்தீர்க ளல்லவோ? அந்தத் தன்மையின்மேலுஞ் செய்தானென்று சொன்னால், அதன்பின்னுஞ் சொல்லத் தருவதும் ஒன்றுண்டோ? மாதவரே! யென்றார்.

இவ்வண்ணமாகத் தவத்திராசராகிய சூசைமாமுனிவர் திருக்குமாரனுடைய பெருமையெல்லாம் எடுத்துரைத்தபோது அவ்விடத் திருந்த பிதாப்பிதாக்களாகிய மாதவத்தோரெல்லாருங் கேட்டு மனமகிழ்ந்து திற்கையில், நமதுஅமலோற்பவியாகிய கன்னித்தாயாரைப் பெற்றெடுத்த அன்னம்மாள் என்பவளும் இவ்வர்த்தமானமெல்லாங்கேட்டுப் பின்னும் ஆசையின் மிகுதியால் எனது செல்வ புத்திரியாகிய மரியம்மாள் தந்த திருக்குமாரனுக்குச் சம்பவித்த யாவையுஞ் சொல்லவேண்டுமென்று வேண்டிக்கொள்ள, அதற்குப் பூங்கொடியையுயர்த்திய முனிவர் மகிழ்ந்து கன்னிமையென்னும் பூவரும்போடு மதாக்கனி பழுத்ததுபோலக் கன்னிமரியம்மாள் முப்பொழுதுங் கன்னிமை குன்றாத தாயாராக வரம்பெற்று அற்புதமாகத் தேவகருப்பந் தாங்கிய தன்மையையும், அதனால் நமக்குண்டாகிய சந்தேகத்தின் காரணத்தையும், பின்பு அது நீங்கின தன்மையையும், பெத்திலேம் நகரத்தில் உறவின் முறையாராலும், சிநேகிதராலும் அவமானப்பட்டு ஊரில் இடங்கிடையாமல் ஊருக்கு வெளியிலிருந்த ஒரு குகையிடத்திற் சேர்ந்த தன்மையையும், அவ்விடத்தில் காவற்காரராக வானவர் புடைசூழ்ந்துநிற்க ஆண்டவன் மனிதனா யவதரித்துப்பிறந்த தன்மையையும், சில இடையர் திருக்குழந்தையைக் காணவந்த தன்மையையும், அரசர் மூவர் ஆண்டவனை வணங்கவந்த தன்மையையும், அவ்விடத்திலேயே திருமகனைச் சிலர்

வாழ்த்தவும், சிலர் பழிக்கவும், பழை முதிர்ந்து வளர்ந்த தன்மையையும், வீணு
கப் பயந்த அரசனாகிய எரோதன் கோபித்துச் செய்த கொடுமையினால் பய
ந்து தமது நாட்டைவிட்டு எஜிப்துநாட்டிற் போய்ச்சேர்ந்த தன்மையையும்,
தேவபிரமை மங்காமல் விசுத் திருமகனுடைய திருமலர் முகத்தைக் கண்டமாத
திரத்தில் அங்கிருந்த பொய்ச்சிலைகளும், பொன்னாற் கட்டப்பட்ட பேயாலயங்
களும் முழுதுந் தவிர்ந்துவிழுந்த தன்மையையும், இளம் பிறைபோல் வளர்ந்த
திருப்பாலகன் பூமியில் தமது திருமலர்ப் பாதத்தையூன்றி முதலடி வைத்து
நடந்ததன்மையையும், அன்றைய தினமே நமது வினையெல்லாந் தீர்ந்து நாம்
களிகூரும்படி கனிவாய்திறந்து முதல் மதலைச்சொல்லை உச்சரித்ததன்மையையு
ம், எழுவருஷஞ் சென்றபிறகு மீண்டும் தமது நாட்டிற்குச்சென்ற தன்மையை
யும், இன்னு மற்ற விசேஷங்களையும் படிப்படியாய் எடுத்துச்சொல்லிப், பின்
னும் தயைநிறைந்த நெஞ்சத்தாராகிய அந்தத் திருக்குமாரனின் செய்தியை
நான் சொல்வதென்னவென்று சூசையப்பர் சொல்லிமுடித்து மீண்டும் அன்
னம்மாளை நோக்கிச் சொல்லுகின்றார்: உலகத்தை யுண்டாக்கின நாளிலே கட
வுளால் விலக்கப்பட்ட ஒரு மரத்தின் கனியை ஆதித்தாயும், ஆதித்தகப்பனும்
உண்டமையால், அதனால் வந்த தீவினையை நீக்கி மனிதரெல்லாரும் வாழும்படி
அந்தத் திருக்குமாரனே ஓர் மரத்தி லறையுண்டு இறத்தல் வேண்டுமென்
பான். அப்படி இறப்பதுவே தனக்குப் பெறுதற்கரிய தன்மை யென்பான்.
துன்பத்தை விளைக்கும் அந்தச் சிலுவையையே தனக்கு ஒரு செங்கோலாகவும்,
கொலுமண்டபமாகவும், மெத்தையாகவும் நினைத்துப், பாலப்பிராயந் தொடங்கி
அந்தச் சிலுவைமரத்தின்மேலேயே கண்ணாக நித்திரையைக் கொள்வான். பின்னும்
மனிதரெல்லாரையுந் தன்னினத்தாரென்று நினைத்துத் தன் னுயிரைப்பார்க்கி
லும் அதிகமாக மனிதர்மேலில் அன்புவைத்து மனிதர் வாழ்ந்தாலொழியத் தன
க்கு வருத்தந் தீராதென்று மனுமக்கள்மேல் வைத்த அன்பினால் தன்னுயிர்
மெலிவதற்குக் காரணமாக நமதுமேல் இரக்கங்கொள்வான். ஆதலால் இன்னும்
உன்னுடைய உயிர் வருந்தும்படி அந்தத் திருக்குமாரனின் விஸ்தாரத்தை
விரிவாகச் சொல்லவேண்டுமோ? வென்று சொல்லிச் சூசையப்பரும் மனத்திலி
ரங்கி வருத்தங்கொண்டார்.

இத்தன்மையாகச் சூசைமாமுனிவர் பிதாப்பிதாவாகிய அர்ச். அன்னம்மாளை
நோக்கிச் சொல்லியபோது, கேட்டிருந்த எல்லாப் பிதாப்பிதாக்களும் அறிவித்
தெளிந்து, ஒழியாத பேரன்போடு அவதரித்த நாயகனுக்காக மனத்தி லிரக்கங்
கொண்டு, மிகவும் வருந்திப் பின்பு ஒருப்பட்டு அந்தத் திருக்குமாரனை வாழ்த்
தத் தொடங்கினார். அதெப்படி யென்றால்: தனக்கு ஒருவரை யில்லாதவனும்,
தன்னிலே தானாகி அளவில்லாத வல்லமையினால் முன்னமே எல்லாவற்றிற்கும்
காரணமானவனும், பின்னை நிகரில்லாமல் மனுமகனாகி மிகவும் வருந்தப்பட
எங்களை யொத்தவனானானோ? நினைத்த கருணைத்தொழிலை முடிக்குமா விது
வோ? என்பார். இயல்பாக எல்லா தன்மையையும் உடைய பெருமையோன்
தனக் கில்லாத பொருளைச் சம்பாதிக்க வந்தவன்போல மனுவுடலெடுத்துச்
சுமந்த துன்பங்களையும் உடையவனாகிப் பூவுலகிற் பிறந்தபடியால், இவனே
ஒப்பில்லாத அன்பின் அரசனாவான் என்பார். இதுவுமல்லாமல் நாமெல்லாரும்
வாழும்படி தானழுவானோ? முடியாத பேரின்பவீட்டில் நாம் குடியிருக்கத்
தான் சாவானோ? கடலின் ஆழத்தை அளந்து கண்டாலும், நமது இறைவனு
டைய கருணைக்கடலின் ஆழத்தை அளந்து காண்பாருமுண்டோ? அதற்கோர்
கரையுமுண்டோ? இல்லையே என்பார். அளவெல்லாங் கடந்த மனுமகனு

டைய அன்புக்குச் சமானஞ்சொல்ல வல்லவரில்லை யென்பதும் பொய்யோ? நிந்தைநிறைந்த மனிதர் பழையகாலத்திலல்லாமல், இக்காலத்திலும் நீங்காமற் செய்யுந் தீவினைக்கு ஒப்பில்லை யென்பதும் பொய்யோ? என்பார். அன்பிற்கு மாத்திரையாக அளவொன்றுண்டோ? திருமகன் நம்மைப்பற்றி இவையெல்லாஞ் செய்தற்கு நம்மிடத்திற் பெறும்பயன் சிறிதுமுண்டோ? வானுலகவாசனாகிய அந்தத் திருக்குமாரன் தாமெடுத்த திருவுடலால் தனக்கு வரவிரும்பும் நன்மையுமுண்டோ? இவையெல்லாம் ஆண்டவன் செய்தபின்பு இன்னு மனிதர் விரும்பத்தக்கதும் ஒன்றுண்டோ? என்பார். பின்னும் அவதரித்த திருக்குமாரனை நோக்கி: அணியே! அன்பே! அன்பின் கடலே! அருளினரசனே! எங்களுக்கோர் மணியே! உனது நட்பையறிந்து அதற்கு நிகர் சொல்பவருமுண்டோ! எங்களைப்பற்றித் துன்பங்களைக் கொண்டாய். அரசர்க்கரசனாயிருந்தும் எங்கள் பாவத்தை ஒழிக்க மனிதர்க்குக் கீழ்ப்படிந்திருந்து அவர்களிட்ட ஏவலைச் செய்கின்றாய். இதுவோ உன் கருணையின் தன்மையென்பார். இப்படி அந்தப் பிதாப்பிதாக்கள் தினந்தோறும் வாழ்த்துதல் சொல்லவும், குசைமாமுனிவர் இன்னு மற்ற யாவையுஞ் சொல்லவும், அவரவர்கள் கொண்ட இன்ப மாறாமல் நிலைபெற்றது.

தாதுவைப்படலம் முற்றிற்று.

முப்பத்தைந்தாவது, உத்தானப்படலம்.

இன்னவை யங்கணி லினிதி வாகை யி
துன்னவை யுன்னிய வுரிமைத் தாக்கினே ன்
பன்னவை பயத்தபேய் பகைத்த மன்னுயி ர்
துன்னவை யாவையுந் துடைத்த லோர்ந்துளா ன்,

முன்சொன்ன வண்ணமாகப் பிதாப்பிதாக்களிடத்தில் இவையெல்லாம் ஆயினபின்பு, நினைத்ததை நினைத்தபடி முடிக்க வல்லவராகிய திருக்குமாரன் தீவினை விளைக்கும் பசாசுக்களால் பகைக்கப்பட்ட மனிதர்களுக்குள்ள பாவங்களை முழுதுந்தீர்த் திரக்ஷிக்கும்படி திருவுளங்கொண்டு புஷ்பித்த சண்பகச்சோலைபோலக் கருணையினிழலைச் செய்து, நிழலைச்செய்யுஞ் சத்தியவேத நூலின்படி தாமே முன்னடந்து யாவருக்கும் நல்ல தருமநெறியைக்காட்டிப், பின்பு அவ்வேதத்தைப் போதிக்கத் தொடங்கினார். அதெப்படி யென்றால்: எல்லா உபமானங்களையுங் கடந்த கடவுள் ஒருவரே யல்லாமல், பலராக மாட்டார் என்பதை நன்றா யறியாததினால், தேவவல்லமை யில்லாதவர்களைத் தேவராக நினைத்து வணங்கிப், பின்பு ஆழமாகிய சமுத்திரத்தில் முழுகிய குருடன் குருடனுக்குத் துணையானதுபோல அந்தப் பொய்த்தேவர்களோடு தாங்களும் ஊழித்தீயாகிய நரகில் வெந்தொழிவார்கள் என்பார். மீளவும் புறக்கோலத்தை யெண்ணிப் பொய்த்தேவர்களுக்குப் பொன்னாபரணமுதலிய வணிந்து பொன்னையுமுதலியவற்றைச் சமைத்து அதில் வைத்து வணங்கப்படுவதால் அவர்கள் தேவராவார்களோ? அலங்கரித்த மரப்பாவைகள் பேசுமோ? என்பார். பின்னும் ஒன்றாய கடவுளருளிச்செய்த சத்தியவேதத்தின்படி விலக்கவேண்டிய தீவினைகளை விலக்கி, இல்லறந் துறவறமென்னும் இருவகை யறங்களையுஞ் செய்தால், அதனால் விளையும்பயனை அளவிடுவாருமுண்டோ? என்பார். மேலும் அதினி

மயக்கத்தால் பிறர் பொருளின்மேல் ஆசைவையாமல் கருணையினால் மலர்ந்த முகத்தோடு தமது கைப்பொருளை இரப்போர்க்குக் கொடுப்பதே தமக்குப் பொருள்வரும் வழியென்று தெளிந்த அறிவுடையோர் தினமாகக் கொடுப்பார் என்பார். இன்னும் உலகிற்கெல்லாம் ஒரு கடவுளாகிய அந்தத் திருக்குமாரன் தாம் ஓதிய வேதநூலின் நல்வினைப்பயனால் இன்பம் வருவதல்லாமல், தீவினைப்பயனால் இகழ்ச்சி வருவதுமன்றி அது மோக்ஷபாதையைச் சேராத அப்புறத்துவழியு மாகுமென்பார். இதுவுமன்றித் தன்னியல்பிற்குத் தகாத புகழ்ச்சியைப்பெற விரும்புவோர் கைப்பொருள் கவருங் கள்ளரோடு ஒப்பாவதுமன்றிப், பின்பு இகழ்ச்சியையுமடைவார். தாழ்ச்சி யடக்கத்தினாலோ ஒளிபெறுங் கீர்த்தியை யடைவார் என்பார். இப்படித் திருமகன் அநேக நீதிமொழிகளை யாவர்க்கும் அருள்நிறைந்த அமுதமொழியாற் சொல்லிப், பின்பு பொருளாசை, புகழாசை, இன்பவாசையால் பாவமெல்லாம் உலகத்திற் புகுந்தமையை நினைத்து அவற்றை யொழித்து வெற்றிகொள்ளும்படி, வெற்றியைத் தருகின்ற ஆயுதங்க ளொன்றையுந் தேடாமல் பொறுமை யொன்றையே யாயுதமாகக் கொண்டு அவ்வாயுதத்தால் தமக்குவந்த இகழ்ச்சியையெல்லாம் வெட்டியெறிந்து, பகையையுடைய மனமுடையோர் முதலாய் உள்ளங் குளிரும்படி கருணை தயாபத்தைக்காட்டி, மீளவும் அற்புதங்களைச் செய்யநினைந்து கண்ணில்லார்களுக்குக் கண்களைத் தந்தும், கைகால் வழங்காதவர்களுக்குக் கைகால் வழங்கச்செய்தும், பிணியினால் நொந்தவர்களுக்குப் பிணியைத் தீர்த்தும், வருந்தியவர்களுக்கு மகிழ்ச்சியைத் தந்தும், இறந்தவர்களுக்கு உயிரைக் கொடுத்தும், நெடுநாளாய்வந்த மற்றத் துன்பநோயெல்லாம் ஒருப்பட நீக்கியும், யாவருக்கும் நன்மையையே செய்துவரும்போது அந்த நன்மையை யுணராமல் யாவருந் தமக்குச்செய்த தீன்மையைச் சற்று மதியாமல் பொறுமையையே வச்சிரக் கவசமாகத் தரித்துக்கொண்டதும் போதாமல், பின்னும் அன்பின் கரையைக்கடந்த கருணைக் கடலென்னுந் திருக்குமாரனாகிய சேசுநாதசுவாமிகள் யாவருந் தமக்குச்செய்த துன்பங்களினால் மனநோகாமலதைப் பொறுத்துத், தாம் காட்டிய நன்னெறியில் நடவாமல் வழுவின மனிதர்களைப் பாவமல்லவா? நரகத்திற்சேர்ப்பது என்றும், மனிதர் நக்குதற்கும் போதாத உலகசெல்வத்தை விரும்பித் தமக்குவரும் ஆக்கினையை ஞாபகப்படுத்தாததினாலல்லவோ? உலகமெல்லாங் கெட்டதென்றும், மனுமக்களுக்காக மனத்தி ரக்கங்கொண்டழுது தமது பிதாவைநோக்கிச் சொல்லுவார்: என் பிதாவே! தீவினையை விளைத்துக் கொடுங்கோலரசுபுரிந்து பாவவழியா லுயிர்களைக் கெடுக்கும் பசாசுக்களை வெற்றிக்கொள்ளவும், நீதியின்படி யெழுந்த உமது கோபத்தை யமர்த்தவும், நான் செய்யவேண்டிய தென்ன? ஆதியில் வந்த ஒழியாத பழியைத்தீர்த்து உமது கோபத்தை யமர்த்தக் குற்றமில்லாதபலி பூவுலகி லில்லாமையால், அற்பக் குற்றமாகிலு மில்லாத என்னுயிரைப் பலியாக நானே தந்து பழம்பழிப் பாவங்களைத் துடைத்து உலகத்தை மீட்டிரக்ஷிப்பேனென்றார்.

இவ்வண்ணமாகக் கருணாகரனாகிய திருக்குமாரன் பரமபிதாவை நோக்கி மன்றாடியபொழுது அதற்குப் பிதாவும் ஆமென்று ஒத்துக்கொள்ளவே மனுஷத்துவமும், தேவத்துவமும் ஒன்றாகிய இரண்டாமாளாகிய சுதனாகிய சர்வேசன் பகைவர் கையினால் கொலையுண்டு இறவாமல் தாம் சொல்லும் ஒரு சொல்லே மனிதர் இரக்ஷணியத்தைத்தரப் போதுமென்றாலும், நமக்கு மோட்சபாக்கியத்தை அடைந்து கொடுக்கும்படி தாம் தந்த [illegible] அதின் செலவம் எவ்வளவு என்று காட்டும்படி அந்தத் துரிதங்களைக்கொண்டு தமது திருவி

ரத்தத்தைச் சிந்தி உயிர்விட்டிறக்கச் சம்மதித்தார். இப்படி ஆண்டவர் திருவுளங்கொண்டதை யறிந்த பசாசுக்கள் முற்காலந் தொட்டு இவர்மேல் வைத்த பகையையும், கோபத்தையும், வஞ்சனையையும் தீயோர் மூலமாகச் செலுத்தவேணுமென்று நெருப்பைத் தூண்டினாற்போலச் சில பாவிகளைத் தூண்டிவிடவே, அப்பாவிகள் கண்களில் தீப்பொறிபறக்கச் சினந்து அவதரித்த ஆண்டவனை அடித்த கொடுமை மிகுதியால் அந்த ஆண்டவனின் திருக்காயங்களினின்று புறப்பட்டுவந்த திருவிரத்தப் பிரவாகமானது நம்முடைய தீவினையாகிய பாவமலங்களை முற்றுங் கழுவும்படி மண்மேற்புரண் டோடிற்று. பின்பு ஆண்டவன் நச்சுமரத்திலிருந்து ஒழுகின நஞ்சை யுண்டதினால், உள்ளே கடுத்துக்கொல்லும் வினைகளைத் தீர்க்கும்படி வேறொரு பெரியமரத்தினின் றொழுகிய தேவமருந்து வேணுமென்று நினைத்து, ஆதித்தாய்தகப்பன் முன்னமே விலக்கின மரத்தின் கனியை யுண்டதினால், அவர்கள் சந்ததியாராகிய மனுமக்களுக்கு வந்த பழம்பழிப் பாவத்தைத் தீர்க்கத், தாமே மற்றொரு கொடியமரத்திலறையுண்டு, பாவக்கடனைத்தீர்க்க மனிதர்களால் முடியாதென்று அந்தக் கடனைத் தம்மேற் போட்டுக்கொண்டு, உலகமெல்லாம் அஞ்சும்படி நமக்காக உயிர்விட்டிறந்து பின்பு பூங்கொடி உயர்த்திய சூசைமாமுனிவர் முன்னமே தமது தூதனைச்சென் றறிவித்தபடியே திருவுடலென்னும் அழகிய சிறையைவிட்டுப் பிதாப்பிதாக்களின் சிறையை நீக்கி அவர்களுக்கு மோக்ஷபாக்கியத்தைத் தரும்படி பாதாளவுலகத்திற்குச் சென்றார்.

இத்தன்மையாக ஆண்டவன் வானோரிசையைப் பரப்பிப் பாடிக்கொண்டு வரத் தேனினு மினிய பேரின்பம் முன்னே செல்ல, ஆயிரங் கிரணங்களையுடைய சூரியனைப்பார்க்கிலும் திரண்ட தெய்வ பிரகாசத்தைப் பரப்பிக் காற்றின் விசையைப் பார்க்கிலும் விரைவாகச்சென்று ஆண்டவனைக் காணவேணுமென்றிருந்த பிதாப்பிதாக்களுடைய ஆசைமனத்தைத் தெளிவித்துத் தெளிந்தமுகத்தோடு அவர்களுக்கு ஆசீர்வாதமுந் தந்து, தேவவருளால் நிறைந்த மோக்ஷதரிசனத்தையுங் கொடுத்தார். இப்படி ஆண்டவன் கொடுத்த மோக்ஷதாகதியொளியின் வல்லமையால் பிதாப்பிதாக்கள் மனத்திற் றெளிந்து சர்வத்துக்கும்வல்ல நாதனை யாதொரு மறைவுமில்லாமல் முகமுகமாய்க்கண்டு சொல்லிலடங்காத பேரின்பத்தை யனுபவித்து ஆண்மையும், ஒளியும், அருளும், உள்ளடைந்து கூட்டங் கூட்டமாய்வந்து ஆண்டவனைப் புகழ்ந்து திருவடிமீது பலமுறையும் பணிந்துவிழுந்து, குறைவில்லாத நன்மையிற் றெளிந்து விளங்கி நிறைந்த பேரின்பத்தினால் யாவரும் ஒருப்பட அரிய தேவதுதிகளைச் சொல்லத் தொடங்கினார்கள். இது இப்படி யிருக்கப் புகழிற்சிறந்த எனது ஐயனாகிய சூசைமாமுனிவர் ஆண்டவன்வந்த தெய்வப்பிரபையி னலங்காரத்தைக்கண்டு கரையுள் ளடங்காத ஆசையினால் எழுந்த அன்பினளவாக அருளிற் சிறந்த பூசையாய் ஆண்டவனைப் புகழ்ந்து துதித்துச் சொல்லுவார்: உன்னைச் சேர்ந்த பாவரையுங் காப்பாற்றி அருளினால் என்னை ஆண்டுகொண்டு என்னுயிரைப் பார்க்கிலும் எனக்கு ஓரினியவுயிராய் நிற்குந் தயைநிறைந்தோனே! நீ யுன்னுயிரைத்தந்து எங்களை யிரக்ஷித்து உயர்ந்த மோக்ஷத்தில் மனிதரெல்லாரும் வாழ்ந்திருக்க நீயே வருந்தியிறந்தாய்: பின்னும் நானே பெருமகிழ்ச்சி கொள்ளும்படி சொற்கடல் கடந்த அழகோடு நீ விளங்கியிருப்பதைக் கண்ட இப்போதே மட்டில்லாத துன்பங்களோடு உன்னை நான் வளர்த்ததினால், உண்டாகிய கரைகடந்த அளவில்லாத பயனைக்கண்டேன். என்றுசொல்லி மனத்திலுண்டாகிய ஆசை யோடு விழுந்து இரண்டு பாதாம்புயங்களையு முடியாகத் தலைமேலணிந்து வணங்கி

ங்கி மற்றப் பிதாப்பிதாக்களோடு தாமும் அன்றையதினம் பேரின்பக்கடலில் முழுகித்தமது ஆசையையாற்றினர். இவையெல்லா மிவ்விடத்தி லானவுடனே அப்பொழுது தமையின்கால மானபடியால், பொன்னை யுலைக்களத்திலிட்டுச் சுட்டதுபோல உத்தரிக்கிற ஸ்தலத்தில் வருந்தி வேகின்ற வுயிர்களும், அந்தத் துன்பத்தைவிட்டு மகிழ்ச்சி யடையும்படி அவ்விடத்திற் சில வானவர் போய் அவ்வுயிர்களை அழைத்துவரவே அவர்களும் இங்கேவந்து ஆண்டவனை முகமுகமாய்த் தரிசித்துச் சூசையப்பர் சொன்ன புகழ்ச்சி மாலையோடு அவர்களும் ஆயிரந் தேவநாமங்களை யோதிப் பூசையாகச் சிறந்த தேவதுதிகளை முழங்கி அன்றையவரையிலு மில்லாத மிக்க பேரின்பமகிழ்ச்சியை யடைந்தார்கள்.

இவ்வண்ணமாக நமது பாவங்களைத் துடைத் திரட்சித்த கருணைநாதன் அந்தப் பிதாப்பிதாக்கள் ஸ்தலத்தில் இரண்டுநாளிருந்து மூன்றும் நாளில் எண்ணப்படாத வானோர்கணங்கள் முன்னே நடந்து இசையைப்பாடிச் செல்லவும், பிதாப்பிதாக்க ளெல்லோரும் பின்னே விளங்கி முழங்கிவரவும், கன்னி முருகுதற்குரிய வின்பத்தோடு சூசையப்பர் அண்டையிற்பிரியாது வரவும், இவ்வுலகத்தின் வாத்தியங்களைக் கடந்த பேரொலி ஒலிக்கவும், எழுந்து தெய்வ கிரணங்களைப் பரப்பி ஒரு க்ஷணப்பொழுதில் தமது திருமேனியை அடக்கிய திருக்கல்லறையண்டையிற்போய், அந்தத் திருமேனியிலுள்ள காயங்களை யாவருக்குங் காட்டும்படி அதன்மேற் போர்த்திருந்த வஸ்திரத்தை நீக்கித் திருவாய் மலர்ந்து சொல்லத் தொடங்கினர். அதெப்படியென்றால்: நான் பூவுலகத்தை யிரட்சித்து இப்போது உங்களுக்குத் தந்த பேரின்பத்தை நீங்க ளநுபவிக்கும்பொருட்டு நானே கொடுத்த விலையிதுவே. மேலும் மோக்ஷத்திலும் பேரின்பத்தை விளைவிக்கும் அழகுள்ள எனது தலையைப் பாருங்கள்; பாலைநிலத்திலுங் கொடிய நெஞ்சுடையவர்கள் நீண்டமுண் முடியைப்பின்னி நக்ஷத்திரங்களைப் பார்க்கிலும் விளங்கிய என் கண்கள்வழியாய் அந்த முள்ளுக்க ளுருவிப்புறப்பட அந்த முடியைச் சிரசின்மேல்வைத்து மூங்கிற்றடிகளா லடித்து உதிரப்பிரவாகஞ் சிந்தும்படி செய்ய, அதனால் எனக்குண்டாகிய வருத்தஞ் சொல்லுந்தன்மையோ? பின்னும் எதிரொளியில்லாமல் ஒருவனாய் எல்லா உலகத்தையும் அரசாக்ஷிசெய்யவல்ல தனிக்கோலரசனாகிய நானே மனிதர் ஆங்காரத்தை ஒழித்திரட்சிக்கையில் சில நீசர் என்னைப் பரியாசவரசனாக்கி நகைத்து முண்முடியைச் சிரசிற் புனைந்ததினால், நான் துன்பவரசனாகிக் கண்டயாவரும் அஞ்சும்படி கொண்ட வுருவத்தைப் பாருங்கள். மீளவும் மனிதர் கண்களின்வழியாய்க் கண்ட யாவையும் விரும்பி மோக்ஷத்தை யிழந்தார்களென் றெண்ணி அந்தத் தீவினையை நீக்க நான் நினைத்ததினால் கொடிய நீசருடைய கைகளாற்பட்ட புண்ணின் வழியாக இரத்தம் புரண்டோட நக்ஷத்திரத்தையும் வென்ற என் கண்கள் வாடினமலரைப்போல இருண்டிருப்பதைப் பாருங்கள். இன்னும் வானுலகத்தோர் வணங்கும் வேதநூலை யாவருக்கும் போதித்த வாசனைபொழியும் எனதுகமலவாயானது கொடிதாக உதைபட்டு, அடியும்பட்டுச் சிந்திய உதிரத்தால் நனைந்து, உதடுகிழிபட்டுக் கிழிந்த தாமரைபோலிருப்பதைப் பாருங்கள் மேலும் இரக்கமில்லாத நீசரென்னை ஒரு தூணோடு சேர்த்துக்கட்டி ஐயோ! என்னும் இரக்கச்சொல் ஒன்றுமில்லாமல் ஐயாயிரத் தொருநூற்றுப் பதினைந்தடிகளை அடித்து, அடிக்க வேறிடமில்லாமையால், மீளவும் திறந்த காயங்களின்மேலும் அடித்திடித்ததினால் எலும்புகள் தோன்றி இரத்தம் ஆறாகப் பெருகப்பாய்ந்தோடப் பழியைச்சுமந்த உருவம்போல இருக்குமெனது திருவுடலைப் பாருங்கள். மீளவும் எல்லா வுலகத்தையுந் தாங்கும் நானே நெடிய ஓர் சிலுவைய

ரத்தைத் தோளின்மேற் றூக்கிக்கொண்டு வழிநடக்கையில் நீசருக்குள்ளே நீச
னாக என்னை யிவ்வஞ்சகர் நிந்தித்து அடித்துங் காலா லுதைக்க, நானே விழு
ந்துவிழுந்து எழுந்து கொடிய வழியெல்லாந் தாண்டி உயர்ந்த வோர் மலைமேற்
சென்றேன். அங்கே கூர்ந்த இருப்பாணிகளாற் கடாவப்பட்டுச் சுமந்துபோன
அந்தச் சிலுவைமரத்திலேயே பறையுண்டு, பூமி தன்றீவினையை யொழிக்கும்
படி என் இரத்தத்தைச் சிந்தியதினால் திறந்த காயங்களையுடைய காலையும், கை
யையும் பாருங்கள். மீளவும் உலகமுண்டாகிய நாளில் ஒருபெண் காரணமாக
உலகத்துக்கெல்லாம் வந்த தின்மையை யகற்றி மோக்ஷத்தைச் சேரும்வழி
யைக் காட்டி நானிறந்தபின்பும், பகையைவிடாத கொடிய நெஞ்சுடைய சேவ
கனொருவன் ஈட்டியா லென் விலாவிற் குத்தவே, நானே யாவருக்கும் அடைக்
கலஞ் செய்யும்படி ஆசையினால் என் னெஞ்சிலே திறப்பித்த பெரிய வாசலைப்
பாருங்கள். பின்னும் மழைபெய்ததுபோல என் இரத்தத்தையெல்லாஞ் சிந்தி
ஆதியில் ஒரு கனியால் விளைந்த பாவக்கேட்டைத் துடைத்து உலகத்தை யிரக்ஷி
க்கும்படி நான்செய்த தன்மை யிதுவே. இனிமேல் என்னாலாகவேண்டியது ஏதா
கிலு முண்டோ? ஆயினும் நானிவையெல்லாஞ் செய்தபிறகு உங்களா லெனா
க்கு வரத்தகும் பயனுமுண்டோ? சொல்லுங்கள் என்றார். உடனே சூசைமாமு
னிவர் ஆண்டவன் கூறிய சொற்களாகிய எறிவேல் பாய்ந்ததினால் மனநொந்து
உருகித் தமது அன்பினளவாகக்கொண்ட வருத்தம் பெருகவோ? அல்லது ஆற்ற
வோ? தெரியக்கூடாததாய் ஒரு பெருமூச்சுவிட்டுச் சொல்லுகின்றார்: தேவவ
ருட் செல்வத்தையுடைய ஐயனே! நீ இப்போது இந்தப் பெருந்துயரத்தை
யனுபவிக்க வேணுமென்றோ? நானப்போது பயந்து உன்னை எசித்துநாட்டிற்
கொண்டுபோய் ஒளித்து உன்னுயிரைக் காப்பாற்றினேன். நீ சிலுவைமரத்திற்
சிந்தின இரத்தக்கடலில் அமிழ்ந்தவோ? நான் மோக்ஷக்கரையிற் சேர்ந்து பே
ரின்பத்தோடு வாழ்வேன். நீ உனது கருணைமிகுதியால் மனிதர்க்காக இறக்கவே
ணுமாகில் இந்தக் கொடிய துன்பங்களையெல்லாம் அனுபவிக்கவேண்டுமோ? நீ
சிலுவைமரத்திலிருந் திறந்தபோது என்னையுங் கூடச்சேர்த்து இருவரு முயிர்
விடும்படி செய்யாதது என்ன காரணம்? நீ அவதரித்து உலகிலிருந்தபோது
நானே யுனக்குப் பிரியாததுணையா யிருந்தே னல்லவோ? பின்பு நீ யிறக்கும்
போது என்னைத் துணையாக விரும்பாதது ஏன்? தயையிற்சிறந்து எல்லா உயிர்
களையுங் காப்பாற்றுந் தேவமருந்தே! என்றுசொல்லி உடல்மாத்திர மிருந்தால்
அதைவிட்டுச் சாகத்தக்க வருத்தத்தோடு நொந்திருந்தார்.

இத்தன்மையாக மலர்ந்த பூங்கொடி விருதேந்திய சூசைமாமுனிவர் வருந்தி
யிருக்கையில், கூடவிருந்த மற்றவர்களும் ஆண்டவனுடைய திருமேனிக்
காயங்களை யெல்லாங் கண்ணாரக்கண்டு, மதிக்கப்படாத துக்கசாகரத்தி லழுந்
திப் பின்பு மரித்தாற்போல மரித்த நாதனை நோக்கிச் சொல்லுவார்கள். ஐயனே!
நீ யிவ்விடத்தில் எங்களைப்பற்றி வருத்தங்கொண்டாய்; தடிப்புள்ள உடம்புக
ளைத் தொடர்ந்துவருந் துன்பங்களில் ஒன்றாயினும் இயல்பாக உடலில்லாத
வுனக்கு உண்டாகுமோ! ஆசையால் மயங்கிக்கெட்ட மனிதர்களை மீட்பதற்கல்
லவோ? நீ யிறக்கும்படி துணிந்தாய். செல்வத்துயர்ந்த கடவுளே! நீ எல்லாவுல
கங்களையும் நிறைந்து ஆசாரனும் அரசனாயிருந்து மகிழ்ந்தாய். பின்பு உயிரைத்
தந்து இறக்கவேணுமென்று ஊனுள்ள வுடலையெடுத்து எடுத்த திருவுடலி
னால் இறப்பதே தேனினு மினிமையாகக் கொண்டாய் "எங்கள்மேலிரங்கி யெ
ங்களை யிரக்ஷிக்கவாராயோ? பேயினங்களைவென்று எங்கள் பகையெல்லாந் தீரா
யோ?" என்று நாங்களே மன்றாடினோம். அதுபோலநீயும் பெருங்கருணைகொ

ண்டுவந்து எங்கள்சிறையை நீக்கி மீட்டிரக்ஷித்தாய். இனியுனது தயையின்பெருமையையறிந்து அதை வணங்கும் வரத்தை யெங்களுக்குத் தாராயோ? மோக்ஷத்தில் நீ யெங்களுக்காகச் சேர்த்துவைத்த செல்வங்களை விரும்பாமல் நாங்கள் தீவினையைச் செய்தமையால் பூவுலகிற்குக் காவலாய்நின்ற வுனக்கே புண்களுக்குள்ளே செந்தியைப் புகுத்தினாற்போலச் சகல துன்பங்களையும் விளைவித்தோம். ஆதலால் எங்கள் பாவங்களின் மிகுந்த கொடுமையைச் சொல்லத்தக்கவரு முண்டோ? நாங்கள் விரும்பத்தகாத இன்பத்தை விரும்பினதினால் விளைந்த தீவினையை நீக்க நீ தரித்திரனாகப்பிறந்தாய். அதற்குத்தக்க பொறுமையையுங் கொண்டாய். துன்பத்தையே பானமாகவுண்டாய். கடைசியில் தயையின் மிகுதியா லிறந்தாய். இதற்கு நாங்கள் செய்யுங் கைம்மாறுமுண்டோ? உலகத்தில் மொய்த்த பொய்யினிருளை மாற்றினாய். பாவ மயக்கத்தை மாற்றினாய். பாம்புருவங்கொண்டு பசாசு விரித்த படத்தை மாற்றினாய். இனி யுனக்கு எங்களாலாகும் பயன் சிறிதுமுண்டோ? நாங்கள் உள்ளபடியே யுன்னை யறியோம். உலகிலுள்ளதையும் முன்னும்பின்னு மறியோம். ஓயாமலுன்னைவணங்கி வருவாமல் நன்னெறியில் நிற்பதை யறியோம். அப்படியிருக்க இனி உனக்கு என்ன? கைம்மாறுசெய்யப்போகின்றோம். எங்களுக்குத்தாயுந்நீயேதகப்பனுந்நீயேசகலநன்மைகளையுந்தருபவனீயேயென்பதைமாத்திரம் அறிவோம். இதுதவிரப்பாவக் கொடுமையின் தன்மையையும், உனது கருணைக் கடலின் தன்மையையும் ஆராய்ந்து பார்த்தாலும் முழுதும் அறியோம் அறியோம். உன்னுடைய திருமேனியாகிய படத்தில் பாய்ந்த இரத்தத்தால் இந்த வரிகளை யெழுதினவர் நீயோ? நாங்களோ? தெரியவில்லை. ஆனால் கொடிய வஞ்சனையினால் நாங்களெழுதிய வரிகளென்றாலும், அல்லது அன்பின் மிகுதியால் நீ யெழுதிய வரிகளென்றாலும், இரண்டு சொல்லும் பொய்யாகுமோ? கல்வியின்மேல் விருப்பமுடையோர் பலநூல்களையும் வாசிப்பதினால் வரும் பயன் என்ன? உனது திருமேனியாகிய படத்தி லெழுதப்பட்ட வரிகளைமாத்திரம் நன்றாகப் படித்தால் எல்லாவித்தையையு முழுதும் படிப்பார்களல்லவோ? இது எங்களாற் கூடாதகாரியமே. ஆயினும் கல்வித்திறத்தோனாகிய நீயே அதைப்படித்து அதனுடைய நுணுக்கப் பொருளை எங்களுக்கறிவிக்கவேண்டும் என்றார்கள். பின்பு அவர்கள் கேட்ட அந்தவரிகளின் பொருள்களைத் திவ்வியநாதனே யறிவித்தாற்போல மீண்டுஞ் சொல்லுவார்கள்: ஐயனே! உனது தயையின் தன்மையையும், எங்கள் பாவக் கொடுமையையும் நாங்கள் நன்றாகக் கற்றுக்கொண்டோம், இன்னும் சாகப்படாதவனாகிய நீ எங்களுக்காகச் செத்து எங்கள் பாவங்களை யொழித்தபடியால் உனது தயையின் பெருமையை யளவிடக்கூடுமோ? என்று சொல்லி மனத்தில் மிகவும் வருந்தித் திருவடியை வணங்கி நின்றார்கள்.

இப்படியாக அவர்கள் நெஞ்சிற்கொடிய வாளுருவினதுபோலப் பட்டவருத்தத்தை ஆண்டவன் கண்டு தம்முடைய திருமேனியில் உயிரைப் புகுத்தி மூன்றுநாள் உடலிற்பட்ட காயங்களை யெல்லா மாற்றித் திருவிலாவிலும், இரண்டு திருக்கரங்களிலும், இரண்டு திருப்பாதங்களிலும் நக்ஷத்திரத்தை யொத்த ஐந்துகாயங்களை மாத்திரம்பொருத்திக்கொண்டு, சூரியனஸ்தமித்துப் பின்னெழுந்ததுபோலக் கண்டாருடைய மனத்தையும் விளக்குகின்ற தெய்வ கிரணங்களைப்பரப்பி, உயிர்த்தெழுந்தருளின பின்பு அருந்தவத்தையுடைய என்னையனாகிய சூசைமாமுனிவரை நோக்கிச் சொல்லுகின்றார்: கடையுகநாளில் உலகமெல்லாம் அக்கினியால் வெந்து முடியும்போது பசாசுக்களுடைய தந்திரத்துக் ககப்பட்ட

மல், என்னை வணங்கித் துதிப்பவர் யாவரும் சிறிதொரு குறையுமில்லாமல் இந்தத் தன்மையாக உடலோடு எழுந்திருப்பார். ஆகையால் அதற் கடையாளமாக நெடுநோய் பிணிகொண்டு இறந்து, என்னுத்தரவினால் அரிய தூது சொல்லும்படி விட்ட உனது உடலை இப்பொழுது எடுத்து எழுந்திருக்கக் கடவாய் என்று திருவாய்மலர்ந் தருளியவுடனே கடலைவிட்டெழுந்த சூரியனுக்குமுன்னே பலவிதமணங்களைப் பரப்பிச் சந்திரனுதயமாகி எதிர்வந்து நின்றாற்போலப் பசிலையோடு இதழ்விரித்த பூங்கொடியைப் போர்த்திய சூசைமாமுனிவரும் உயிர்த்தெழுந்து, அந்தப் பூங்கொடியும் புதிதாய்மலர்ந்து பரிமளித்துத் தேன்மாரி பொழியவும், மற்றவெல்லாரும் நக்ஷத்திரக் கூட்டங்கள்போல விளக்கவும், தேவகணங்கள் திருவிழாவைக் கொண்டாடவும், தாம் நிகரில்லாத புகழ்மாலையைச் சொலவிச்சொல்லி ஆண்டவனுடைய திருவடியை வணங்கினர். வணங்கின பாதங்களில் தமது பூங்கொடியைச் சாத்தினர். சாத்தின பாதங்களை நீளவுந் தழுவினர். வானவரு மதிசயிக்கும்படி தமது ஆசையை ஆற்றினர்.

இவ்வண்ணமாக ஆண்டவன் ஆயிரங் கிரணங்களைப் பாயும் ஞான சூரிய வடிவோடு உயிர்த்தெழுந்தபோது கொட்டமொட்டென்று பல்லியம் முரசங்களும், மத்தளமாறைகளும், ஒருபால் முழங்கின. பல்வகைக் குழல்களும், வீணைகளும் ஒருபால் கலந்து முழங்கின. இடியொலியும் கடலொலியும் கேளாமல் மின்னிடும்படி வானுலகத்திலும், பூவுலகத்திலும் தேவவாத்தியங்கள் முழங்கின. வானவர்களிற் சிலர் கட்டழகமைந்த உருவோடு அணியணியாய்ப் படைவீரர் போல ஒருபால் நிறைந்தனர். சிலர் இரத்தினபதக்கங்களையுங் கிரீடங்களையுங் கொண்டுவந்து அலங்காரமாக ஒருபால் பணிந்தனர். சிலர் உயிர்த்த திருமுகனுடைய இரண்டு செந்தாமரைப்பாதங்களையுந் தலைக்கணியாக அணிந்து ஒருபால் வணங்கினர். சிலர் இரண்டணி வகுப்பாக எதிர்நின்று ஒருபால் தேவபுகழ்ச்சி கீதங்களைப்பாடி மகிழ்ந்து தோன்றினர். மழைதுளித்தாற்போலத் தேனைப் பொழியு மலர்மாலைகள் ஒருபால் விளங்கின. காற்று வீசவிருக்கும் வெண்சாமரைகள் ஒருபால் வரிசைவரிசையாய் இரட்டின. விளங்கிய பூரணச் சந்திரன்கள்போலப் பலகோடி வெள்ளைக்குடைகள் சூரியகிரணம் படாமல் ஒருபால் ஒளியையும் நிழலையுஞ் செய்தன. களித்த வண்டுகளி னோசையைப்போல ஒருபால் புகழ்ச்சிகள் தோன்றின. சிலர் பூவுலக அரசனாகிய திருமகனுடைய நித்திய தேவத்துவத்தைப் புகழ்வார். சிலர் அந்தத் திவ்வியநாதன் மனிதர்க்காக இரக்கங்கொண்டு உலகில்வந் தவதரித்ததைப் புகழ்வார். சிலர் அந்தத் தேவநாதன் பாவிகளால் பலவித வருத்தத்தை யடைந்து, இறந்த செய்தியை அதிசயத்தோடு சொல்லிப் புகழ்வார். சிலர் அந்த ஆண்டவன் இப்பொழுது செஞ்சுடரைப்பார்க்கிலும் விளக்கங்கொண்டு உயிர்த்தெழுந்த மகிழ்ச்சியைச்சொல்லிப் புகழ்ந்து வணங்குவார். இப்படியாக வந்த வானவர் யாவரும் மகிழ்ச்சி மிகுதியால் உருகி ஆசையுள்ளவராக வாழ்த்தித், தாமரைப்பாதங்களை வணங்கிச் சோபனங்களைப்பாடி ஓயாதிருந்தும், பின்னும் நினைப்பதற் கரிய புகழ்ச்சிகளைச் சொல்லி அந்தப் புகழும் போதாதென்று கண்டு வருந்தினாலும்; அந்தப் புகழ்ச்சியை விடாமல் அழகிற்சிறந்த திருமுகமண்டலத்தை ஒழுகக் கண்களின்வழியா யருந்திப் புகழ்ச்சி யருச்சனை செய்தார்கள். அப்பால் பழியை விளைக்கும் கோபமும், கோபத்தால் விளையும் பகையும் ஒழிந்துபோக அன்பும், சிநேகமும் பொருந்தின. தீவினையைத் தரும் ஆசையும், ஆசையால்வரும் பாவங்களும் ஒழிந்துபோக ஞானங்கள் விளங்கின. கர்ப்பத்தால் விளைந்த இழிவும், அழிவும், கேடும் ஒழிந்துபோக உயர்ந்த செல்வங்களெல்லாம் விளைந்தன.

உலகமெல்லாம் புதுவழகடையும்படி துன்பம், பசி, நோய், சாவு, பசாசுக்கள் செய்யு மாய்கை இவையெல்லாம் ஒழியவே உயர்ந்த நன்மை யெல்லாம் எங்கும் பரவினவாம்.

இவ்வண்ணமாக வானுலகத்தாரும் அதிசயிக்கும்படி உயிர்த்தெழுந் திருந்த தேவகுமாரன் தம்மைச் செல்வத்திறம் பெற்று வளர்த்த தாயாராகிய கன்னிமரியம்மாளும் மகிழ்வடையும்படிக்குத் திருவுளங்கொண்டு இரண்டு சுடர்களைப்போலச் சூசைமா முனிவருந், தாமும் புறப்பட்டு மற்றுந் தவத்தோரெல்லாம் புடைசூழ்ந்துவர வானவர் எக்காளத தொனியூத தேவமாதாவுக்குத் தரிசனையானார். அப்பொழுது தமது அருமைத் திருமகனையும், மணத் துணைவனாகிய சூசைமா முனிவரையுந் தேவதாயார் கண்டு வாடிய முல்லைக்கொடிக்குப் பெய்த மழையைப்போலத் தமக்குக் கிடைத்த காட்சியினால் பெருங் கடலும் நிகரில்லாத பேரின்பத்தை யடைந்து, உடனே அவ்விருவருடைய திருவடிகளிலும் விழுந்து அன்பினாற் பலமுறையும் வணங்கிப், பரிமள மலர்கொண்டு பாதவருச்சனை புரிந்ததுமல்லாமல் முன்பு சிலுவைமரத்தி லுறையுண் டிருந்த தமது தேவகுமாரனைக் கண்டபோது மகா வியாகுலத்தை யநுபவித்ததினால் அதை யாற்றும்படி இப்பொழுது திருமகனையும், திருமகனோடு வந்த மற்ற நல்லோர்கள் உடலில்லாதாராயினும் நக்ஷத்திரங்களைப் போல விளங்குவதால் அதையுங் கண்டு அந்தக்கன்னியம்மாள் கொண்ட மகிழ்ச்சியைச் சொல்லத் தரமோ? பின்னும் தமது திருமகன் திருவாய்மலர்ந்து முன்னமே நடந்த விர்த்தாந்தங்களையெல்லாஞ் சொல்லி நல்லோருடைய சபையைக் காட்டின வுடனே, கேட்டிருந்த தாயார் இதுவே நீ பாடுபட் டிறந்ததினா லுண்டாகிய பயனென்று திருக்குமாரன் பட்டபாடுகளை நினைத்தழுதாள். அழுத தாயார் அந்தப்பாடு நமக்கு நன்மையை விளைத்ததென்று நமக்காகத் தமது வருத்தத்தை நீக்கினாள். இது இப்படியிருக்க உயிர்த்த நாதனும், சூசைமா தவனும் தங்களுக்குரிய வானுலகிற்குப் போகாமல் பூவுலகில் விருந்துகொண்டு இருந்த நாளெல்லாம் மோக்ஷமே யிங்குவந்து குடிகொண்டிருந்தது போல யாவருக்கும் பேரின்பத்தை விளைத்து நின்றார்கள்.

உத்தானப்படலம் முற்றிற்று.

முப்பத்தாறாவது, முடிசூட்டு படலம்.

அன்பருந்திய வாண்டகை மாய்தலா ற்
றுன்பருந்திய யாவருந் தொய்யலி ற்
பின்பருந்திய காட்சியின் பெற்றி யா
லின்பருந்தலி லெல்லையொன் றில்லையால்.

முன்சொன்ன வண்ணமாக நீதிச் சக்கரத்தை யுருட்டி மூவுலகத்தையும் அரசுபுரியும் பரமநாதன் அன்பின் கருணைமிகுதியால் துன்பத்தி லழுந்திய யாவரும் பின்பு பெருமகிழ்ச்சியை யடையும்படி உத்தானமாகி இப்பூவுலகில் நாற்பதுநா ளிருந்து, பின்பு சூரிய மண்டலமுதலிய மற்ற மண்டலங்களையெல்லாங் கடந்துயர்ந்த வானமண்டலத்திற் செல்லும்படி திருவுளங் கொண்டதினால் உடனே தாமும், அர்ச். சூசைமா முனிவருமாகச் சந்திரப் பிறை மேலெழுந்த திருவடிகளையுடைய எங்கள் தேவதாயாரிடத்திற்போய் நீ வாழக்

கடவாயென்று ஆசீர்வதித்து, நாங்கள் பொன்னுலகமாகிய மோக்ஷத்திற்குப் போகின்றோம் என்று திருவாய் மலர்ந்தருளியபோது, புண்ணைக் குடைந்த வேலாயுதத்தை யொத்த செய்தியைக் கேட்ட அற்புதத் தாயார் திருவாய்மலர்ந்து சொல்லுவாள்: நான் இடிவிழுந்ததுபோல மயங்கி இப்பூவுலகிலிருக்க நீங்களிருவரும் இரண்டு நக்ஷத்திரங்களைப்போல என்கண்களுக்கு ஒளியைக் காட்டிமறைந்து போகிறீர்களோ? என்று வருத்தத்தோடெழுந்து வணங்கினாள். அதற்கு அவர்கள் சூரியன் அகன்றபின்பு சந்திரன்பிரகாசிப்பதுபோல நாங்கள் வானுலகஞ் சென்றபின்பு நீயே யிவ்விடத்திலிருந்து யாவரையுங் காப்பாற்றக் கடவாயென்று ஆசீர்வாதமுந் தந்து, பின்பு மோக்ஷ காக்ஷியை யடைந்தவரும், வானவர்களு முன்னேபோகச் சீஷர்கள்பின்னே தொடர்ந்துவரச் சென்று ஒருயர்ந்த பர்வதத்தின்மே லேறினார்கள். அப்பொழுது கூடவிருந்த சீஷர்கள் இவர்கள் பிரிவை யாற்றாமல் வருந்துவதைத் திவ்யநாதன் கண்டு, அவர்கள் கரைகடந்த பேரின்பத்தை யநுபவிக்கும்படி தேனினு மினியசொல்லினால் அவர்களுக்கு ஆசீர்வாதந் தந்து, பின்பு தாமரைத் தடாகத்திற் சூரியகிரணம் பட்டாற்போலத் தமது திருக்கண்களின் திருவருள் சூசையப்பருடைய திருக்கண்களிற் படும்படி அவரை நோக்கிச் சொல்லுவார்: புண்ணியாற்றும் மருந்தை யொத்த கருணையுடையாய்! பூவுலகெல்லாங் காத்திரக்ஷித்த என்னை இப்பூவுலகிலேயே கண்மணியைக் காக்கும் இமைகளைப்போல நீ காத்தபடியால் இனிமேல் நீ வானுலகில் அரசனாக விளங்குவாய். மேலும் அருந்தவனாகிய தாவீதனுக்கு முன்கொடுத்த* வாக்குத்தத்தப்படி அவன்கோத்திரத்தில் தலைமுறை பிறழாமல் பிறந்த நீ இப்பொழுது மண்ணுலகிலும், விண்ணுலகிலும் அழியாத பெருமையினைக்கொள்ளக் கடவாய். பின்னும் நான் மனுக்குலத்தை யிரக்ஷித்த விளைவிக்க நன்மையானது அம்மனுக் குலத்திற் பிறந்தவ னிடத்திலேயே யிருக்கும்படி நீ அரசனுக்குரிய முடியைச்சூடி, வான் வீட்டின்பெருமை கொண்டு வாழும்படி நக்ஷத்திர மண்டலத்துக்கு மேல்மண்டலமாகிய மோக்ஷத்துக்கு என்னோடு வரக் கடவாயென்றார். இதைக்கேட்ட சூசைமா முனிவர் மிகவுமகிழ்ந்து ஆண்டவன் பொற்பாதங்களை வணங்கவே, மற்ற யாவரும் தெளிந்த அறிவோடு வாழ்த்துதல் செய்ய வானவர் சம்மனசுக்களும் அழகிய உருவெடுத்து மலர்மாரி பொழிய ஆண்டவனும், சூசைமா முனிவரும் வானத்திலுலாவும் இருசுடர்களைப்போல முத்திப் பேறுபெற்றவர்களின் கூட்டத்தினிடையே இரண்டரசர்களாக உதய நேரத்தில் வான்மீது செல்லுகையில் இவ்வளவு மிக்க ஒளி யேதென்று காணவந்தாற்போலச் சூரியனும் கடலை விட்டெழுந்து இவ்வொளிக்குத் தன்னொளி தோற்றதென்று நாணினாற்போல உடலெல்லாஞ்சிவந்து, மெல்ல எழுந்ததாம். அப்பால் இங்கே கூடமாய்நின்ற சீஷர்கள் அவர்கள் பிரிந்து போனதினால் வருந்தினாலும் அந்த அற்புதத்தைக் காணுதலினால் ஆச்சரியப்பட்டுக் கண்ணிமையாமற் பார்த்திருக்கையில் அந்தப் பார்வையால் விளையும் பிரிவின் துன்பத்தை நீக்க வானமூடியதுபோல ஒரு மேகம்வந்து மறைக்க அம்மேக வாகனத்தின்மேலேறி ஆண்டவனும் அர்ச். சூசையப்பரும்மற்றமுத்திப்பேறு பெற்றவர்களும் சென்றார்கள்.

இவர்கள் வான்மீது செல்லும்போது முன்னம் வானத்திலிருந்து விழுந்த பேய்களின் தந்திரத்தால் கெட்ட ஆதித்தாய் தகப்பன்கொண்ட பாவத்தா லடைக்கப்பட்டிருந்த மோட்சவாசலை அன்றையதினந் திருமகன் எண்டிசையிலுள்ள மனுமக்களுக்காகத் திறந்தபடியால், அந்தத் திருவாசலைத் திறந்ததில்

* இந்த வாக்குத் தத்தத்தை வளன் சனித்த படலத்திற் காண்க.

விய நாதனை வழிபட்டு அந்த நாதனால் கொடுக்கப்பட்ட வேதத்தை யனுசரித்து அவ்வழி நடந்த நல்லோரே யல்லாமல் மற்றவர்கள் அந்த மோக்ஷத்திற் சேரமாட்டார்க ளென்றுசொல்லி, அச் சூசையப்பரும் மற்ற முத்திப்பேறு பெற்றவர்களும் சூழ்ந்துவரத் தேவகுமாரன் மோக்ஷத்திலுட்புகுந்து, வானவரணியணியாய் நிற்கும் நிலையெல்லாந் தாண்டி, உரைக்கப்படாத பேரின்பத்திற் பிதாவாகிய சர்வேசுரன் அரசுபுரியும் பத்திராசனத்தருகே சென்று, தாம் எடுத்த மனுஷசுபாவத்திலுள் விழுந்துவணங்கி மனுமக்களின்மேல் வைத்த தயையின் விருப்பத்தால் பிதாவை நோக்கிச் சொல்லுகின்றார்: நிலையில்லாத இன்பத்தைத் தேடினதினால், வந்த தீவினையைத் தணிக்கமாட்டாத மனிதர்க்காக இரங்கி மனிதனாகி அவர்களுயிர் வாழும்படி நானுயிர்கொடுத்து, துன்பமும், நிந்தையும்பட்டு உயிர் இறந்தேன், என் பிதாவே! நீர் முன்னமே கற்பித்த தெல்லாவற்றையுங் குறையில்லாமல் முடித்தேன். நம்மையும், மனிதர் குலத்தையும் பகைத்த பேய்களை வென்றேன். நான் கொண்ட வெற்றியின் பயனாக இதோ இவர்களை மீட்டுக்கொண்டுவந்து இன்றையதினம் இவர்கள் இங்கே வாழும்படி உமது திருப்பாதங்களிற் சேர்த்தேன். பின்னும் நான் மனுஷாவதாரமானபிறகு மனிதரை யென்னுடைய இனமென்று அன்பினால் அவர்களை நான் இரக்ஷித்ததைப்பற்றிப் பிதாவே! நீரும் தயைசெய்து அவர்களை யுமது பிள்ளைகளென்று திருவுளங் கொள்ளவேண்டும். மேலும் பழம்பகைகொண்ட பசாசுக்கள் அம்மனிதரை யினிமேல் ஆள்வது நல்லதோ! ஆகையால் நீர் தயவோடு என்னிடத்தில் இரக்கங்கொண்டு அம்மனிதர்களெல்லாரும் பசாசுக்கள் செய்யுங் கொடிய போரை வென்று நம்மோடு அவர்களும் இவ்விடத்தில்வாழ்ந்திருக்கத் தயைசெய்ய வேண்டுமென்று வணங்கினர். இதைக்கேட்ட பிதாவாகிய சர்வேசுரனும் களிகூர்ந்து தமது இனிய திருமகனை யிறுகத்தழுவி, ஒளியைத் தோய பளிக்கு உயர்ந்த தமது பத்திராசனத்திலிருக்கச்செய்து அன்பு மிகுதியால் திருமகனே! உனக்கு வேண்டியதைக் கேட்டுக்கொள்வாயென்று திருவாய் மலர்ந்தருள, குளிர்ந்த தயையுள்ள மதுர நெஞ்சுடைய சுதனாகிய சர்வேசுரன் பக்கத்தில்வணங்கியிருக்கும் சூசைமா முனிவரைக்குறித்துச் சொல்லுவார்: எனது பிதாவே! நான் உம்மிடத்தினின்று உமது கட்டளையினால் பூவுலகில் மனிதனாக அவதரித்தபோது இப்போது உமது பக்கத்தில் வணங்கிநிற்கும் மாசில்லாத சூசைமுனிவனுக்கு நீர் கொடுத்த பூங்கொடியினிழலில் ஒதுங்கினேன்; அந்த முனிவனும் மிக்க அன்போடு என்னை வளர்த்து அரிய வரப்பிரசாதங்களெல்லாம் பெற்று, என்னை யீன்ற கன்னித்தாயாருக்கு நேர்ந்த துன்பங்களெல்லாவற்றையும் ஒழிக்கக், கொடுங்கோலரசனாகிய ஏரோதனினைத்த வஞ்சனைக்குப் பயந்து எசித்துநாட்டிற் கொண்டுபோய் என்னுயிரைக் காப்பாற்றி, தான் சாகுந்தனையும் பிரியாத அன்புகாட்டி, எனது துயர்களைக் கண்டழுது இனிய சுவையுள்ள நாளுண்பதற்கு யாசித்தும், வருந்தியும், உடல் வேர்வையுற உழைத்தும் எனக்குத் தந்து, யாவருக்கும் எட்டாத கருணைக் கடலைக்கடந்து கரைகண்டவனானன். ஆயினும் உம்மோடு ஒரு மெய்க்கடவுளாகி மூவுலகங்களையும் ஆக்கித்தாளும் என்னையும், என்னைக் கன்னிமையாருமற் பெற்றெடுத்த திருத் தாயாரையும் ஆதரித்து, அருந்தவஞ்செய்த மதிமணிவிரித்த பூங்கொடியோங்கிய இந்த மாதவத்தோனுடைய மாட்சிமையை இன்னும் நானுமக்குச் சொல்லவேண்டியதென்னே? நினைவையுங் கடந்த காட்சியையுடைய பிதாவே! யுமக்கு மறைவானது முண்டோ? இல்லையே. ஆகையால் இம்முனிவன் இப்படிப்பட்ட உயர்ந்த குணத்தைக்கொண்டபடியால், நானுடலோடு உயிர்த்தபோது இவனை முடலோடுயிர்க்கச்செய்து உடலோடே இவ்விடத்திற் கூட்டிவந்தேன். நீர் பெருங் கருணை

கூர்ந்து நானிரத்தத்தைச் சிந்தி யுயிர்விட்ட பயனைக் காட்டும்படி இம்முனிவனே எல்லா மனிதர்களுக்கும் அரசனாயிருக்க இவனுக்கு இரத்தினமுடி சூட்டல் வேண்டுமென்று வணங்கினார். இவையெல்லாங் கேட்டிருந்த பிதாவாகிய சருவேசுரன் அவ்விடத்தி லிருந்தவர்களெல்லாரும் பேரின்பத்தழுந்தி அரிய துதிகளைப்பாடி நிற்க நல்லதென் றுரைத்துப், பின்பு தம்முடைய திருப்பாதங்களை வணங்கியிருந்த சூசைமாமுனிவரைத் திருக்கண்கள் களிகூரப்பார்த்து ஆசீர்வாதமுந்தந்து, மாறாத அன்பினருளோடு எழுந்திருவென்றுசொல்லி, மார்போடிறுகத்தழுவினார்.

இத்தன்மையாகப் பிதாவாகிய சர்வேசுரன் சூசைமாமுனிவரை யிறுகத்தழுவினபின்பு ஒரு பக்கத்தில் வானுலகமுழுதும் தேவமகிழ்ச்சி யெழுந்த வோசையும், ஒரு பக்கத்தில் மாலைபோ லெடுத்துப் பாடுந் துதிகளி னோசையும், ஒருபக்கத்தில் தேவ வீணைகள் வாசிக்கு மினிய வோசையும், ஒருபக்கத்தில் பாவிசையோசையும், ஒருபக்கத்தில்சோபனமங்களங்களி னோசையும், ஒருபக்கத்தில அதிசயப்படுவா ரோசையுமாகிய இவ்வோசைகளெல்லாங் கிளம்பிக் கடலி னோசையையும், மேகமுழக்கத்தி னோசையும் அமர்த்தவும், அங்கேயுள்ள பேரின்பம் நிறைந்து பெருகவும், வளனென்னுந் திருநாமம்புனைந்த சூசையப்பர் திருக்கரத்திலேந்திய பூங்கொடி மூவாயிரத் தறுநூற் றொருபத்தைந்து மலர்களைப் புஷ்பிக்கவும், புஷ்பித்த தெய்வமண நாறுமருமலர்களை வானவர் முப்பத்தாறு மணிமாலையாகக்கட்டி ஆண்டவன் திருவடியிற் சாத்தி வணங்கி நிற்கவும், பிதாச்சுதன் இஸ்பிரீத்துசாந்தென்னு மூவரும் களிகூர்ந்து, புறத்திலே திரியுஞ் சூரியன் மரகதத்துக்குள்ளே நுழைந்து பார்க்கவந்தாற்போல விளங்கும் ஒரு திருமுடியைச்செய்து, அந்த முடியின் புறத்தில் தோன்றும் வேறு ஏழு சூரியன்களைப்போலக் கதிர்விடும் ஏழு இரத்தினங்களைப் பதித்து, இந்த இரத்தினங்களிலிருந்து ஒளிக்குத் தோற்றும்போல நட்சத்திரங்கள் வானத்தின் வெளிப்புறத்துச் செல்ல, இவ்வளவு மகிமைப் பிரதாபமுள்ள திருமுடியை மலர்ந்த பூங்கொடியேந்திய சூசைமாமுனிவருடைய திருத்தலையிற் சூட்டினார்கள். சூட்டினவுடனே சூசையப்பர் தமது திருமுடி ஆண்டவன் பாதத்தில் தேய்ந்து விளங்கும்படி விழுந்துவணங்கி வாழ்த்தி; அளவில்லாத பேரின்பத்தை யனுபவித்துக்கொண்டிருக்கையில், மீளவும் பிதாவாகிய சர்வேசுரன் திருக்குமாரனுடைய தேவ சிங்காசனத்தி னருகாமையில் ஒளிபொருந்திய நக்ஷத்திரங்களாலும், இரத்தினங்களாலும் நிரைநிரையாய் அலங்கரிக்கப்பட்ட ஓர் பத்திராசனத்தில் சூசைநாதனை வீற்றிருக்கச்செய்து பின்பு அவரை நோக்கிச் சொல்லுவார்: முற்காலத்தில் நான் தாவீதென்பவனுக்குச் சொன்னபடி தவறாமல் உனக்கு அரசாட்சியைத் தந்தேன். உன்னுடைய ஒளிமுடியில் பதித்திருக்கும் ஏழு இரத்தினங்களோ வென்றால், மிகுந்த விருப்பத்தோடு உன்னை யண்டிவந்த யாவருக்கும் நீ விருப்பத்தின்மேலுங் கொடுக்கத்தகுந்த ஏழு வரங்களை நானுனக்குத் தந்ததற் கடையாளமாகும். ஆதலால் இனி அந்த வரங்களின் விபரத்தைக் கேளென்று மீளவுந் திருவுளை பகர்வார்: மணமலர் பூத்த பூங்கொடி யுடையானே! மாசுள்ளதென்ற சந்திரனை மிதித்துத் தேய்த்து விளங்கிய கன்னிமரி யம்மாளுடைய கன்னிமையையும், சூரிய கிரணத்தையொத்த உனது கற்பையும் நீயே காத்தபடியால் அப்படியே மற்றவர்களுடைய காமநோயைத் தீர்த்து அவர்கள் கற்பையுங் காக்கும்படி தந்த வரத்திற் கடையாளமாக இம்முடியிலே விளங்கும் முதல் இரத்தினத்தைத் தந்தேன். மீளவும் புறம்பே திரியும்போது உள்ளத்தில் வினைகளைக் கொண்டெழும் ஐம்

பொறிகளையும் அடக்கிக், கன்மை வெளியாகக் கொண்டு பாவம் புகாமல் மாசில்
லா மனத்தோடு நீ விளங்கினமையால் இனி எவர்களுக்குந் தீவினை வருவதற்கு
முன்னமே காக்கவும், வந்தபின் அவற்றைப் போக்கி இரக்ஷிக்கவும் உனக்குத்
தந்த வரத்துக் கடையாளமாக இரண்டாவது இரத்தினம் பதிக்கப்பட்டதாகும்.
பின்னும் சூரியனை ஆடையாக வுடுத்துத், தேவநாதனை யீன்ற தேவதாயைக்கருத்
திலு மடங்காத அன்பைக்காட்டி நீ காப்பாற்றினதினால் வேதவடிவாக விளங்
கும் அந்தத் தேவதாயாரினுடைய அன்பும், அருளும், உதவியும், சார்பும் மற்ற
வரடையும்படி செய்யக் கொடுத்த வரத்தினடையாளமாக மூன்றாவது இரத்தி
னம் பதிக்கப்பட்டதாகும். இன்னும் மேகத்திலிருந்து இடித்துவிழும் இடியை
ப்போல வானுலகிலிருந்து விழுந்த பேயினங்கள் அன்றுகொண்ட பகையினால்
நடத்தும் வஞ்சனையை உன்னிடத்தில் செலுத்தக் கூடாமல் அவை வெட்கப்ப
ட்டோடும்படி அவற்றை நீ வென்றபடியால் இனி உன்னுடைய நாமத்தைத்
யாராவது உச்சரித்தால் அந்த நாமமொன்றுக்கு அந்தப் பேயினங்க ளஞ்சியோடத்
தந்த வரத்துக் கடையாளமாக நாலாவது இரத்தினம் பதிக்கப்பட்டதாகும்.
பின்னும் தேவவரனால் நிரப்பப்பட்ட கன்னிமரியம்மாள் ஒரு புருஷனுதவியு
மின்றித் தேவ திருமகனைப் பெற்றெடுத்தாலும் அந்தத் திருக்குமாரனை நீ உன
க்கோர் மகனைப்போல இன்பமாய் வளர்த்தமையால் இனிப் புத்திரப் பேறில்
லாதவர்களுடைய குறையைத் தீர்த்து, அவர்களுக்குப் புத்திரர்களைத் தரும்
வரத்துக் கடையாளமாக ஐந்தாவது இரத்தினம் பதிக்கப்பட்டதாகும். இன்
னும் விருந்தாளிகளைக்கண்ட அன்புடையோரது முகமலர்வதுபோல அளவில்
லாத துன்பத்தைத் தருகின்ற பிணியையெல்லாம் பொறுமையாகச் சகித்தப
டியால் இனிப் பிணியினால் வருந்துபவர்க்கெல்லாம் நீயே ஒருமருந்தாக விருந்து,
அவர்கள் நோயைத் தீர்க்கும்படி தந்த வரத்தி னடையாளமாக ஆறாவது இரத்
தினம் பதிக்கப்பட்டதாகும். மேலும் தேவதாயுந், தேவமகனும் உன்னை யிருப
க்கத்திலுந் தாங்கிக்கொண்டு நீ கொண்ட துயரைத் தணிக்குந் தயையைக் காட்
டிக்கொண்டிருக்க உடலைவிட்டுப் பிரிந்த வுன்னுயிர் போய் நான் கட்டளையிட்ட
துறையைத்தமையால் இனி நோயினால் மெலிந்து உடலைவிட் டுயிர்பிரியும்
போது அவர்களுக்கு நீஒரு துணையாக நின்று சகாயஞ்செய்யத் தந்த வரத்தி
னடையாளமாக ஏழாவது இரத்தினம் பதிக்கப்பட்டதாகும். ஏனென்றால் நீ
இன்பத்தோடு உலகில் வளர்த்த திருக்குமாரன் மனிதர்களுடைய உடம்பால்
விளையுந் தீவினையை யகற்றி அவரவர்களுக்குரிய தருமநெறியில் யாவரையும்
நிறுத்திப், பின்பு அவர்கள் வாஞ்சித்துயர்ந்த மோக்ஷத்திற் சேர்த்துக்கொடுத்த
அரசை அரசாள வேண்டி நானின்று உனக்குத் தந்த வரங்களை நீ யவர்
களுக்குக் கொடுத்தருள்வாயென்று சொல்லி ஆசீர்வாதமுந் தந்தனர். அதன்
பின்பு இரண்டாமாளாகிய சுதனாகிய சர்வேசுரனும் சூசைமா முனிவரை நோக்கிச்
சொல்லுவார். உவமையெல்லாங் கடந்த பெருமையுடையோய்! கரைகடந்த
தயையினால் பூவுலகி லிருக்கும்போது உன் சொல்லைத்தவறாமல் நடந்தநான்
அளவில்லாத பேரின்பங்கொண்ட இவ்வானுலகி லிருக்கும்போது உனது
சொல்லைத் தவறாமல் நீ மனிதர்க்காக வேண்டும் வரம் யாவையும் எக்காலத்தி
லுந் தருவேனென்றார். கடைசியாய்த் தேவஸ்நேகமென்னும் மூன்றாமாளாகிய
இஸ்பிரித்துசாந்து சர்வேஸ்வரனும் சூசையப்பரை நோக்கிச் சொல்லுவார்:
விண்ணவர்களுக்குந் தேவஸ்நேகமாகிய நான் நக்ஷத்திரமுடியைச் சூடிய தேவதா
யினுடைய திருக்கலியாண மகோற்சவநாளிலே தேன்பொழியு மணமலர் புஷ்
பிக்க நீ கையிலேந்தியிருக்கும் இந்தப் பூங்கொடியைத் தந்தேனல்லவோ?
ஆகையால், இனி உன்னைவணங்கிச் சேர்ந்த யாவரும் உனது பூங்கொடியினிழ

விற் குறையற்று உயிர் பிழைத்திருக்கும்படி நானே பெருங்கருணையைச் செய்வேனென்று ஆசீர்வாதத்தையுந், தேவவருளையும் வெள்ளமாகத் தந்தருளினார். உடனே இப்படிப்பட்ட வரத்தொகைகளினாற் சொற் களிகூர்ந்த குசையப்பர் எல்லா நன்மைகளிலும் பிரிவில்லாமல் ஒன்றாக நிறைந்த செல்வத்தினுரிமையால் ஒரே ஆளாகி, அற்புத முறைமையால் தேவ மூன்றாட்களுமான கடவுளை வணங்கிப் புறத்திலே செய்யு நன்மையில் உங்கள் வல்லமையைக்காட்ட மிகுந்த குற்றமுடைய இந்த அடிமையை இனிதாய் அருள்புரிந்து நோக்கி, எனது சிறுமையெல்லாம் பெருமைபெறச் செய்தமையால், உமக்கே அருச்சனையாகக்கடவது என்று மீளவும் வணங்கினார்.

இத்தன்மையாக வரம்பெற்ற அர்ச். குசையப்பர் மிகுந்த அன்புடைய தாயைப்போலப் பூவுலகிலுள்ள யாவருக்குந் தயைசெய்து, தம்மைநோக்கி மன்றாடிய பேர்களுக்குள் நோய்கொண்டு வருந்துபவர்களுக்குத் தாமே மருந்தாகியும், பேயின் தந்திரத்தி லகப்பட்டவர்களுக்கு ஞானசூரியனைப்போல நின்று அப்பேய்களைத் துரத்துங் கோட்டையாகவும், நொந்தவர்களுக்கு ஆதரவாகியும் பிணியினால் இறப்பவர்களுக்கு அவர்களண்டையிற்போய்த் தமது பூங்கொடியினால் நிழலைச்செய்து மோக்ஷபாதையிற் சேர்க்கும் வழித்துணையுமாகித் தாமடைந்த வரப்பிரசாதத்தினால் தம்மை நினைத்தவர்களில் ஒருவரையுங் கைவிடாமல் தமது பூங்கொடியினிழலில் எண்டிசையிலுமுள்ளாரையும் பாதுகாத்து விளங்கிய பொன்னுலகமாகிய மோக்ஷத்தில் கணக்கில்லாத மனுமக்களைச் சேர்த்தருளி வரும்போது நக்ஷத்திரந்தையொத்த கிரீடத்தைத் தாங்கிப் பூவுலகத்தை யாண்டுவரும் ஓர் அரசனிடத்தில் சம்பவித்த செய்தியை இனிச் சொல்லத் தொடங்குவாம்.

அதெப்படியென்றால் உயர்ந்த பர்வதங்களினின் றிழிந்துவரும் பேராறுகளால் நிறைந்து கமலம், ஆம்பல், நெய்தல், குவளை முதலிய நீர்மலர்கள் மலிந்த வயல்களால் சூழப்பட்டு எவ்வகைச் செல்வத்திலுங் கீர்த்திபெற்று விளங்கிய உரோமைநாடு என்றொரு நாடுண்டு; அந்த நாட்டில் கோணாத நீதித் தனிச்செங்கோலைத் தாங்கிய கையும், வாடாத தாமரை மலர்மாலையைத் தரித்த விசாலமாகிய மார்பும், மாறாத நிழலைச்செய்யும் வெண்கொற்றக் குடையும், பகை முகத்தில் பின்வாங்காத சதுரங்க சேனைசமுத்திரமும், தவத்தோரைப் பார்க்கிலும் பகைத்தோர்க்குக் கருணைசெய்யும் அன்பும், மனுமக்களைப் பாதுகாத்தலால் யாவருக்கும் பொதுவான ஒரு தகப்பனாக இருக்குந் தன்மையும், வல்லமையால் எல்லாப் பேரையுங் கடந்த தன்மையும், அன்பினால் தாயின் குணத்தைக் கடந்த தன்மையும், கொடுக்குந் தொழிலினால் மேகத்தைப் பழித்த தன்மையும், காட்சியின் தெளிவினால் உலக மயக்கத்தை நீக்கிய தன்மையும், பகைவர் தனக்குச் செய்யும் வணக்கப் பெருமையைப் பார்க்கிலும் தான் கடவுளுக்கு வணக்கப் பெருமையைச்செய்து அவருடைய கட்டளையைத் தலைமேற்கொள்வதால் வரும் பெருமையின் தன்மையும், உடையானாகிய லேயுப்போல்தென்னும் நாமமேவல் அரசனொருவனிருந்தான். அவ்வரசன் அர்ச். குசையப்பர்மீது வைத்த பக்திவணக்கத்தில் குறைவில்லாமல் நடந்து அவரது பூங்கொடி நிழலைச்சார்ந்து இராச்சியபரிபாலனம் பண்ணிவருகையில், அந்தக் குசைமாமுனிவரின் கருணையால் பின்னும் மிகுந்த செல்வங்களையடைந்து, உலகமுழுதினுமுள்ள பகைவர்களை யடக்கித், தனக்குவந்த மரணத்துக் காயத்தமான நோயினின்றும் பிழைத்து; நெடுங்காலமாக விரும்பின புத்திரசந்தானத்தையு மடை-

ந்து, சிறந்த பெருமையைக்கொண்டு அடையாத வியாபாரமெல்லா மடைந்து வாழ்ந்திருந்தான். இப்படி வாழ்ந்திருக்கையில் வஞ்சனை நிறைந்த நெஞ்சுடைய சில பகைவர் அந்த அரசனைப் போர்முகத்திலிருந்து ஆயுதங்களால் வெல்லக்கூடாமல், வஞ்சனையினால் இவனை வெல்லவேண்டுமென்று யோசித்து, ஒரு நாள் நஞ்சோடுகலந்த உணவுகளைக் கொண்டுவந்து அரசனையுண்ணும்படி வேண்டிக்கொண்டிருக்கையில், பூங்கொடியுயர்த்திய ருசையப்பர் வானத்திற் காணப்பட்டு அரசனை நோக்கி: இது நஞ்சிட்ட உணவாகையால், இதை உண்ணவேண்டாமென்று விலக்கி அவனுயிரைக் காப்பாற்றினர். இந்த அற்புதத்தைக் கண்ட அரசன் ஆச்சரியப்பட்டு இப்படிப்பட்ட பேருதவியைச் செய்த முனிவருக்கு நாம் செய்யத்தகும் கைம்மாறு முண்டோ? வென்று கலங்கிப் பின்பு நம்மாற்கூடிய ஒரு சிறிய கைம்மாறேனுஞ் செய்யவேண்டுமென்று யோசித்து, யோசித்த யோசனையை முடிக்கும்படி, தனது வெண்கொற்றக்குடையினாணைக் குட்பட்ட அரசரெல்லாரும் ஒருங்குவந்து சேரவேண்டுமென்று ஓலை போக்கியவுடனே அந்தஓலையைக்கண்ட அரசர்களெல்லாம் அந்தக்கட்டளையைத் தலைமேற்கொண்டு உடனேபயணப்பட்டு அந்தஊரோமைகாட்டிற்சேர்ந்தபோது, சூளைத்தீயைப்பார்க்கிலும் தீயைக் கொப்புளிக்கும் கண்களையுடைய மதயானைகளும், மேகங்களும் பயப்படும்படி வானமட்டுமுயர்ந்த இரதங்களும், சூரியவானைபேர்த்திய போர்வீரரும் நெருங்கி வருவதால், நாடெல்லாம் அதிர்ச்சிகொண்டன. பின்னும் கோடைகாலத்தில் முழங்கின மேககர்ச்சனையைப்போலப் பகைவர்வணங்கும் இராஜபேரிகைகள் முழங்குவதால், பறக்கப் பருவமில்லாமல் கூட்டிற் கிடக்கும் பக்ஷிகள் முதலாய் பயந்து கூட்டைவிட் டெழும்படி சேர்ந்த படைத்தொகுதியைக்கண்ட உலகமெல்லாம் பயங்கொண்டன. மேலும் பகைவர் மார்பைக்கிழிக்கும் வேலேந்தி, வீரரோடு வருகின்ற இரதக்கூட்டங்கள் ஆழமாகப் பூமியை யறுத்தன. உயர்வாகப்பிடித்த வெள்ளைக் கொடிகளும், வெள்ளைக் குடைகளும் மேகமண்டலத்தைத் தாவி யறுத்தன. பலவகை ஆயுதங்கள் கண்களைக் கிழித்து உருவினாற்போல மின்னின. முத்துக்குடைகளும், பவளக் குடைகளும், நீலமணிக் குடைகளும் நெருங்கிக்கூடிச் சூரியகிரணம் படாமல் அழகிய நிழலைச் செய்தன. அவரவர்களணிந்த மலர்மாலைகள்பொழிந்த தேன்மழையும், யானைகள் பொழிந்த மதமழையுங் கலந்து குதிரைப்படைகளா லெழுந்த புழுதியை யமர்த்தின. ஆகலால் இத்தன்மையான மலையையொத்த தேர்களும், காற்றின் விசையையொத்த குதிரைகளும், சந்திரனையொத்த குடைகளும், மேகத்தை யொத்த யானைகளும், கடலையொத்த படைவீரரும் நெருங்கிவரக் குதிரைகட்டிய தேரின்மீது வந்த வரசர்களும், யானைகள் பூட்டிய தேரின்மீது வந்த அரசர்களும், மற்ற வாகனங்கள் மீது வந்த அரசர்களும் அவரவர்கள் விமானங்களினின் றிழிந்து சிங்கங்களைப் பூட்டிய தேரையுடைய அரசனாகிய லெயுப்போல் தென்னும் அந்த அரசனுடைய பாதங்களில் தங்கள் மணிமுடிபடும்படி வணங்கின மாத்திரத்தில், அந்த அரசன் மகிழ்ந்து அலைகளையுடைய கடல்மேலே சூரிய னெழுந்தாற்போலே அரசருடைய கூட்டமாகிய கடலின்மேலெழுந்து தோன்றின உயர்ந்த சிங்காதனத்தில் மங்காத கீர்த்தியையுடைய ஆண்சிங்கம்போ லெழுந்தருளி, முடிகவித்த மற்ற வரசரெல்லாரும் சூரியனைச் சூழ்ந்த நக்ஷத்திரக் கூட்டம்போலப் பணிந்து நிற்க அந்த அரசர் கூட்டமும், வேதியர் கூட்டமும், முனிவர் கூட்டமும், மந்திரிமார் கூட்டமும், சேனைத்தலைவர் கூட்டமும், படைத்தலைவர் கூட்டமும், தூதத்தலைவர் கூட்டமும், அணித்தலைவர் கூட்டமும், விசத்தலைவர் கூட்டமும், புடைசூழ்ந்து விளங்க, ஊது கொம்பு முதலிய வாத்திய ஒலிகளும், பாடுவோர் ஒலியும், ஆசீர்வா

தஞ் சொல்லுவோ ரொலியும், மற்ற ஒலிகளும் அமர்ந்தபின்பு மலர்ந்த முகத்
தோடு அமுதத்தினு மினிமையாய்ச் சொல்லத் தொடங்கினான்.

அதெப்படியென்றால் சூழநின்ற அரசரெல்லாரும் அதிசயித்திருக்கும்படி
லெயுப்போல்தென்னும் நாமமேயவனாகிய பெருமையிற் சிறந்த அவ்வரசன்
யாவரையும் நோக்கி: இன்றைக் கிருப்பவரெல்லாம் நாளைக்கு இறப்பாரொழிய
இறவாதா ரொருவருமில்லை. மணிமுடிவேய்ந்த மண்டலேசுரருக்கும் இது
நிச்சயமல்லவோ? பின்னும் அந்தக் கொடிய சாவானது பங்கவருடைய வில்
லுக்கு மஞ்சாது. கற்றுணர்ந்த கவிவாணருடைய கவிகளுக்கு மஞ்சாது. அர
சர்தாங்கிய செங்கோலுக்கு மஞ்சாது. பூவரும்பையொத்த இளைஞருடைய
கட்டழகுக்கு மஞ்சாது. மற்ற எவைகளுக்கு மஞ்சாது. ஆதலால் மேற்குலத்
தாருங், கீழ்க்குலத்தாரும் ஒருப்பட இறப்பது உண்மையென்று நிச்சயித்த
போது செங்கோலைத்தாங்கிய அரசர்கள் ஆங்காரத்தாற் கெட்டழிவானேன்?
நானும் இந்த உலகத்தை யாளுவேனேயானால் பாவத்துக் குள்ளாவேன். ஆத
லால் இனிமேல் நான் எனது அரசாட்சியைத் துறந்துவிட்டு ஒருநாளும் அழி
யாத செல்வத்தை யுடையவனும், நோய் கொள்ளாதவனும், இறக்காதவனும்,
நீதிச் செங்கோலை யுடையவனும், எவ்வுலகத்துக்கும் நிழலைச் செய்கின்ற
தேவராஜனுக்கு இவ்வுலகத்தில் ஒழியாத குளிர்நிழலைச் செய்தவனும், கடலை
யொத்த அன்புடையானும், ஆகிய சூசைமாமுனிவருக்கு அவ்வரசாட்சியை
ஒப்புவித்து அவர் அரசாளவும், நாமெல்லாரும் அவருக்கடிமையாயிருந்து நடக்
கவும் வேணுமென்று யோசித்திருக்கின்றேன். ஏனெனில் ஒருநாள் பகைவர்
என்னை நஞ்சிட்டுக் கொல்லும்படி செய்த வஞ்சனையில் அந்த மகா முனிவரே
யெனக்கு மாறாத தயைசெய்து காப்பாற்றினபடியால் அவருக்கே மணிமுடி
சூட்டவேண்டும். பின்னும் அம்முனிவர் பகை, பஞ்சம், பாவம், பிணி இவை
யெல்லாம் நீக்கவும், உலகமென்மேலும்வாழவும் ஒழியாத அன்போடு உங்களை
யும், என்னையும் அரசாண்டு மாறாத மோட்சபாக்கியத்திற் சேர்ப்பார். ஆதலின்
அவர்க்குத் திருமுடிபுனையும்படி யுங்கள் கருத்தைவெளிப்படுத்துங்களென்றான்.

இவ்வண்ணமாக லெயுப்போல்தென்னும் இராஜாதிராஜன்சொன்னபோது
மற்ற அரசரெல்லாரும் மகிழ்ந்து அவனைவணங்கிச் சொல்லுவார்: மன்னுயிரனை
த்தையுந் தன்னுயிர்போலக் காப்பாற்றி யெங்களை யாளாநின்றும் மன்னவர் மன்
னனே! நீர்சொல்லியபடி மலர்ந்தபூங்கொடி யுயர்த்திய சூசைமாதவன் வாலுலகத்
தை அரசாள்வதுபோலஇங்கேயும்மையும் ஆண்டுவருவதுநன்மையேயானாலும்,
அம்முனிவ ரேவிய கட்டளையாவையும் நீரே செய்யவும், நீரிடுங் கட்டளைப்படிக்கு
நாங்களெல்லாருங் கீழ்ப்படிந்திருக்கவும் தயைசெய்ய வேண்டுமென்று சம்ம
தங் கொடுத்தவுடனே யோராசனாகிய லெயுப்போல்துவும் மனமகிழ்ந்து, இச்
செய்தியைப் பூவுலகெங்கும் இராஜமுரசத்தினா லறிவிக்கவெண்ணி அவ்விடத்
திருந்த வீரருன்றனென்பவனை யழைத்துச் சொல்லுவான்: இன்றைய பத்தாம்
நாளில் வாலுலகத்தை யாண்டுவரும் இராஜாதி இராஜனாகிய சூசையப்பர் இங்
கே யரசனாகும்படி அவருக்குத் திருமுடி புனையப்போகிறபடியால், இந்த நாடு
நகரமெல்லாம் விநோத அலங்காரஞ் செய்யும்படி இராஜமுரச மறைவிப்பாய்.
என்று சொன்னமாத்திரத்தில், அவனும் வேந்தனுடைய இரண்டு பாதங்களை
யும் வணங்கி விரைந்துசென்று, வாரணிறைக் கட்டிய இராஜமுரசத்தை மதயா
னைமேலேற்றி வானத்திற் றவழுங் கொடிகளைக்கட்டிய மாளிகையையுடைய
அந்த நகரத்தார் முழுமையும் கேட்கும்படி பறையறைந்தான். அது எப்படி

யென்றால்: கேளுங்கள் கேளுங்கள். இன்பம் விளைவிக்குஞ் செய்தியை யினிதாய்க் கேளுங்கள். நீங்கள் யாவரும் இனிமேல் வாழுங்காலமும், பஞ்சம் படை, பகை, பிணிமுதலிய தீமைகள் தாழுங் காலமும் நேர்ந்தன. வான்மேல் வாழு மரசன் இப்போது பூவுலகத்தை யாள வருகின்றான். இதைப்பற்றி நமது நகரமெல்லாம் விசேஷ அலங்காரமா யிருக்கவேண்டுமென்று நமது மகாராஜாவின் கட்டளை பிறந்தது. மேலும் வான்வாழரசன் இப்பூவுலகில் வருகிறபடியால், இப்பூவுலகமும் வானவுலகம்போ லிருக்கவேண்டும். சூரிய னுதித்தபோது இருளொழிந்து ஒளிபரவுவதுபோலத், தேவாதி தேவனாகிய நாதேவனேவலைக்கொண்ட வரத்தொகையையுடைய சூசைமாமுனியாகிய அரசனே யிங்குவந்து நரபதியாகி ஒப்பில்லாத தமது தனைக்குடை நீழலில் நம்மை யாள்வாரென்றால் இதன்மேலுஞ் சொல்லத்தகுந்த பாக்கியமுமுண்டோ? ஆகையால் நீங்கள் யாவரும் தேவலோகத்துக்குரிய தன்மையாக ஒன்பதுநாளுந் திருவிழாச்சிறப்பு கொண்டாடினபின்பு, பத்தாம்நாள் பசுங்கொடி விருதேந்திய செல்வமன்னவனாகிய சூசைநாயகனுக்குத் திருமுடி சூட்டப்படும். அப்பொழுது நீங்களெல்லாரும் வாழும்படி யிவ்வுலகெல்லாஞ் சிறப்போடு உயர்த்தப்படும். யாவரும் எச்சரிக்கையா யிருக்கவேண்டுமென்று பெருமுரசறைந்த மாத்திரத்தில் பெருங்காற்று அடித்தபோது கடலெல்லாம் பொங்கி, அலைகள் மேலலைகள் மோதிவருவதுபோல உயர்ந்த மாளிகை வரிசைகளையுடைய அந்நகரத்தார் யாவரும் சந்தோஷமிகுதியால் ஓழிவில்லாமல் நடப்பவரும், ஓடுபவரும், எதிர்ப்பட்டுச் சேதிசொன்னவர்க்குக் கொடுப்பவருமாகப் பேரானந்தங்கொண்டு, அந்நகரத்து வீதிகளிலெல்லாம் பரிமளிக்கும்படி குலைதள்ளாத இளவாழைகளையும், பசுங் கமுகுகளையும், கன்னலையும் அங்கங்கு ஒழுங்காக நாட்டிப் புதுத்தளிர்களையும், அந்தத் தளிர்களோடு இசைந்திருக்கும் மதுரக்கனிகளையும், தேன் மலர்களையும் மாலையாகச் சேர்த்துத் தொங்கக்கட்டியதனால் அந்நகரம் அன்று ஒரு பூங்காவனத்தைப்போலக் காணப்பட்டது. பின்னும் உயர்ந்துவிளங்கிய நிலா மாடமாளிகைகளினுடைய சிகரங்கள்தோறும் நீலப்பட்டுகளைப் பந்தலாகப் பரப்பி, ஒழுங்கோடே யங்கங்கே பத்திபத்தியாய்ப் பதித்த இரத்தினங்களினால் விரியென்னமா நகரமென்னும் அந்தப்பட்டணம் சூரியனொளிக்கு மஞ்சாமல், பகற்காலத்திலும் ஒளிபரப்பும் நக்ஷத்திரங்கள் பூத்த வானம்போலவும் விளங்கிற்று. மேலும் நுண்மணலாகத் தெருக்களிற் பரப்பிய முத்துப்பொடிகளின்மேல் சிவந்த இரத்தினப் பொடியும், செம்பொன் பொடியும், சுண்ணப் பொடியுஞ், சிந்தூரப் பொடியும், பூவரும்பு மலர்களும் பரப்பியிருந்ததால், அந்நகரம் வானம் புரண்டு பூமியில் வந்ததாகவும், அந்த நக்ஷத்திரங்களின்மேல் மனுஷரெல்லாரும் நடந்து செல்வதாகவுங் காணப்பட்டது. மீளவும் தெருக்கள்தோறும் செல்வ ஒளியை வீசும்படி தங்கத்தாற் செய்த எல்லாத் திண்ணைகளிலும், பவளத்தாற் செய்த எல்லாக் குறடுகளிலும், பொன்னாற்செய்த பதுமைகளை நிறுத்தி, இராக்காலங்களில் அவற்றின்முன் ஒவ்வொரு மாணிக்கத் தீபங்களை யேற்றிவைப்பதினால், அந்நகரம் நமது கருத்துக்கடங்காத செல்வத்தி லுயர்ந்ததாகக் காணப்பட்டது. இதுவுமல்லாமல் இரத்தினப் பிரதிமைபோ லிருக்கும் அந்நகரத்துப் பெண்கள் பூமாலைகளையும், மணிமாலைகளையுந் தொங்கக்கட்டிய உயர்ந்த சாளரங்கள்தோறும் நின்று இந்த அலங்காரத்தைப் பார்த்திருப்பது, பலவகை முரசங்களி னோசையினாலும், அகிற் புகையினாலும், தேவர் களித்து வானத்திருந்து எட்டிப் பார்ப்பதுபோலு மிருந்தது. ஆதலால் இந்த அழகின் வகையையெல்லாம் யாவருங் கண்களாகிய கைகளினால் முகந்து வீணை வாய்ந்த இன்னிசைத் தேனைச் செவிகளாலுண்டு, மின்னலை ஒத்த அந்நக

நாதர்களுடைய ஆடலையும், பாடலையுங்கண்டு இவற்றுள் எந்த அழகு மிக்கதென்று தெரிந்து சொல்லக்கூடாதவர்களாய் அதிசயப்பட்டு நிற்பார்கள்.

இவ்வண்ணமாக வீணையைப்போல வண்டுகள் முழங்கும் குளிர்ந்த தேன் மலர் மாலைகள் மணம் வீசவும், மேக மின்னிற்போலப் பலவகைப் பூம்புகைகளுக்குள்ளே பல்வகை மணிகள் விளங்கவும், அந்நகரத்துத் தெருவெல்லாம் மோக்ஷ அலங்காரத்தைக் காட்டவே ஒன்பதுநாளும் திருநாளாகப் போனபின்பு, சூரியன் மிகுந்த பிரகாசத்தைப் பரப்பியெழுந்த பத்தாம்நாளில் கீழ்பரப்பெல்லாம் பொன்னாற்செய்து, அதன்மேல் ஒருபுறத்தில் பவளத்தூண்களை நிறுத்தி, மற்றொரு புறத்தில் பளிங்கினாற் சுவர்களையேற்றிக் கவிந்திருக்கும் வானத்தைப் போலப் பல இரத்தினங்களால் செய்த சிகரத்தை மேலேவளைத்து, அங்கங்கே பல நிலைக்கண்ணாடிகளை ஒழுங்குபட அமைத்துச், சூரியன் தன் கிரணத்தைப்பரப்பியிருக்கும் மண்டபம்போல ஒரு திருமணி மண்டபத்தை யுண்டாக்கி அம்மண்டபத்தின் நடுவில் சிற்பநூலிலக்கணந்தவறாமல், பொன்னால் வார்த்த பன்னிரண்டு சிங்கங்கள் கீழே தாங்கி நிற்கவும், பலவகை மணிகளா லமைத்த உயர்ந்த பலகையை அதன்மேலேற்றி மோக்ஷ அழகைக் காட்டுதற்குரிய ஓர் சிங்காசனத்தைப் பெருமையாக அமைத்து, அந்தச் சிங்காசனத்தின்மேல் தயைதனிர்த்துப் பாவவேண்டி சூசைமாமுனிவருடைய திருவுருவத்தை யமைத்துவைத்தார்கள். அந்தத் திருவுருவம் எப்படி யிருந்ததென்றால், வானவுலகிலுள்ள சூரியன் ஒரு குழந்தையாய் வந்ததுபோல அவதரித்த நாதனாகிய திருக்குழந்தை யுருவத்தைச்செய்து, கண்டகண்கள் கூசாமல் இன்பம் அனுபவிக்கவேண்டி மின்னல்களைத் தெளித்துக் கிரணங்களாற்கட்டிச், சூரியன் உயிராக உள்ளேயிருக்கும்படி வானவரால் செய்யப்பட்ட திருவுருவம்போலச் சூசைமாமுனிவருடைய திருவுருவம் ஒன்றுசெய்து அவ்வுருவத்தில் யாவருடைய வினையுந் தீர்தற்குக் காரணமாகக் கமலவாய் மலர்ந்திருக்கவும், மனங்களெல்லாம் உள்ளே மகிழும்படி களித்த இரண்டு திருநேத்திரங்கள் மலர்ந்து நோக்கவும், புதுப்பித்து அந்த வுருவத்துள் அந்த முனிவரேயுயிராக இருப்பதுபோலக் காணப்படத் திருக்கரங்களில் நக்ஷத்திரங்கள் பூத்ததுபோலச் செய்த மலர்க்கொடியோடு திருக்குழந்தையி னுருவத்தை வைக்கவே அம்மண்டபம் உயிர்பெற்று விளங்கினதுமல்லாமல், சூசையப்பருடைய திருவுருவத்தின்மேலே புஷ்பத்தினாலும், பொன்னினாலும், பவளத்தினாலும், வயிரத்தினாலும், நீலத்தினாலும், கோமேதகத்தினாலும், முத்தினாலும் இன்னும் பலவகைப்பட்ட இரத்தினங்களாலுங் கட்டப்பட்ட மாலைகள் உரியதோர் மாலைகளாகத் தோன்றியது. அப்பால் இவையெல்லா மமைத்தபின்பு மேகமுழக்கத்தோடு பலவகை வாத்தியங்கள் முழங்கவும், வீணையினிசையோடு மலர்களிலிருக்கும் வண்டுகள் முழங்கவும், பாடுவோர் புகழவும், மற்ற அரசர்கள் கடலுடைந்து வந்தாற்போலப் புடைசூழ்ந்து வரவும், நகரமெல்லாம் மேலுங்கீழும் புரண்டாற்போல மற்ற ஜனங்களெல்லாந் திரண்டு வரவும், மேகத்தைப்போலப் பூம்புகை கிளம்பவும், மின்னிய இரத்தினாரம் பூண்ட மலையையொத்த மார்பையுடையானாகிய இராயன் அந்த மண்டபத்தண்டைவந்து, வானத்தி னெல்லையைக்கடந்து மேலிட மெல்லாம் வானவர் சோபனம்பாடிக்கொண்டிருக்க, வேதநூலின் கரையைக்கடந்துணர்ந்த குருப்பிரசாதிகள் செய்யவேண்டிய நல்ல முறையெல்லாம் நிறைவேற்றியபின்பு விண்ணெல்லாங்கடந்த ஒரு இரத்தினத் திருமுடியைச் சூசைமா முனிவருடைய திருச்சிரசில் பலமுறையும் பணிந்தெழுந்து சூட்டினான்.

இவ்வண்ணமாகச் சூசையப்பருக்கு முடியைச்சூட்டினவளவில், பூவுலகமு
ழுதும் வணங்கப்பட்ட இராயன் முநிவருடைய திருப்பாதத்திலே பலமுறை
யும் பணிந்து வணங்கினபிறகு அரசனுடையமக்களும், அவனுடைய சுற்றத்தா
ரும், மற்ற மகுடமுடி மன்னவரும், வேதியரும், மந்திரிமாரும், படைத்தலைவ
ரும், அணியணியாக மற்றப் போர்வீரரும், அந்நகரத்திலுள்ளோர் யாவரும்
வணங்கியவுடனே, வாசனைவீசிய பூம்புகைத்திரளா யெழும்பித் திருமுடியை வ
ணங்கவும், தூவிய மலர்மழை வணங்கவும், பிடித்த கொடிகளும், குடைகளும்
வணங்கவும், முழங்கின முரசத்தோடு பலவகை வாத்தியங்களும் வணங்கவும்,
பாடின இசைகளோடு வீணைகள் வணங்கவும், மேலே வானோர் துதிகளைப்பாடி
வணங்கவும், முடிவில்லாமல் பரலோகமும், பூலோகமும் வணங்கின. அப்பால்
இடியிடித்தாற்போலப் பலவகை வாத்தியங்கள் முழங்க அரசன் தூவிய இரத்
தினமழையும், மற்ற முடிமன்னர் தூவிய பொன்மழையும், வேதியர் கூறிய
துதிமழையும், மற்றவருள் சிலர் தூவிய மலர்மழையும், சிலர் தூவிய புனுகுமு
தலிய பல வாசனைமழையும், சிலர் தூவிய பனிநீர்மழையும், மேகம் பொழிந்த
மழையைப்பார்க்கிலும் அதிகமாகப் பொழிந்தமையால், அன்றையதினம் அந்த
நகரம் மோக்ஷநகரத்தை யொத்திருந்தது. பின்னும் தருமமும், தவமும் வளர்
வதினால் வினைகளெல்லாம் நீங்கின. செல்வமும், அதற்குரிய கொடைதானங்
களும் பெருகியதால் தரித்திரமெல்லாம் ஒழிந்தன. கல்வியும், வேதநூலும்
உயர்ந்ததினால் அறியாமையெல்லாந் தாழ்ந்தன. முயற்சியும், பொறுமையும்
மேம்பட்டதினால் பிணிகளெல்லாங் கீழ்ப்பட்டன. நயமுந், தயையும் நிறைந்த
மையால் பகைகளெல்லாங் குறைந்தன. பெருமையும், இன்ப மகிழ்ச்சியும்
எழுந்ததினால் துயர்களெல்லாங் கழிந்தன. வானவரும், மனிதர்களும் மகிழ்ச்
சியாற் சிரிப்பதினால் பேய்களெல்லாம் முகம்வாடி யழுதன. நன்மையெல்லா
மெழுந்து பூமியை மகிழ்வித்ததனால் நரகந் துக்கித்தழுதன. மீளவும், அன்
றையதினத்தில் பூங்கொடி விருந்தேந்திய சூசைமாமுநிவர் பொழிந்த வரங்கள்
அளவில்லாம லிருந்ததுபோல, எழுந்த வீணையினொலியும், குயிலினு மினிதாக
மாகதர்பாடுந் துதியொலியும், காலிலணிந்த அணிகலமசைய நிர்த்தனஞ்செய்த
நாடகச்சாலைகளி னொலியும், பெருங்கடல் புரண்டதுபோல நெடுந் தெருவெங்
கும் நெருங்கிய கூட்டங்களினொலியும், தீயைப்போலச் சுடர்விட்டுப் பனியைப்
போலக் குளிர்ந்திருக்கும் இரத்தினபாணங்களி னொலியும், தயையினால் மல
ர்ந்த முகத்தோடு அங்கங்கு அமுது பகர்வோரொலியும், மலர்மாலைகள் தேனோ
டுபொழிந்த பரிமளமும், வாசனையோடுகூட்டிய பலவகைச் சந்தனமும், சுண்
ணமும், சிந்தூரமும், நறும்புகையூட்டிய மாளிகைகளிடத்தெல்லாம் விரித்த
கொடிகளும், யாவரும் ஐம்பொறிகளாலும் அனுபவித்த இன்பமும், உள்ளத்தி
னா லனுபவித்த இன்பமும், நகரமெல்லாம் கொண்ட பயன்களும், தேவவரு
ளும் அளவில்லாமற் பரவினவாம்.

இவ்வண்ணமாகத் திருமுடி புனைந்தபின்பு வரையாதுகொடுக்கும் வள்ள
லாகிய அரசர்க்கரசன் எழுந்து தனது அரண்மனைக்குட்சென்று, அந்தணர் முத
லாகிய பலர்க்கும் பாலும், நெய்யும் கலந்த இனிய அமுதத்தினால் விருந்துசெ
ய்து, அவரவர்கள் போதும்போதுமென்று சொல்லும்படி பலகோடி திரவியங்
களைத் தானமாக வழங்கிவந்ததினால், பகற்காலமெல்லாம் இந்தத் தருமத்திலே
யே கழிந்துபோக இராக்காலம்வந்துகூடின தன்மையை இரத்தினங்களி னொளி
யினாலும், ஆபரணத்தி னொளியினாலும் யாவருமறியக்கூடாமலிருக்கையில், உ
ண்மையான வேவுகாரர்வந்து இராக்காலம் கூடினதன்மையை அரசனுக்கறிவித்

தமாத்திரத்தில், அரசனு மகிழ்ந்தெழுந்து சூசைமாமுனிவரி னுருவத்தைத் தேரி லமைத்து, எழுந்தருள்படி செய்யக்கருதி அடிவாரத்தில் வெள்ளியினாற்செய்த உருளையைத் தொடுத்து அதன்மேல் பசும் பொன்னாற்செய்த அச்சப்பலகை யைப் பொருத்தி அதன்மேலே மரகதத்தினா லொரு பர்வதம்போலச்செய்த மேடையைவைத்து, அந்தப் பர்வதத்திற் படர்ந்து செல்லும் கொடிகளைப்போல முத்தாரங்கள் தவழ்ந்து தொங்கும்படியாகக் கட்டி, பின்னும் அம்மலையில் வாழுங் குடிகளைப்போலப் பல இரத்தினங்களாற் சித்திரித்தபொற்பாவைகளை யமைத்து, மேற்புறத்தில் மலர்பூத்த பூஞ்சோலை வடிவமாகச் செம்பொன்னாற் செய்தபரப்பிலே கிரணங்களையுடையபல மணிகள்விளங்கவும், அதன்மேல்வானத்தி னுச்சியைப்போலச் செய்த வச்சிரச் சிகரங்களைச் செம்பவளங்களாற் செய்த தூண்கள் தாங்கியிருக்கவும், ஒரேசக்கரத்தையுடைய சூரியனுடைய தேரும் பின்னிடும்படி ஒரு இரதத்தை வெகு அலங்காரத்தோடு உண்டாக்கி, அந்தணர் முதலிய பலருக்கும் மழையைப்போல இரத்தினக் குவியலையும், பொற்குவியலையுந் திரளாய் வழங்கின மாத்திரத்தில் உடனே குருப்பிரசாதிகள் யாவருந் திரண்டு கூடிப் பலமுறையும் வணங்கி, அந்தத் தேருக்கு உயிர்கொடுத்ததுபோலச் சூசைமாமுனிவருடைய திருச்சொருபத்தை யதில் பெருமையாய் எழுந்திருக்கச் செய்தார்கள். அப்பால் இப்படி யலங்கரித்த இரதமானது பனங்காட்டைப்போலத் திரண்ட வெண்கொற்றக்குடைகள் இருபுறத்தும் நெருங்கிச் சூழ்ந்துவரவும், சந்திரகிரணங்களைத் திரட்டினாற்போலப் பலவெண்சாமரைகள் பக்கங்களி லசைந்துவரவும், வானத்திலிருந்து நக்ஷத்திரங்க ளுதிர்ந்தனபோலப் பல பொற்பொடியும், பல இரத்தினப் பொடியும் மேலிருந்து கீழே வீதியிற் சிந்தவும், சூரியனைப்போலப் பல இரத்தினங்களும் இருளை விளக்கி ஒளியைப் பரப்பும்படி செய்த அளவில்லா மாணிக்கத் தீபங்கள் அங்கங்கு நிறைந்திருக்கவும், அன்றலர்ந்த மதுமலர்பரப்பிய நெடுந் தெருவெங்கும் வானத்தின் தெருவில்நடக்குஞ் சூரியனைப்போல நடந்துகண்டயாவரும் பேரின்பத்தை யனுபவிக்கும்படி தேவவருளைவீசி இரத்தினப்பிரபையால் பார்க்குங்கண்கள் கூசாமலிருக்க மேகமண்டலத்தைப்போல வாசனைப்புகைகள் கிளம்ப மெல்லெனச்செல்லுகையில், அதினுடைய அலங்காரம் பார்ப்பவருடைய கண்களைத் திருடுதற்குரிய வடிவமாயிருப்பதை யாவரும் பார்த்துப் பேரின்பத்தை யனுபவித்து அதிசயப்பட்டபோது, யாவருடைய ஆசையையுங் கவருந் தயையோடு எல்லாரையும்நோக்கிக் கொண்டிருந்தாற்போலச் சூசைமாமுனிவருடைய திருவுருவம் விழித்த திருக்கண்களே அளவில்லாதவருளைப் பொழிந்தன. அதன்மேல், இதைக்கண்டு ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தவர்களிற் சிலர் மகிழ்ச்சியின் மிகுதியால் பெருங்கிரணங்களைப்பரப்பித் திரண்ட மணிகளைப்பூத்து கற்பகஞ்செய்யச் சூசையப்பர் திருக்கரத்திலேந்திய பூங்கொடியினழகைப் பாருங்களென்பார். சிலர் சந்திரப் பிறைமேலெழுந்த தேவதாயாருக்கும், அவள் கர்ப்பமுதகிரைமா ருமற் பெற்றெடுத்த தேவ திருமகனுக்கும், குளிர்நிழலைச்செய்த ஒளியையுடைய பூங்கொடி இது வென்பார். சிலர் இக்கொடியி னிழலில் ஒதுங்கினயாவருக்கும் மனத்தைவருத்தும் துன்பமும் உண்டாகுமோ? என்பார். சிலர் வேதமே வடிவாகத்தோன்றிய இந்த அருந்தவத்தோன் இன்று அரசனாகி அவ்வேதத்திற்குஓ சணியாகினான் என்பார். சிலர் வளர்பிறையணிந்த தேவதாயாருடைய பாதமல்லா இம்மாதவமுநிவனணிந்தமையால், அந்தப்பிறையொளியைக் அதற்கோசணியாக நின்றான் என்பார். சிலர் பூவுலகத்தின்குறைகளைத் தீர்ப்பதுவேசுடி இன்று இங்கே யாசனைப் பூவுலகிற் கோசணியாயிருனென்பார். சிலர் நம்மை யாண்டுவரும் அரசனுடைய முடியை இம்முநிவன் சூடினமை

யால், இனி நாம் இந்தப் புது இராயனுக்கு ஓரணியாக நடக்கக்கடவோமென்பார். சிலர் இவ்வாசு மாதவத்தினால் இந்த முனிவனுக்குக் கிடைத்தபடியால் நாம் இவ்வாசினால் தவத்தின்பயனைப் பெற்றோமென்பார். சிலர் இம்முனிவன் சூடிய திருமுடியைக் கண்டதினால் கண்ணினால் வரத்தரும் பயனைப்பெற்றோமேயென்பார். சிலர் ஓ, முனிவரோ! நீர் உடலையுடைய நீசமனுஷனாகப் பிறந்து மாதவத்தினால் உடலில்லாத வானோரு மடையாத உயர்ந்த பயனைப்பெற்றீர். ஆதலால் இன்று எங்களுக்கு அரசனாக உம்மை யடைந்த நாங்கள் வான்வீட்டுக்குரிய பேரின்பத்தை யடைந்தோ மென்பார்.

இத்தொகைப்பட்ட அளவில்லாத சிறப்போடு நகரமெல்லாஞ் சுற்றிவந்த நெடுங்கொடிஞ்சித் தேரானது முன்னமே சூசையப்பருக்காக அமைக்கப்பட்ட அதிசயஅலங்காரமுள்ள கோயிலின்வாயில் முன்பாகவந்து தங்கியவுடனே, செய்யவேண்டிய முறைமையெல்லாந் திருத்தமாகச்செய்து பலவகை வாத்தியங்கள் முழங்க எவர்களுந் துதிகளைச்சொல்லி வணங்கக், குருக்களும் வணங்கிப் பின்பு அந்தச் சூசையப்பருடைய திருவுருவத்தை யெடுத்துக்கொண்டுபோய்க் கோயிலினுள் ஒருயர்ந்த பத்திராசனத்தில் வீற்றிருப்பச் செய்தார்கள். அதெப்படியென்றால்: தரித்திரமும், வினையும், பசியும், பிணியும், வெறுப்புந், துன்பமும், பகையுமாகிய இவையெல்லாங்கொண்ட பல இராட்சதர் உருவங்கள் பயந்த முகத்தோடே அடியில் இருக்க, அவற்றைக் கால்களினால் மிதித்த நாலு மதயானைகள் தங்கள் துதிக்கைகளைத் தூக்கி வணங்கிநிற்க, அவற்றின் பிடரியின்மேல் வயிரமணி மலர்பூத்த மரகத மலையைப்போல அடிப்பீட மமைத்து, அப்பீடத்தின்மேல் பணிவிடைசெய்யும் பாவைகளினுருவாகச் சிவந்த இரத்தினத்தாற்செய்த உருவோடு தோன்றின எட்டு வானவர் உருவத்தில் நான்கு உருவங் கைகளினால் வணங்கிநிற்கவும், மற்ற நான்கு உருவம் குறட்டைத் தாங்கியிருக்கவும், அதன்மேல் இம்முனிராஜனுக்கு விருதாகிய இருதலைகளுள்ள ஆகிலப்பறவையைப் பலவகை இரத்தினங்களாலுஞ் செய்து பொருத்தி, அப்பறவைவிரித்த பொற்சிறகின்மேலே அந்த அருந்தவச் சூசைமாமுனிவருடைய திருவடிவத்தைப் பெருமையாக அமைத்து, அவ்வுருவத்தின்மேல் பூவுலகமுழுமையும்விற்றாலும், போதாத செல்வத்தினாற் செய்யப்பட்டு வானபடத்தை யொத்திருக்கப் பலவகை மணிகளாலமைத்து, ஐந்து விற்கிடை யுட்பட வளைத்த ஒரு மாமுடி மேற்கட்டியாக வுயரத்திற்கட்டி, அதைப் பறவைகள்போலப் பறந்த உருவோடு சிலர் வானவர் தாங்கியிருக்க, மலையைப்போல அமைந்த பத்திராசனத்தின் முன்னும் பின்னும் ஐந்து விற்கிடை யகன்று சில மடந்தையருருவாக மணிப்பொற்பாவைக ளமைக்கப்பட்டன. அந்தச் சிறந்த பாவைகளுள் தயையுந், தானமும், அன்பும், அருளும் ஒரு தாயாருடைய வயிற்றிற் பிறந்தாற்போலப் பிறந்த நாலு பாவைகள் அழகிய கைகளில் எண்ணப்படாத பலவகை அணிகலன்களை யேந்தித் தென்கிழக்கு முகமாய் நின்று வணங்கின. செல்வத்தை விளக்கும் ஞானமும், சீலமும், நிறையும் உருவெடுத்தாற்போல உருவெடுத்த மூன்றுருவங்கள் தமது தாயாரோடு இனிய அமிர்தத்தைக் கைகளிலேந்தினாற்போல நல்லொளியைப் பரப்பிய நாலுபாவைகள் வடகிழக்குமுகமாய் வணங்கி நின்றன. கற்புந், தவமும் தாங்கள் சேர்த்த மதுரக்கனிகளைக் கொண்டுவருவதுபோல உயிருடைய மாகிமையைக் காட்டுதற்குரிய நான்கு பொற்பாவைகள் தென்மேற்கு முகமாய் வணங்கிநின்றன. பெண்ணுருவாகத் தோன்றி மனத்திற்கொண்ட ஆண்மையைக்காட்டப் பொற்கவசத்தை மார்பிலணிந்து மிகுந்த பொறுமையும், மனவூக்கமும் மதுமலர் மாலைகளைக் கொண்டுவ

த பாவனையாக வானுலகத்துக்குரிய வடிவோடு நான்கு பாவைகள் வடமேற்றுமுகமாய் நின்று வணங்கின.

இவ்வண்ணமாக மலர்ந்த பூங்கொடிவிருதேந்திய சூசைமாமுனிகள் தாம் செய்துமுடித்த மாதவத்தினால் வானுலகத்திலும், பூவுலகத்திலும் நல்ல அரசாக்ஷியையடைந்து முன்சொல்லியபடி அழகிய முகமலர்ந்து பத்திராசனத்திலெழுந்தருளியபோது, வீணைவாய்க்குரலொலி ஒருபால் முழங்கப், பாடுவோர் துதியொலி ஒருபால்முழங்க, வான்மேலெங்கும்வாசப்புகைகள்கிளம்பிநிறைய, வேதியரும், அரசரும், மந்திரிமார்களும், படைத்தலைவரும், அணித்தலைவரும், பூதத்தலைவரும், படைவீரரும், மற்றனைவரும் அடியில் வீழ்ந்து வணங்கினபிறகு வான்மேல்வாழு மாசன் இப்பூவுலகில் அரசுபெற்றுத் திருமுடியைச் சூடினதைக் குறித்து வானுலகவாசர் காணவந்தாற்போலக் கிரணங்களைப் பரப்பிய உருவத்தைக்காட்டிப் பலவானவர்கள்வானத்திலின்று இறங்கிவந்துகண்ட யாவரும் அதிசயத்தோடு கைகளைவிரித்திருக்கும்படி பல பொற்பாத்திரங்களில் பல மதுமலர் மாலைகளைக் கொண்டுவந்துவைத்து வணங்கிச் சொல்லுவார்கள்: அரிய வரங்களைப்பெற்ற சூசைமாதவனாகிய இராஜாதி ராஜன் வான்மேல் திருமுடி புனைந்தகாலில் அம்முனிவரினுடைய கொடியிற்பூத்தமூவாயிரத் தறுநூற்றெருபத்தைந்து தேன்மலராற்கட்டிய அழகிய முப்பத்தாறுமாலைகளிவையாகும் என்றுசொல்லிப் பின்னும் அம்மாலைகளை முனிவருடைய திருவடிகளிற்சாத்தி மேலுஞ் சொல்லுகின்றார்கள். குறையாத அழகுள்ள சூசைமாமுனிவருடைய பூங்கொடிபூத்த மலரைப்போல அந்தச் சூசைமாமுனிகளுடைய திருப்பத்தினியாகிய தேவதாயார் பின்பு தமது சொற்களாகிய மலர்களால் களிகூர்ந்துரைத்துக் கட்டிய தேம்பாவணியிதுவே. இதை மெய்யான விசுவாசத்தோடு படித்தாலும், படிப்போரிடத்தில் கேட்டாலும் மேற்கொண்டு நடப்போர் யாவருஞ் செல்வவீடாகிய மோக்ஷத்தில்வாழ்ந்திருப்பார். அதற்குக் கன்னிமரியம்மாளும், சூசைமாமுனிகளும் புதுஅணிவடிவிற் சிறந்த தமது திருக்குமாரனோடு மன்றாடிக் காப்பாற்றுவார்களென்றுசொல்லி மறைந்து போயினார்கள். ஆகையால் மோக்ஷராக்கினியாகிய தேவதாயார் வான்மேல் வழங்கும் தமது திருமொழியால்சொல்லிய தேம்பாவணியென்னும் அர்ச். சூசையப்பருடைய சரித்திரத்தை முன்சொன்ன பூங்கொடிமலரின் கணக்காக மூவாயிரத்தறுநூற்றுப் பதினைந்து பாடலாகவும், மாலையின் கணக்காக முப்பத்தாறு படலமாகவும், மெய்க்குருவாகிய வீரமாமுனிவரால் செய்யப்பட்டுச், சேசுமரி சூசையென்னுந் திருக்குடும்பத்தாருக்குக் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. அதுபோலக் கல்வியறிவில்லாத நானும் சென்றகாலத்திலும், நிகழ்காலத்திலும், வருங்காலத்திலும் என்னை அன்போடு பாதுகாத்து வருகின்ற சேசுமரி சூசையென்னுந் திருக்குடும்பத்தாருக்கு என்னாலெழுதப்பட்ட இந்தத் தேம்பாவணி வசனகாவியத்தை ஒப்புக் கொடுக்கின்றேன்.

முடிசூட்டுபடல முற்றிற்று.

மூன்றாவதுகாண்டம் முற்றுப்பெற்றது.

சென்னை இராயபுரம், அஷ்டாவதானம் ச. ஜெகராவு முதலியாரவர்களால் எழுதப்பட்ட தேம்பாவணிவசனகாவியம் மூன்றுகாண்டமும் 1887௵ செப்டம்பர்மீ 8உ யாகிய தேவமாதா அமலோற்பவ திருநாள் முகூர்த்தத்தன்று சம்பூரணமாக முடிவு பெற்றது.

தேம்பாவணி வசனகாவியம் முற்றிற்று.

தேம்பாவணி வசனகாவியப் படல அகராதி.

	படலம்.	பக்கம்.
௧	நாட்டுப் படலம்...	[illegible]
௨	நகரப் படலம்...	[illegible]
௩	வளன் சனித்த படலம்...	[illegible]
௪	பாலமாட்சிப் படலம்...	[illegible]
௫	திருமணப் படலம்...	[illegible]
௬	ஈறம் பொருந்து படலம்...	[illegible]
௭	ஐயர் தோற்று படலம்...	[illegible]
௮	ஐய நீங்கு படலம்...	[illegible]
௯	மகிழ்வினைப் படலம்...	[illegible]
௧௦	மகவருள் படலம்...	[illegible]
௧௧	காட்சிப் படலம்...	[illegible]
௧௨	மகனேர்ந்த படலம்...	[illegible]
௧௩	வைதிர் நீங்கு படலம்...	[illegible]
௧௪	இளவின் மாட்சிப் படலம்...	[illegible]
௧௫	சோசுவன் வெற்றிப் படலம்...	[illegible]
௧௬	சேசதையோன் வெற்றிப் படலம்...	[illegible]
௧௭	காசைசேர் படலம்...	[illegible]
௧௮	சீனயி மாமலைகாண் படலம்...	[illegible]
௧௯	பாலைபுகு படலம்...	[illegible]
௨௦	சித்திரக்கூடப் படலம்...	[illegible]
௨௧	நீர்வர மடைந்த படலம்...	[illegible]
௨௨	எசித்துசேர் படலம்...	[illegible]
௨௩	[illegible] படலம்...	[illegible]
௨௪	சேசுதேர்வைப் படலம்...	[illegible]
௨௫	குழவிகள் வதைப் படலம்...	[illegible]
௨௬	கருணையன் மாட்சிப் படலம்...	[illegible]
௨௭	ஞாபகப் படலம்...	[illegible]
௨௮	வாமனாட்சிப் படலம்...	[illegible]
௨௯	வேதக் கெழுமைப் படலம்...	[illegible]
௩௦	மீட்சிப் படலம்...	[illegible]
௩௧	பிரிந்த மகவைக்காண் படலம்...	[illegible]
௩௨	புரோகிதப் படலம்...	[illegible]
௩௩	பிணிதோற்றுப் படலம்...	[illegible]
௩௪	தூதனைப் படலம்...	[illegible]
௩௫	உத்தானப் படலம்...	[illegible]
௩௬	முடிசூட்டு படலம்...	[illegible]

116596